
# சித்தர் இலக்கியம்

ஆய்வு நூல்

மீ.ப.சோமு



அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

# சித்தர் இலக்கியம்

## முதல் பகுதி

ஆசிரியர்:

மீ.ப. சோமசுந்தரம்

சோமு

வெளியீடு:

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு : 1988
இரண்டாம் பதிப்பு : 2004

விலை : ரூ.

மற்ற விவரங்களுக்கு:
சிறப்பு அதிகாரி
நூல் வெளியீட்டுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

அச்சிட்டோர்:

***RNR Printers***
19, Thandavarayan Street,
Triplicane,
Chennai - 600 005.
Ph : 28441856

# அணிந்துரை

[டாக்டர். எம். ஏ. எம். இராமசாமி அவர்கள்
இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

சித்தர் இலக்கியம்—ஆய்வு நூல் திட்டமிட்டபடி நிறைவேறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

என் அருமைத் தந்தையார் அவர்கள் தமது மறைவுக்குச் சில வாரங்கள் முன்பு, இந்த ஆய்வுப் பணியைத் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்பி, இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக உருவாவதற்குரிய திட்டத்தைக் கலந்து பேசினார்கள். இந்நிலையில் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நிறைவேற்றுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விரிந்து பரந்த இந்த அரிய ஆய்வு நூலைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வழங்குகிற பணியானது, எங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழுக்குச் செய்கிற ஒரு நிலையான தொண்டு என்று நான் கருதுகிறேன்.

திரு.மீ.ப. சோமு அவர்கள் ஆழ்ந்த மொழிப் புலமையோடு, தத்துவ நுண்ணறிவும், மேனாடுகளில் நடந்து வருகிற நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஒப்பு நோக்கும் ஆற்றலும் நன்கு இணைந்த ஒரு நல்லறிஞர். சில மகான்களின் நேர்முகத் தொடர்பும் அவருக்கு உண்டு. எந்தப் பணியை யாரிடம் எவ்வாறு ஒப்படைக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதிலே வல்லமை பெற்று விளங்கிய என் தந்தையாரின் எண்ணம் நூல் வடிவில் இப்போது மலர்கிறது! இந்தச் சிறந்த நூலைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்வதில் பேருவகை அடைகிறேன்.

**எம்.ஏ.எம். இராமசாமி**

# அணிந்துரை

பேராசிரியர் **இராம. சேதுநாராயணன்** அவர்கள்
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சித்தர் இலக்கியம் பற்றிய இந்தத் தத்துவ ஆய்வு நூலைப் படித்ததும், என் உள்ளத்தில் ஒரு மன நிறைவு ஏற்பட்டது. நிலைத்து நிற்கக்கூடிய ஒரு மதிப்புமிக்க ஆராய்ச்சிநூலை, நமது பல்கலைக் கழகம் வெளியிடுகிறது என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் இந்த ஆய்வுப் பணிக்கு வித்திட்ட வள்ளல் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

இந்நூலின் ஆசிரியர் மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் நன்கறிந்த நல்லறிஞர். புதுமைப் படைப்புகளையும், பழைமை ஆய்வுகளையும் இரண்டையுமே இயற்றி, தம்முடைய நூல்கள் பலவற்றுக்கு மதிப்புயர்ந்த விருதுகள் பெற்றவர். சாகித்திய அகாதமிப் பரிசு, தமிழக அரசின் மூன்று இலக்கியப் பரிசுகள், பாரதி தங்கப் பதக்கம், டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் இலக்கியப் பரிசு, இவற்றோடு இன்னும் பல பத்திரிகைப் பரிசுகளும் பெற்றவர். தருமை ஆதீனத்தின் "பல்கலை வித்தகர்", தமிழ் இசைச் சங்கத்தின் "இசைப் பேரறிஞர்" போன்ற பல பட்டங்கள் பெற்றவர். மூதறிஞர் ராஜாஜி தமது தத்துவ நூல்களுக்கு இவரைத் தமது இணைப்பாசிரியராகக்கொண்டு வெளியிட்டிருக்கிறார் என்றால், எந்த அளவுக்கு நமது நாட்டின் மாபெரும் அறிஞர் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் இவர் என்பது கண்கூடு.

இந்த நூலில் இவருடைய விஞ்ஞான நோக்கும், எதையும் அறிவியலோடு ஆராய்கிற திறமும், இவருடைய ஆழ்ந்த இலக்கிய இலக்கணப் புலமையும், பன்மொழி அறிவும், விரிந்து பரந்த ஆங்கில ஆராய்ச்சியும், தத்துவப் பயிற்சியும், ம கா ன் க ளு ட ன் இவருக்குள்ள நேர்முகத் தொடர்பும், இவருடைய குடும்பத்து முன்னோர்கள் சிலர் சித்தர்களாக விளங்கிச் சுவடிகளிலே வழங்கியுள்ள ஞான உண்மைகளும்—அனைத்தும் தெளிவோடு துலங்குகின்றன. அதோடு, இவருடைய தமிழ் நடையானது புலமையும் புதுமையும் அழகாக இணைந்து இலக்கணத் திருத்தத்தோடு சரளமாக ஓடுகிற நல்ல நடையாகும். படிப்பதற்குச் சுவையும் படிக்கப் படிக்க ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய பொருண்மையும் ஒளி வீசுகின்றன. இந்த அழகான நூலை எங்கள் பல்கலைக் கழகத்தின் வெளியீடாகக் கொணர்வதில் களிப்படைகிறேன்.

**இராம. சேதுநாராயணன்**

# சித்தர் இலக்கியம்

## முன்னுரை

சித்தர் இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி என்று சொன்னதும், சிலர் இந்த ஆய்வு நூலை ஒரு வைத்திய நூலோ என்று கேட்கிறார்கள்.

சித்தர்களின் நூல்கள் என்றதும் பலருக்கும் சித்த வைத்தியம் நினைவுக்கு வருகிறது. இது இயல்பே யாகும். காரணம், பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் சித்தர்களின் முறையிலான மருத்துவம் மிகவும் புகழோடு வழங்கி வந்திருக்கிறது.

என்றாலும், எனது இந்த ஆய்வானது சித்தர்களின் மருந்தியலைப் பற்றியது இல்லை என்பதைத் தொடக்கத்திலேயே கூறிவிடுகிறேன்.

சித்தர்களின் வைத்தியத்தை ஆராய்வதற்குரிய சுவடிகளையும், அச்சாகி வெளிவந்துள்ள நூல்களையும், நுண்மாண்நுழைபுலத்துடன் புகுந்து பார்க்கும் அறிஞர்கள் பலர் தமிழகத்தில் உள்ளார்கள். சிலர் இந்த ஆய்வில் ஏற்கனவே ஈடுபட்டும் உள்ளார்கள். நூல்களும் வெளிவந்துள்ளன. அது தனியான வேறொரு துறையாகும்.

எனது இந்த ஆய்வுநூல், சித்தர்களின் தத்துவத்தை, அவர்களுடைய வழிபாட்டு முறையை, அவர்களுடைய துதி இலக்கியத்தை, அவர் களுடைய ஞானப் பாடற் களஞ்சியங்களை, அவர்களின் யோக நூல் களை, அவர்கள் வழிவழியாக வழங்கிவருகிற பல மெய்ஞ்ஞான நுட்ப இரகசியங்களை, எழுத்திலக்கியத்தைக் கொண்டும், வாய்மொழி இலக்கியத்தைக் கொண்டும், சித்தர் நெறியைப் பயிலும் மாணவர்களின் பயிற்சி முறைகளைக்கொண்டும், ஆய்வு செய்ய முனைகிறது!

இலக்கியம் என்று சொன்னாலே எல்லா உலக மொழிகளிலும் அந்தச் சொல் வைத்தியம் போன்ற அறிவியலைக் குறிப்பதில்லை. படைப்பிலக்கியத்தையே குறிக்கிறது. தமிழ்மொழியிலோ என்றால், இன்னொரு சிறப்பான மரபும் உண்டு. அது என்னவென்றால், 'தமிழ்' என்ற சொல்லுக்கே இலக்கியம் என்ற பொருள் வழங்கிவருகிறது. முத்தமிழ் என்றால் படைப்பு இலக்கியமான இயலையும், பாடல் இலக்கியமான இசையையும், ஆடல் இலக்கியமான நாடகத்தையும் உணர்த்துகிறது. அதோடு, தமிழ் என்று சொல்லும்போது, தனியான அந்தச் சொல், தமிழிலக்கியத்தையே குறிப்பதாக அமைந்திருக்கிறது. 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்றும், 'நல்ல தமிழ்' என்றும் கூறும் போது இலக்கியம் என்ற இந்தப் பொருளே கொள்கிறோம். அதிகம் சொல்வானேன், 'சங்கத்தமிழ்' என்றால் 'சங்க இலக்கியம்' என்றே பொருள் அல்லவா!

இந்த மரபை ஒட்டியே திருமூலரும்,

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே

என்று பாடுகிறார்.

ஆகவே, இந்த ஆய்வுநூல் சித்தர் தமிழை ஆராய்கிறது. அந்தத் தமிழிலுள்ள தத்துவங்களை, அந்தத் தமிழின் கவிமாண்பை, அந்தத் தமிழின் இலக்கியப் பண்புகளை, அதனுடைய ஆழ அகல நீளங்களை முந்தையோர் காட்டிய பார்தையிலே சென்று காண்கிற ஓர் இலக்கிய ஆய்வே இந்த ஆராய்ச்சி நூல்!

அப்படியானால் சித்தர் தத்துவம் என்று பெயர் சூட்டி அழைப்ப தற்குரிய ஒருமையும், தனித்தன்மையும், மாறுபடாத ஒரே சீரான கோட்பாடும் கொண்ட ஒரு தத்துவநெறி, நின்று நிலவி வருகிறதா என்று கேட்கலாம்.

ஆம்; சங்க காலத்துக்கு முன்பு தொடங்கி, வரையறை செய்து நாம் தெளிவாகக் காணக்கூடிய வரலாறு பொதிந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது தமிழகத்தில் உலவிவருகிற சித்தர்களின் தமிழிலே, ஒரே பண்போடு கூடிய தனித்தன்மை, ஒருமைப்பாடு, மாறுபடாத கோட்பாடு நிலவி வருவதைக் காண்கிறோம். இந்தப் பண்பு இடையீடு இல்லாததாய், முறிவு காணாத தொடராய், ஒரு ஜீவநதியாய், வற்றாத ஞான ஊற்றாய்ச் சுரந்து பொங்கி ஓடும் பேரறிவின் உயிராறாய், நமது புண்ணியத் தமிழகத்திலே நடந்தோடி வந்திருக்கிறது!

ஆம்; சித்தர் இலக்கியத்தின் குரல் ஒன்றே! அது உரைநடையோ, கவிமொழியோ, எதுவாக இருந்தாலும், அந்த ஒலியின் குரல், அதன் சுருதி ஒன்றே!

இன்னும் சொல்லப்போனால், தமிழகத்தில் மட்டுமல்லாமல், பாரத நாட்டில் மட்டுமல்லாமல், உலகெங்கிலுமே சித்தர்கள் பேசுகிற குரல் ஒரே குரலாகவே இருக்கிறது.

ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்

என்று பாடுகிற சித்தரின் குரல் தமிழ்க்குரல்தானா? இல்லை; உலகத்தின் ஞானக்குரல்! உலக மொழிகள் அனைத்திலும் உள்ள சித்தர் இலக்கியத்தின் குரல் இதுவே!

மேலை நாடுகளில் நான் இருந்தபோது, சித்தர் தத்துவத்தின் இந்த அனைத்துலக ஒருமைப் பாங்கினைக் கண்டு மெய்சிலிர்த்தேன். எந்த மொழியானாலும், அந்த மொழியிலே ஒரு சித்தர் இலக்கியம் இருக்குமானால், இந்த இலக்கியத்திலே நாம் கேட்கும் குரல் திருமூலரின் குரல், கருவூராரின் குரல், சிவவாக்கியரின் குரல், பட்டினத்து அடிகளின் குரல் என்றே சொல்லத் தோன்றுகிறது! எந்த நாட்டிலும், எந்த மொழியிலும் சித்தர்களின் 'மிஸ்டிஸிஸம்' (Mysticism) என்னும் இறையனுபவம் ஒன்றாகவே இருக்கிறது! அதன் வெளியீட்டு முறையும் அகில உலகப் பாங்கிலேயே இருக்கிறது!

எந்த நாட்டிலே பிறந்தாலும், எந்த மொழியிலே பேசினாலும் மனிதனுடைய உடல் அமைப்பும், மனத்தின் இயல்புணர்வுகளும் ஒன்று போலவே இருக்கின்றன அல்லவா! சூரியனும் சந்திரனும் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறார்களா? இவ்வாறுதானே சித்தர்களின் இறையனுபவமும் திகழ்கிறது!

எனவே, இந்த ஆய்வு நூலின் பார்வையிலே மேலைநாட்டு அறிஞர்களின் கண்டுபிடிப்புக்களும் அங்கங்கே ஒப்புநோக்கப் பெறுகின்றன. அதோடு, சித்தர்களின் மெய்ஞ்ஞானப் பேருண்மைகள் அனைத்தும் விஞ்ஞான அறிவியற் பேருண்மைகளோடு ஒத்து இயைந்து நிற்பதால், ரஷியா போன்ற நாடுகளில் நவீனக் கருவிகளைக் கொண்டு அவர்கள் புதிது புதிதாகக் கண்டுபிடித்து வருகிற இரகசியங்களும், அங்கங்கே சான்றுகளாக எடுத்தாளப்படுகின்றன. இவ்வாறு ஒப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால், சித்தர்களின் இலக்கியத்திலுள்ள கோட்பாடுகளில் எவையும் மூடநம்பிக்கைகள் அல்ல, பகுத்தறிவின் ஆழ்ந்த பார்வைக்கு ஒவ்வுகிற கண்கூடான உண்மைகளே என்பதை எடுத்துக்காட்டுவதே யாகும்!

ஆகவே, சித்தர் தத்தவம் என்பது அறிவுகொண்டு ஒப்புக்கொள்ள வேண்டிய, உய்த்துணரும் பார்வையோடு காணவேண்டிய, விஞ்ஞான மெய்ஞ்ஞானப் பேரறிவுக் களஞ்சியமாகும். இந்தக் களஞ்சியம் சரியை என்கிற தொண்டிலும், கிரியை என்கிற வழிபாட்டிலும், யோகம் என்கிற பயிற்சியிலும், ஞானம் என்கிற மன ஒடுக்கத்திலும், ஆக நான்கு நெறிகளிலும், கிளைவீசிப் படர்ந்துள்ளது. இந்த நான்கு நெறிகளையுமே, பேரறிவின் கலமாகிய உள்ளத்தைக்கொண்டு, மன ஆற்றலால் இயக்குவதே சித்தர் தத்துவத்தின் அடிப்படையாகும்; சரியையில் ஞானம், கிரியையில் ஞானம், யோகத்தில் ஞானம், ஞானத்தில் ஞானம் என இந்தச் சித்தர் நெறியைப் பெரியோர்கள் வகுத்துச் சொல்லியிருக்கிறார்கள்! இந்த நான்கிலுமே சித்தர் இலக்கியம் உலக நாடுகள் அனைத்திலும், உலக மொழிகள் அனைத்திலும் ஒரே குரல் கொடுத்து, ஒரே சுருதியில், ஒரே பாங்கில் பேசுகிறது! இதுவே இந்த இலக்கியத்தின், இதன் தத்துவத்தின் மாண்பாகும். இந்த மாண்பு பல நூற்றாண்டுகளாக எத்தகைய சுருதி பேதமுமின்றி, எத்தகைய ஒலி மாறுபாடும் இன்றி, ஒரே சீராக, ஒரே பான்மையில் ஒலித்துவருகிறது என்பது, இந்த மாண்பின் மாண்பாகும்!

* * *

சித்தர் இலக்கியத்தில் சிறு வயதிலிருந்தே எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதற்கு அகக்காரணங்கள் உண்டு; புறக்காரணங்களும் உண்டு.

என் தந்தை நெல்லை மீ. பொ. பரமசிவம்பிள்ளை அவர்களுக்குப் பல சித்தர்களின் நேர்முகத் தொடர்பு உண்டு. எனது பிள்ளைப் பிராயத்தில் எங்களுடைய 'குட்டக்கரை வீடு' என்னும் பரம்பரை இல்லத்திற்குப் பல மகான்கள் அடிக்கடி வருவதைப் பார்த்து, எனக்குத் துறவிகளிடம் ஒரு வியப்பும் விவரிக்க ஒண்ணாத ஒரு மதிப்பும் அரும்பின!

நான் பிறப்பதற்கு முன்பே மறைந்துவிட்ட என் பெரிய தந்தையார் நெல்லை மீ. பொ. ஆறுமுகம்பிள்ளை அவர்களைப் பற்றியும், அவர்

களின் முருக வழிபாடு பற்றியும், அவர்கள் புரிந்த பல அற்புதங்கள் பற்றியும் பல சுவையான செய்திகளைப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். இல்லறத்தில் வாழ்ந்த ஒரு ஞானி என்று என் உறவினர்கள் அவரைப் பக்தியோடு குறிப்பிடுவதுண்டு. அவர் விட்டுச்சென்ற சில சித்தர் நூல் களும், வழிபாட்டு மூர்த்திகளும், ஓலைச் சுவடிகளும் என்னைச் சிறுவயதிலேயே ஆட்கொண்டன.

பெரிய தந்தையின் துணைவியார் சிவகாமி அம்மையே என்னை அன்போடு வளர்த்தவர். அவர் ஒரு சித்தர் மரபில் தோன்றியவர். எழுத்தறிவில்லாத இந்த அம்மையார், கேள்விக் கல்வியினால் கற்றறிந்த சித்தர் பாடல்கள் பற்பலவாம்! இவர் எட்டையபுரம் கவிராயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அண்மைக் காலத்துச் சித்தர் களில் ஒருவராக விளங்கிய இரெட்டியபட்டி சுவாமிகள் இவருடைய சிறிய தந்தை. இந்த அம்மையாருடைய பரிபக்குவ நிலை என்னை மட்டுமல்லாமல், எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போயுள்ள ரசிகமணி டி. கே. சி., பேராசிரியர் அ. சீனிவாசராகவன், பண்டித சிரோமணி ஆண்டியப்பபிள்ளை முதலிய அறிஞர் பெருமக்களையும் வியப்பில் ஆழ்த்தியதுண்டு.

மிகச் சிறு வயதில் தந்தையை இழக்க நேரிட்ட எனக்கு, என் அன்னை கமலம்மாள் அடிக்கடி பல இனிய பாடல்களைப் பாடி மகிழ்ச்சி ஊட்டுவார். அந்தப் பாடல்களிலே பல, ஞானக்கோவைப் பாடல்களாகிய சித்தர் இலக்கியப் பாடல்கள்.

இவை போன்ற பல அகக்காரணங்களால், சித்தர் இலக்கியம் என் உள்ளத்தில் ஒரு தனி இடத்தை வகித்துவந்தது.

பிற்காலத்தில் பண்டித ஆண்டியப்பபிள்ளை அவர்களும், நம்பி ஐயங்கார் போன்ற நண்பர்களும், ஞானக்கும்மி, வாலைக்கும்மி போன்ற பாடல்களை அடிக்கடி பாடுவதை நான் கூர்ந்து கேட்ட துண்டு. 'ஆண்டவன்' என்று பயபக்தியோடு நண்பர்களால் அழைக்கப் பெற்ற ஆண்டியப்பபிள்ளை அவர்கள், அருட்பாவிலும், நவநீதக் கைவல்லியத்திலும் இதயம் தோய்ந்தவர். இந்தப் பெரியார் இந்நூல் களிலிருந்து பல அரிய பாடல்களை எனக்கு அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள்.

பின்னர், டி. கே. சி. அவர்களோடு நெருங்கிய தொடர்பு எனக்கு ஏற்பட்ட பிறகு, என்னோடு தனியாக இருக்கும்போது அவர் திருமூல ருடைய பாடல்களை, அவருக்கே உரிய முறையில் திரும்பத் திரும்பப் பாடி விளக்கம் சொல்லுவார்கள்.

இவையெல்லாம் காரணமாக, எனது சித்தர் இலக்கிய ஈடுபாடு மேலும் மேலும் அதிகமாயிற்று. ஓய்வு நேரங்களில் அலுவலக வேலை கள் அதிகமில்லாதபோது, சித்தர் நூல்களை ஆர்வத்தோடு கற்கத் தொடங்கினேன்.

கல்லூரி நாட்களின்போது, காந்தியடிகளின் கோட்பாடுகளில் மனம் தோய்ந்து நெல்லையிலே நானும் எனது உழுவலன்பர் ஐ. ராம்சிங் அவர்களும் 'தேசிய வாலிபர் சங்கம்' என்ற ஓர் அமைப்பை நடத்திவந்தோம். அப்போது, காந்திஜியின் கொள்கைகள் சித்தர்

களின் ஒருமைப்பாட்டு நெறியின் தொடர்ச்சியே என்பதைக் காணக் காண, எனது சித்தர் இலக்கிய மோகம் மேலும் பன்மடங்காகப் பெருகிற்று. சித்தர்களின் சர்வ சமய சமரச நோக்கு, சாதிகள் இல்லை என்ற சமதருமப் பார்வை, மனித குலம் முழுவதையும் ஒன்றாகக் காணும் ஒருமைக் காட்சி, பெண்களைத் தாயாக வணங்கு கிற நெறி, எல்லாக் கோவில்களிலும் ஒரே தெய்வத்தைக் காண்கின்ற பார்வை, பிறப்பினாலும் நிலையினாலும் உயர்வு தாழ்வின்றி மனித அபிமானத்தோடு சமுதாயத்தை நேசிக்கிற வாஞ்சை, உயிர் களிடத்தில் கொல்லா விரதம் கூடிய அகிம்சை நெறி, சத்தியமே கடவுள் கடவுளே சத்தியம் என்று தேர்கிற பான்மை—முதலிய சித்தர் கோட்பாடுகளும் எனது காந்நீய ஆர்வத்திலே இணைந்து, எனது ஈடுபாட்டை மேலும் முனைப்பாகச் செலுத்தின.

இந்நிலையில் டி. கே. சி. அவர்கள் ஒருநாள் கபிலர் அகவலைப் பாடி விளக்கம் கூறிச் சங்ககாலத்திலிருந்து இன்றுவரை, 'சரிநிகர் சமானம்' என்ற ஒருமைப்பாட்டுணர்வு எவ்வாறு தமிழகத்துச் சித்தர் களால் பற்பல முறைகளிலே உணர்த்தப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டினார்கள். அன்றிலிருந்து பழமையான சித்தர் நூல்களைத்தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் படிக்கத் தொடங்கியதோடு, அச்சில் வெளி வராத இத்தகைய சித்தர்களின் ஓலைச் சுவடிகளையும் சேகரிக்க ஆரம் பித்தேன். இதன் பயனாக, மனித சேவையே மகேசன் சேவை, சமுதாயத் தொண்டே இறைவழிபாடு, சிற்றுயிர்களை நேசிப்பதே பேருயிரிடம் செலுத்துகிற பக்தி என்றெல்லாம் கற்பிக்கிற சித்தர் இலக்கியம், மனிதனை மனிதனாக்கிப் பிறகு அமரனாக உயர்த்துகிற கல்விக்குச் சில சட்டங்களையும், பயிற்சி முறைகளையும் வகுத்திருக் கிறது என்பதைப் படிப்படியாகத் தெரிந்துகொண்டேன். திருமந்திர மும், பிற சித்தர் நூல்களும் கொள்கைகளை உணர்த்துகிற அற இலக்கியம் என்பதோடு, மனிதனுக்கு அவனுடைய உடம்பைக்கொண்டு செய்யவேண்டிய சில ஞானச் செயல்களைக் கற்பிக்கிற அனுபவப் பேரறிவுப் பெருநூல்கள் என்ற உண்மையை இப்போது தெரிந்து கொண்டேன்.

இந்த நிலையிலே, என் உடன்பிறவாச் சோதரர் நீதிபதி மகராஜன் அவர்களும் நானும், எதிர்பாராத முறையில் ஒரு மாபெரும் சித்தரின் குருவருளுக்கு உரியவர்கள் ஆனோம். அந்த மகான்தான் கொல்லங்கோட்டுச் சிக்கனம்பாறை ஆசிரமத்து ஞானி தவத்திரு கண்ணப்ப சுவாமிகள்.

இல்லறத்திலே வாழ்ந்த இந்தக் கேரளத்து மகான், இலங்கை யாழ்ப்பாணத்திலும், இமயமலையிலும் பல ஆண்டுகள் வாழ்ந்து பற்பல ஞானானந்த அனுபவங்கள் கைகூடப் பெற்றவர். இவரிடம் மகராஜனும் நானும் எங்களோடு சேர்ந்த சில விஞ்ஞான நண்பர்களும், இரண்டு புகழ்பெற்ற ஆங்கில மருத்துவர்களும் ஒருமித்து அமர்ந்து, முறையாகச் சித்தர்களின் பயிற்சிகளிலே தீட்சைகள் பெற்றோம்.

இந்தத் தீட்சைகளின் பயனாக, முன்பு படித்த சித்தர் பாடல் களிலே பல செய்யுட்கள் புதிய பொருள்களைத் தரத் தொடங்கின. ஒவ்வொரு தீட்சை முடிந்ததும், கண்ணப்ப சுவாமிகள் அந்தந்த்

தீட்சைக்குரிய சித்தர் பாடல்களை எங்களுக்குச் சொல்லும்போது நாங்கள் மெய் சிலிர்ப்பதுண்டு.

மகான் கண்ணப்பரின் சீடர்கள் அடிக்கடி சந்தித்துத் தங்கள் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வதும், அவற்றுக்கு ஆதார மான சித்தர் பாடல்களைப் புதிய நோக்கிலே நின்று கற்பதும் வழக்க மாயிற்று.

கண்ணப்ப சுவாமிகள் ஒடுக்கம் கூடிய பிறகு, எனக்கும் மகராஜனுக் கும், சிவயோகி இரத்தின சபாபதியாரின் தொடர்பு கிட்டியது. இந்தத் தொடர்பை நாளும் நான் போற்றி வணங்கிவருகிறேன்.

ஞானப் பாதையிலே செல்லும் மாணவனுக்கு அவ்வப்போது தோன்றுகிற பல ஐயங்களுக்குத் தக்கவாறு விடைசொல்லி, விளக்கம் தரக்கூடிய வல்லமை படைத்தவர் சிவயோகி இரத்தின சபாபதியார்! இவருக்கு என்னிடம் தனியானதொரு வாஞ்சை இருந்தது. என்னை முதன்முதலாக அவரிடம் அழைத்துச் சென்றவர் நண்பர் மகராஜனே.

"மீ. ப.வை எனக்கு ஏற்கனவே தெரியும்" என்று என்னை ஆசிர்வதித்த சிவயோகி, என்னுடைய சிறுகதைகளின் வாயிலாக என்னை அறிந்துள்ளதாகச் சொல்லி, எனது சிறுகதைத் தொகுப்பான 'கேளாத கானம்' என்ற நூலுக்கு ராஜாஜி வழங்கியுள்ள முன்னுரை யில் ஒரு பகுதியைக் குறிப்பிட்டார். அவர் சுட்டிக்காட்டிய ராஜாஜி யின் வாக்கியங்கள் வருமாறு:

> "பழைய நூல்களைப் பக்தியோடு நன்றாகப் படித்துணர்ந்த வர் சோமு. அவற்றின் சுவை ஏறிய உள்ளம் அவர் உள்ளம். பரத நாட்டியத்தில் காட்டப்படும் பாவங்களும், பழைய சித்தர் பாடல்களில் உள்ள வேதாந்தச் சிரிப்பும், இன்னும் மற்றப் பழம்பெரும் தமிழ்நூல்களிலுள்ள அறிவும் - இவையெல்லாம் சேர்ந்து ஒரு தனிப்பண்பு தருகின்றன, சோமுவின் கதைகளுக்கு."

ராஜாஜி வழங்கியுள்ள பழைய முன்னுரையின் இந்தப் பகுதியை இங்கே மீண்டும் நான் நினைவூட்டுவதற்குக் காரணம், இந்த ஆய்வு நூலில் இணைப்புறுப்பாக இந்தச் சிறுகதைத் தொகுப்பிலிருந்து ஒரு சித்தர் கதையை எடுத்துத் தந்திருக்கிறேன். இந்த ஆய்வோடு தொடர் புள்ள சித்தர்களின் ஞானச்செயலை அது சித்திரிக்கிறது.

இடைக்காடர் என்ற சித்தர் 'காஸ்மோபயாலஜி' என இன்று அழைக்கப்படும் விண்கோள்களின் பாதிப்பியல்புகளை நன்கு ஆராய்ந் தவர் என்பதைக் காட்டுவதாக இந்தக் கதை அமைந்திருப்பதால் அவ்வையின் குறளைத் தொடர்ந்து இச் சிறுகதை இடம்பெறுகிறது.

இந்தக் கதையின் தொடர்பாக இங்கே ஒரு சித்தர் இரகசியத்தைக் குறிப்பிட வேண்டும். புற உலகத்திலே கிரக நாயகர்கள் வந்ததாகக் கதையிலே அமைந்துள்ள நிகழ்ச்சியானது, உடம்புக்குள் 'அகலிடம்' என்று சித்தர்கள் அழைக்கிற உள்ளுடலின் சூக்கும நிகழ்ச்சியாகும். வானத்திலே இருந்து கீழே இறங்கி நடந்துவந்தார்கள் என்றால், பேரண்டத்தில் உள்ள கோளியக்கம் இந்த உடம்பின் அக உலகிலும் நடைபெறுகிறது என்பதே பொருளாகும்!

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

என்னும் திருமந்திரத்தின் உட்பொருளும் இதுவே.

'எருக்கின்பால்' என்பது உடற் சுரப்பிகளிலிருந்து சுரந்து வருகிற நீருக்குரிய குழூஉக்குறியே. ஆடுமாடுகள் திரிகிற காடு என்பது, மனமாகிய வனத்தின் உருவகம்! இந்த மனக்காடுதான் ஞானிகளின் அகச்செயல்களுக்குரிய களமாகும். மற்றப்படி, சிறுகதையின் கட்டுக்கோப்புக்கு ஏற்ப, நிகழ்ச்சிகள் உலக நடப்புகளைப் போலக் கூறப்பட்டுள்ளன. அவ்வளவே!

இந்த நிகழ்ச்சியானது இடைக்காடரின் வாழ்வில் நடந்ததாக ஒரு செவிவழிச் செய்தி உண்டு. 'அபிதான சிந்தாமணி' போன்ற சில நூல்களிலும் இதுபற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்த அடிப்படையை மையமாக வைத்துக்கொண்டு, நிகழ்ச்சிகளின் கோவைக்கு இசையுமாறு இடைக்காட்டுச் சித்தரின் பாடல்களைப் பின்னணியோடு பின்னி, இந்தக் கதை இயற்றப்பட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்த விகடன் தீபாவளி மலரில், 'கோபுலு' அவர்களின் அழகான வண்ண ஓவியங்களோடு இந்தச் சிறுகதை அச்சாகி வெளிவந்தபோது, பல நண்பர்கள் இடைக்காட்டுச் சித்தரின் இந்தப் பாடல்களை எந்தத் தொகுப்பு நூலில் காணலாம் என்று கேட்டு, அந்தப் பத்திரிகைக்கும் எனக்கும் எழுதினார்கள். அதன் விளைவாக இடைக்காட்டுச் சித்தரின் வாழ்க்கையும் தத்துவ இலக்கியமும் பற்றிய கட்டுரைகளைச் சில வார ஏடுகளில் தொடர்ந்து எழுதினேன்.

எனது இந்த ஆய்வு நூலின் வரிசையில் இனிவரும் தொகுதிகளில் இடைக்காடரும் இவரோடு சேர்ந்த இன்னும் சில சித்தர்களும் பற்றிய தொடர்ச்சிகள் வெளிவரும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவது பகுதியாகிய இந்த நூலானது, சித்தர்களின் கோட்பாடுகளையும், பயிற்சி முறைகளையும் தொகுத்து ஆராய்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழகத்தில், அறிவியலுக்கு ஒத்த ஞான இரகசியங்களை நம் சித்தர்கள் எங்ஙனம் ஆராய்ந்து கண்டுபிடித்து, எத்தகைய தெளிவோடும், செம்மையோடும், எக்காலத்திலும் மெய்ப்பிக்கக்கூடிய சான்றுகளுடனும் வகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதே, இந்த முதலாவது பகுதியின் நோக்கமாகும்.

இந்த முதற்பாகத்தின் இறுதியில், அவ்வையின் குறளும், அதன் பொது விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன. முன் பக்கங்களில் வருகிற சித்தர் தத்துவப் பேருண்மைகளுக்கு ஆதாரமான அடிப்படைக் கல்வி இந்தக் குறள் நூலில் அமைந்துள்ளதால், இந்தக் குறள் இணைப்பு இந்த நூலின் ஓர் உறுப்பாக அமைகிறது.

அவ்வையின் குறள் கூறுகிற ஞானத்துக்கு முகமனாக விளங்குகிற முதல் இரண்டு குறட்பாக்களையும், சற்று விளக்கமாகவே எழுதியிருக்கிறேன். ஏனென்றால் இந்த இரண்டு பாக்களிலும், மனித உடம்பு எப்படி ஒரு பெரிய ஞானக் கருவியாக ஒரு சித்த யோகியின் பயிற்சியிலே கைகொடுத்து உதவுகிறது, என்ற ஆதாரமான உண்மை ஓதப்படுகிறது. இதை வைத்தே, மற்றக் குறட்பாக்கள் விரிகின்றன. மெய் என்னும் ஒளிமயமான நுண்ணுடலையுங்கூட, பொய் என்று அழைக்கப் பெறுகிற நிலையற்ற நமது பரு உடலைக்கொண்டே, ஒரு யோகப்பயிற்சி மாணவன், தேர்ந்து தெளிந்து பயில்கிறான்! எனவே, இந்தப் பயிற்சி முறையை வற்புறுத்துகிற குறட்பாக்களுக்கு முகமனாக அமைகின்றன முதல் இரண்டு பாக்களும். பின்னர்த் தொடர்கிற குறட்பாக்கள் இந்தப் பயிற்சியின் மேல்நிலைக் கல்வியை ஒவ்வொரு படியாக எடுத்தோதுகின்றன.

ஞானப் பாதையிலே செல்வோருக்கு இந்தக் குறட்பா ஒவ்வொன்றும் ஒரு மைல்கல் அல்லது தொலைக்கல்லாகும்.

இந்தப் பாக்களுக்குச் சுந்தர மாணிக்க யோகீசுவரர் தந்துள்ள அரும்பெரும் விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு சிவயோகியார் எழுதியுள்ள பொழிப்புரைகளையும், கம்பளிச் சித்தர், கயிலாய ஞானி போன்ற மகான்களின் உபதேசங்களையும் துணையாகக் கொண்டு, பொதுப் பார்வையான சிறிய உரைவிளக்கங்களைத் தந்துள்ளேன்.

இந்த மரபுவழி உரைகள் இந்திய நாடு முழுமைக்கும், எல்லா மொழி மாணவருக்கும் பொதுவாய் அமைகின்ற சித்தர் யோகத்தை அதே முறையில் விளக்குவனவாம். ஆகையால் வடமொழிச் சங்கேதச் சொற்களைத் தமிழ் வழக்காற்றோடு கலந்து இந்த உரைகள் இயற்றப் பட்டுள்ளன. பெரியோர்களின் இந்தச் சொற்றொடர்களை அதிகமாக மாற்றாமல் அப்படி அப்படியே கொடுத்திருக்கிறேன். எல்லாப் பொதுமக்களுக்கும் எளிதில் புரியக் கூடிய விதத்தில் குழூஉச் சொற்களையும் கலை மரபுச் சொற்களையும் குறைத்துப் பழகு தமிழிலே இந்த அவ்வையின் நூலுக்கு ஓர் ஆய்வுரை விரிவாக எழுதி வருகிறேன். அதைத் தனி நூலாகவே வெளியிட வேண்டும் என்பது என் விருப்பமாகும். வயதும், சூழ்நிலையும், ஏனைய வாய்ப்புக்களும் திருவருளினால் இயைபு கொள்ளுமானால், அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுவது ஒரு கடமையாகும். ஏனென்றால், அவ்வையின் நூல்களில் இப்படி ஒரு குறள் நூல், இத்தனை தத்துவங்களோடு இயற்றப்பட்டு, நமது சித்தர் உலகிலே வழங்கிவருகிறது என்பது பலருக்குத் தெரியாது! Text Book என்று சொல்லுகிற ஒரு பாடநூலைப் போன்று, சித்தர் தத்துவத்தைக் கற்கப் புகுவோருக்குக் கைவிளக்காக அமைகிற அத்துணை பெருமை உடையது இந்த நூல்!

இவ்வளவு பாடுபட்டுக் கற்கவேண்டிய இந்தச் சித்தர் பயிற்சிகள், பொதுமக்களுக்கு எங்ஙனம் பயன்படும் என்று கேட்கலாம்! அவ்வையாரே சொல்லியுள்ளது போல உள்ளமும் உடலும் தோய

முனைகிறவர்களுக்கே இந்தப் பயிற்சிகள் இன்றியமையாதவை; மற்றவர்களுக்குச் சித்தர் புகட்டுகிற வழிபாட்டு முறை முற்றிலும் வேறுபட்ட பிறிதாகும்.

ஆம்; எல்லாப் பொது மக்களுக்கும், எல்லா இயல்பினருக்கும் பயன் தருவதும், பொருந்தக் கூடியதுமான எளிய வழிபாட்டு முறையினையும் சித்தர் இலக்கியம், குழந்தைக்குப் பாலூட்டுவது போல எடுத்துச் சொல்லியிருக்கிறது.

யாவர்க்குமான சித்தர் நெறி எது, அத்தகைய எளிமையான முறையும் சித்தர் இலக்கியத்தில் பேசப்படுகிறதா என்றால், ஆம், அதை ஒட்டுமொத்தமாகத் திருமூலர் பாடுகிறார். பல சித்தர்கள் பல பாடல்களில் பலவாறாகக் கூறியுள்ள எளிய வழிபாட்டு முறைகளையெல்லாம் ஒன்றாகத் தொகுத்துச் சொல்கிறது திருமூலரின் திருமந்திரம்:

யாவர்க்கும் ஆம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம்உணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம்பிறர்க் கின்னுரை தானே

வேறு எந்த யோகப் பயிற்சிகளையும் ஞானப் பாடங்களையும் பெரும்பாடுபட்டுப் படிக்க வேண்டாம்; பயில வேண்டாம். எல்லா மக்களுக்கும் எளிதாகச் செய்யக்கூடிய ஒரு நெறி சித்தர் ஞானத்திலே உண்டு. அது என்ன?

ஏதோ ஒரு மூர்த்தி, ஓர் இறைவடிவம்; அதற்கு அருச்சனை செய்ய, தூவி வழிபட, ஏதோ ஒரு பசிய இலை! அதைக்கொண்டு வழிபட்டால் போதும்.

கருத்து என்னவென்றால், எப்படி முடியுமோ, அப்படி ஒரு துளிநேரம் இறைவனை ஏதோ ஒரு வடிவில் வழிபடுவது எல்லாராலும் முடிகிற எளிய செயலே.

எல்லாரும் செய்யக்கூடிய இன்னொரு வழிபாடு இருக்கிறது. ஓர் இறைவடிவத்தை வழிபடுவதுகூட இயலாத நிலையில் உள்ள மக்கள் இதைச் செய்யலாம். அதாவது ஒரு பசுமாட்டுக்கு ஒரு வாய் உண்ணுவதற்கு அறுகம்புல் கொடுக்கலாம். பசுவுக்குப் புல் என்றால், ஜீவ தயை அல்லது உயிர்க்கருணை என்பதன் சின்னமே! அவ்வளவுதான்.

சரி; ஒரு பசுவைத் தேடி அதற்கு அறுகம்புல் ஒரு வாயளவுகூடச் சம்பாதித்துத் தரமுடியாதவர்கள் இருந்தால்? அவர்களுக்கு ஆகக் கூடிய வழிபாடு எது?

எப்படியும் வயிறு நிரப்புவதற்கு உண்ணுகிறார்கள் அல்லவா? அப்படி உண்ணும்போது ஒரு கைப்பிடி ஒதுக்கி வைத்துவிடக்கூட முடியாதா? ஏழைப் பிச்சைக்காரன் ஒருவனுக்கு, அல்லது காகத்துக்கு, அல்லது எறும்புகளுக்கு அந்த ஒரு கைப்பிடி நிவேதனம் பயன்படுமல்லவா? இது போதும். இதுவே வழிபாடாகும்.

இதுவும் முடியாது என்றால், இதைவிட எளிதான வழிபாடு சித்தர்களால் சொல்லப்பட்டிருக்கிறதா?

ஆம்; சொல்லப்பட்டுள்ளது. உணவிலே ஒரு கைப்பிடிகூட எடுத்து வைக்க மனமில்லையா? அப்படியானால் வெறும் வாய்ச்சொல்லாவது வழங்கலாமா?

யாவர்க்கும் ஆம்பிறர்க் கின்னுரை தானே

"பேசும்போது பிறருக்கு இனிய மொழிகளை வழங்கப்பா!" என்கிறார் சித்தர்! இந்த வாய்வார்த்தை அறமாவது செய்; அது போதும், அதுவே மிகப் பெரிய தெய்வ வழிபாடாகும்.

மனைவியோடு இனிய மொழிகள் பேசலாம். காதலியைக் 'கண்ணே' என்று கொஞ்சலாம். குழந்தைகளோடு கிளுகிளுக்கலாம். அதுவன்று 'பிறர்க்கு இன்னுரை' என்பது! நம்மோடு தொடர்பில்லாத பிறனுக்கு, மனம்குளிர ஒரு வார்த்தை சொன்னால் போதுமாம். அதுவே ஒரு பெரிய யாகம்; ஒரு மாபெரும் வேள்வி; அதுவே வடமொழி நூல்கள் விரிவாகச் சொல்கிற நவாவர்ண பூசையுமாகும்! மொழியறமே அறத்தில் எல்லாம் சிறந்த பேரறமாகும் என்பது கருத்து!

எளிமைக்கும் எளிமையான இந்த வழிகளை, கடினத்துக்கும் கடினமான வழிகளைப் பயின்று தேறிய சித்தர்கள் கூறியுள்ளார்கள்!

பொதுநலத்தொண்டு, மூர்த்தி வழிபாடு, யோகப் பயிற்சி, உடம்பு என்ற கோவிலிலே உள்ளம் என்ற கருவறையிலே உயிர் என்னும் ஆன்ம இலிங்கத்தைப் பூசனை செய்கிற இரகசிய ஞானநெறி, ஆகிய பலமுறைகளையும் விரிவாகக் கூறுகிற சித்தர் இலக்கியம், இப்படி ஓர் எளிய வழியையும் அனைத்து மக்களுக்குமாகக் கூறியுள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

அவ்வையின் குறள்நூல் சித்தர்களின் பயிற்சி முறைகளுக்குரிய கல்வியை ஓதுவதொடு, இந்தப் பயிற்சிகளுக்கு நிலைக்களனாக உள்ள உடலின் கூறுகளையும் அலசி ஆராய்ந்து சொல்வதால் இந்நூலைப் படிப்பவர்களுக்கு, மற்ற இலக்கியங்களில் உண்டாகிற ஒன்பான் சுவைகளின் இலக்கிய இன்பம் ஏற்படாது. அதோடு சித்தர் தத்துவம் என்பது இத்தனை உடற்சாதனைகளை உள்ளடக்கிய பெரும்பாடான ஓர் தொல்லை நெறியா என்ற தயக்கமுங்கூடச் சிலருக்கு உண்டாகலாம். ஆகையால் சித்தர்கள் மொழிந்துள்ள வேறு எளிய முறைகள் எவ்வளவு எளிமையானவை என்பதைக் காட்டவே, இந்தத் திருமந்திரத்தை இங்கே எடுத்துக் காட்டலானேன்.

அவ்வையின் குறளைத் தொடர்ந்து இணைக்கப்பட்டுள்ள சிறுகதையின் கருவைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். குறள் கூறியுள்ள இந்தப் பயிற்சிகளை நன்கு கடைப்பிடித்துத் தேறிய வல்லவனாகிய ஒரு சித்தன், விதிக்கு விதி செய்கிற ஆற்றலை எவ்வாறு கையாளுகிறான் என்பதையும், ஒரு சித்தரின் தவச் செயலினால் உலகமே எங்ஙனம் உய்கிறது என்பதையும், எங்கோ ஒரு வனத்திலே வாழ்கிற ஞானியின் உள்ளமானது 'எல்லாரும் இன்புற்றிருக்க' எத்தகைய உலக நலத்தைப் பேணுகிறது என்பதையும் எடுத்துக்காட்டுகிற நிகழ்ச்சி இடைக்காடரின்

வாழ்வில் நடந்ததால், அவ்வையின் நூற்பயனுக்கு ஒரு சான்றாக இந்தக் கதை குறள்நூலை அடுத்து வருகிற இணைப்பாக்க் கொடுக்கப் பட்டுள்ளது. இந்தக் கதைச் சான்றுடன் எனது ஆய்வுநூலின் முதலாவது பகுதி நிறைவு பெறுகிறது.

* * *

என் உள்ளத்திற்கு உகப்பான இந்தப் பணியிலே என்னை ஆற்றுப் படுத்திய மூலவர், அமரர் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர் களாவர். இவ்வரசர் பெருமான் அமரராவதற்குச் சில மாதங்கள் முன்பு, இந்தப் பணியில் என்னை ஈடுபடுத்த வேண்டும் என்ற தமது விருப்பத்தைப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களிடமும், திரு. ஏ. ஆர். இராமசாமி அவர்களிடமும் சொல்லி யனுப்பி, என்னோடு விரிவாகக் கலந்து பேசச் செய்தார்கள்.

என்னிடத்தில் செட்டிநாட்டரசர் அவர்கள் கொண்டிருந்த நேசமும் பாசமும் இப்படி ஓர் எண்ணமாக அந்த மாபெரும் உள்ளத் தில் உருவெடுத்தமை கண்டு, மட்டில்லாத உவகை அடைந்தேன். அந்தப் புண்ணியசீலருக்கு எத்துணை கடப்பாடு உடையேன் என்பதை எவ்வாறு வெளியிடுவேன்! பணியைத் தொடங்கியதிலிருந்து அந்தப் பெருந்தகையின் அன்பும் அரவணைப்பும் என்னைப் பேணி வருகின்றன என்று சொன்னால் மிகையில்லை. மறைந்தும் மறையாது வாழும் அந்த அரசர் பெருமானுக்கு எனது மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

தந்தையார் அவர்களின் எண்ணத்தை, அவர்கள் எண்ணிய முறை யிலேயே நிறைவேற்றுவதற்கு, அன்னாரின் வழித்தோன்றல் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என் உள்ளத்தை நெகிழ்வித்தன. எண்ணித் துணிந்ததை எண்ணியவாறு நிறைவேற்றும் வல்லமை படைத்த டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், இச் செயலை நிறைவேற்றுவதில் காட்டிய உறுதிக்கும், உயர் பண்புக்கும் என்றும் ஆழ்ந்த நன்றியுடையேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் இந்தப் பணியை என்னிடம் ஒப்படைப் பதில் காட்டிய அன்புக்கும் ஆர்வத்துக்கும் நன்றி செலுத்துகிறேன். அவ்வாறே புதிய துணைவேந்தர் பேராசிரியர் இராம. சேது நாராயணன் அவர்கள் இந்த நூலின் பணியிலே தந்துவருகிற ஊக்கத்துக்கு நன்றி உடையேன்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினர் இதை நெறிப்படுத்திய பரிவுக்கு என் நன்றி உரியதாகும்.

என் மதிப்பிற்குரிய நண்பர் பேராசிரியர் லெ. ப. கரு. இராம நாதன் செட்டியார் அவர்கள் இந்தப் பணியில் என்னை அமர்த்து வதிலும், அடிக்கடி ஊக்கப்படுத்துவதிலும் எத்தகைய நேய உறவை வெளிப்படுத்தினார்கள் என்பதை, எந்த அடைமொழியினாலும் இயம்ப இயலாது! அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

இந்த ஆய்வு நூலை எழுதும்போது, பலவாற்றானும் எனக்கு ஊக்கம் அளித்த திரு. ஏ. ஆர். இராமசாமி அவர்களுக்கும், இந்தப் பதிப்பில் மிகுந்த ஆர்வம் செலுத்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்களுக்கும், பதிவாளர் ஆர். ராஜமாணிக்கம், நூல் வெளியீட்டுத் துறைச் சிறப்பு அலுவலர் வெ. இலக்குமணன் ஆகியோருக்கும் சிறப்புற அச்சேற்றி தந்துள்ள மாருதி அச்சகத்தாருக்கும், அச்சுப்பிழைகளைச் சரிபார்த்த டாக்டர் மு. தங்கராசு அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கடந்த நாற்பது ஆண்டுகளில் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம் முதலிய சமய நிலையங்களும், சைவ சித்தாந்தக் கழகம் உள்ளிட்ட பல வெளியீட்டகங்களும், பல பெரியோர்களும் வெளியிட்டுள்ள நூல்களையும், இதுவரை அச்சேறாத பல ஓலைச் சுவடிகளையும், வெல்ஸ், ஹக்ஸ்லி போன்ற பல ஆங்கில அறிஞர்களின் தத்துவ நூல்களையும், மேனாடுகளில் இருந்து வெளி வருகிற விஞ்ஞான ஏடுகளையும் படித்தபோதெல்லாம் அவ்வப்போது எனது கையேட்டிலே குறிப்புகள் எழுதி வந்துள்ளேன். இந்த ஆய்வு நூலை எழுதும் பணியில் இக் குறிப்புக்கள் மாபெரும் துணையாக அமைந்தன. இவை தவிர, நான் சந்தித்துள்ள பல சித்தர்கள், என்னோடு தீட்சை பெற்ற உடனுறை மாணாக்கர்கள், எங்கள் குருநாதர்களில் முதன்மையான கண்ணப்ப சுவாமிகள், சிவயோகியார் ஆகிய ஞானிகள், நேரில் வெளியிட்ட யோகக் கருத்துக்களும் இந்த ஆய்வுக்குப் பெரிதும் துணைசெய்தன. இந்தப் பெரியோர்கள் அனைவருக்கும் மிகமிகக் கடன்பட்டிருக்கிறேன்.

இந்த ஆய்வுப் பணியிலே என்னை வழிநடத்திச் செல்கிற குருவருளுக்கும், திருவருளுக்கும், எனது ஆன்ம நேய அஞ்சலியைப் பணிவோடு செலுத்தி வழிபடுகிறேன்.

"பச்சை"
ஏஐ 122, எட்டாவது நேர்சாலை,
அண்ணாநகர், சென்னை-600 040
ஆகஸ்ட் 1988.

மீ. ப. சோமசுந்தரம்

**Dr. L.B. Venkatrangan**
M.Sc., M.A., M.Phil., Ph.D.
Vice-Chancellor

Phone : Office : 04144-238283
Res : 04144-238214
Fax : 04144-238925
04144-238080
E-mail : vc_lbv@hotmail.com

ANNAMALAI UNIVERSITY,
Annamalai Nagar, P.O. 608 002.
India.

# அணிந்துரை

சித்தர்களின் தத்துவத்தை, அவர்களுடைய வழிபாட்டு முறையை, அவர்களுடைய ஞானத்தின் பெருமையை, அவர்கள் வழிவழியாக வழங்கி வருகின்ற பல மெய்ஞான நுட்ப ரகசியங்களை, சித்தர் நெறியைப் பின்பற்றும் மாணவர்களின் பயிற்சி முறைகளை ஆய்வுசெய்து எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சித்தர் இலக்கியம் என்ற அரிய நூலை உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் அரிதின் முயன்று எழுதி இருக்கிறார்கள். மேலை நாடுகளுக்குச் சென்று அந்த மொழியிலே உள்ள சித்தர் இலக்கியத்தையும் ஆய்ந்தவர் இவர். ஆதலால் மேலை நாட்டுச் சித்தர் இலக்கியத்தை நுணுகிப்படித்து அந்த இலக்கியத்தின் குரல் திருமூலரின் குரல், கருவூராரின் குரல், சிவவாக்கியரின் குரல், பட்டினத்து அடிகளின் குரல் என்றே சொல்லத் தோன்றுகிறது என்று கூறி எந்த மொழியிலும் சித்தர்களின் மிஸ்டிஸிஸம் (Mysticism) என்னும் இறையனுபவம் ஒன்றாகவே இருக்கின்றது. அதன் வெளியீட்டு முறையும் அகில உலகப்பாங்கிலே இருக்கிறது; என்று சான்றுகளுடன் ஆசிரியர் கூறியிருப்பது படித்து மகிழ்தற்குரியது.

சித்தர் தத்துவம் என்பது அறிவு கொண்டு ஒப்புக்கொள்ள வேண்டிய உய்த்துணரும் பார்வையோடு காணவேண்டிய விஞ்ஞான மெய்ஞ்ஞான பேரறிவுக் களஞ்சியமாகும்.

உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்களின் தந்தையாருக்குப் பல சித்தர்களின் நேர்முகத் தொடர்பு இருந்தததாலும், இவர்களுக்கும் பல சித்தர்களுடன் தொடர்பு இருந்ததாலும் இந்நூலை மிகவும் நல்ல முறையில் நுண்மாண் நுழைபுலத்தோடு எழுதியிருக்கிறார்கள்.

டாக்டர் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் சித்தர் இலக்கியம் வரவேண்டும் என்று திட்டம் வகுத்தார்கள். தந்தையார் உருவாக்கிய திட்டத்தை நம் மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் உளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றேன். சித்தர் இலக்கியம் முதற் பகுதியை மறுபதிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பவளவிழா ஆண்டில் வெளியிடுவது மிகவும் பொருத்தமுடையது. இந்நூலைத் தமிழ் உலகம் படித்து நல்ல பயன் பெற வேண்டுகிறேன்.

(எல்.பி. வெங்கட்ரங்கன்)

# ANNAMALAI UNIVERSITY
CENTRE OF ADVANCED STUDY IN LINGUISTICS
UGC - SPECIAL ASSISTANCE PROGRAMME

Dr. S. NATANASABAPATHY, Ph.D.,
Director, CAS in Linguistics &
Dean, Faculty of Indian Languages
Annamalai University,
Annamalai Nagar - 608 002.

Annamalai Nagar - 608 002.
Tamil Nadu, India.
Phone : 04144-222603 (R)
237331 (O)
Fax : 04144-238080
e-mail : natsyo24@yahoo.co.in


Date : ..............................

## மதிப்புரை

சித்தர் இலக்கியம் என்ற ஆய்வு நூல் உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்களால் எழுதப் பெற்றிருக்கிறது. இந்த ஆய்வு நூல் சித்தர் தமிழை ஆராய்கிறது. அந்தத் தமிழின் கவிமாண்பை, அந்தத் தமிழின் இலக்கிய மாண்புகளை, அதனுடைய ஆழ அகல நீளங்களை முந்தையோர் காட்டிய பாதையிலே சென்று காண்கிற ஓர் இலக்கிய ஆய்வு நூல் இதுவாகும்.

சங்க காலத்துக்கு முன்பு தொடங்கி இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது தமிழகத்தில் உலவி வருகின்ற சித்தர்களின் தமிழிலே ஒரே பண்பாடு கூடிய தனித்தன்மை, ஒருமைப்பாடு, மாறுபடாத கோட்பாடு நிலவி வருகின்றன. சித்தர் இலக்கியத்தின் குரல் ஒன்றே: அது உரைநடையோ, கவிமொழியோ எதுவாக இருந்தாலும் அந்த ஒலியின் குரல், அதனுடைய சுருதி ஒன்றே. தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரதநாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் சித்தர்கள் பேசுகிற குரல் ஒரே குரலாய் இருக்கிறது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற சித்தரின் குரல் உலகத்தின் ஞானக்குரல்.

இந்த ஆய்வு நூலின் பார்வையிலே மேலைநாட்டு அறிஞர்களின் கண்டுபிடிப்புக்களும் அங்கங்கே ஒப்பு நோக்கப் பெற்றிருக்கின்றன. அத்துடன் சித்தர்களின் மெய்ஞ்ஞானப் பேருண்மைகள் அனைத்தும் விஞ்ஞான அறிவியற் பேருண்மையோடு ஒத்து இயைந்து நிற்பதைச் சுட்டிக்காட்டுகிறது இந்நூல். இவ்வாறு ஒப்பிட்டிருப்பது சித்தர்களின் இலக்கியத்திலுள்ள கோட்பாடுகள் மூட நம்பிக்கைகள் அல்ல, உண்மைகளே என்று நம்புவதற்குத் துணை செய்கிறது.

உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் தவத்திரு கண்ணப்ப சுவாமிகளிடம் சித்தர்களின் பயிற்சிகளிலே தீட்சை பெற்றவர். இயற்றமிழிலும் சித்தர் தமிழிலும் தேர்ச்சியுடையவர். ஆதலால் இந்த அரியநூலை எழுதித் தமிழுக்கு அணிவித்திருக்கிறார்கள். சித்தர் இலக்கியம் முதற் பகுதியை மறுபதிப்பாகப் பவளவிழா ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன்.

டாக்டர் இராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் விரும்பியதற்கேற்ப மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் சித்தர் இலக்கியம் வெளிவர உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் மறுபதிப்பாக வெளிவர உதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் எல்.பி. வெங்கட்ரங்கன் அவர்களுக்கு என்னுடைய உளம் நிறைந்த நன்றியைப் புலப்படுத்துகிறேன். இந்நூலைத் தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் கற்றுப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

சு. நடனசபாபதி

(சு. நடனசபாபதி)

**டாக்டர் ப. தங்கராசு**
பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# பதிப்புரை

சித்தர் இலக்கியம் என்ற அரிய நூலை உயர்திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் தம்முடைய பெரும் முயற்சியால் எழுதியிருக்கிறார்கள். இந்நூலை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறது. இது தமிழுக்கு செய்யும் மிக உயர்ந்த தொண்டாகும்.

சித்தர் இலக்கியம் முதற் பகுதியை மறுபதிப்பாக பவளவிழா ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. இந்த நூல் மிகவும் போற்றுதற்குரிய நூலாகும். விநாயகர் அகவல், விநாயகர் வடிவங்கள், சித்தர் கொள்கை, முருகன் வழிபாடு, சித்தர் இலக்கியம் உணர்த்தும் ஞானக்கல்வி, சிவபுராணம், சித்தர் இலக்கியத்தின் ஆதாரமான அறிவியல் இரகசியங்கள் என்று பல அரிய தலைப்புக்களைக் கொண்டு விளங்குகிறது இந்நூல். விநாயகர் அகவலுக்கும், சிவபுராணத்திற்கும் இயற்றமிழ் முறையிலும் சித்தர் இலக்கிய முறையிலும் இரண்டு விளக்கம் நூல் முழுமைக்கும் கூறப்பெற்றிருப்பது ஆசிரியரின் அறிவு நுட்பத்தையும், சித்தர் இலக்கியத்தில் தோய்வையும் காட்டுகிறது. சித்தர் இலக்கியத்தின் நுட்பத்தை விளக்க சிவானந்த போதம், நிஜானந்த போதம், நெஞ்சறி விளக்கம் என்ற அரிய நூல்களை எடுத்துக் கூறியிருப்பது அவர்களுடைய பல்நூற் பயிற்சியைப் புலப்படுத்துகிறது. விநாயகரின் முப்பத்திரண்டு படங்களையும், எந்திரங்களையும் இணைப்பாகச் சேர்த்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

உலக நாடுகளில் உள்ள ஞானிகளின் கருத்துக்களைத் தேவையான இடங்களில் பொருத்தமுறக் கூறியிருப்பதும் பாராயணம் செய்வதால் ஏற்படும் பயனை விளக்கியிருப்பதும் நன்று. விநாயகர் அகவலின் மந்திர ஆற்றல் அனைவரையும் வளைத்து அணைக்கிறது. எல்லாருக்கும் பரவசம் என்ற பேரின்ப அனுபவத்தை ஒரு சேரத்தருகிறது. மந்திரமும் தோத்திரமும் புரிகிற ஆன்மவினை என்பது இதுவே. சொல்லும், அதன் பொருளும் அவற்றின் மந்திர ஆற்றலும் உள்ளங்களை எல்லாம் பிணைத்துப் பேரின்பம் என்கிற மின்சார ஆற்றலைப் பாய்ச்சுகிற வல்லமை இதுவேயாகும். அந்த வல்லமை அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு மின்கலமாகத் திகழ்கிற ஓர் அரிய நூலே ஒளவையார் அருளிய விநாயகர் அகவல் என்று சித்தர் இலக்கியத்தின் நுட்பத்தை விளக்கியுள்ளார் ஆசிரியர்.

உலக ஞானிகள் கவிஞர்கள் விதி எழுதின எழுத்தை அழிக்கவே முடியாது என்று கூறியவற்றை எடுத்துக் காட்டித் தமிழ்நாட்டு ஞானி அருணகிரியார் அவன் கால்பட்டழிந்ததிங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே, என்று கூறியிருப்பதையும் எடுத்துக்காட்டி இறைவனை உளமார வணங்கினால் விதியின் எழுத்தை மாற்றலாம் என்ற தமிழ்நாட்டு ஞானியின் இறை நம்பிக்கையை விளக்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

சித்தர் இலக்கியத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட வேண்டும் என்ற இராஜா சர் முத்தைய வேளின் வேணவாவை நம் மாண்பமை இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் மறுபதிப்பாக வெளிவர உதவிய எங்கள் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் எல்.பி. வெங்கட்ரங்கன் அவர்களுக்கு என்னுடைய உளம் நிறைந்த நன்றியையும் வணக்கதையும் உரித்தாக்குகிறேன். இந்நூலை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

ப. தங்கராசு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மானுடப் பண்பு | 1 |
| 2. | சித்தர் இலக்கியம் - தத்துவ விளக்கம் | 8 |
| 3. | எது அறிவு? | 29 |
| 4. | சித்தர் இலக்கியத்தின் உத்தி முறைகள் | 51 |
| 5. | ஞானிகள் எப்படி இருப்பார்கள்? | 58 |
| 6. | சித்தர்களின் சமயம் எது? | 50 |
| 7. | வழிபட நான்கு நெறிகள் | 67 |
| 8. | சித்தர் இலக்கியத்தின் அறிவியல் - தத்துவம் | 70 |
| 9. | அகலிடத்து உள்ளொளி | 81 |
| 10. | இயற்கை அமைப்பின் இரகசியங்களைப் பற்றிய சித்தர் விளக்கம் | 84 |
| 11. | பிறவி இரகசியங்கள் | 89 |
| 12. | யாக்கையின் இயல்பும் பயனும் | 97 |
| 13. | மனத்தின் மாண்பு | 107 |
| 14. | இறையுணர்வில் மனமும் மொழியும் செயலும் | 111 |
| 15. | உடம்புக்குள் வல்லமைகள் | 116 |
| 16. | நுகர்ச்சியின் வேறுபட்ட நிலைகள் அல்லது அவத்தைகள் | 126 |
| 17. | ஆறு ஆதாரங்களின் பயிற்சிமுறைகள் | 129 |
| 18. | சித்தர்கள் கூறும் எட்டு யோகங்கள் | 132 |
| 19. | எட்டு வகையான சித்திகள் | 140 |
| 20. | மூலக்கனல் | 147 |
| 21. | சித்தர்களின் சரஞானம் | 151 |
| 22. | அகப்பயிற்சியில் அரிய ஆற்றல்கள் | 160 |
| 23. | சித்தர் தத்துவத்தின் ஞானச் செம்பொருள் | 164 |
| 24. | ஆசானின் பெருமை | 168 |
| 25. | சித்தர்கள் யோகப்பயிற்சியில் வழங்குகிற குறியீடுகளும் குழூஉக் குறிகளும் | 182 |
| 26. | சித்தர் வழங்கும் ஒண்பொருட் சொற்கள் | 192 |
| 27. | சித்தர்களின் மந்திர வழிபாடு | 195 |
| 28. | எழுத்தும் நிலையும் | 200 |
| 29. | உண்மையும் உருவகமும் | 211 |

30. யாப்பியலும் இசையமைதியும் 222

31. இலக்கிய நோக்கு 228

32. சில சித்தர் செய்திகள் 253

33. ஒரு ஞானக் களஞ்சியம் 257

34. விதியின் விதி

35. இணைப்புகள்

அ. அவ்வையின் குறள் (விளக்கப் படங்கள்) 331

ஆ. இறையாற்றல் எந்திரங்கள் 333

இ. விண்கோட் சக்கரங்கள் 367

ஈ. அணிகல யந்திரங்கள் 375

36. இந்த ஆய்விலே ஒப்புநோக்கிய தமிழ் நூல்கள் 385

Books In English 387

# 1. மானுடப் பண்பு

மிகப் பழமையான ஒரு கிரேக்கக் கதை உண்டு.

கிரீஸ் தேசத்தின் தலைநகரமான ஆதன்ஸ் நகரத்தில் விநோதமான ஒரு காட்சியை நாள்தோறும் காணலாம். ஆதன்ஸ் நகரத்தின் முக்கியமான கடைவீதிகள் கூடுகின்ற அங்காடிப் புறத்திலே ஒரு யவன ஞானி கையில் அகல்விளக்கு ஏந்தியவாறு நாளும் பொழுதும் நின்றிருந்தான். அவன் வருவோர் போவோர் எல்லோரையும் அந்த அகல் விளக்கைக் கொண்டு கூர்மையாகப் பார்த்தான்.

அங்காடியில் மனிதர் கூட்டம் இல்லாதபோது இந்த யவன ஞானி வீதிவீதியாக நடந்தான், கையில் அகல்விளக்கோடு. மக்கள் கூடிநின்று பேசுமிடம், மாதர் நல்லார் உறைவிடம், பள்ளிகள், கல்விச்சாலைகள், நாடக அரங்குகள், கலைக்கூடங்கள்; எல்லா இடங்களிலும் புகுந்து புகுந்து எதையோ தேடினான், கையில் அந்த அகல்விளக்கை ஏந்தியவாறு.

விழாக்கள், கேளிக்கைக் களியாட்டங்கள், விளையாட்டுத் திடல்கள், கிரேக்க மல்லர்கள் போரிடும் களங்கள் ஆகிய எல்லா இடங்களிலுமே எதையோ, யாரையோ தேடித்தேடி, அலைந்து அலைந்து, தான் தேடியதைக் காணாத நிலையிலே கையில் அகல்விளக்கோடு நாளெல்லாம் வாழ்ந்தான் அந்த யவன ஞானி.

இருள் சூழ்ந்த இரவில் மட்டுந்தானா கையில் விளக்குடன் எதையோ தேடினான்? இல்லை. பட்டப்பகல் போன்ற பால்நிலவு பொழியும் முழுமதி இரவுகளிலும் கையில் விளக்கோடு அவன் நடந்தான்.

இரவு நேரங்களில் மட்டுமில்லை; பட்டப்பகலிலும், கதிரவன் காய்கின்ற உச்சி வேளையிலுங்கூட, அந்த யவனச்சித்தன் கையில் விளக்குடன் நடந்தான், நடந்தான், நடந்துகொண்டே இருந்தான்.

நாட்கள் ஓடின; வாரங்கள் உருண்டன; மாதங்கள் கழிந்தன; ஆண்டுகள் புரண்டன. அந்த ஞானி தன் அகல்விளக்கை அணைக்கவில்லை. அவன் தேடிய பொருளை அவன் இன்னும் காண்பதாக இல்லை.

கிரேக்க தேசத்தின் தலைநகரமான ஆதன்ஸ் நகரத்திலே ஒரு பயித்தியக்காரன் இவ்வாறு அகல்விளக்கோடு நடந்துகொண்டிருந்தால் அவனை அறிவுசான்ற யவன மக்கள் ஏளனத்தோடு நோக்கியிருப்பார்கள். ஆனால் இந்த விநோதமான செயலைச் செய்வதோ கிரேக்க

தேசத்தின் ஒரு மிகப் பெரிய ஞானி. எனவே அவனுடைய செயலை ஏளனம் செய்யக்கூடிய மனம் யாருக்கும் இல்லை. ஆனால் அதே சமயம் அந்தச் செயலைப் புரிந்துகொண்டு வாளாயிருக்க முடிய வில்லை. அவனிடம் சென்று கேட்பதற்குத் துணிவு யாருக்கும் இல்லை. இப்படியே நாட்கள், வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் கழிந்தன.

ஒருநாள் ஆதன்ஸ் நகரத்தின் திறமை மிக்க மல்லன் ஒருவன் மிகத் துணிவோடு அந்த ஞானியை அணுகி அவனுடன் வினவினான் :

"ஐயா, ஞானியாரே, உலக நாடுகளிலுள்ள வேத நூல்கள் எல்லாம் காணமுடியாது தவிக்கின்ற கடவுளை நீர் காண எண்ணி அகல்விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டு நடக்கிறீரா? மறைகளால் பார்க்க இயலாத பரம்பொருளை இந்த அகல்விளக்கைக் கொண்டு பார்த்துவிடலாமென்று நினைத்தீரா? சொல்லும்!"

இவ்வாறு அந்த யவன ஞானியைக் கேட்டான் ஆதன்ஸ் நகரத்து மல்லன்.

ஞானியினுடைய முகத்திலே புன்முறுவல் நெளிந்தது. அவன் அந்த மல்லனை நோக்கிப் பேச ஆரம்பித்தான்.

"அப்பனே, மறைகளெல்லாம் விவரிக்கின்ற பரம்பொருளைக் காணும் ஆசை எனக்கு இல்லை. இந்த மாபெரும் மக்கள் கூட்டத்திலே எங்கேயாவது ஒரு மனிதனைக் காண முடியுமா என்றுதான் தேடு கிறேன், தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கிறேன். அவனைக் கண்டுவிட்டால் அகல்விளக்கை அணைத்துவிடுவேன்!"

இவ்வாறு கூறினான் அந்த மாண்புமிகு யவன ஞானி.

மக்கள் கூட்டத்திலே ஒரு மனிதனைக் காணுவது அத்தனை அருமையானதா? ஆயிரக்கணக்கான மனிதர்கள் வாழும் அந்த ஆதன்ஸ் நகரத்திலே மனிதன் என்று கணிக்கக்கூடிய பண்புநலங்கள் உடையவன் அத்தனை அரிய பொருளா? பரம்பொருளைவிட அரிய பெரும்பொருளா மனிதன்?

சிந்தித்துப் பார்க்கவேண்டும். மனித சமுதாயத்திலே மனிதர் களைப் பார்க்கிறோம். ஆனால் மனிதனைப் பார்க்கிறோமா? மனிதர் கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிலே மனிதன் என்று அளக்கக்கூடிய பண்புள்ள மனிதர் எத்தனை பேர்?

தமிழகத்தின் சித்தர்களிலே ஒருவர் பாடுகிறார்:

மனிதரிலே மரமுண்டு, விலங்குண்டு, பறவையுண்டு
மனிதரிலே மனிதருண்டு, வானவரும் மனிதராய் வருவதுண்டு.

மக்கள் சமுதாயத்திலே மனித வடிவத்திலே மரங்களைப் பார்க் கிறோம். விலங்குகளைப் பார்க்கிறோம். பறவைகளைப் பார்க்கிறோம். உடம்பு மனித உடம்புதான். ஆனால் அந்த உடம்புக்குள்ளே வாழ் வனவோ விலங்குகளும் பறவைகளும் மரங்களுமே!

தோற்றத்தில் மனிதர்கள்; ஆனால் உள்ளத்தால் அஃறிணைப் பொருள்கள். இதுதான் உலக வரலாறாக இருக்கிறது.

இந்த வரலாற்றுக்கு நடுவிலே "மனிதரிலே மனிதருண்டு" என்கிறார் சித்தர். அதோடு நிறுத்தவில்லை. வானவர்களும் இந்த மண்ணுலகிலே இறங்கிவந்து மனிதர்களாய்த் தோற்றம் தருவதும் உண்டு என்கிறார் தமிழகத்தின் சித்தர்.

மனம் உள்ளவன் மனிதன் என்பது மொழிநூல் முடிவு. ஆனால் அந்த மனத்திலேதான் எத்தனை எத்தனை வகைகளைக் காண்கிறோம்! அந்த வகைகளுக்குத் தக்கவாறுதான் மனிதர்களுடைய சீலமும் வாழ்வும் அமைந்துள்ளன. மனிதன் மனிதனாக வாழ்வது என்பது அத்தனை அரிதான செயலாகப் போய்விட்டது. ஏனென்றால் மக்கட்பண்பு என்பது வெறும் அறிவுக்கூர்மையை மட்டும் பொறுத்த காரியமாக இல்லை. மரத்தை அறுக்கின்ற இரம்பம் போன்ற அத்தனை கூர்மையாக உள்ள அறிவு ஒருவனுக்கு இருந்தாலும், அவன் அந்த இரம்பத்தால் அறுக்கப்படுகிற மரந்தான் என்கிறார் வள்ளுவர்:

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

எனவே மனிதர்களை மனிதர்களாக ஆக்குவது சில அடிப்படையான பண்புகளேயாம்.

மக்கட்பண்பு என்ற இந்த அரிய மனமாண்பு வளர வளர, மேற்கொள்ளுகிற கொள்கையும், ஒழுக்க நெறியும், குறிக்கோளும், இலக்குகளும் மாறுவனவாக இருக்கின்றன.

மனித உருவம் எடுத்தால் மட்டும் ஒருவன் மனிதன் ஆகிவிட முடியாது. மனிதப்பண்பு என்ற மாண்புதான் மனிதனை மனிதனாக்குகிறது.

அடிப்படையான இந்த உண்மையை உணர்ந்து, மனிதர்களை மனிதர்கள் ஆக்கவேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் எழுந்தனவே பண்டைத் தமிழர் சமுதாயத்தின் அறநூல்களும், மறைகளும்.

வெறும் நூல் வடிவிலே அறத்தை எடுத்துச் சொன்னால் மனித சமுதாயம் திருந்திவிடுமா? பொய் பேசாதே என்று மீண்டும் மீண்டும் நீதியைச் சொல்லிவிட்டால் மட்டும், அதைக் கேட்டு ஒருவன் பொய் பேசாமல் இருந்துவிடுவானா?

ஒழுக்கமாக இரு என்று ஆயிரம் தடவை சொல்லிவிட்டால் ஒருவன் ஒழுக்கசீலனாக ஆகிவிடமாட்டான்.

மனிதனை மனிதனாக்குவதற்குச் சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றியமையாமல் உள்ளன. அந்தப் பயிற்சிகளை மனித சமுதாயத்திற்கு வழங்கி, மனிதர்களை மனிதர்களாக்கிப் பின் அவர்களை வானவர்களாகவும் உயர்த்துகின்ற உயர்ந்த நோக்கத்திலே எழுந்த பேர் இலக்கியங்களே தமிழ்மொழியிலுள்ள சித்தர் நூல்கள்.

சித்தர் இலக்கியங்கள், மனித யாக்கையில் வாழுகின்ற மாக்களை மனிதப் பண்புள்ள மக்களாக மாற்றி, பின்னர் அவர்களுக்கு அமர நிலை தரவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் எழுந்தவையாம்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று திருமூலர் பாடுகிறார். மனித உடம்புக்குள்ளே வானப் பேரின்பத்தை நுகர்ந்து கொண்ட ஒரு சித்தர் அந்தப் பேரின்பப் பேருண்மையை உலகம் முழுவதும் காணவேண்டும் என்று விரும்பினார். தான் பெற்ற அந்தக் கடவுள் இன்பத்தை வையகம் முழுவதும் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டார். அந்த ஆசையாகிய தெய்வப் பெருங்கருணையிலிருந்து எழுந்ததே திருமூலருடைய திருமந்திர நூல். இவ்வாறுதான் ஒவ்வொரு சித்தருடைய நூலும் எழுந்தது.

சித்தர் இலக்கியங்களிலே ஒரு கலங்கரை விளக்கமாக நிற்பது திருமந்திர நூல் என்பது உலகம் முழுவதும் உணர்ந்த உண்மை. இதைப் போலவே நாம் ஆழ்ந்து கற்று உணரவேண்டிய சித்தர் நூல்கள், தமிழில் நூற்றுக் கணக்காக உள்ளன.

சித்தர்களுடைய பாடல்கள், சித்தர்கள் வழங்கியுள்ள பிற அறிவியல் விளக்கங்கள், சித்தர்களின் அறிவியல் உரைகள் ஆகிய அனைத்துமே மனிதனை மனிதனாக்கி, பின்னர் அவனை அமரனாக்கும் நோக்கத்துடன் பிறந்தவையே.

நமது பாரதநாட்டின் புண்ணியத்தையும், சிறப்பையும் ஆனந்தக் களிப்போடு பாடுகிற பாரதியார்,

> ''யாகத்திலே தவ வேகத்திலே—தனி
> யோகத்திலே பல போகத்திலே
> ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார்தம்
> அருளினிலே உயர்நாடு—இந்தப்
> பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
> பாரத நாடு!''

என்று விம்முகிறார்.

பாரதியாரின் இப் பாடலிலே வருகிற 'ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்தி கொண்டவர் யார்? அவர்தம் அருள் எது?' என்ற கேள்விக்கு விடையே சித்தர்களும், சித்தர்களின் பாடல்களும்.

ஆகமாகிய இந்த மனித உடம்பிலே தெய்வ பக்திகொண்டு, இதனுள் அருட் சக்தியை வளர்த்து, ஆன்ம பரிணாமத்தில் மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங்களாகவும், உலவி அருள் வாழ்வு வாழ்ந்து, அருளை வழங்கி வருகிற பெரியோர்களே, மகான்களே, சித்தர்கள்.

பாரத நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வனங்களிலே தவம் செய்து, ஆன்மநேயம் கூடி, அரிய சமாதி நிலையிலே இருந்து, எல்லையற்ற பரம்பொருளின் பேரின்ப அமுதை உண்டு, அமரர்களாக வெளிவந்து, மக்களையெல்லாம் தெய்வ நெறியிலே வழிப்படுத்தி ஆண்டு அருளியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இமய மலையிலும், பொதிகை மலையிலும், இன்றைக்கும் அந்த மகா[illegible] ஒளிவீசிக் கொண்டிருக்கிறது! அஃது அணையாத தீபம். நந்தா விளக்கு. புயலும், மழையும், வெயிலும், பனியும் அந்த ஒளியைத் தொடுவதில்லை. அதை [illegible]வனைக் காலால் உதைத்து, [illegible]

வீசி, நமது சமுதாயத்தைப் பாதுகாத்துவருகிறது. அந்த ஒளிவிளக்கே சித்தர்களின் இலக்கியமாகும். அதனுடைய சுடரே இருள் சூழ்ந்த உலகில் என்றென்றும் ஒளி பரப்பிவருகிறது.

சித்தர்கள் என்ற சொல்லுக்குச் சித்தி கைகூடினவர்கள் என்று பொருள். இந்தச் சித்தி அவர்களுக்கு எப்படிக் கிட்டியது? திருமூலர் கூறுகிறார்:

"யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே!"

யோக சமாதியை உகந்தவர் யாரோ அவரே சித்தர் என்று வரையறை செய்கிறார் திருமூலர். இதுவே "ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்" என்ற பாடலின் பொருளாகும்.

சித்தர்களுடைய அடிப்படை இதுதான், திருமூலர் சொல்லுகிற யோகசமாதி. இந்த உடம்பிலே தெய்வ சக்தியைக் கலந்து கூடுகிற தவயோகம் இருக்கிறதே, அந்த யோகமே சித்தர்களுடைய தவநெறியாகும்!

மனித உடம்பு நிலையற்றது, மனித வாழ்வு பயனற்றது என்றெல்லாம் கூறுகிற வெறுப்புநிலை ஒருபுறம் இருக்க,

" மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்கிற நிலையே வேறு!

இந்த மனித உடம்பும் இந்த மனித வாழ்வுமே தெய்வத்தைக் காணுவதற்குரிய ஒப்பற்ற சாதனங்கள் என்று தெளிகிற நிலை இருக்கிறதே, அதுவே சித்திகளுக்கெல்லாம் அடிப்படையான சித்தி. திருமந்திர மாமுனிவரான திருமூலர் பாடுகிறார்:

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்(று)
உடம்பினை யானிருந்(து) ஓம்புகின் றேனே!"

இந்த உடம்பு மிகப் பெரிய சாதனம். இதனுள் புருடோத்தமனாகிய பரமாத்மா, இறைவன், கோயில் கொண்டிருக்கிறான் என்று கண்ணாரக் கண்டு, இந்த உடற்கோயிலைப் பக்குவமாகப் பாதுகாத்து, இறைவனுக்குரிய இடமாகப் பரிசுத்த நிலையில் பேணி, யோக சமாதி உகந்தவர் யாரோ, அவரே மெய்யான சித்தர்கள். அவர்கள் பெற்ற தெய்வ ஆற்றல்கள் வெறும் செப்பிடு வித்தைகள் அல்ல. அந்தத் தெய்வ ஆற்றல்கள் உலகையே உய்விக்கிற பேரின்ப ஆற்றல்களாம்.

"உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே" என்று பாடுகிறார் அல்லவா? இந்தக் காரணத்தினாலேதான், உடம்பின் நுட்பங்களையும், இயல்புகளையும், மனத்தின் தன்மைகளையும், ஆதாரங்களையும், ஆராய்கிற காயசித்தி உபாயங்களும், வைத்திய முறைகளும், மனத்தத்துவ இயலாகிய பெரிய விஞ்ஞான அறிவும், சித்தர் இலக்கியத்

தின் பற்பல உறுப்புகளாக எழுந்தன. உடலின் தத்துவத்தோடு இணைந்து, மனத்தத்துவமும், விஞ்ஞான தத்துவமும், மெய்ஞ்ஞான தத்துவமும் பாதுகாக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது சரீர யோகசித்தி.

இந்த உடம்புளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை இந்த உடம்புளே வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோள்.

"யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்"

என்ற கருத்தே இதுதான். இதுவே சித்தர் இலக்கியத்தின் ஆதார சுருதி!

உடம்பின் மூலம் இறைவனை வழிபடுகிற ஞானநெறிக்கு நம்மை அழைத்துச் செல்வதற்கு ஆரம்பப் பயிற்சி தருவதற்காகவே நம்முடைய முன்னோர்கள், நம்நாட்டு ஞானிகள், நாடெங்கும் கோயில்களை நிறுவி அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பத் தெய்வத்தை வழிபடும் முறைகளையும் வகுத்துத் தந்தார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் எழுந்துள்ள பெரிய பெரிய கோயில்கள் எல்லாம் மகான்களும் சித்தர்களும் நமக்காக நிறுவித் தந்த ஆன்ம விடுதிகள், தெய்வ நிலையங்கள். விநோதக் காட்சிகளைப் பார்க்கச் செல்கிற கூடங்கள் அல்ல அவை. கலையழகும், தெய்வ ‑சான்னித்தியமும் இரண்டறக் கலந்த நிலையங்கள் அவை. கல்யானையிலே யானையைப் பார்த்தால், கல் மறைந்துவிடுகிறது! உள்ளத்துக்குள்ளே இருக்கிற யானைதான் கல்லிலே யானையாகப் பிறப்பெடுக்கிறது. உள்ளத்தில் யானை இல்லை என்றால், கல்லிலும் இல்லைதானே! இதுபோலவே, நம்முடைய கோவில்களின் அமைப்பிலும் நுட்பமான பத்தி தத்துவத்தைப் பொதிந்து வைத்துள்ளார்கள் நம் முன்னோர்களாகிய மகான்கள்!

வெளிச் சடங்குகளையும், வெளிச் செயல்களையும் உதறிப் பேசுகிற பேச்சானது, சித்தனுடைய ஆன்ம பக்குவத்திலிருந்து தெறித்து வருகிற ஞானப் பொறியாகும்; ஊருக்குப் போய்ச் சேர வேண்டியவன், கைகாட்டி மரத்தையே பார்த்துக்கொண்டு, அந்த இடத்திலேயே நின்றுவிடக் கூடாதே என்ற பரிவிலும் கவலையிலும் எழுந்த எச்சரிக்கைப் பேச்சு அது. அவநம்பிக்கையினாலோ, அலட்சியத்தினாலோ, எழுந்த வார்த்தைகள் அல்ல அவை. போலித்தனத்தைச் சீறுகிற சீற்றத்துக்கும், உண்மையை வெறுத்துப் பேசுகிற பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சித்தர்களுடைய பாடலின் உட்பொருள் நமக்குத் துலங்கும்.

ஆம்; நம்முடைய நாட்டுச் சித்தர்கள் எல்லாரும் ஆழ்ந்த தெய்வ பக்தி நிரம்பியவர்கள். தெய்வநெறி நிரம்பிய தெய்வமாக் காதலர்கள் அவர்கள். அவர்கள் பொது மக்களுக்காகத் தெய்வ சான்னித்தியத்தைப் புறவடிவிலே காட்டி இயங்கச் செய்த புற அமைப்புக்களே நம் நாட்டுக் கோயில்கள். இவை அனைத்தும் சீராக ஓங்கித் தவறாது வளர்ந்தால்தான் சமுதாயத்தின் ஆன்மா செம்மைப்படும் என்ற இரகசியத்தை உணர்ந்த சித்தர்கள், இந்தக் கோயில்களில் தங்கள்

சித்திகளையும் காப்பாக அமைத்து, இவற்றின் நெறிமுறைகளையும் அருவத்திலே நின்று கண்காணித்து வருகிறார்கள். இவை தவறக் கூடாது என்பதற்குத் தங்கள் இலக்கியத்திலும் பலமான எச்சரிக்கை களைப் பாடி வைத்திருக்கின்றார்கள்.

கோயில்களில் பூசனை முறைகள் தவறாமல் நடத்தவேண்டும் என்பதில் திருமூலர் போன்ற மகான்களுக்கு அளவில்லாத கவலை யும் ஆர்வமும் இருந்துவந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆம்; நமது உடம்பிலே ஆன்மலிங்கம் இருக்கிறது என்றால், மகா லிங்கம் கோயிலில் இருக்கிறது. நாதலிங்கமாகிய மகான்களினுடைய பாடல்களிலும் அதுவே காட்சிதருகிறது. இந்த வழிபாடு நம்மை என்றென்றும் வழிநடத்துமாக!

★

## 2. சித்தர் இலக்கியம் - தத்துவ விளக்கம்

சித்தர் இலக்கியம் என்பது தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக வழங்கிவருகிற செம்மையான, தனிப்பண்போடுகூடிய ஒரு பேரிலக்கியம் ஆகும்.

சித்தர்களைப் பார்க்கும்போது அவர்களுடைய தோற்றத்தை வைத்துக்கொண்டு நாம் அவர்களுடைய வயதை அறுதியிட்டுச் சொல்லமுடியாது. இளமைப் பொலிவிருக்கும்; ஆனால் வயதிலோ அவர்கள் முதியவர்களாக இருப்பார்கள். முதுமை என்பது அவர்களுடைய வயதின் ஆண்டுக்கணக்கே; அவர்களுடைய உடலும் உள்ளமும் இளமையோடு காணப்படுவது சித்தர்களின் உடற்பண்பு ஆகும். இவ்வாறுதான், இதே பண்போடுகூடித்தான், சித்தர்களுடைய இலக்கியமும் அமைந்திருக்கிறது!

சித்தர் பாடல்களைப் படிக்கும்போது அவற்றின் எளிமையும், மிடுக்கும் இளமைப் பொலிவோடு ஒளிவீசக் காண்கிறோம். ஆனால் இந்தப் பாடல்கள் தோன்றிய காலம் எப்பொழுது என்று கணக்கிட்டுப் பார்த்தோமானால், அவற்றின் வயதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. பழமைக்குப் பழமையான வயதுடைய இலக்கியம் சித்தர் இலக்கியம் ஆகும். அதனுடைய அமைப்பும் பொருட்பண்பும், புதுமைக்குப் புதுமையாகவும், இளமைக்கு இளமையாகவும் பொலிவதைக் காணலாம். சித்தர்கள் எப்படி நம் கண்முன் இளமைத் தோற்றத்துக்குள் முதுமை ஞானத்தோடு காண்கிறார்களோ அப்படியே அவர்கள் படைத்துள்ள இலக்கியமும் இளமைத் தோற்றத்துக்குள்ளே முதுமைக் கனிவோடு திகழ்கிறது.

இது சித்தர் இலக்கியத்தின் அடிப்படையான தனிப்பண்பு என்று சொல்லவேண்டும். முன்னைப் பழமைக்கும் பழமையானதாகவும், பின்னைப் புதுமைக்கும் புதுமையானதாகவும் விளங்குகிற இந்த ஒப்பற்ற சிறப்பு சித்தர் இலக்கியத்தின் உயர்தனிச் செம்பண்பு ஆகும்.

ஆகவே, சித்தர் இலக்கியத்தின் முதலாவது சிறப்பு முதுமையும் இளமையும் இணைந்த இந்த முரண்பாட்டுப் பண்பு. இனி, இரண்டாவது ஒரு தனிச்சிறப்பு சித்தர் இலக்கியத்திற்கு உண்டு. அஃது இளமை முதுமை என்ற இரண்டு முரண்பாடுகளைப் போலவே, வேறு இரண்டு முரண்பாடுகள் கலந்த இணைப்பு ஆகும். இந்த இணைப்பும் சித்தர் இலக்கியத்திற்கு என்று தனியாக அமைந்த ஒரு பெருஞ் சிறப்பாகும். அது வருமாறு:

சித்தர் பாடல்கள் புலவர்களுக்கும் பாமரர்களுக்கும் ஒருங்கே விருந்தாக அமைந்திருக்கக் காண்கிறோம். எப்படிப் புலவர்களைக்

கவர்கின்றனவோ அப்படியே இந்தப் பாடல்கள் படிப்பு இல்லாத எழுத்தறிவுகூட இல்லாத, பாமரர்களையுங்கூடக் கவரக்கூடிய பாங்கோடு மிளிர்கின்றன. படித்த மக்களைப்போலவே பாமர மக்களும் இந்தப் பாடல்களை மெய்யுருகிப் பாடியும், பாடக்கேட்டும் துய்த்து வந்திருக்கிறார்கள். வேறு எந்த இலக்கியத்திற்கும் இல்லாத அளவுக்கு, இந்தக் கவர்ச்சி சித்தர் பாடல்களின் அடிப்படை இயல்பாக விளங்கிவருகிறது. புலவர்களும், ஓரளவு படித்த மக்களும் இந்தப் பாடல்களைக் கற்று இலக்கியச் சுவையை நுகர்ந்து வருவதோடுகூட, இலக்கியக் கல்வியே இல்லாத மிகச் சாதாரண மக்களும் இந்தப் பாடல்களை விரும்பிக் கேட்டும், பாடியும், மீண்டும் மீண்டும் படித்தும், இலக்கிய இன்பம் பெற்று வருகிறார்கள். எனவே, இராமலிங்க அடிகள் இறைவனைப்பற்றிக் கூறுவதுபோல, இந்தச் சித்தர் இலக்கியம் 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக', நமது செந்தமிழ் மொழியிலே பலநூறு ஆண்டுகளாக வழங்கி வருகிறது. அனைத்து மக்களையும், அனைத்து நிலையிலுள்ள மனங்களையும் ஒருங்கே கவரவல்ல இலக்கியப்பண்பு இந்தப் பாடல்களில் பொதிந்து அமைந்திருப்பது, முதுமையும் இளமையும் கலந்திருப்பது போலவே மற்றொரு முரண்பாட்டின் இணைப்பாகும்.

வயதில் முதுமை, பாங்கில் இளமை, இலக்கியச் சுவையில் கற்றவரைப் போலவே கல்லாதவரையும் கவருகின்ற ஈர்ப்பு ஆகிய உயர் தனிச் செம்மை நலன்கள், சித்தர் இலக்கியத்தின் மாபெரும் வல்லமைகளாகத் தமிழ்மொழியிலே வந்திருக்கின்றன.

இனி, இந்த இரண்டு சிறப்புகளோடு மூன்றாவது ஒரு பெரிய சிறப்பு சித்தர்களுக்கே உரியதாக இருக்கிறது. அது, அந்த இலக்கியத்தில் வழங்கிவருகிற மொழியின் பண்பிலே காணப்படுகிறது. நுண்மாண் நுழைபுலம் மிக்க புலவர்களின் யாப்பமைதி இப் பாடல்களில் காணப்படுவது போலவே, பண்டாரங்களும் பரதேசிகளும் நாட்டுப்புற மக்களும் பாடுகிற நாடோடிப் பாடல்களைப் போன்ற யாப்பும், மொழி ஆட்சியும், இந்தப் பாடல்களிலே அமைந்துள்ளதைக் காண்கிறோம். இன்னும் விரிவாக ஆராய்ந்து பார்த்தால், இந்தப் பாடல்களில் வழங்கிவருகிற தமிழானது புலவரின் தமிழாகவும் இருக்கிறது, பாமரரின் தமிழாகவும் இருக்கிறது. இலக்கியம் கற்ற, யாப்பியல் தெளிந்த, புலவர்கள் இயற்றிய பாடல்களும் இந்த இலக்கியத்தினில் இருக்கின்றன; இலக்கியக் கல்வியே பயிலாத, அதே சமயம் ஆன்மஞானம் பெற்ற மற்றவர்கள் இயற்றிய பாடல்களும், இந்தச் சித்தர் இலக்கியத்திலே காணப்படுகின்றன. சுருங்கக்கூறின் இலக்கியச் செம்மை வாய்ந்த செய்யுள்களும் இந்த இலக்கியத்திலே இருக்கின்றன; நாடோடிப் பாங்கில் இயற்றிய நாட்டுப்புறப் பாடல்களும் இந்த இலக்கியத்தில் இருக்கின்றன. இது சித்தர் இலக்கியத்தின் மூன்றாவது தனித்தன்மையாகும்.

இந்த மூன்றாவது சிறப்பில் இன்னொரு முக்கியமான உண்மை என்னவென்றால், செய்யுள் அமைதி வாய்ந்த பாடல்கள் எல்லாம் இலக்கியப் புலமை மிக்க ஞானிகளால் இயற்றப்பெற்றவை. பாமரரின் மொழியிலுள்ள நாடோடிப் பாடல்களெல்லாம் கல்லாத மக்கள்

இயற்றியவை மட்டுமல்ல, கற்றவர்களும் கல்லாதவரின் மொழியி லேயே பாடிய பாமரப் பாடல்களாகவும் விளங்குகின்றன.

நாடோடிப் பாடல்கள் போன்று தோற்றம் தருகின்ற சித்தர் பாடல்கள் இரண்டு வகையாக உள்ளன. முதலாவது வகை ஆன்ம நிலையிலே பல அனுபவம் பெற்ற இலக்கியப் புலமையில்லாத மக்களால் பாடப்பெற்றவை. இவை ஒருவகை. மற்றொரு வகை என்னவென்றால் இலக்கியப் புலமைமிக்க ஆன்மநேயப் புலவர்களும் பாமர மக்களோடு இதயம் இணைந்த நிலையிலே நின்று, அவர் களுடைய மொழியிலே அவர்களோடு அவர்களுக்காக அவர்களுடைய குரலிலே அவர்களைப் போலவே பாடுவது ஆகும். இந்த இரண்டு வகையான பாடல்களும் சேர்ந்த பெரும் தொகுப்பே சித்தர் இலக்கியம். இப்படி அமைந்திருக்கின்ற காரணத்தினால் நாடோடிப் பாடல்களின் தொகுப்புகளுக்குள்ளே பல சித்தர் பாடல்களும் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியாமல் மக்கள் இலக்கியம் அல்லது நாடோடி இலக்கியம் என்ற பொதுப் பெயரிலே, இயற்றியவர் பெயர் இல்லாமல், எவ்வித முத்திரையுமின்றி நூற்றுக்கணக்கான பாடல்கள் உள்ளன. இவை தவிர சில சித்தர்கள் ஆனந்தக் களிப்பு, காவடிச் சிந்து, வழிநடைக் கும்மி போன்ற நாட்டுப்புற யாப்பமைதியிலே நாடோடி மொழிகளைக் கையாண்டு இயற்றிய பாடல்களும் ஆயிரக் கணக்கில் உள்ளன. இவற்றைப் போலவே புலவன் பெயர் தெரியாமல் நாடோடி இலக்கியத்தின் தொகுப்புகளுக்குள்ளே இலைமறைவு காய்மறைவாக வழங்குகிற பாடல்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் 9ஆம் திருமுறை, 10ஆம் திருமுறை, 11ஆம் திருமுறை போன்ற வரையறை செய்யப்பட்ட இலக்கியத் தொகுப்புகளிலும் சித்தர் பாடல்களைக் காண்கிறோம். ஞானக்கோவை, சித்தர் பாடல் ஆயிரம், சித்தர் மொழிக்கோவை போன்ற தொகுப்புகளிலும் சித்தர் இலக்கியத்தைக் காண்கிறோம். வரலாறு தெரிந்த பெரும் புலவர்களின் பாடல்களாகவும் சித்தர் இலக்கியத்தின் பெரும்பகுதி காணப்படுகிறது. அதே சமயம் இயற்றி யவர் யார் என்ற வரலாறு காணாத பொதுமக்களின் பாடல்களாக வும், பல்லாயிரக்கணக்கான பாடல்கள் சித்தர் இலக்கியம் என்ற தொகுப்புக்குள்ளே காணப்படுகின்றன.

இளமை, முதுமை, புலமை, பாமரப்பாங்கு, யாப்பு அமைதி, நாட்டுப்புறப் போக்கு என்று ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற பல இயல்புகள் இந்தப் பாடல்களிலே இணைந்திருப்பினும், இவை அனைத்திலும் நாம் காணக்கூடிய உயர் தனிப்பண்பு என்னவென்றால், இந்தப் பாடல்களிலே உயிர்ப்போடு கூடிநிற்கிற மெய் உணர்வு ஆகும். இந்த மெய் உணர்வே கூடுவிட்டுக் கூடுபாய்ந்து, காதலைப் போன்ற இறை மயக்கமாகவும், இந்தப் பாடல்களினூடு இவற்றின் உயிராகத் துடித்துக்கொண்டு இயங்கியும் இயக்கியும் வருகிறது.

### பழமைக்குப் பழமை

இன்றைக்கு ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சமயம் நான் திருக்குற்றால மலையில் ஏறி, செண்பகாடவிக்குச் சென்று

கொண்டிருந்தபோது, மரப்பாலத்தைத் தாண்டி ஒரு சித்தர் நடந்து செல்லக் கண்டேன். அவரைப் பின்தொடர்ந்து போனபோது அவர் செண்பகாடவியின் குகைக்குள் வசிப்பவர் என்று தெரிந்து கொண்டேன். மிகுந்த தயக்கத்திற்குப் பின் நான் அவரைச் சந்தித்து உரையாடுவதற்காக, செண்பகாடவிக்கு அருகிலுள்ள அந்தக் குகைக்குள்ளே நுழைந்தேன். அவரோடு இரண்டு மணிநேரம் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் அந்த உரையாட லிலே இடையிடையே அகத்தியர் பாடல்கள் என்று சில பாடல்களை மேற்கோள்களாகச் சொன்னார். அவற்றில் ஒன்று இன்னும் என் நினைவில் இருக்கிறது. அது வருமாறு :

> கையில் முடவனும் கண்ணில் குருடனும்
> மெய்யில் உறைந்திடும் மெய்யினைக் கண்டிடில்
> கையில் இருகண்ணும் கண்ணில் இரு கையும்
> பொய்யிலா உண்மை புலப்படல் மெய்யே.

இந்தப் பாடலின் அமைப்பையும் போக்கையும் பார்க்கும்போது, திருமூலர் திருமந்திரம் போன்ற பழம்பெரும் செம்மை இதிலே அமைந் திருப்பதைக் காணலாம். செண்பகாடவிச் சித்தர் சொன்னதிலிருந்து அகத்தியர் இயற்றிய இந்தப் பாடல் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். மேலும் இதனுடைய நடை எளிமையாக இருப்பதோடு இன்று மக்களின் ஆட்சியிலே உள்ள சொற்களே இந்தப் பாடலில் பயின்றுவருவதையும் காண்கிறோம். வழக்கொழிந்த எந்தச் சொல்லும் இதில் இல்லை அல்லவா! எனவேதான் பழமைக்கும் பழமையான இந்தப் பாட்டில் புதுமைக்கும் புதுமையான ஓர் எளிமை கலந்திருக்கிறது. நடையின் போக்கு இவ் வாறு எளிமையாக இருந்தபோதிலும் கண்ணிலே கை முளைப்பதும், கையிலே கண் தோன்றுவதும் ஆகிய ஏதோ ஓர் ஆழ்ந்த கருத்து நம்மை மலைக்கச் செய்கிறதல்லவா! யோகப்பயிற்சியும், ஆன்ம அனுபவமும் வாய்ந்த மாபெரும் சித்தர்கள், கை என்றும் கண் என்றும் குறிப்பிடு வன இந்த உடம்பிலுள்ள பேரறிவு, நுண்ணுணர்வு ஆகிய மையங் களையே. இந்த மையங்கள் மனித உடம்பின் ஒவ்வோர் இடங்களில் ஞானப் பயிற்சிக்கு உரிய நரம்பு நிலைகளாகவும், உடலின் சுரப்பிகளாகவும் அமைந்து இந்த நரம்பு நிலைகளையும், இந்தச் சுரப்பிகளையும் ஆன்மப் பயிற்சியினால் இயக்கும்பொழுது பேரானந்த அனுபவங்கள் ஏற்படுகின்றன என்பது சித்தர் வாக்கு. கையில் கண் தோன்றுவதும், கண்ணில் கை முளைப்பதும் இந்த ஆன்ம மையங்களில் ஏற்படுகின்ற புதிய ஆற்றல்களைக் குறிப்பிடுகின்ற சித்தர்களின் உத்தி மொழிகளாம். இவற்றைப் பற்றிய விரிவுகளைச் சித்தர் இலக்கியத் தின் யோகப் பயிற்சியைக் கூறும் பாடல்களிலே மேலும் தெளிவாக நாம் காண்கிறோம்.

## புதுமைக்குப் புதுமை

மான்டேய்ன் என்ற ஆசிரியர் உயர்ந்த இலக்கியத்தின் தன்மை யைப் பற்றிச் சொல்லும்போது, "உயர்தனிச் செம்மை இலக்கியம் என்பது எத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்ததென்றால், அது

என்றென்றும் செலாவணி ஆகக்கூடிய தன்மை கொண்டதாக அமைந் திருப்பதுதான்" என்று குறிப்பிடுகிறார்.

சித்தர் இலக்கியத்தின் தனிப்பண்பு, எந்தக் காலத்திற்கும் பொருந்துகிற இந்த உயிர்ஓட்ட இயல்பே ஆகும். இதற்குச் சான்றா கத் திருமூலருடைய திருமந்திரத்திலிருந்து எத்தனையோ பாடல் களைச் சொல்லலாம். ஒரு சிறிய எடுத்துக்காட்டாக இதோ ஒரு பாடல் :

**சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவாம்**
**சூரிய காந்தமோ சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்**
**ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.**

சூரியகாந்தம் என்று இங்கே குறிக்கப்பெறுவது இன்று நாமெல்லாம் பழகிவருகிற 'லென்ஸ்' என்ற பூதக்கண்ணாடியாகும். தமிழகத்தில் இதைச் சூரியகாந்தக்கல் என்று அழைத்திருக்கிறார்கள். படிக்கும் போது எழுத்து பெரிதாகத் தெரிவதற்காக இதைப் பயன்படுத்து கிறோம் அல்லவா! இந்த 'லென்ஸ்' என்கிற பூதக்கண்ணாடி கொண்டு ஒரு பேருண்மையை விளக்குகிறார் திருமூலர் என்ற சித்தர்பெருமான்.

பூதக்கண்ணாடியும் பஞ்சும் ஒன்றாக இருந்தால் பஞ்சு தீப்பிடிப்ப தில்லை. ஆனால் அந்தப் பஞ்சை நோக்கி வெயிலின் கதிர்கள் பூதக் கண்ணாடி வழியாகக் குவிந்து பாயுமாறு பூதக்கண்ணாடியைச் சூரிய னுக்கு எதிரே பிடித்தோமென்றால் பஞ்சில் தீப்பற்றிக் கொள்ளுகிறது. இந்த விஞ்ஞான அறிவியல் உண்மையைச் சான்று காட்டி ஒரு பெரிய மெய்ஞ்ஞான உண்மையை விளக்குகிறார் திருமூலர். இந்த உடம்புக் குள்ளே மலங்களாகிய அழுக்குச் சுமைகள், பாவ மூட்டைகள் அடுக்கி யிருக்கின்றன. இந்த உடம்போடு அவை இருந்து இணைந்து வாழ்கின்றன. எத்தனை ஆண்டுகளாயினும் இந்த உடம்பினால் அந்தத் துணிமூட்டைகளை, பாவச் சுமைகளை, மலங்களை எரித்து ஒழிக்க முடியவில்லை. சூரியகாந்தக்கல்லும் பஞ்சும் சேர்ந்திருப்பதுபோல் அவை இணைந்திருக்கின்றன. சூரியகாந்தக் கல்லினால் அந்தப் பஞ்சுப்பொதியை எரிக்க முடியவில்லை. ஆனால் நமது உள்ளமாகிய பூதக் கண்ணாடியை இறைவன் என்னும் சூரியனுடைய முன்னிலையில் பிடித்தோம் என்றால் திருவருள் என்ற கதிர்கள் உடற் கண்ணாடி வழியாக இந்தப் பாவ மூட்டைகளாகிய பஞ்சுப் பொதி களின்மேல் குவிந்து பாய்ந்து மூட்டைகளை எரித்துச் சாம்பலாக்கி விடுகின்றன.

ஒரு பெரிய அரிய மெய்ஞ்ஞான உண்மையை, பகுத்தறிவு மொழி யிலே ஞானக்கண் கொண்டு பார்க்கின்ற அறிஞர்களின் மொழியிலே, அவர்களுடைய அறிவியற் பாங்கிலே பேசுகிறார் திருமூலர். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட இந்தப் பழம்பெரும்பாடல், இந்த 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான உலகிலும் செலாவணியாகக் கூடிய விதத்திலே அறிவியற் பண்போடு மிளிர்வதாய் அமைந்திருக்கிறது. இதுவே, பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் ஒளிவீசுகிற பாங்கு. இந்தப் பாங்கினைத்

தான் சித்தர் இலக்கியத்தின் உயர் சிறப்புகளிலே ஒரு பெரிய சிறப்பாகக் குருமார்கள் அடிக்கடி கூறுவது உண்டு. இந்தத் திருமூலருடைய பாடலைப் போலவே மிகப் பழமையான, இசைப்பண்பினால் மிக நவீனமாகத் தோற்றம் தருகிற இன்னொரு பாட்டைப் பார்க்கலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உரைகாரர்கள் மேற்கோள் சொல்லுகிற பாடல்களில் ஒன்று மயானத்திலே கூத்தாடுகிற ஆடல் வல்லானைப் பற்றியது.

பூண்ட பறை அறைய்
    பூதம் மருள
நீண்ட சடையான் ஆடுமே
நீண்ட சடையான்
    ஆடும் என்ப
மாண்ட சாயல்
    மலைமகள் காணவே காணவே காணவே.

இந்தப் பாடல் தொல்காப்பிய உரையிலே வருகிற ஒரு மேற்கோள் ஆகும். மிகமிகப் பழமையான பாடல் என்பது கண்கூடு. ஆனாலும் இதனுடைய இசைப்பண்பின் காரணமாக இந்தப் பாடல் ஒரு நவீனப் பாடலைப் போன்ற தோற்றம் பெறுகிறது. இதுவும் ஒரு சித்தர் மரபைச் சார்ந்த இசைப்பாடலே.

பறைகள் கொட்டவும், பூதங்கள் அஞ்சவும், நீண்ட சடையோடு கூடிய சிவபெருமான் மயானத்திலே கூத்தாடுகிறான். பிணங்கள் எரிந்து கொண்டிருக்கின்ற சுடுகாட்டிலே இந்தக் கூத்து நடைபெறுகிறது. பறைகள் கொட்டவும், பேய்கள் அஞ்சவும், தன்னுடைய நீண்ட நெடிய சடையை விரித்துக்கொண்டு குதித்துக் குதித்துக் கூத்தாடுகிறான் சிவபெருமான். அதை மலைமகளாகிய உமையம்மை கண்டுகளிக்கிறாளாம். அவள் கண்டு களிப்பதை, 'காணவே காணவே காணவே' என்று மும்முறை கூறிக் 'கண்டு கண்டு கண்டு' என்று கூறி அழுத்தம் கொடுக்கிறது இந்தப் பாடல். இது மிகப் பழமையான பாடல் என்பதற்கு இந்தப் பாடலிலே ஓர் உட்சான்று இருக்கிறது. 'மாண்ட' என்ற சொல்லுக்கு இன்றையத் தமிழில் வழங்குகிற பொருள் வேறு. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தமிழ்ச் சொல்லுக்கு 'மாட்சிமை பொருந்திய' என்பது பொருளாகும். மாட்சிமை பொருந்திய சாயலோடு கூடிய உமையம்மை இந்த நாட்டியத்தைக் கண்டு கண்டு களிக்கிறாள் என்று ஒரு பழந்தமிழ் நாட்டுச் சித்தர் பெருமான் பாடுகிறார். இந்த உடம்பாகிய உருத்திர பூமியிலே நாளும் பொழுதும் தீ எரிந்துகொண்டிருக்கிறது. நடனமும் நடந்துகொண்டே இருக்கிறது. பூதங்கள் மருள்வதும், பறைகள் கொட்டுவதும் இந்த உடம்புக்குள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நடனத்தை ஆன்மாவாகிய உயிர் கண்டு களிக்கிறது. சித்தர்கள் கூறுகிற இந்த மெய்ஞ்ஞான உண்மையை மயானத்திலே நடைபெறும் கூத்தனுடைய நிருத்த நடனமாக ஓவியம் தீட்டுகிறது இந்தப் பழைய சித்தர் பாடல். 'மாண்ட' என்ற அந்த ஒரு சொல்லைத் தவிர மற்றச் சொற்கள் அனைத்தும் எளிய தமிழ்ச் சொற்களாகவே விளங்குகின் [illegible] கூத்தாடுகிற இந்தப் பாடலின் இசைப்பண்பு

கேட்பவரின் உள்ளத்தைக் கவரக்கூடிய தன்மையிலே, புதுமையான யாப்பு அமைதியிலே, வாய்ப்போடு அமைந்திருக்கிறது. இதனுடைய வயதோ இரண்டாயிரம் ஆண்டுக்கும் மேலானது. ஆனால் இதனுடைய தோற்றமோ இளமைக்கும் இளமையானது. இந்தப் பாடலை ஆக்கிய சித்தருடைய தோற்றத்தைப் போலவே இந்தப் பாடலும் பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் அமைந்திருக்கிறது. திருமூலருடைய பாடல் தனது விஞ்ஞானக் கருத்தினால் இன்றையப் பாடல் போன்று விளங்குகிறது. இந்த நடனப் பாடலோ, அதனுடைய இசை வடிவத்தினால் இன்றையப் பாடல்போன்று காட்சி தருகிறது. இத்தகு கவி உத்தியும் சித்தர்களுக்கு நன்கு கைவந்த ஞானக் கலையாகும்.

புலவரின் புலமையும், பாமரரின் எளிமையும் இப்படி இந்த இலக்கியத்திலே ஒருசேர அமைந்திருக்கின்றன என்பது நுண்ணிதின் ஆய்வார்க்கு நன்கு புலப்படக்கூடிய பிறிதொரு இலக்கியப் பாங்கு ஆகும்.

சான்றாக, உள்ளுறை கருத்துக்களை ஏதோ கதைச் செய்தியைச் சொல்வதுபோல் தனியுரையாய்க் கூறுவர் சித்தர். அந்தச் சொற்கள் கூறுகிற கதைக்குள்ளே ஒரு பெரிய உருவகம் இருந்துகொண்டு கதைகள் கதைகளாக மலரும் பாங்கு, தமிழ் இலக்கண நூல்களிலே குறிப்பிடுகிற 'இறைச்சி' என்ற இலக்கிய அணி போன்றும், 'உள்ளுறை உவமம்' என்ற அணி இலக்கணம் போன்றும் விளங்குவதாகும். இத்தகைய உருவகத்திற்குச் சான்றாகச் செம்மை இலக்கியத்திலே ஒரு மேற்கோள்:

அந்தணன் ஒருவனுடைய வீட்டிலே பால் கறக்கிற பசுமாடுகள் ஐந்து இருக்கின்றன என்று ஒரு கதை சொல்லவருவது போல் ஆரம்பிக்கிறார் சித்தர். இந்தப் பார்ப்பானுடைய வீட்டுப் பசுக்கள் ஐந்தும் பார்ப்பானுடைய பசுக்களாக இருப்பதால் மேய்ப்பதற்கு இடையனின்றி வெறிகொண்டு திரிகின்றன. தொழுவத்தில் அடைபடாமல் காடும் மேடும் திரிகின்றனவாம் இந்த அடங்காப் பசுக்கள் ஐந்தும். அடங்காப் பசுக்களை அடக்கினால்தானே அவை கன்றை ஈந்து பாலையும் ஈந்து பலன் அளிக்கும்! இதைப் பாடுகிறது திருமந்திரம்:

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே

ஐம்புலன்கள் இயங்குகிற இந்த மனித உடம்பையே, ஐந்து பசுக்கள் வாழ்ந்துவருகின்ற தொழுவமாக உருவகப்படுத்திக் கூறுகிறார் சித்தர். பார்ப்பான் என்ற தமிழ்ச் சொல்லுக்கு, பார்ப்பவன் என்று பொருள் தருகிற 'கவி' என்னும் வடமொழிச் சொல்லை நேரொப்பாகக் கூறலாம். 'கவி' என்ற சொல்லுக்கும் பார்ப்பான் என்ற தமிழ்ச் சொல்லுக்கும் இரண்டு பொருள் உண்டு. ஒன்று பார்ப்பவன், நோக்குபவன், காண்பவன் என்பதாகும். இதையே பகவத்கீதையில் 'சாட்சி' என்று கண்ணபெருமான் கூறுகிறார். இதுவே உயிர். நடக்கின்ற

செயல்களையெல்லாம் சாட்சியாகக் கண்டு பார்த்துக் கொண்டிருக் கிறது உடம்புக்குள்ளிருந்து. எனவே இதைப் பார்ப்பான் என்று சொல்வது சித்தர்களின் மரபு. அதோடுகூட, பார்ப்பு என்ற தமிழ்ச் சொல்லுக்குக் 'குழந்தை' என்ற ஒரு பொருள் உண்டு. பார்ப்பம்மை, பார்ப்பாத்தி, பாப்பா (பார்ப்பா) ஆகிய சொற்களெல்லாம் பார்ப்பு என்ற வித்திலிருந்து தோன்றிய சொற்களே. பாப்பா என்று இன்று வழங்குகிற சொல்லும் மூலத் தமிழ்ச் சொல்லாகிய பார்ப்பு என்ற விதையிலிருந்து முளைத்ததேயாகும். எனவே பார்ப்பனன் அல்லது பார்ப்பான் என்றால் குழந்தைத் தன்மை கொண்டவன் என்றும் கிளைப்பொருள் தருகின்றது. இந்த உடம்புக்குள்ளே இருக்கின்ற உயிரானது, அறிவிக்க அறிவதே யல்லாமல், தானே அறியும் தன்மையுடையது அன்று. அதாவது பிறர் உணர்த்த உணருமே தவிர, தானாகவே உணரும் தன்மை இந்த உயிருக்கு இல்லை. இது ஒரு குழந்தையின்இயல்பு. நெருப்பில் கைவைத்தால் சுடும் என்று ஒரு குழந்தைக்குத் தெரியாது. தள்ளி நில், தள்ளி நில் என்று பிறர் எச்சரித்துக் குழந்தையை அறிவுறுத்த வேண்டிய நிலையிலிருக்கிறது அதனுடைய பசலை அறிவு.

பார்ப்பான் வீடாகிய, அதாவது உயிர் வாழ்கின்ற வீடாகிய இந்த உடம்புக்குள்ளே, பார்ப்பான் அகத்திலே பாலைச் சொரியக் கூடிய தன்மை பெற்ற ஐம்புலன்களாகிய ஐந்து பசுக்கள் வாழ்கின்றன. ஆனால் அவை உலக இச்சையிலே சிக்கி வெறிகொண்டு திரிகின்றன. இந்தப் பசுக்களை மேய்ப்பதற்குரிய ஆயனாகிய ஞானம் ஏற்பட வில்லை. அப்படி ஒரு ஞானம் ஏற்பட்டு இந்தப் பசுக்களின் வெறியும் அடங்கினால் சிற்றின்பம் தருகின்ற இந்த ஐந்து புலன்களும் பேரின்பம் தருகின்ற உயர் பசுக்களாகி ஞானப்பாலைச் சொரிய ஆரம்பித்துவிடும் என்கிறார் திருமூலராகிய சித்தர் பெருமான்.

திருமந்திரம் என்ற புலமைக்குப் புலமை சான்ற பேரிலக்கியத்தி லுள்ள இந்தப் பாடல், யாப்பு அமைதியிலும், சொல் ஆட்சியிலும், மொழியின் வழக்காற்றிலும் செம்மை இலக்கியமாகத் திகழ்கிறது. புலமைக்குப் புலமை சான்ற இதே கருத்தை நாட்டு மக்களின் பாமர மொழியிலே பேசுகிறது இன்னொரு சித்தர் பாடல் :

மாங்காய்ப் பாலுண்டு
மலைமேலிருப் பார்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி—குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி

ஐம்புலன்கள் ஞான ஒருமையிலே சேர்ந்து சுரக்கின்ற ஞானப் பாலை மாங்காய்ப்பால் என்பது ஒரு சித்தர் மரபு ஆகும். இந்த உடம்பிலுள்ள அறிவுக்கு ஆதாரமான சுரப்பிகளை வகைப்படுத்திக் கூறியுள்ள சித்தர்கள் இவற்றின் வடிவத்தையும் வருணித்துக் கூறியிருக் கிறார்கள். ஆன்ம ஆனந்த அனுபவத்திலே, அந்த ஆனந்தமாகிய ஞானப்பாலைச் சுரக்கின்ற சுரப்பியின் வடிவம் மாவடுவைப் போன்ற தாகும். உடலுறுப்புகளை ஆராய்ந்து கூறுகின்ற தத்துவ விஞ்ஞானி களும் இன்றைய அறிவியல் முறையிலே ஆராய்ந்து கண்டு, மாங்காயின்

வடிவத்திலுள்ள சுரப்பிகளாகிய அங்கங்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சித்தர்களுடைய யோகப் பயிற்சியினால் ஐம்புலன் அடக்கம் கைவந்த ஒரு ஞானிக்கு மலைமுகடாகிய தலை உச்சியிலே மாங்காய் வடிவத்திலுள்ள சுரப்பியிலிருந்து (gland)ஞானப் பால் சுரக்கிறது. பசியையும் வேட்கையையும் மீறிய பேருணவாக இந்த ஞானப்பால் உடலுக்குள்ளேயே சொரிய ஆரம்பித்துவிடுகிறது. பிறகு ஆடம்பரமான உணவாகிய தேங்காயின் பால் வேண்டுவது இல்லை. ஞானப்பால் உண்டு மலை முகடாகிய தலை உச்சியிலே சிந்தனை கூடி நிலைத்து நிற்கும் ஞானிகளுக்கு உலக இச்சையாகிய பிற இன்பங்கள் வேண்டுவதில்லை என்பதை நாட்டுப்புறத்து மக்களின் மொழியிலே கூறுகிறது இந்த எளிய பாடல்.

குதம்பைச் சித்தர் என்ற மகான் பாடிய இந்தப் பாடல் பார்ப்பான் அகத்திலே பால்சொரிவதை நினைவூட்டுவதாக இருப்பதோடு நாட்டுப் பாடலின் பாங்கிலே நடந்துசெல்கிற சித்தர் இலக்கியமாகவும் அமைந் துள்ளது.

ஒரே கருத்தை, செம்மை இலக்கியத்தின் வடிவத்திலும் நாட்டுப் புற மக்களின் இலக்கிய வடிவத்திலும் கூறுகின்ற பான்மை சித்தர் இலக்கியத்திற்கு அமைந்திருக்கின்ற சிறப்பை இந்த இரண்டு பாடல் களும் உணர்த்துகின்றன. ஆகவே, இதுவரை நாம் கண்ட ஆய்வின் தொகுப்பு என்னவென்றால், சித்தர் இலக்கியமானது பழமைக்குப் பழமையாக இருப்பதோடு புதுமைக்குப் புதுமையாக அமைந்திருக் கிறது என்பதும், மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இணைந்த வகையிலே அறிவியலோடு இந்த இலக்கியம் மக்களை நோக்கிப் பேசுகிறது என்பதும், நுண்மாண் நுழைபுலம் கொண்ட அறிஞர் பெருமக்களைப் போலவே, கல்வி அறிவு இல்லாத பாமர மக்களும் விரும்பிக் கேட்கும் வடிவத்தில் இந்த இலக்கியம் அமைந்திருக் கிறது என்பதும், செம்மை சார்ந்த பேரிலக்கியங்கள் வழங்குவது போலவே நாட்டுப்பாடல் இலக்கியமாக இத்தகைய சித்தர் பாடல் வழங்குகிறது என்பதும், இயற்றியவர் பெயரும் வரலாறும் தெரிந்த பாடல்களோடு பாடலை இயற்றியவர் யார் என்று தெரியாத பொதுமக்களின் இலக்கியமாகவும், ஆயிரக்கணக்கான பாடல்கள் சித்தர் இலக்கியத்திலே வழங்கிவருகின்றன என்பதும், முழுப்பொருளும் புரியாத நிலையிலும் இந்தப் பாடலுக்குள்ளே இருக்கும் ஏதோ ஒரு மயக்க ஆற்றல், பாடலைப் புரிந்தவர்களை மயக்குவது போலவே பாடலைப் புரிந்துகொள்ள முடியாதவர்களை யும் மயக்கி ஈர்க்கிறது என்பதும்; யாப்பின் அமைதியிலும் மொழியின் ஆட்சியிலும் இந்த இலக்கியம் பாக்கள், பாவினங்கள், பண்ணத்திகள், இசைப்படல் வகைகள், பேரிலக்கியப் பெரும்செய்யுட்கள், சிற்றிலக்கியப் பிரபந்தப் பாடல்கள், இலக்கண வரம்புக்குள் இயங்குகிற செய்யுள் கள், இலக்கண வரம்பை மீறி மக்களின் இசைப்பாங்கும் இயலும் கூடி இணைந்த பாமரப் பாடல்கள் என்று, வகையிலும் தொகையிலும் விரிந்து பரந்து விளங்குகிற மாபெரும் இலக்கியமாக இந்தச் சித்தர் இலக்கியம் பல நூறு ஆண்டுகளாகத் தமிழகத்திலே வழங்கிவருகிறது என்பதும் ஆம்.

இனி, சித்தர் இலக்கியத்தின் தன்மைகளைத் தனித்தனியாக ஆய்வு முறையிலே நோக்க வேண்டியது அவசியம் ஆகும்.

## எளிமை

சித்தர் இலக்கியத்தின் எளிமை என்பது அந்த இலக்கியத்திலே ஆளப்பட்டுள்ள மொழியின் எளிமையே யாகும். அதாவது சித்தர்கள் தனிப்பாடல்களிலே கையாளுகின்ற தமிழ்நடையானது மிகமிக எளிய சொற்களாலாகிய மிடுக்கு நடையாகும். நிகண்டு பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இன்றிச் சொற்களின் பொருளை உடனே புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சித்தர்களின் தமிழ்நடை அமைந்திருக்கிறது. சைவத் திருமுறைகள் 12இல் 9ஆம் திருமுறை, 11ஆம் திருமுறை ஆகிய தொகுப்புகளிலே உள்ள சித்தர்களின் பாடல்களுக்கும் இந்த எளிமை இலக்கணம் பொருந்துகிறது. 10ஆம் திருமுறையாகிய திருமூலருடைய திருமந்திரமும் அதனுடைய சொல் ஆட்சியிலே எளிமை என்ற இயல்பை உள்ளடக்கி நிற்கிறது. விட்டுச் சித்தர் என்று அழைக்கப்பெறுகிற பெரியாழ்வாரின் பாசுரங்களிலே பல, சித்தர் இயல்புகள் கொண்டு பொருளாலும் ஆழத்தாலும் ஆன்ம அனுபவத்தாலும் ஆழ்ந்து அகன்று விரிந்து செல்கின்ற தன்மையுடையனவாக இருப்பினும், அவற்றின் நடை மிகமிக எளிமையாக இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறே பற்பல கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உடைய பல்வேறு பிரிவுகளிலே தோன்றிய எல்லாச் சித்தர்களுடைய பாடல்களும் தங்கள் தமிழ்நடையிலே எளிமையிலும் எளிமையாக விள்ங்குகின்றன. அண்மைக் காலத்திலே தோன்றிய மஸ்தான் சாகிபு, வாலைச்சித்தர் போன்ற சித்தர் பெருமான்களும் இந்த இலக்கணத்திற்கு உடன்பட்டவர்களே. மோனகுருவின் மரபில் வந்த தாயுமானவராகிய பெருஞ் சித்தரும் தமது பாடல்களிலே வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கையாண்டிருப்பினும், அவருடைய பாடல்களில் தமிழ்நடையானது எளிமைப் பண்போடுதானே இயங்குகிறது! 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்பது போன்ற வரிகளும், 'சங்கர சங்கர சம்போ' போன்ற ஆனந்தக் களிப்பு வரிகளும் துரியநிலை பற்றிப் பேசுகின்ற பாடல்களும்கூட இந்த எளிமை இலக்கணத்தோடு காணப்படுவதை இங்கே முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

ஆகவே, எளிமை என்பது சொற்களில் மட்டும் உள்ள எளிமையாகும். ஆனால் இந்தச் சொற்கள் தாங்கி நிற்கின்ற பொருளோ அளந்துபார்க்க முடியாத அத்துணை ஆழம் கொண்டதாக அமைகிறது.

எளிமை என்ற மொழிநடைக்கு இலக்கணம் கூறுகின்ற மேனாட்டு மொழி நூல் வல்லுநர்கள் அனைவரும் இந்த எளிமையின் பிறப்பிடமாக உள்ளத்தின் தெளிவையே குறிப்பிடுகிறார்கள். உள்ளத்திலே தெளிவு இருக்குமானால் அந்தத் தெளிவானது தெளிந்து சொற்களிலே உறவாடுகிறது. புலமையை உணர்த்துகின்ற பாடல்களைப்போல் அன்றி, உள்ளத்தின் தெளிவை உணர்த்தித் தெளிந்த நிலையிலே கூறுகின்ற சித்தர்கள், தங்கள் கருத்துகளைத் தெளிவோடு பேச

முனைவதனால் அவர்களுடைய சொற்களிலே பின்னலும் கடுமையும் இல்லாத நிலையில் எளிமை பிறக்கின்றது. ஆனால் இந்த எளிமையின் ஒரு தனிச்சிறப்பு என்னவெனில், இந்த எளிமையானது ஒரு வயதுவந்த மனிதனுடைய எளிமை. ஒரு குழந்தையின் எளிமைக்கும் ஒரு பெரிய மனிதனின் எளிமைக்கும் எத்தனையோ வேறுபாடு உண்டு. ஒரு மனிதனுடைய முகத்திலே உள்ள தூய்மையானது, ஒரு குழந்தையின் தூய்மையைப் போன்றதாகும். ஆனால் அந்தக் காரணத்தினால் ஒரு வயதுவந்த மனிதன் குழந்தையாகி விடுவானா? குழந்தையைப் போன்ற எளிமை இருக்கிறதே தவிர, அந்தப் பாடல்களிலே அந்த எளிமை காரணமாகப் பசலைத்தன்மை இருப்பதில்லை. மாசு மறுவின்றி ஒரு குழந்தையின் பண்பு சித்தர் இலக்கியத்திலே எளிமையாக உறவாடுகிறது. அது குழந்தையைப் போன்ற தன்மையே தவிர, குழந்தைத் தன்மை ஆகிவிடாது. குழந்தை போல என்பதற்கும் குழந்தையே என்பதற்கும் அடிப்படையில் எத்தனை வேறுபாடு இருக்கிறது! இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆழமான தூய தண்ணீர் நிரம்பியுள்ள ஒரு பெரிய குளத்திலே அல்லது சுனையிலே மேற்பரப்பை நாம் நோக்கினால் அடிமணலே கண்ணுக்குத் தெரியும். அது படிகம் போன்ற தண்ணீரின் இயல் பினால் ஏற்படுகிற கண்ணாடித் தன்மை. அடிமணல் தெரிகிறதே என்று நினைத்து அந்தச் சுனைக்குள்ளே இறங்கிவிடமுடியுமா? உள்ளே உள்ளே உள்ளே ஆழ்த்திக்கொண்டே சென்றுவிடும் அந்தச் சுனையின் ஆழம். முக்குளி பாய்ந்து அடிமணலை எடுப்பதற்கு எத்தனையோ ஆழம் உள்ளே பாய்ந்து செல்லவேண்டும். மூச்சுத் திணறினாலும் திணறக்கூடும். அந்த அளவுக்கு மூச்சைப் பிடிக்கும் பயிற்சி உள்ளவர்கள்தான் சித்தர் இலக்கியத்தின் அடிமணலைக் கையிலே கொண்டு வெளியே வரமுடியும். பாடல்களின் எளிய சொற்களினால் ஏற்படுகின்ற இந்தத் தெள்ளத்தெளிந்த படிகப்பண்பு சித்தர் இலக்கியம் அனைத்திலுமே உள்ள தமிழ்நடையின் தூய தனிச் சிறப்பாகக் காணப்படுகிறது.

## ஆழம்

சிவவாக்கியர் என்ற சித்தர் ஆன்மக் கல்வியினுடைய இயல்பினை மிக எளிய தன்மையிலே கூறுகிறார்:

> ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
> நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்
> வாடி வாடி வாடி வாடி வாடிநின்ற மாந்தர்கள்
> கோடி கோடி கோடி கோடி எண்ணிலாத கோடியே

இந்தப் பாடலின் அமைப்பைப் பாருங்கள். புரியாத சொல் என்று ஒரு சொல்கூட இதில் இல்லை. கடினம் என்பதே இல்லாத மிகமிக எளிய தமிழ். ஆனால் அது உணர்த்துகின்ற பொருளோ எத்துணை ஆழம் பாருங்கள்!

இந்த உடம்பினுக்குள்ளே ஒளியாக ஒரு மாயமான மெய்ப்பொருள் கலந்து நிற்கிறது. இந்த உட்கலந்த சோதியைக் காணவேண்டும்

என்ற நாட்டமானது மனித மனத்திற்கு இயல்பாகவே தோன்றுகிறது. இந்த நாட்டத்தின் தன்மை நுட்பமானது. ஒன்றாகப் பிணைந்து, ஒன்றாக இணைந்திருந்து, அந்த ஒன்று இரண்டாகப் பிரிந்தது. பேருயிரிலே கலந்துநின்ற சிற்றுயிரானது பேருயிரிலேயிருந்து பிரிந்து தனியே வந்தது. பிரிந்துவந்த ஒன்று, தான் இணைந்துநின்ற ஒன்றை நாடுவது இயற்கையின் இயல்பு அல்லவா! பேரான்மாவை நாடுகின்ற நாட்டத்தின் முதல் மூலம் இதுவேயாகும். இணைந்த இரண்டு பிரிந்து போய் மீண்டும் மீண்டும் இணைவதற்காகத் தவிக்கின்ற தவிப்புத்தான் இந்த மெய்ப்பொருள் நாட்டம். பிரிந்த உயிருக்குள்ளே உட்கலந்து நிற்கிறது அந்த மெய்ப்பொருளாகிய சோதி. பிரிந்தபின்பு அதைக் காணமுடியாதபடி அறியாமை இருளானது கவிந்து உயிரை மறைத்து விடுகிறது. அதைக் காணுவதற்காக உயிரானது நாடி நாடி இயங்கு கிறது. இந்த இயக்கம்தான் ஆன்ம வரலாற்றிலே கோடி கோடி யுகமாகக் காணப்படுகின்ற இயக்கம். இந்த இயக்கமாகிய ஆழ்ந்த மெய்ப்பொருள் ஈர்ப்பை மிக எளிய தமிழிலே பாடுகிறார் சிவ வாக்கியர். அப்படிப் பாடும்போது அவருடைய ஆன்மத்தெளிவு அவருடைய சொற்களிலே ஒளிவீசிப் பிரகாசிக்கிறது. இதுவே இந்த எளிய சொற்களின் இலக்கணம் ஆகும்.

## வடிவ வகைகள்

தமிழ் நடையினுடைய எளிமையை ஆராயும்போது சித்தர்களின் உள்ளத் தெளிவே சிக்கலற்ற சொற்களாகப் புறப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அப்படியானால் இந்தச் சொற்கள் பிறந்து, பாடலின் உருவிலே வடிவெடுக்கும்போது அவை எத்தகைய வடிவைப் பெறு கின்றன என்பதை அடுத்தபடியாக நாம் ஆராயவேண்டும்.

உயிரையும் உடம்பையும் ஆன்ம பரிபக்குவத்தையும் ஆராய்ந்து சொல்லுகின்ற நூல்கள் பிறவியின் தன்மைகளைப் பல கோணங்களி லிருந்து ஆராய்ந்து கூறியிருக்கின்றன. நமது இந்திய நாட்டின் ஆன்மத் துறையிலே அடிப்படையான ஒரு பேருண்மை என்னவென்றால், உயிர் உடலை ஏன் எடுக்கிறது, எப்படி எடுக்கிறது என்ற ஆய்வேயாகும். சமணத்திலும், சாக்கியத்திலும் ஊழ்வினையை அடிக்கோடிட்டுக் காட்டுவதைத் தமிழ்மொழியிலுள்ள காப்பியங்கள் கதை வடிவத்திலே நமக்கு உணர்த்தியுள்ளன. தமிழகத்தின் தொன்மையான மற்றச் சமயங்களிலும் ஊழையும் முற்பிறப்பு, முன்பிறவி, பின்பிறவி, என்பதையும் அழுத்தமாகவே கூறியிருக்கிறார்கள். தமிழ்ப் பொது மறை என்று நாம் வழங்குகின்ற திருக்குறளில் திருவள்ளுவர் முன்னைப் பிறவியையும் பின்னைப் பிறவியையும் பற்றிக் கூறுகிறார். இந்த உண்மையை இங்கே நாம் நினைவு கொள்ளவேண்டிய அவசியம் என்ன வென்றால், நமது நாட்டின் அடிப்படைக் கொள்கைகளில் மிகவும் முக்கியமான ஒரு கொள்கை ஆன்மாவானது வினைக்கு ஈடாய் உடம்பை எடுக்கிறது, மெய் கொள்கிறது என்பதாகும். அதாவது வினைப்பயனுக்குத் தக்கவாறு இப்பிறவியிலே துய்ப்பு அடையவேண்டு மென்ற அடிப்படையில் அந்த அந்த வினைக்கு ஈடான அந்த உடலை உயிர் எடுத்து இந்த உலகிலே பிறக்கிறது. இந்த அடிப்படை உண்மை

யைப் போலவே சித்தர்களுடைய பாடலும் உடம்பெடுத்துக் கவி வடிவத்திலே உலவுகிறது. வினைக்கு ஈடான யாப்பு வடிவை மேற்கொள்ளுகிறது சித்தர் இலக்கியம். மிகமிக நுட்பமான பொருளை இலக்கணச் சூத்திரம் போன்று சொல்லவேண்டிய நிலை எழும்போது, சித்தர் தாம் விலகிநின்று தம் கொள்கைளை மட்டும் இலக்கண அமைதிகொண்டு செய்யுளாக மொழிந்துவிடுகிறார். தொல்காப்பியம் அல்லது நன்னூலிலுள்ள சூத்திரம் போன்று அந்தப் பாடல் அமைந்து விடுகிறது. சான்றாக :

ஒன்றது பேரூர்
வழியாறு அதற்குள
என்றது போலே
இருமுச் சமயங்கள்

மேற்கண்ட பாடலை ஆராய்ந்து பார்த்தோமானால் இலக்கண சூத்திரத்தைச் சொல்வது போன்ற வடிவத்திலே இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. இதற்கு முந்தைய பாடல்கள் அல்லது பின்னைய பாடல்கள் போன்று அதே யாப்பு அமைதியிலே இருப்பினும் இந்தப் பாடலின் வடிவ அமைதிக்குள்ளே ஒரு சூத்திரம் போன்ற போக்கு அமைந்திருப்பதைக் காணலாம்.

தீயினும் வெய்யன்
புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன்
அருளறி வாரில்லை

இந்தப் பாடலில் சித்தர் தமது மோன சமாதியிலிருந்து வெளிப்பட்டுத் தனியாக நின்றுகொண்டு ஒரு பேருண்மையைச் சொல்லுகின்ற போக்கு அமைந்திருக்கிறது.

இதே யாப்பில் அமைந்த இன்னொரு பாடலைப் பார்க்கலாம்:

ஆன்கன்று தேடி
அழைக்கும் அதுபோல்
நான்கன்றாய் நாடி
அழைத்தேன்என் நாதனை

இந்தப் பாடல் சித்தர் விலகிநின்று பாடுகிற பாடலன்று. தம்முடைய உள்ளமும் தாமும் அந்தப் பாடலின் பொருளிலே தோய்ந்துநின்று தம் குரலிலே தம் அனுபவத்தை வெளியிடுகிற பாங்கிலே இந்தப் பாடலின் போக்கு அமைந்திருக்கிறது. இது வெறும் சூத்திரம் இல்லை. அதே சமயம் வெறும் தோத்திரமும் இல்லை. இரண்டுக்கும் இடையில் சூத்திரமும் தோத்திரமும் அற்ற மெய் அனுபவ வெளியீடாக இந்தப் பாடல் வருகிறது. இது ஒருவகை.

இனி, இந்த இரண்டு வகையான பாடல்களிலிருந்தும் மாறி, மரபோடு மொழிவதும், இதயம் தோய்ந்துநிற்கிற நெகிழ்ச்சியிலே மலர்வதுமாகிய வடிவத்திலே அமைந்த பாடல்களும் சித்தர் இலக்கியத்திலே உண்டு. சான்றாக, கருவூர்த்தேவர் என்ற சித்தர் பெருமானுடைய ஒரு பாடலைப் பாருங்கள்:

மையாத மனத்தினனை
    மைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
    அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
    கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே

இதுவும் சித்தர் பாடல்தான். இதனுடைய இயக்கம் வேறு வகையான வடிவத்திலே உருவம் எடுத்து உலவுகிறது. எப்படியென்றால், வீதி உலாவந்த எம்பெருமானுடைய திருமேனியின் எழிலிலே உள்ளத்தைப் பறிகொடுத்த பேதை தன்னை இழந்து, அந்தத் தன்மையை உள்ளமும் உடலும் உருகிநின்ற நிலையிலே எடுத்து இயம்புகிற ஆன்மநேய வெளியீடு ஆகும் இந்த அரிய பாடல். அதனுடைய வடிவ அமைப்பிலே சூத்திரத்தைப் போன்ற விலகிநிற்கும் தன்மை இல்லை. அதே சமயம் தோத்திரம் போன்று இல்லாமல் உண்மையின் வெளியீட்டுக் கிளவியாக மட்டும் தோற்றம் தருகிற தன்மையும் இல்லை.. இந்த இரண்டிலிருந்தும் மாறுபட்டு, தனி உயிரும் பரம்பொருளும் பிணைந்து நிற்கின்ற அந்த ஈர்ப்பு நிலையிலே பசுவானது பதியை நாடுகின்ற பான்மையில் உயிர் உருக்கத்தோடு பாடல் வடிவெடுக்கிறது. இந்தப் பாடலிலும் எளிய சொற்களே உள்ளன. அந்தச் சொற்கள் எடுத்துக்கொண்டுள்ள வடிவம் முற்றிலும் மாறுபட்டது.

## யாப்பு

செய்யுள் வடிவம் என்று சொல்லுவதற்கும், செய்யுளின் யாப்பு அமைதி என்று சொல்லுவதற்கும் இலக்கிய அடிப்படையிலே எத்தகைய இலக்கண மாறுபாடுகளையும் நாம் கூற இயலாது எனினும், அந்தப் பாடல்களின் சாயலிலே ஓர் ஒலிவடிவம் அமைந்து நிற்கிறது அல்லவா? அந்த வடிவத்திலே நுட்பமான ஒரு மாறுபாடு இருப்பதை ஆய்ந்து பார்த்தால் புரிந்துகொள்வோம்.

ஒரே யாப்பு அமைதியில் உருவெடுத்துள்ள இரண்டு வெண்பாக்கள் இருக்கலாம். எனினும் அவற்றின் ஒலிவடிவச் சாயலிலே மாறுபாடுகள் அமைவது உண்டு. அசை, சீர், தளை ஆகியவற்றிலே இரண்டு பாடல்களுக்குள் யாப்பு ஒன்றேயாயினும், அவற்றின் ஒலி அமைதியிலே மாறுபாடு இருப்பதைச் செவியின் நுகர்ச்சியினால் நாம் உணர்ந்து கொள்ள இயலும். இலக்கண முறைப்படி அவை இரண்டும் யாப்பின் அமைதியிலே ஒரே இனத்தைச் சேர்ந்தவையாகவே கணக்கிடப்படும்.

இந்த அடிப்படையில் ஆராய்ந்தோமானால் சித்தர் இலக்கியங்களின் யாப்பு அமைதி மூன்று வகைப்படும்.

**முதலாவது வகை :** தமிழ் மொழியின் இலக்கிய இலக்கண வரலாற்றிலே அறுதியிட்டு ஒப்ப முடிந்த முடிவுகளாக வருகின்ற வழிவழிச் செய்யுள் மரபின் வடிவத்திலே அமைந்த பாடல்கள்

முதலாவது வகையாகும். அதாவது ஆசிரியம், கலி, விருத்தம் என்று பேசப்படுகின்ற யாப்பு அமைதியிலே, புலவர்கள் ஒப்புக்கொண்டும் கையாண்டும் வருகின்ற மரபுவழி வடிவங்களிலே தொல்காப்பியர் போன்ற இலக்கண மேதைகள் வரையறுத்துள்ள யாப்பு வடிவங்களிலே அமைந்துள்ள சித்தர் பாடல்கள் முதல்வகை. காரைக்கால் அம்மையாருடைய வெண்பாக்கள், திருமாளிகைத்தேவர், கருவூர்த் தேவர், பட்டினத்தடிகள் போன்ற சித்தர்கள் அருளியுள்ள மரபுச் செய்யுள்கள், பல காலத்திலும் பல இடங்களிலும் தோன்றி இலக்கண இலக்கியச் செம்மையோடு பாடிய சித்தர்களின் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள், தாயுமானவர் போன்ற ஞானிகள் அருளிய விருத்தங்கள் முதலிய சித்தர் பாடல்களெல்லாம் இந்த முதலாவது வகையிலே அடங்கும்.

**இரண்டாவது வகை :** செய்யுள் வடிவம் என்று சொல்லும்போது இயற்புலவர்கள் கையாண்டு வருகின்ற வடிவங்களையே நாம் குறிப்பிடுகிறோம். இந்த வகையான வடிவங்கள் தவிர, பிரபந்தங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கையாளப்பட்டுவருகின்ற பாவினங்கள் பல இருக்கின்றன அல்லவா? இந்த வகையிலே அமைந்த சித்தர் பாடல்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன.

பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற பிரபந்தங்களிலே வருகிற பாவினங்களும், காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, ஆனந்தக் களிப்பு போன்ற சிற்றிலக்கியப் பாவினங்களும் சித்தர் இலக்கியத்திலே காணப்படுகின்றன. பொருளமைதியிலும், ஆன்ம அறிவியலிலும் இந்தப் பாடல்கள் மற்றச் சித்தரின் செய்யுள்களைப் போலவே பிறப்பெடுத்திருப்பினும் இவற்றின் வடிவத்தினால் அந்தப் பாடல்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. ஒரே கடலைமாவு வகை வகையான பற்பல தின்பண்டங்களாக உருவெடுப்பதுபோல, ஒரே ஆன்ம ஞானம் ஆயிரம் ஆயிரம் வடிவங்களிலே காவடி எடுத்து ஆடியும், குதிநடை நடந்தும், வழிநடை சென்றும், கொட்டுடனும் மேளத்துடனும் குதித்தாடிக்கொண்டும் உலாவருகிறது.

**மூன்றாவது வகை :** சித்தர் இலக்கியத்திலுள்ள மூன்றாவது வடிவமைப்பு முற்றிலும் இசைப்பாடலின் அமைப்பு ஆகும். தொல்காப்பியத்திலே வருகின்ற உரு என்ற வகையிலும், பண்ணத்தி என்ற வகையிலும், இக்காலத்திலே வழங்கிவருகின்ற கீர்த்தனை, பதம் போன்ற வடிவங்களிலும் அமைந்துள்ள சித்தர் பாடல்கள் மூன்றாவது பிரிவிலே அடங்கும். இந்தப் பாடல்களும் உட்கருத்திலும், பொருள் ஆழத்திலும் மற்றச் சித்தர் பாடல்கள் போலவே இருப்பினும் அவற்றின் இலக்கிய நடைமுறையானது இசையோடு கலந்த பாங்கிலே தாளம் தட்டிக்கொண்டு வருகின்றது. இந்த வகையான பாடல்கள் பாணர்களின் இசைமுறைக்கு ஏற்ற எல்லாவகைகளிலும் அமையாவிடினும், விரிவிலும் தொகையிலும் குறிப்பிட்ட 10, 12 வடிவங்களிலே அமைந்து, குறிப்பிட்ட 10, 12 பண்களிலே பாடப்படுவனவாகப் பாடுவோருக்கும் கேட்போருக்கும் உள்ளத்தில் சிலிர்ப்பு ஏற்படும் வகையில் எளிய சொற்களிலே இசைப் பண்போடு அமைந்து காண்கின்றன. இந்தப் பாடல்கள் தொல்காப்பிய உரையாசிரியர்

கூறுகின்ற பாவின மேற்கோள்களிலிருந்து இன்று வழங்கிவருகின்ற பல்லவி, அனுபல்லவி, சரணம் வரை கிராமங்களிலும், நகர்ப்புறங் களிலும் விழாக்காலங்களில் நூற்றுக்கணக்கில் வழங்கிவருகின்றன.

இந்த இசைப்பாடல்களின் வகையிலே பல சித்தர்கள் உவந்து கையாண்ட ஒரு வடிவம் கும்மியாகும். கும்மி என்ற இந்த இசைப்பா வின் யாப்பு முறையிலே தனித்தனிப் பாடல்களாகச் சித்தர் இலக்கியங் கள் அமைந்திருப்பதோடுகூட, தனித்தனி நூல்களாகவே அமைந்தும் காணப்படுகின்றன. வாலைக் கும்மி, ஞானக்கும்மி போன்ற நூல்கள் இவ்வகையான சித்தர் இலக்கியத்திற்குச் சான்றாகும். இவை உணர்த்தும் பொருள் ஆன்மஞானம், ஆன்ம அனுபவம், ஆன்ம இயல்! ஆனால் இவை வழங்கிவருகின்ற வடிவமோ கும்மி.

## நாடோடி இலக்கியம்

இதுவரை நாம் ஆராய்ந்த சித்தர் இலக்கிய வடிவங்களைத் தவிர நாடோடி இலக்கியம் என்ற தனித்தலைப்பிலே இந்த இலக்கியத்தை நாம் பார்க்கவேண்டிய அவசியம் ஒன்று இருக்கிறது.

யாப்பில் நாட்டுப்பாடல்களின் போக்கிலே அமைகின்ற சித்தர் இலக்கியத்தில் இன்னொரு சுவையான பண்பு கலந்து காணப்படு கின்றது. அது அந்தத் தமிழ்நடையின் சில குறிப்பிட்ட இயல்புகளை உள்ளடக்கிய தன்மையாகும்.

**வினைமுடிபுகள் :** நாட்டுப்பாடலின் போக்கிலே அமைந்த சித்தர் இலக்கியத்தில் பல இடங்களிலே வினை முடிபுகள் பேச்சு வழக்கிலே அமைந்திருக்கக் காண்கிறோம். ஆச்சு, போச்சு போன்ற சொற்களும்; செல்லுது, வருகுது போன்ற ஆட்சிகளும்; சொல்லணும், கொடுக்கணும் போன்ற முடிபுகளும்; போடி, வாடி போன்ற சொல்லாட்சிகளும்; அம்மச்சி, அக்கச்சி, தங்கச்சி போன்ற விளிகளும்; ஓ, ஆ என்பன போன்ற இடைச்சொற்களும்; அம்மாடி, ஆத்தாடி போன்ற வியப்புச் சொற்களும் நாட்டுப்புற வினை முடிபுகளோடு கலந்து கையாளப்படுகின்றன.

**சொற்கள் :** இலக்கிய வழக்கில் இல்லாத இனச் சொற்களும், சாதிச் சொற்களும் உட்பொருள் கொண்ட கருத்துச் செறிவோடு நாட்டுப்புறப் பாடல்களாகிய சித்தர் இலக்கியத்தில் ஏராளமாகப் பயின்றுவருகின்றன. கவுண்டன், இடையன், முதலி, பிள்ளை, ஐயர் போன்ற சாதிச் சொற்கள் இந்தப் பாடல்களிலே பயின்று வருகின்ற பொழுது அவற்றுக்கு வழக்கமான பொருள் இருப்பதில்லை. இவ்வாறே விலங்குச் சொற்களும், பறவைப் பெயர்களும் உட் பொருளோடு கையாளப்பட்டிருக்கின்றன. குதிரை, ஆடு, பசு, குரங்கு போன்ற விலங்கினச் சொற்களும் மயில், குயில், பருந்து போன்ற பறவை இனச் சொற்களும் உட்பொருளோடு இந்தப் பாடல் களிலே கையாளப்பட்டு வருகின்றன. ஒருசில இடங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட செய்யுள் வடிவங்களே அமைந்த சித்தர் இலக்கியத் திலும் இவ்வகையான சொல் ஆட்சியைக் காண்கிறோம். நுட்பம் என்னவென்றால் இந்தச் சொற்களின் பொருள் நிகண்டில் காணப் படுகிற பொருள் இல்லை. அவற்றின் ஆன்மப் பொருள் வேறாகும்.

பிற மொழிச் சொற்கள் : பழமையான சித்தர் பாடல்களிலே வட மொழிச் சொற்கள், செந்தமிழ்ச் சொற்கள் என்ற பாகுபாடின்றி இந்தப் பாடல்களின் நடையிலே சொற்கலவை அமைந்திருப்பதும் உண்டு. பிற்காலத்தில் எழுந்துள்ள சித்தர் பாடல்களில் பாரசீகச் சொற்களும், உருதுச் சொற்களும்கூட விரவி வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் மக்கள் கூட்டத்தை நோக்கிச் சித்தர் தமது அநுபவத்தை நேருக்கு நேராக வெளியிடும்போது, தமது ஆன்ம வாணிபத்தை மக்களின் செலாவணியிலுள்ள நாணயங்களில் வழங்குகிற முறையேயாகும். எனவே தூய்மை என்று சொல்லப் படுகின்ற மொழி இலக்கணத்தையும் மீறி வழக்காறு என்று சொல்லப் படுகிற மரபைக் கையாளுகின்ற முறை சித்தர்களிடையே காணப் படுகின்றது. 'குதிரை கட்டிய லாயத்திலே' என்று ஞானக்கும்மியிலே ஒரு வரி வருகிறது. 'பரித்தொழு' என்ற தமிழ்ச்சொல்லைக் கையாளா மல் மக்களின் அன்றாட வாழ்விலே வழங்கி வருகின்ற 'லாயம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் இந்தச் சித்தர். இவரைப் போன்றே ஓடப்பாட்டுகள் பாடுகின்ற சித்தர் மாலுமி, மீகாமன், சுங்கான் போன்ற சொற்களையும், ராவுத்தர், மேஸ்திரி போன்ற சொற்களை யும் கையாண்டு இந்தச் சொற்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட பேருண்மைகளை மிக எளிய முறையிலே வெளியிட்டுவிடுகின்ற ஓர் அருமைப்பாடு, ஒரு நேயப்பாடு சித்தர் இலக்கியத்தின் மொழி மரபாக இருந்துவருகிறது.

## அலைவீச்சு

சித்தர் இலக்கியத்தின் பாடல் அமைப்பிலே மிகமிக விளக்கமாகத் துலங்குகிற ஒரு பண்பு அந்தப் பாடல்களுக்கு உள்ளே கனல்கிற நெருப்பு ஆகும். அது ஒரு ஆன்ம ஒளியின் வெளியீடு.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

ஆடி ஓடி அமர்கின்ற மனித ஆயுளின் வரலாறு முழுவதும் நான்கு வரிக்குள்ளே வேகத்தோடு தொடங்கி, வேகமாகவே முடிந்து நின்று விடுகிறது. அந்த வேகம் பாடலின் கருத்தில் மட்டுமல்லாமல் அதன் நடையிலும், அந்தப் பாடல் செல்கின்ற மிடுக்கான செலவிலும், சொற் களின் துடிப்பிலும் ஒப்பற்ற ஓர் ஓட்டத்தோடு விறுவிறு என்று சென்று நின்றுவிடுகிறது.

வையகத்தில் மாந்தர் முன்னம்
வாய்திறப்ப தில்லையே

என்றும்,

அருட் தரித்த நாதனாணை
அம்மையாணை உண்மையே.

என்றும்,

இல்லைஇல்லை இல்லைஇல்லை
இல்லைஇல்லை இல்லையே

என்றும் பாடல் வரும்போது அதனுடைய வேகம், நம் உடம்பையே போட்டு ஆட்டுகிறது. ஓட்டமும் நடையுமாகப் படர்ந்து செல்கின்ற ஒரு சித்தனுடைய வேகத்தை இந்த வரிகளிலே காண்கிறோம். அவன் நின்று பேசுகிறான் என்றால் நின்று பேச நேரம் இல்லாதநிலை போன்ற அந்த வேகம் காற்றாகப் பறக்கிறது. கனலாக எரிகிறது. தீப்பொறியாகத் தெறிக்கிறது.

## மோன அமைதி

கடலானது பொங்கிப் பெருகி அலைவீசி ஆடுவதும், உள்ளே மீள்வதும் பின் அது பொங்குவதும் புரள்வதுமாக எப்படி ஒரே அலை வீச்சாக இருக்கிறதோ, அப்படிப்பட்ட சித்தர் இலக்கியத்தைப் போலவே இன்னொரு வகையும் உண்டு. ஆழ்ந்து அகன்று சிற்றலை வீசிப் பெரிய ஏரிநீர் போன்ற ஒரே அமைதியிலே காட்சிதரும் சித்தர் பாடல்களும் உள்ளன.

என்தாயோடு என்அப்பன்
ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு
எழுதிய ஆவணம்

இந்த வரிகளைப் பாருங்கள். இவற்றில் உள்ள அமைதி ஆழ்ந்து அகன்ற ஏரியின் அமைதியாகும்.

அன்றும் திருவுருவம்
காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம்
காண்கிலேன்—என்றும்தான்
எவ்வுருவோ நும்பிரான்
என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம்
ஏது?

இந்தப் பாடலிலுள்ள அமைப்பை என்னவென்று சொல்வது! இதுதான் ஆன்ம நேயப் பண்பு. இதுவே ஆன்ம அமைதி. யோக சமாதியின் உள்ளே அகலிடம் என்று சொல்லுகின்ற அந்த மாபெரும் சமாதியிலே சித்தர் பெருமான் மோனம்கூடி உடலும் உள்ளமும் அமைதியில் ஒடுங்கிய நிலையிலே அமர்ந்திருப்பது போன்ற ஓர் ஆன்மப் பேரமைதி இந்தப் பாடல்களிலே நிட்டைகூடி நிற்கிறது. இதுவும் சித்தர் இலக்கியத்தின் ஒரு மாபெரும் மாண்பு ஆகும்.

## பொருளுக்குள் பொருள்

சித்தர் இலக்கியத்தின் பாடல்களிலே உள்ள சொற்களின் அமைப்பிலே வினோதமான இன்னொரு சிறப்பு குடிகொண்டிருக்கிறது. அது என்னவென்றால் இந்தப் பாடல்கள் சொல்லுகிற சொற்களின்

பொருள் ஒன்றாக இருக்கும். அந்தச் சொற்கள் உணர்த்துகிற உருவகத்தின் பொருள் மற்றொன்றாக இருக்கும்.

இரண்டு கடாவுண்டு
 இவ்வூரின் உள்ளே
இரண்டு கடாவுக்கும்
 ஒன்றே தொழும்பன்

என்ற பாடலைப் பாருங்கள். இந்தச் சொற்கள் உணர்த்துகின்ற பொருள் வேறு. ஆனால் அவற்றின் உருவகம் உணர்த்துகின்ற பொருள் வேறு.

மூங்கில் எழுந்ததோர்
 வேம்புண்டு வேம்பினில்
சார்ந்து கிடந்த
 பனையிலோர் பாம்புண்டு

என்ற பாடலைப் பாருங்கள். இந்தச் சொற்களின் பொருளை வைத்துச் சித்தரின் கருத்தைப் புரிந்துகொள்வது எப்படி?

கொட்டியும் ஆம்பலும்
 பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும்
 இனியதோர் வாழையும்

என்ற பாடலைத்தான் பாருங்கள். பழைய இலக்கியங்களாகிய சித்தர் பாடல்களில் வருகின்ற இத்தகைய உருவக உட்பொருளைப் போலவே அண்மைக் காலத்துத் தோன்றிய சித்தர் இலக்கியத்திற்குள்ளும் பல பாடல்களைப் பார்க்கிறோம். சான்றாக,

கையில்லாக் குட்டையன்
 கட்டிக்கிட்டான்—அதைக்
கண்ணில்லாக் குருடன்
 கண்டுக்கிட்டான்

நாட்டுப்புறப் பாடலின் போக்கிலே அமைந்த இந்தப் பாடலைத்தான் பாருங்கள். கையில்லாத ஒருவன் கட்டிக்கொள்வதும், கண்ணில்லாத ஒருவன் பார்ப்பதுமான கருத்தைக் கூறுகின்றன இந்தப் பாடலில் வருகின்ற சொற்கள். இந்தச் சொற்களின் பொருளுக்கு அறிவியல் முறையிலே என்ன பொருள் இருக்கிறது? சொற்களுக்குள்ளே புகுந்து நிற்கிற அந்த உருவகத்தின் பொருள் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது.

இவ்வாறே உருவகத்தின் உட்பொருளைப் பாடலின் சொற் பொருள்கொண்டு காண இயலாத ஒரு மயக்கம் இந்தப் பாடலுக்கு இயல்பாக அமைந்திருக்கிறது. கருத்தை அறிவுகொண்டு புரியமுடிய வில்லை என்றாலும் அந்தப் பாடலுக்குள்ளே உள்ள உருவகமானது ஏதோ செய்து நம்மை எப்படியோ மயக்குகிறது. பொருள் புரியாத

நிலையிலும்கூட ஏதோ ஒன்று நம்மை அந்தப் பாடலின்பால் ஈர்க்கிறது. ஏதோ ஒன்று நம்மை அந்தப் பாடலுக்குள்ளே இழுக்கிறது. அதுதான் ஆன்ம மயக்கம் என்று சொல்லப்படுகிற ஞானானந்தப் பேரின்பக் கிறக்கமாகும்.

இதுவரை நாம் ஆய்ந்த பண்புகளின் மொத்தத் தொகுப்பு வருமாறு:

சித்தர் பாடல் என்னும் இலக்கியம் தமிழ்நாட்டில் பலநூறு ஆண்டுகளாக மிகுந்த பக்தியோடு ஆராதிக்கப்பட்டு வந்திருக்கிறது. படித்த மக்களைப் போலவே பாமர மக்களும் இந்தப் பாடல்களை மெய்யுருகி அனுபவித்து வந்திருக்கிறார்கள். நாட்டுப் பாடல்கள் என்று வழங்குகிற நாடோடி இலக்கியத்திலும் இந்தச் சித்தர் பாடல் ஒரு தனியான தெய்வ மணத்தோடு கமழ்கிறது.

'வினைக்கு ஈடாய் மெய்' என்னும் திருமந்திர வாக்குப்படி, உயிரின் வினைக்குத் தக்கவாறு உடம்பு அமைகிறதல்லவா? அது போலவே ஒரு கவிதையின் வடிவமும் மெய்யும் அமைகின்றன. சித்தர்கள் கூறுகிற தத்துவத்திற்கு ஏற்ப அவர்களின் பாடலும் உருவ அமைப்பு எடுக்கிறது. கருத்துக்கு இயைந்த வடிவம் கொள்கிறது. மற்ற இலக்கியப் பாடல்களின் போக்கு, நடை, அமைப்பு ஆகியவற்றி லிருந்து சித்தர்களின் பாடல் மாறுபட்டிருப்பதற்கு இந்த நுட்பமே காரணமாகும்.

சித்தர் பாடல்கள் எல்லாம் ஒரே யாப்பு முறையில் அமைந்திரா விட்டாலும், இவற்றின் அமைப்பு முறையில் ஓர் ஒருமைப்பாடு இருக்கும். அந்தந்தச் சித்தரின் முதிர்ச்சிக்கும், மொழியாற்றலுக்கும் ஏற்ப யாப்புமுறை மாறினாலும், இந்தப் பாடல்கள் அனைத்திலுமே ஓர் குழந்தையின் எளியதன்மை, ஓர் இங்கிதப் பசுமை ஆகிய பண்பு களை அவர்களுடைய சொற்களிலும் காணலாம். ஆனால் ஒரு முக்கியமான உண்மையை மறந்துவிடக் கூடாது. அதாவது, எளிமை என்பது சொற்களின் எளிமைதான். கருத்து வேறு. குழந்தையைப் போன்றதோர் எளிமை ஒளிவீசினாலும், குழந்தைகளா சித்தர்கள்! இல்லையே! எளிமை என்பது சொற்களிலே உள்ள எளிமைதான். கருத்து மிகமிக ஆழமாக இருக்கும். ஆழமான சுனை அல்லது ஏரியின் தண்ணீர் பரிசுத்தமாக இருந்தால் அடிமணல் தெரியும். அப்படிப்பட்ட சுத்தமான சுனை இந்தப் பாடல்கள். ஆனால் கருத்தாழமோ என்றால் தண்ணீருக்குள் முங்கி மணல் எடுக்கப்போனால் உள்ளே உள்ளே போய்க்கொண்டிருக்கும். நம்முடைய ஆணவமே அதில் கரைந்து அமிழ்ந்துவிடும்படியாக இருக்கும். அது அந்த எளிய சொற் கள் தாங்கிக்கொண்டிருக்கிற தத்துவத்தின் ஆழம்; ஆன்ம ஆழம்.

எளிமையைப் போலவே இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்தப் பாடல்களிலே அங்கங்கே உள்ள அலைவீச்சாகும். ஏரிநீர் காற்றிலே அலை மோதிக்கொண்டிருக்கும் அல்லவா? அந்த அலைகள் சிரிப்பது ஒரு சித்தருடைய சிரிப்பாகும். அந்த அலைகள் வீசிவீசிக் கரையிலே வந்து தட்டுவது ஒரு சித்தருடைய உல்லாச விளையாட் டாகும். அப்போது அந்த அலைவீச்சு கடலாகக் காட்சிதரும். சில

சமயங்களில் சில பாடல்கள் சலனமே இல்லாமல் மோன அமைதியைப் பிரதிபலித்து நிற்கும். காற்று இல்லாதபோது நடுநிசியிலே தடாகத்தின் தண்ணீர் உறங்குவதுபோல; அழகும் மோனமும் பயபக்தி கொள்ளும் படியாகத் தோற்றம் தரும். இது சித்தர்களின் நடையிலே உள்ள சித்தியாகும்.

இனி, மூன்றாவது சிறப்பு, மிகப் பெருஞ்சிறப்பு என்னவென்றால், இந்தப் பாடல்களில் உள்ள மெய்யான உருவகம், மெய்யான உள்ளுறை. சொல்லுகின்ற சொற்களின் வெளியீடு ஒன்றாக இருக்கும்; சொல்லப்படுகிற கருத்து மற்றொன்றாக இருக்கும். சரீரத்துக்குள் சரீரமாக ஆன்ம சரீரம் இருப்பதுபோல, இந்தப் பாடல்களுக்குள்ளேயே உருவகத் தத்துவம் ஒன்று ஒப்பற்ற விலாசத்தோடு விளங்குகிறது.

★

# 3. எது அறிவு?

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சந்திர மண்டலத்துக்குப் போவது பற்றி யாராவது நம்மிடம் சொன்னால், அவனை மூடநம்பிக்கையுள்ளவன் என்று நகையாடுவோம்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு வானத்திலே நாம் ஊர்திகொண்டு பறந்து செல்லலாம் என்று ஒருவன் கூறினால் அவனை ஒரு பௌராணிகன் என்று பட்டம் சூட்டி ஒதுக்கிவிடுவோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நாம் நம்பமுடியாமல் ஏளனம் செய்தவையெல்லாம் இன்று நம் கண்முன் நடப்பதைப் பார்க்கிறோம்.

அதாவது அன்று நமது அறிவுக்குப் பொருந்தாமல் இருந்த பல செய்திகள் இன்று நித்திய நடப்புக்களாகிவிட்டன. எப்படி? அறிவு முன்னேறியிருப்பதால்!

ஆம்; அறிவு முன்னேறியுள்ளது. ஆனால் அது எப்படி முன்னேறியிருக்கிறது. பாவபுண்ணிய உணர்ச்சியின்றி முன்னேறியிருக்கிறது. எந்தப் பூட்டுக்கும் திருட்டுச் சாவியைக் கண்டுபிடித்துவிடுகிறது நமது இன்றைய அறிவு.

தினப் பத்திரிகைகளைத் திறந்தோமானால் எத்தனை நவீனமான திருட்டுகளைப் பார்க்கிறோம்! அறிவோடு செய்கிற திருட்டுக்கள் அவை! நவீனமான கருவிகளைக் கொண்டு செய்கிற செயல்கள் அவை!

கார் ஷெட்டுக்குள் இருக்கிற மற்றொருவனுடைய வண்டியை ஓசைப்படாமல் வெளியே திருடிக்கொண்டு போய்விடுகிறது அறிவு! வெளியே வண்டிகளை நிறுத்த அஞ்சுகிறோம்! கதவுகளைப் பூட்டிக் கொண்டு இரவு படுப்பதற்கும் பயமாக இருக்கிறது! சமுதாய வாழ்க்கையை எடுத்தோமானால் பல ஊழல்கள். எதைச் செய்தால் பாவம், எதைச் செய்தால் புண்ணியம் என்கிற உணர்ச்சியே போய்விட்டது. அறிவுக்குத் தோன்றுகிறவற்றை எல்லாம் நாம் செய்யலாம் என்று நினைக்கிறோம். ஏனென்றால் அறிவின் பலம் நமக்கு அதிகமாகி விட்டது. இந்த மாதிரி நிலை இந்தியாவில்தான் இருக்கிறதா என்றால் உலகம் முழுவதும் இருக்கிறது. மேனாடுகளில் பார்க்கிறீர்கள். அமெரிக்காவில் இல்லாத பொருளா? அமெரிக்காவில் இல்லாத செல்வமா? எல்லா வாழ்க்கை வசதிகளும் நிரம்பி வழிகிற ஒரு சமுதாயம் அமெரிக்க சமுதாயம். அங்கேயும் அமைதி இருக்கிறதா? அங்கே உள்ளவனும் ஹிப்பி மாதிரி முடிவளர்த்துக்கொண்டு இந்தப் பக்கமாக வருகிறான். ஏதோ ஒரு தவிப்பு. ஏதோ ஒன்று தனக்குத்

தேவையானது கிடைக்கவில்லை. அது பணத்தால் கிடைக்குமா என்றால் கிடைக்க மாட்டேன் என்கிறது. வாழ்க்கை வசதிகளால் கிடைக்குமா என்றால் கிடைக்க மாட்டேன் என்கிறது. நட்புறவினால் கிடைக்கலாமா என்றால் நட்பு செய்வதற்குத் தெரியவில்லை. நட்பு என்ற கலையே நம்முடைய மனித சமுதாயத்தை விட்டுப் போய் விட்டது. இப்படி வாழ்க்கையில் ஒரு தவிப்பு எல்லாரிடமும் இருக்கிறது. அதிலும் விஞ்ஞான அறிவு அதிகமாக உள்ள நாடுகளி லெல்லாம் இந்தத் தவிப்பு அதிகமாக இருக்கிறது.

அபின் சாப்பிடுகிறேன் என்கிறான். கஞ்சா பிடிக்கிறேன் என்கிறான். மாணவர்கள் நிலையும் அப்படி ஆகிவிட்டது. இப்படிச் செயற்கையாக ஏதாவது சாப்பிட்டு அமைதி கிடைக்காதா என்று அலைகிறான் மனிதன்.

அன்பு என்ற பேரின்பம் இருக்கிறதே அது எங்கேயாவது கிடைக்காதா என்று இந்தியாவிற்கும் வருகிறான். இப்படிப்பட்ட ஒரு நிலையை அப்போதே மகாத்மா காந்தியும், ராஜாஜியும் வேறு சில பெரியோர்களும் கண்டார்கள். இதற்கு ஏதாவது செய்ய வேண்டும், நம்முடைய சனாதன தர்மத்தை மீட்டுக்கொடுத்து நம்முடைய பாரத ஜாதியினுடைய சுயதர்மம் இருக்கிறதே அதற்கு மீண்டும் மறுமலர்ச்சி கொடுக்கவேண்டும் என்று எண்ணினார்கள்.

இந்திய தேசம் பழமையான எப்படிப்பட்ட தேசம்! மற்ற நாடுகள் மாதிரியா நம்முடைய நாடு? நம்முடைய பரம்பரை என்ன? நம்முடைய மூதாதையர்களெல்லாம் யார்? எப்படிப்பட்ட ஆன்மாக்கள் நடமாடிய நாடு? நாம் இப்போது புழுக்கள் மாதிரி ஊர்ந்துகொண்டு இருக்கிறோம்.

பாரதியார் காலத்திலேயே இந்தியாவில் இந்நிலை தொடங்கி விட்டது.

"நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரம் கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள்போல் வாழ்வார்
நெஞ்சு பொறுக்குதில்லையே!—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
நெஞ்சு பொறுக்குதில்லையே!"

என்று நெஞ்சு கொதித்தார் பாரதியார்.

இந்த மாதிரியான ஓர் அமைதிக்குறைவு ஏன் ஏற்பட்டது? அறிவுக்கும் உணர்ச்சிக்கும், மூளைக்கும் நெஞ்சுக்கும், போராட்டம் இருக்கிறதே அதுதான் இன்றைக்குச் சமுதாயத்திலுள்ள ஒரு பெரிய போராட்டம். மூளை அதன் போக்கில் வளர்ந்துகொண்டே போய் விட்டது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் மனிதன் சந்திர மண்டலத் தில் போய்க்குதித்தான் என்று சொன்னால், தமிழ் அறிஞர்கள் நம்பு வார்களா? புராணக்கதை சொல்கிறநாடு நம்முடைய தமிழ்நாடு. இதை யும் புதிதாக ஒரு புராணம் என்று தான் தமிழன் கூறுவான். இதை

எவனாவது நம்புவானா? இந்தப் பகுத்தறிவு இருக்கிறதே, பொல்லாத அறிவு இருக்கிறதே, இந்த அறிவுதான் நமக்கு இப்போது இடையூறாக இருக்கிறது. இந்த அறிவினால் அதை அன்று புரிந்து கொள்ள இயலாது. ஆனால் இன்று அது மெய்யாகிவிட்டது.

மனிதர்கள் முன்னேறிவிட்டார்கள். ஆனால் மனிதன் முன்னேறி விட்டானா? காரணம் என்ன என்றால் இந்தப் போராட்டம்தான். மூளைக்கும் நெஞ்சுக்கும் பாரத யுத்தம் போன்ற ஒரு பெரிய போராட்டம் கண்டுள்ளது. ஒரு பெரிய பாரத யுத்தம் மனிதனுக்குள் நடந்துகொண்டிருக்கிறது, மூளைக்கும் நெஞ்சுக்கும்! மூளை எதை எதையோ சாதனைகளாகப் புரிகிறது. ஆனால் நெஞ்சுக்குள் அது செல்லமாட்டேன் என்கிறது. நெஞ்சோடு இயைந்த அறிவு உண்டாகவில்லை. இந்த நிலையின் அவலத்தை இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னாலே நம்முடைய தமிழ்நாட்டு அறிஞர்கள் பாடினார்கள்.

அறிவு எப்போது உண்மையான அறிவாக இருக்கும்? இந்த அறிவு எந்த உடம்பிற்குள் எப்போது புகுந்து செல்லும்? நாலடியாரின் ஒரு பாடல் இதுபற்றிப் பேசுகிறது.

இப்படிப்பட்ட சாதனைகள் (knowledge) பெற்றிருந்தும்கூட, மனிதன் திருந்தவில்லையே, ஏன்? இந்த அறிவு எங்கே நின்றுவிட்டது என்று பார்த்தால் மண்டையிலேயே நின்றுவிட்டது. நெஞ்சைத் தொடவில்லை. நெஞ்சைத் தாண்டி ஆன்மாவை இன்னும் தொடவில்லை. மனிதனை அழிப்பதற்காக ஆயுதங்களைக் கண்டு பிடிக்கிறான். இங்குப் பூமிக்குள் இருந்து ஒரு கருவியின்மூலமாக அங்கே சந்திரமண்டலத்தில் நடக்கிற செயல்களையெல்லாம் அளந்து பார்த்து அந்தக் குறிப்பிட்ட வினாடிக்கு அங்குபோய் இறங்குகிறான். அங்கிருந்து திரும்புகிறான். இதைச் செய்தது எப்படிப்பட்ட அறிவினுடைய ஆற்றல். ஆனால் நெஞ்சு எப்படி இருக்கிறது? இதயம் எப்படி இருக்கிறது?

கடைசிக் காலத்தில், அத்தனை வயதில், இவ்வளவு அக்கறை யுடன் அமெரிக்காவுக்குப் பறந்து போனாரே ராஜாஜி, அவர் எதற்காகப் போனார்? மனித சமுதாயத்தை இந்தப் பயங்கரமான குண்டிலிருந்து எப்படியடா காப்பாற்றுவது என்று வாதாடுவதற் காகத்தானே போனார். அந்தத் தள்ளாத வயதிலே அவருடைய மருத்துவ நண்பர்கள் எல்லாம் இந்தப் பயணத்தை மேற்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். ராஜாஜி என்ன செய்தார்? தம்மு டைய டாக்டரையும் உடன் அழைத்துச் சென்றுவிட்டார். அவருக்கு அத்தனை துயரம். இந்த மனித சமுதாயம் வீணாய் ஒரு குண்டுக்கு இரையாகிறதே. அறிவு வந்து இந்த மனித சமுதாயத்தை அழிக்கப் போகிறதே என்று கவலைப்பட்டார். இதைத்தான் பாடினார்கள் நாலடியாரிலே.

அறிவு எப்போது உடம்பிற்குள் போகும்? அறிவு விசால மானது. நுண்ணியது; ஆழ்ந்தது; கூர்மையானது. எல்லாம் சொன் னோம். இந்தக் கூர்மை, நுண்மை, அகலம், ஆழம் எல்லாம் உடம்பின் உள் எளிதாகச் செல்லுமா? யாருக்குப் போகும்? இப்போது ஏன்

செல்லவில்லை? மண்டையோடு ஏன் நின்றுவிட்டது? உள்ளத்திற்குள் நுழைந்து கருணையைத் தொடவில்லையே! மனித அபிமானத்தை வளர்கக வில்லையே? இந்த உடம்பிற்குள், உள்ளத்திற்குள் போயிருந்தால் மனிதனும் சீர்திருந்தியிருப்பானே! மனித சமுதாயம் சீர்திருந்தியிருக்குமே! சீர்திருந்தவில்லையே! என்ன காரணம்?

" பாலாற் கழீஇப்
பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம்
இருந்தைக்கு இருந்தன்று"

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழ். அதனால் கொஞ்சம் கடினமான சொற்கள், வழக்கு ஒழிந்த சொற்கள் எல்லாம் இருக்கும். உயர்ந்த பாட்டு.

அடுப்புக்கரிக்கு 'இருந்தை' என்பது பழைய பெயர். அடுப்புக் கரியைப் பாலால் கழுவுகிறோம்; பல தடவை கழுவுகிறோம்; ஒரு நூறுதடவை அதற்குப் பால் அபிஷேகம் பண்ணுகிறோம். எதற்கு? அடுப்புக்கரித் துண்டிற்கு!

பலநாள் உணக்கினும்—பலநாட்கள் காய வைத்தாலும், பழைய படியும் பாலால் கழுவுதல், பழையபடியும் உணர்த்துதல், மீண்டும் பாலால் கழுவுதல் என்று இவ்வாறு பலமுறை செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். பலன் இராது.

'வாலிதாம் பக்கம்': வால் என்றால், பழைய தமிழில் வெள்ளை என்பது பொருள். 'வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று.' நீ எத்தனை தடவை அதைப் பாலில் கழுவிக் காயவைத்துப் பின்னர், அபிஷேகம் பண்ணினாலும் அடுப்புக்கரி வெள்ளையாவதில்லை. வெள்ளைநிறத்தின் பக்கத்தில்கூட வருவதில்லை. வெள்ளையாகாது என்று சொல்லவில்லை; அதற்குப் பக்கத்தில்கூட வராது என்று பேச்சுத் தமிழிலே சொல்கின்றது போன்று நாடகப்பாங்கிலே இருக்கிறது. பாருங்கள், தமிழ் எப்படி வருகிறது என்று! அந்த வார்த்தை பழைய வார்த்தையே ஒழிய, சொல்லானது பேசுகின்ற பாணியில் இருக்கின்றது. 'வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று,' அது வெள்ளையினுடைய பக்கம்கூடப் போகாது. அதுபோல, 'கோலால் கடாஅய்'—ஒருவனுக்கு அறிவை உள்ளே திணிக்கவேண்டும் என்பதற்காக இந்த knowledge இருக்கிறதே, தாவரவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல் எல்லாம் ஒரு காகிதத்தில் சுருட்டிப் பொட்டலமாகப் போட்டு அவன் காதிற்குள் போடுவது. எதை? அறிவை! காதினுள் போட்டு—கோலால் கடாஅய் உள்ளே திணிக்கிறது—குறினும்—உள்ளே தள்ளினாலும். கோலால் கடாஅய் என்ற தொடரைப் பாருங்கள்: "Poetry Communicates before it is understood" கவிதையினுடைய சிறப்பு என்னவென்றால் சொல் புரிவதற்கு முன்னாலேயே கவிதை புரிந்துவிடும். கடாய் என்று சொன்னாலே குத்துதல் என்னும் ஒலிப்பொருள் வந்துவிடுகிறது பாருங்கள். அதுதான் செய்யுளின் சிறப்பு. இரண்டாயிரம் வருடத்திற்கு முந்திய தமிழ் இந்தப் போடு 'கோலால் கடாஅய்க் குறினும் புகல்ஒல்லா'—உள்ளே போடுகிறது.

குத்தினாலும் உள்ளே புகாது. ஏன்? 'நோலா உடம்பிற்கு அறிவு'. நோன்பு நோற்காத உடம்பு இருக்கிறதே, அந்த உடம்பிற்குள் அறிவு புகாது. அந்த உடம்பு நோன்பு நோற்ற உடம்பாக இருக்கவேண்டும். அப்போதுதான் இந்த அறிவு உள்ளே புகும். இல்லையானால் மண்டைக்குள்ளேதான் நிற்கும்.

பாலால் கழீஇப்
　　பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம்
　　இருந்தைக்கு இருந்தன்று;
கோலால் கடாஅய்க்
　　குறினும் புகல்ஒல்லா
நோலா உடம்பிற்கு
　　அறிவு! (நாலடியார்)

மனிதனைக் கொலை செய்வது எப்படி, கொள்ளையடிப்பது எப்படி என்பதற்குத்தான் நெஞ்சுக்குள் புகாத அறிவு பயன்படும். அந்த அறிவு மூளையோடு நின்றுவிட்டது. அதற்கு மேலே நெஞ்சத்தைத் தொடவில்லை. ஆன்மாவைத் தொடவில்லை. ஆகையினாலே விஞ்ஞான அறிவு வேண்டாம் என்று சொல்லவில்லை நான்! நிச்சயம் வேண்டும். முன்னேற வேண்டும் நாம். இதெல்லாம் வேண்டும். அந்த அறிவு எப்படி வேண்டுமென்றால், அந்த அறிவு எந்த உடம்பிற்குள் போகவேண்டும் என்றால், நோற்ற உடம்பிற்குள் போக வேண்டும், அப்போதுதான் மனித சமுதாயத்திற்காக அந்த அறிவு பயன்படும்.

உலகத்தில் அறிவுக்குக் குறைச்சல் இல்லை. என்ன கவலை என்றால் எல்லா உடம்பும் நோலா உடம்பாக இருக்கிறது. அதனால் அறிவு காதிலேயே தங்கிப்போய்விட்டது. மண்டையில் வேலை செய்கிறது. நெஞ்சத்தைத் தொடமாட்டேன் என்கிறது. மனித சமுதாயத்தினுடைய சீலம், ஒழுக்கம், மனித சமுதாயத்தினுடைய முன்னேற்றம், நன்மை, இவை பற்றியே கவனிக்கமாட்டேன் என்கிறார்கள். நோலா உடம்பாக மனித சமுதாயம் இருந்துவிட்டது. அதனால் அறிவு அறத்திலிருந்து துண்டித்துக்கொண்டு நிற்கிறது. இதயப் பண்பாட்டிலிருந்து பிரிந்து தன்னந்தனியாக அறிவு இயங்குகிறது. இன்னும் சொல்லப்போனால் மனித மூளையும், மனித இதயமும் போரிடுகின்றன. இரண்டுக்கும் உடன்படிக்கை ஏற்படவில்லை.

நோன்பு என்றால் என்ன? நாலடியாருக்குப் பல ஆங்கிலேயர்கள் எல்லாம் மொழிபெயர்ப்புச் செய்திருக்கிறார்கள். பல நாட்களுக்கு முன்னாலேயே செய்திருக்கிறார்கள். ஒருவர் discipline என்றார். ஒருவர் invocation என்றார். ஒருவர் a way of life என்றார். இவை எல்லாம் சேர்ந்த மொத்தம்தான் நோன்பு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பாரதீய வித்யா பவனத்தினர் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தில் ஒரு வாக்கியம் வருகிறது; [illegible] சொல்லுகிறார்:

**"During the last forty years science has advanced in many spheres, still the greatest puzzle for the human mind is the mind itself."**

ஸரோகின் பெரிய ரஷ்ய ஆசிரியர். அவருடைய நூல் எல்லாரும் படிக்க வேண்டிய நூல்.

இந்த இடத்தில்தான் உணர்வு என்பது வருகிறது. இதெல்லாம் அறிவினுடைய சமாசாரம். இலக்கியத்திற்கு உணர்வு வேண்டும். வெறும் அறிவானது வார்த்தைகளை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கும். பொழிப்புரை, பதவுரை, இப்படியே போய்க் கொண்டிருக்கும். எந்த இலக்கியமாகட்டும், அறிவோடு அணுகுகிற முறை ஒன்று, உணர்வோடு அணுகுகிற முறை ஒன்று. 'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணர்வது' என்பது தொல்காப்பியர் சூத்திரம். எல்லாம் மிகவும் நுட்பமான விஷயங்கள். வெறும் ஏட்டுப் படிப்பு அறிவினால் மட்டும் பார்த்திட முடியாது. யாரால் அதைக் காணமுடியும் என்றால் 'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வு' வேண்டும். அவர்களுக்குத்தான் புரியும் என்று சூத்திரத்தை வகுத்துவிட்டார் தொல்காப்பியர். இலக்கியத்திற்கே இந்த உணர்வு வேண்டியதிருக்கின்றது. அப்படியானால் சமுதாய வாழ்க்கையிலே, மனித உறவிலே, தெய்வத்தோடு நாம் கொள்ளவேண்டிய தொடர்பிலே, இது எவ்வளவு முக்கியம் பார்த்தீர்களா! அந்த உணர்வுதான் அடிப்படை! அந்த உணர்வு இல்லாமலே அறிவு வளர்ந்து கொண்டிருப்பதனால் என்ன ஆகிவிட்டது?

பெரிய விந்தைகளைச் செய்கிறோம் நாம். ஆனால் எந்தக் கண்டுபிடிப்புக்கு முன்னரும் நமக்குப் பெரிய தொல்லையாக இருப்பது இந்த் அறிவுதான். இந்தப் பகுத்தறிவுதான். இந்தப் பகுத்தறிவு intuition-ஐக் கெடுத்துவிடக் கூடாது. Intuition என்று நம் உள் மனத்திற்குள்ளே உள் உணர்வு ஒன்று இருக்கிறது. நம்முடைய பாரத் தேசத்தினுடைய சிறப்பே இந்த உள்ளுணர்வுதான். நம்முடைய இலக்கியங்களாகட்டும், கலைகளாகட்டும், நம்முடைய சமுதாய இயலினுடைய பலவிதமான அறிவுச் செல்வங்கள் எல்லாவற்றிற்குமே, மூலகாரணமாக இருப்பது உள்ளுணர்வுதான். ஓர் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே அவன் உள்ளுணர்வினால் முதலில் கண்டுபிடித்துவிடுகிறான். ஞானிகளெல்லாம் இந்த உள்ளுணர்வினாலேதான் பல இரகசியங்களையெல்லாம் உணர்ந்து கண்டுபிடித்தனர். இந்த உள்ளுணர்வு புதிதாக ஒன்றை ஆய்வதற்கு வரும்போது அறிவு வந்து தடைசெய்கிறது. ஒரு சிறிய நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறேன்.

1875இல் உலகத்திலேயே மிக முன்னேற்றம் அடைந்துள்ள அமெரிக்க நாட்டிலே, அலெக்சாண்டர் கிரகாம் பெல் என்பவருடைய அனுபவத்தைச் சொல்கிறேன். டெலிபோன் கண்டுபிடித்தவர் அவர். 1875 மார்ச் 9ஆம் தேதிதான் இந்தக் கருவியைக் கண்டுபிடித்தார் கீழே இருந்தவாறு ஒரு கம்பியின் முனையை அவர் வைத்துக் கொண்டார்; அவருடைய நண்பர் வாட்சன் என்பவரை மேல்மாடியில்

மறுமுனையை வைத்துக்கொண்டு உட்காரச் செய்தார். இந்தக் கம்பி மூலமாக முதன்முதலில் பேசிப் பார்த்தார். அவருக்கு முதலிலே உள் உணர்விலே இப்படி ஒன்றைச் செய்யலாமே என்று பட்டது. இப்படித் தோன்றியதே அதுதான் Intuition! இப்படி அந்த உள் உணர்விற்கு ஒரு வடிவம் கொடுத்தார். அவர் முதன்முதலில் பேசிய, இந்த உலகத்திலேயே முதன்முதலில் தொலைபேசியில் பேசிய வாக்கியம் என்ன தெரியுமா?

"Mr. Watson, come here please, I want you"

என்று சொன்னார். சொல்லிப்பார்த்தார். இது மேல்மாடியிலுள்ள தன் நண்பனுக்குக் கேட்டதா, அவர் வருகிறாரா என்று பார்க்க வேண்டும் என்பதற்காக! உடனே நண்பர் கீழே இறங்கி வந்து விட்டார்.

இதன் பொருள் என்ன? தாம் பேசியது அவருக்குக் கேட்டாகி விட்டது என்று பொருள். உடனே அவர் இதை அமெரிக்க அரசாங்கத்திடம் தெரிவித்தார். "நான் தொலைபேசி என்ற ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறேன். கம்பி மூலமாகப் பேசலாம். ஒரு வீட்டிலுள்ளவன் இன்னொரு வீட்டுக்காரனுடன் பேசலாம். இதற்கு அனுமதி அளிக்க வேண்டும். நான் Patent செய்ய விரும்புகிறேன்" என்று கேட்டார்.

கிரகாம் பெல் பிறந்தது எடின்பரோவிலே! அங்கே உள்ள சூழ்நிலை என்னவென்றால், எங்கு பார்த்தாலும் அறிவாளிகள் மயம். எனவே, இந்த அறிவாளிகளால் இப்படிப்பட்ட உள்ளுணர்வு உடையவர்களுக்குச் சங்கடங்களே ஏற்படும். அவருக்கு எடின்பரோவில் வசிக்க முடியவில்லை. அமெரிக்காவிற்கே சென்றுவிட்டார். எல்லாவற்றையும் துறந்துவிட்டு வெகு தொலைவு சென்ற பின்னராவது, அந்த அமெரிக்காவிலாவது ஆதரவு கிடைக்குமா என்று பார்த்தார். அங்கேயும் இந்த அறிவு போராட வந்துவிட்டது. அலெக்சான்டர் கிரகாம் பெல்லை என்ன செய்தார்கள் தெரியுமா? தொலைபேசி என்ற ஒரு செயற்கரிய கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்து, அதைப் பேடன்ட் செய்வதற்கு அரசாங்கத்திடம் நிதியுதவி கோரிய விஞ்ஞானியை என்ன செய்தார்கள் தெரியுமா? அமெரிக்கப் பத்திரிகை ஒன்று தலையங்கம் எழுதியது. இந்தத் தலையங்கத்திலிருந்து ஒருசில வாக்கியங்களை இங்கே தருகிறேன்:

"Yesterday we have arrested a fellow"

என்ன மரியாதை பாருங்கள். கைது செய்தது எதற்குத் தெரியுமா? அவன் செய்த குற்றம் என்ன?

"attempting to obtain money under false pretences"

ஏமாற்றுக் காரியம் செய்து, பணத்தை மோசடி செய்து, பறிப்பதற்கு முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இவர் சிறையிலடைக்கப் பட்டார். அதற்கு மேலும் எழுதுகிறது தலையங்கம். அதாவது இந்தப் பகுத்தறிவானது மனிதனை என்ன பாடு படுத்துகிறது என்பதைப் பார்க்க வேண்டும். "இவன் ஒரு ஏமாற்றுக்காரன் என்பதில்

சந்தேகமே கிடையாது'' இப்படிச் சொல்வது எது? மண்டையல்லவா சொல்கிறது! பகுத்தறிவுக்கு ஈடு இணை உண்டா? எப்படிப்பட்ட அறிவு! என்ன சொல்லிற்று, பாருங்கள்:

> "Without doubt the man is a fraud and an unscrupulous trickster and must be taught a lesson that the American public is too smart and intelligent to be the victim of this and similar schemes. Even if this insane idea worked, it would have no practical value other than for circus shows"

"கம்பி மூலமாகப் பேசுவது ஒரு பைத்தியக்கார யோசனை. இந்த யோசனை வேலை செய்தாலுங்கூட, உண்மையாயிருந்தாலும்கூட, இதனால் இந்த உலகத்திற்கு எந்தவிதமான பயனும் கிடையாது. என்ன செய்யலாம்-என்றால், சர்க்கஸ் வித்தையிலே ஓர் அம்சமாக, மக்களின் வினோத அனுபவத்திற்காகக் காட்டலாம்.அவ்வளவுதான்!" என்று 1875ஆம் ஆண்டிலே அறிவுமிகுந்த, பகுத்தறிவு மிகுந்த, விஞ்ஞான அறிவு மிகுந்த அமெரிக்க தேசமும், அமெரிக்கப் பத்திரிகைகளும் தலையங்கம் எழுதி, அலெக்சாண்டர் கிரகாம் பெல் என்ற மகா ஞானியைக் கொடுமைப்படுத்தினார்கள்; விடவில்லை அவர். உலக வரலாற்றில் எத்தனையோ பல ஞானிகள் சிறைவாழ்க்கையும், சித்திரவதைகளும் அனுபவித்திருப்பதை நாம் படித்திருக்கிறோம். உண்மையில் சிறை வாழ்க்கையே ஒரு தவம் என்று அந்த ஞானிகள் கூறியுள்ளார்கள். மரண தண்டனையைக்கூடப் புன்முறுவலோடு வரவேற்றவர்கள் அவர்கள்.

1876ஆம் ஆண்டிலே தொந்தரவு தாங்கமுடியாமல் கிரகாம் பெல்லுக்கு அனுமதி கொடுத்தனர். இப்போது நாம் கம்பியினால் மட்டும் பேசவில்லை. கம்பியில்லாமலே பேசுகிறோம். கம்பியினால் பேசுவதையே அந்தக் காலத்தில் அறிவு ஒப்புக்கொள்ள வில்லை. இந்த அறிவு பண்ணுகிற அட்டகாசங்களையெல்லாம் சித்தர்கள் அறிவினுடைய கொடுமை என்று சொல்வார்கள். 'அறிவு அறிவு என்று அரற்றும் உலகம்' என்பது திருமூலர் வாக்கு.

இன்று அதே அமெரிக்க அரசாங்கம், 1875லே கிரகாம் பெல்லைக் கொடுமை செய்த அரசாங்கம், அதனுடைய அஞ்சல் தந்தித் துறையின் வாயிலாக ஆண்டுதோறும்

> "The system of control and communication in animals and plants"

என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு பிரிவை அமைத்து, அதற்கு வேண்டிய பணத்தை அஞ்சல்துறை வழியே அரசாங்கம் செலவு செய்கிறது. தொலைபேசி மூலம் பேசுகின்ற துறையானது, தொலைபேசியே இல்லாமல் உள்ளம் உள்ளத்தோடு உரையாடுகிற நுட்பத்தை ஆராய்வதற்காக ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான பணம் செலவழித்து அமெரிக்காவிலே ஒரு மையத்தையே நிறுவியிருக்கிறது! விலங்குகள் தங்களுக்குள் எப்படி உரையாடிக் கொள்கின்றன, தாவரங்கள் தங்களுக்குள் எப்படி உரையாடிக் கொள்

கின்றன என்பதை ஆராய்ச்சி செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது அமெரிக்கா. இந்த விஞ்ஞானத்திற்குப் பெயர் தான் 'சைபர்நெடிக்ஸ் (cybernetics).

இவையெல்லாவற்றையும்விட இப்போது ரஷ்யா இன்னும் ஒருபடி அதிகமாக இந்த விஞ்ஞானத்திலே முன்னேறிவிட்டது. சைபர்நெடிக் சினிமா எடுக்கிறார்கள்.

ஒரு தாவரம் தன்னுடைய எஜமானன் யார் என்று அடையாளம் கண்டு கொள்கிறதாம். தனக்குத் தண்ணீர் ஊற்றுகிறவன் யார் என்பதைத் தாவரம், செடி, அடையாளம் கண்டுபிடித்துக் கொள்கிறதாம், அதன் பக்கத்திற் சென்ற உடனேயே!

இதற்கு மேலும் ஒன்று சொல்கிறார்கள்; இதை நாமெல்லாம் ஒத்துக்கொள்ள மாட்டோம். வெளிநாடுகளில் 'இப்போது இன்னொரு அறிவியற் சோதனை நடந்திருக்கிறது. இந்தப் புதிய சோதனை என்னவென்றால்: ஒரு கிறிஸ்து கோவிலிலே. ஒரு பூ, மஞ்சள் நிறமாக இருக்கும். இந்தக் கோவிலுக்கு உள்ளே மஞ்சள் நிறப் பூவையுடைய அதேபோன்ற பல செடிகளைப் பயிரிட்டு இருந்தார்கள். அந்த ஒரு செடியிலுள்ள பூக்களெல்லாம் மற்றச் செடியினுடைய பூக்களைவிடப் பெரியனவாக இருந்தன. அளவில் பெரியது. அந்தப் பாதிரியார் பார்த்துக் கொண்டே வரும்போது இது அவரைக் கவர்ந்தது. ஒரே மாதிரி விதைகளைத்தான் பயிரிட்டோம். ஒரே மாதிரி உரம்தான் போட்டோம். ஆனால் இந்த ஒரு செடியின் மலர்கள் மட்டும் பெரிதாயிருக்கக் காரணம் என்ன என்று அவருடைய மனம் சிந்தித்துக்கொண்டே இருந்தது.

ஒருநாள் அந்தச் செடியின் பக்கத்திலே சென்று உற்றுக் கவனித்தார். சிறுவர்கள் ஞானஸ்நானம் Baptism செய்வதற்காகப் புனிதத் தண்ணீர் விடுகின்றார்கள். அது ஒரு சிறிய ஓடை வழியே பக்கத்தில் செல்கிறது. அந்தத் தண்ணீர் இந்தச் செடிக்கு மட்டும் பாய்வதைக் கண்டார். விஞ்ஞானிகளைக் கூப்பிட்டு இதை ஆராய்ச்சி செய்யும்படி கேட்டுக்கொண்டார். இந்தத் தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்குத்தான் 'சைபர்நெடிக்ஸ்' என்று பெயர்.

நமது தொல்காப்பியத்திலேயே தாவரங்களுக்கு உணர்வு இருப்பதைச் சொல்லியிருக்கிறார்கள். நாமெல்லாம் சாதாரண ஆட்கள் இல்லை. நமது ஞானிகளும் எல்லா இடத்திற்கும் சென்றிருக்கின்றனர். நமது ஞானிகள் சென்ற இடத்திற்கு வெளிநாட்டார்கள் இன்னும் வரவில்லை. வந்துகொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன்.

சைபர்நெடிக்ஸ் அளப்பதற்கு என்னென்னவோ கருவிகள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு துடிப்பையும் அளந்துவிடுகிறார்கள். அது கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய துடிப்பாக இருக்கும்.

இந்தத் துடிப்புகளையெல்லாம் நவீனக் கருவிகள் கொண்டு அந்த ஏசு கோவிலிலே விஞ்ஞானிகள் அளந்து ஆராய்ந்தார்கள். அந்த ஆராய்ச்சியின் பயனாக அவர்கள் கண்டுபிடித்த உண்மை என்ன வெனில், ஞானமுழக்கின் தண்ணீர் ஒவ்வொரு முறை அந்த மஞ்சள் நிறப் பூஞ்செடிக்குப் பாய்கின்ற போதும், ஒருவகையான மெய் சிலிர்ப்பும் பூரிப்பும் அந்தச் செடிக்கு ஏற்பட்டன; அதனால் நாம் அழைக்கின்ற 'பரவசம்', 'புளகாங்கிதம்' அல்லது 'ஞானப் பேருவகை' என்ற அனுபவம் அந்தச் செடிக்கு ஏற்பட்டு, அதன் விளைவாக அந்த ஒரு செடியின் மலர்கள் மட்டும் அளவிலே பெரிதாகிவிட்டன.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் கம்யூனிச நாடுகளில் ஒரு புதிய பேருண்மை புலனாகத் தொடங்கியுள்ளது. அதுதான் செடிகளுக்கும் மரங்களுக்கும் உரமானது எவ்வளவு வலிமை தருகிறதோ, அவ்வளவு வலிமையை மெய்சிலிர்ப்பு என்ற உவகை அனுபவம் தருகிறது என்ப தாகும். இந்த அனுபவத்தின் விரிவையெல்லாம் ஆராய்வதற்காகவே 'சைபர்நெடிக்ஸ்' என்ற புதிய அறிவியல் துறையைப் பல்கேரிய நாட்டிலும், யூகோஸ்லாவியாவிலும் பல்கலைக்கழகங்களிலே அமைத்து, ஏராளமான பொருளை இந்த ஆராய்ச்சிக்காக அவர்கள் செலவு செய்துவருகிறார்கள்.

இந்த ஆய்வுகளை நாம் படிக்கும்போது தொல்காப்பிய மரபிய லிலே ஓரறிவு, ஈரறிவு முதலாக ஆறறிவுவரை இலக்கணம் கூறி, அந்த இலக்கணத்திற்கு நமது தமிழ் மொழியிலுள்ள வழக்காற்றிலும் இடம் தந்த பண்பையும், இலக்கிய மரபையும், நாம் கண்டு பேருவகை கொள் கிறோம்.

மொழி இலக்கணத்திலேயே இத்தனை வகை தொகைகள் கண்டுள்ள நம்முடைய தமிழ்நாட்டில், இந்தத் துறைக்கென்றே அமைந்த சித்தர் இலக்கியத்தில் மேலும் ஆழமான பல நுட்பங்களைக் கண்டு சொல்லியிருப்பதில் வியப்பு என்ன உண்டு?

இந்த சைபர்நெடிக்ஸ் என்ற ஆய்வு தவிர 'கிரீலியன் பொடாகிரபி' என்ற ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். கண்ணுக்குத் தெரியாத உள்ளத்தினுடைய சிந்தனைகளையெல்லாம் கண்ணுக்குத் தெரிகின்ற கோடுகளாகக் காட்டுகின்றது அந்தக் கிரீலியன் பொடாகிரபி. இதையெல்லாம் சேர்த்து இப்போது லெனின்கிராட் பல்கலைக்கழகத்திலே ஒரு தனிப் பிரிவை வைத்திருக்கிறார்கள். அந்தப் பிரிவிற்குப் பெயர் : The Department of Psism.

'psi' என்பது கிரேக்க மொழியினுடைய இருபத்து மூன்றாவது எழுத்து. அந்த psiக்கு என்ன பொருளென்றால் உணர்வு களைப்பற்றிப் பேசுகின்ற ஞானம் என்பது. இந்தப் புதிய துறையை 1967இல் தொடங்கினார்கள். அதற்கு இருபது மில்லியன் ரூபிள் அப்போதே அரசாங்கம் வழங்கியது. இப்போது ஆண்டுதோறும் பத்து மில்லியன் ரூபிள் மேலும் அதிகப்படியாக வழங்கி வருகிறது.

ஒரு போர்வீரன் தன்னுடைய கூடாரத்தில் முகம் வழித்துக் கொண்டிருந்தான். பின்னர் அந்தப் பிளேடை அப்படியே வைத்து விட்டான். மறுபடி மறுநாள் அந்தப் பிளேடை எடுத்து வழிக்கலாம் என்றால் அது சரியாக வேலை செய்யவில்லை. அந்தப் பிளேடின்மேல் சந்திரனுடைய கதிர்களைத் தவிர வேறொன்றும் படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை. இதனை ஆராயத் தொடங்கினார்கள்.

வானத்தில் உள்ள கோள்களில் கண்ணுக்குத் தெரிகிற கதிர்கள், தெரியாத கதிர்கள் என்ற இரண்டு உண்டு. இந்த இரண்டி னாலேயும் நிலத்திலுள்ள பொருள்களெல்லாம் பாதிக்கப்படுகின்றன என்று கண்டார்கள். இந்தக் கோள்களினுடைய கதிர்கள் எல்லாம் மனிதனுடைய உடம்பையும் பாதிக்கின்றன. இதற்குத்தான் Cosmo Biology என்று பெயர். வான இயலோடு ஒட்டிய அறிவியல் இது.

இதற்குமேல் எத்தனையோ ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக் கின்றன. Catelepsy என்ற ஒரு துறை அங்கு வளர்ந்துவருகிறது.

ரஷ்ய நாட்டிலிருந்து இந்த அறிவியலை ஆராய்வதற்கு டாக்டர் மெஸ்ஸிங் என்பவர் இந்தியா வந்தார். அதாவது மனிதர்களுடைய மரணம் இரண்டு வகைகளில் ஏற்படுகிறது. ஒன்று உண்மையான மரணம். மற்றொன்றுக்கு suspended animation என்று இக்கால விஞ்ஞான மொழியிலே பெயர். மரணத்திற்கும் இதற்கும் வேறுபாடு கண்டுபிடிப்பதுதான் நுட்பமான அறிவுத்திறன் ஆகிவிட்டது. யோகிகள் suspended animation - ஐ self induced animation ஆகச் செய்து தாங்களே தங்கள் உடம்பை அசைவற்ற நிலையிலும், மூச்சு இழைவது புலனாகாத வகையிலும், யோகப் பயிற்சியினால் மாற்றி உயிரற்ற உடலைப்போல் 'சும்மா' கிடப்பார்கள். அந்த நேரத்திற்கு பத்துப் பதினைந்து நாட்களுக்கு உயிர் உடம்பிலே இருக்கிறதே ஒழிய உடம்பு சாகாமல் செத்துத்தான் போய்விட்டது; ஏன் என்றால் மண்ணிற்குள் அல்லவா புதைந்துகிடக்கிறது. டாக்டர் மெஸ்ஸிங் என்ற ரஷ்ய விஞ்ஞானி இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டார். இப்போது அவர் மூன்று நாட்கள் தாமே அவ்வாறு செய்யமுடியும் என்று கண்டார். அவருடைய நூலிலே எழுதியிருக்கிறார். "நான் இந்தியா சென்றபோது ஹிமாலயத்தில் ஒரு யோகியைச் சந்தித்து suspended animation-னுடைய முறையை அவரிடமிருந்து படித்தேன். என்னு டைய குருவானவர் மூன்று மாதம்வரை மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கக் கூடியவர். ஆனால் என்னால் மூன்று நாட்கள்தான் இருக்க முடிகிறது. இன்னும் முயன்று ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய குருவைப்போல இந்த யோகப் பயிற்சியை மேலும் கற்று யோகசமாதி என்னும் அந்த நிலையை மேலும் நீடிப்பதற்கு முயல் கிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

இதற்கெல்லாம் மேல் ஓர் அறிவியல்துறை வந்துள்ளது. அதற்கு suggestopedia என்று பெயர். ரஷ்ய நாட்டிலே suggestopedia என்ற முறையிலே ஜெர்மானிய மொழியை ஒரு வகுப்பில் நான்கு வாரத் திற்குள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டார்கள். இது வரலாறு. இது குறித்து ரஷ்ய நூல்கள் வெளிவந்திருக்கின்றன. நான்கு வாரத்தில் ஜெர்மானிய மொழியைக் கற்றுக்கொண்டுவிட்ட

மாணவர்கள் தேர்வு எழுதினார்கள். அந்தத் தேர்விலே எல்லாரும் 100க்கு 90 மதிபெண்களுக்குமேல் வாங்கினார்கள். அவர்களுக்குப் புரியாத புதிய மொழியை நன்றாக நான்கு வாரத்திற்குள் suggestopedia என்ற நவீன அறிவியல் முறையில் உணர்ந்தனர்.

இத்தகைய பயிற்சிமுறை பற்றிச் சித்தர் நூல்கள் விரிவாகப் பேசியுள்ளன. வடமொழியிலும் தமிழிலும் இத்தகைய உபதேச முறை பற்றிய பாடல்கள் பல உள்ளன. நம்முடைய தட்சிணாமூர்த்தி என்ற இறை உருவமே இந்தக் கல்வி முறையைத்தான் விளக்குகிறது. 'சின்முத்திரை' என்று அழைக்கப்பெறுகிற வடிவத்தில் வலக்கையைக் காட்டி நிற்கிறது இந்த உருவம். கையின் குறியினால் வாய்ச்சொல்லே இல்லாத மோனப் பயிற்சிமுறை என்பதுவே இதன் பொருள். இதைத்தான் பரஞ்சோதி முனிவர்,

> கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
> ஆறங்கம் முதற்கற்ற கேள்வி
> வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
> பூரணமாய் மறைக்கப்பாலாய்
> எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
> இருந்தபடி இருந்துகாட்டிச்
> சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
> நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்

என்று பாடுகிறார்.

சொல்லாமல் சொல்லுவது என்ற கல்விமுறை இதுவேயாகும்.

வடமொழியில் இதை,

> குரோஸ்து மௌனம் வியாக்யானம்
> சிஷ்யாஸ்து சின்ன ஸம்சயஹ

என்று பாடியிருக்கிறார்கள்.

இத்தகைய நல்அறிவை நல்ல முறையில் வளர்க்கவேண்டும். அறிவும் இதயமும் சேர்ந்து வளரவேண்டும். அதுவே ஆன்ம வளர்ச்சியை நல்கும்.

Scientific outlook கட்டாயம் வேண்டும். ஆனால் அது இதயப் பண்பாட்டுடன் இணைந்திருக்கவேண்டும். இந்த இணைப்புத்தான் இந்திய ஞானம் என்பது.

The rediscovery of India என்று கூறுகிறார்களே அதுபோல இந்தியாவை நாம் பழையபடி கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. மனம் உணர்வினுள் செல்லவேண்டும்.

> பூட்டைத் திறப்பதும்
> கையாலே—மனப்
> பூட்டைத் திறப்பதும்
> மெய்யாலே

என்பதுபோல், அந்தப் பூட்டின் சாவியைக் கொண்டு நாம் திறந்தோமானால் நம்முடைய உண்மையான அறிவு வளரும்.

பேரறிவு என்று அழைக்கிற அறிவு இதுதான். ஆழ்ந்து யோசித்தால் நம்முடைய பகுத்தறிவுக்கு அடிப்படையே இதுதான். கண்ணால் எளிதில் காணக்கூடியதை நம்புவதற்குப் பெரிய பகுத்தறிவு தேவையில்லை. கண்ணால் காணமுடியாததை உய்த்து அறிவதற்குத்தான் பகுத்தறிவு வேண்டும்! கண்டதைக் கொண்டு காணாததை உய்த்தறிவதும், உணர்வின் வாயிலாக அதைக் கண்டு தெளிவதுந்தான் சித்தர்களுடைய ஞானமாகும். இந்த ஞானத்தை நமக்கு எளிய தமிழிலே வழங்குகிற பாடல்களின் களஞ்சியமே சித்தர் இலக்கியம் என்பது.

இந்த ஞானத்தின் தன்மையைத் திருமூலர் நன்கு விளக்குகிறார்.

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டி டின்அல்லால்
ஆட்டின் கழுத்தில் அதர்கறந் தற்றே

"குறிப்பாகிய அகர எழுத்தையும், காட்டிய ஐம்பதெழுத்தையும் கடந்திருக்கையினாலே 'காட்டும் குறியும் கடந்த அக்காரணம்' என்னும் சத்தத்துக்கு விபரம். ஆகையினால் ஐம்பத்தோரெழுத்திலும் அறியப்படாமையினாலே 'ஏட்டின் புறத்தில் எழுதிவைத்து என்பயன்' என்னும் சத்தத்துக்கு விபரம்" என்பது கம்பளிச் சித்தரின் விளக்கவுரையாகும்.

உதாரணமும் அடையாளமும் கடந்து அப்பால் நின்ற அக்காரணப் பொருளைச் சுவடியில் (உவமானம் இன்னது, அடையாளம் இப்படிப்பட்டது எனப் பலபடியாக விரித்துப்) பற்பல மொழிகளிலும் எழுதி வைத்ததனால் யாது பயனைத்தரும். ஆன்மாக்களுக்குக் (அவரவர் விரும்பியபடி தனு கரண புவன போகங்களை) கூட்டி முடித்தருளிய சிவபிரானாகிய ஆசாரிய மூர்த்தி (எழுந்தருளிக் காட்சி தந்து உபதேசித்தருளிப் பூரணப் பொருளாகிய தம்முடன்) இரண்டறக் கலந்து இன்பம் நுகரச் செய்தாலன்றி (அவ்வேட்டிலே எழுதிவைத்து இத்தன்மைத்தெனக் கூறின் அது) ஆட்டின் கழுத்திலே தொங்கும் தோலை முலைக்காம்பு என நினைத்து உருவிப் பால் கறக்கச் சென்று எய்க்கும் தன்மையை யொத்ததாம். இதனை,

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லால்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஒருவ னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே

என்னும் திருநாவுக்கரசர் பாடல் நமக்கு நன்கு உணர்த்துகிறது. அவனருளே கண்ணாகக் கொண்டு காண்பது என்றால் எங்ஙனம்? பேரறிவு என்பது அந்த அருட்கண் பார்வையே ஆகும். உலகெங்கும் பரந்து நிற்கின்ற பரம்பொருட் காட்சியிலே நமது பார்வை ஒன்றிவிடு மானால், அப்போது பரம்பொருளின் கண்கொண்டு பரம்பொருளைக் காண்கின்ற ஒருமைப்பாட்டு அனுபவம் நமக்குக் கைகூடுகிறது. அந்த அனுபவத்தை மேலும் விளக்குவதுபோல வருகிறது இன்னொரு திருமந்திரம்:

> உரையற்ற தொன்றை யுரைசெயு மூமர்காள்
> கரையற்ற தொன்றைக் கரைகாண லாமோ
> திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்
> புரையற்று நின்றான் புரிசடை யோனே

உரையாகிய ஐம்பத்தோர் எழுத்திலும் அடங்கி நில்லாத பரம் பொருளே இறைவன் என்பது சித்தர்களின் வாக்காகும். இதை மனத்திற்கொண்டு இந்தப் பாடலை ஆராயவேண்டும்.

எந்த வாக்கினாலும், எந்த விரிவுரையினாலும் பிற பொருளைப் போல் அறியமுடியாத பொருளே இறைவனாகிய பரம்பொருள். அது உரையற்றதான ஒன்று; ஒன்றே ஒன்று! மற்ற எல்லாவற்றிற்கும் உரை சொல்லலாம். ஆனால் இந்த ஒன்று மட்டும் உரையற்றதாகும், ஒப்பற்ற தலைவனாக நிற்கும் தலைவனை நாம் விரிவுபடுத்திப் பேசு கிறோம். அதாவது உரை செய்கிறோம். அந்தப் பொருள் எப்படிப் பட்டது? உரை செய்ய முடியாது. உரை செய்யப் புகுந்த நாம் எப்படிப்பட்டவர்கள்? ஊமைகள். உரை உள்ளதற்கே ஊமையால் உரைசெய்ய இயலாது. அப்படி இருக்க, உரை கடந்த ஒன்றை எந்தப் பேச்சும் உரைக்க இயலாத ஊமை உரைசெய்யப் புகுவது எத்துணை மடமை!

கரையற்ற பெரும் வெள்ளத்தை நாம் எவ்வாறு கரைகாண முடியும்? அப்படியானால் இறைவனை அனுபவிப்பது எப்படி? சத்திநிபாதம் என்ற அசைவற்ற நிலையிலே தான் கடவுட் பேரின் பத்தைை அனுபவிக்க இயலும். திரையற்ற நீர்போல் அசைவற்று நிற்பதே சிந்தையின் உயர்ந்த தியான நிலையாகும். அந்த நிலையிலே இறைவன் களங்கமற்று வெளிப்பட்டு அருள் செய்வான். அதுவே அனுபவ நிலையும் ஆகும்.

அறியும் முறையில் அறிகின்ற பேரறிவாளருக்கு இறைவன் வெளிப் பட்டு அருள்வான் என்கிறார் திருமூலர்.

அறிவுக்கெல்லாம் அறிவாகிய இந்தப் பேரறிவுநிலை சித்தர்களின் யோகப் பயிற்சியின் மூலம் ஞான வழியிலே சென்று பெறவேண்டிய அனுபவ உணர்வாகும். இதைத்தான் திருநாவுக்கரசரும்,

> உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
> முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

என்று பாடுகிறார்.

இத்தகைய பேரறிவை எப்படிப் பெறுவது என்பதற்குரிய ஞான நெறியையும் இன்னொரு பாடலில் திருமூலர் எடுத்துச் சொல்கிறார்.

அறிவுக்கு அறிவாகிய அறிவை அறிந்துகொள்ளும் முறைமை அறிவுக்குள்ளேயேதான் இருக்கிறது. இதைப் பாடுகிறது திருமந்திரம். அந்தப் பாடலின் உட்பொருளை உணர்ந்து தெளியும் தியானமுறை ஒருபுறம் இருக்க, அறிவைக் கொண்டு செய்யக்கூடிய செயலை முதலில் உணர்த்துகிறார் திருமூலர்.

மனத்தில் இருந்த மதிவாள் உருவி
இனத்தினை நீக்கி இரண்டற வீசி
நினைத்த இடத்தே நிலைபெறு மாகில்
அனைத்துயிர்க் கெல்லாம் அதிபதி யாமே

மனத்திற்குள்ளே உள்ளதாகிய அறிவு என்னும் வாளாயுதத்தை உருவியெடுத்து, இனமாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் விட்டொழித்து, ஆணவம், கன்மம் ஆகிய இரண்டையும் அறவே களைந்து, நினைத்த இடமாகிய தியான நிலையிலே இறையுணர்வு நிலைபெற்றுவிட்டால், உயிர்கள் அனைத்திற்கும் அதிபதியாகிய இறைவனுடைய தன்மை எய்திவிடும் என்கிறது இந்த அழகிய திருமந்திரம்.

அறிவுத் தத்துவத்தின் ஆட்சியினால் எத்தகைய ஞானப் பேரின்ப நிலை வந்தெய்துகிறது என்பதனையே இவ்வாறு சித்திரிக்கிறார் திருமூலர். மனத்திற்கு உள்ளேயே அதற்குரிய கருவி நம்மிடமே அமைந்திருக்கிறது என்பதே இதன் நுட்பமாகும்.

இந்தப் பேரறிவுநிலை தமக்கு எவ்வாறு ஆனந்தம் தந்தது என்பதை இன்னொரு பாடலிலே எடுத்து விளம்புகிறார்.

ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறும் ஈதென்றே
ஏமாப்ப தில்லி இனியோர் இடரில்லை
நாமா முதல்வனும் நாமென லாமே

"இந்தக் காயத்துக்குள்ளே அரும்பொருளாகிய பரம்பொருள் கலந்து நிற்கிறது. ஞான குருவின் அருளினாலே இந்த அகப்பொருளை நான் உணர்ந்தேன். பாசங்களெல்லாம் என்னை விட்டுப் போவதற்குரிய வழியை உணர்ந்தேன். புகும் ஆறு என்கின்ற 'சென்று சேரும் நெறி' உணர்ந்தேன். அகத்தின் அரும்பொருள் எப்படி இந்த உடம்புக்குள் அமைந்து நிற்கின்றது என்னும் நுட்பத்தையும் கண்டறிந்தேன். இனி ஏமாப்பாகிய அவாவினால் வருகிற இன்ப துன்பங்கள் எனக்கில்லை. நாமேயாகிவிட்ட முதல்வனும் நாமே என்று சொல்லக்கூடிய பேரின்ப அனுபவத்தை இவ்வாறு நான் பெற்றேன்" என்கிறார் திருமூலர். இப்படிப் பெறுவதற்குரிய அறிவை அறிவதும், அறிந்துகொள்வதும், அதனைத் துய்ப்பதும் பேரறிவின் சாதனைகள் என்பதே திருமந்திரத்தின் உட்பொருளாகும்.

இந்தப் பேரறிவாகிய அறிவியலை ஓர் உவமை கூறி விளக்குகிற திருமந்திரமும் உண்டு. அது வருமாறு:

உலையொக்கக் கொல்லன் ஊதும் துருத்திபோல்
கலையொக்கப் பாயும் கருத்தறிவா றில்லை
கலையொக்கப் பாயும் கருத்தறி வாளர்க்கு
நிலையொக்கச் சீவன் நிறுத்தலும் ஆமே

"உலையாவது வன்னியின் இருப்பிடம். ஆகையினாலே வன்னி யிருக்கும் உலையொக்கக் கொல்லன் இருந்து, துருத்தியில் வாயுவை வாங்கி முன்னோக்கி நடத்துகிறாற் போலவே, காயப் பையாகிய துருத்தியில் பிராணவாயுவை வாங்கி, இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடத்துகிற கலையாகிய பொருளை அறியாமல் சரநூல் வழியே நடந்து பெரியோர்கள் பேறிழந்தார். ஆகையினாலே 'உலையொக்கக் கொல்லன் ஊதும் துருத்திபோல், கலையொக்கப் பாயும் கருத்தறிவார் இல்லை' என்னும் சத்தத்துக்கு விபரம். காரணகுரு கைகாட்டும்படியே கலையாகிய பூரணத்தில் கர்ப்பூரமும் சோதியும் கலந்தாற் போலவே, ஐக்கியபதம் பெற்றவருக்கு இருவினைப் பிறவி நோய் நீங்கியிருந்த படியே இருந்தார். ஆகை யினாலே, 'கலையொக்கப் பாயும் கருத்தறிவாளர்க்கு நிலையொக்கச் சீவன் நிறுத்தலும் ஆமே' என்பது கைலாய சித்தர் என்று அழைக்கப் பெற்ற பழம்பெரும் ஞானி கூறுகிற விளக்க உரை ஆகும்.

கொல்லனுடைய உலையிலே துருத்தியில் இருப்பதும் விடுவது மாகிய காற்றின் செயல் மாறிமாறி நிகழ்கிறது. இதுபோலவே இடைகலை, பிங்கலை என்னும் சுவாச நிலைகளிலே மாறிமாறி இயங்கு கின்ற காற்றின் போக்குவரவை அறிந்துகொள்கின்ற பேரறிவானது ஞானிகளின் கல்வி முறையிலே மிகவும் முக்கியம் வாய்ந்த பெருங் கலையாகும். இதை அறிந்து யோக நிலையிலே கூடவல்ல பேரறி வாளர்களுக்கு நிலைபேறு என்ற மரணமிலாப் பெருவாழ்வு கிட்டுகிறது என்பது சித்தர் இலக்கியத்தின் அறிவுத் தத்துவமாகும். இந்த மாபெரும் ஞானத்தைக் காஞ்சிப் புராணம் சனற்குமாரப் படலம் போன்ற சில புராணப் பகுதிகளும், சிவஞான சித்தியார் சுபக்கச் சூத்திரமும், விநாயகர் அகவலும், அவ்வையின் குறளும், வேறு சில சித்தர் நூல்களும் விரிவாக விளக்குகின்றன.

இத்தகைய பேரறிவு ஒரு மாணவனுக்கு எங்ஙனம் கிட்டுகிறது என்பதை எல்லாச் சித்தர் நூல்களும் ஒரே குரலில் இயம்புகின்றன. குருபரன் ஞானப் பார்வையினால் மாணவனுக்கு உணர்த்துகிற முதலாவது கல்வியானது, இந்தப் பேரறிவு அத்தனைக்கும் அடிப்படை என்பதே ஞானியர் வாக்காகும்.

கோத்த கோவை குலையக் குருபரன்
சேர்த்த சேவடி சென்னியில் வைத்தொரு
வார்த்தை சொல்லி வழக்கறுத் தாண்டவன்
பார்த்த பார்வை பசுமரத் தாணியே

சித்தர்களுடைய கல்வி முறையிலே ஆக்ஞை அல்லது ஆக்ஞா தீட்சை என்பது முதலாவது ஞான உபதேசமாகும். ஆசான் தனது சேவடியை மாணவனுடைய சென்னியின் மீது வைக்கிறான். அவ்வாறு வைத்தருளி 'இதுவே பொருள்' என்று ஒரு வார்த்தையினால் உணர்த்துகிறான். அந்த முதலாவது கல்வியிலேயே காலனுடைய அதிகாரத்திலிருந்து மாணவன் விடுபடுகிறான் என்பது சித்தர் வாக்கு. அவ்வாறு விடுபட்ட மாணவனுக்கு நோக்கிய இடமெங்கும் பரம்பொருள் புலனாகிறது. குருபரன் பார்த்த பார்வை பசுமரத் தாணி போல் பதிந்துவிடுகிறது என்பது சித்தர்களின் அனுபவ ஞானம்.

குருபரனுடைய ஞானக் கல்வி முறையிலே மூன்று அடிப்படையான பலன்களைச் சித்தர் இலக்கியம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. ஆசானுடைய பாவனையினால் ஆணவ மலமும், உபதேசத்தினால் கன்ம மலமும், பரிசத்தினால் மாயையும் நீங்குகின்றன, என்பது சித்தர் இலக்கியம்.

தீட்சை எனப்படும் இந்தப் பேரறிவுக் கல்வியைப் பற்றி ஞானிகளுக் கெல்லாம் ஞானியாகிய திருமூலர் இன்னொரு அதிகாரத்திலே மேலும் விளக்கமாகப் பேசுகிறார்.

"என் ஞானகுருவாகிய திருநந்திதேவர் எனக்கு உணர்த்திய பேரறிவுப் பொருளானது எத்தகையது? அது மூலாதாரம் தொடங்கி வரிசையாகக் கூறப்படும் ஆறு நிலைகளிலும் உள்ள பொருள் அல்ல. இந்த ஆறு நிலைகளையும் தாண்டிய திருக்கூத்தும் அல்ல. சொல் கடந்த பரஞ்சோதியும் அல்ல. தியானிக்கப் பெறுகிற மந்திர மூர்த்தி களும் அல்ல. வேதாகமங்கள் விளக்குகிற பொருளும் அல்ல. எங்கள் நந்தி சொன்ன பொருள் சூதான இரகசிய உட்பொருளாகும்."

இவ்வாறு திருமூலர் ஞானப் பேரறிவாகிய நுண்கலை ஒரு மாபெரும் இரகசியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். பொருள் என்னவென்றால் ஆசான் வந்து உணர்த்தி உணரவேண்டிய அனுபவத் திருஞானம் என்பது அதுவே ஆகும்.

ஆதாரம் ஆறல்ல அப்பால் நடமல்ல
ஓதா ஒளியல்ல உள்மந் திரமல்ல
வேதா கமத்தில் விளங்கும் பொருளல்ல
சூதான நந்தி சொல்லுப தேசமே

சித்தர்களின் இலக்கியங்களில் முக்கியமான சில அடிப்படை உண்மைகளைப் பற்றி மிகவும் நுட்பமான பல ஆன்மநேயக் கருத்துக் கள் கூறப்பட்டுள்ளன. ஆழ்ந்து சிந்தித்தோமானால் நம்முடைய தமிழ்நாட்டில் வாழ்ந்துவருகிற சித்தர்களின் இருக்கைகளெல்லாம் ஒருவகையான அறிவியல் ஆய்வுக்கூடங்களாகவே விளங்கிவருகின்றன. பொதிகை மலையிலும், இமயத்திலும் மற்றும் மலைச் சாரலிலும் உள்ள குகைகள் எல்லாம் ஆன்ம ஆய்வுக்குரிய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களாகத் (laboratory) திகழ்ந்து வந்துள்ளன.

இந்த ஆராய்ச்சிகள் மூன்று வகைப்படும். முதலாவது உடலைப் பற்றிய ஆராய்ச்சியாகும்.

உடலைப்பற்றிய ஆராய்ச்சி என்றால் உடலுக்குள்ளே இருக்கக் கூடிய பல நுட்பங்களாம். வைத்திய நோக்கிலிருந்து உடம்பை ஆராய்வது ஒரு முறை. விஞ்ஞான நோக்கிலிருந்து உடம்பை ஆராய்வது இன்னொரு முறை. சித்தர்கள் இலக்கியத்திலே இந்த இரண்டுவகையான ஆராய்ச்சிகளும் வகுக்கப்பட்டுள்ளன.

இன்றைய விஞ்ஞானம் முன்னேற முன்னேற 'matter' என்கிற பருப்பொருளுக்கும் 'energy' என்கிற சூக்குமப் பொருளுக்கும் உள்ள இடைவெளி குறைந்துகொண்டே வருகிறது. இன்னும் சொல்லப் போனால் பருப்பொருளே சூக்குமப் பொருளாகவும், சூக்குமப் பொருளே பருப்பொருளாகவும் ஒன்றையொன்று இணைந்தும், ஒன்று மற்றொன்றாக மாறியும், ஒன்று மற்றொன்றுக்கு அடிப்படையாகவும், இயக்கும் ஆற்றலாகவும் விளங்குவதைக் காண்கிறோம். இந்த முறையிலே விஞ்ஞான நோக்கோடு 'energy' என்கிற சூக்கும ஆற்றலை ஆராய்வதற்கும், வைத்திய நோக்கோடு உடல் என்கின்ற பருப் பொருளை ஆராய்வதற்கும் இடையே உள்ள வெளி மிகமிகக் குறைவா கவே இருக்கிறது. அது இயல்பேயாகும் அல்லவா! இந்த நிலையிலே சித்தர்கள் ஆன்ம வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு மாணவர் களுக்குத் தம் அறிவுரைகளை உணர்த்துகின்ற காரணத்தால், அவர் கள் வைத்திய அறிவியலிலும் நன்கு கற்றுத் தேர்ந்து பல பேருண்மை களை நமக்கு எடுத்துச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம். சித்த வைத்தியம் என்ற அறிவியல் பிரிவு இதுவேயாகும்.

சித்தர்களுடைய வைத்தியமுறை என்றால் அதனுடைய அடிப்படை Humoral Pathology' என்று இன்று ஆங்கில மொழியிலே அழைக்கப் படுகிற தட்பவெப்ப உடல்நிலையையே ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்ட சிகிச்சை முறையாகும். இந்த முறை ஒன்றுமட்டுமே இன்றும் மேனாட்டு வைத்திய முறையிலே கையாளப்பட்டு, எந்த நோயாளியையும் முதலிலே 'Temperature' என்ற உடலின் சூட்டு நிலையைச் சோதிக்கிறார்கள் ஆனால் சித்தவைத்தியத்திலே இந்தச் சூட்டுநிலையைக் காண்பதற்கு மட்டுமே முக்கியம் தருவதில்லை. அவர்களுடைய வைத்தியத்தின் அடிப்படை, இந்த உடலின் இயக்கத்தை நடத்திவருகின்ற ஆற்றல்கள் மூன்று என்ற பேருண்மை யாகும். வாதம், பித்தம், சிலேப்பினம் என்று அவை அழைக்கப் பெறுகின்றன.

மேனாட்டு வைத்தியத்தைக் கற்ற நிபுணர்கள் நாடி பார்க்கின்ற பழக்கத்தைக் கையாண்டாலும், அவர்கள் துடிப்பின் எண்ணிக்கையைக் கணக்கிடவே நாடியைப் பார்க்கிறார்கள். துடிப்பின் எண்ணிக்கை, அதன் வேகம், அதன் படபடப்பு அல்லது நலிவு ஆகியவற்றை ஆராய்கிறார்கள் மேனாட்டு வைத்திய முறையிலே. ஆனால் சித்தர் களின் வைத்தியமுறை அப்படி இல்லை.

இந்த உடம்பை இயக்குகின்ற அடிப்படையான நாடிகள் மூன்று என்றும், அந்த மூன்றில் ஒன்று மிகும்போது நோய்நொடிகள் வருகின்றன

என்றும் கண்டார்கள் சித்தர்கள். வாதம் கூடினால் உடலில் ஏற்படு கின்ற நோய் என்ன, பித்தம் கூடினால் வருகிற நோய் எது, சிலேப்பினம் பேசும்போது உடலின் நிலை என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து கண்டறிவதுபற்றிய பல இரகசியச் செய்திகளைத் தங்களுடைய இலக்கியங்களிலே வெளியிட்டிருக்கிறார்கள். உடலி லுள்ள இந்த மூன்று நாடிகளைப் பற்றிய இரகசியத்தைக் கண்டு உணர்ந்ததோடு இந்த உடம்புக்குள்ளே தொண்ணூற்றாறு 'Chemical reactions' என்கிற வேதியியல் வினைகள் நடைபெறுகின்றன என்பதை யும் சித்தர் இலக்கியம் நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த தொண்ணூற் றாறு வேதியியல் வினைகளை தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்றார்கள் சித்தர்கள். இந்த தொண்ணூற்றாறும் மூன்று நிலை ஒளிலே அமைந்துள்ளன. இந்த தொண்ணூற்றாறில் ஒன்று குறைந்தால் கூட உடலின் நலிவு அதிகரித்து இடுக்கண் விளைகிறது. இரண்டு மூன்று என்று இந்தத் தத்துவங்களின் செயல் குறையக் குறைய உடலின் நோய் கூடிவிடுகிறது. ஒரு நோயாளி மரணம் அடையும்போது இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களில் முக்கியமான தத்துவங்கள் பலவும் செயற்படுவதில்லை. இறுதியில் இந்தத் தத்துவங்கள் நின்றுவிடும்போது உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடுகிறது. இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களைப் பற்றிய பேரறிவுசித்தர் இலக்கியத்தில் வியத்தகு பேருண்மையாகும்.

திருமூலர் இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களைப் பற்றி அவருக்கே உரிய கவிப்பாங்கிலே மிக அழகாகப் பாடுகிறார்.

சென்னை நகரத்தில் பல பேட்டைகளிலே ஒண்டுக் குடித்தனம் வாழ்கிற பெரிய பெரிய மாடி வீடுகளைப் பார்க்கிறோம். இப்படி இந்த உடம்பு என்ற மாளிகையில் தொண்ணூற்றாறு குடிமக்கள் ஒண்டுக் குடித்தனம் வாழ்கிறார்கள் என்கிறார் திருமூலர்.

கீழ்த்தளத்திலே முப்பது பேர் குடியிருக்கிறார்கள். அடுத்த மாடி யில் மேலும் முப்பது பேர். மூன்றாவது மாடியிலோ என்றால் முப்பத் தாறு பேர் இருக்கிறார்கள். இது உடம்பு என்ற கோயிலிலே, அரண் மனை மாளிகையிலே ஒண்டுக்குடித்தன இயல்பு இது ஆகும்.

முப்பதும் முப்பதும்
முப்பத் தறுவரும்
செப்ப மதிளுடைக்
கோயிலுள் வாழ்வர்கள்

முப்பது, முப்பது, முப்பத்தாறு என்ற கணக்கிலே, நன்றாகச் செப்பம் செய்யப்பட்ட மதில்களையுடைய இந்த உடம்பாகிய அரண் மனைக் கோட்டையிலே, தொண்ணூற்றாறுபேர் வாடகைக்குக் குடி யிருக்கிறார்கள். செப்பம் செய்யப்பட்ட மதிலை உடைய பெரிய மாளிகை இது. இந்த மாளிகையில் ஏதாவது விரிசல், ஓட்டை அல்லது பிளவு ஏற்பட்டால், குடியிருப்பவர்கள் உடனே வீட்டைக் காலி செய்து விடுவார்கள் என்கிறார் திருமூலர். வீடு சிதைந்துவிட்டால் ஒரு விநாடி கூட அங்கே தங்க மாட்டார்கள் குடித்தனக்காரர்கள். தொண்ணூற் றாறு பேரும் ஒரே மொத்தமாக உடனே வீட்டைக் காலி செய்து கொண்டு ஓடிவிடுவார்கள் என்கிறார் திருமூலர்.

செப்ப மதிளுடைக்
கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும்
ஓட்டெடுத் தார்களே

வீட்டில் பழுது ஏற்பட்டுவிட்டால் காலிசெய்துகொண்டு, நடந்து போக மாட்டார்களாம் இந்தக் குடித்தனக்காரர்கள்; ஓட்டம் பிடிப் பார்கள் என்று வருகிறது திருமூலருடைய மொழி.

கருத்து என்னவென்றால், குடியிருப்பவனுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அந்த வீட்டிலே குடித்தனக்காரன் தொடர்ந்து வசிப்பான். அடிக்கடி வீட்டைப் பழுதுபார்த்து, வெள்ளையடித்து, சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால்தான் வாடகைக்குக் குடியிருப்பவன் நீடிப்பான். அதுபோல் இந்த உடம்பாகிய குடக்கூலி வீட்டிலே தொண்ணூற்றாறு தத்துவங்களும் வாடகைக்கு வசிக்கின்றன. நாம் இந்த உடம்பை அப்போதைக்கு அப்போது பழுது பார்த்து, செப்பம் செய்து வைத்திராவிட்டால் குடியிருப்பவர்கள் ஓடியே போய்விடுவார்கள். எனவே அவர்கள் ஓடிவிடாமல், தொடர்ந்து வசிக்கக்கூடிய முறையிலே, இந்த உடம்பாகிய வீட்டை நாம் பேணிப் பாதுகாக்கவேண்டும் என்பதைச் சித்தர்கள் கண்டு சொல்லுகிறார்கள். இந்த உண்மையிலிருந்துதான் சித்த வைத்தியம் என்ற அறிவியற் கலை தோன்றி வளர்ந்தது.

வைத்தியக் கண்ணோடு கண்டெடுத்த உண்மை இது. ஞானக் கண்ணோடு இந்த உடம்பைப் பார்க்கும்போது இந்த உடம்பிலே ஆறு முக்கியமான இடங்கள் இருக்கின்றன என்பதை நம்முடைய சித்தர்கள் கண்டுபிடித்தார்கள். இந்த ஆறு இடங்களும் இன்றைய ஆன்ம விஞ்ஞான மொழியிலே சொல்வதாக இருந்தால் ஆறு 'physio psychic centres'. இந்த ஆறு இடங்களையும் ஆறு ஆதாரங்கள் என்று சித்தர்கள் சொல்வார்கள். இந்த ஆறு ஆதாரங்களைப் பற்றியும் ஞானப் பாங்கிலே சித்தர்கள் நமக்குக் கூறியுள்ள அற்புதம் அற்புத மான பேருண்மைகள் நூற்றுக்கணக்காக, சித்தர் இலக்கியங்களிலே பொதிந்துகிடக்கின்றன. பருப்பொருளிலிருந்து சூக்குமப் பொருளுக் குச் செல்வதற்கும், சூக்குமப் பொருளைக்கொண்டு பருப்பொருளை இயக்குவதற்கும், சூக்குமப்பொருள் பருப்பொருள் ஆவதற்கும், பருப்பொருளே சூக்குமம் ஆவதற்கும் உள்ள நுட்பமான வழிகளை யெல்லாம் சித்தர் இலக்கியம் நமக்கு உபதேசம் செய்கிறது.

ஆகவே, உடம்பு என்ற இந்தத் தூலப்பொருளை அறியும்பொழுது ஊனக் கண்களோடு பார்த்துச் சொல்லப்பட்ட தொண்ணூற்றாறு தத்துவங்கள் தவிர, ஞானக் கண்ணோடு பார்த்துச் சொல்லப் பட்டுள்ள ஆறு ஆதாரங்களும் முக்கியம் பெறுகின்றன. இவை அனைத்தும் சேர்ந்ததே சித்தர் இலக்கியத்தின் உடற்கூற்றுப் பகுதியாகும்.

சித்தர் இலக்கியத்தின் அடுத்த முக்கியமான பகுதி, உள்ளத்தைப் பற்றியது. மனம் என்றும், உள்ளம் என்றும், நெஞ்சம் என்றும் இன்னும் சித்தத்தைப் பற்றிய பல சொற்களிலும் நாம் கூறுகின்ற energy

என்கிற சூக்குமத் தத்துவம், இந்த உடம்புக்குள்ளே எப்படிச் செயல்படுகிறது என்பதை, உலக விஞ்ஞானிகளே வியக்கும் விதத்தில் நம்முடைய சித்தர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

உள்ளத்துக் குள்ளே பல தீர்த்தங்கள் இருக்கின்றன என்றும், உள்ளம் ஒரு பெரிய கோயில் என்றும், அதாவது, உள்ளமே ஒரு கருவறை என்றும், இன்னும் பலவிதமாகவும் இந்த உள்ளத்தின் இயல்புகளை ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

'அகக்கரணங்கள்' என்று அழைக்கப்படுகிற உள்ளத்தின் உறுப்புகளைப்பற்றி நூறுநூறு உண்மைகள் சித்தர் இலக்கியங்களிலே பேசப்படுகின்றன. இவை அனைத்தும் உள்ளத்தைக் கொண்டு உடம்பை இயக்கி, உடம்போடு உயிர் இணைந்த நிலையிலே தகர வித்தை என்ற மாபெரும் கலையைப் பயின்று, அமரர்களாக இந்த உலகில் மனிதர்கள் வாழ வகைசெய்யும் என்கிறது சித்தர் இலக்கியம்.

உள்ளத்தின் கரணங்களைப்பற்றிய பேருண்மைகள் தவிர, மனம் என்ற தத்துவத்திற்கு ஐந்துவிதமான நிலைகளைக் கண்டு சொல்லியிருக்கிறார்கள் சித்தர்கள். ஜாக்கிரம், (விழிப்பு), சொப்பனம் (கனவு), சுஷுத்தி (சுழுத்தி), துரியம் (வேகம்), துரியாதீதம் (அதிவேகம்) என்று ஐந்து நிலைகள் உள்ளுலகில் இருக்கின்றன என்பதைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

ஐந்து நிலைகள் என்றால், இந்த உடம்பாகிய மாளிகையிலே ஐந்து வெவ்வேறு அறைகளிலே உள்ளமும் உயிரும் வாழ்ந்து வருகின்றன என்று பொருள். சாதாரணமாக நாம் விழிப்புடன் இருக்கும்போது, நடமாடும்பொழுது, தொழில் செய்யும்பொழுது, மனமானது ஜாக்கிரம் என்ற விழிப்பு அறையிலே நடமாடுகிறது. உறங்கியதும் சொப்பனம் அல்லது கனவு என்ற அறைக்கு அது சென்றுவிடுகிறது. பல மணி நேரம் தூங்கும்போது ஏதோ சிறிதுநேரம் அது சுழுத்தி என்ற அறைக்குள் செல்கிறது. பிறகு விழிப்பு வருகின்ற நிலையிலே மனமானது துரியம் என்ற சாளரத்தின் வழியே ஒரு பார்வை பார்த்துவிட்டு உடனே ஜாக்கிரம் என்ற அறைக்கு ஓடிவந்து விடுகிறது. இந்த ஜாக்கிரம் என்ற அறைதான் முக்கியமான வாழ்வறை.

மேனாட்டு அறிவியல் முறையிலே தேற்றறிவு நிலை 'conscious' என்றும், குறையறிவு நிலை 'sub-conscious' என்றும், உணர்வற்ற நிலை 'unconscious' என்றும் மூன்று நிலைகளே பேசப்படும். இந்த மூன்றும் மனத்தின் உணர்வு நிலைகள். நம்முடைய சித்தர் இலக்கியமோ என்றால், இந்த மூன்று நிலைகளுக்குமேல் 'conscious' என்ற உணர்வு நிலையும், 'unconscious' என்ற மயக்க நிலையும் தவிர, சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற மூன்று சிறப்பு நிலைகளைப்பற்றிப் பேசுகிறது.

அறிவியலோடு இந்த உடம்பை ஆராய்ந்து மனத்தின் இயல்புகளைக் கண்டு தெளிந்து சிந்தித்தோமானால், சுழுத்தியும், துரியமும், துரியாதீதமும் எவ்வளவு பெரிய இரகசியங்கள் என்பதை உணர்வோம். 'ஹிப்னாடிஸம்' என்ற ஆட்களை மயக்கும் கலையில்

தேர்ந்தவர்கள், பார்வையினாலும் வேறு சில மருந்துகளினாலும் பிறருடைய மனத்தை மயக்கிவிடுகிறார்கள். மயங்கிய நிலையிலே இந்த மனம் என்ன மாறுதல் அடைகிறது என்பதை ஆராய்ந்து பார்த்து,'conscious' என்ற உணர்வு நிலைக்கும், 'unconscious' என்ற மயக்க நிலைக்கும் இடையிலே உள்ள நிலைகளையும், இவற்றுக்கு அப்பாற்பட்ட ஆன்ம நிலைகளையும் ஆராய்ந்து, இவற்றின் உண்மைகளை நுட்பமாக எடுத்துக்கூறுகிறது நமது சித்தர் இலக்கியம்.

சைவ சித்தாந்தத்தில் 'காரியம்' என்ற சொல்லுக்கு ஒரு சிறப்பான பொருள் உண்டு. சித்தர்கள் தங்கள் இலக்கியங்களிலே காரியம் என்ற சொல்லை இந்தச் சிறப்புப் பொருளிலே கையாளுவார்கள்.

சித்தர்களின் மரபிலே காரியாவத்தை என்பது உடம்பை எடுத்த ஆன்மாவின் நிலையாகும். அந்த நிலையானது காரிய கேவலம், காரிய சகலம்,காரிய சுத்தம் என்று மூன்று வகைகளைக் கொண்டது.

காரிய கேவலம் என்பது மனமானது ஐம்புல நுகர்ச்சியை நீக்கி இளைப்பாறும் நிலை.

காரிய சகலம் என்பது ஐம்புல நுகர்ச்சியைத் துய்க்கும் நிலை.

காரிய சுத்தம் அல்லது காரிய சித்தி என்பது உடம்பை எடுத்த ஆன்மாவானது ஒடுக்கமும் தொழிலும் இன்றி, இறைவன் திருவடியை நினைத்துச் செல்லும் நிலையாகும்.

உடம்பு என்னும் பருப்பொருளையும், உள்ளம் என்னும் நுண்பொருளையும், உயிர் என்னும் அதிநுண்பொருளையும், மூன்றையும், அறிவியலோடு இணைந்த ஆன்மக்கண் கொண்டு நோக்கி ஆராய்ந்து, எல்லாக் காலத்துக்கும், எல்லா நாட்டுக்கும் எல்லா விஞ்ஞானிகளுக்கும் பொருந்துகிற முறையிலே ஆராய்ந்து, தெளிவோடு மாபெரும் உண்மைகளை நமது சித்தர் இலக்கியம் நமக்கு வழங்கியிருக்கிறது. நம்முடைய முன்னோர்களிடம் எத்தகைய விஞ்ஞான அறிவும், மெய்ஞ்ஞான அறிவும் இருந்தன என்பதற்கும், ரஷிய நாட்டில் நடைபெற்று வருகிற அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு, வருங்காலத்தில்கூட மேலும் பயன்படுகிற பல கருத்துகளை நமது நாட்டு முனிவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதற்கும், சித்தர் இலக்கியம் வியக்கத்தக்க வல்லமையோடு சான்று பகர்கிறது.

★

# 4. சித்தர் இலக்கியத்தின் உத்திமுறைகள்

இந்தப் பாரத நாட்டைப்பற்றிப் பாடுகின்ற தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மிக அழகான முறையிலே சித்தர்களின் தன்மையை எடுத்து இயம்புகிறார் என்பதை முன்னரே கண்டோம். பாரதியாருடைய அந்தப் பாடலிலே மிகவும் முக்கியமான சொற்கள் 'ஆகத்திலே தெய்வ பக்தி' என்பவையாகும்.

இந்த உடம்புக்குள்ளே தெய்வபக்தியை நிலைநாட்டி, இந்த உடம்பாகிய தெய்வக் கோவிலிலே அந்தத் தெய்வப் பக்தியைச் செலுத்துவதுதான், சித்தர்களுடைய ஞான யோகமுறையாகும். மற்ற எல்லா வழிபாடுகளிலிருந்தும் இந்த முறை மாறுபட்டது; வேறுபட்டது.

கோவிலிலே தெய்வ பக்திகொண்டு தொழுவது மக்களுடைய பக்திமுறை என்பது பொதுவான உண்மை. ஆனால், ஆகத்திலே தெய்வ பக்திகொண்டு இந்த யாக்கையை வழிபடுகின்ற முறை இருக்கிறதே அது சித்தர்களின் ஞானயோக முறையாகும்.

சித்தர்கள் யார் என்பதை நாம் புரிந்து கொண்டோமானால் இந்த ஆகத்திலே தெய்வ பக்தி செய்கின்ற நுட்பமான முறையை உணர்ந்துகொள்ள முடியும்.

சித்தர்கள் என்பவர்கள் யோக சமாதியை உகந்தவர்கள் என்பது திருமூலருடைய திருவாக்கு. Suspended animation என்ற நிலையை ஆராயும்போது இந்த இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானிகள் Self induced animation என்று, தானே தனது உடலை உணர்வற்ற நிலைக்குச் செலுத்துகின்ற உபாயத்தைப்பற்றியும் கூறியுள்ளார்கள். இந்த Self induced animation-என்கின்ற உணர்ச்சியற்ற, உயிர்ப்புகூட இல்லாத நிலைக்குத் தம்மைத் தாமே உள்ளாக்கிக் கொண்டு, அந்த நிலையிலே பரம்பொருளோடு கலந்து நின்று பேரின்பம் காணுகின்ற உத்தியைப் பயின்று தெரிந்தவர்களே சித்தர்கள்.

திருமூலருடைய கதை நமக்குத் தெரியும். அவருடைய திருமந்திர நூல் தோன்றியதே யோக சமாதியின் உள்ளிருந்துதான். அந்தத் தவயோகி ஓர் இடையனுடைய உடம்பைக் கொள்கலமாகக்கொண்டு, அந்த யாக்கைக்குள்ளே தனது உயிரைச் செலுத்தி, அரச மரத்தடியிலே அமர்ந்து ஆண்டாண்டுக் காலம் தவம் புரிந்தார். அந்த வரலாறே யோக சமாதியை உகந்த கதைதான்.

யோக சமாதியை உகக்கின்ற அந்த இன்பம் பெரும் பேரின்ப மாகும். அந்த இன்பத்தை உடலோடு துய்த்துத் துய்த்து ஆனந்தித்த

அந்தச் சித்தர் பெருமானாகிய திருமூலர், கண்ணை விழித்து உதடு களைத் திறந்ததுமே யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்கிறார்.

யோக சமாதியை உகந்த அந்த உகப்பிலே தோய்ந்து கண்ட தம்முடைய சொந்தப் பேரின்பத்தை, இந்த உலகம் முழுவதும் பெறவேண்டும் என்ற பெரும் கருணையினால் உந்தப்பட்டார் திருமூலர். எனவே மூடிய கண்களைத் திறந்ததும் பாடிய நூலிலே தமது பேரின்ப அனுபவங்களையெல்லாம் கொட்டுகிறார்.

மனிதர்கள் மாந்தர் ஆவதும், வானவர் ஆவதும் இந்தப் பேரின்பப் பேரருளைப் பெறுவதன் மூலமாகத்தான் என்பதனை உணர்ந்த காரணத்தினாலே, சித்தர்கள் தங்கள் அனுபவங்களை இலக்கியங்களாக நமக்கு வழங்கியுள்ளார்கள்.

புண்ணியன் எந்தை
புனிதன் இணையடி
நண்ணி விளக்கென
ஞானம் விளைந்தது
மண்ணவர் ஆவதும்
வானவர் ஆவதும்
அண்ணல் இறைவன்
அருள்பெற்ற போதே

இந்த அருளை நமக்கு வழங்குகிற இலக்கியமே சித்தர்களின் இலக்கியமாகும்.

இந்த அனுபவங்களை எடுத்துச் சொல்வதற்காகச் சித்தர்கள் பற்பல உத்திமுறைகளைக் கையாளுகிறார்கள். அந்த உத்திமுறை களிலே உருவகம் வாயிலாகவும், குழூஉக் குறிச் சொற்கள் வாயிலாக வும் தங்கள் அனுபவங்களை அவர்கள் கூறுகிற உத்திமுறை சித்தர் இலக்கியத்திற்கென்றே அமைந்த ஒரு தனிப்பண்பாகும். இந்த முறை யிலே அவர்கள் ஒன்பது அடிப்படைத் தத்துவங்களை ஒன்பது வெவ் வேறு உத்திகளிலே கூறுவார்கள்.

முதலாவது, உயிரின் தன்மையையும், உடலின் தன்மையையும், பதி, பசு, பாச இயல்புகளையும் அனுபவ மொழிகள் மூலமும் உருவக உத்தி மூலமும் எடுத்துச் சொல்வார்கள்.

இரண்டாவது, வரைமுறைகளைச் சொல்லி அந்தக் கதைகளிலே உள்ள உருவகத் தத்துவங்களையும், பூட்டைத் திறப்பதுபோல் திறந்து காண்பிப்பார்கள். அப்படிக் காண்பிக்கும்போது பரம்பொருளின் பேராற்றல், அந்தப் பரம்பொருளோடு இந்த அண்டமும் பிண்டமும் இணைந்த முறைகள், முதலிய இயற்கை இயல்புகளை இறை உணர்வு களோடு கலந்து விளக்கம் செய்வார்கள்.

மூன்றாவது உத்தி என்னவென்றால், மனிதன் மனத்தால் உயர் கிறான் என்பதை விளக்கி, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள

அடிப்படையான வேறுபாடு, இந்த மனத்தின் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதன் மூலமே செயற்படுகிறது என்பதை இயம்பி, உள்ளத்துக் குள்ளே நாம் நிகழ்த்தவேண்டிய தவ ஒழுக்கங்களைப் பற்பல யோக முறைகளைச் சொல்லி விளக்குவார்கள். ஒழுக்கமாக இருக்கவேண்டு மென்று மீண்டும் மீண்டும் சொன்னால் ஒருவன் ஒழுக்க சீலனாக ஆகி விட முடியுமா? ஒழுக்கத்திற்கும் சீலத்திற்கும் தவ வாழ்க்கைக்கும் மனத்தைக் கொண்டு பயிற்சி செய்யவேண்டும். அந்தத் தவ ஒழுக்கங் களையெல்லாம் உத்தி முறையிலே சித்தர்கள் விளக்குவார்கள்.

சித்தர் இலக்கியங்களிலே நாம் காணுகின்ற நான்காவது உத்தி, மந்திரங்களைப் பற்றியது. மந்திரங்களுக்குரிய சொற்களும் ஒலிகளும் எத்தனையோ நூறு ஆண்டுகளாகப் பயின்று பயின்று சித்தர்கள் கண்டுபிடித்துள்ள இரகசியங்களாம். அந்த இரகசிய ஒலிகளையும் சொற்களையும் சித்தர் இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அதோடு அந்த மந்திரங்களை, யந்திரங்கள் அல்லது சக்கரங்களிலே எப்படி அடைக்கவேண்டும் என்ற முறைகளைக்கூறி, ஒலி மாறுபாடு களினால் மனித மனத்திற்கு எப்படி நன்மை தீமைகள் ஏற்படுகின்றன என்பதையும் சித்தர் இலக்கியம் விளக்கம் செய்கிறது. இந்தச் சொற் களின் மூலம் ஒலிகளை இயக்கித் தியான முறைகளினால் எப்படி மனித மனத்தை உயர்த்தலாமென்று கூறுகின்ற இந்த உத்தி முறையே சித்தர் இலக்கியத்தின் நான்காவது உபதேசப் பொருளாகும்.

சித்தர் இலக்கியங்களிலே நாம் காணுகின்ற ஐந்தாவது உத்தி இறைவனை வழிபடுவதற்குரிய நான்கு முறைகளைக் கூறுகிற அனுபவ உரையாகும்.

இந்த நான்கு முறைகளை வடமொழியிலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்காகப் பிரித்திருக்கிறார்கள். இந்த நான்கைச் சித்தர்கள் தாசமார்க்கம் அல்லது தொண்டுமுறை என்றும், சத்புத்திர மார்க்கம் அல்லது மகவுப்பாச வழிபாட்டு முறை என்றும், சகமார்க்கம் அல்லது தோழமை யோகம் என்றும், சன்மார்க்கம் அல்லது உயர்தனிச் செவ்வழி என்றும் அழைக்கிறார்கள். அதாவது சரியை என்பது தொண்டுநெறி; கிரியை என்பது மகன் தந்தையை வழிபடுகிற முறை; யோகம் என்பது இறைவனை நண்பனாகக் கருதித் தோழமை யோகத்திலே ஈடுபடுகின்ற முறை; ஞானம் என்பது இந்த மூன்று முறைகளையும் கடந்த பேரின்பச் செவ்வழி யாகும். இந்த நான்கு முறைகளுக்கும் உள்ள வழிபாட்டு உத்திகளைச் சித்தர் இலக்கியம் நமக்கு உணர்த்துகின்றது. இதுவே சித்தர் இலக்கியத்தின் ஐந்தாவது செம்பொருளாகும்.

சித்தர் இலக்கியம் கூறுகிற ஆறாவது பகுதி ஆன்மநிலை என்ப தாகும். இந்தப் பகுதியிலே சித்தர்கள் ஒரு பெரிய இரகசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆன்மாக்களுடைய பரிபக்குவ நிலைக்கு ஏற்ப இறைவனே ஆசிரியனாக வந்து தோன்றி, அவரவருக்குத் தக்க வகையிலே அருள் செய்கிறான் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இது சித்தர் இலக்கியத்தின் ஆறாவது செம்பொரு ளாகும்.

சித்தர் இலக்கியங்களின் ஏழாவது பகுதி மிகவும் நுட்பம் வாய்ந்த தாகும். இந்த மனித உடம்புக்குள்ளே physio psychic centres என்று இன்றைய விஞ்ஞானிகள் அழைக்கிற ஆறு முக்கியமான இடங்கள், ஆறு நிலைகளாக அமைந்துள்ளன என்பதை மிகமிக நுட்பமான முறை யிலே சித்தர் இலக்கியம் நமக்கு விளக்குகிறது. இந்த ஆறு இடங்கள் உடம்பிலே எங்கெங்கே அமைந்திருக்கின்றன என்பதை விளக்கிக் கூறி, இந்த ஆறு இடங்களிலும் என்னென்ன செயல்களை நாம் செய்தால், நமக்கு இறைவனுடைய பேரின்பம் கிட்டுகிறது என்பதை, ஏழாவது பகுதியிலே சித்தர் இலக்கியம் பேசுகிறது. ஓர் இரும்புத் துண்டைக் காந்தத்திலே உராய உராய அந்த இரும்புத்துண்டு காந்தமாக மாறி விடுகிறது. இது விஞ்ஞான உண்மை. இதுபோலவே வெறும் இரும்புத் துண்டாக இருக்கின்ற இந்த உடம்பை ஆறு நிலைகளிலே உராய இந்த மனித உடம்பாகிய இரும்பு, காந்த சக்தியைப் பெற்று விடுகிறது என்பதே சித்தர் இலக்கியத்தின் ஏழாவது பகுதியிலே நாம் காணுகின்ற மாபெரும் ஞானமாகும்.

சித்தர் இலக்கியத்தில் எட்டாவது செம்பகுதி சித்தர்கள் எவ்வாறு பேரின்ப நிலையைப் பெற்று உயர்ந்தார்கள் என்ற ஆன்ம அனுபவத்தை ஞான மொழியிலே கூறுகிற அரிய பகுதியாகும். இந்தப் பகுதி தன்னுரை என்கின்ற soliloquy என்னும் வடிவில் அமைந்து, தானே தானும் தனிமையுமாக இருந்து பேரின்பம் பெற்றேன் என்று மக்களை நோக்கிப் பேசுகின்ற சித்தரின் குரலாகும்.

சித்தர் இலக்கியத்தின் ஒன்பதாவது பகுதி, மொழிகளைப் புரிந்து கொள்வதற்கும், இரகசியங்களை உணர்ந்துகொள்வதற்கும் மிகவும் கடினமான ஒரு பகுதியாகும். ஏனென்றால் இந்தப் பகுதியிலேதான் சித்தர்கள் இறைவனுக்கு ஓர் உருவம் கூறி, அல்லது பல உருவங்கள் கூறி, இந்த உருவங்களெல்லாம் இந்த உடம்புக்குள்ளே என்னென்ன விளையாடல்களைப் புரிகின்றன என்பதைக் கற்பனைக் கதைகளிலே பேசுவார்கள். திருமூலர் தமது ஒன்பதாவது தந்திரத்திலே இந்த உத்தியைக் கையாளுகின்றார். பிரணவ சமாதி, தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம் முதலியவற்றைக் கூறி ஆடல் வல்லானாகிய இறைவன் இந்த உடம்புக்குள்ளே ஐந்து வகையான திருக்கூத்துகளை நடத்துகிறான் என்று பேசுகிறார். திருக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, தில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்ற ஐந்து கூத்துக்களைச் சொல்லி, 'நாதம்கொண்டு ஆடினான் ஞானானந்தக் கூத்தே என்று பேசுவார் திருமூலர். இந்தப் பகுதியிலே சூனிய சம்பாஷனை என்ற தலைப்பிலே மோன சமாதியின் தத்துவங்களைச் சொல்லிச் சித்தரின் யோக சமாதி உகந்த கதை முற்றுப் பெறுகிறது.

ஆகவே சித்தர் இலக்கியங்களில் காணுகின்ற ஒன்பதுவகையான கல்வியும் ஒன்பதுவகையான உத்திகளைக் கையாண்டு எல்லா மக்களும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வதற்குரிய வாழும் முறை களை எடுத்துச் சொல்லுவதாகும். இவற்றின் விரிவுகளைத் தனித் தனியான வகையிலே தொடர்ந்து வரும் விளக்கங்களில் ஆழ்ந்து காண்போம்.

★

# 5. ஞானிகள் எப்படி இருப்பார்கள்?

சித்தர்கள் சிலர் உள்ளார்கள்; சித்தர்கள் என்று பலர் உள்ளார்கள். அதாவது மெய் என்பது குறைவு; போலி மிகுதி. உலகநிலை இதுவே!

குதிரையைப்போல் 'போனிமட்டம்' என்ற ஓர் விலங்கு உண்டு. மயிலுக்குப் போட்டியாக வான்கோழி இருக்கிறது. அவ்வாறே மக்களைப் போலவே கயவர்களும் உள்ளார்கள். மக்களே போல்வர் கயவர் என்பது வள்ளுவம்!

போலிகள் நிறைந்த இந்த உலகத்திலே எல்லாத் துறைகளிலும் போலி இருப்பது போலவே, ஞான உலகிலும் போலி ஞானிகள் காணப்படுவது இயல்பேயாகும். மெய்யைப் பொய்யினின்று வேறு பிரித்துக் காண்பது கடினமே. என்றாலும் அதுதானே சித்தர் ஞானம் என்பதன் தத்துவமே. பொய்யைப் பொய்யென்று காண்பதும், மெய்யை மெய்யாகக் கொள்வதுந்தான் சித்தர் இலக்கியம் எடுத்துக்கூறுகிற பேரறிவு.

உண்மையில் அறிவுக்கு இலக்கணம் கூறுகிற திருவள்ளுவரும் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றே உறுதியோடு பேசுகிறார் அல்லவா?

இந்நிலையில் சித்தர்கள் எப்படி இருப்பார்கள் என்ற கேள்வி நமக்கு இயல்பாக எழுகிறது.

மெய்யான ஞானியின் பண்புகளைப் பல சித்தர் பாடல்கள் நமக்கு ஓவியம் வரைந்து காட்டுகின்றன. திருமூலரும் பல இடங்களில் இது குறித்துப் பேசுகிறார்.

'கைவல்லிய நவநீதம்' என்ற நூலிலே தாண்டவமூர்த்தி சுவாமிகள் 'சீவன் முத்தர்' களாகிய ஞானிகளைப் பற்றி அரிய பாடல்கள் சிலவற்றை அருளியிருக்கிறார். 'தத்துவ விளக்கப் படலம்' என்ற தொடக்கப் பகுதியிலே இந்தப் பாடல்களைக் காண்கிறோம்.

இந்தப் பாடல்களுக்குப் பிறையாறு அருணாசல சுவாமிகள் எழுதியுள்ள உரையும் சிறப்பானதாகும்.

ஞானிகளாகிய சீவன் முத்தர்களை நான்கு பிரிவாகக் கூறுவார்கள். வானளாவிய உயர்வுகொண்டவர்களே இந்த நால்வகை ஞானிகளும். இவர்களைப் பிரமவித்து, பிரம வரன், பிரம வரியான், பிரம வரிட்டன் என நான்கு பெயர்களில் அழைப்பதுண்டு.

பிரமவித்து எப்படி இருப்பார் என்பதைக் கூறுகிற பாடல் :

தீரராய்ப் பிரம வித்தாய்த்
தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமாய் இருந்த தங்கள்
வருணமாச் சிரமம் சொன்ன
பாரகா ரியமா னாலும்
பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வார் தீர்ந்த
நிலைவிடாச் சீவன் முத்தர்

தீரமுள்ள பிரம வித்துக்களாகத் தெளிவுபெற்ற ஞானிகள், தாங்கள் அந்த நிலையை அடைவதற்கு முன்பு எந்த வருணாசிரம தருமத்தினைக் கடைப்பிடித்தார்களோ அதை, உலக நலத்துக்காகவே தொடர்ந்து செய்வார்கள்; உறுதி தளராதவர்களாக நிற்பார்கள். அதோடு,

காமமா திகள்வந் தாலும்
கணத்திற்போம் மனத்திற் றங்கா
தாமரை யிலைத்தண் ணீர்போல்
சகத்தொடும் கூடி வாழ்வார்
பாமரர் எனக்காண் பிப்பார்
பண்டிதத் திறமை காட்டார்
ஊமரும் ஆவார் உள்ளத்து
உவகையாம் சீவன் முத்தர்

முன்வினைப் பயனால் சில இச்சைகள் எழலாம். அவை கணத்திலே போய்விடும். மனத்திலே தங்கமாட்டா என்பது முக்கியம்.

இதற்கு மேலும் சொல்லுகிறார் :

பேதகன் மத்தால் வந்த
பிராரத்தம் நானா வாகும்
ஆதலால் விவகா ரங்கள்
அவரவர்க் கான ஆகும்
மாதவம் செயினும் செய்வர்
வாணிபம் செயினும் செய்வர்
பூதலம் புரப்பர் ஐயம்
புகுந்துண்பர் சீவன் முத்தர்

அறிவின்மையான சஞ்சித கன்மத்தால் உண்டான பிராரத்த கன்மம் பலவிதம் என்பதை உணர்ந்தவர்கள் அவர்கள். ஆகவே, அவரவருக்குத் தொழில்கள் விதிக்கப்பட்டன என்று தேர்ந்து, எந்தத் தொழிலானாலும் அதைச் செய்வார்களாம் சீவன் முத்தர்கள்! தவம் செய்பவராக இருக்கலாம்; ஆண்டியாகவும் இருக்கலாம்; சீவன் முத்தர் சீவன் முத்தரே!

பிரம வித்துக்களின் நிலையை மேலும் எடுத்துச் சொல்கிறது அடுத்த பாடல் :

சென்றது கருதார் நாளைச்
சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில்
நிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம்வாழ்ந் தாலும்
புதுமையாய் ஒன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி
நடுவான சீவன் முத்தர்

*இறந்த காலத்தைக் கருத்திலே வையார். வருங்காலத்தை எண்ணார். நிகழ்காலத்தையே புசிப்பார்கள்; அதாவது துய்ப்பார் கள். துய்ப்பார்கள் என்றால் பிராரத்த வினை என்று தெளிந்து அனுபவித்துத் தீர்ப்பார்கள். வெயிலானது நிலவாக மாறி வானி லிருந்து விழுதாக இறங்கினாலும், மாண்டவன் மீண்டாலும், இவற்றை அதிசயமாகப் பார்த்துக்கொண்டு நிற்கமாட்டார்கள். நல்லது கெட்டது சொல்லமாட்டார்கள். எல்லாவற்றையும் சாட்சி யாகக்கண்டு நடுவில் நிற்பார்கள் சீவன்முத்தர்களிலே பிரமவித்துக்கள்!*

*இனி, மற்ற மூவர்களின் இயல்புகளைக் கூறுகிறது கைவல்லியம்:*

பின்னைமூ வரில்இ ரண்டு
பேர்களும் சமாதி யோகம்
தன்னையுற் றிருப்பார் தேக
சஞ்சார நிமித்தம் தானாய்
உண்ணுவோன் வரன்வேற் றோரால்
உண்பவன் வரியான் ஆகும்
அன்னியர் தம்மால் தன்னால்
அறியாதோன் வரிட்டன் ஆமே

*மற்ற மூன்று விதமான சீவன் முத்தர்களில் பிரமவரனும், பிரம வரியானும் சமாதி ஞானத்தில் திளைப்பவர்கள். உடலைத் தாங்கு வதற்காகத் தானே உணவு நாடி உண்பவன் பிரமவரன். அவ்வாறில்லா மல், சீடர் முதலிய பிறரால் உணவுதர உண்பவன் பிரமவரியனாம். தன்னாலோ பிறராலோ உணவு உண்பது என்பதையே அறியாதவன் பிரம வரிட்டன். புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், பிரம வரிட்டன் சமாதியில் மேலும் தீவிரமாகத் தோய்ந்தவன் என்பதே!*

மேலும் பாடுகிறார் :

அரிதாகும் இவர்கள் இவ்வாறு
அநேகர்ஆ னாலும் முத்தி
சரியாகும் பாடு பட்ட
சமாதிக்குப் பலன்ஏ தென்றால்
பெரிதான திட்ட துக்கம்
பிரமவித் தனுப விப்பான்
வரியானும் வரனும் மற்றை
வரிட்டனும் சுகமாய் வாழ்வார்

இத்தகைய மேன்மை நிறைந்த சித்தர்கள் வகையிலும் தொகையிலும் விரிந்திருப்பினும், இவர்கள் பெறுகிற முத்தி நிலையாகிய வீடுபேறு ஒரே தன்மையதாகும். இவர்கள் புரிகிற ஞானச் செயல்களின் விளைவாக, பிரம வரியானும் பிரமவரனும் பிரமவரிட்டனும் பேரின்பப் பெருநிலையிலே வாழ்கிறார்கள். பிரம வித்தானவன் யோக சமாதியில் நில்லாத காரணத்தால், ஊழ்வினைத் துன்பங்களை அனுபவித்துத் தீர்க்கவேண்டும்.

இந்த ஞானிகளுக்கு வினைப்பயன்கள் எப்படித் தீர்கின்றன என்பதையும் பற்பல நூல்கள் எடுத்துச் சொல்கின்றன.

வினைப்பயன் என்பது மூவகைப்படும். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்று பெயர் பெறுவன.

சஞ்சிதம் என்பது முற்பிறவிகளில் செய்த வினைகளில் இன்னும் பயனனுபவிக்காமல் எஞ்சி நிற்கிற கருமச் சுமை.

பிராரத்தம் என்பது, இந்தப் பிறவிக்கு என்று பங்கீடு செய்யப்பட்ட வினை.

ஆகாமியம் என்பது, இந்தப் பிறவியில் செய்து, அடுத்த பிறவிக்கு என்று சேர்கிற வினை.

இந்த மூன்றும் ஞானிகளுக்கு எப்படி நீங்குகின்றன என்பதைச் சித்தர் இலக்கியம் வகைப்படுத்திக் கூறுகிறது.

ஞானக் கனலானது சஞ்சிதம் முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கிவிடுகிறது.

ஆகாமிய வினை ஞானியை ஒட்டுவதில்லை. அவனைத் தொடுவதே இல்லை. ஏனென்றால் அவன் தாமரையிலைத் தண்ணீர் போன்று எதிலும் தோயாதவன்.

பிராரத்த வினையானது மூன்று வகையில் நசித்துப்போகிறது என்று ஞான நூல்கள் கூறுகின்றன. முதலாவது வகை மூடர்களின் வாயிலாக ஒரு பங்கு தீர்கிறது. எப்படியென்றால் மூடர்கள் ஞானியைச் சந்திக்கும்பொழுது பிராரத்த வினையின் ஒரு பங்கு அவர்களிடம் போகிறது. அறிவாளிகள் ஞானியை வணங்கும்போது அவர்களுடைய அறம் ஞானியைச் சார்கிறது. மற்றும் உடலில் அனுபவித்தும் வினை தீர்கிறது.

திருமூலர் வேறொரு விதமாக ஞானிகளின் வினைதீரும் முறையைப் பாடுகிறார்.

> **தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
> **முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்**
> **பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
> **சென்னியில் வைத்த சிவனரு ளாலே**

என்பது திருமந்திரம்.

வினைப்பயன்தான் இங்ஙனம் தீர்கிறதே தவிர, சிவான்மாவைப் பிணைத்துள்ள மும்மலங்களாகிய ஆணவமும், கன்மமும், மாயையும் குருவினுடைய தொடுகையாகிய பரிசம் பட்டவுடனேயே நசித்துப் போய்விடுகின்றன என்பதை இங்கே நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். பரிசனவேதி என்ற மூலிகையானது தொட்டதையெல் லாம் தங்கமாக்கிவிடும். அவ்வாறுதான் குருநாதனுடைய திருவடியை நாம் தொடுவதும், அவனுடைய கை நமது தலையைத் தொட்டு ஆசிவழங்குவதுமாகும். இதைப் பாடுகிறது திருமந்திரம் :

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தருபொன் வகையாகு மாபோல்
குருபரி சித்த குவலய மெல்லாம்
திரிமலம் தீர்ந்து சிவகதி யாமே

*

## 6. சித்தர்களின் சமயம் எது?

சித்தர்களின் கவிச்செல்வங்களாகிய அரிய பாடல்களைக் கேட்டு அனுபவிக்கிற ரசிகர்கள் பலர்! இவர்களுடைய உள்ளத்தில் ஒரு கேள்வி, நியாயமான கேள்வி எழுகிறது. இந்த மகான்களாகிய சித்தர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்கள் இந்துக்களா, பௌத்தர்களா, சைனர்களா, இசுலாமியர்களா, கிறித்தவர்களா என்று பற்பல கேள்விகள் கேட்கப்படுகின்றன.

இந்த கேள்விகளுக்கு விடை சொல்லும் முன்பு இன்னொரு கேள்வியை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

சித்தர்கள் என்ற அதிமானுடர்கள் யார்? இவர்களின் கொள்கை என்ன?

சித்தர்களுக்கெல்லாம் சித்தராகிய திருமூலர் இந்தக் கேள்விக்கு ஓர் இலக்கண விடை கூறியுள்ளதை முன்னரே பார்த்துள்ளோம்.

> **யோக சமாதியின் உள்ளே அகலிடம்**
> **யோக சமாதியின் உள்ளே உளஒளி**
> **யோக சமாதியின் உள்ளே உளசக்தி**
> **யோக சமாதி உகந்தவர் சித்தரே!**

யோக சமாதி என்ற நிலைக்குள்ளே அகலிடம், ஆன்ம ஒளி, ஆன்ம சக்தி எல்லாம் உள. இந்த யோக சமாதியை உகந்து கூடுகிறவர்கள் யாரோ அவர்களே சித்தர்கள் என்கிறார் திருமூலர். இதன் விரிவு **'அகலிடத்து உள்ளொளி'** என்ற தலைப்பில் மேலும் ஆராயப்படுகிறது.

யோக சமாதி கைவரப்பெற்ற மகான்களே சித்தர்கள் என்பது சரியே. ஆனால் நம் கேள்வி இதைப்பற்றி மட்டுமில்லை. இந்த மகான்கள் வழிபடுவது சிவனையா, திருமாலையா, புத்தரையா, அருகக் கடவுளையா அல்லது அல்லாவையா அல்லது வேறு சமயக் கடவுள்களையா?

யோக சமாதியைக் கூடுகிற சித்த புருஷர்களை எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும் பொருத்தமே ஆகும். அவர்கள் இந்துக்கள், பௌத்தர்கள், சைனர்கள், இசுலாமியர்கள், கிறித்தவர்கள். உலகிலுள்ள வெவ்வேறு பெயரில் வழங்குகிற எல்லாச் சமயங்களுக்கும் உரியவர்கள் அவர்கள் என்று சொல்லிவிடலாம். அதோடு இந்த எல்லாச் சமயங்களையும் தாண்டி நிற்பவர்கள் ஆவார்கள் அவர்கள்.

சித்தர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களும் இல்லை. இந்த அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் இயக்குகிற ஒரு சக்தியில் நம்பிக்கை உடையவர்கள் மட்டுமில்லை; அந்த அரிய பெரிய சக்தியைத் தங்கள் அறிவுக்கண்ணால் கண்டு, உணர்வு என்னும் அனுபவத்திலே அதனோடு விளையாடித் திளைத்தவர்கள். அதனால் சமயத்துக்கு உள்ளும், சமயத்துக்கு அப்பாலும் அவர்களைக் காண்கிறோம்.

சித்தர்கள் கல்லை வணங்குவார்களோ என்று கேட்கலாம். வணங்குவார்கள், வணங்காமலும் இருப்பார்கள். உருவத்தை ஆராதிப்பார்கள். அருவத்தில் நின்று உருவத்தைக் கடந்தும் பேசுவார்கள். ஏனென்றால், அவர்கள் காண்கிற எல்லையற்ற பரம்பொருள் அங்கு இங்கு என்று சொல்லமுடியாதபடி எங்குமாய் அவர்களுடைய கண்ணுக்குத் தெரிகிறது.

நட்ட கல்லும் பேசுமோ
நாதன் உள் இருக்கையில்

என்று கேட்பார்கள். "நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தி" வணங்குவதை, அந்தப் புறச்சடங்கினை, அவர்கள் சில சமயங்களில் தூக்கி எறிந்து பேசலாம். ஆனால் நாதனையே அடியோடு தூக்கி எறிகிறவர்களில்லை அவர்கள்! நாதன் உள்ளே இருந்தால் நட்ட கல்லும் நாலு பூவும் வேண்டாம் என்பதே அவர்கள் கொள்கை. அவர்கள் சம்பந்தப்பட்டவரை நாதன் அவர்களுக்கு உள்ளே வந்து உட்கார்ந்துவிட்டான். அதனால் இந்தச் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் தாண்டி நின்று உறவாடுகிற, உரையாடுகிற, பரிபக்குவம் அவர்களிடத்தில் இருக்கிறது. அந்த வார்த்தையை மற்றவர்களும், நாதனை உள்ளே இருத்திக்கொள்ளத் தெரியாதவர்களும் மேற்கோள் சொன்னால் ஒவ்வுமா அது?

## ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

இது திருமூலர் பாடல். அதாவது ஒருவனே இறைவன் என்பதைக் கண்டுகொண்டவரின் பேச்சு அது. அவர் மனிதகுலம் அனைத்தும் ஒன்றே என்பதை, மெய்யாகவே கண்டு உணர்ந்தவர். வெறும் பாட்டுக்காகச் சொல்லவில்லை அப்படி. ஒருவனாகிய தேவன் உண்டு என்பதில் அவருக்குச் சந்தேகம் கிடையாது. அந்தத் தேவனை எப்படி அணுகுவது என்பதிலேதான் நம்மாழ்வார் சொன்னதுபோல்,

அவரவர் தமதம தறிவறி வகைவகை

என்று தெய்வத்தை அணுகும் வழிகளில் விரிவுகள் ஏற்பட்டன. ஆனால் இந்த விரிவுகள் வளர்ந்து, அவைகளிலே பிரிவுகள் உண்டாகிச் சமயச் சண்டைகளும், மனக் காழ்ப்புகளும், வாதப் பிரதிவாதங்களுமாகச் சிக்கலுறும்போதே, சித்தர்கள் மனித குலத்தைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்.

ஆம்; இலட்சியத்தை விட்டுவிட்டுச் சாதனங்களுக்குள்ளே யுத்தம் நடக்கிறதே என்று சித்தர்களின் உள்ளம் சிரித்துக்கொண்டே

வேதனைப்படுகிறது. அப்போது அவர்களுடைய குரலிலே ஒருமைப்பாடு என்ற ஆன்ம உபதேசம் ஒலிக்கிறது.

சமயப் பிணக்குகள், சாதிச் சண்டைகள், உருவ பேதங்கள், உயர்வுதாழ்வுப் போராட்டங்கள் ஆகிய அத்தனை வேறுபாடுகளையும் கடந்து, இத்தனை வேற்றுமைகளுக்குள்ளும் ஒற்றுமையைக் கண்டு நமக்கும் அதைக் காண்பிக்கிற மதமே சித்தர்களின் மதமாகும். சர்வ சமய சமரசம் என்னும் ஒருமை நிலையும், எல்லாம் ஒன்றே பேதமில்லை என்கிற நோக்கும், ஒன்றாகக் காணும் அந்தக் காட்சியும் அடையப்பெற்று, பரம்பொருளோடு சித்தர்கள் எப்போதும் ஒன்றி நிற்பதால், சாதாரண மக்களின் சக்திக்கு அப்பாற்பட்ட பல வல்லமைகளும், ஞானிகளிடம் நிறைந்து நிற்பதைப் பார்க்கிறோம்.

திருமூலருடைய சித்தர் மரபிலே வந்தவர் மௌனகுரு. அந்த மௌனகுருவின் மாணவர் தாயுமானவர். இவர் சித்தர் கணத்துக்கே வணக்கம் கூறிச் சித்தர்களின் இயல்புகளைப் போற்றித் துதித்துச் சில அரிய பாடல்கள் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்களிலே சித்தர்களின் சமயநோக்கு எத்தனை சமரசமானது என்பதையும், அந்த மகான்களுடைய அறிவாற்றலும் ஆன்ம வல்லமைகளும் எத்தகையன என்பதையும் விளக்கமாகப் பாடுகிறார்.

"எத்தனையோ பல சித்திகளைச் செய்து, அண்டங்களே நிலை குலைந்தாலும் நீங்கள் சலனமில்லாமல் நிலையாக நிற்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள்; உங்களுடைய ஆற்றல்கள் சாமானியமில்லை. வேதாந்தம் என்றும், சித்தாந்தம் என்றும், இன்னும் வெவ்வேறு பெயர்களிலும் வேறு பிரித்துச் சொல்கிற அத்தனை பேதங்களையும் கடந்து, எல்லா மாறுதல்களுக்கும் அடிப்படையான பொருள் ஒன்றே என்பதைக் கண்டு, சர்வ சமய சமரச நன்னிலையிலே ஒரு மாபெரும் சமநோக்கிலே நிற்கக்கூடிய சித்தர் கணமே" என்று வியந்து துதித்துப் பணிவோடும், ஆழ்ந்த பக்தியோடும், சித்தர்களின் தொகுதி முழுமைக்கும் அஞ்சலி செலுத்துகிறார் தாயுமானவர்.

சித்தர்களுக்குப் பல புலவர்களும், பண்டிதர்களும், எத்தனையோ முறையில் வணக்கம் சொல்லிப் பாடியிருந்தபோதிலும், சித்தர் மரபிலே ஒருவராக விளங்கும் தாயுமானவருடைய இந்தப் பாடலிலே வியப்போடு உறவும், பணிவோடு சொந்தமும் விரவி நிற்கின்றன. அதுவே இந்தத் தாயுமானவர் பாடலின் தனிச் சிறப்பாகும். அந்தப் பாடல் வருமாறு :

பாரோடு நன்னீராதி ஒன்றோடொன் றாகவே
  பற்றிலயம் ஆம்போதினில்
பரவெளியில் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
  பரந்திடின் அதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
  நிற்பீர்; விகற்பமாகி
நெடியமுகில் ஏழும் பரந்துவரு ஷிக்கிலோ
  நிலவுமதி மண்டலமதே

ஊரென விளங்குவீர்; பிரமாதி முடிவில்விடை
    ஊர்தி அருளால் உலவுவீர்;
உலகங்கள் கீழ்மேல தாகிப் பெருங்காற்று
    உலாவின் நல்தாரணையினால்
மேருவென அசையாமல் நிற்கவல்லீர்; உமது
    மேதக்க சித்தி எளிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
    வித்தகச் சித்தர் கணமே!

இப்படி எல்லாம் ஒன்றே என்னும் ஒருமைப்பாட்டிலே நிற்கும் இந்த மகான்கள், சீர்திருத்தவாதிகளைப் போலவே பேசினாலும், இவர்களுக்கு என்று சில தனி ஆன்ம இயல்புகள் இருப்பதைப் பார்க்கிறோம். கொள்கையிலும், பழக்கத்திலும், முறையிலும், வாழ்க்கையிலும் கட்டுப்பாடுகளை எல்லாம் கடந்துள்ள இந்த மகான்களின் புரட்சிப் பண்புகளை ஆராய ஆராய வியப்பும் ஈடுபாடும் ஒருங்கே விளைகின்றன.

சித்தாந்தம், வேதாந்தம், துவைதம், அத்துவைதம் என்றும், விசிஷ்டாத்வைதம் என்றும் பல பெயர்கள் இட்டுப் பல நிலைகளிலே நின்று தர்க்கம் செய்கிறது சமய உலகம். இந்தத் தத்துவச் சர்ச்சைகளுக்குள் அடிப்படையாக விளங்குகிற ஒரு பெரிய ஒற்றுமையை நுட்பமாகக் கண்டு, சமரச நன்னிலையாகிய பேரானந்த ஒருமைப்பாட்டிலே, ஒரு பெரிய தெய்விக ஐக்கியத்தை நிலைநாட்டுகிற அரும்பெரும் பண்பைச் சித்தர்களின் குரலிலே கேட்கிறோம்.

சித்தர்கள் சொல்கிற பூஜைகள் எல்லாம் ஆன்ம பூஜைகள். தெய்வத நிலைகளை உருவங்களிலே துதிக்கிற சித்தர் பாடல்கள் பல உண்டு என்றாலும், அவையெல்லாம் சாதாரண மக்களுக்காக சகஜ நிலையிலே நின்று பாடுகிற அஞ்சலிகளே. மற்றப்படி அவர்களுடைய தனிப்பட்ட வழிபாடு என்பது, சில நுட்பமான இரகசியங்களை உள்ளடக்கிய ஆன்மச் செயல்களே. இந்த அடிப்படையை நாம் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதன் விரிவு மந்திர வழிபாடு, மூலக்கனல், எழுத்தும் நிலையும் முதலிய தலைப்புகளில் மேலும் ஆராயப்பட்டுள்ளது.

எல்லாமாகி, எங்குமாகி நீக்கமற நிறைந்த பரம்பொருள், பேரும் உருவமும் இல்லாததாய், இந்தப் பேரண்டத்தில் உள்ளவாறு சிற்றண்டமாகிய இந்தப் பிண்ட சரீரத்துக்குள்ளும் கலந்து நிற்கிறது. இந்தப் பேருண்மையை ஆராய்ந்து கண்டு துய்த்தவர்களே சித்தர்கள். உலகம் முழுவதும் தானாகவும், தனக்குள் உலகமாகவும் இருக்கும் இந்த ஆன்ம ஒருமைப்பாடு என்னும் பெரிய ஐக்கியத்தினால் அவர்களுடைய உள்ளம், உலகளவு விரியக்கூடிய அணு ஆற்றலிலே இயங்குகிறது.

உலகைப்போல் பெரியவர்கள்; அணுவைப்போல் நுண்ணியவர்கள். எது பொருள், எது சக்தி என்ற வேறுபாடுகூட இல்லாத ஒரு நிலை அவர்களின் நிலை. சுருங்கவும் விரியவும் வல்ல ஆன்ம சக்தியானது உள்ளத்தை மட்டுமல்லாமல் உடம்பையுமே இயக்கக்கூடிய ஒரு பெரிய ஆற்றலாக அவர்களிடம் இயங்குவதால், சாதாரண மனிதர்களினால்

செய்ய முடியாத பல செயல்களை அவர்கள் எளிதிலே செய்கிறார்கள். இந்த உலகில் சில பித்தலாட்டக்காரர்கள் இருக்கலாம். ஏமாற்றுகிற இந்தப் போலிகளைப் பற்றி நான் சொல்லவில்லை. உண்மையாகவே செயற்கரிய செய்யும் பெரியோர்களையே குறிப்பிடுகிறேன். இவர்களைத்தான் சித்தர்கணம் என்று மெய்யுருகி வணங்குகிறார் தாயுமானவர்.

சித்தர்களின் கோயில் இந்த உடம்பாகிய ஆன்ம ஆலயம். இதில் பல வழிபாடுகள் செய்து, இந்த உடம்பாகிய சாதனத்தை ஒளிமயமாக்கி விடுகிறார்கள் சித்தர்கள். இதனால் இந்த உடம்பு அவர்களுக்கு ஒரு பெரிய வல்லமை வாய்ந்த கருவியாகிவிடுகிறது.

'space' என்கிற எல்லையையும், 'time' என்கிற காலக்கணக்கையும், 'event' என்கிற நிகழ்ச்சி வரம்பையும் தாண்டி, எப்போதும் எங்குமாய்த் திரிந்தும் மறைந்தும் தோன்றியும், நிலைத்து நிற்கக்கூடிய ஒரு சக்தியை அவர்கள் சித்தி செய்துகொள்கிறார்கள். எட்டு சித்திகள் முதலிய பகுதிகளில் இதன் விரிவைக் காணலாம். இப்படிப் பட்டவர்கள் ஆயிரத்தில், இலட்சத்தில் ஒருவராக எங்கோ கண்ணுக்குத் தெரியாமலும், கண்ணுக்குத் தெரிந்தும் நம்மால் புரிந்துகொள்ள முடியாத நிலையிலும், எப்படி எப்படியோ உலவுகிறார்கள். இவர்களில் சிலர் இந்த உடம்புக்குத் தாங்கள் என்ன வழிபாடு செய்தார்கள் என்பதை இலக்கியமாகவும் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். குரு சீட மரபிலேயும் இந்த இரகசியங்களை வழங்கி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வழிபாட்டு முறையிலே சேர்ந்ததுதான், கருவூராரின் பூஜாவிதி என்பது.

உடம்பாகிற வீட்டைப் பாடுகிறார் கருவூரார். பராசக்தியும் பராபரமும் ஒன்றாக வசிக்கிற வீடாகும் இந்த உடம்பு என்கிறார். நாதம் ஒலிக்கிற ஞானமணி இல்லம் என்று இந்த உடம்பை அழைக்கிறார். இந்த உடம்பாகிய வீடுதான் சித்தர்கள் எல்லாம் தேடுகிற வீடு என்றே பாடுகிறார் :

சூட்சம் இவள் வாசமது
    நிலைத்த வீடு
சொல்லுதற்கோ எங்குமாய்
    நிறைந்த வீடு
தேசமதில் போய்விளங்கும்
    இந்த வீடு
சித்தாந்த சித்தரவர்
    தேடும் வீடு
ஓசைமணிப் பூரமதில்
    உதிக்கும் வீடு
ஓகோகோ அதிசயங்கள்
    உள்ள வீடு
ஆசுகவி மதுரமது
    பொழியும் வீடு
அவன் அருளும் கூடிவிளை
    யாடும் வீடே!

என்று சித்தர்களுடைய உடம்பாகிய வீட்டின் சிறப்புகளைப் பாடுகிறார் கருவூரார். எந்த உடம்புக்கும் இத்தனை உள் ஆற்றல்கள் உண்டு. அவற்றைக் கண்டு தெளிந்து, பேணி வளர்த்து, ஆள்வதே இந்தச் சித்தியின் நுட்பமாகும்.

ஆனால், இப்படிப்பட்ட அரிய நுட்பங்களை இந்த உடம்பினுள் எல்லாராலும் கண்டுகொள்ள முடிகிறதா? இந்த உடம்புக்குள் கலந்து நிற்கிற சோதியாகிய பரஞ்சுடரைத் தேடித்தேடி வீணானவர்கள் எத்தனை பேர்!

ஓடி ஓடி ஓடி ஓடி
உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி
நாட்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி
மாண்டுபோன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி
எண்ணிலாத கோடியே

என்கிறார் சிவவாக்கியர்.

இப்படி எத்தனையோ முயற்சிகள் செய்து மாண்டுபோன மக்களின் நடுவிலேதான், மகான்களும் தோன்றி உலவுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை எப்படி மக்களுக்கு இனம்காட்டிக் கொள்கிறார்கள்? அதுதான் கேள்வி. அதுதான் சிரமமும் ஆகும்.

வேடங்களையும் ஆசாரங்களையும் புறச் சான்றுகளையுமே மதிக்கிற இந்த உலகத்தில், இவையொன்றும் இல்லாமல் பித்தரைப் போலும், பேயரைப் போலும் காட்சி தருகிற மகான்கள் எத்தனை பேர்? கோட்டிக்காரர்கள் என்றும், வெறியர்கள் என்றும் எத்தனை பேரை உதாசீனம் செய்கிறது இந்த அறிவுலகம். ஆனால், அவர்களோ பிறர் தம்மைப் பார்த்து நகையாடுவதையும் நகையாடிக்கொண்டே, எங்கோ ஒரு மூலையிலோ, ஏதோ ஒரு தனக்குத்தானே நடக்கிற உரையாடலிலோ வாழ்கிறார்கள்; வளைய வருகிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் மட்டுந்தானா? இல்லை. உலக நாடுகள் எங்கிலும் எந்த மொழி பேசும் மக்களிடையேயும் இத்தகைய மகான்கள் இருக்கிறார்கள். அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். உலகெங்கிலும் அவர்கள் நிலை இதுவே.

இந்த நிலைகளை மேலும் ஆராய்கிற ஒரு தனி அத்தியாயமே இந் நூலில் உள்ளது.

ஞானிகளும் சித்தர்களும் முனிவர்களும் நிரம்பிய தேசம் பாரத தேசம். அறிவைக்கொண்டு ஆராய்ந்து, ஏதேதோ புதுமைகளைக் கண்டுபிடிக்கிற விஞ்ஞான வளம்கொண்ட நாடுகள் எல்லாம் இப்போது இந்திய நாட்டு ஞானிகளின் சாதனைகளிலே உள்ள நுட்பங்களை ஆராயத் தொடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக நமது பெருமைகளை, நமது மகிமைகளை, நமக்கே அவர்கள் எடுத்துச் சொல்கிற காலம் வந்திருக்கிறது.

சித்தர்களின் உள்ளப் பாங்குகளையும், இவர்களுடைய உடம்பின் நிலைகளையுமே விஞ்ஞான முறையிலே ஆராயவேண்டும் என்ற நாட்டம், உலக நாடுகள் அனைத்திலுமே வளர்ந்துவருகிறது.

இந்த ஆராய்ச்சிகள் ஒருபுறம் இருக்க இந்த மகான்களைத் தேடிப் பிடித்து, உண்மை எங்கே இருக்கிறது, ஏமாற்றமும் போலித்தனமும் எங்கே இருக்கின்றன என்பதை வேறுபடுத்திக் கண்டுகொள்வது, சாதாரண அறிவுக்குச் சாமானியமாக முடிகிற காரியமில்லை. ஏனென்றால் ஞானிகளின் பேச்செல்லாம் பேசாத பேச்சாக இருக்கிறது. அவர்களுடைய இரகசிய இலக்கியமும் எழுதாத எழுத்தாக இருக்கிறது. இந்த இடர்ப்பாடுகளைக் கடந்து, முடிந்தவரை கண்டுகொள்ள வேண்டும் என்ற ஆவல் ரஷிய தேசத்தில் நாளும் அதிகரித்து, ரஷியப் பல்கலைக் கழகங்களில் ஸைகோட்ரானிக்ஸ் என்னும் உள இயல் ஆய்வு நடந்துவருகிறது என்பது ஒரு நல்ல அறிகுறியாகும்.

எத்தனை விஞ்ஞானம், எவ்வளவு வளர்ந்தாலும், உடம்பினுள் இயங்குகிற ஆன்ம சக்தியையும், அதன் ஆற்றல்களையும் அறிந்து தெளிவதே விஞ்ஞானத்தில் எல்லாம் பெரிய விஞ்ஞானம். உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றி, மனிதர்களை மனிதர்களாக வாழச்செய்கிற அறிவு இந்த ஞானத்திலேதான் இருக்கிறது. எதிர்காலத்தில் மேலும் வளர இருக்கும் இந்த ஆன்மக் கலை வளர்ச்சியிலே தமிழகத்தின் பங்கு மிகமிகப் பெரியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!

★

# 7. வழிபட நான்கு நெறிகள்

சித்தர்கள் தங்களுடைய சொந்த முறையிலே தியான யோகப் பயிற்சியைக் கடைப்பிடித்தவரே யென்றாலும், பொது மக்களுக்கு அவர்கள் தங்கள் நூல்களிலே நான்கு வகையான வழிபாட்டு முறைகளை நன்கு விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்.

நமது பாரத நாட்டிலே வழிவழியாக எல்லா மகான்களாலும் எடுத்துச் சொல்லப்பட்ட மார்க்கங்கள் நான்காம். அவை வடமொழியிலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பெயர்கள் உடையவை. இந்த நான்கையும் தொண்டு, வழிபாடு, இணைப்புறவு, பேரறிவு என நான்காகத் தமிழில் அழைக்கலாம்.

திருமூலர் தமது திருமந்திரத்திலே இந்த நான்கு நெறிகளையும் வரையறை செய்து அவற்றிற்குரிய இலக்கணங்களையும் அறுதியிடுகிறார். இன்னும் அச்சேறாத சில சித்தர் நூல்களிலும், வாய்மொழியாகக் குரு பரம்பரையிலே வழங்கிவருகிற உபதேச மொழிகளிலும், இந்த நான்கு நெறிகளும் விளக்கமாகப் பேசப்பெறுகின்றன. சமய சாத்திர நூல்கள் சிலவற்றிலும் இந்த நான்கு வழிகளின் முறைகளும் வகுத்துச் சொல்லப்பெற்று, அவரவர் நெறி விரிவாக ஆராயப் பெறுகிறது.

எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய விதத்தில், எல்லாச் சமயத்தினர்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் திருமந்திரம் இந்த நான்கு நெறிகளையும் விளக்குகிறது.

தொண்டு நெறியாகிய சரியை நெறியை தாசமார்க்கம் என்றும், நன்மகவு நெறியாகிய கிரியை நெறியைச் சற்புத்திரமார்க்கம் என்றும், நட்புநெறியாகிய யோகநெறியைச் சகமார்க்கம் என்றும், பேரறிவு நெறியாகிய ஞானமார்க்கத்தைச் சன்மார்க்கம் என்றும் திருமந்திரம் அழைக்கிறது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று திருமந்திரத்தின் ஐந்தாவது தந்திரத்தில் பொதுவாக விளக்கிவிட்டு, மறுபடியும் அதே தந்திரத்தில் தனித்தனி அதிகாரங்களிலே ஒவ்வொன்றையும் விளக்குகிறார் சித்தர்.

சரியை என்பது உடம்புகொண்டு செய்கிற இறைவனுக்குரிய மெய்த்தொண்டு. இதுவே தாசமார்க்கம்.

கிரியை என்பது செயல். இங்கே, வரையறை செய்யப்பெற்ற முறையான செயல்கள் செய்து வழிபாடு ஆற்றுவதைக் குறிக்கும். சிந்தித்துப் பார்த்தால் சரியையின் முதிர்ச்சியே கிரியை எனலாம்.

யோகம் என்றால் சேர்க்கை அல்லது பிணைப்பு. இங்கே, பரம் பொருளோடு பிராணனைக் குண்டலினி என்னும் ஆற்றலோடு எழுப்பி ஒளிநிலையிலே ஒன்றவைப்பது யோகம் எனப்படும்.

ஞானம் என்பது அறிவு. தமக்கு இயற்கையாக உள்ள அறிவைப் பசுஞானம் என்றும், கல்வியின் வாயிலாகப் பெறுகிற ஏட்டறிவைப் பாசஞானம் என்றும் அழைப்பார்கள். ஆனால் இங்கே கூறப்பெறு கிற ஞானம், குருதேவனால் உணர்த்தப்பெற்று உதித்தெழுந்து வளர்கிற மெய்ஞ்ஞானம் என்னும் பரஞானமாம்.

இந்த ஞானத்தின் விரிவுகளையும் திருமந்திரம் சித்திரிக்கிறது.

## தாசமார்க்கம்

இறைவன் குடிகொண்டுள்ள பொது ஆலயங்களிலே விளக்குகள் ஏற்றுதல், பூக்கொய்தல், கோவிலை மெழுகுதல், திருவலகிடல், துதி சொல்லல், மணி அடித்தல், திருமஞ்சனம் சேர்த்தல் முதலான பணிகள் தொண்டு நெறியாகிய தாசமார்க்கத்தின்பாற் சேரும்.

இந்த வழியிலே சென்று இறைவனை வழிபடுகிறவர்களுக்குச் சாலோகம் என்ற முத்தி கிட்டுகிறது.

## சற்புத்திர மார்க்கம்

வழிபடும் முறைகளையும், பூசாவிதிகளாகிய சடங்குகளையும், மந்திரங்களையும் ஆசானிடம் கற்று, அந்த முறைகளிலிருந்து சற்றும் வழுவாமல் தனி வழிபாடு செய்கிறவர்களே சற்புத்திரர்கள்.

இவர்களுடைய முறையில் மூன்று நிலைகள் உண்டு. முதலாவது, குருநாதனிடம் பெற்ற உபதேச வாயிலாக மனமே இறைவனுடைய கோயில் என்பதை உணர்வது; அடுத்தது, முறையான மந்திரங்களை ஓதுவது; மூன்றாவது, மூல மந்திரத்தைச் சட்டப்படி ஓதுவது.

இந்த முறையிலே வழிபடுகிற சற்புத்திர மார்க்கத்தினர் அடையும் முக்திக்குச் சாமீப முக்தி என்று பெயர்.

இவர்களுடைய செயல்கள் வருமாறு: பூசித்தல், வாசித்தல், போற்றுதல், செபித்திடல், இறைவனையே தொழுது இன்புற்றிருத் தல் ஆகியவைகளே.

## சகமார்க்கம்

தோழமைநெறி என்ற இந்த நட்புறவு வழியானது இறைவனைத் தோழனாகவே நினைத்து, தோழனாகவே கருதி, யோகமுறைகளிலே இறைவனாகிய தோழனோடு கலந்து நிற்றலேயாகும்.

இவர்கள் அடைகிற முத்திக்குச் சாரூப முத்தி என்று பெயர். இவர்கள் தேவஉடல் பெற்று இறையின்பத்தில் அழுந்தியிருப்பவர்கள். இவர்களுக்கு யோகமும் உண்டு; போகமும் உண்டு. அதாவது, இறை

யொளி வடிவமும், இன்பமாகிய உறுதிப்பொருள் நான்கையும் துய்க்கும் பேறும், ஆகிய இரண்டுமுண்டு.

உடம்பு இறைவடிவம் பெறுகிறது என்றால் என்ன பொருள்?

உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலும் யோகியானவன் நின்று நின்று பயில்வதால், உடலின் நாடிகள் தூய்மை பெறுகின்றன. பதினாறு கலைகளிலும் யோகம் பழகுவதால் உடம்பு ஒளிமயமாகிறது. பொறிகளும், புலன்களும், முதிர்ந்து கனிந்து ஞானமயமாகின்றன.

### சன்மார்க்கம்

மலங்களை நீக்கி, குருவருளால் சுத்தான்மா முத்தான்மாவாகி, ஞானப் பேரின்பத்திலே தோய்ந்து, அவனே தானே ஆகிய நெறிதான் சன்மார்க்கம் என்கிற ஞான வழியாகும்.

சமாதியாகிய தியான நிலைக்கு விதிக்கப்பட்ட ஆசனமும், முறைகளும் நன்கு தேர்ந்து, இரகசியமான பல பயிற்சி நுட்பங்களைத் தெரிந்து, அவை அனைத்தையும் குருவின் ஆணைப்படியே செய்து நடாத்தி, அசைவற்று ஒன்றி நிற்றலே சன்மார்க்கம்.

சித்தர்களின் இலக்கியத்தில் சிறப்போடும் விரிவோடும் பற்பல ஞான விதிமுறைகளோடும், அகரமுதல் ஆய்தம் வரை உயிர்ப்போடு சொல்லிவைத்துள்ள இரகசியங்கள் அனைத்தும் இந்த சன்மார்க்கத் தாருக்கு உரியனவாம். குரு உணர்த்த உணரவேண்டிய, மாபெரும் நெறி இதுவாகும்.

திருமூலர் இந்தப் பேரறிவாகிய செவ்வழியை எல்லையற்ற களிப்போடு பாடுகிறார் :

**சைவ சமயத் தனிநா யகன்நந்தி**
**உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையத் துளார்க்கு வகுத்துவைத் தானே!**

*

# 8. சித்தர் இலக்கியத்தின் அறிவியல்-தத்துவம்

விஞ்ஞான நுட்பங்களை நன்கு தேர்ந்து முன்னேறியுள்ள வெளி நாடுகளில் மனத்தையும் உயிரின் இயக்கத்தையும் உடற்கூற்று இயல்பு களோடு இணைத்து ஆராய்ந்து வருகிறார்கள். இங்கிலாந்திலே சில கழகங்கள் இந்த ஆராய்சியைத் தீவிரமாக நடத்திவருகின்றன. அமெரிக்காவிலும் இந்த ஆராய்ச்சி நடந்துவருகிறது. அமெரிக்க அரசின் அஞ்சல் தொலைபேசித் துறையினர் சைபர்நெடிக்ஸ் (Cibernetics) என்று அழைக்கப்பெறுகிற அறிவியல் துறையிலே, அரசாங்கத்தின் சார்பிலே, பல ஆராய்ச்சிகளை நடத்திவருகிறார்கள் என்பதை முன்னரே குறிப்பிட்டேன். பிரான்ஸ் முதலிய நாடுகளிலும் இத்தகைய ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன.

மேற்கு நாடுகளில் நடந்துவருகின்ற இத்தகைய ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தைவிட, நம்மோடு ஒட்டிய நாடுகளாகிய ரஷ்யா, செக்கஸ்லொவாகியா, பல்கேரியா, ருமேனியா போன்ற நாடுகளில் நடந்துவருகின்ற இத்தகைய ஆராய்ச்சிகள் மிகவும் வியக்கத்தக்க முறையில் பற்பல அரிய உண்மைகளை இன்று வெளியிட்டுள்ளன. முக்கியமாக ரஷ்ய நாட்டிலே 'Research of the PARA NORMAL' என்ற ஆய்வானது, அறிவியல் துறையிலே, பற்பல புதுமைக் கருவிகளைக் கொண்டு, சீரிய முறையிலே நடைபெற்று வருகின்றது. அந்தத் துறைக்கு அவர்கள் 'Psychotronics' என்று பெயரிட்டு, அந்தத் துறையிலே பல வல்லுநர்களை நியமித்து, மேலும் மேலும் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள். ரஷிய அரசாங்கம் ஆண்டுதோறும் இருபத்தொரு மில்லியன் ரூபிள் இந்த ஆராய்ச்சிக்கென்று ஒதுக்கிச் செலவிட்டு வருகிறது. லெனின் கிராடிலும், மாஸ்கோவிலும் மற்றும் முக்கியமான ரஷிய நகரங்களிலும் இருபது ஆய்வுக்கூடங்களை நிறுவி 'Psi-ology' என்றும், 'Psychotronics' என்றும், சிறப்புத் துறைகளை அமைத்து, புகழ்பெற்ற விஞ்ஞானிகளைக் கொண்டு இந்த ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். இந்த ஆய்வுகளின் முடிவுகளெல்லாம் நமது தமிழகத்துச் சித்தர்கள் கூறியுள்ள தொன்மைப் பேருண்மைகளை அப்படியே உறுதிப்படுத்துகின்றன. இவற்றில் சில அரிய சாதனை முறைகளை நாம் இங்கே குறிப்பிடவேண்டியது அவசியம் ஆகும்.

'P. K.' அல்லது 'Psycho kinisis' என்று ஒரு அறிவியல் ஆய்வு நடைபெற்று வருகிறது. இதனுடைய பாங்கு என்னவென்றால், நம்முடைய கண்ணின் பார்வையின் மூலமாகவே மனத்தை ஒருமுகப் படுத்தி, அந்த மன ஆற்றலைக்கொண்டு, தொலைவிலுள்ள ஒரு பொருளைக் கவர்ந்து இழுப்பதாகும். லெனின்கிராடு நகரத்திலுள்ள ஒரு பெண்மணி, இந்த அரிய ஆற்றலிலே மிகவும் முன்னேறியிருக்

கிறாள் என்ற குறிப்பு அச்சாகி வெளிவந்துள்ளது. இந்தப் பெண்மணியின் பெயர் நெலியா மிக்கெலோவா (Nelya Mikailova). இந்தப் பெண்மணி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, தனக்கு எதிரே உள்ள மேசையின்மீது தேத்தண்ணீர்க் கோப்பை வைத்திருப்பதை, தனது கண் பார்வையின் மூலமாகவே அருகிலே இழுத்து, தேத்தண்ணீர் பருகிவிடுகிறாளாம்! அதாவது கையை நீட்டி அந்தத் தேத்தண்ணீர்க் கோப்பையை எடுப்பதற்குப் பதிலாக, கண்பார்வை கொண்டே அந்தத் தேத்தண்ணீர்க் கோப்பையை ஈர்த்து, அருகிலே கொண்டுவந்து, தனது உதட்டிலே பொருத்திக் குடித்து விடுகிறாளாம்! சித்தர் நூல்களிலே குறிப்பிட்டுள்ள இந்தக் கண்ணீர்ப்பு ஆற்றலை அவர்கள் 'Psycho Kinisis' என்று அழைக்கிறார்கள்.

வெளிநாடுகளிலே ஆராயப்படுகிற இன்னொரு முக்கியமான மன ஆற்றல் (Telepathy) டெலிபதி என்பது. இந்த ஆய்வு, கம்யூனிச நாடுகளில் நடைபெறுவது போலவே, இங்கிலாந்திலும் சீரிய முறையிலே முன்னேறிவருகிறது. தொலைதூரத்திற்கு அப்பால் இருக்கக் கூடிய இரண்டு நண்பர்கள், தங்கள் எண்ணங்களைக் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளாமல், மனத்தின் அதிர்வு மூலமாகவே தங்களுக்குள் உரையாடிக் கொள்கிற இந்த ஆற்றலே, (Telepathy) டெலிபதி ஆகும். இங்கிலாந்து நாட்டிலுள்ள பல மனத்தத்துவ நிபுணர்கள் இந்த ஆய்விலே மிகவும் முன்னேறித் தங்கள் சோதனைகளின் சாதனைகளைச் சுவை மிக்க நூல்களாக வெளியிட்டுள்ளார்கள். நம்முடைய தமிழகத்துச் சித்தர்களின் இலக்கியத்திலே இந்த ஆற்றல், பற்பல பிரிவுகளிலே வகைப்படுத்திப் பெயர்சூட்டி அழைக்கப்படுகிறது. தொலைகேட்டல், தூரம் கேட்டல் என்றும், செய்தி என்றும் இன்னும் பல பெயர்களிலும் இந்த (Telepathy) டெலிபதி என்ற ஆற்றல் அழைக்கப்படுகிறது. திருமூலர் இதனையே, 'செய்தி கேட்கலும் ஆமே' என்று பாடுகிறார்.

மேனாட்டு நிபுணர்கள் ஆராய்ந்து வருகிற இன்னொரு முக்கியமான துறை, (Catalepsy) காடலெப்சி என்பதாம். இதனை சஸ்பென்டெட் அனிமேஷன் (Suspended Animation) என்றும் அழைக்கிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, டி.வி. சம்பந்தம் என்பார் வெளியிட்டுள்ள சித்தர் அறிவியல் அகராதியின் முதலாவது பகுதியிலே அவர் வெளியிட்டுள்ள மிக அரிய ஆங்கில முன்னுரையில், இந்த ஆற்றலைப் பற்றிய சித்தர்களின் அனுபவங்களையும், அவர்கள் காட்டியுள்ள யோக இரகசியங்களையும், மிக விரிவாக ஆராய்ந்து, வியக்கத்தக்க தெளிவோடு சுத்தமான ஆங்கிலத்திலே எழுதியிருக்கிறார். யோகத்திலே தேர்ந்த பல சித்தர்கள் வாரக் கணக்கிலே மண்ணிலே புதையுண்டு இருந்து, மீண்டும் மண்ணுக்குள்ளிருந்து வெளிவந்து, எப்போதும் போல உலவுவதே இந்த ஆற்றல் என்பதை, அவர் தமது முன்னுரையிலே மிக அழகாக விளக்குகிறார். அதோடு, மரணம் என்பதும், சஸ்பென்டெட் அனிமேஷன் (Suspended Animation) என்கிற உணர்வு நீங்கிய நிலையும், ஒன்றுபோலவே காணப்படும் என்றும், பல மரணங்கள் உண்மையில் மரணங்களே அல்ல, ஆனால் உயிர் ஒடுங்கி நிற்கும் உணர்வற்ற நிலையே என்றும், இந்த உணர்வற்ற

நிலையை மரணம் என்று தவறாக எண்ணி, அந்த உடம்பை எரித்து விடுகிறார்கள் என்றும், இந்த அறிஞர் விளக்கமாக எழுதியுள்ளார்.

யோகிகள், மூச்சுப் பேச்சின்றி உணர்வற்ற நிலையிலே தங்கள் உடம்பை வைத்துக்கொள்ளக் கூடிய ஆற்றலை, முயன்று பயின்று கைவரப் பெற்றுள்ளார்கள். இந்த ஆற்றலின் வியத்தகு தன்மையினால், உயிர் பிரியாத தன்மையிலும் அந்த உடம்பு உயிரற்ற பிணம் போலத் தோற்றம் தருகிறது. ஆனால் இது மரணம் ஆகாது. இந்த ஆற்றலைப் பற்றி மிகவும் விரிவாகச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இமயமலையின் பனிச்சரிவுகளில், பனிமூட்டம் மிகுந்து காண்கின்ற குளிர் காலங்களிலே, பல விலங்குகள் இயல்பாகவே தங்களுக்கு அமைந்துள்ள இந்த ஆற்றலினால், பனிக்கட்டிகளுக்குள்ளே, உணர்வற்ற நிலையிலே துயின்றிருந்து, மீண்டும் பனிக் கட்டிகள் கரைந்துவிடுகின்ற காலத்தில், உயிர்ப்புடன் எழுந்து, உலவத் தொடங்குகின்றன என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது. கால நிலையினாலும், வேறு பல புறக் காரணங்களினாலும், தானாகவே உடம்புக்கு ஏற்படுகின்ற இந்த உணர்வற்ற நிலையை, நம் சித்தர் பெருமக்கள் தமது முழு நினைவோடு கூடிய ஓர் ஆற்றலின் வாயிலாக, தங்கள் இச்சைக்கு ஏற்ற விதத்தில், தாங்கள் விரும்புகிற நேரத்தில், தாங்களாகவே தங்கள் உடம்பை, உணர்வற்ற நிலைக்கு உள்ளாக்கிவிடுகிற வல்லமையை, யோகப்பயிற்சி மூலம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சித்தர்களின் இந்த (Animation) அனிமேஷன் தாங்களாகவே தங்களுக்கு உண்டாக்கிக் கொள்ளுகின்ற 'Self-Induced Animation என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய 'Animation' என்ற உணர்வறச் செய்யும் ஆற்றலைப் பற்றி, கம்யூனிச நாடுகளைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள், மிக விரிவாகவே எழுதியிருக்கிறார்கள். டாக்டர் மெஸ்ஸிங் என்ற ஒரு விஞ்ஞானி இமயமலைக்கு வந்து, ஒரு சித்தரிடம் இதற்கான பயிற்சி பெற்றுத் தம் அனுபவத்தை எழுதியிருக்கிறார். எழுதியிருப்பது ஆங்கில நூல்களில் ஒரு புகழ்மிக்க வரலாறாகும். சித்தர் இலக்கியம் வெளியிட்டுள்ள பேருண்மைகளில் இந்த உணர்வறச் செய்கின்ற யோக சமாதிநிலை என்ற ஆற்றல் ஒரு முக்கியமான பகுதியாகும்.

'Animation' என்று அழைக்கப்பெறுகின்ற முழு உணர்வற்ற நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, அதே சமயம் உடல் உணர்ச்சிகள் மட்டும் இல்லாமல், மூச்சு மட்டும் இழைகிற ஒரு மயக்க நிலை சித்தர் இலக்கியங்களிலே பேசப்படுகின்றது. இந்த ஆற்றலுக்கு (Suggestive anaesthesia) சஜெஸ்டிவ் அனிஸ்தீஸியா என்று பெயர். இதைப் பல்கேரியா போன்ற நாடுகளில் (Suggestology) ஸஜெஸ்டாலஜி என்றும் அழைக்கிறார்கள். இந்த நிலைக்கும் (Hypnosis) ஹிப்னோசிஸ் என்ற மயக்கநிலைக்கும், ஒரு வேறுபாடு உண்டு. 'Hypnosis' என்பது மனம் உடலிலிருந்து வேறுபட்டு வேறொரு மண்டலத்திலிருந்து இயங்குகிற நிலை! ஆனால் (Suggestology) என்ற நிலையிலே, மனம் தனது உணர்ச்சிக்குள்ளிருந்து விடுபட்டு, ஓரறையில் சென்று அமர்ந்து விடுகிறது. இதனால் உடலின் நோவுகள் தெரிவ

தில்லை. இத்தகைய ஓர் ஆற்றலை வளர்த்துக் கொள்வதனால் யோகிகள் உடலின் பசியோ, தூக்கமோ அல்லது பிற வேதனைகளோ தங்களைத் தாக்காதவாறு, ஒருமனத்தோடு தங்கள் தவநிலையிலே இடையீடின்றி இருந்துவிடுகிறார்கள். வெளிநாடுகளில் இந்த ஆற்றலை வளர்த்து, அண்மைக் காலத்தில் சில அறுவை சிகிச்சைகளை நடத்தியிருக்கிறார்கள் என்று, ஆங்கில நூல்களில் படிக்கிறோம். மருந்துகள் கொடுத்தும், ஊசி மூலம் உடலில் ஏற்றியும், உடம்பை ஒருவகை மயக்க நிலைக்கு உள்ளாக்கி, பிறகு கத்தி கொண்டு அறுவை நடத்துவதற்குப் பதிலாக, இந்த 'Suggestology' என்ற முறையின் மூலமாகவே உடம்பை உறக்க நிலைக்கு உள்ளாக்கி, அறுவை சிகிச்சை நடத்துகிறார்கள். புகழ்பெற்ற சில யோகிகள் இத்தகைய நிலைக்குத் தங்கள் உடம்பைத் தாங்களாகவே உட்படுத்திச் சில சிகிச்சைகள் செய்துகொண்ட வரலாற்றை, சித்தர் நூல்களிலே படிக்கிறோம். போகர் என்ற சித்தர் இத்தகைய சில அறுவை சிகிச்சைகளை ஆற்றிய தாக வரலாறு கூறுகிறது.

தனி மனிதனுடைய உடம்பையும், உள்ளத்தையும் இவ்வாறு ஆராய்கின்ற சித்தர் முறைகளைப் போலவே, தனி மனிதனையும் இந்தப் பேரண்டத்தையும் இணைக்கிற வகையிலே, சில ஆற்றல்களை நம்முடைய சித்தர்கள் வளர்த்துள்ளார்கள் என்பதையும், சித்தர் இலக்கியங்களிலே அறிகிறோம். 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்று ஒரு சித்தர்மொழி வழங்குகிறது. புறமும் அகமும் ஒரே அமைப்பில் உள்ளன என்ற அடிப்படை உண்மையை இந்தச் சித்தர் மொழி கூறுவதோடுகூட, ஓர் அமைப்பின் மாற்றத்தில் மற்றொரு அமைப்பும் தானாக மாறிவிடுகிறது என்ற பேருண்மையையும் இது எடுத்துக் காட்டுகிறது. இசைக் கருவியிலே ஒரே சுருதியிலுள்ள இரண்டு கருவிகளை அருகருகே வைத்து, ஒன்றன் நரம்பைச் சுண்டி னோமானால், அடுத்த கருவியின் நரம்பு தானாகவே துடிக்க ஆரம்பிக் கிறது என்ற உண்மையை நாம் அறிவோம். இதைத்தான் (Sympathetic Vibration) சிம்பதெடிக் வைப்ரேஷன் என்கிறோம். இந்த உண்மையின் அடிப்படையில், அண்டத்தையும் பிண்டத்தையும் ஆராய்ந்து கண்டவர்கள் நம்முடைய சித்தர்கள்.

இன்று பல வெளிநாடுகளிலே இந்த ஆராய்ச்சி புதிய விஞ்ஞானக் கருவிகள் மூலம் நடந்துவருவதோடு, இந்த அறிவியல் துறைக்கு அவர்கள் (Cosmo Biology) காஸ்மோ பயாலஜி என்று பெயரிட்டிருக் கிறார்கள். இந்த ஆய்வின் மூலம் அவர்கள் சொல்வது என்ன வென்றால், இந்த அண்ட சராசரங்களிலுள்ள கோள்களின் இயக்கங் கள் அனைத்தும், நமது உடம்பையும், உள்ளத்தையும், நமது வாழ்வை யுமே, பாதிக்கின்றன என்பதாகும். இதனை ஏற்கனவே கண்டுள் ளோம். சித்தர்களின் சோதிட இயலிலே குறிப்பிட்டுள்ள பல பேருண்மைகளுக்கு, இந்த 'Cosmo Biology' என்ற அறிவியல் துறை உறுதியோடு சான்று பகர்கிறது! அதோடுகூட, முழுநிலா இரவு களுக்கும், அமாவாசை இரவுகளுக்கும், விண்ணிலே சில இயல்பாற்றல் கள் ஏற்படுகின்றன என்று சித்தர்கள் கூறுகிற உண்மையை, 'Cosmo Biology' என்ற இந்த அறிவியல் ஆராய்ச்சி உறுதிப்படுத்துகின்றது.

நிலையை மரணம் என்று தவறாக எண்ணி, அந்த உடம்பை எரித்து விடுகிறார்கள் என்றும், இந்த அறிஞர் விளக்கமாக எழுதியுள்ளார்.

யோகிகள், மூச்சுப் பேச்சின்றி உணர்வற்ற நிலையிலே தங்கள் உடம்பை வைத்துக்கொள்ளக் கூடிய ஆற்றலை, முயன்று பயின்று கைவரப் பெற்றுள்ளார்கள். இந்த ஆற்றலின் வியத்தகு தன்மையினால், உயிர் பிரியாத தன்மையிலும் அந்த உடம்பு உயிரற்ற பிணம் போலத் தோற்றம் தருகிறது. ஆனால் இது மரணம் ஆகாது. இந்த ஆற்றலைப் பற்றி மிகவும் விரிவாகச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இமயமலையின் பனிச்சரிவுகளில், பனிமூட்டம் மிகுந்து காண்கின்ற குளிர் காலங்களிலே, பல விலங்குகள் இயல்பாகவே தங்களுக்கு அமைந்துள்ள இந்த ஆற்றலினால், பனிக்கட்டிகளுக்குள்ளே, உணர்வற்ற நிலையிலே துயின்றிருந்து, மீண்டும் பனிக் கட்டிகள் கரைந்துவிடுகின்ற காலத்தில், உயிர்ப்புடன் எழுந்து, உலவத் தொடங்குகின்றன என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது. கால நிலையினாலும், வேறு பல புறக் காரணங்களினாலும், தானாகவே உடம்புக்கு ஏற்படுகின்ற இந்த உணர்வற்ற நிலையை, நம் சித்தர் பெருமக்கள் தமது முழு நினைவோடு கூடிய ஓர் ஆற்றலின் வாயிலாக, தங்கள் இச்சைக்கு ஏற்ற விதத்தில், தாங்கள் விரும்புகிற நேரத்தில், தாங்களாகவே தங்கள் உடம்பை, உணர்வற்ற நிலைக்கு உள்ளாக்கிவிடுகிற வல்லமையை, யோகப்பயிற்சி மூலம் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சித்தர்களின் இந்த (Animation) அனிமேஷன் தாங்களாகவே தங்களுக்கு உண்டாக்கிக் கொள்ளுகின்ற 'Self-Induced Animation என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய 'Animation' என்ற உணர்வறச் செய்யும் ஆற்றலைப் பற்றி, கம்யூனிச நாடுகளைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள், மிக விரிவாகவே எழுதியிருக்கிறார்கள். டாக்டர் மெஸ்ஸிங் என்ற ஒரு விஞ்ஞானி இமயமலைக்கு வந்து, ஒரு சித்தரிடம் இதற்கான பயிற்சி பெற்றுத் தம் அனுபவத்தை எழுதியிருக்கிறார். எழுதியிருப்பது ஆங்கில நூல்களில் ஒரு புகழ்மிக்க வரலாறாகும். சித்தர் இலக்கியம் வெளியிட்டுள்ள பேருண்மைகளில் இந்த உணர்வறச் செய்கின்ற யோக சமாதிநிலை என்ற ஆற்றல் ஒரு முக்கியமான பகுதியாகும்.

'Animation' என்று அழைக்கப்பெறுகின்ற முழு உணர்வற்ற நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, அதே சமயம் உடல் உணர்ச்சிகள் மட்டும் இல்லாமல், மூச்சு மட்டும் இழைகிற ஒரு மயக்க நிலை சித்தர் இலக்கியங்களிலே பேசப்படுகின்றது. இந்த ஆற்றலுக்கு (Suggestive anaesthesia) சஜெஸ்டிவ் அனிஸ்தீஸியா என்று பெயர். இதைப் பல்கேரியா போன்ற நாடுகளில் (Suggestology) ஸஜெஸ்டாலஜி என்றும் அழைக்கிறார்கள். இந்த நிலைக்கும் (Hypnosis) ஹிப்னோசிஸ் என்ற மயக்கநிலைக்கும், ஒரு வேறுபாடு உண்டு. 'Hypnosis' என்பது மனம் உடலிலிருந்து வேறுபட்டு வேறொரு மண்டலத்திலிருந்து இயங்குகிற நிலை! ஆனால் (Suggestology) என்ற நிலையிலே, மனம் தனது உணர்ச்சிக்குள்ளிருந்து விடுபட்டு, ஓரறையில் சென்று அமர்ந்து விடுகிறது. இதனால் உடலின் நோவுகள் தெரிவ

தில்லை. இத்தகைய ஓர் ஆற்றலை வளர்த்துக் கொள்வதனால் யோகிகள் உடலின் பசியோ, தூக்கமோ அல்லது பிற வேதனைகளோ தங்களைத் தாக்காதவாறு, ஒருமனத்தோடு தங்கள் தவநிலையிலே இடையீடின்றி இருந்துவிடுகிறார்கள். வெளிநாடுகளில் இந்த ஆற்றலை வளர்த்து, அண்மைக் காலத்தில் சில அறுவை கிகிச்சைகளை நடத்தியிருக்கிறார்கள் என்று, ஆங்கில நூல்களில் படிக்கிறோம். மருத்துகள் கொடுத்தும், ஊசி மூலம் உடலில் ஏற்றியும், உடம்பை ஒருவகை மயக்க நிலைக்கு உள்ளாக்கி, பிறகு கத்தி கொண்டு அறுவை நடத்துவதற்குப் பதிலாக, இந்த 'Suggestology' என்ற முறையின் மூலமாகவே உடம்பை உறக்க நிலைக்கு உள்ளாக்கி, அறுவை சிகிச்சை நடத்துகிறார்கள். புகழ்பெற்ற சில யோகிகள் இத்தகைய நிலைக்குத் தங்கள் உடம்பைத் தாங்களாகவே உட்படுத்திச் சில சிகிச்சைகள் செய்துகொண்ட வரலாற்றை, சித்தர் நூல்களிலே படிக்கிறோம். போகர் என்ற சித்தர் இத்தகைய சில அறுவை சிகிச்சைகளை ஆற்றிய தாக வரலாறு கூறுகிறது.

தனி மனிதனுடைய உடம்பையும், உள்ளத்தையும் இவ்வாறு ஆராய்கின்ற சித்தர் முறைகளைப் போலவே, தனி மனிதனையும் இந்தப் பேரண்டத்தையும் இணைக்கிற வகையிலே, சில ஆற்றல்களை நம்முடைய சித்தர்கள் வளர்த்துள்ளார்கள் என்பதையும், சித்தர் இலக்கியங்களிலே அறிகிறோம். 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்று ஒரு சித்தர்மொழி வழங்குகிறது. புறமும் அகமும் ஒரே அமைப்பில் உள்ளன என்ற அடிப்படை உண்மையை இந்தச் சித்தர் மொழி கூறுவதோடுகூட, ஓர் அமைப்பின் மாற்றத்தில் மற்றொரு அமைப்பும் தானாக மாறிவிடுகிறது என்ற பேருண்மையையும் இது எடுத்துக் காட்டுகிறது. இசைக் கருவியிலே ஒரே சுருதியிலுள்ள இரண்டு கருவிகளை அருகருகே வைத்து, ஒன்றன் நரம்பைச் சுண்டி னோமானால், அடுத்த கருவியின் நரம்பு தானாகவே துடிக்க ஆரம்பிக் கிறது என்ற உண்மையை நாம் அறிவோம். இதைத்தான் (Sympathetic Vibration) சிம்பதெடிக் வைப்ரேஷன் என்கிறோம். இந்த உண்மையின் அடிப்படையில், அண்டத்தையும் பிண்டத்தையும் ஆராய்ந்து கண்டவர்கள் நம்முடைய சித்தர்கள்.

இன்று பல வெளிநாடுகளிலே இந்த ஆராய்ச்சி புதிய விஞ்ஞானக் கருவிகள் மூலம் நடந்துவருவதோடு, இந்த அறிவியல் துறைக்கு அவர்கள் (Cosmo Biology) காஸ்மோ பயாலஜி என்று பெயரிட்டிருக் கிறார்கள். இந்த ஆய்வின் மூலம் அவர்கள் சொல்வது என்ன வென்றால், இந்த அண்ட சராசரங்களிலுள்ள கோள்களின் இயக்கங் கள் அனைத்தும், நமது உடம்பையும், உள்ளத்தையும், நமது வாழ்வை யுமே, பாதிக்கின்றன என்பதாகும். இதனை ஏற்கனவே கண்டுள் ளோம். சித்தர்களின் சோதிட இயலிலே குறிப்பிட்டுள்ள பல பேருண்மைகளுக்கு, இந்த 'Cosmo Biology' என்ற அறிவியல் துறை உறுதியோடு சான்று பகர்கிறது! அதோடுகூட, முழுநிலா இரவு களுக்கும், அமாவாசை இரவுகளுக்கும், விண்ணிலே சில இயல்பாற்றல் கள் ஏற்படுகின்றன என்று சித்தர்கள் கூறுகிற உண்மையை, 'Cosmo Biology' என்ற இந்த அறிவியல் ஆராய்ச்சி உறுதிப்படுத்துகின்றது.

வெளிநாடுகளிலே நடைபெற்றுவருகிற இத்தகைய ஆராய்ச்சிகளி லெல்லாம் மிகவும் முக்கியமானதும் மிகமிகச் சிறப்புக் கொண்டதுமான ஒரு துறை (Operative rest of the mind) ஆபரேடிவ் ரெஸ்ட் ஆப் தி மைன்ட் என்ற மனத்தத்துவ ஆய்வுத் துறையாகும். மனத்தை நீண்ட பயிற்சியின் மூலம் ஒருவகையான உறக்கத்துக்கு உள்ளாக்குகிற ஆற்றலே இந்த (Operative Rest) ஆபரேடிவ் ரெஸ்ட் என்பது. மனம் உறங்கும். ஆனால் அது முழு உறக்கம் ஆகாது. அறிதுயில் என்றும், தூங்காமல் தூங்குவது என்றும், அழைக்கப்படுகிற இந்த உள்ளுணர் வினுடைய தன்மையான உறக்கத்தை, யோகிகள் முழுமையான நினைவோடு பயின்று பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள்.

மூளைக்கு 'Alpha Rhythm' என்று அழைக்கப்படுகிற அதிர்வுநிலை உண்டாகும்போது, அந்த உள்ளத்தின் ஈர்ப்பு ஆற்றலும், கருத்துகளை வாங்கும் வலிமையும், அகமும் புறமும் ஒன்றி நிற்கிற ஆற்றலும், மிக உயர்வாகத் தொழிற்படுகின்றன என்ற உண்மையை, இன்றைய விஞ்ஞானம் பல சான்றுகளோடு கண்டுபிடித்திருக்கின்றது. இந்த 'Alpha Rhythm' என்ற அதிர்வு நிலைக்கு மனத்தைக் கொண்டு சென்றோமானால், வான மண்டலத்திலுள்ள எண்ண அலைகளை யெல்லாம் தானாகவே வாங்கிக்கொள்ளக் கூடிய வலிமை மனத்திற்கு உண்டாகிறது என்றும், சிற்றறிவானது பேரறிவோடு ஒன்றி நிற்கிற யோகம் கைகூடுகிறது என்றும், நம்முடைய சித்தர்கள் தங்களுடைய இலக்கியங்களிலே வற்புறுத்திக் கூறுகிறார்கள். இந்தத் தன்மையைத் தான் வெளிநாடுகளிலே விஞ்ஞானக் கூடங்களில் ஆராய்ந்து வருகிற மன ஆராய்ச்சி உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன. 'Operative Rest' என்கின்ற இந்த அறிதுயில் மூலம், கல்லாமலே கற்றுக்கொள்வதும், முயலாமலே முயற்சி கைகூடுவதும், நிகழ்கின்றன என்பதை ரஷிய நாட்டு ஆய்வு நூல்கள் கண்டு சொல்லியுள்ளன. இதைத்தான் சித்தர் கள் காணாத கண் என்றும், கேளாத செவி என்றும், கல்லாத கல்வி என்றும், இன்னும் பலவிதமாகவும் தங்கள் இலக்கியங்களிலே கூறுகிறார்கள்.

இதுவரை நாம் பார்த்த இந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளில் எல்லாம் மிகமிக முக்கியமான மற்றொரு பெரிய ஆராய்ச்சி, பரு உடம் பைச் சுற்றியுள்ள நுண் உடம்பாகிய ஒளி உடம்பைப் பற்றியதாகும். இந்த ஒளி உடம்பை வெளிநாடுகளிலே (Etheric Double) ஈதெரிக் டபிள் என்று அழைக்கிறார்கள். இந்த உடம்புதான் பருவுடலுக்கும் சூக்கும உடலுக்கும் நடுவே, ஒளி உடலாக இயங்கி, சுற்றியிருக்கும் இணைப்புப் பாலமாக அமைந்திருக்கிறது. இதைப்பற்றிய சித்தர் இரகசியங்கள் மிகப் பலவாம்.

உடம்பையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் ஆராய்கின்ற சித்தர் இலக்கியங்கள், ஒளி உடம்பைப் பற்றிய நுட்பங்களைச் சொல்லியுள்ள விதம் அறிவியலுக்கு ஒத்ததாக அமைந்துள்ளது.

ஒரு மரக்கிளையில் ஓர் இலை வாடி வதங்கிக் கீழே விழுவதற்கு முன்பு, அந்த இலையைச் சுற்றியுள்ள அதனுடைய ஒளிஉடம்பாகிய நுண் இலை முதலில் வாடி வீழ்கிறது என்றும், அதன் பிறகே பரு

இலை வாடி வீழ்கிறது என்றும், இன்றைய விஞ்ஞானம் நமக்கு உணர்த்துகிறது. அதோடுகூட ஓர் இலையின் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் கிழித்துவிட்டோமானால், அந்த இலை முழுமையாக வாடி விடு கிறது என்றும், இன்று நமக்கு அறிவியல் வல்லுநர்கள் எடுத்துக் கூறு கிறார்கள். இதுபோலவே மனித உடம்பு சாவதற்கு முன்பு, அந்த உடம்பைச் சுற்றி நிற்கின்ற ஒளி உடம்பு மரணத்தை உணர்த்துகிறது என்றும், அந்த ஒளி உடம்பின் ஆய்வு வாயிலாகப் பரு உடம்பின் தன்மைகளை ஆராய்ந்து கண்டுபிடித்துவிடலாம் என்றும், மேனாட்டு வைத்திய வல்லுநர்கள் இன்று கண்டு சொல்கிறார்கள். இந்த நுட்ப மான இரகசியங்களையெல்லாம் நுண்ணுடல் என்னும் வரையறையிலே, சித்தர் இலக்கியம் தெளிவான முறையில் பேசுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்களாகிய ஞான யோகிகள் இந்த உடம்பையும், உள்ளத்தையும், உயிரையும் ஆராய்ந்து கண்டு, இப்படிப்பட்ட இரகசியங்களையெல்லாம் தங்களுடைய இலக்கி யங்களிலே எடுத்துக் கூறியுள்ள பாங்கு, இன்றைய விஞ்ஞானக் கண் கொண்டு பார்க்கும்போது நமக்கு ஒரே அதிசயமாகத் தோன்றுகிறது.

காயம் என்று அழைக்கப்படுகின்ற இந்த உடம்புக்குள் இருக்கும் நுட்பங்களையெல்லாம், சித்தர் இலக்கியங்களிலே பலப்பல பகுதி களிலே நம்நாட்டு ஞானிகள் மொழிந்துள்ளதன் சாரத்தைத் திரட்டிக் கொடுப்பதுபோல், சிவயோகி இரத்தினசபாபதியார் 'காயசித்தி' என்ற தமது நூலிலே மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். சித்தர்களின் யோகப் பயிற்சி முறையிலே சில இரகசியங்களை, எனக்கு உணர்த்திய ஞானாசிரியர்களில் ஒருவரான சிவயோகி இரத்தின சபாபதியாரின் இந்த அரிய விளக்கத்திலிருந்து, ஒரு பகுதியை அப்படியே கீழே தருகிறேன்.

காயசித்தி என்ற மாபெரும் சாதனையை நம் சித்தர்கள் எப்படி உணர்ந்து ஆய்ந்து கூறியுள்ளார்கள் என்பதன் சாரத்தையே இந்தப் பகுதி நமக்கு எடுத்து இயம்புகிறது. சித்தர் இலக்கியங்களில் உள்ள உடற்கூற்று இரகசியங்களின் விந்தைகளை உணர்த்துகின்ற முறை யிலே அமைந்துள்ளது கீழே வருகிற இந்த விளக்கப் பகுதி :

"சாவதற்கும் பிறப்பதற்கும் காரணமாயுள்ளது இந்திரிய வயப் பட்ட மனம். அத்தகைய மனத்தைச் சிவத்துடன் பொருத்தினபோது மரணத்தை வென்றவனாகின்றான். எடுத்த பிறவியை மாற்றிப் படைத்தால் பிணி மூப்பு இவை அணுகாது என்கிறார். சித்தம் சிவசிந்தனையாற் சிவமாயிற்று என்கிறார். சிவமானோர் உடல் வீழ்வதில்லை. இறப்பு என்பது அவர்கள் விருப்பத்தில் உள்ளது. அவர் கள் ஒளிமயமான தேகமாய் விடுவர். இந்த உண்மையைத் திருவாசகத் தில் 'கண்ட பத்து,' 'கோயில் திருவிருத்தம்' முதலிய பகுதிகள் நன்கு விளக்குகின்றன.

அண்மையில் ஒரு நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த இராமலிங்கப் பெரியார் இத்தகைய யோகத்தைப் பெரிதும் வற்புறுத்தினார். உலக மக்கள் அவருடைய வார்த்தைகளின் உண்மையறியாது பயனடைய வில்லை. உலகுக்குப் பயந்தே அவர் ஒதுங்கினர். சிவவாக்கியர்,

உருத்தரித்த நாடியில்
ஓடுகின்ற வாயுவை
கருத்தினால் இருத்தியே
கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர்
மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர் ஆணை
அம்மைஆணை உண்மையே

என்று பாடுகிறார்.

மனிதனிடம் எண்ணுகின்ற செயல் இயல்பாக அமைந்துள்ளது. இதனால் உள்ளத்தில் ஓயாமல் உலகப் பொருள்களை எண்ணி எண்ணி உலகத்துடன் ஒட்டிக் கொண்டான். மனித சமூகம் இன்றடைந்துள்ள நாகரிகம் எண்ணத்தின் பயனேதான். இதுபோலவே பண்டைய பெரியோர், அழியும் உலகப் பொருளில் மனத்தைச் செலுத்தாமல், என்றும் அழியாத நிலையில் மனத்தைச் செலுத்தி, அதில் வெற்றி கண்டதே யோக சாஸ்திரம் ஆயிற்று. எல்லாரிடமும் மனம் இருந்தாலும் தக்க முறையில் அதைப் பயன்படுத்திடும் திறன் சிலரிடமே உள்ளது.

மனம் எனும் தத்துவம் தனியானதாக இல்லை. எண்ணும் ஒவ்வொரு எண்ணமும் ஒரு சக்தியாகி மனிதனிடமிருந்து புறப்படுகின்றது. அந்தச் சக்தி அதன் அதன் தன்மைக்கேற்ப மனிதனை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்கின்றது. தாழ்த்துவது என்றால் பூலோகத்துணர்வுடன் பொருந்தி, மனிதனின் கீழ்த் துருவத்தைச் சிறப்பித்துப் பாசத்திலிட்டுவிடுகிறது என்று பொருள். உயர்த்துவது என்றால், உலக சேவை, கடவுள் பக்தி முதலிய நற்செயல்களில் ஈடுபட்டு, நினைவையும் செயலையும் அத்தகைய முயற்சிகளில் செலுத்தி, கீழ்த்துருவம் செயல்படுவதைக் குறைத்தும், மேற்துருவம் ஒரு பண்பாட்டுக்கு வந்துவிடுமாறு வாழ்வது என்று பொருள்.

எண்ணும் மனம் மூளையைச் சார்ந்தும், செய்யும் செயல் உடலைச் சார்ந்தும் பிராண இயக்கமானது வெவ்வேறு திசைகளில் தொழிற்படுகிறது. அம் மனம் மூளை, அறிவு, உயிர், உணர்வு இவைகளுடன் சம்பந்தப்பட்டு, ஓர் ஒலிப்பதிவுச் சரடு (டேப் ரிக்கார்டு) போல, மன உடலில் உடனுக்குடன் பதிவுசெய்து கொண்டே உள்ளது. பதிவுகளைத் தாங்கி நிற்கும் ஒரு நிலையை உள்ளம் என்றும் மனமண்டலம் என்றும் கூறுகிறோம். அத்தகைய உள்ளம் ஆகாயத்திலும் உடலிலும் இடம் பெற்று மூளையில் ஆட்சிமண்டலமாக உள்ளது. ஆகவே அம் மண்டலம் மனிதனைச் சூழ்ந்திருந்து ஞானேந்திரியங்களையும் கர்மேந்திரியங்களையும் இயக்குகின்றது. இந்திரியங்கள் மனதன்றித் தொழிற்படும் போது அறிவுக்குள் அவை பதியாது. சில உட்கருவிகள் அறிவின் தொடர்பில்லாமலே தன்னியங்கிகளாகவும் உள்ளன.

மனத்தைச் சடம் என்று சில சமய நூல்கள் சொன்னாலும், மனம் சடமல்ல என்பதை இன்றைய விஞ்ஞானிகள் உண்மையில் ஒப்புக்கொள்கின்றனர். திவ்விய திருஷ்டி பெற்றவர்கள் எவ்வளவோ

தூரம் மன உடலில் சஞ்சாரம் செய்து, மீண்டு தமது தூல உடலில் வந்து கண்ட விஷயத்தை வெளிப்படுத்துகின்றனர். அதனால் அறிவு மனத்துடன் பொருந்தியேதான் சென்று திரும்பியுள்ளது. இறந்து போனவர்கள் தங்கள் விருப்பத்தை உடம்போடு வாழ்பவரிடமே தெரிவிக்கின்றனர். அதனால் பூத உடல் அழிந்தாலும் மனஉடல் அவர்களிடம் உள்ளது என்பதை அறியவும். கனவிலும் சில இறந்தோர் வந்து அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அதனால் இறந்துபோனவரிடமும் மனஉடல் என்ற உள்ளம் உள்ளது.

மாந்திரீகத்தில், பிராணப் பிரதிஷ்டை முதலிய சடங்குகளின் நோக்கம், செய்பவனிருந்து தேவைப்பட்ட பொருளில் ஆற்றலைப் பதிக்கிறான் என்பதே ஆகும். அதுவே பல ஆண்டுகள் நிலைபெற்றுத் தாயத்துகளாகவும், ஆலயக் கருவறைகளாகவும் ஆகின்றன. விஷம், நோய் முதலியவைகளைத் தீர்க்க, மாந்திரீகன் தன்னுடைய எண்ணச் சக்தியைப் பயன்படுத்துகிறான். எண்ணும் திறன் மூளையில் உள்ளபடியால் ஒரு சிறிய தத்துவம் நுண்ணிய நிலையில் கலந்து தேவைப்பட்ட பொருளில் பதிவுபெறுகிறது. வெகு தூரத்தில் உள்ள பெரியோர்களின் ஆசி, ஆபத்துக்காலத்தில் பக்தனுக்கு உதவியுள்ளதைப் பெரியோர்களின் வரலாறுகளில் காண்கிறோம். எண்ண அலைகள் புறப்பட்டு உலகம் முழுவதும் ஒரு சிறிது நேரத்தில் பரவி விடுகின்றன. ஒரு விநாடிக்கு 18,6,000 மைல் வேகத்தில் நடைபெறுகின்றது என்பதை ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதை ஐம்பது வருஷங்களுக்கு முன் ஒப்புக்கொள்ளுவது சிரமம். இப்போது ரேடியோக் கருவிகள் கொண்டு, பல்லாயிரம் மைல் நிகழ்ச்சியை இருந்த இடத்தில் கேட்கிறோம். இருந்த இடத்தில் எல்லாத் தூர அலைகளும் கிட்டின அலைகளும் உள்ளன. நமது விருப்பத்திற்கேற்ற ஒலிபரப்பு நிலையத்தைத் திருப்பி விரும்பின நிகழ்ச்சியைக் கேட்கிறோம். எல்லா நிகழ்ச்சிகளின் அலைகளும் ஒவ்வொரு இடத்திலும் உள்ளன என்பதையும் அறிகிறோம். அதனால் சப்த ரூபமான அலைகளுக்குக் காலமும் தூரமும் இல்லையென்ற உண்மையைக் காணும்போது, சத்தத்தைவிடத் துல்லிய மன அலைகளுக்கு, தேசமும் காலமும் என்ற தத்துவம் இல்லையென்றே சொல்லி விடலாம். எப்படி ஒலி அலைகள் உலகத்தைச் சூழ இருந்து கொண்டுள்ளனவோ, அதுபோலவே எண்ண அலைகளும் உலகத்தைச் சூழ்ந்தே உள்ளன. பாடுபவன் எண்ணமில்லாது பாடவில்லை. எண்ணங்களும் ஓசையின்வழி படர்ந்து எங்கும் செறிந்த பொருளாக ஆய்விடுகின்றன. ஆகவே ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தனிப்பட்ட எண்ணங்களோடு சேர்த்துச் சமூகத்தில் ஏற்பட்ட எண்ணங்களுடனும் கலந்தே உள்ளான்.

இத்தகைய எண்ண அலைகளால் செறிவுற்ற மனிதன், சாமானியனாக உள்ளவரையில் கூட்டத்தைவிட்டுப் பிரித்துக்கொள்வது கடினமானதாகவே உள்ளது. ஓரளவு வைராக்கியத்தால் பிரிந்தோ, மேலான நிலைகளில் விருப்பம் கொண்டோ அமையும்போது, மனமாற்றம் அமைந்து, ஓரளவு ஒழுக்கமும் பண்பாடும் அமைந்தவனாகின்றான். இதனினும் சிறந்த ஒழுக்கமும் பண்பும் அமையப்பெற்ற

வனிடம், மனத்திற்கேற்ற பண்பு உடலிலும் அமைந்து, உடல் மாற்றத்தை உண்டாக்குகின்றது. இந்த அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டு, சிவசிந்தனையே கொண்ட ஒருவனுடன் சிவம் பிரகாசிக்கத் தக்க தேஜசுடன் பொருந்தி, அழிகின்ற உடலும் மாறி, ஓர் அழியாத உடலைச் சிருஷ்டித்துக்கொள்ளமுடியும் என்று சமயப் பெரியோர் கண்டனர். 'சிந்தனை திருத்திச் சிவமாக்கி' என்று மணிவாசகர் கூறியுள்ளார். நல்ல மனம் தீமையை நாடாது. அன்பைச் செய்யும் அல்லது சாட்சியாக அமைந்துவிடும். தீமையை நாடின மனம் தீமையைச் செய்தே தீரும். எந்த அளவு அன்பு பெருகுகிறதோ அந்த அளவு பகை இல்லை. அகண்டமான கடவுளிடம் அன்பு கொண்டவன், உலகில் எப்பகையுமில்லாமல் வாழக்கூடும் என்பதே பண்டையோர் கண்ட முடிவு.

இடைகலை, பிங்கலை என்ற இரண்டு நாடிகளையும் ஒரு பாம்பாக உருவகித்துள்ளார்கள். அவை இரண்டு என்ற உகரத்தையும், எட்டு என்ற அகரத்தையும் குறிக்கும். இந்த அகர உகரமாகிய நாடிகள் மூன்று மடங்காக அமைந்துள்ளன. இவை பொருந்தும் வகையில் பன்னிரண்டு விரற்கடையில் சேர்ந்து சேர்ந்து பிரிகின்றன. கீழ்ப் பார்வையுடைய இரண்டு கண்களையும், மேற்பார்வை பொருந்தும் வகையில் செய்து, அவ்விடத்தில் மனத்தை நிறுத்தினால் எடுத்த உடல் அழியாது.

மனிதனின் உயரத்தைத் தொண்ணூற்றாறு பாகம் செய்தால், மூலாதாரத்திற்குக் கீழே பாதியும் மேலே பாதியும் அமையும். ஒரு பாதிக்கு நாற்பத்தெட்டு விரற்கடை ஆகும். ஆறு அடி உயரமாகக் கொண்டால் ஒரு பகுதி முக்கால் அங்குலம் அல்லது ஒரு விரற்கடை ஆகும்.

இரண்டு நாடிகளும் கால் பெருவிரல் வழியாகப் புகுந்து சிரசை நோக்கிச் செல்லுகின்றன. அவை நான்கு இடங்களில் மாறி மூன்று கண்டத்தை உண்டாக்குகின்றன.

நெற்றி நடுமுதல் பிரமப்புழை வரையில் சுவாதிட்டானமாம். இதன்மேல் நிராதார கலைகள் தொடங்கும். அவை வியாபினி வியோமரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனியாகும். இவைகள் சிவயோகத்தில் இடம்பெறுவன ஆகும், இந்த ஏழும் முன்னுள்ள ஒன்பதும் சேர்ந்து சந்திரகலை பதினாறாகும்.

'நான்று' என்றால் தொங்குகின்ற என்று பொருள். பிரணவம் என்பது அ, உ, ம, விந்து, நாதம் இவ்வைந்தும் சேர்ந்த நிலை. இவையெல்லாம் சாமானியர்களுக்குக் கீழ்முகம் கொண்டே நடைபெறுகின்றன. இந்தக் கீழ்நோக்கு, கண்களிலும் அமைந்துள்ளது. முட்டை என்பது முட்டையையும் குறிக்கும் ஆகாயத்தையும் குறிக்கும். காமம் பொருந்தியபோது கண்ணுக்குக் கீழ்நோக்கும், உலகநோக்கில் நேர்பார்வையும், சிவத்தை நோக்கியபோது ஊர்த்துவ திருஷ்டியாகிய மேற்பார்வையும் அமையும். ஊர்த்துவ திருஷ்டி அமைவே யோகத் தொடக்கம். சிவபெருமானுக்கு விருபாக்ஷன் என்ற ஒரு

பெயரும் உண்டு. (வேறுபட்ட பார்வையுடையவன்.) பார்வையை குரு காட்டிய வழியில் அமைப்பதே சிவயோக சாதனம். சதாசிவம் ஆகாய தத்துவத்திற்கு அதிபர். கண்களின் பார்வை ஆகாயக் கூறில் பதிந்தபோது கீழ்நோக்குதலையுடைய பிரணவம் மேனோக்குதலை அடைந்து மண்டலங்கள் விரியத் தொடங்கும். சதாசிவத்தில் உருவம் முடிந்து அருவம் தொடங்குகிறது.

சிவத்தில் எவ்வித உருவமும் இல்லை என்பதை நன்கு உணர வேண்டும். சிவம் எல்லாத் தத்துவங்களிலும் கலந்தேயிருந்தாலும் கீழ்த்துருவத்தில் உள்ள தத்துவங்கள் சிவமாகா. ஒரு சேவகனும் அரசாங்க ஊழியன்தான். அதிகாரியும் அரசாங்க ஊழியரே. ஆனால் இருவரும் சமமாக மாட்டார்கள். அதுபோலத்தான் சிவம் ஆகாயக் கூறில் விரிந்து எல்லாவற்றையும் தன்னுள் கொண்டுள்ளது. ஏனையோரிடமும் ஆகாயக்கூறு இருந்தாலும் கண்டநிலையில் உள்ளது; அகண்ட நிலையிலில்லை.

கண்பார்வை சிரசின் மேற்பகுதிக்குப் போகும் தகுதி பெற்றவர்களுக்கு இந்திரியாதிகளின் சேட்டை விடுபட்டுவிடும். சிவயோகம் அமைந்தால் இந்திரியாதிகள் தொழிற்படாது. சிவயோகம் கண்களில்தான் தொடங்குகிறது. சுவாசத்திற்கும் சிவயோகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

ஆகாயத்தில்தான் பிறவிக்கு வரவேண்டிய வித்தும், பிறவியை மாற்றவேண்டிய வித்தை வறுக்கும் நிலையும் உள்ளது என்பதை அறியவும். மேலான ஆகாயக்கூறு சிவத்தினிடமே உள்ளது. அங்கு இல்லாத ஒரு பொருள் வேறெங்கும் இல்லை. இங்குச் சிவத்தைப் பற்றிய விளக்கம் அறிய முனைவோம்.

சிவலிங்கம் என்ற சொற்றொடர் சிவமாகிய இலிங்கம் என விரியும். விரியுங்கால் 'சிவம்' என்னும் சொல் தன்மையும் 'லிங்கம்' என்ற பொருள் தன்மையும் குறிக்கும். குறிக்கவே லிங்கத்தின் தன்மை சிவம் எனப் பொருள்படும். உருவப்பொருள் அல்லாத சிவமானது ஓர் பொருளைக் குறிப்பதற்கு லிங்கம் எனப்பட்டது. இனி, லிங்கம் என்பது எல்லாம் தோன்றி ஒடுங்குவதற்கு உரிய மூலம் எனவும், சித்திரித்தல் எனவும் பொருள்படும்.

எல்லாப் பொருள்களிலும் மங்கலத்தைக் கொடுப்பதில் தனக்கு மேல் ஒரு மங்கலப்பொருள் இன்மையால் சிவம் மங்கலத்தைத் தருவது ஆகும். எல்லாப் பொருளுடனும் கலந்தும் அவற்றின் வேறாயும் அறிவுடையதாயும் உள்ள வெளியாகும். ஆதலால் பரவெளியைச் சிதாகாயம் என்றும் ஞானாகாயம் என்றும் கூறுவர். இப் பரவெளியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிர்ப்பொருளுக்கு அப் பரவெளியை அறிதலே [illegible]ந்தி. உயிர்கள் உருவங் கடந்தபோது இவ்வுண்மையை உணரும். சிறப்பான வழிபாடுடையார்களுக்குப் பரவெளியாகிய சிவம் என்ற எண்ணம் தோன்றும். பரவெளி இயல்பாகவே உள்ளபடியால் சுயம்புலிங்கம் என்ற பேருடையது.

பூதவெளியாகிய ஆகாயம் உயர்ந்தும் அகன்றும் தோற்றுவதால் லிங்கத்தின் மேல் பாகம் உயர்ந்தும், அடிப்பாகம் ஆவுடையார் விரித்து வட்டமாகவும் அமைந்துள்ளது. பிரணவமும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், அக்கினி, சூரியன், சந்திரன் என்ற எட்டு நிலையையும் தன்னுள் கொண்டதுபோன்ற வடிவுடைய அண்டமாகிறது. அத்தகைய அண்டத்திற்கு மேல்முகடு திறக்க மக்களிடையே யுள்ள கண்களேதான் சாவியாக உள்ளன. இவ்விதமான எட்டு நிலை மனிதனிடம் உள்ளது. இந்த எட்டையும் அல்லாத ஒரு தனிநிலையும் ஆன்மாவுக்கு உள்ளது. அது தாரகை என்ற பேரால் அழைக்கப்படுகிறது.

இவ்வகையான எட்டு நிலைகளும் வளர்ந்து விரிந்த நிலைதான் சிவலிங்கம். அது கோயிலில் தாபித்துள்ள தாவரலிங்கமல்ல என்பதை உணரவும்"

இதுவரை நாம் பார்த்த இந்த விளக்கமானது சிவயோகி இரத்தின சபாபதியாரின் வாக்கியங்களிலே அமைந்த சித்தர்களின் தத்துவ விளக்கமாகும்.

இந்தப் பகுதியை இவ்வளவு நீண்ட மேற்கோள் ஆக இங்கே கொடுப்பதன் நோக்கம் என்னவென்றால், நம் காலத்தில், நம் கண் முன்பு வாழ்ந்து ஒடுங்கிய ஒரு யோகி, அக்காலத்து யோகிகளின் ஞானப் பொருளை, இக்காலத்து அறிவியலின் முறையிலே கண்டு தெளிந்து, தாம் பயின்றதைத் தம் மாணவருக்கும் பயிற்றுவித்து, சித்தர் இலக்கியத்தின் அறிவியற் கொள்கைகள் அனுபவத்திற்கும் பகுத்தறிவின் ஆய்விற்கும் ஒத்திருப்பதை உணர்ந்து துய்த்தார் என்பதை எடுத்துக்காட்டவேண்டும் என்பதே!

★

# 9. அகலிடத்து உள்ளொளி

சித்தர்களின் நூல்களிலே சிந்தையின் பல நிலைகளையும், அந் நிலைகளில் ஏற்படுகிற அனுபவங்களையும் மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளார்கள்.

சித்தத்தைப் பரம்பொருளிலே கொண்டு பின்னுவது என்பதே ஞானப் பயிற்சியின் மையமான பாடமாகும்

இன்றைய அறிவியற் சோதனைகளிலே வெளிநாடுகளில் நடைபெற்றுவருகிற ஒரு பெரிய ஆய்வு மூளையின் அதிர்வு நிலை களைப் பற்றியது. அவர்கள் என்ன கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றால், மூளையானது அதனுடைய 'ஆல்பா' அதிர்வு நிலையிலே வியக்கத்தக்க பல பண்புகளைக் கொள்கிறது என்பதாகும். இந்த அதிர்வு நிலையிலே அதற்கு ஆபரேட்டிவ் ரெஸ்ட் (Operative rest) என்ற ஓர் அறிதுயில் வசமாகிறது என்பதை முன்னரே பார்த்தோம்.

மூளையின் ஆல்பா ரிதும் (Alpha Rhythm) என்பதையும் ஆபரேடிவ் ரெஸ்ட் (Operative rest) என்பதையும் விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து பல தத்துவப் பேருண்மைகளை அவர்கள் கூறியுள்ளார்கள். இவையனைத்தும் சித்தர் நூல்களில் காணப்படுகிற சுழுத்தி, துரியம் ஆகிய மன உலகங்களை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதைப்போல் அமைந்துள்ளன.

திருமூலருடைய திருமந்திரத்திலே வருகிற ஒரு வாக்கு இந்தப் பேருண்மையைத் தன்னுள் பொதிந்து காட்டுகிறது.

யோக சமாதியின் உள்ளே அகலிடம்

என்று பாடுகிறது திருமந்திரம்.

நமக்கு வெளியே உள்ள அகலிடம் இந்தப் பரந்த வையமாக விரிந்திருக்கிறது. ஆனால் ஒரு சித்தனுடைய மன உலகிலே அவன் காண்கிற அகலிடம் எத்தகையது?

ஞானிகள் கண்டு தெளிந்த பேருண்மை என்னவென்றால், இறைவன் அமர்ந்திருப்பது இந்த அகலிடமே.

உருவமற்ற அருவமாகிய பரம்பொருள், மனித உடம்புக்குள்ளே இப்படி ஓர் இடத்தைத் தனது கருவறையாகக் கொண்டு, இந்த உடம்பையும் அதனுள் ஐந்து பருப்பொருள்களையும், ஐம்புலன்களை யும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும், தனி உயிரையும் இயக்குவதோடு உள் இயக்கத்தைப் புற உலகோடு இணைத்து இயக்குகிறது. எனவே உடம்புக்கு உள்ளே இருக்கிற அகலிடமானது, வெளியில் உள்ள அகலிடத்தோடு இரண்டறக் கலந்து இயங்குகிறது,

இசையுலகிலே இரண்டு கருவிகள் சுருதி சேர்ந்து ஒலிப்பதுபோலே, இந்த இயக்கம் ஆதார சுருதியாகிய படைப்பின் பிரணவ ஒலியைத் தழுவித் தன் அகத்தில் உள்ள அகலிடத்தையும் புறத்தில் உள்ள அகலிடத்தையும் சேர்த்து இசைக்கிறது.

இதுவே மாபெரும் யோகமாகிய சேர்க்கையாகும். இதை ஒரு விதத்தில் புணர்ச்சி என்றே சிலமான பொருளிலே அழைக்கலாம். உண்மையில் சித்தர்கள் இந்த யோகத்தை அவ்வாறே அழைத்தும் இருக்கிறார்கள். மகள் தன் மணாளனோடு ஆடிய சுகத்தையே இதற்கு ஒப்பிடுகிறார்கள். இதுவே மெய்கொண்டு செய்கிற மெய்யான யோக முறையிலுள்ள அகலிடப் பயிற்சியாகும். இதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அகக்கண் பார்வை.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டறிவார் இல்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கில்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே.

என்ற பாடல் இந்த அகலிடப் பயிற்சியின் முறையையும் பயனையும் நன்கு உணர்த்துகிறது.

உடலைக் கொண்டு வெறும் புறப்பயிற்சிகள் எத்தனை செய்தாலும், எத்தனை ஆண்டுகள் செய்தாலும் இறையின்பம் கிட்டுவதில்லை. நாவிற்கு அமுதம் எப்படியோ, அப்படிக் காட்சிக்கு ஆரமுதமாக விளங்கும் இறைவனை வெறும் 'புறப்பயிற்சிகள்' நமக்குக் காட்டிவிட மாட்டா.

அகலிடம் நம்முடைய உடம்புக்குள்ளே இருக்கிறது. அங்கே பார்க்க வேண்டும். வெளியிலே பார்த்துப் பயனில்லை.

உள் நாடியுள்ளே நுட்பமாக நோக்கினால் ஒளி தெரியும். அந்த ஒளி நன்கு தெரியும்படியாகப் பார்த்தால், கண்ணாடியிலே தெளிவாக உருவத்தைப் பார்ப்பது போலே பரம்பொருளைப் பார்க்கலாம். அப்படிக் கலந்து நிற்கிறான் இறைவன்.

இந்த அகநாடி கொண்டு அகலிடத்தைப் பார்த்தால் அங்கே வானம் தெரிகிறதோடு, ஒளி தெரிகிறது, ஒலியும் கேட்கிறது.

அகலிடமாகிய அக உலகிலே கேட்கும் ஒலிகள் பத்து என்பதாக ஒரு கணக்கு உண்டு. அவையாவன:

மணியோசை, கடல்ஓதம், யானையின் பிளிறல், வேய்ங்குழலின் ஒலி, முகிலோசை, வண்டின் மிழற்றல், தும்பிநாதம், வளைகளின் ஒலி, பேரிகையின் முழக்கம், யாழின் இசை.

இந்த ஒலிகளை நாம் 'பார்ப்பதாகவே' சித்தர் இலக்கியம் பேசுகிறது. காரணம் வெளியே ஒலிக்கிற ஓசையை நமது செவி கேட்கிறது. அகத்தின் ஒலியைக் கேட்பது எது? வெளியே உள்ள ஒளியை நமது கண் பார்க்கிறது. ஆனால் நமக்குள்ளே தெரியும் ஒளியை, இமைகளை மூடிய நிலையிலே நாம் பார்க்கும் அந்த ஒளியை, எது பார்க்கிறது?

ஆழ்ந்து சிந்தித்தோமானால் ஐம்புலனின் நுகர்ச்சிகளையுமே நுகர்வது சித்தமேதான். வெளியில் உள்ள ஒரு பொருளைக் காண்பதும், வெளியில் உள்ள ஓர் ஒலியைக் கேட்பதும், எல்லாமே சித்தத்தின் செயல்தானே. இருப்பினும், வெளிப்பொருளின் நுகர்ச்சிக் கும் அகப்பொருளின் நுகர்ச்சிக்கும் வேறுபாடு உண்டல்லவா? அப்படி ஆயும்போது 'பார்வை' என்ற சொல்லுக்கு அதன் பொருள் ஐம்புல நுகர்ச்சிகளையும் உள்ளடக்கி விரிகிறது. எனவே அக ஒலிகளையும் நாம் பார்க்கிறோம் என்பது சித்தர் மரபு.

இவ்வாறு அகக்கண்ணே துணையாக ஒளியையும் ஒலியையும் பார்க்கும்போது அகலிடமானது உள்ளும் புறமுமாக விரிகிறது. ஐந்து பூத தத்துவங்களும், உடலில் இருப்பவை வெளியே இருப்பவையோடு புணர்கின்றன. அந்நிலையிலே சீவான்மா பரமான்ம சுகத்தைத் துய்க்கிறது. இந்த அகலிட இணைப்பே மேலான தியானம் ஆகும் என்கிறது சித்தர் இலக்கியம்.

ஓர் இரும்புத் துண்டை அடிக்கடி காந்தத்தோடு தேய்த்தோ மானால், அந்த இரும்பும் காந்த ஆற்றலைப் பெறுகிறது. அவ்வாறே நமது உள் அகலிடம் வெளி அகலிடத்தோடு அடிக்கடி சேர்க்கை பெறும்போது, அதாவது யோகம் பயில்கிற மாணவன் ஒருவன் இவ்வாறு அடிக்கடி தியானம் செய்யும்போது, அவனுடைய மனம் தெய்வ ஆற்றல்களை மேவிமேவி அந்த ஆற்றல்களைத் தானும் பெறுகிறது.

பல ஆண்டுகள் இவ்வாறு தொடர்ந்து செய்யும்போது மாணவனு டைய உடலானது ஒளி பெறுகிறது. அவனுடைய செவிகள் தொலை கேட்கும் ஆற்றலைப் பெறுகின்றன. அதோடு அவனுடைய தனித் தன்மை கழலுகிறது. அவன் உலகளவு விரிகிறான். அவன் உடல் தவேசரீரம் என்று கூறுகிற இறையுடம்பாக மாறுகிறது.

திருமூலர் போன்ற சித்தர் பெருமக்கள் இவ்வாறு அகலிடத்து மெய்யிலே காதலுற்று, அகலிடத்தே தவங்கூடி, அகலிடத்து அனுபவங் கள் அனைத்தையும் துய்த்து, இரவுபகல் அற்ற நிலையில் அமர்ந்து, மரணமிலாப் பெருவாழ்வு பெற்றார்கள். 'இகல் இடம்' என்று கூறப் பெறுகிற ஞான வல்லமைகளும், பேரின்பச் சித்திகளும் விளையக்கூடிய, ஆற்றலின் இருப்பிடமாகிய, இந்த இகல் மிக்க இடமே, சித்த யோகம் பயில்வாருக்குரிய புகலிடம். நந்தி தேவன் என்னும் பரமகுரு தமக்குப் போதவிட்ட இந்தப் புகலிடமும், இகலிடமுமான இந்த அகலிடத்தை யும், அதில் துய்த்த இன்பப் பயனையும் திருமூலர் பாடுகிறார்:

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தேமெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

★

# 10. இயற்கை அமைப்பின் இரகசியங்களைப் பற்றிய சித்தர் விளக்கம்

சித்தர்கள் தங்கள் நூல்களிலே இயற்கையின் அமைப்பை ஆராய்ந்து கண்டு, ஐந்து பூதங்களைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளை நமக்குக் கூறியிருக்கிறார்கள். ஐந்து பூதங்களின் வகைகளைக் கூறி இந்த ஐந்துக்கும் உள்ள ஆர்வக் கடவுள், சூக்குமக் கடவுள், நிறம், ஆதாரநிலை என்று நான்கு உட்கூறுகளைச் சித்தர்கள் நமக்குச் சொல்லுகிறார்கள்.

ஐந்து பூதங்களில் முதலாவது பூதம் நிலமாகிய மண். இதை மண்ணுலகம் என்றும், மண் என்றும், பூமி என்றும், பிருதிவி என்றும் பல பெயர்களிலே அழைக்கிறோம். இதுவே ஐந்து பூதங்களின் அடிப்படையாகும்.

இரண்டாவது பூதம் என்பது தண்ணீர். இதை அப்பு என்று வடமொழித் தத்துவ நூல்களிலே கூறுகிறார்கள்.

மூன்றாவது பூதம் நெருப்பாகும். இதை வடமொழி நூல்களிலே தேயு பூதம் என்று அழைக்கிறார்கள்.

நான்காவது பூதம் காற்று. இதை வடநூல் வல்லோர்கள் வாயு பூதம் என்கிறார்கள்.

ஐந்தாவது பூதம் வான். இதையே ஆகாய பூதம் என்று அழைக்கிறார்கள்.

இந்த ஐந்து பூதங்களுக்கும் ஆர்வக்கடவுள் தனித்தனியாக என்னென்ன மூர்த்திகள் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். அந்த இரகசிய மொழிப்படி, பிருதிவி என்ற மண்ணுக்கு ஆர்வக் கடவுள் அல்லது அபிமான தெய்வம் இந்திரன் ஆகும்.

தண்ணீராகிய அப்பு பூதத்திற்கு ஆர்வக்கடவுள் வருணன்.

நெருப்பாகிய தேயுதத்துவத்திற்கு அபிமான தெய்வம் அக்கினி.

காற்றாகிய தத்துவத்திற்குரிய அபிமான தெய்வம் வாயு என்று சித்தர்கள் பேசுகிறார்கள்.

ஆகாயத்திற்குரிய அபிமான தெய்வத்தை வியோமரூபி என்று அழைக்கிறார்கள்.

இந்த ஐந்து பூதங்களுக்கும் உரிய சூக்குமக் கடவுள் வடமொழியிலே சூட்சும பூத அதிதேவதை என்று பெயர்பெறும். இந்தச் சூக்குமக்

கடவுள் மண்ணுக்குப் பிரமன்; தண்ணீருக்குத் திருமால்; நெருப்புக்கு ருத்திரன்; காற்றுக்கு ஈசுவரன்; ஆகாயத்திற்குச் சதாசிவனார்.

இனி இந்த ஐந்து பூதங்களுக்கும் உரிய ஐந்து நிறங்களாவன :

மண்ணின் நிறம் பொன்னாகும்; தண்ணீரின் நிறம் பச்சை; நெருப்பாகிய பூதத்திற்குரிய நிறம் சிவப்பு; காற்றாகிய பூதத்தின் நிறம் கறுப்பு; வானத்துக்குரிய நிறம் புகையாகும்.

இந்த ஐந்து பூதங்களும் நம்முடைய உடம்பில் எந்தெந்த ஆதார நிலைகளிலே கூடுகின்றன என்பதைச் சித்தர்கள் கண்டு சொல்லியிருக்கிறார்கள்.

மண் என்ற தத்துவம் சுவாதிஷ்டானம் என்கிற ஆதாரத்திலும், காற்று மணிபூரகத்திலும், நெருப்பு அனாகதத்திலும், காற்று விசுத்தியிலும், ஆகாயம் ஆக்ஞையிலும் குடிகொண்டுள்ளன. இந்த ஐந்து தத்துவங்களை இயக்குவதன் மூலம், சித்தர்கள் உடம்பின் வாயிலாக வெளியிலுள்ள பஞ்ச பூதங்களாகிய ஐந்து தத்துவங்களையும் இயக்குகிறார்கள் என்பது இரகசியமாகும். இந்த நுட்பத்தை விளக்குகின்ற சித்தர்களின் யோக முறை, மூலாதாரத்திலிருந்து சிரசின் மேலுள்ள ஆன்ம இயக்க நிலையம் வரை எப்படி இந்தத் தத்துவங்கள் இயக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்த்துகிறது.

மூலாதாரத்திலுள்ள ஒளியே ஆறு ஆதாரங்களில் நிலைபெற்றுள்ள தேவதாபாவ நிறத்துடன் பொருந்தி, சிரசின் மேலுள்ள சகசரதளமாக அமைந்துள்ளது. அதாவது மனிதர்களுடைய தலையிலே ஆயிரம் இதழ்கள் கொண்ட ஆன்மத் தாமரை அமைந்திருக்கிறது. இந்த ஆன்மத் தாமரைதான் மூலாதாரத்திலுள்ள செவ்வொளியிலிருந்து பரிணமிக்கிறது. பஞ்ச பூதங்களுக்குச் சொல்லப்பட்டுள்ள தேவதைகளின் ஐந்து நிறங்கள், இந்த ஆறாவது நிலையமாகிய சகசரதளத்திலே எப்படி ஒன்றிநின்று, இந்த உடம்பின் தொண்ணூற்றாறு தத்துவங்களையும் இயக்குகிறது என்பதே, சித்தர்கள் யோகத்திலுள்ள பயிற்சிக்கு அடிப்படையான பாடமாகும்.

மூலாதாரத்திலிருந்து அந்தந்தத் தேவதைகளைப் பாவித்து ஒவ்வொரு ஆதாரமாகக் கடந்து, சிரசிலுள்ள சகசரதளத்தை அடைவதற்காக, நாள்தோறும் சில பயிற்சி முறைகளை நம்முடைய சித்தர்கள் செய்து வருகிறார்கள். இதுவே ஆதார யோகம் என்று பெயர் பெறுகிறது.

இந்த ஆதார யோகத்தைப் போன்று, சித்தர்களின் பயிற்சி முறையிலே அமைந்துள்ள இன்னொரு யோகத்திற்கு, நிராதார யோகம் என்று பெயர். அந்த நிராதார யோகத்தின் நுட்பம் என்னவென்றால், எந்த ஒரு மூர்த்தியையும் மனத்தினால் பாவித்து நினையாமல் யோகம் புரிவதாகும். எப்படியென்றால் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஐந்தையும் தனித்தனியாக நினைத்துப் பயிற்சி செய்யாமல், மூலாதாரம், ஆக்ஞை, சகசரதளம் ஆகிய மூன்று இடங்களிலும் உருவமற்ற அருவநிலையிலே தியானம் புரிகிற முறையே சித்தர்களின் நிராதார யோகம் ஆகும். இந்த உபாசனைக்குக் குறி, விந்தும் நாதமுமாகிய இரண்டுமே.

அவையே ஒளிமுறையும் ஒலிமுறையும் என்ற இரண்டு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன.

சாதாரண மக்களின் அன்றாட மொழியிலே கூறுவதாக இருந்தால், சித்தர்களுடைய ஞான வழிபாட்டிலே அடிப்படையாக அமைந்துள்ள முறைகள் இரண்டு. ஒன்று ஒளிமுறை; அதாவது பார்வையினால் வழிபடுகிற முறை. மற்றொன்று ஒலிமுறை என்பது; செவிப்புலனால் வழிபடுவது. இந்த இரண்டு முறைகளுமே சித்தர்களுடைய இலக்கியங்களிலே விரிவாக ஆராய்ந்து சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறு வழிபடுவது இந்த உடம்பையும் உலகையும் அளாவி நிற்கின்ற மாபெரும் பேராற்றலாகிய கடவுட் சக்தியையேயாகும்.

உள்ளும் புறமுமாய் அமைந்து நிற்கிற கடவுள் ஆற்றலை, இறைவன் என்ற பெயரிலே அழைக்கும் போது அந்த இறைவனுக்கு ஐந்து இலக்கணங்களைச் சித்தர்கள் கூறுகிறார்கள். எப்படியென்றால் இறைவனை நிரஞ்சனன் என்பார்கள். நிரஞ்சனன் என்ற சொல்லிற்குப் பொருள் 'அழுக்கு இல்லாதவன்', 'மலம் அற்றவன்' என்பதாம்.

இறைவனை நிராமயன் என்பார்கள். நிராமயன் என்றால் பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்று பொருள்.

உள்ளும் புறமுமாக நிற்கிற இறைவனின் பண்புநோக்கி அவனை நிராதாரன் என்பார்கள். நிராதாரன் என்ற வடமொழிச் சொல்லுக்கு ஆதாரம் இல்லாதவன் என்று பொருள். ஆதாரம் இல்லாதவன் என்றால், எந்தப் படைப்பும் இன்றி உள்ளும் புறமுமாய், எங்குமாய் நிறைந்தவன் என்பதாகும்.

இறைவனை நிராலம்பன் என்பார்கள். நிராலம்பன் என்றால் பற்றுக்கோடு இல்லாதவன் என்று பொருள். கால் ஊன்றாத நிலையை நிராதாரம் என்றும், கையிலே கோல்பிடித்த நிலையை நிராலம்பம் என்றும் சொல்லுவது உலக வழக்கமாகும். இறைவன் கால் பாவாமல் அதே சமயம் அலம்பி விழாமல் நிற்பவன் என்பதை நிராதார நிராலம்பன் என்று கூறுவது சித்தர் வாக்காகும்.

இறைவனுடைய ஐந்தாவது இலக்கணமாக அவனை அப்பிரமேயன் என்பார்கள். அப்பிரமேயன் என்றால் பரிமாணங்களால் அறியமுடியாதவன் என்று பொருளாகும். இதையேதான் அப்பர் சுவாமிகள் தமது தேவாரத்தில்,

> இப்படியன் இந்நிறத்தன்
> இவ்வண்ணத்தன் இவனிறைவன்
> என்றெழுதிக் காட்டொணாதே

என்று கூறுகிறார்.

சைவ ஆகமங்களில், பஞ்ச பிரம்ம மந்திரமே முடிவான மந்திரம் என்று சொல்லப்பட்டுள்ளது. மந்திரங்களிலே மணிமுடியான இந்தப் பஞ்சமுக மந்திரம், பஞ்ச பிரம்ம சொரூபத்தை வணங்குகிறது. அதாவது ஐமுகங்கொண்ட கடவுள் ஆற்றலை வணங்குகின்ற இரகசிய முறையாகும் இது.

சைவ ஆகமங்களில் பஞ்ச பிரும்ம சொரூபமாகிய கடவுட் தத்துவத்தைச் சதாசிவம் என்று அழைப்பார்கள். கடவுள் உருவங்களிலேயே மணிமுடியாகக் கருதப்படுகின்ற சதாசிவ உருவத்தையே, பரப்பிரம்மம் என்று ஞானநூல்கள் கூறுகின்றன. இந்தச் சதாசிவத்தைப் பக்தி என்னும் வழிபாட்டு முறையிலே வணங்குகிறவர்கள், இலிங்கத்தில் இந்தக் கடவுள் ஆற்றலை வரவழைத்து, அதாவது ஆவாகனம் செய்து வழிபடுகிறார்கள். இந்த வடிவததையே சித்தர்கள் தங்களுடைய சிரசிலே வைத்து வழிபாடு என்கின்ற ஞான வணக்க முறையிலே வணங்கி ஏத்தி, பற்பல ஆற்றல்களைப் பெறுகிறார்கள்.

உடம்புக்குள்ளே இத்தகைய சதாசிவ வடிவத்தை அருவமாக நிறுத்தி வழிபடுகின்ற ஞான முறைகளைப் பற்றி, நம்முடைய சித்தர் இலக்கியங்கள் மிகவும் விரிவாகவே பேசுகின்றன. அகண்டமாகிய சிவத்திற்கு, மனிதனுடைய சிரசின் நிலைகளை ஒவ்வொன்றாகக் கூறி, அதற்குரிய சில பெயர்களையும் ஞானநூல்கள் கூறுகின்றன. முகத்தின் முன்புறம் தத்புருஷன் என்று அழைக்கப்படுகிறது. பின்புறம் சத்தியோஜாதம் என்று பெயர் பெறுகிறது. இடம்புறத்திற்கு வாமதேவம் என்றும், வலப்புறத்திற்கு அகோரம் என்றுப் பெயரிட்டிருக்கிறார்கள். உச்சியில் இந்தச் சதாசிவ தத்துவமானது ஈசானம் என்று பெயர் பெறுகிறது.

தத்புருஷர், வாமதேவர், அகோரர், ஈசானர் ஆகிய நால்வரும் ஐந்தாவது நிலையாகிய சகசர தளத்திலே ஒன்றிநின்று அறிவுருவாக விளங்கி, இந்த உடம்பின் இயக்க சக்தியாகவும் உள்ளவர் என்பதே சித்தர் நூல்களின் விளக்கமாகும்.

ஐந்து முகங்களுடைய இந்தச் சதாசிவ மூர்த்தியை மேலும் ஆராய்ந்து, இந்த மூர்த்திக்குரிய உறுப்புகளைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது. உறுப்புக்கள் என்று சொல்லும்போது கண்ணினால் நாம் காணுகின்ற உறுப்புக்களின் பெயர்களே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அருவ நிலையிலே இந்த உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆற்றலைக் கூறுகின்றன.

சத்தியோஜாதர் என்பவரின் திசை மேற்கு ஆகும். இவருடைய பாதங்கள் இரண்டு; கைகள் இரண்டு; புருவ நாடி ஒன்று; பிடரிக்கண் ஒன்று; வலத்தோள், இடத்தோள் ஆக இரண்டு. இந்நிலையிலே சத்தியோஜாதரின் இடங்கள் எட்டாகும்.

வாமதேவரின் திசை வடக்காகும். இவருடைய இடங்கள் வருமாறு: அக்குள்-2, தொடைகள்-2, முழங்கால்கள்-2, கணைக்கால்கள்-2, இருக்கை என்கிற பிருஷ்டம்-2, சந்து-2, இடுப்பு-1, ஆக வாமதேவரின் இடங்கள் 13 ஆகும்.

தத்புருடரின் திசை கிழக்கு ஆகும்; எல்லா அவயவங்களையும் தாண்டுவதும் அடக்குவதுமாகிய ஒளிவடிவில், நான்கு திக்குகளிலும் ஆட்சி உடையுவர் தத்புருடராவார்.

அகோரரின் திசை தெற்கு ஆகும். அவருடைய இடங்கள் எட்டு. இதயம்-1, கண்டம்-1, தோள்-2, மார்பு-1, நாபி-1, வயிறு-1, முதுகு-1, ஆக எட்டு ஆகும்.

ஈசானர் மின்னல் போன்ற ஒளியாகும். இது பராசக்தியின் வடிவம். ஆன்மாவை இடமாகக் கொண்டது. நிவ்விருத்தி, பிரதிஷ்டை, வித்யை, சாந்தி, சாந்தியாதீதை என்ற கலைகளுடன் கூடி, எல்லா வடிவங்களுக்கும் காரணமானவர் ஈசானரே ஆம்.

சைவாகமம் இந்தச் சதாசிவ தத்துவத்தை முப்பத்தெட்டு சக்தி களாகக் கூறுகிறது. தத்புருஷ முகத்தினுடைய காட்சியானது அருள் நிலையிலுள்ள பொழுது, உலக காரியமான போக போக்கியங்கள், ஞானேந்திரிய கர்மேந்திரியத் தொழில்கள் எல்லாம் செயற்படும். இந்த மாற்றத்தை அடைவதே ஞானிகளின் இலட்சியம் ஆகும். இந்த மாற்றம் விரக்தி காரணமாக எல்லாவற்றையும் துறந்து விடுவதாலோ, ஈசான முகத்தில் பற்றி நின்று அங்கே கொண்டு மாற்றுவதாலோ அமைகிறது. இந்த மாபெரும் இரகசியத்தையே திருமூலர் தம்முடைய திருமந்திரத்திலே பாடுகிறார்:

நெற்றிக்கு நேரே புருவத் திடைவழி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகண் டேனே.

இந்த மாபெரும் இரகசியத்தையே மற்றொரு திருமந்திரத்தில் 'ஊன்பற்றி நின்ற உணர்வுறு மாந்திரம்' என்கிறார் திருமூலர்.

★

# 11. பிறவி இரகசியங்கள்

சித்தர் இலக்கியங்களிலே இந்த உடம்பின் பல உறுப்புக்களையும் ஆராய்ந்து, அடிப்படையான சில இரகசியங்களை, அறிவியல் முறையிலே ஞானிகள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த உண்மைகள் எல்லாம் மருத்துவ வல்லுநர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளுக்கு ஒத்தனவாக இருப்பதோடு, மேலும் மேலும் வளர்ந்துவருகின்ற இன்றைய மருத்துவ இயலின் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் முன்னோடிகளாக அமைந்துள்ளன என்பது, தமிழ்மக்கள் பெருமைப்படவேண்டிய உண்மையாகும்!

இந்த உடம்பின் மிக முக்கியமான பகுதியாகிய மூச்சுப்பையின் இயல்புகளையும், காற்று உடம்புக்குள் செல்வதும் மீள்வதும் ஆக உள்ள சுவாச நிலைகளையும் பற்றி, நம்முடைய சித்தர்கள் பல இரகசியங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

எந்தெந்த நாட்களில் எந்த எந்த நேரத்தில், இந்த உயிர்ப்பின் இயக்கம் எப்படி எப்படி உள்ளது என்பதற்கு, ஒரு விரிவான பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பட்டியலோடுகூட, நம்முடைய உடம்பு நாழிகை ஒன்றுக்கு முந்நூற்றறுபது தடவை சுவாசிக்கிறது என்று சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு நாளுக்கு, அறுபது நாழிகைகள் இருப்பதால் நாள் ஒன்றுக்கு 21600 தடவை சுவாசம் இயங்குகிறது என்று கண்டிருக்கிறார்கள் சித்தர்கள். அதோடுகூட, வளர்பிறை தேய்பிறை இவற்றின் கணக்குக்கு உட்பட்டு இந்த மூச்சு இயங்குகிறது என்பதையும் அளந்து சொல்லியிருக்கிறார்கள். முழுநிலா கழிந்த மறுநாளிலிருந்து அமாவாசைவரை உள்ள தேய்பிறைக்கும், அமாவாசையிலிருந்து முழுநிலாவரையிலான வளர்பிறைக்கும், என்றென்று எவ்வெப்பொழுது எந்த எந்த நாசியில் மூச்சு இழைகிறது என்பதை, நுட்பமான முறையில் கணக்கிட்டு நம்முடைய சித்தர் இலக்கியம் பேசுகிறது. மூச்சானது இடது நாசியில் இழையும் போது அதற்குச் சந்திரகலை என்பது பெயர். மூச்சு வலது நாசியில் இழையும் போது அதற்குச் சூரியகலை என்று பெயர். இரண்டு நாசியும் இணைந்த நடுமூச்சுக்குச் 'சுழுத்தி' என்று பெயரிட்டிருக்கிறார்கள். எந்த எந்தக் கலை இயங்கும்போது என்ன என்ன செயல்கள் புரியலாம் என்பதற்கும் விதிமுறைகள் வகுத்திருக்கிறார்கள். உடலுக்கும், உள்ளத்திற்கும், ஆன்ம வளர்ச்சிக்கும், கேடு ஏற்படாத வகையில், இந்த மூச்சு இயக்கத்தைச் சரி செய்துகொள்ள வேண்டிய அவசியத்தையும், முறைகளையும், சித்தர்கள் நமக்குக் கூறியிருக்கிறார்கள்.

உடற்பயிற்சியிலே தேர்ந்த யோகி ஒருவன், இந்த மூச்சின் இயக்கத்தைத் தன் இச்சைப்படி மாற்றும் வல்லமை பெற்றவன்

என்பதற்குச் சித்தர் இலக்கியங்களிலே பல சான்றுகள் காண்கிறோம். இந்த மூச்சின் இயல்புகள் பற்றிய பேருண்மைகளே, ஒரு தனி பகுதி யாக ஆராய்வதற்குரிய ஆழமும் நீளமும் கொண்டதாகும்.

இனி, உயிர்களை அவற்றின் பிறப்பு முறையை வைத்துப் பற்பல வகையான யோனிகள் என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். இந்த உயிர் வகைகளின் அடிப்படை நான்கு வகையான யோனிகள் என்று பகுத்துள்ளார்கள். இவற்றில் எண்பத்து நான்கு இலட்சம் வேறுபாடு களைச் சித்தர் இலக்கியம் கூறுகிறது. ஆன்ம வளர்ச்சி பெற்ற அமர நிலையிலே உள்ள மாமனிதர்களிலே பதினான்கு இலட்சம் வேறுபாடு கள் உள்ளன. மானுடர்களிலே ஒன்பது இலட்சம் என்றும், விலங்கு களில் பத்து இலட்சம் என்றும், ஊர்வனவாகிய உயிர்களிலே பதினொரு இலட்சம் என்றும், நீர்வாழ்வனவற்றில் பத்து இலட்சம் என்றும், தாவரங்களில் இருபது இலட்சம் யோனி பேதங்கள் என்றும், வகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இவை தவிர, பாதாள ராட்சச யோனி என்ற ஒருவகை உயிரினத்தைப் பாகுபடுத்தி, அந்த யோனியில் பத்து இலட்சம் பேதங்கள் இருப்ப தாகக் கூறியிருக்கிறார்கள்.

நான்கு வகை யோனிகள்: மண்ணில் தோன்றுவன; முட்டையில் வருவன; வியர்வையில் தோன்றுவன; கருவுற்றுப் பிறப்பின.

இனி, நாடிகள் பத்து என்று வகைப்படுத்தி யிருக்கிறார்கள். அவையாவன: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அக்கினி, அலம்புவி, சங்கினி, குழுவி என்று பெயர் பெறுகின்றன.

உடம்பிலுள்ள ஆதார நிலைகள் ஆறு என்றும், இந்த ஆறு நிலை களும் உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் இயக்குகின்ற மைய நிலைகள் என்றும் கண்டு சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஆதார நிலைகள் தவிர, இந்த உடம்பிலுள்ள மண்டலங்கள் மூன்றும் ஆதவன், சந்திரன், அக்கினி என்றும் பெயர் பெறுகின்றன.

மனத்தின் நிலைகளைப் பற்றிச் சொல்வதாக இருந்தால், மனத்திற்கு ஐந்து நிலை மாறுதல்களாகிய அவத்தைகள் உள்ளன. அவை நனவு என்கிற ஜாக்கிரம், சுவப்னம் என்கிற கனவுநிலை, கனவைத் தாண்டிய சுழுத்தி நிலை, அதையும் தாண்டிய துரிய நிலை, இவற்றிலும் கடந்த அதிதுரியநிலை. இந்த ஐந்துவிதமான நிலை களிலும் மனம் எங்கெங்கு எவ்வாறெல்லாம் இயங்குகிறது, அப்படி இயங்கும்போது உடம்பில் என்னென்ன மாறுபாடுகள் உண்டாகின்றன, என்பதையெல்லாம் பற்றிச் சித்தர் இலக்கியம் விரிவாக எடுத்துச் சொல்லுகிறது. இந்தச் செய்திகளை வரிசை முறைப்படி ஆராய்கிற ஒரு தனி விளக்கம் இந்நூலின் பிற்பக்கங்களில் வருகிறது.

இந்த உடம்பில் இயங்குகின்ற வாயுக்களைப் பத்து என்று சித்தர்கள் வகைப்படுத்தி யிருக்கிறார்கள். அவை பத்து நாமங்கள் பெறுகின்றன. பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், இருதான், தேவதத்தன், தனஞ்செயன். இந்தப் பத்து வகை

யான வாயுக்களும் உடம்புக்குள்ளே எவ்வாறு தொழிற்படுகின்றன, என்னென்ன செயல்களை இயக்குகின்றன என்பதைப் பற்றியும் சித்தர் இலக்கியம் விரிவாகக் கூறுகிறது.

இந்த உடம்புக்குள்ளே அறிவுமயமான பரம்பொருள் எப்படி இருக்கிறது என்பதை அருமையான சான்றுகளோடு சித்தர்கள் விளக்கு கிறார்கள்.

நீர் நுழையா இடத்தில் நெய் கசிந்து செல்லும். அதாவது தண்ணீர் புகமுடியாத அத்தனை சிறிய ஓட்டைக்குள்ளே நெய் கசிந்து சென்றுவிடுகிறது. நெய் நுழையாத இடத்துக்குள் புகை செல்கிறது. புகையும் புகமுடியாத துவாரத்துக்குள்ளே மனம் செல்கிறது என்றும், மனம் நுழையாத இடத்தில் அறிவு செல்கிறது என்றும், அறிவினாலும் புகமுடியாத அத்தனை நுண்ணிய இடமே பரம்பொருளின் இருப்பிடம் என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இந்த அறிவு புகமுடியாத சிறிய இடத்துக்குள்ளே எல்லாவற்றுக் குள்ளும், உள்ளும் புறமும் எல்லா உயிர்களுக்குள்ளும், அவற்றுக்கு வெளியேயும், பரம்பொருள் பரவி நிற்கிறது என்று சித்தர்களின் இலக்கியம் பேசுகிறது.

அதாவது பிறப்புகள் ஐந்து வகைப்படும் என்றும், இந்த ஐந்து வகை பிறப்புக்களையும் உயிருக்கு உயிராகிய பரம்பொருள் இயக்கி வருகிறது என்றும், சித்தர்கள் கூறுகிறார்கள்.

ஐந்துவகை பிறப்புகளாவன: மண்ணிலிருந்து பிறக்கின்ற புல், பூண்டு, செடி, கொடி முதலியன முதலாவது வகை.

இரண்டாவது வகையான பிறப்பு, தண்ணீர்ப் பொருளிலிருந்து உண்டாகிறது. அதாவது இந்த உயிரை உண்டாக்குவது நீர் வடிவத்தி லுள்ள ஆதாரப் பொருள். சுக்கிலம், சுரோணிதம் ஆகியவை இதில் அடங்கும். இவ்வகைத் தண்ணீர்ப் பிறப்புகள் கருப்பைக்குள்ளே தண்ணீர் புகுந்து வடிவம் கொள்கிறது. பசு, ஆடு முதலிய விலங்கினங் களும், மானுடமும் இந்த வகைப் பிறப்புள் அடங்குவன.

மூன்றாவது வகையான பிறப்புகள் நெருப்புப் பிறவிகள். அவை வியர்வையின் வெப்பத்திலிருந்து தோன்றுகின்றன என்று சித்தர்கள் கூறுகிறார்கள். ஈ, பேன், புழு, கம்பளிப்பூச்சி போன்றவை இவ்வகை யான பிறப்புகளாகும்.

நான்காவது வகையான பிறப்புகள் முட்டையில் உண்டாவன. அவற்றுக்கு ஆதாரம் காற்று என்று சித்தர்கள் சொல்லியிருக்கிறார் கள். பல்லி, ஓணான், பாம்பு, கோட்டான், கருடன், கோழி போன்றவை இவ்வகையான பிறப்புகள்.

இந்த நான்கு வகையான பிறப்புகளையும் தாண்டிய ஐந்தாவது வகையான பிறப்புகளைப் பற்றி நம்முடைய சித்தர் இலக்கியம் பேசு கிறது. அதற்கு வடமொழியில் மந்திர பீஜம் என்றும், தமிழில் 'ஆணை மொழிக்கரு' என்றும் பெயராகும். இந்த வகையான பிறப்புகள்

மகான்களுடைய சித்தத்திலிருந்து தோன்றிப் பிறப்பதாகச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இந்தப் பிறப்புக்களின் தன்மைகளைக் கொண்டு அறிவின் நிலை ஆறுவகைப்படும் என்று சித்தர் இலக்கியம் பகுத்திருக்கிறது.

தொடுவதை மட்டும் உணருகின்ற பிறவி ஓரறிவாகும். இதற்கு உற்றறிவு உயிர் என்று பெயர். தொடுவதையும், சுவைப்பதையும் உணர்கிற பிறவி ஈரறிவாகும். தொடுதல், சுவைத்தல், நுகருதல் ஆகிய மூன்று புலன்களும் இயங்குகிற பிறவி மூன்றறிவுப் பிறவியாகும். தொடுதல், சுவைத்தல், நுகருதல், காணுதல் ஆகிய நான்கு புலன்கள் செயற்படுகிற பிறவி நான்கு அறிவு உயிராகும். தொடுதல், சுவைத்தல், நுகருதல், காணுதல் ஆகிய நான்கோடு, கேட்டல் என்கின்ற ஐந்தாவது புலனும் தொழிற்படுகின்ற உயிர்களை ஐயறிவு உயிர்கள் என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். இந்த ஐந்தோடு சேர்ந்து ஞானம் என்கின்ற பகுத்தறிவு தொழிற்படுகின்ற பிறவியாகிய மனிதப் பிறவியை, ஆறறிவுப் பிறவி என்று சித்தர்கள் வகுத்துள்ளார்கள்.

ஓரறிவுயிருக்குச் சான்றுகள் புல், மரம், செடி முதலியன. இவற்றுக்குப் பரிச உணர்வு என்கிற தொடும் அறிவுமட்டுமே வேலை செய்கிறது.

சிப்பி, சங்கு முதலான பிறவிகளுக்கு இரண்டு அறிவுகள் உள்ளன. தொட்டால் அவற்றுக்குப் புரியும். அதுபோலவே அவை சுவைத்து உணர்கிற ரசஉணர்வும் உடைய ஈரறிவுப் பிறவிகள்.

கறையான், எறும்பு, போன்ற உயிர்கள் மூவறிவு கொண்டவை. தொடுதல், சுவைத்தல் ஆகியவற்றோடு வாசனை தேறுகின்ற கந்த உணர்வும் இவற்றுக்குண்டு.

தும்பி, வண்டு போன்ற உயிரினங்கள் நான்கு அறிவு கொண்டவை. தொடுதல், சுவைத்தல், நுகர்தல், காணுதல் ஆகிய நான்கு அறிவுகள் இவற்றுக்கு இருப்பதாக நம்முடைய சித்தர் இலக்கியம் ஆராய்ந்து கூறியுள்ளது.

பறவைகள், விலங்குகள் ஆகியவற்றுக்கு ஐந்து அறிவுகள் இருப்பதாகச் சித்தர்கள் ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள். அந்த ஐந்து அறிவுகளாவன: தொட்டால் தெரிந்துகொள்ளுதல், உணவைச் சுவைத்தல், வாசனை நுகர்தல், கண்ணினால் கண்டுகொள்ளுதல் ஆகிய நான்கோடு பறவைகளும் விலங்குகளும் காதினால் கேட்கும் ஆற்றலும் படைத்தவையாகும். எனவே இவற்றை ஐயறிவு உயிர்களாகும் என்று அழைத்தார்கள்.

இவை அனைத்தையும் தாண்டி முன்னேறிய ஞானம் என்ற பகுத்தறிவுள்ள பிறவிதான் மனிதப் பிறவி. எனவே மனிதனுக்கு ஆறறிவு இயங்குவதாகச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இந்த ஆறாவது அறிவு மேலும் வலிமைபெற்று ஞானஒளி பெறுவது எப்போது என்பதைச் சித்தர்கள் விளக்குகிறார்கள்.

எத்தனை அறிவு பெற்றிருந்தாலும், எந்த மனிதனும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பிணைப்புகளுக்குள் கட்டுப்பட்டவனே ஆவான் என்பது ஞானிகள் கண்ட உண்மை. இந்த மூன்று குற்றங்களையும் மும்மலங்கள் என்பார்கள். இந்த மும்மலங்களிலிருந்தும் ஒரு சீவான்மாவானவன் விடுபடும்போதுதான், மனித அறிவானது நிறைவு பெற்று, அந்த நிறைவின் பயனை அடைகிறது என்பது சித்தர் வாக்கு.

இந்த அறிவின் ஒளியை ஒருவன் பெறுவதற்குச் சித்தர்கள் கூறுகின்ற உபாயம், தன்னை அறிதல் என்ற ஞானக் கல்வியேயாகும். சித்தர்கள் தங்கள் மாணவர்களுக்கு எடுத்தோதுகின்ற ஆரம்பப் பாடங்கள் அனைத்திலும், இந்தத் 'தன்னை அறிதல்' என்னும் கல்வி அழுத்தமாகப் பேசப்பெறுகிறது. இந்தத் தன்னறிவுக்கு வேண்டியது முப்பொருள் உண்மை என்ற அறிவாகும். இந்த அறிவு சித்தர் இலக்கியத்திலே முப்பொருள் உண்மை விளக்கமாக அமைந்திருக்கக் காண்கிறோம்.

சித்தர்கள் அருவ நிலையில் கடவுளை உணரும் முறையில் பல சாதனைகளைப் புரிந்தவர்கள் என்றாலும், நம்முடைய சமயக் கோட்பாடுகளிலுள்ள சில நிலையான உண்மைகளை அவர்கள் மறுப்பதில்லை. துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம் என்று அழைக்கப்பெறுகிற வேறுபட்ட கொள்கைகளைச் சித்தர்கள் ஆய்ந்தவர்களே; ஆய்ந்து உணர்ந்தவர்களே. இவை அனைத்தும் அடிப்படையில் ஒன்றுதான் என்பது அவர்களுடைய முடிவு ஆகும்.

ஒன்று என்பது இரண்டாக வேண்டுமானால் அதற்கு மூன்றாவதாக ஒரு காரணம் செயற்படவேண்டும். உலக ஞானிகள் அனைவரும் இந்த உண்மையை அவரவர்களுடைய பாங்கிலே வெளியிட்டிருக்கிறார்கள். ஒன்றாயிருந்து இரண்டாகும்பொழுது, அந்த ஒன்றை இரண்டாக்கிய மூன்றாவது பொருளைப் பற்றிய பேச்சு எழுகிறது. இதை உணர்ந்த சித்தர்கள் இரண்டு ஒன்று மூன்று என்று சொல்லப் பெறுகிற முப்பொருள் உண்மையை வெளியிடுகிறார்கள்.

ஆனால் அவர்கள் வெளியிடுகிற முறையானது எல்லாச் சமயக் கோட்பாடுகளுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. இந்த முறையிலே பார்த்தோமானால் சித்தர்கள் 'நான், நீ, அது' என்றும், 'தன்மை, முன்னிலை, படர்க்கை' என்றும் கூறுகிற மொழிகளின் பொருள் நமக்கு நன்கு புலனாகும். உலகெங்கிலும் பொருந்திநிற்கிற பரம்பொருளை ஞானக்கண்கொண்டு பார்க்கிற சித்தர்கள், சில சமயங்களில் வைணவர்கள்போலப் பேசுவார்கள். சில சமயங்களில் சைவர்கள் போலவும், சில சமயங்களில் அத்துவைதிகள் போலவும், சில சமயங்களில் துவைதிகள் போலவும், அவர்களுடைய பேச்சு இருக்கும். ஆனால் ஆழ்ந்து பார்த்தோமானால் அந்தப் பேச்சு எல்லாம் றுதான் என்கிற அடிப்படை உண்மை.

திருமூலர் முப்பொருள் உண்மையைச் சைவ மொழியிலேயே எடுத்துக் கூறுகின்றார் :

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே.

பசு என்பது சீவான்மா, இது பாசபந்தச் சுழலிலே விழுந்து, வேற்றுமைகளுக்கு உள்ளாகி, பதியாகிய பரமாத்மாவை உணராமல் நிற்கிறது. இதற்குக் காரணம், பதிக்கும் பசுவுக்கும் இடையே பாசம் என்ற பிணைப்பு தடையாக இருக்கிறது. ஆகவே பதி என்பது அநாதியானதே. அவ்வாறே பசுவும் பாசமும் அநாதியான பொருள்களாக நிற்கின்றன. இதைத்தான் முப்பொருள் உண்மை என்று சமய உலகம் அழைக்கிறது.

பரமாத்மாவைப் பாசம் என்ற பிணைப்பு அணுக இயலாது. அது பசுவையே பிணைத்து நிற்கிறது. அப்படி நிற்கும் பாசமும், பதியானது பசுவை அணுகும்போது விலகிவிடுகிறது.

இந்த உண்மையைக் கம்பளிச்சித்தர் என்ற பழைய உரையாசிரியர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

நீரும் நீர்க்குமிழியும் கலந்து ஒன்றினாற்போல, பதியினைச் சேர்ந்து ஐக்கியபதம் பெற்றபின் பசுவுடன் பாசம் நட்டமாகிறது.

பாசம் அழியும் என்று சொல்லுவது அநாதி என்று சொல்லுவதற்கு முரணாகுமே என்ற ஒரு பயம் எழுகிறது அல்லவா? இதற்கு ஓர் அரிய விடையை நாம் பழைய உரை ஒன்றிலே காணுகிறோம்.

பாசம் அழியும் என்பது, பகல்விளக்குப் போலச் சக்தி ஒடுங்கி நிற்றலையே யாம்

என்பது பழைய உரை.

எரிகின்ற விளக்கு இரவிலேதான் கண்ணுக்குத் தெரிகிறது. பகலில் அது எரிந்துகொண்டிருந்தாலும் சூரிய வெளிச்சத்திலே விளக்கு எரிவது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. இதேபோன்று பதியானது பசுவை அணுகும்போது, பாசத்தின் ஆற்றல் நில்லாது போய்விடுகிறது. ஆகவே பதி பசு பாசம் என்ற மூன்றுமே நிலையான முப்பொருள்களாம்.

இந்தப் பேருண்மைகளை ஒருவன் உணர்வதற்கு வழிசெய்வதே சித்தர்கள் நெறியாகும். வேறுபாடுகளுக்கு உள்ளே உள்ள அடிப்படையான ஒருமைப்பாட்டை உணர்ந்தவர்கள் சித்தர்கள். ஆதலின், சித்தர் இலக்கியமானது தன்னை அறிந்தால் மூன்றையும் அறியலாம் என்ற இரகசியத்தை எடுத்துச் சொல்லி, அவ்வாறு தன்னை உணர்வதற்குரிய வழியையும் இயம்புகிறது. திருமூலர் இதையும் பாடுகிறார் :

தன்னைப் பரனைச் சதாசிவம் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற
முன்னைப் பழமல மூலத் தைவிட்டு
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே.

ஆன்மாக்களின் பக்குவநிலைக்குத் தக்கவாறு ஞானநூல்கள் இவர்களை மூன்று பிரிவில் வகைப்படுத்திக் கூறுகின்றன. மூன்றுவகை யாவன : விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவே.

விஞ்ஞானகலர் என்பவர்கள் ஆணவம் என்ற ஒரே மலத்தை உடைய்வர்கள். பிரளயாகலர் என்பவர்கள் ஆணவம் மாயை என்னும் இருமலமும் உடையவர்கள். சகலர் எனப்படுவோர் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலம் உடையவர்கள்.

இந்தப் பாடலில் தன்னை என்று குறிப்பது சகலரையாகும். பரனை என்று குறிப்பது பிரளயாகலரை. சதாசிவம் என்று குறிப்பது விஞ்ஞானகலரை..

இவ்வாறு பகுத்துக் கூறுகிறார் கம்பளிச் சித்தர்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்பை விதிப்படி சிந்திப்பதுவே சுத்தாத்துவித சித்தாந்த சைவர்களின் உபாயம் என்று பாடலுக்கு உள்ள பொருளை உரை கூறுகிறது.

இந்தப் பாடலிலே குறிப்பிட்டுள்ள கருத்தின் முக்கியம் என்ன வென்றால், முப்பொருள் உண்மையை உணர்ந்து அறிவது சித்தர் களுடைய ஞானப்பயிற்சியிலே ஒரு முக்கியமான கல்வி என்பதே யாகும். முப்பொருளை உணர்ந்து, அதனை அறிந்து, தலைவனை அறிகின்ற மாபெரும் கல்விக்கு ஒரு மாணவனைப் பயிற்றுவிக்கிற ஞானயோக முறையிலே, இந்த உணர்வானது அடிப்படையாக விளங்குகிறது. இதை மேலும் விளக்குகின்ற முறையிலே இன்னொரு திருமந்திரப் பாடல் அமைந்திருக்கிறது.

தன்னை அறியத் தனக்கொரு தீங்கில்லை
தன்னை அறியாமல் தான்கெடு கின்றனன்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அருச்சிக்கத் தானிருந் தானே.

தன்னை அறிதல் என்பதிலே முப்பொருளையும் உணர்தல் என்ற பேரறிவு தொக்கி நிற்கிறது. அந்தப் பேரறிவு கிட்டிவிட்டால், தான், அவன் என்ற பாகுபாடு இல்லாத நிலை எய்திவிடுகிறது. அப்பொழுது யார் யாரை வழிபடுவது, யார் யாரைத் துதிப்பது என்ற கேள்வி எழுகிறது அல்லவா? அவனை அருச்சிப்பது என்பது தன்னையே அருச்சிப்பது என்ற ஒருமைப்பாடுதானே. இந்த ஐக்கிய நிலை வரும்பொழுது, தானே தன்னை அருச்சித்துக்கொண்டு இருக்கக்கூடிய பெரிய சித்தி வந்தெய்துகிறது. திருமூலர் தமக்கு இந்தப் பேருணர்வு வந்தமைந்த வரலாற்றை ஒரு பாடலிலே மிக அழகாக எடுத்துச் சொல்லுகிறார் :

என்னை அறிந்திலன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்
என்னை அறியும் அறிவை அறிந்தபின்
என்னைவிட்டு என்னை உசாவுகின் றேனே.

தன்னை அறியும் அறிவே தலைவனை அறியும் அறிவாகப் பரிணமிக்கிறது. அப்பொழுது தலைவன் அல்லாமல் தாம் இல்லாமை என்கிற உண்மை புலனாகின்றது. பாசங்கள் எல்லாம் பொய்யாகத் தோன்றுகின்றன. தன் இயல்பை அறிவதற்கு உபாயமாகிய ஞானம் கிட்டிவிடுகிறது. அப்படிக் கிட்டும்பொழுது, தன் இயல்பையெல்லாம் உணர்ந்து, சீவான்மா சிவானந்தத்திலே ஆழ்ந்துவிடுகிறது. திருமூலர் திருநந்தி தேவரின் உபதேச முறையாலே பேரறிவு பெற்று, தமது பயிற்சியின்மூலம் இந்தப் பேரறிவின் பயனை நன்கு துய்த்தவர். அப்படித் துய்த்த அந்த இன்பத்தை அவர் இந்தப் பாடலிலே தெளிவோடு பாடுகிறார்.

★

# 12. யாக்கையின் இயல்பும் பயனும்

சித்தர்கள் இந்த உடம்பைப் பற்றிச் சொல்கின்ற தத்துவங் களிலெல்லாம் மிகப்பெரிய தத்துவம், சரீரசித்தி உபாயம் என்பதும், இந்த உடம்பைக்கொண்டு கடவுளைக் காணும் வழி என்பதுமே ஆகும்.

பொதுவாக, சித்தர்களைப் பற்றி நமது சமுதாயத்திலே ஒரு தவறான எண்ணம் நிலைபெற்று நிற்கிறது. அது என்னவென்றால், சித்தர்கள் உடம்பை உதாசீனம் செய்து பேசுவார்கள் என்றும், அழியக்கூடிய இந்த உடம்பிற்கு அவர்கள் எவ்வித முக்கியமும் கொடுப்பதில்லை என்றும், உடம்பை மிகவும் அற்பமாக மதித்துச் சித்தர்கள் பேசுகிறார்கள் என்றும், பொதுமக்கள் நினைக்கிறார்கள். இது தவறான எண்ணம். இந்த உடம்பு கடவுளைக் காண்பதற்காக ஏற்பட்ட ஒரு பெரிய கருவி என்பதே, சித்தர் ஞானத்தின் செம் பொருள் ஆகும். இந்த உடம்பு எடுத்ததன் பயன் கடவுளைக் காண் பதேயாகும் என்பதைச் சித்தர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள்.

கடவுள் இருப்பது இந்த உடம்புக்குள்ளே என்றும், இந்த உடம்பு தான் கடவுளுடைய மாபெருங் கோயில் என்றும் கூறுவதே, சித்தர் களின் பேரின்ப ஞானம்.

காடும் மலையும் கடந்து சென்று இறைவனைத் தேடுகின்ற நிலை சாதாரண அறிவு நிலையிலுள்ள மக்களின் முறையாகும். இதைத் தவறு என்று சித்தர்கள் ஏளனம் செய்வதில்லை. இந்த முறைதான் பக்தி மார்க்கம் என்று சொல்லப்படுகின்ற வழிபாட்டு முறையாகும். ஆனால் சித்தர்களின் முறை இதனின்றும் வேறுபட்டது.

> ஊனுக்குள் நீயிருந்து உலாவுவது அறியாமல்
> கானும் மலையும் அலைந்து காலலுத்தேன் பூரணனே

என்ற சித்தர் வாக்கிலே இந்தப் பேருண்மை மிக நன்றாகக் கூறப் படுகிறது. இதையேதான் திருமூலரும் தமது திருமந்திரத்தில்,

> கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோவென
> உள்ளத்தின் உள்ளே ஒளித்திருந்து ஆளுமே

என்று பாடுகிறார். எனவே இந்த உடம்பைப் பெற்றது, அறிவு கொண்டு பேரறிவாகிய பரம்பொருளைக் காணும்பொருட்டே என்பது சித்தர்களின் ஞானமுடிவு. அறிவுக்கு அறிவு என்பதும், அறிவினால் அறியவேண்டிய பேரறிவு என்பதும், இந்தப் பரம் பொருள் ஞானத்தையே. உடம்பிலுள்ள கடவுளை அறிவதே அறிவு

களிலெல்லாம் சிறந்த பெருமைக்குரிய அறிவு என்பது, சித்தர் இலக்கியத்தின் அடிப்படையாகும்.

சித்தர்களின் இரண்டு மார்க்கங்களிலே ஒன்றாகிய ஒலி மார்க்கத்தை உணர்த்துகிற நூல்கள் ஒலியிலே இறைவனைக் காணலாம் என்று கூறுகின்றன. அதாவது ஒலிவடிவாகிய பரம்பொருளை, ஒலியின் மூலமாகக் கேட்டு, அந்த ஒலி உணர்விலே இறை இன்பத்தை அனுபவிக்கலாம் என்பதாகும். இதை அவ்வையார் தமது அகவலிலே,

சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி

என்று கூறுகிறார். நாத வடிவமான பரம்பொருளைச் செவி உணர்விலே ஒலியாகக் கேட்டு இன்புறுகின்ற முறை இது. இதையே திருமூலரும்,

சத்தியார் கோவில் இடம்வலம் சாதித்தால்
மத்தியா னத்திலே வாக்கியம் கேட்கலாம்
தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதானந்தி ஆணையே

என்று பாடுகிறார்.

இதைத்தான் சங்கின் ஒலியிலே சதாசிவத்தைக் கேட்டல் என்று சில சித்தர்கள் பேசுவார்கள். சங்கில் வலம்புரி என்றும், இடம்புரி என்றும் இருப்பதுபோல, இந்த உடம்பிலே வலச்செவியில் கேட்கின்ற நாதம் என்றும், இடச்செவியில் கேட்கின்ற நாதம் என்றும் இரண்டு ஆன்ம நாதங்கள் நிகழ்கின்றன. இந்த இரண்டையும் வலம்புரி ஓசை, இடம்புரி ஓசை என்று சித்தர்கள் அழைப்பார்கள். வலம்புரியில் சிவ தத்துவமும், இடம்புரியில் சக்தி தத்துவமும் ஒலிக்கின்றன. சிவசக்தியின் ஒலி வடிவம் இதுவேயாகும். இந்த ஆன்ம ஒலிகளைக் கேட்கக்கூடிய ஆற்றலை உடம்பில் வளர்க்கின்ற முறைதான், சித்தர்களுடைய ஒலிப்பயிற்சி முறையாகும். இன்றைய விஞ்ஞான முறையிலே சொல்வதாக இருந்தால், வானளாவிய பரம்பொருளின் தெய்வ ஒலியை, இந்த உடம்பாகிய ரேடியோப் பெட்டியில் பிடித்துக்கொள்வதாகும். வானொலிப் பெட்டியிலே பிடித்துக்கொள்ளுகிற முறையில், இந்த உடம்பில் ஆன்மாவை ஏரியலாக்கி, இந்த உடம்பிலே உள்ளத்தை அந்தந்த வேவ்லெங்த் என்ற ஒலி நீளத்திற்கு இசைய, பொறி அமைப்புச் செய்கின்ற முறையே இந்த ஒலிப்பயிற்சியாகும். இப்படிச் செய்துகொண்டால், தெய்வ ஒலிபரப்பை இந்த உடம்பினுடைய அலைநீளம் பிடித்து இழுத்துக்கொண்டு ஒலிக்கின்ற ஆற்றலைப் பெற்றுவிடுகிறது! அப்பொழுது இந்தச் சித்தி பெற்ற உடம்பே, ஒரு ரேடியோ ரிசீவர் ஆகிய வானொலிப் பெட்டி ஆகின்றது.

உடம்பாகிய இந்த வானொலிப் பெட்டியை, ஒரு டெலிவிஷன் பெட்டியாகவும் படைத்துக்கொள்கின்ற ஆற்றலை வளர்ப்பது சித்தர்களின் ஒளிப்பயிற்சி முறையாகும். இதை 'ஒண்ணா நயனத்தில் உற்றஒளி' என்றும், 'கண்ணுளே இருப்பர் கடல் கடைந்தமால்'என்றும்

'கண்ணினின்று மின்னெழுந்து மின்னொடுங்கல்' என்றும் கவி எழிலோடு சித்தர்கள் பாடுகிறார்கள்.

இந்த இரண்டு வழிபாடுகளையும் வற்புறுத்திக் கூறுவதனால்தான், சித்தர்கள் துறவு என்ற சொல்லுக்கு ஆன்மப்பொருள் கூறுகிறார்கள். துறவு என்பது குடும்பத்தைத் துறந்து செல்லுவது என்று பொருளாகாது. வெளியே செல்கின்ற உடற்கருவிகளை, அவற்றிலிருந்து பிரித்து, உள்முகமாகச் செலுத்துவதுதான் பேரின்பமாகிய துறவுநிலை என்று சித்தர்கள் கூறுவார்கள். இதைத்தான் பழைய உரை-ஆசிரியர் ஒருவர்,

> ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் மூலமாய் கர்மாவினாலேயே
> ஓங்காரமான அறிவு வெளிப்பட்டு நிற்கும்

என்று கூறுகிறார். அவ்வையின் குறளுக்குப் பொருள் கூறுகின்ற சுந்தர மாணிக்க யோகீசுவரர் எழுதியுள்ள உரையிலே இந்த அரிய விளக்கம் காணப்படுகிறது.

ஒளியின் மூலமும் ஒலியின் மூலமும் கடவுளை அகத்திலே கண்டு ஆனந்தம் அனுபவிப்பதைத்தான்,

> ஓசை உணர்வுகள் எல்லாம் தருவிக்கும்
> நேசத்தா லாய உடம்பு

என்று அவ்வையார் கூறுகிறார்.

உடம்பு உறுதிப்படும்போது உடம்பிலுள்ள உயிருக்கு உறுதி ஏற்படுவதோடு, உறுதிப்பொருளின் இன்பமாகிய கடவுள் இன்பமும் துய்க்க நமக்குக் கருவியாக அமைகிறது என்பதே, உடம்பின் இயல்பையும் பயனையும் விளக்குகின்ற சித்தர்களின் பேரறிவுச் செம்பொருளாகும்.

உடம்பின் பயனையும் இயல்பையும் இவ்வாறு கூறுகின்ற சித்தர்கள், உடம்புக்குள் உடம்பாக இருக்கக்கூடிய சூக்கும உடம்பாகிய உள் உடம்பைப்பற்றி, விஞ்ஞானம் சான்று தரக்கூடிய முறையிலே, பல இயல்புகளை ஆராய்ந்து சொல்கிறார்கள். இந்த வெளி உடம்பை ஓர் இடத்தில் வைத்துவிட்டு உள்ள உடம்பினால் பயணம் செய்கின்ற முறைகளையும், இந்த உள்ள உடம்பைக் கொண்டு எத்தனையோ பல சித்திகளை ஆற்றுகின்ற நுட்பங்களையும், சாதாரண மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பல மகத்தான செயல்களை இந்த உடம்பு கொண்டு செய்யக்கூடிய முறைகளையும், சித்தர் இலக்கியம் விரிவாக எடுத்து விளம்புகிறது. இதையேதான் 'சைக்கோடிரானிக்ஸ்' என்று சொல்லப்படுகின்ற நவீன விஞ்ஞானத்திலே 'ஈதரிக் பாடி' (Etheric Body) என்று அழைக்கிறார்கள் என்பதை முன்பு பார்த்தோம். ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் விரிவாக வளர்ந்துள்ள மருத்துவ சிகிச்சை முறையிலே ஒளி உடம்பை நவீனக் கருவிகளைக் கொண்டு படம் எடுத்து, உடம்பில் இருக்கின்ற அல்லது அந்த உடம்பை நோக்கி அணுகிவருகின்ற நோய்களை, ஆராய்ந்து காணுவதற்குரிய விஞ்ஞான முறைகளை

விரிவாக இன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். சாதாரண எக்ஸ்ரே கருவிகள் மூலம் கண்டுகொள்ள்முடியாத உடல்நலிவுகளை, ஒளிஉடம்பு கொண்டு ஆராய்ந்து கண்டுபிடித்துவிடலாம் என்று, விஞ்ஞான முன்னேற்றம் மிகவும் விரிவாக வளர்ந்துள்ள வெளிநாடுகளிலே இன்று மருத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து கண்டு சொல்லிவருகிறார்கள். இதைத்தான் நம்முடைய சித்தர்கள் உள்உடம்பை உற்றுப் பார்த்தல் என்று கூறி, அந்தப் பார்வைக்குரிய பல யோகப் பயிற்சிமுறைகளை வகுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய உடம்புக்குள் உள்ள அகக்கருவிகளை நாமே கண்டு கொள்ளுவதற்கு உரிய கருவியாக, நம்முடைய கண்ணுக்குள் உள்ள அகக்கண்ணை, ஒருவகையான எக்ஸ்ரேக் கண்ணாக மாற்றிக்கொள்ளு கின்ற முறைதான் சித்தர்களுடைய உடற்பயிற்சி யோகத்தின் ஆதார நோக்கம் ஆகும். இதுமட்டும் அல்லாமல், இந்த உடம்பைத் தொலை தூரம் காணும் தொலைநோக்கியான டெலஸ்கோப் கருவியாக ஆக்கி யும், அருகிலும் உள்ளும் உள்ள நுட்பங்களை நுண்மையாகக் கண்டு கொள்வதற்குரிய மைக்ராஸ்கோப் ஆகிய பெரும்பூதக் கண்ணாடி யாக ஆக்கியும், உடம்பை மாற்றிக் கொள்வதற்குரிய முறைகளைச் சித்தர் இலக்கியங்களிலுள்ள யோகப் பயிற்சிப் பகுதியிலே விரிவாகக் காணுகிறோம்.

வான மண்டலத்திலுள்ள கோள்களின் நிலையையும், அவற்றுக்கும் இந்த மனித் உடம்புக்குமுள்ள இயைபுகளையும்; வானநிகழ்ச்சி அல்லது கிரகங்களின் நிலை எப்படி எப்போது ஏற்படுகிறது என்பதையும், நமது நாட்டு முனிவர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்டு சொல்லி யிருக்கிறார்கள். எந்தத் தொலைநோக்கியைக் கொண்டு கண்டுபிடித் தார்கள் என்று நினைக்கிறீர்கள்? இதுதவிர இந்த உடம்புக்குள்ளே இருக்கக்கூடிய இன்றைய விஞ்ஞானம் கூறுகிற எலிமெண்ட்ஸ் **(Elements)** என்கிற தத்துவங்களையெல்லாம், எந்த எக்ஸ்ரே அல்லது பிற கருவிகளைக் கொண்டு நம்முடைய முனிவர்கள் அறிந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? அவர்களிடமிருந்த ஸ்டெதஸ்கோப் எது? நம்முடைய நாட்டுச் சித்தர்கள் எல்லாரும் ஒவ்வொருவரும் தங்கள் உடம்பையே ஒரு லபாரேட்டரியாக, ஒரு விஞ்ஞான ஆய்வுக்கூடமாக, யோகப் பயிற்சியினால் பக்குவப்படுத்திக் கொண்டார்கள். இதனால் தான் அவர்களுக்குத் தொலை நோக்கும், நுண்நோக்கும், புறப் பார்வையும், அகப்பார்வையும் ஒருங்கே கைகூடின. இன்றைய விஞ்ஞானக் கருவிகள் அனைத்தும் பல நூதன முறைகளின் மூலம் ஆராய்ந்து கண்டுபிடித்து உறுதிப்படுத்துகிற உண்மைகளையெல்லாம், நமது முனிவர்கள் சொல்லியுள்ளதோடு, விஞ்ஞானத்தைத் தாண்டி நிற்கிற பல உண்மைகளையும் எப்படிச் சொன்னார்கள்? இந்த மாபெரும் முன்னேற்றத்திற்கு மூலகாரணம், இந்த உடம்பையே கருவி யாகக் கொண்டு அறிவுக்கு அறிவாகிய பேரறிவை அவர்கள் கண்டார் கள்; கண்டு சொன்னார்கள்; கண்டு சொன்னதைப் பிறருக்குக் கற்பித் தார்கள் என்பதுதான்.

சித்தர்களுடைய இந்த உடம்பாகிய ஆய்வுக்கூடத்தில் ஆராய்ந்து கண்டுபிடித்த பேரறிவுதான், சித்தர் இலக்கியமாகப் பல நூறு ஆண்டு

களாய்ச் செவிவழியும் ஓலைச் சுவடிகளின் வழியும் இன்றளவும் நின்று நிலைத்து நமக்குப் பயன்தந்து வருகிறது.

## உள்உடம்பு

இந்த உடம்புக்குள் உடம்பாக இயங்குகிற உள்ள உடம்பைச் சூட்சும சரீரம் என்றும், சூக்கும உடல் என்றும் அழைக்கிறார்கள். வெளி உடம்புக்கு உள்ளுடம்பு ஒரு வித்தாக அமைந்திருக்கிறது. உடம்பிலுள்ள பிராணன் என்ற ஆன்ம ஆற்றலின் இயக்கத்தினாலே தான், பிராணவாயு என்னும் உயிர்க்காற்று இந்த உடம்பில் இயங்கி, ஆயுளுக்கு ஆதாரமாகச் செயற்படுகிறது. உயிர்க்காற்றுக்கு ஆயுளைப் பேணும் சக்தியும், ஆயுளை முடிக்கும் சக்தியும், இரண்டுமே உள்ளன. வெளிஉடம்புக்கு எப்படி ஒன்பது புழைகள் அல்லது வாசல்கள் அமைந்துள்ளனவோ, இவ்வாறே உள்உடம்புக்கும் ஒன்பது புழைகள் உள்ளன. இந்த ஒன்பது வாயில்களையும் குரு நேர்முகமாக உணர்த்தினாலன்றி நாம் கண்டுகொள்ள முடியாது. ஞானாசிரியன் உணர்த்துகின்ற ஒன்பது வாயில்களின் தொழில்முறையினால் ஐம்பத்தொரு உயிர்வித்துக்கள் இயங்குகின்றன என்றும், இவையே சித்தர்கள் விளக்கியுள்ள இரகசியங்களுக்கெல்லாம் அடிப்படை என்றும் சித்தர் இலக்கியம் கூறுகிறது.

ஒன்பது இரகசிய உள் வாயில்களின் இயக்கத்தோடு, வெளி உடம்பையும் உள்உடம்பையும் பிணைத்துத் தொழிற்படுத்துகிற நாடிகள், கூட்டம் கூட்டமாக அமைந்துள்ளன. இந்த நாடிக் கூட்டங்களில், ஞான வழிபாட்டிற்கென்று அமைந்த பேரறிவு நாடிகள் பத்து என்று சித்தர் இலக்கியம் சொல்லுகிறது. இந்தப் பத்தையும் இயக்குவதற்கென்று அமைந்த ஞானப் பெருநாடி ஒன்று இருப்பதாகவும் சித்தர்கள் சொல்லுகிறார்கள்.

பத்து நாடிகள் என்று சொல்லப்படுவனவற்றின் பெயர்களையும் சித்தர் இலக்கியம் கூறுகிறது. அவை அத்தி, அலம்புடை, இடை, காந்தாரி, குரு, சங்கினி, சிகுவை, சுழுமுனை, பிங்கலை, புருடன். இந்தப் பத்து நாடிகளுக்கு வல்லமையையும் இயக்க ஆற்றலையும் தருகின்ற உயிராதாரமான நாடி, இந்த உடம்பின் தொப்புள் என்கின்ற நாபிக்குக் கீழ்மேலாக ஓடுகின்றது என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த ஒப்பற்ற நாடிதான் குண்டலி என்று பெயர் பெறுகிறது. இதுவே ஓங்கார நாடி என்றும் பேசப்படுகிறது.

உந்தி என்ற தமிழ்ச்சொல்லுக்குச் சாதாரண மக்கள் நாபி அல்லது தொப்புள் என்று பொருள் கூறுகிறார்கள். ஆனால் உண்மை அது இல்லை. உந்தி என்ற சொல் இந்தக் குண்டலி நாடியையே குறிக்கிறது. இந்த நாடியின் நடுப்பக்கத்தில் உள்ளதே மணிபூரகம் என்ற ஆதார நிலை. மனித உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களில் மிகவும் முக்கியமானது இந்த மணிபூரகம். இந்த மணிபூரகம் உந்திநாடியின் நடுவிலிருந்து புறப்பட்டு, ஓங்கார நாடியின் அடிப்பாகத்திலும் முடிப்பாகத்திலும் உறுதிப்பட்டு நிற்கின்றது. இந்த நிலையைத்தான் அவ்வை தம்முடைய ஞானக் குறளிலே,

உந்தி முதலால் உறுமுடி மேலால்
பந்தித்து நிற்கும் பரிந்து

என்று கூறுகிறார்.

கால்களோடு கைகளிலும் பின்னியவாறு, இந்த உடம்பு முழுவதும் உந்தி என்கின்ற இந்த ஓங்கார நாடி, தாமரைப் பூவின் நாளத்திலுள்ள நூல் போன்று உள் நுழைந்துநின்று இயங்குகிறது.

வானத்திலிருந்து எப்படி சூரியனும் சந்திரனும் உலகெங்கும் தங்கள் ஒளியைப் பரப்புகின்றனவோ, அவ்வாறு உந்தி என்ற இந்த நாடியானது உடல் முழுவதும் ஆற்றலைப் பரப்பிக்கொண்டு இயங்கு கிறது. இந்த நாடியானது நரம்புகளோடும் எலும்புகளோடும் கலந்து உடம்பு முழுவதும் படர்ந்து நிற்கிறது. பிரணவம் அல்லது ஓங்காரம் என்று சித்தர்கள் கூறுவது இந்த உந்தி நாடியைத்தான். இந்த உந்தி நாடிக்குள் ஞானயோகப் பயிற்சியின் வாயிலாக மனத்தைச் செலுத்தும்போது, பேரின்பமாகிய தெய்வ உவகை இந்த உடம்புக்குள் பாய்கிறது. இந்த நுட்பத்தை உணர்ந்து, இந்த நாடியோடு அகப் பார்வையும் உள்மனமும் ஒடுங்கிநிற்கும் பயிற்சியில் வல்லவர்களே நம் சித்தர்கள். அப்படி நிற்கின்ற நிலையிலே சிவமானது ஓங்கார நாடியில் நிலைத்து நின்றுவிடுகிறது என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

இந்த உந்தி என்ற ஞானப்பெரு நிலையத்திலிருந்து, காற்று புறப் படுகிறது. ஓங்கார மத்தியில் இது உற்பத்தியாகிறது. அங்கே உற்பத்தியாகிச் சிரசை நோக்கி அந்தக் காற்று செல்லுகிறது. அப்படிச் செல்லும்போது, அந்தக் காற்றானது இரண்டு பாகமாகப் பிரிந்து, நான்கு திசைகளிலும் பரவி, துவாதசாந்தப் பெருவெளி என்ற தலை உச்சியைச் சேரும்போது, பன்னிரண்டு கலைகளோடு திகழ்கிறது என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

வாயுதாரணை என்று சித்தர்கள் அழைக்கின்ற காற்றுப் பயிற்சி யினால் இந்த யோகம் நிகழ்கின்றது. இடைகலை என்னும் இடப் பக்கத்துக் காற்றும், பிங்கலை என்னும் வலப்பக்கத்துக் காற்றும் சந்திர சூரியர்களின் திருவடிகள் என்று சித்தர்களால் அழைக்கப்படுகின்றன. இந்த இரண்டு காற்றுகளையும் உடம்புக்குள் அடக்குதல் இரேசகம் என்று கூறப்படும். இரேசித்தல் என்றால் சூரிய கலையும் சந்திர கலையும் ஒன்றுசேர்ந்து கலத்தலாகும். இதையே சித்தர்கள் ஞான மொழியிலே உள்உடம்புக்குரிய அமாவாசை என்று அழைக்கிறார்கள். சிற்றம்பலம் என்று கூறப்படுகிற மனமாகிய வானத்திலே இந்த அமாவாசை நிகழ்கிறது. இந்த அமாவாசைதான் ஞான ஆற்றல் களையெல்லாம் பயின்றுகொள்வதற்குரிய நல்லோரை என்று ஞானி கள் விளக்கியுள்ளார்கள்.

மந்திர யந்திர தந்திரங்களிலே வல்ல நமது சமுதாயத்து மந்திர வாதிகளும் தங்களுடைய செயல்களைச் செய்வதற்குரிய ஆற்றல் மிகுந்த காலமாக அமாவாசையைத் தெரிந்தெடுப்பதும், இதுபற்றியே! உலகத்துச் செயல்களுக்கு ஆற்றல்மிக்க காலமாக விளங்குகிற அமாவாசைதான், உள்உடம்பாகிய அக உலகத்தின் ஞானச் செயல்

களுக்கும் ஆற்றல் மிக்க பொழுதாக அமைகிறது. 'சைபர்நெடிக்ஸ்' என்கின்ற இன்றைய விஞ்ஞான ஆய்விலும் சந்திரனும் சூரியனும் கூடுகிற காலமாகிய இருள் இரவான அமாவாசைக்குச் சில ஆற்றல்கள் இருப்பது, இக்காலத்து விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் இங்கே நாம் மீண்டும் நினைவுகொள்ள வேண்டியதாகும்.

வாயுப் பயிற்சியாகிய செவிப்புலனின் யோகத்தைச் செய்கின்ற சித்தர்களின் முறையாகிய ஒலிப்பயிற்சியின் பிரிவே, இந்த சைபர் நெடிக்சின் நுட்பமாகும்.

இன்னொரு முறையாகிய ஒளிப்பயிற்சியில் இடக்கண்ணாகிய சந்திரனையும், வலக்கண்ணாகிய சூரியனையும், இரண்டு ஒளிகளையும் ஒன்றுகூட்டுகிற யோகப் பயிற்சியானது இவ்வாறே அமாவாசை என்று அழைக்கப்பெறுகிறது.

சமுதாயச் சடங்குகளிலே சூரிய சந்திரர்களை இணைப்பதுதான் திருமணம் என்று அழைக்கப்பெறுகிறது. மண்ணுதல் என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணைத்தல் அல்லது ஒன்று சேர்த்தல் என்று பொருளாகும். திருமணம் என்றால் இணைப்பு அல்லது சேர்க்கை என்று பொருள். இந்தத் திருமணக் காலத்தில் மணமகன் மணமகள் இருவருடைய சுண்டுவிரல்களையும் கூட்டி நிகழ்த்துகிற சில சடங்குகள் நமது சமுதாய வழக்கத்திலே இருந்து வருகின்றன. இன்றைய வைத்திய முறையாகிய (Acupuncture) ஆகுபங்ச்சர் என்ற சீன வைத்திய முறையிலே, சுண்டுவிரலுக்கும் இதயத்திற்கும் உள்ள இணைப்பு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சீன வைத்திய முறையிலே, இன்றைய விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளக்கூடிய விதத்தில், இதய நோய்க்குச் சுண்டுவிரலிலே செய்கிற ஒரு சிகிச்சைமுறை இன்று கையாளப்பட்டு வருகிறது. இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, மனித உடம்பிலே சுண்டுவிரலுக்குள்ள முக்கியம் நமக்கு நன்கு புலனாகிறது. பெண்களுடைய சுண்டுவிரலை மதி அல்லது சந்திரன் என்றும், ஆடவர்களுடைய சுண்டுவிரலைக் கதிர் அல்லது சூரியன் என்றும் சித்தர்கள் அழைக்கிறார்கள். நமது சித்தர் இலக்கியத்திலே கூறப்படுகிற சூரிய சந்திர கலைகளின் இணைப்புக்கும் சுண்டு விரலுக்கும் ஓர் இயைபு சொல்லப்பட்டிருக்கிறது. வேதமுறைகளிலே அங்குலி விரல்கள் என்று அழைக்கப்படுகிற இந்தச் சுண்டு விரல்களோடு தொடர்புபடுத்திக் கூறப்பெற்றுள்ள மந்திரங்களை, வேதியர்கள் இன்றளவும் அவ்வாறே கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும். திருமணக் காலங்களில் ஆணும் பெண்ணும் சுண்டுவிரல்களை ஒன்றுசேர்த்து இணைப்பது, நாதமாகிய சூரிய கலையும், விந்துவாகிய சந்திர கலையும் இணைவதற்கு உதவுமென்று ஞானநூல்கள் பேசுகின்றன.

வாயுதாரணை என்ற சித்தர்களின் பயிற்சிமுறையிலே பிராணன், அபானன் என்ற இரண்டு வாயுக்களையும், ஓங்காரத் தாமரையிலுள்ள உந்தியிலே நுழைத்துச் சில பயிற்சிகள் செய்யவேண்டுமென்று சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

பூரகம் என்ற சித்தர்களின் பயிற்சியானது வாயுதாரணையிலே மிகவும் முக்கியமானதாகும். சூரிய சந்திரர்களை இணையவைப்ப

தாகிய இரேசகத்தைப் போலவே, பூரகம் என்பதும் முயன்று பயில வேண்டிய ஒரு முக்கியமான காற்றுப் பயிற்சியாகும். பூரித்தல் என்றால் கலைகளைப் பூரிக்கச் செய்தல்; அதாவது நிரம்பிநின்று விம்மும்படியாகச் செய்தல் என்று பொருள். உசுவாசம் என்று அழைக்கப்படுகிற உள்ளே செல்லுகின்ற காற்றும், நிசுவாசம் என்று அழைக்கப்படுகிற வெளியே வருகின்ற மூச்சும் சாதாரண நிலை. இந்த நிலையிலிருந்து யோகப்பயிற்சி மூலம், உள்ளே காற்று கலம் கொள்கிற அளவுக்கு உட்சென்று, புகுந்து, நிரம்பிநின்று, அதை வெளியே விடாமல் விம்மும்படி செய்கிற இந்தப் பூரக முறையினால் காற்றானது சிரசாகிய மேல்வெளிக்கு எவ்வுகிறது. இந்த நிலையைத் தான் பிரணவ உச்சியைத் தொடுகின்ற வளி என்று சித்தர்கள் கூறுகிறார்கள். பூரகத்தினால் ஓங்கார முனையைத் தொடு என்று அவர்கள் கூறுவர்.

வாயுதாரணை என்ற இந்தக் காற்றுப் பயிற்சி முறையானது மூன்று நிலைகளைக் கொண்டது. இரேசகம் என்பது சூரிய சந்திர கலைகளை இணைப்பது. காற்றுக்களின் மொழிகளிலே சொல்வதாக இருந்தால் பிராணனையும் அபானனையும் கலக்கும்படி செய்வதாகும். இது இரேசகம். இந்த இரண்டு கலைகளையும் உடம்பினுள் நிரம்பி நின்று விம்மும்படி செய்தல் அடுத்த நிலை. அது பூரகம். இனி மூன்றாவது நிலையாகிய கும்பகம் என்பது, ஓங்காரமாகிய நடு உச்சியிலே சூரிய சந்திர கலைகளை நிலைபெறும்படி செய்தல். ஞானி கள் கூறுகின்ற காற்றுப் பயிற்சியில் இந்த மூன்று நிலைகளும் அடிப் படையான பயிற்சி முறைகள். இந்த மூன்று பயிற்சிகளையும் செய்ய முனைகின்ற மாணவனுக்குச் சித்தர்கள் ஒரு முக்கியமான எச்சரிக்கை யைக் கூறுவார்கள் :

தூங்கையிலே வாங்குகிற மூச்சு—அது
சுழிமாறிப் போனாலும் போச்சு

இங்கே தூங்குதல் என்று கூறப்படுவது சாதாரண மனிதர்களுக் குண்டான தினப்படியான உறக்கத்தை இல்லை. தூங்குதல் என்று சித்தர்கள் கூறுவது, சூரிய சந்திர கலைகளை இணைத்து உடம்புக் குள்ளே ஒடுங்கிநிற்கும் நிலை. இந்த ஞானத் தூக்கத்திலே வாங்குகிற, அதாவது உள்ளே செலுத்திப் பூரிக்கச் செய்கிற மூச்சானது வழிமாறி, திசைதிரும்பிப் போய்விட்டால் உயிருக்கே ஆபத்தாகிவிடுகிறது. எனவே, இந்தக் காற்றுப் பயிற்சி முறையை, சுவடிகளைப் படித்துவிட்டு, அந்த நூலறிவை மட்டும்கொண்டு, ஒரு மாணவன் செய்யப் புகுவது, விபரீதமான விளைவுக்கு உள்ளாக்கிவிடும்! எனவே பயிற்சியைக் கற்றுக் கொள்வதற்கும், பயிற்சி முன்னேற்றத்தில் ஏற்படுகிற வளர்ச்சி யின் ஒவ்வொரு கட்டத்திற்கும், ஓர் ஆசானின் நேர்முகமான துணை யும், வழிப்படுத்தும் உதவியும், இன்றியமையாமல் வேண்டும் என்று எல்லாச் சித்தர்களும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். இதைத்தான் தாயுமானவர் தமது பராபரக் கண்ணியில்,

நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே மன்னும் கலைஞானம் பராபரமே

என்று கூறுகிறார். திருமூலரும் இப்படிப்பட்ட ஞானப் பயிற்சியின் இரகசியங்களை,

ஏட்டின் புறத்தில் எழுதிவைத்து என்பயன்

என்று கேட்கிறார்.

"கூட்டும் குருநந்தி" கூட்டுவிக்க வேண்டும் என்று நேர்முக ஆசானின் அவசியத்தைத் திருமூலர் அடிக்கோடிட்டு வற்புறுத்துகிறார்.

வாயுப் பயிற்சியாகிய இந்த வாயுதாரணை என்ற யோகமுறைக்குக் குறிப்பிட்டுள்ள நேர்முகக் கல்வியே, ஒளிப்பயிற்சியாகிய கண்களைக் கொண்டு செய்கிற பயிற்சிக்கும் பொருந்தும். கண்களைக் கொண்டு செய்கின்ற சில நுட்பமான பயிற்சிகளைச் சித்தர் இலக்கியம் விரிவாகவே கூறியுள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம் பரம்பொருளை ஒளியின் வாயிலாகக் கண்ட ஞானிகள் தமிழகத்திலே பலராவர். அண்மைக்காலத்து மகானாகிய இராமலிங்க அடிகளும் அடிக்கடி தமது இலக்கியத்திலே அருட்பெருஞ்சோதி என்று குறிப்பிடுவது, ஒளிவடிவத்திலே பரம்பொருளைக் காண்கின்ற இறை இன்பத்தைத்தான். இந்த ஒளிப்பயிற்சியும், இடைகலை, பிங்கலையாகிய நாசியின் இடப்புழை, வலப்புழை வாயிலாகச் செய்கிற பயிற்சியைப் போன்றதே. வித்தியாசம் என்னவென்றால் நாசியில் இடப்பக்கத்துத் துவாரத்திலே செய்கிற பயிற்சியை, இடக்கண்ணாகிய சந்திரனைக் கொண்டும், வலப் பக்க நாசியிலே செய்கிற பயிற்சியை, வலக்கண்ணாகிய சூரியனைக் கொண்டும், செய்யவேண்டுமென்று சித்தர் இலக்கியம் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

கொல்லங்கோடு, சிக்கனம்பாறை ஆசிரமத்தின் தலைவராக விளங்கிய ஞானயோக சித்தர் கண்ணப்ப சுவாமிகள், இந்த ஒளிப் பயிற்சியின் மூலமாகப் பரம்பொருள் இன்பத்தைத் துய்த்தவர் ஆவார்கள். மிக முதிர்ந்த பருவத்தில் அண்மைக் காலத்திலே ஒடுங்கிய இந்த மகான், இந்த ஒளிப்பயிற்சி முறையைச் சிலருக்கு, முக்கியமாக எனக்கும், மறைந்த நீதிபதி மகராஜன் அவர்களுக்கும் கற்பிக்கப் புகுந்தபோது முதலாவது பாடத்திலேயே அவர்கள் ஓர் அறிவுரை கூறினார்கள். ஒவ்வொரு பயிற்சியின் வளர்ச்சிக் காலத்திலும் ஆசானுடைய துணையிருப்பதோடு, மாணவர்களும் தங்களுக்குள்ளே அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்கள். கேரளத்தைச் சேர்ந்த இந்த மாபெரும் சித்தர், ஒளிப்பயிற்சியின் சாதனைகளைக் குறித்து மிகவும் உயர்வாக அடிக்கடி கூறுவதுண்டு. சிவயோகியாகிய எங்கள் ஞானாசிரியர் இரத்தினசபாபதியார் அவர்களும் ஒளிப்பயிற்சி முறையைப் பற்றிக் கூறிய போதிலும், ஒளியோடு ஒலிப்பயிற்சியை இணைக்கும் முறைகளை அழுத்தமாகக் கூறுவார்கள்.

யோகப்பயிற்சி செய்கின்ற மேனாட்டு அறிஞர்களும், கிளேயர் வாயன்ஸ் (Clairvoyance) என்றும், கிளேயர்ஆடியன்ஸ் (Clair audience) என்றும் இரண்டுவிதமான அனுபவங்களைக் கூறுகிறார்கள். முக்கியமாக மதாம் பிளவாட்ஸ்கி என்ற பிரம்மஞானசபைப் (Theosophical Society) பெரு ஞானியும், லெட்பீட்டர் என்கிற ஞானப் பெரு

மகனாரும், பிரம்ம ஞானத்தில் தேர்ந்து விளங்கிய டாக்டர் அன்னிபெசன்ட் அவர்களும் கிளேயர்வாயன்ஸ், கிளேயர் ஆடியன்ஸ் என்ற இந்த ஒளி, ஒலி முறைகளைப் பற்றி ஆங்கிலத்திலே பல நூல் களில் மிக விரிவாகக் கூறியிருக்கிறார்கள். தியாசொபிஸ்ட்ஸ் என்கிற பிரும்ம ஞானசபை ஞானிகள் அனைவரும், தங்களுடைய வேத நூல்கள் என்று கருதுகிற நூல்களிலே ஒன்று 'தி வாய்ஸ் ஆப் சைலன்ஸ்' என்னும் ஆங்கில நூலாகும். மிகச் சிறிய அளவில், சிறிய அச்செழுத்துக்களிலே, சில பக்கங்களே கொண்டுள்ள இந்த நூல், ஆயிரக்கணக்கான பக்கங் களில் விளக்கக்கூடிய அத்தனை பெரிய ஞானப்பேருண்மைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்ற ஓர் ஆங்கில ஞானத் திருக்குறளே யாகும். அதில் கூறப்பட்டுள்ள அனுபவ முறைகளும், சித்தர் இலக்கியம் பேசுகின்ற ஒலி ஒளி அனுபவங்களும், பல இடங் களிலே ஒன்றுபோல் இருப்பதைப் பார்க்கும்போது நமக்கு மெய்சிலிர்க் கிறது!

★

# 13. மனத்தின் மாண்பு

சிவம் துரியப்பொருள் என்று அழைக்கப்பெறும். ஆன்மாவானது சாக்கிரப் பொருளாகும். உயிருக்கு உயிராக விளங்குகிற பரம்பொருள் ஆன்மாவில் இருப்பதால், சித்தர்கள் சிவத்தைத் துரியப்பொருள் சாக்கிரத்தில் இருப்பதாக வருணனை செய்வதுண்டு. அதாவது, எல்லாக் கருவிகளோடும் பொருந்தி நின்று அறிகிற நிலையிலே வெளிப் படுவது பரம்பொருள், என்று புரிந்துகொள்ளவேண்டும். குருவின் திருவருள் கிடைத்தால் சகமார்க்கத்து யோகிகள் துரியாதீத நிலையிலே காண்கிற இறையின்பத்தை மற்றவர்கள் சாக்கிர நிலையிலேயே காண இயலும் என்பது சித்தர்களின் அறிவுரையாகும். இப்படி உணரும்போது அந்தச் சீடனுக்கு எத்தகைய சாதனை உண்டாகிறது என்பதை ஒரு திருமந்திரப் பாட்டு விளக்குகிறது.

ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து கர்மேந்திரியங்களும், மனம் உள்ளிட்ட அந்தக் கரணங்களாகிய நான்கும் ஆகப் பதினான்கும் செயற்படாது ஒடுங்கிவிடுகின்றன. இந்த நிலையை, நரிகள் பதினான்கும் நஞ்சுண்டு இறப்பதாகச் சித்தர்கள் கூறுகிறார்கள். அந்தப் பேரின்ப நிலையிலே மாபெரும் குதிரையாகிற ஆன்மபோத மானது, உலகப்பற்று ஒழிந்து மேலே பறக்கிறது. இந்தக் கருத்தைத் திருமூலர் பாடுகிறார்:

**துரியம் இருப்பது சாக்கிரத் துள்ளே**
**நரிகள் பதினாலும் நஞ்சுண்டு செத்தன**
**பரிய புரவியும் பாரில் பறந்தது**
**துரியம் இருந்திடம் சொல்ல ஒண்ணாதே**

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழியில் எந்த வழியில் நடந்தும் இறையின்பத்தைத் துய்க்கலாம். எனினும் சித்தர் களுடைய வழி மனத்தைக் கொண்டே இந்த நான்கு வழிகளிலும் செல்லலாம் என்பதே யாகும். இதுவே சித்தர் இலக்கியம் தன்னுள் பொதிந்து வைத்துள்ள இரகசியச் செல்வத்தின் மதிப்பும், சிறப்பும், தனியான கவர்ச்சியும் ஆகும்.

மனத்தைக் கொண்டு துரியாதீதப் பொருளை ஒரே தாவுத் தாவிப் பிடிக்கிற பேரறிவு சித்தர்களால் உணர்த்தப்பெறுகிறது. இந்தப் பயிற்சி செயற்படுகிற துறையே சித்தர்களின் ஞானமார்க்கமாகும். இந்தத் துறையைத் திருமூலர் 'சொருகிக் கிடக்கும் துறை' என்றே அழைக்கிறார்.

உருகிப் புறப்பட் டுலகை வலம் வந்து
சொருகிக் கிடக்கும் துறைஅறிவார் இல்லை
சொருகிக் கிடக்கும் துறையறி வாளர்க்கு
உருகிக் கிடக்கும்என் உள்ளன்பு தானே

என்று திருமந்திரம் பாடுகிறது.

உலகம் முழுதும் திரிந்துசென்று, மனம் உருகியவர்களாக மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப் பக்தி செலுத்தி, மனத்திலே இறையின்பம் பெறுகிறவர்களே சாமானிய மக்கள். ஆனால் இவர்களுக்குச் 'சொருகிக் கிடக்கும்' திறம் தெரிவதில்லை. அதைத் தெரிந்துள்ள ஞானிகள் மிகமிகச் சிலரே. அத்தகைய ஞானிகள்பால் தமது உள்ளம் அன்புமயமாகி உருகிநிற்கிறது என்று எல்லையற்ற ஆனந்தத்துடனே பாடுகிறார் திருமூலர்.

மனத்தைக் கொண்டு உலகளாவி நிற்கிற பரம்பொருளோடு தாமும் உலகளாவி நிற்கிற நிலை எத்தகைய பெரிய சாதனை!

ஞானிகளுக்கு இந்த மனத்தின் வல்லமை கைவந்த ஒரு பெருஞ் சித்தியாகும். இந்த அனுபவத்தை அடியார்கள் பலரும் மனமுருகிப் பாடியிருக்கிறார்கள். திருமுறைகளிலும் திவ்வியப் பிரபந்தப் பாசுரங் களிலும் பல பெரியோர்கள் இந்த ஆனந்தத்தை அழகுத் தமிழிலே பாடியுள்ளார்கள். இந்த அனுபவத்தைச் சித்தர்களும் பலவாறு பாடியுள்ளாரார்கள். சித்தர் பெருமானாகிய திருமூலர் இதை எப்படிச் சொல்கிறார்?

உருவிலி ஊணிலி ஒன்று மொன்றிலி
திருவிலி தீதிலி தேவர்க்கும் தேவன்
பெருவிலி பூதப் படையுடை யானி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே

உருவம் இல்லாத பரம்பொருள் அவன். ஊண் என்றால் நுகர்ச்சி. அந்த நுகர்ச்சி ஏதும் இல்லாதவனே அவன். எந்த ஒரு பொருளிலும் பொருந்தியோ, தோய்ந்தோ இல்லாதவனாகையினாலே, 'ஒன்றும் ஒன்று இலி'! ஆக்கமோ, கேடோ இல்லாதவன். அவனைவிடப் பெரியது ஏதும் இல்லையாதலின் 'பொருள் இலி' என்றார். அவனே மகாதேவன், தேவர்க்கும் தேவன்! அவனுடைய படைகள் பூதங்களே. மருவ இயலாத பான்மையிலே மனவாக்குகளில் தட்டாமல் நிற்கிற அந்தப் பரம்பொருள், எளிவந்து என் உள்ளே புகுந்துவிட்டான் என்று எக்களிப்பிலே பாடுகிறார் முனிவர்.

'மருவிலி' என்ற சொல்லை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். மனத்தினால் மருவ இயலாத பொருள் மனங்கொண்டு உள்புகுந்தது என்றால், அது எத்தகைய சாதனை!

மனத்தில் தட்டாமல் நிற்கின்ற பொருள் ஞான சக்தியாகிய தலைவியின் அருள்கொண்டு, தாயன்போடு உள்ளத்திற்குள் வந்து அமர்ந்துகொள்கிறது. இந்தத் தலைவி மனோன்மணி என்று பெயர் பெறுகிறாள் சித்தர் இலக்கியத்திலே!

மனோன்மணிக்கு அபின்னா சக்தி என்று சித்தர்கள் விளக்கப் பெயர் தருகிறார்கள். தங்கத்தில் மாற்று இருப்பது போலவும், சூரியனில் வெயில் இருப்பது போலவும், இந்த அபின்னா சக்தி தலைவனை மருவி நிற்கிறாள். இவளே மனோன்மணி. திருமூலர் பாடுகிறார்:

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பிறந்திட்ட பெண்பிள்ளை
ஆயும் அறிவைக் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே

மனத்தின் மணி என்னும் இந்த மனோன்மணி, நீரிலே முளைத்த தாமரை நீரோடு ஒட்டாதது போல நிற்கிறாள். முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட சக்தி அவள்.

பேயாதி கணங்கள் அத்தனைக்கும் அன்னை அவளே. அவள் சிவனுக்குத் தாயாகிறாள். எப்படி? மனத்திலே சிவன்தோன்றுவதற்கு அவளே காரணமாக இருக்கிறாள். அவளுடைய செயலினாலேதான் இவன் நம்முள் எழுகிறான். எனவே 'தாய்' என்றார்.

சிவனுடைய முன்னிலையிலேதான் அவளுடைய தோற்றம் அமைகிறது. எனவே தாயாகவும், மகளாகவும் ஆகிறாள் அவள். அம்மட்டோ! சிவ சக்திகளின் கூடலிலேதான் உலகனைத்தும் தோன்றுவதாலே, நல்ல தாரம், நன்மனைவி ஆகிறாள் அவள்.

இவை எல்லாம், மனம் ஞானமயம் ஆகும்போது நடைபெறுகிற நிகழ்ச்சிகளாம். மனம் அத்தனை வல்லமைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, நிலத்தடியிலே நிற்கும் நீரைப் போல இயல்பு தெரியாமல் நிற்கிறது. நிலத்தைக் கிளறும்போது ஊற்றுநீர் சீறிக்கொண்டு வருவது போலவே, ஞானகுரு தோன்றி மாணவனுடைய மனத்தைக் கிளற வேண்டியிருக்கிறது. ஊற்றைத் தோண்டுவது போலே, மாணவன் தனது மன ஊற்றைத் தோண்ட ஆரம்பித்தால், தங்கு தடையின்றி மனத்தின் ஆற்றல்கள் ஒவ்வொன்றாகச் சுரக்க ஆரம்பிக்கும். உடம்புக்குள்ளே இருக்கின்ற அகவாசல்கள் திறக்கத் தொடங்குகின்றன.

வாசல்களைத் திறப்பது மனமேதான். ஆனால் அந்த இரகசிய இடத்தைக் காட்டுபவனே ஞானகுரு. கதவைத் திறப்பதற்குத் திறவுகோலை மட்டும் கையிலே கொடுத்தால் போதாது. திறவுகோலை எங்கே செருகுவது என்று அந்த வாயையும் அவனே காட்டித் தருகிறான்.

அந்த மனவாசல்களும், அவற்றின் வழியே செல்லும்போது ஏற்படுகிற அனுபவங்களும் எப்படிப்பட்டவை?

மூல நாடி முகட்டறை உச்சியில்
நாலு வாசல் நடுவே சிவாலயம்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வாசல் கனவிலும் இல்லையே

மூலநாடி என்றால் எழுபத்திராயிரம் நாடிகளையும் நடத்துகிற நாயகமான நாடி. இது சுழுமுனையே. அதன் முகட்டிலே உள்ள அறை என்பது, கபால உச்சியிலே இருக்கின்ற பிரம ரந்திரம் என்ற நுட்பம். அங்கே நான்குபுறமும் வாசல்கொண்ட சிவாலயம் அமைந்திருக்கிறது. அங்கே மேல் வாசலில் மனம் ஒன்றிநின்றுவிடுமானால், சச்சிதானந்தப் பெருவெளி காணலாம். அப்படிக் கண்டுவிட்டால் மரணமிலாப் பெருவாழ்வு சித்திக்கிறது. காலனுடைய வாசல் திறக்காது. கனவிலும் இல்லை, மரண அனுபவம்!

மரணமிலாப் பெருவாழ்வை நமக்குத் தரவல்லது மனமேதான் என்பது சித்தர் வாக்கு. அதாவது ஆன்மபோதம் என்ற நிலை மாறிப் போய், சிவபோதம் என்ற ஞானக்களிப்புநிலை வந்தெய்துகிறது. இதை இன்னொரு பாடலிலே நன்கு விளக்குகிறது திருமந்திரம்:

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடியங்கு ஒன்றான வாறுபோல்
செப்பிடில் சீவன் சிவத்துள் அடங்குமே.

கூர்மை என்றால் உவர்ப்பு என்னும் சுவை. தண்ணீரிலே கலந்து நிற்கிற உவர்ப்பு, சூரியனுடைய வெம்மையினால் தனியே பிரிந்து உப்பு என்னும் வடிவத்தை எடுக்கிறது. மீண்டும் அந்த உப்பானது தண்ணீரிலே கலந்துவிட்டால் அதனுள் உப்பு கரைந்து மறுபடியும் தண்ணீராகிறது. இவ்வாறுதான் பதி, பசு, பாச இயல்புகள். இந்த இயல்புகள் எங்ஙனம் தொழிற்படுகின்றன என்ற சிவ இரகசியத்தை ஞானிகளின் வாயிலாகத் தெரிந்து உணர்ந்து வழிபட்டால், ஆன்ம போதமானது சிவபோதமாக மாறி, உப்பு மீண்டும் கடலிலே கரைந்து விடுகிறது.

இந்த மாபெரும் சிவபோத சாதனை அல்லது இறையின்பப் பேற்றை, மனத்தின் இயல்புகளைக் கொண்டு நடாத்தி, ஞானத் தொழில் புரிந்து, பெற்றுய்யலாம் என்று உறுதியளிக்கிறது சித்தர் இலக்கியம்.

★

# 14. இறையுணர்வில் மனமும் மொழியும் செயலும்

சித்தர்கள் ஆராய்ந்து கண்ட எண்ணற்ற பல நுட்பங்களில் எல்லாம் மையமாக விளங்குகிற மாபெரும் நுட்பம், இறைவனுடைய தன்மை, மனத்தையும் சொல்லையும் கடந்து விளங்குகிறது என்பதாம்.

அப்படியானால் மனத்தையும் வாக்கையும் கடந்து நிற்பதை மனத்தினால் சிந்திக்க வேண்டும் என்றும், வாக்கினால் துதிக்கவேண்டும் என்றும், இலக்கியங்கள் பேசுவது எங்ஙனம், என்ற கேள்வி எழுகின்றது அல்லவா? இதற்கும் விடை கூறுகிறது சித்தர் இலக்கியம்.

வார்த்தையினால் சொல்ல முடியாத பொருளை வார்த்தைகளைக் கொண்டே வேதங்கள் மொழிகின்றன; ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடுகிறார்கள்; சித்தர்களும் பாடுகிறார்கள். இது எவ்வாறு ஒவ்வும்?

கைவல்லிய நவநீதத்திலே ஆசான் மாணவனுக்கு இதை விளக்குகிறான்.

"நல்நாயகன் அல்லாதவர்களை இவன் அல்லன், இவன் அல்லன் என்று கூறிய தலைவி, நாயகனைக் காட்டிக் கேட்டபோது அந்தத் தலைவியானவள் வெட்கமுற்றுப் பேசாதிருந்தாள் என்பதுபோல, இது அன்று இது அன்று எனத் தள்ளிப் பின்பு சேஷித்து நின்ற பரப்பிரம வஸ்துவை வேதமானது சொல்லாமற் சொல்லும்" என்பது அருணாசல சுவாமிகளின் கைவல்லிய நவநீத உரை!

தன்பதி யல்லாப் பேர்கள்<br>
    தமைஅல்லன் அல்லன் என்றாள்<br>
அன்பனைக் கேட்ட நேரம்<br>
    அவள்வெட்கி மௌனம் ஆனாள்<br>
என்பது போல நீக்கி<br>
    இதன்று இதன்று எனச்சே டித்த<br>
பின்பரப் பிரமம் தன்னைப்<br>
    பேசாமல் பேசும் வேதம்

என்பது கைவல்லியப் பாடல்.

இனி இரண்டாவதான மனத்தின் செயலைத் தாண்டவமூர்த்தி சுவாமிகள் விளக்குகிறார்.

இந்திரியங்களுக்குத் தலைவன் ஞானமாம். இந்நினைவுகள் 'புத்தி' எனவும் 'மனம்' எனவும் புறத்திலும் அகத்திலும் சஞ்சரிக்கும்.

இந்த வகையிலே ஆராயும்போது, கண்ணாடியிலே நமது முகத்தைப் பார்ப்பது போல, சித்தம் புறப்பொருளைக் காண்கிறது. இதனுடைய அதிநுட்பம் என்னவென்றால் மனமானது வெளிமுகமாகப் பார்க்கும் போது பரம்பொருள் புலனாவதில்லை. உள்முகமாகப் பார்க்கும்போது அது புலப்படும்.

மனத்திலே நற்செயல்களுக்குரிய சத்வகுணம் மிகும்போது நல்வழியாகிய இறையிணக்கம் ஏற்படுகிறது. ரசோகுணம் என்னும் பண்பு மிகும் போது, உலக அறிவும் நூலறிவும் மிகுகின்றன. மந்தமாகிய தமோகுணம் மிகும்போது அசுர இயல்புகள் பொருந்துகின்றன என்பது பெரியோர்கள் வாக்கு.

மனத்தின் இயல்பான நிலை சத்துவ வடிவு. எனவே மற்ற இரண்டு பண்புகளும் அதோடு வந்து சேர்ந்தவை. அவற்றை நசுக்க வேண்டும். நசித்தால் நசித்துப் போகக் கூடியவை அவை. மாணவன் தனது பயிற்சியினால் சத்துவ குணத்தை வளர்த்துக் கொள்ளும்போது இறையிணைப்பும் வளர்கிறது.

உருவமற்றதும் அறிவில் உருவானதுமே மனம். அது அமைதி என்ற சத்துவப் பண்பை மட்டுமே நிலைபெறச் செய்து, அசைவின்றி மற்றப் பண்புகளை நீக்கி நிற்கும்போது, அறிவுக்கு அறிவான பேரறிவையும் அதனால் துய்க்கமுடியும் என்பதே சித்தர்களின் முடிவாகும்.

இனி, சொல்லையும் மனத்தையும் இறைவனை நோக்கிப் பாய்ச்சுதல் என்னும் பயிற்சி இந்த விளக்கத்தின் தொடர்பாக நாம் ஆராயவேண்டிய ஒன்றாகும்.

மந்திரங்களைச் சொல்வதனால் இறைவன் சொற்களுக்குள் அடங்கிவிடுகிறானா, எந்திரக் கோடுகளுக்குள் அடைபடுகிறானா என்பதை முதலில் ஆராயவேண்டும்.

மந்திரங்கள், சக்கரங்கள் ஆகிய இரண்டுமே ஒலி அதிர்வுகளை மையமாகக் கொண்டு தோன்றியவை. நிறைமொழி மாந்தரின் ஆணையில் எழுந்து வந்தவை அவை. எனவே மற்ற மொழிகளுக்கும், படங்களுக்கும் இல்லாத ஓர் ஆற்றல் இவற்றுக்கு உண்டு. இந்த ஆற்றலானது மந்திரச் சொற்களுக்கும், சக்கரத்தின் கட்டங்களுக்கும் மட்டுமே அமைந்ததாகாது. அவற்றை இயற்றித் தந்த முனிவர்களின் ஆன்ம ஆற்றலுக்கும், அவற்றைப் பயில்கிற மாணவனுக்கும் இடையேயுள்ள தொடர்பாக, ஒரு பாலமாக, அமைகின்ற சித்தத்தின் ஆற்றலையும் பொறுத்துத்தான் மந்திரங்களும் எந்திரங்களும் வேலை செய்யும். அதனாலேதான் இந்தப் பாலமான எந்திரங்களுக்குப் பற்பல கோடுகளும், வட்டங்களும் கட்டங்களும் அமைத்து ஒருவனுடைய மனம் அதில் ஈர்க்கப்படுமாறு ஆன்ம வடிவம் அமைக்கப் பெறுகிறது. அதோடு கூட, எந்திரத்தை இயற்றித் தருகிறவன் தனது ஆன்ம ஆற்றலையும் அதனுள் பாய்ச்சித் தருகிறான். இந்த அடிப்படையை நாம் மறந்து விடக் கூடாது. எந்திரங்கள் என்பவை வெறும் கோலங்கள் அல்ல.

இயற்றியோனின் ஆன்ம நிறுவனம் பெற்ற உயிராற்றல்கள் அவை. அந்த ஆற்றல்கள் எந்திரங்களின் கோடுகளுக்குள்ளும், வளைவு நெளிவுகளுக்குள்ளும் இழைகிறது. கட்டங்களுக்குள்ளே அமர்ந்துள்ள எழுத்துக்களிலே நின்று பேசுகிறது. மொத்தத்தில் ஓர் எந்திரத்திற்குள்ளே ஒரு பெரிய முனிபரம்பரையே குரல் கொடுக்கிறது. ஒலி அதிர்வைப் புரிகிறது! வானொலி நிலையமாக அமைந்து ஒலி அலைகளை எழுப்பி அனுப்புகிறது!

இனி, மந்திரங்கள் பற்றி ஓர் அடிப்படையான உண்மையைக் கூற வேண்டும்.

பதஞ்சலி முனிவர் வடமொழியில் இயற்றியுள்ள யோக சூத்திரம் என்னும் தமது யோகநூலில் இதுபற்றிக் குறிப்பிடுகிறார். ஒரு மந்திரத்தைப் பொருள் தெரியாமல் உச்சரிக்கும்போது அது முழுதும் பயன் தருவதில்லை என்கிறார் முனிவர். அந்த மந்திரத்தை ஓதும்போது, அதனுடைய பொருளை மனத்தில் வாங்கி ஓதுகிறவனின் சித்தத்தில், அந்த மந்திரத்துக்குரிய வழிபடு பொருள், அந்த மந்திரத்துக்கு உரிய மூர்த்தியின் வடிவநிலை, முழுமையாகப் பதியும்போதுதான், அந்த மந்திரத்துக்குரிய ஒலி அதிர்வுகள் முழுமைபெற்று எழுகின்றன. அப்படி எழுந்தாலேதான் அந்த மந்திரத்துக்குரிய பயனை அதை ஓதுபவன் அடைகிறான். இந்த உண்மையை வடமொழியில் பதஞ்சலி தமது சூத்திரத்திலே ஐயந்திரிபறக் கூறுகிறார் என்பதோடு, சித்தர்களும் தமிழிலே அருளியுள்ள தம் நூல்களில் அழுத்தமாகக் கூறியுள்ளார்கள்.

மந்திரங்க்ளின் பொருள் என்பது இருவகைப்படும். மந்திரங்களுக்குள்ளே பின்னிக்கொண்டு நிற்கிற சொற்களின் பொருள் முதலாவதாகும்.

இரண்டாவது அம்சம் மந்திரங்களிலே மொழிப்பொருள் என்று நிகண்டிலே காணமுடியாத சில எழுத்துக்கள் உள்ளன. இவற்றுக்குச் சொற்பொருள் கிடையாது. ஆனால் ஒலிப்பொருள் என்று ஒரு நுட்பம் உள்ளது.

தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் பிற இலக்கணச் சுவடிகளிலும், எந்த எந்த எழுத்து உடம்பின் எந்த எந்த இடத்தில், எந்த எந்தச் செயலினால் எழுகிறது என்று, வரையறுத்துச் சொல்லப் பெற்றுள்ளமை நமக்குத் தெரியும் அல்லவா? இவ்வாறே மந்திரங்களிலுள்ள பீஜங்கள் என்னும் ஒலிவித்துகள் நமது உடம்பின் எந்தப் பகுதிகளிலே மையம் கொண்டுள்ளன, எங்கிருந்து அந்த ஒலி தோன்றுகிறது என்பதை, யோக சித்தர்கள் கண்டு சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தோற்ற மையங்களுக்கு 'இடங்கள்' என்றும், 'தானங்கள்' என்றும் பெயர்.

மந்திரங்களை ஒருவன் ஓதும்போது அவற்றைப் பொருள் தெரியாமல் ஒருவன் 'மொண மொண'ப்பதால், பயன் இல்லை. எத்தனை ஆண்டுகள் எத்தனை ஆயிரம் தடவை அவ்வாறு செய்யினும் சித்தி கிட்டாது. இடங்கள் அல்லது தானங்கள் ஆசானிடம் தெரிந்து

கொள்ளவேண்டும். 'உபதேசம்' என்றாலே உடனிருந்து காட்டுதல் என்பதுதான் பொருளாகும். எனவே இந்த இடங்களை ஞானகுரு உணர்த்தவேண்டும். அதன்பிறகு சித்தத்திலே அந்த மந்திரங்களிலுள்ள சொற்பொருளைத் தேக்குவதோடு, சொற்பொருளைக் கடந்த ஒலிகளை, அவற்றின் பொருளாகிய தானநிலை அதிர்வுகளைக் கொண்டு ஒலிக்கவேண்டும். இவ்வாறு செய்யும்போது அந்தந்தத் தானங்களிலே சித்தத்தை நிறுத்தி, அந்த அதிர்வுகளைச் சித்தத்திலே வாங்கி எதிரொலி போன்று இணை அதிர்வாக ஒலிக்கும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்வதுதான் மந்திரம் 'ஓதுதல்' என்பதன் நுட்பம்.

ஆகவே சித்தர் இலக்கியங்கள் மந்திர உச்சாடணங்களைப் பற்றிக் கூறுகிற சட்டங்கள் இரண்டாகும். ஒன்று, மந்திரங்களை ஓதுபவன் அவற்றின் சொற்பொருளை அறிந்து, அந்த மந்திரங்களுக்குரிய இறைவடிவின் தோற்றத்தைத் தன் சித்தத்திலே பதித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது, அந்த மந்திரங்களிலே உள்ள 'பீஜங்கள்' என்னும் தாய் ஒலிகள் மையம் கொண்டும் தோன்றியும் இயங்குகிற உடம்பின் உறுப்புக்களை அல்லது இடங்களைச் சித்தத்தோடு பிணைக்க வேண்டும். அந்தந்த இடங்களைத் தொட்டுநின்று ஓதவேண்டும். இவ்வாறு செய்தால்தான் அந்த மந்திரங்களின் பயனை நாம் அனுபவிக்க முடியும்.

இனி, மந்திரம் ஓதுதல் என்ற செயல் இல்லாமலேயே இறை ஆற்றலை எய்துகிற முறையையும் சித்தர்கள் வகுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது மனத்தை நேராகவே இறைவன்பால் அழைத்துச் செல்கிற முறை.

நீதிமன்றங்களிலே ஒரு வழக்கறிஞரை அமர்த்திக்கொண்டு அவர் வாயிலாக நம் வழக்கை வாதிடுவது உண்டு. மந்திரமுறை என்பது இவ்வகையைச் சேர்ந்தது. இவ்வாறில்லாமல் வழக்காடி என்பவன் தானே தன் வழக்கை வாதிடுவது உண்டு. யோகம் என்பது இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தது. ஒருவன் தானே தன் வழக்கை வாதிடுவதற்கு அவன் சட்ட ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லவா? அவ்வாறுதான் யோகநிலையிலே இறைவனை அணுகுகிற மாணவன், தன் வழக்கிலே புகுமுன்பு யோகப் பயிற்சி முறைகளை நன்றாகக் கற்று, அவற்றின் சட்ட ஞானத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்தச் சட்ட ஞானத்தை உணர்ந்து தேர்ந்தவன் தானே நேர்முகமாக, ஒரு வழக்கறிஞரின் சார்புத் துணையின்றி, நீதிமன்றத்தில் நேர்தொடர்பு கொள்ளலாம். இதைப்போலத்தான் யோகம் பயில்கிற மாணவன் தனது உடம்பாகிய தெய்வ மன்றத்திலே இறைவனுக்கு முன் சித்தமாகிய கூண்டிலே நேர் நிற்கிறான். அவனுக்கு மந்திரம் எந்திரம் போன்ற வழக்கறிஞர்களின் சார்புக்கு அவசியமில்லை. இத்தகைய தன்னாட்சியுடைமையே யோகப் பயிற்சியின் தனிப்பண்பும் அதன் மாண்புமாம்.

யோகப்பயிற்சி என்ற வழியிலே முன்னேறுகிற மாணவனுக்கு மொழியும் செயலும் சித்தமேதான். அவன் வழிபடுகிற கோயில்

வெளியே இல்லை; இந்த யாக்கையேயாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்தும் இந்த உடம்புக்குள்ளே உள்ளன. க்ஷேத்திராடனம் செய்வது என்று உலக வழக்கிலே சொல்கிறோமே, அத்தகைய பயணச் செலவுகள், போக்குவரத்துகள், அனைத்தும் உடம்புக்கு உள்ளேதான், புறத்தே இல்லை!

பயணம் என்னவோ எளிதுபோலத் தோன்றுகிறது. ஆனால் அனுபவத்தில் அப்படியா?

மனிதன் காசிக்குச் செல்வான். கன்னியாகுமரியில் நீராடுவான். திருப்பதிக்கு நடந்தே செல்வான், கோவிந்தாப் போட்டுத் தரையிலே உருண்டுகொண்டுங்கூட ஏகிடுவான். இத்தகைய பயணங்கள் அவனுக்கு எளிதானவை. இன்னும் சொல்லப்போனால் ஆகாய விமானத்தில் பறந்து சென்று பல்லாயிரம் காதங்களுக்கு அப்பாலும் போய் விடுவான். ஏன்? சந்திரமண்டலத்துக்குள்ளேகூடச் சென்றுவிடுகிறான். ஆனால் நகர்வதற்கே அவசியம் இல்லாத, இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு செய்கிற, இந்த உட்பயணம் அவனால் எளிதில் முடிகிறதில்லை. விமானத்திலே பறந்து சந்திர மண்டலத்துக்குச் செல்வதைவிட, மனக்கதவைத் திறந்துகொண்டு இந்த உடம்பாகிய கோவிலுக்குள்செல்வது அவனால் முடிகிறதில்லை.

எளியதுபோல் தோன்றி மிகவும் அரிதாக இருக்கிற இந்த உடற் பயணத்திற்கான வழித்துணைதான் சித்தர் இலக்கியம். புகைவண்டித் துறையினரும், நெடுஞ்சாலைப் பேருந்து நிலையங்களும், வழிகாட்டி நூல்களும் வரைபடங்களும் எழுதி அச்சிட்டு வழங்கி உள்ளார்கள் அல்லவா? இத்தகைய பயணத்துணையே சித்தர்கள் வழங்கியுள்ள யோகநூல் இலக்கியம். ஆனால் ஒன்று முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். வழிகாட்டி நூலை மட்டும் வைத்துக்கொண்டு, அந்த நூலறிவை மட்டும் கொண்டு, இந்த உடற் பயணமாகிய யோக யாத்திரையை மேற்கொள்ளக்கூடாது. வழிகாட்டி என்பது ஒரு நூல் தான். ஆனால் வழித்துணை என்பதோ ஓர் சித்தனாகிய ஆசானின் நேர்முகத் துணையாகும். இதன் காரணமாகத்தான் பயிற்சி நூல் களை அருளியுள்ள சித்தர்கள் எல்லாரும், தங்கள் பாடங்களை மொழிகளிலே சொல்லியிருப்பதோடுகூட, மனத்தையும் அதன் செயல் களையும் இறையுணர்விலே ஈடுபடுத்துவதற்கு ஓர் நேர்முக ஆசான் இன்றியமையாதவன் ஆகிறான் என்பதை வற்புறுத்துகிறார்கள். எச்சரிக்கையும் செய்கிறார்கள்.

ஞானத்தைப் பெறவிரும்பும் மாணவர்கள் அனைவர்க்கும் சித்தர் இலக்கியத்தைப் போலவே இந்த அறிவுரையான எச்சரிக்கை முக்கிய மானதாகும்.

★

# 15. உடம்புக்குள் வல்லமைகள்

சித்தர்களுடைய இலக்கியத்தில் மிகவும் முக்கியமாக விளக்கப்படு கிற ஞான யோகமுறைக்குக் குண்டலி யோகம் என்று பெயர். நம் முடைய தமிழ்நாட்டு மக்களுக்காகச் சித்தர்கள் வழங்கியுள்ள இந்த யோகமுறை விளக்கம் வேதம் என்றே அழைக்கப்பெறுகிறது! இந்த வேதப் பொருளை ஆசான் மூலம் பெற்ற பயிற்சியோடு, தாங்கள் அனுபவித்துக் கண்ட பேரின்ப முறைகளையும் இணைத்து, மிக விரி வாகவே இலக்கியங்களில் விளக்கம் செய்திருக்கிறார்கள். இந்த அனுபவ ஞான வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வழிகள் இரண்டாம். அந்த இரண்டில் ஒன்றே சரவழி அல்லது மூச்சு வழியாகும். இரண்டாவது வழி, சுரவழி அல்லது நாதவழியாகும். இந்த இரண்டா வது வழியானது ஒலியை அடிப்படையாகக் கொண்டது. முதலாவது வழி சுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. இவற்றையே சரம் என்றும், சுரம் என்றும் வேறு பெயர்களிலும் அழைத்துள்ளார்கள். இந்த இரண்டு வழிகளைத் தவிர, மூன்றாவதும் பல சித்தர்களால் பயின்று அறிவிக்கப்பட்டுள்ளதுமான வழி ஒளியின் வழியாகும்.

சரவழி என்பது நாசியை அடிப்படையாகக் கொண்டது. மூக்கிலுள்ள வலப்புழை, இடப்புழை ஆகிய இரண்டு துவாரங்களின் வழியாகத் தனித்தனியே இழைகின்ற மூச்சையும், இந்த இரண்டிலும் சேர்ந்து ஒரே சமயத்தில் இழைகிற மூச்சையும் கொண்டு, உடற் பயிற்சியின் மூலம் உள்ளத்தையும் ஆன்மாவையும் உணர்ந்து தொழிற் படுகின்ற முறையே சரமுறை.

செவியை அடிப்படையாகக் கொண்டு, ஒலி அலைகளை உள்ளும் புறமுமாகக் கட்டுப்படுத்தி, புறத்தே கேட்கின்ற ஒலியைப்போல் உடம்பின் உள்ளே ஒலி கேட்கும்வண்ணம், பற்பல நுட்பமான முறை யிலே பயிற்சி செய்து, உடலையும் உள்ளத்தையும் ஆன்ம ஓட்டத்தை யும் இயக்குகின்ற முறையே, சுரமுறை அல்லது ஒலியோகம் என்ற பயிற்சியாகும்.

இந்த இரண்டைத் தவிர, வலக்கண், இடக்கண் ஆகிய இரண்டு கண்களின் வழியே மூன்றாவது சூக்குமக் கண்ணாகிற நெற்றிக் கண்ணையும் இணைத்து, இந்த மூன்று நாடிகளையும் உள்ள உணர்வு கொண்டு இயக்கி, அந்த இயக்கத்தின் வழியாக உடம்பையும் உள்ளத் தையும் பேருணர்வுடன் கட்டுப்படுத்தி ஆளுகின்ற முறை சித்தர்களால் ஒளிமுறை என்று அழைக்கப்பெறுகிறது.

சித்தர்களின் இலக்கியங்களை ஆழ்ந்து ஆராய்ந்தோமானால் எந்த ஞானி எந்த முறையை எவ்வாறு சொல்லியிருந்த போதிலும்,

அந்த முறைகள் அனைத்தின் அடிப்படையுமே இந்த மூன்று முறைகளில் ஏதாவது ஒன்றன் வகையில் அடங்குவதாக அமைந்திருக்கிறது.

சித்தர்களுடைய இலக்கியங்களில் காணப்பெறுகின்ற இன்னொரு வகையான, சுவையான உண்மை என்னவென்றால், சமஸ்கிருதமான வடமொழியையும், தமிழ் மொழியாகிய தென்மொழியையும், இரண்டையும் ஒருங்கே கற்றுணர்ந்த சில மகான்கள், இந்த இரண்டு மொழிகளையும் சக்தி, சிவன் என்ற பெயரால் அழைக்கிறார்கள். அதாவது வடமொழியைச் சக்தியின் பாஷை என்றும், தமிழ்மொழி யைச் சிவனுடைய மொழி என்றும் சில சித்தர்கள் அழைக்கிறார்கள். இந்த இரண்டு மொழிகளிடத்திலுமே அவர்களுக்கு ஆர்வமும், பயிற்சி யும் இருந்திருப்பதைக் காண்கிறோம். அதோடுகூடச் சித்தர்கள் எப்படி மத வேறுபாடுகளைக் கடந்து ஞான நிலையிலே நின்று பேசு கிறார்களோ, அவ்வாறே அவர்கள் மொழிகளின் உயர்வு தாழ்வுகளை யும் கடந்து, எல்லா மொழிகளையும் ஒருசேர மதிக்கும் நிலையிலிருந்து பாடுகிறார்கள். சித்தர்களுக்கெல்லாம் சித்தராகிய திருமூலர் எல்லா மொழிகளுமே தேவ பாஷைகள் என்று கூறுகிறார். அவருடைய காலத்தில் நம்முடைய நாட்டில் பதினெட்டு மொழிகள் வழங்கிவந்த தாகத் தெரிகிறது. இந்தப் பதினெட்டு மொழிகளுமே அண்ட முதல் வனாகிய அரன் அருளிய மொழிகள் என்று திருமூலர் கூறுகின்றார்:

பண்டிதர் ஆவார் பதினெட்டு பாஷையும்
கண்டவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டு பாஷையும்
அண்ட முதலான் அரன்சொன்ன வாறே

என்பது திருமூலருடைய திருமந்திரம். பின் அத்தியாயங்களில் இதன் நுட்பம் மேலும் ஆழமாக ஆராயப்படுகிறது.

ஆகவே சித்தர்களுடைய இலக்கியத்திலுள்ள கருத்துக்கள் அனைத்தும், எல்லா மொழிகளுக்கும், எல்லா வட்டாரத்து மக்களுக் கும், பொருந்தக்கூடிய பேருண்மைகளை உணர்த்துகின்ற உயர் தனிப் பெருங் கருவூலங்களாம். அதனாலேதான் திருமூலர் தம்முடைய முன்னுரையிலேயும்,

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்

என்று பாடுகிறார்.

தமிழ்நாடு என்றோ, வடநாடு என்றோ எல்லை கூறாமல் வையகம் என்று உலகம் முழுவதையுமே உள்ளடக்கிக் கூறுவதன் நோக்கம் சித்தர் கள் அனுபவித்த பேரின்பமும், அவர்கள் கண்டு விளக்குகிற மெய்ஞ் ஞானமும், எல்லா மதத்தினருக்கும், எல்லா நாட்டு மக்களுக்கும் பொதுவானவையாகவும், எல்லாருக்கும் எப்பொழுதும் பயன்படுபவை யாகவும் விளங்குவன என்பதே.

உடம்பும் உள்ளமும் உயிரும் எல்லா நாட்டு மக்களுக்கும் ஒரே இலக்கணத்திலேதான் அமைந்திருக்கின்றன. இந்திய மக்களுக்கு இரண்டு கண்கள்; எகிப்துமக்களுக்கு மூன்று கண்கள்; ரஷ்ய மக்களுக்கு

நான்கு கண்கள் என்று இல்லை. அதுபோலவேதான் உடம்பின் பிற உறுப்புகளும் உள்ளத்தின் அமைப்பும் உயிரின் இயக்கமுமாகும். எல்லா மதத்தவர்களுக்கும் உடம்பும், அதன் உள்ளே இயங்குகிற உள்ளமும், இவற்றுக்கு ஆதாரமாக அமைந்த உயிரும் ஒரே பாங்கில்தான் படைக்கப்பெற்றுத் தொழிற்படுகின்றன. எல்லா மொழியினருக்கும், எல்லா மதத்தினருக்கும், எல்லா நாட்டினருக்கும் உடம்பும் உள்ளமும் உயிரும் ஒரே பாங்கில் அமைந்துள்ள காரணத்தால், தமிழகத்துச் சித்தர்கள் கூறுகிற ஞானமே மேனாட்டு ஞானிகள் கூறுகிற ஞானமாக வும் அமைந்திருக்கிறது. சான்றாக, ரோம் நகரத்திலே வாட்டிகன் தலைநகரத்திலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தின் உள்ளே நுழைந்தோமானால், பீட்டர் முனிவருடைய சிலையும், அந்தக் கருவறையிலிருந்து கிளம்புகின்ற ஞான அலைகளும், தமிழ்நாட்டுச் சித்தர்களின் ஜீவ சமாதியையே நினைவூட்டுவனவாக அமைந்திருப் பதை நான் இத்தாலி சென்றிருந்தபோது நேரிலே கண்டேன். எனவே தான், உடம்பு சம்பந்தப்பட்டவரை எப்படி மேனாட்டில் செய்யப்பட்ட மருந்தானது நம்முடைய நாட்டு மக்களின் நோயைக் குணப்படுத்து கிறதோ, அதுபோலவே, எல்லாநாட்டு ஞானமும் உலக மக்களிலே யாவருடைய உள்ளத்தையும் அந்த உள்ளத்தின் நோயையும் ஆற்றுகிறது. ஆகையால்தான் சித்தர் இலக்கியங்களை உலகப் பெரு நூல்கள் என்றும் உலகப் பொது நூல்கள் என்றும் நாம் அழைக் கிறோம்.

இந்த நோக்கோடு பார்க்கும்பொழுது குண்டலி யோகம் என்று அழைக்கப்படுகிற சித்தர்களின் யோக ஞான முறையானது, உலக மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய பல இரகசியப் பேருண்மை களைத் தன்னுள் அடக்கி நிற்கிறது. எல்லா நாட்டு ஞானிகளும், உடம்பினுள்ளே உள்ள ஆதார நிலைகளைப் பேசும்பொழுது, உயிர் இயக்கத்தின் நுட்பமான ஆற்றல்களுக்குத் தோற்றுவாயாகச் சொல்லு கிற நிலை இந்தக் குண்டலியாகவே விளங்குகிறது. பாஷைகள் பலவாக இருக்கலாம். சித்தர்கள் பலராக இருக்கலாம். ஆனால் அடிப் படையான யோகமுறை ஒன்றாகவே இருக்கிறது. இவை அனைத் திற்கும் ஆதாரமாக விளங்குவதே குண்டலினி என்ற ஆற்றலும் குண்டலி யோகம் என்ற பயிற்சி முறையும் ஆம்.

சித்தர் இலக்கியங்கள் அனைத்திலும் காணப்பெறுகின்ற குண்டலி யோக இரகசியங்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது, எல்லா நூல்களுக்கும் பொதுவான சில இரகசியங்களை ஒருமைப் பாட்டுடன் ஒரே குரலில் பேசுவதைக் காண்கிறோம். அத்தகைய பேருண்மைகளைத் தொகுத்துக் கூறுகிற சித்தர் நூல்கள் தமிழ்மொழி யில் நூற்றுக்கணக்காகச் சுவடி வடிவில் இருப்பினும், இவற்றிலெல்லாம் முக்கியம் வாய்ந்தவை அவ்வை அருளிய சித்தர் இலக்கியமாகிய குறளும், திருமூலர் திருமந்திரமும், பதினெண் சித்தர்களின் ஞானக் கோவையும், நாட்டுப்புறப் பாடல்களைப் போன்று அவற்றின் சந்தத் திலே அமைந்த கும்மி, கண்ணி, சிந்து போன்ற ஆயிரக்கணக்கான பாடல்களும், இன்னும் அச்சு வடிவத்திலே வெளிவராத ஓலைச்சுவடி களில் அமைந்த சில இரகசிய நூல்களும் ஆம். இவை அனைத்திலும்

கூறப்பட்டுள்ள குண்டலி யோகம் பற்றிய இரகசியங்களைத் தொகுத்து ஆராய்ந்து பார்த்தால், அவை மூன்று பெரிய பிரிவிலே அடங்குவனவாக இருக்கின்றன.

முதலாவது பிரிவு, இந்த உடம்பின் ஆதார நிலைகளைக்கொண்டு செய்கின்ற பயிற்சியாகும். இரண்டாவது பிரிவு, இந்தப் பயிற்சியின் மூலம் அனுபவிக்கின்ற திருவருளாகிய ஆனந்தத்தைப் பற்றியதாகும். மூன்றாவது பிரிவு, இந்த ஆனந்தம் என்ற வழியேசென்று பேரானந்தம் என்கின்ற வீடுபேறு பெறுகின்ற பயிற்சிமுறையாகும். இந்த மூன்று முறைகளையும் கூறுகின்ற சித்தர் இலக்கியங்களின் பேருண்மைகளில் மிகவும் முக்கியமான சிலவற்றை இங்கே பார்ப்போம்.

பிறப்பு இறப்புகள் இந்த உலகில் ஏற்படுவது பற்றி நம்முடைய சித்தர்கள் சில தத்துவங்களை ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். ஒரு குழந்தை கருவிலே உருவாகவேண்டுமென்றால், அதற்குத் தாய் தந்தையர்களுடைய ஆற்றல்களின் இணைப்பு மட்டும் போதா என்ற பேருண்மையை ஞானிகள் வற்புறுத்துகின்றார்கள். ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் கூடுகின்ற ஒரு காரணத்தால் மட்டும் கருவானது தரிப்ப தில்லை. ஒரு குழந்தை உண்டாவதற்குத் தந்தையின் விந்துவும் தாயின் சோனிதமும் மட்டும் போதவில்லை. வேறு சில ஆற்றல்கள் இந்தத் துளிகளை இணைத்து ஒன்றுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நிலையை ஆராய்ந்த சித்தர்கள், பிறப்புக்குக் காரணம் ஆண்மை பெண்மையாகிய இரண்டு ஆற்றல்களின் இணைப்பு மட்டும் அல்ல என்றும், இந்த ஆற்றல்களோடு சேர்ந்து ஐந்து பூத ஆற்றல்களின் கூறுகளும் இணையவேண்டுமென்றும் கண்டு சொல்லி யிருக்கிறார்கள். இல்லையென்றால் மனிதப் புணர்ச்சி ஒவ்வொன் றிலுமே ஒரு கரு உற்பத்தியாகிவிட வேண்டுமல்லவா? நடைமுறையில் அப்படி நிகழ்வதில்லையே!

ஓர் உடம்புக்குள்ளே ஓர் உயிர் புகுவதற்கு அண்டமெங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் ஒரு கூறு உட்சென்று ஆற்றல்களை ஆற்றுப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இந்த அடிப்படை ஆற்றல் ஐம்பூத ஆற்றல்களின் கூறுகளையும், ஆண்மை பெண்மை யாகிய ஆற்றல்களையும், எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து, ஒரு குயவன் மண்பாண்டம் செய்வதுபோல மனித உருவை ஆக்க வேண்டிய தத்துவமே பிறப்பின் பேர் இரகசியமாகும். உடம்புக்குள் செல்லவேண்டிய உயிரானது, பரம்பொருளின் ஆற்றலாகிய பேராற் றலை வேண்டிப் பிடித்து, அதனுடைய பேருதவி கொண்டு, உடம்பாகிய மட்பாண்டத்திற்குள் புகுந்து செயற்படுகிறது. இதனைத்தான்,

**நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தாண்டி ஓர் தோண்டி**

என்று கடுவெளிச்சித்தர் பாடுகிறார். நந்தவனம் என்று குறிக்கப் பெறுவது பேரண்டமாகிய இந்தப் புவனத்தை. ஆண்டி என்பது தனி உயிர். அது ஒரு பரதேசியைப் போல் கட்டுப்பாடு இன்றி எந்த உடம்புக்குள்ளும் சிக்காமல் அலைந்து திரிகிறது. அந்த ஆண்டியாகிய

உயிர் குயவனாகிய பரம்பொருள் ஆற்றலை வேண்டி, அந்த ஆற்றலின் ஒரு கூறு தனக்கு ஆக்கிக்கொண்டு, இந்த உடம்பாகிய மட்கலத்துக் குள்ளே புகுந்து ஆடுகிறது, ஆட்டுவிக்கிறது. நாலாறு மாதம் என்று கூறப்படுவது சந்திரனுடைய கணக்குப்படி பத்து மாதங்கள் கொண்ட திதிக் கணக்காகிய இருநூற்று ஏழுபது நாட்களே. இன்றைய நவீன விஞ்ஞானக் கணக்கின்படியும் ஒரு கருவின் வளர்ச்சிக்காலம் ஏறத்தாழ இருநூற்று ஆறுபத்து ஏழு நாட்கள் என்றே கூறப்படுகிறது அல்லவா?

இந்தக் கருத்தையேதான் பாம்பாட்டிச் சித்தரும் தம்முடைய நூலிலே பாடுகிறார்:

**ஊத்தைக் குழியிலே மண்ணெடுத்து**
**உதிரப் புனலிலே உண்டை சேர்த்து**
**வாய்த்த குயவனார் செய்யும் பாண்டம்**

என்று இந்த உடம்பாகிய மட்கலத்தை உருவகத்திலே வருணித்துப் பாடுகிறார் இந்தச் சித்தர்.

குயவனார் என்று கூறப்படுவது ஒரு கரு உருவாவதற்கு வேண்டிய பேராற்றலாகிய பரம ஆற்றலையே. மண்ணும், புனலும் தாய் தந்தையர்களுடைய விந்து நாதமாகிய உடற்கூறுகளே. குயவனுக்கு ஒரு மண்பாண்டம் செய்வதற்காக மண்ணும் தண்ணீரும் மட்டும் இருந்தாற் போதாது. அந்த மட்பாண்டத்தை உபயோகப்படுத்து வதற்குரிய தேவை கொண்ட ஒரு மனிதன், தனக்கு ஒரு மண்பாண்டம் வேண்டுமென்று கேட்கவேண்டியது இருக்கிறது. எப்படியென்றால் பாண்டம் செய்பவன், இந்தப் பாண்டத்தைத் தானே உபயோகப் படுத்துவதில்லை. பிறன் ஒருவனுடைய உபயோகம் கருதியே குயவன் மண்பாண்டம் செய்கிறான். அப்படி அந்த மண்பாண்டத்தைப் பயன் படுத்துகின்ற வாடிக்கையாளரே தனி உயிர் ஆகும். எத்தனைதான் உயிர் அந்த மட்பாண்டத்தைத் தனது என்று சொந்தம் கொண்டாடி னாலும், அந்த மட்பாண்டத்திற்கு உரியவன் அதைப் படைத்த அந்தக் குயவனேயாகும். குயவனுடைய கைவண்ணம் அந்த மட்பாண்டத் திற்குள் விளையாடுகிறது. அவ்வாறே தனி உயிர் இயங்குகின்ற இந்த உடம்புக்குள்ளே, பரம்பொருளின் கலை அடங்கி நிற்கிறது. இதைத் தான் சித்தர்கள் குயவன் என்றும், மண் என்றும், உதிரப்புனல் என்றும் பாடுகிறார்கள். மண்ணும், புனலும், சூளையின் நெருப்பும், அந்த நெருப்பை இயக்குகிற காற்றும், பிற துணைக் கருவிகளும் ஐம்பூத ஆற்றல்களாம். இந்த ஐம்பூத ஆற்றல்களும் களிமண்ணில் சென்று செயற்பட்டால்தான் மட்பாண்டம் உருவாகிறது. எனவேதான் ஒரு குழந்தையின் கரு உருவாவதற்குத் தாய் தந்தையரின் உயிர் ஆற்றல் களோடு சேர்ந்து, வேறு ஆற்றல்களும் இணையவேண்டியதிருக்கிறது என்பதைச் சித்தர் இலக்கியம் வற்புறுத்துகிறது. இந்த ஐம்பூத ஆற்றல் கள் எவ்வெப்போது தாய்தந்தையரின் ஆற்றல்களோடு இணைகின்றன என்பதற்கும் ஒரு கணக்கு, சித்தர்களால் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கு, ஒரு பெண் மாதவிடாயாகிக் குளிக்கின்ற நாளுக்கும், வளர் பிறை தேய்பிறை ஆகிய திதிகளின் கணக்குக்கும் இணைந்த முறையில் அமைந்திருக்கிறது. இந்தக் கணக்கின் நுட்பத்தைச் சித்தர்கள் விளக்கு கிறார்கள்.

ஒரு பெண் மாதவிடாய் ஆகி இன்னின்ன நாட்களில் கரு உண்டாகும், மற்ற நாட்களில் உண்டாகாது என்ற கணக்கை நம்முடைய சித்தர்கள் கூறுவது ஐம்பூத ஆற்றல்கள் இணைகின்ற கணக்கிலேதான். சான்றாக, ஒரு பெண் விடாயாகிக் குளித்த பதினேழு நாட்களுக்குப் பிறகு கருத்தரிப்பதில்லை என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

கருத்தரிக்கின்ற நாட்களின் கணக்குகளைக் கூறுகிற சித்தர்கள், பிறக்கும் பிள்ளைகளின் இயல்புகளைப் பற்றியும் சில இரகசியங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

சந்திர கலையாகிய இடது மூச்சு இழையும்பொழுது கணவனும் மனைவியும் கூடித் தரிக்கின்ற கரு பெண் குழந்தை என்றும், வலது சரமாகிய சூரியகலை இயங்கும்போது தரிக்கின்ற கரு ஆண் குழந்தை என்றும், சுழுத்தியாகிய நடுநாடி பேசும்பொழுது தரிக்கின்ற கரு வீணாகும் என்றும், உருவாகாது என்றும், சித்தர்கள் கூறுகிறார்கள். இதோடுகூட மேலும் சில ஆழ்ந்த செய்திகளைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

அமாவாசை அன்று கூடித் தரிக்கின்ற கரு கறுப்பாகவும், நான்கு அல்லது ஆறு விரல்கள் உள்ளதாகவும் பிறக்கும் என்பது சித்தர் வாக்கு. தொலைதூரப் பயணம் சென்று திரும்பிய ஒருவன், அன்று இரவே தனது மனைவியைக் கூடி அப்போது தரித்தால், அப்படிப் பிறக்கின்ற குழந்தை அறிவு இல்லாத குழந்தையாக இருக்கும். அமாவாசை கழிந்த பிரதமையில் கூடித் தரிக்கின்ற கரு, பொய்பேசும் பிள்ளை யாகப் பிறக்கும். அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் கூடிப் பிறந்த குழந்தை நீண்டநாள் வாழாது. முழுநிலவில் கூடிப் பிறந்த குழந்தை தண்டியாகவும், முடமாகவும் இருக்கும். இதை ஆனைவடிவு என்று சித்தர் இலக்கியம் வருணிக்கிறது. முழுநிலவு கழிந்த பிரதமையில் கூடிப் பிறந்த குழந்தை சிறுவயதில் பல கண்டங்களைத் தாண்டிப் பின்னர் நீண்ட ஆயுள் வாழக் கூடியதாக இருக்கும். பதினைந்தாம் நாள் கூடிப் பிறந்த குழந்தை பித்தம், கருங்குட்டம், வெண்குட்டம் அல்லது முயலகன் என்னும் நோயால் பீடிக்கப்படும் என்கிறது சித்தர் இலக்கியம்.

மேலும் சில சுவையான தகவல்களைச் சித்தர் இலக்கியம் நமக்குத் தருகிறது; அவை வருமாறு:

புணர்ச்சியின்போது பேசவொண்ணாத பேச்சுக்களில் ஈடுபட்டால் அலியாகப் பிறக்கும். புணர்கின்ற பெண் நிர்வாணமாகப் புணர்ந்தால் குழந்தை சோம்பேறிப் பிள்ளையாகும். மனைவியைத் தவிர வேறொரு பெண்ணின் நினைவிலே மனத்தைச் செலுத்தி, அந்த நினைவோடு தன்னுடைய மனைவியைக் கூடினால், அப்படித் தரிக்கின்ற கரு ஆறுவிரல் அல்லது நான்கு விரல் கொண்டதாக இருக்கும். பிறை கண்ட மூன்று, ஐந்து, எட்டு, பத்து ஆகிய நாட்களில், எந்த மாதத்திலும் ஆடவனும் பெண்ணும் உடலுறவு கொள்ளக் கூடாது என்று ஆன்மீகக் காரணங்களால் சித்தர்கள் தடை விதிக்கிறார்கள்.

வெள்ளிக்கிழமையில் பகல் நேரத்தில் மூன்றாவது சாமத்தில் உடலுறவு கொண்டு, அதன் பலனாகப் பிள்ளை பிறந்தால் அதற்கு மாறுகண் இருக்கும். ஒரு மாது சூதமான மூன்றாம் நாள் கூடிச் சில பல காரணங்களால் கருத்தரித்துவிட்டால் அந்தப் பிள்ளை திருடனாக மாறிவிடும். நான்காவது நாள் மூடனாக இருப்பதோடு, வறுமையில் வாடும் குழந்தையாக இருப்பான். ஐந்தாம் நாள் கூடிப் பிறக்கின்ற பிள்ளை கல்வி சிறந்து விளங்கும். ஆறாம் நாள் கூடித் தரிக்கின்ற கரு, கடவுட் கொள்கைகளையும் பெரியோர்களின் கருத்துக்களையும் மறுத்துப் பேசுகின்ற கேடான மதியுடைய பிள்ளையாக இருக்கும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். ஏழாவது நாள் கருத்தரித்தால் உண்மை மிகுந்த குழந்தையாக இருப்பதோடு ஈகை, இரக்கம் முதலிய நற்பண்புகள் நிறைந்த குழந்தையாக இருக்கும். எட்டாம் நாள் கருத்தரித்தால் அந்தக் குழந்தை தரித்திரத்தில் வாழக்கூடியது என்று ஐயம் திரிபறக் கூறுகிறது சித்தர் வாக்கு. ஒன்பதாம் நாள் தரிக்கின்ற கரு, மிக உயர்ந்த செல்வவளம் கொண்ட குபேர யோகம் என்ற பெருத்த யோகமுடைய குழந்தையாக உருவாகும். பத்தாம் நாள் தரிக்கின்ற கரு காமம் மிகுந்த பிள்ளையாகவும், கெட்ட பழக்கங்கள் கொண்டதாய்த் தனக்கும், குடும்பத்திற்கும், குலத்திற்கும் அவமானம் கொண்டு வருவதாகவும் உருவாகும். பதினோராம் நாள் தரிக்கின்ற கரு நோய் உள்ள குழந்தையாகும். பன்னிரண்டாம் நாள் கணவனும் மனைவியும் கூடுவது மிகச் சிறந்த செயல் என்றும், அப்படிப் பிறக்கின்ற குழந்தை பல கலைகளும் அறிவுநலன்களும் மிகுந்த மிகப்பெரிய பண்டிதனாகும் என்றும் உறுதி கூறப்பட்டிருக்கிறது. பதின்மூன்றாம் நாள் உருவாகின்ற குழந்தை அரசியல் ஞானமும், வருங்காலத்தை உணர்கின்ற விவேகமும் உடையதாகும். பதினான்காம்நாள் தரிக்கின்ற கரு, உலக இன்பங்களிலே திளைக்கின்ற போகியாகப் பிறக்கும். பதினைந்தாம் நாளின் கரு, ஓர் அரசனுக்கு ஒப்பான வளங்களும் ஆற்றல்களும் உடையதாக நற்புகழோடு திகழும். பதினாறாம் நாள் கூடிப் பிறக்கின்ற குழந்தை, பெரிய ஞானியாகவும் யோகியாகவும் தெய்வ ஆற்றல்கள் நிரம்பிய சித்தனாகவும் கூட உருவாவதற்குரிய வாய்ப்புகள் உடைய நன்மகவாகும் என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இனி, குழந்தை பிறக்கின்ற நாழிகையை வைத்தும் சில கணக்குகளைச் சித்தர்கள் கூறியுள்ளார்கள். இந்தக் கணக்கு சோதிடவியலின் நுட்பமான கணக்குகளோடு பொருந்தியதாக அமைந்திருக்கின்றது. இந்தக் கணக்கின்படி பகல் இரண்டாம் சாமத்திற்கும், இரவின் இரண்டாம் சாமத்திற்கும், நான்காம் சாமத்திற்கும், மிகச் சிறப்பான பல இயல்புகள் கூறப்பட்டுள்ளன. இந்தச் சாமங்களோடு அந்தந்த மாதத்தில் சூரியன் நிற்கின்ற நிலையையும், சந்திரன் நிற்கின்ற நிலையையும், பிற கோள்களின் நிலையையும் விரிவாக ஆராய்ந்து குழந்தையின் பிறப்பு, வளர்ப்பு, இயல்பு, ஆயுள், வாழ்வில் அடைகின்ற சாதனைகள் ஆகியவற்றை விரிவாகப் பேசுகிறது சித்தர் இலக்கியம்.

இன்றைய விஞ்ஞானத்திலே காஸ்மோ பயாலஜி என்று கூறப்படுகின்ற அறிவியற்றுறையின் நுட்பங்களை ஆராய்கின்ற மேனாட்டு

விஞ்ஞானிகள் புதிது புதிதாகக் கண்டுபிடித்து வருகின்ற பல உண்மைகளோடு, இந்தக் கணக்கு வியக்கத்தக்க முறையிலே பொருந்தி வருகின்றது என்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும். இந்த நவீன ஆராய்ச்சி இன்னும் முன்னேறும்பொழுது, ஐம்பூத ஆற்றல்களும் கோள்களின் இயக்கங்களும் உயிர்களின் பிறப்பு இறப்புகளை எப்படி வகைப்படுத்துகின்றன, வாழ்வை எவ்வாறு இயக்குகின்றன, வாழ்வின் போக்கை எப்படியெல்லாம் பாதிக்கின்றன என்ற அறிவியலின் உண்மைகள் மேலும் தெளிவடைய இடமிருக்கிறது. இவை அனைத்திற்கும் மூலாதாரமாக அமைவது ஒரு குழந்தையின் குண்டலினி என்கிற ஆன்ம மையத்தின் தொழிற்பாடேயாகும். ஐம்பூத ஆற்றல்களும், தாய் தந்தையர் அந்தக் குழந்தைக்கு அதன் பிறவியிலே தருகின்ற இயல்புகளும், அகப்புற ஆற்றல்களும், "ஜீன்ஸ்" என்று இன்றைய விஞ்ஞானம் அழைக்கின்ற அடிப்படை உயிர் மையமும், எல்லாம் ஒன்றுகூடி மண்டலங்கொண்டு செயற்படுகின்ற நிலையே இந்தக் குண்டலினியின் ஆற்றல் மையமாகும். இந்த ஆற்றல் மையத்தை எவ்வாறு காண்பது, அதனை எவ்வாறு வளர்ப்பது என்கிற இரகசியங்களைக் கூறுகிற சித்தர் இலக்கியம், பிறப்பிலே கொண்டுவந்த உயிரின் திட்டங்களை எப்படியெல்லாம் மாற்றலாம், எப்படியெல்லாம் ஆற்றுப்படுத்தலாம் என்பதையும் எடுத்து இயம்புகிறது.

இதனைத்தான் மடைமாறல் என்று திருமூலரும், மாற்றிப் பிறக்கும் வகை என்று பிற சித்தர்களும் கூறக் காணுகிறோம்.

குண்டலி யோகம் என்று சித்தர்கள் கூறுகின்ற பயிற்சி முறையில் அடிப்படையாக அமைந்துள்ள கருத்து ஒன்று உண்டு. அதுவே ஐந்து புலன்களையும் இயக்குகின்ற முறை பற்றியது.

உலக இச்சைகளிலே திரிகின்ற ஐம்புலன்களையும் இறைவனை நோக்கித் திருப்பவேண்டிய அவசியத்தையும், அதன் நற்பண்புகளையும் பற்றிப் பகவத்கீதை விரிவாக விளக்குகிறது. இந்த உண்மையைச் சித்தர்கள் தங்களுடைய யோகமுறையிலே வற்புறுத்திக் கூறுகிறார்கள். வெளியே செல்லுகின்ற ஐம்புல ஆற்றல்களையும் உள்முகமாகத் திருப்பவேண்டும் என்கிறார்கள் ஞானிகள். குண்டலியின் பயிற்சிக்கு முதலாவது தேவை இதுதான் :

வெளிமுகமாகச் செல்கின்ற ஐந்து புலங்களையும் உள்முகமாகத் திருப்பவேண்டும். இதுவே குண்டலி யோகத்தின் அடிப்படையான முதலாவது பாடம் ஆகும்.

இவ்வாறு சித்தர்கள் கூறுவதற்குக் காரணம் தர்மார்த்த காம மோட்சம் என்றும், அறம், பொருள், இன்பம், வீடு என்றும் குறிப்பிடுகின்ற நான்கும், இந்த உடம்பின் செயல்களினாலேதான் உண்டாகின்றன என்ற அடிப்படை உண்மையே ஆகும். இதைச் சித்தர்கள் கண்டு விளக்குகிறார்கள். எனவே இந்த உடல் அமைப்பின் ஐம்பூதக் கூறுகளை அவர்கள் மிகவும் விளக்கமாக ஆராய்ந்து பகுத்துச் சொல்கிறார்கள்.

உடம்பானது சித்தர்களின் முறைப்படி பதினைந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதினைந்து கூறுகளிலே ஐந்து பூதங்களின் ஆற்றலும் ஒரு கணக்கு முறைப்படி இணைந்து இந்த உடம்பாக உருவாகியிருக்கிறது என்பது, சித்தர் இலக்கியம் கூறுகிற உடல் இரகசியம். இதன்படி இந்த உடம்புக்குள்ளே மண்ணாகிய பிருதிவி ஐந்து பாகம் கொண்டது; தண்ணீர் நான்கு பாகம்; நெருப்பு மூன்று பாகம்; காற்று இரண்டு பாகம்; ஆகாயம் ஒன்று; ஆக மொத்தம் பதினைந்து கூறுகள் ஆகின்றன.

மண்ணின் ஐந்து பாகங்கள்தாம் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உறுப்புக்கள்.

தண்ணீரின் நான்கு பாகங்களாவன : கண்ணிலிருந்து சுரக்கின்ற கண்ணீர், உள்முகமாகச் சுரக்கின்ற நிலவமுது, சூரிய அமுது, ஆகிய மூன்றோடு, ஒலி நீர் என்று சித்தர்களால் அழைக்கப்படுகின்ற கிலாண்டுலர் செக்ரிஷன் (Glandular Secretion) ஆகிய நாதஜலம் என்னும் உயிர்ப்பு ஆற்றல் என்பன.

நெருப்பின் மூன்று கூறுகள் எவையென்றால், இடக்கண்ணிலுள்ள சந்திர ஒளி வலக்கண்ணிலுள்ள சூரிய ஒளி, ஜாடராக்கினி என்று வடமொழியிலே அழைக்கப்படுகின்ற மூலக்கனல் ஆகிய மூன்றுமாம்.

காற்றின் இரண்டு கூறுகள் எவையென்றால் பிராணவாயுவும் அபான வாயுவும் ஆகிய இரண்டாம்.

ஆகாயக்கூறு என்று சொல்லப்படுவது தலையிலே இருக்கின்ற பெருவெளி. இதனைத் துவாதசாந்தவெளி என்றும், இரவுபகல் அற்ற இடம் என்றும், சிற்றம்பலம் என்றும், சிதம்பரம் என்றும், ஞானசபை என்றும், நாதசங்கீதப் பொன்மணி மண்டபம் என்றும், நூற்றுக்கணக்கான அழகழகான பெயர்களிலே சித்தர்கள் அழைக்கிறார்கள்.

இனி, ஐம்பூதக் கூறுகளுக்கும் ஐந்துவிதமான தெய்வ சக்திகளை நாயகப்படுத்திப் பேசுகிறார்கள் சித்தர்கள். இந்த ஐந்து ஆற்றல்களுக்கும் ஐந்து பெயர்கள். அவை திருமால், அயன், உருத்திரன், மகேசன், சதாசிவன். இந்த ஐந்து மூர்த்திகளும் ஐந்து பூதங்களுக்கும் உரிய தெய்வ ஆற்றல்களாம். மண்ணாற்றலின் தெய்வ சக்தி அயன் ஆகும்; தண்ணீரின் கடவுள் திருமால்; நெருப்புக்கு உருத்திரன்; வாயுவுக்கு மகேசன்; ஆகாயத்திற்குச் சதாசிவன் அல்லது சபேசன் என்று அழைக்கப்பெறுகிற ஆடல்வல்லான். இதைப் பொது நோக்கிலே ஏற்கனவே பார்த்தோம்.

இந்த ஐந்து மூர்த்திகளின் ஆற்றல்களுக்கும் ஐந்து வெவ்வேறு பெயர்கள் தருகிறார்கள். அது எப்படியென்றால் சூரியன் என்பது அந்த மூர்த்தியின் பெயர். வெய்யில் என்பது அந்த மூர்த்தியிலிருந்து வருகின்ற ஆற்றல், சந்திரனும் நிலவும் போலே. இவ்வாறே அயனுடைய ஆற்றல் அறிவின் ஆற்றலாகும். அதுவே கற்பனைகளுக்கும் கலைகளுக்கும் காரணமாக அமைகிறது. அதனைக் கலைமகள் என்றும், சரசுவதி என்றும் அழைக்கிறோம். இவ்வாறே

தண்ணீரின் ஆற்றலாகிய திருமாலின் சக்திக்கு இலட்சுமி என்று பெயர். உயிருக்குத் துணை செய்வதை அக்கினி என்றும், பிரும்மத்தைக் காட்டுவது சூரியன் என்றும், வேகத்தைப் பேணுவதைச் சந்திரன் என்றும், ஞானத்தை அடையச் செய்வதைப் பார்வதி என்றும் அழைத்து, இந்த ஆற்றல்கள் அனைத்தும் ஒளிமயமாக இந்த உடம்புக்குள்ளே இருப்பதாகச் சித்தர்கள் பேசுகிறார்கள்.

இனி, இந்த உடம்புக்குள்ளே உள்ள ஐம்பூத இணைப்பில் மண்ணின் கூறாகிய பகுதியில் ஏழுவகையான தாதுக்கள் அடங்கியுள்ளன என்று சித்தர் இலக்கியம் விளக்குகிறது. இந்த ஏழு தாதுக்களுக்கும் ஏழு பெயர்கள். அவை 1) தொக்கு 2) இரத்தம் 3) ஊன் 4) மூளை 5) நிணம் 6) என்பு 7) சுக்கிலம். இந்த ஏழு தாதுக்களுக்கும் சரீரம், உதிரம், மாமிசம், மூளை, கொழுப்பு, அஸ்தி, சுக்கிலம் என்று ஏழு மறுபெயர்களும் உண்டு.

ஆகவே இந்த உடம்புக்குள்ளே ஏழு தாதுக்களைக் கொண்ட மண்ணின் கூறாகிய பிருதிவியோடு, மற்ற நான்கு பூதங்களும், சூரிய சந்திர ஆற்றல்களும், உயிராற்றலும், ஆக எட்டுவிதமான இயக்கங்கள் தொழில்செய்து தொண்ணூற்றாறு விதமான செயல்களை ஒவ்வொரு வினாடியும் நடத்துகின்றன என்று வகைப்படுத்திச் சித்தர் இலக்கியம் முடிவு செய்துள்ளது.

இந்த எட்டையும் இவற்றின் செயலாகிற தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அழுத்திப் பிடித்து இயக்கவல்ல பேராற்றலுக்கே குண்டலினி என்று பெயர். இந்த யோகமுறையின் பயிற்சி பற்றிய விரிவுகளைச் சிவயோகியாரின் விளக்கங்களோடு இந் நூலின் 'மூலக்கனல்' என்ற பகுதி ஆழ்ந்து ஆராய்கிறது. 'எழுத்தும் நிலையும்' என்ற பகுதியிலும் சில இரகசியங்கள் இடம்பெறுகின்றன.

*

# 16. நுகர்ச்சியின் வேறுபட்ட நிலைகள் அல்லது அவத்தைகள்

சித்தர் இலக்கியத்தின் முக்கியமான பகுதிகளில் அவத்தைகள் பற்றியது ஒரு பிரிவாகும்.

அவஸ்தை அல்லது அவத்தை என்பது, உடலை மேவிய உயிரானது அவ்வுடலோடு கூடி நுகர்ச்சிகளை எய்தும்போது உண்டாகிற நிலை வேறுபாடுகள்.

விழிப்பின்போது பிறப்பெடுத்த உயிருக்குரிய எல்லாக் கருவிகளையும் உயிரானது பயன்படுத்துகிறது. ஆனால் உறக்கம், கிறக்கம் முதலிய நிலைகளின்போது கருவிகளின் இயக்கம் சட்ட திட்டப்படி குறைகிறது. எனவே நிலைகளில் வேறுபாடு உண்டாகிறது.

இந்த வேறுபாடுகளை ஐந்தாக வகுத்துச் சித்தர்கள் அவற்றின் இயல்புகளை விரிவாக எழுதி வைத்துள்ளார்கள். அவை, சாக்கிரம் என்னும் நனவுநிலை, சொப்பனம் என்னும் கனவு, சுழுமுனை அல்லது சுழுத்தி. துரியம் என்னும் பேருறக்கம், துரியாதீதம் என்னும் உயிர்ப் படக்கம்.

சித்தர் நூல்களைப் போலவே சிவஞான போதத்திலும் இந்த நிலைகளைக் குறித்து 'அஞ்சவத்தைத்தே' என்று கூறப்பெற்றுள்ளது.

இந்த அவத்தை கீழாலவத்தை, மேலாலவத்தை, சுத்தாவத்தை என்று மூவகைப்படும்.

கீழாலவத்தை என்பதன் இலக்கணம் வருமாறு :

ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து தன்மாத்திரைகள், நான்கு அந்தக்கரணங்கள் ஆகிய பத்தொன்பதுடன், உள்ளம் என்ற ஒன்றும், பத்து வாயுக்களும், ஐந்து வசனாதிகளும் கூடி முப்பத்தைந்து கருவிகளின் இயக்கத்தோடு, உயிரானது புருவநடுவில் நிற்கும் நிலையானது விழிப்பு அல்லது சாக்கிரம் என்ற நனவாகும்.

ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் புருவ நடுவில் நின்றுவிட, மற்ற இருபத்தைந்து கருவிகளோடு. உயிரானது கழுத்தில் நிற்கும் நிலையே சொப்பனம் அல்லது கனவாகும்.

ஐந்து தன்மாத்திரைகளும், சித்தத்தைத் தவிர மற்ற மூன்று அந்தக்கரணங்களும், பத்து வாயுக்களில் பிராணவாயுவைத் தவிர மற்ற ஒன்பதும், வசனாதிகள் ஐந்தும், ஆக இருபத்திரண்டு கருவிகளும்

கழுத்தில் தங்கிவிடவே, உயிரானது சித்தம், பிராணவாயு, உள்ளம் ஆகிய மூன்று கருவிகளுடன் நெஞ்சிலே நிற்கும் நிலையே சுழுத்தியாகும்.

துரியம் என்ற அடுத்த நிலை எதுவென்றால், சித்தமானது இதயத் தானமாகிய நெஞ்சிலே தங்கிவிட, பிராணவாயுவும் உள்ளமும் ஆகிய இரண்டே இரண்டு கருவிகளுடன் உயிரானது உந்தியிலே நிற்கிற நிலையாகும்.

பிராண வாயுவும் உந்தியிலே நிற்க, எஞ்சிய உள்ளம் ஒன்றுமட்டும் கூடி உயிரானது மூலாதாரத்திலே அடங்குகிற நிலை துரியாதீதமாகும்.

மேலாலவத்தை என்பது விந்துசக்தி ஆன்மாவின் கருமத்துக்கீடாக வாக்குகளைத் தோற்றுவித்தலாகும். அந்த வாக்குகளுக்குப் பஞ்சமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவற்றின் இலக்கணத்தை மேலும் ஆராய்ந்து கண்டுபிடித்து விரிவாகவே எழுதியுள்ளார்கள்.

சுத்தாவத்தை என்பது ஐந்தாம். நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என்று பெயர்பெறும்.

நின்மல சாக்கிரம் என்ற தூய நனவு எதுவென்றால், நிலையாமையை முழுமையாய் உணர்ந்து, ஆசானை அடைந்து, பசு கரணங்கள் பதிகரணங்களாக மாற்றம் பெறுகிற நிலையாகும்.

நின்மல சொப்பனம் என்கிற தூய கனா, அருந்துதல், பொருந்துதலில் மனத்தோடு பொருந்தாமை.

நின்மல சுழுத்தியானது பரிமாணநிலை.

நின்மல துரியம் என்பது இன்ப உணர்வுடன் முழுமை அடைதல்.

நிர்மல துரியாதீதம் என்ற நிலை மற்ற நான்கு நிலைகளையும் கடந்து முழுமை நிறைவுடன் இறைமையாதல்.

அவத்தை என்று அழைக்கப்பெறுகிற இந்த நிலைகளை நம் சித்தர்கள் ஆராய்ந்துள்ள முறைகளைப் பார்த்தால், நமது நாட்டு ஞானிகள் உடம்பையும், உட்கருவிகளையும் எத்தனை அறிவியல் நோக்கோடு உட்புகுந்து கண்டு, எத்தனை ஆற்றலோடு அலசிப் பார்த்திருக்கிறார்கள் என்பதை உணர்வோம். இந்த ஆர்ராய்ச்சியின் வகை தொகைகளை ஆன்ம ஆற்றலைப் பற்றிய பகுதியில் மேலும் உட்புகுந்து பார்ப்போம்.

இன்றைய நவீன அறிவியலானது நூற்றுக்கணக்கான புதுமைக் கருவிகள் வைத்து, ஆயிரம் ஆயிரம் முறைகளிலே மருத்துவம், உளவியல், உயிர்த்துடிப்பு ஆகிய துறைகளை ஆராய்கிறது. நாள்தோறும் புதிய புதிய கருத்துக்களை வெளியிடுகிறது இன்றைய விஞ்ஞானம். இத்தகைய சூழ்நிலையில் நின்று சித்தர்கள் கண்டுபிடித்துச் சொல்லியுள்ள உடலியல், உளவியல், உயிரியல் ஆகிய துறைகளின் பேருண்மைகளை நோக்கவேண்டும். எல்லாக் காலத்துக்கும்

மெய்யாக நிற்கக்கூடிய, எந்தச் சோதனைகளாலும் மெய்ப்பித்துக் காட்டக் கூடிய பேருண்மைகளை, நம்நாட்டு ஞானிகள் எப்படித்தான் இவ்வளவு ஆழ்ந்து சென்று, இவ்வளவு தெளிவாகக் கண்டுபிடித்து விட்டார்கள் என்பது பெருவியப்புக்குரிய சாதனையாகவே தோன்று கிறது.

சித்தர்கள் அறிவைமட்டும் துணையாகக் கொண்டவர்கள் அல்லர். உணர்வுகளையே தங்கள் ஆய்வுக்குரிய கருவிகளாகக் கொண்டு, உணர்வு கடந்த பேருணர்வு நிலையிலே வருகிற பரம்பொருளோடு இயைபுகொண்டு வாழ்க்கை நடத்திய பேரறிவாளராகவும், பேருணர் வாளராகவும் அவர்கள் திகழ்ந்தமையால், இத்தகைய சாதனைகள் அவர்களால் புரிய முடிந்தது. அவர்கள் வழங்கியுள்ள சித்தர் இலக்கியத்தின் ஒவ்வொரு பகுதியும் இதற்குச் சான்று பகர்கிறது!

★

## 17. ஆறு ஆதாரங்களின் பயிற்சிமுறைகள்

இந்த உடம்புக்குள் ஆறு ஆற்றல் மையங்கள் இருப்பதை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று பெயர் சூட்டி அழைப்பதோடு, இந்த நிலைகளில் உள்ள சத்தங்களையும், ஒலியும் எழுத்துமாகிய அதிர்வுநிலைகளையும், அங்கே குடிகொண்டுள்ள இறைநிலைகளையும், அவற்றிற்குரிய பயிற்சி முறைகளையும் நம் சித்தர்கள் விரிவாக ஆராய்ச்சி செய்து சொல்லியிருக்கிறார்கள்.

மூலாதாரம் நான்கு இதழ்கள் கொண்ட தாமரையின் வடிவத்தில் இருக்கிறது. சுவாதிட்டானம் ஆறு இதழ்களோடு கூடிய தாமரை. மணிபூரகத் தாமரையின் இதழ்கள் பத்து. அனாகதம் என்னும் அடுத்த நிலை பன்னிரண்டு இதழ்கள் கொண்ட தாமரையின் வடிவத்தில் அமைந்திருக்கிறது. விசுத்தியின் தாமரை வடிவத்துக்குப் பதினாறு இதழ்களாம். ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞை இரண்டு இதழ்த் தாமரையாகும்.

இந்த முடிவான நிலையாகிய ஆக்ஞை என்னும் மையத்திலேதான், பரம்பொருளின் திருவடியைக் காணலாம் என்று சித்தர் இலக்கியம் கூறுகிறது.

மூலாதாரச் சக்கரமாகிய நான்கு இதழ்த் தாமரை செந்நிறமானது. ஆறிதழ்த் தாமரையான சுவாதிட்டானம் செந்தூர நிறத்தில் காண்கிறது. மணிபூரகமாகிய பத்திதழ்த் தாமரையின் பொகுட்டில் ஒரு முக்கோணம் உண்டு. செந்நிறமான உருத்திரர் வாகினி என்னும் ஆற்றலோடு இங்கே திகழ்கிறார். இதுவே நாபிக் கமலமாகும்.

பன்னிரண்டு இதழ்த் தாமரையாகிய அனாகதத்தில் புகைநிறங் கொண்டதும், அறுகோண வடிவுள்ளதுமான காற்றுமண்டலம் அமைந்திருக்கிறது.

கழுத்தின் அடித்தளத் தாமரையாகிய விசுத்தியில் செந்நிறமான கோணங்கள் உள்ளன என்றும், வட்ட வடிவமானதும், வெள்ளை நிறம் கொண்டதுமான ஆகாய மண்டலத்தின் தானம் இதுவே என்றும் சித்தர் நூல்கள் கூறுகின்றன.

ஆக்ஞை என்பது புருவநடுவான நிலையம். இதன் நடுவில் ஹாசினிசத்தி திகழ்கிறது. அதன்மேல் பல நுட்பமான ஆற்றல்கள்

இயங்குகின்றன. அந்தரான்மா, மனம், சிவம் ஆகிய பேராற்றல்கள் அதற்குமேல் விளங்குகின்றன என்பது சித்தர் வாக்கு.

மூலாதாரம் முதல் ஆக்ஞை வரை ஒளியிலே அகக்கண் கொண்டு, உட்பார்வையைச் செலுத்தி, இறையின்பத்தைத் துய்ப்பதே சித்தர்களின் ஞான தியானம். இவ்வாறு புரிகிற ஞானப் பயிற்சியின் பயனாக, யோகியும் பரம்பொருளும் ஒன்றிக் கலந்து, எங்கும் நிறைந்த தத்துவமாகவே ஆகிவிடுவதாக ஞானிகள் அனுபவித்துச் சொல்லியுள்ளார்கள். இந்த ஆறுநிலைகளிலுள்ள தாமரை இதழ் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள எழுத்தொலிகளையும், இறையாற்றல்களையும், அவற்றை ஒளிமுறையிலும் ஒலிமுறையிலும் யோக நெறியினால் ஆற்றுப்படுத்தி முன்னேற வேண்டிய பயிற்சியின் விரிவுகளையும், ஆழத்தோடும் தெளிவோடும் விரிவாகவே சித்தர் இலக்கியம் சொல்லோவியமாகச் சித்திரிக்கிறது.

இந்த அறுகோணச் சக்கர நுட்பந்தான் அந்தரியாகம் என்று சமய வாதிகளால் கூறப்படுவது. மூலாக்கினி பிரகாசிக்கும் மையம் மூலாதாரமும் சுவாதிட்டானமும் ஆம். இவ்வியக்கம் அக்கினி கண்டம், பிர்மக்கிரந்தி என்று அழைக்கப்பெறும். மணிபூரகம் அனாகதம் ஆகிய நிலைகளே ஒளிர்கிற மையங்கள். சூரிய கண்டம் விஷ்ணுக் கிரந்தியின் பெயர்.

விசுத்தி ஆக்ஞை, சோமகண்டம், சந்திரகலை, உருத்திரக் கிரந்தி.

இவைகளுக்குமேல் மாயா தத்துவம், சுத்தவித்தியா தத்துவம், மகேசுவர தத்துவம், சதாசிவ தத்துவம் என்ற நான்கையும் சேர்க்கப் பத்து ஆதாரங்களாகிவிடும். இவைகளைத் துரிய கண்டம் என்றழைப்பர். இதன்மேல் உள்ள ஏழு கலைகளையும் சேர்க்க, முழுமையான கலைகளான பதினாறு கலைகளோடுகூடிய சோம மண்டலம் அமையும். கீழுள்ள ஆறு ஆதாரத்தையும் அதன்மேலுள்ள நாலு ஆதாரத்தையும் சேர்ப்பதற்கு மஹாவேதா என்று பெயர்.

குண்டலினி சத்தியைக் குலாங்கனையென்றும், சுழுமுனை மார்க்கத்தைக் குலபதம் அல்லது அரசபாட்டையாகிய ராஜவீதி என்றும் கூறுவர். லலிதா சகஸ்ரநாமத்தில் தொண்ணூறு முதல் நூற்றுப் பதினொன்று வரையில் இந்த நுட்பம் பொதிந்துள்ளது.

குண்டலி என்னும் சக்தியானவள் மூலாதாரத்திலிருந்து எழும் போது குழந்தைபோல், அப்போது பிறந்த குழந்தைபோல், 'குவா குவா' போன்ற ஒலியை எழுப்புவதால் குமாரி என்று பெயர். அனாகதத்தை விட்டுக் கிளம்பும்போது சூரியனின் உஷ்ணத்தால் பக்குவம் ஆகித் தருணி என்று பெயர்பெறுகிறாள். உச்சி முகட்டிலே தன் பதியாகிய சிவபரம்பொருளை அடைவதால் அங்கே பதிவிரதை என அழைக்கப்பெறுகிறாள்.

மூலமணிபூரகக்கோடிலிங்கம் என்று மூன்றையும் சேர்த்துச் சொல்வது சித்தர் மரபாகும். இவை மூன்றும் சேர்ந்துதான் பிரணவத்தின் கீழ்த் துருவம் அமைகிறது.

இவ்வகையாக ஒன்றானபோது பழைய நிலையிலிருந்த பிரமன், விஷ்ணு, உருத்திரன், மாகேசன், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவம் என்ற ஒன்பது நிலைகளும் மாறி முழுமைபெற்றுச் சீவன் சிவனாகின்றான்.

மலர்ந்த வயன்மால் உருத்திரன் மாகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சக்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே

என்னும் திருமந்திரம் இந்த ஆதாரயோக சித்தியை நன்கு விளக்கிச் சொல்கிறது.

★

# 18. சித்தர்கள் கூறும் எட்டு யோகங்கள்

சித்தர் இலக்கியத்திலே மையமாக உள்ள பகுதி யோகங்களைப் பற்றிய ஞான விளக்கமே யாகும்.

'அட்டாங்க யோகம்' என்று அழைக்கப்பெறுகிற யோகமுறைகள், பலநூறு ஆண்டுகளாக நமது நாட்டிலே ஞானிகளால் பயிலப்பட்டு வருகிற மாபெரும் கல்விமுறை ஆகும். சித்திகள் பெறுவதும், அவற்றைத் தாண்டி முன்னேறி இறைவனோடு கலந்து இன்புறுவதும், இந்த யோகப் பயிற்சிக்கு அடிப்படைகளாக அமைகின்றன.

இந்த மனித உடம்பிலே ஆறு முக்கியமான உறுப்புக் கூறுகளில் ஆறுவிதமான ஆற்றல்கள் தோன்றி இயங்குகின்றன என்று, பாரத நாட்டின் முனிவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்துள் ளார்கள் என்பதை ஏற்கனவே பார்த்துள்ளோம். இந்தக் காலத்து நவீன விஞ்ஞானக் கருவிகள் அனைத்தும் சோதித்துப் பார்த்து ஒப்புக் கொண்ட மையங்களே, இந்த ஆறு ஆதாரங்கள் அல்லது நிலைகள் என்பதையும் நாம் அறிவோம்.

மேனாட்டு அறிவியல் வல்லுநர்கள் மனித உடம்பின் இயல்புகளை ஆராய்ந்த பின்னர், இந்த உடல் மையங்களை மேலும் ஆராய்ந்து வருகிறார்கள். இன்னும் ரஷ்ய நாட்டிலே லெனின்கிராட் பல்கலைக் கழகத்திலும், இதைத் தவிர வேறு பத்தொன்பது ஆய்வுக்கூடங்களிலும், ஆண்டுதோறும் பல்லாயிரம் ரூபிள்கள் செலவுசெய்து 'Psychotronics' என்னும் அறிவியலால் இந்த நிலைகளைப் பற்றிய ஆராய்ச்சியை நடத்தி முன்னேறி வருகிறார்கள். இதே போன்று யூகஸ்லாவியா நாட்டிலும் வேறு சில கம்யூனிச நாடுகளிலும் இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துவருகிறது. இதன் பயனாக நம்முடைய பழைய சித்தர் இலக்கி யத்தில் கூறப்பட்டுள்ள இந்த ஆதார நிலைகளின் ஆற்றலும், நுட்பங் களும் ஒவ்வொன்றாகச் சான்றுகளோடு உறுதிப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு அமெரிக்கப் பெண்மணிகள் ரஷ்ய நாட்டிலும், அதன் தொடர்பான வேறு சில நாடுகளிலும் தங்கி யிருந்து, இந்த நவீன ஆராய்ச்சிகளை எல்லாம் நேரிலே பார்த்துக் குறிப்புக்கள் எடுத்துக்கொண்டு, அந்தச் சான்றுகளுடன் இரண்டு நூல்கள் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். முதலாவது நூலின் பெயர் 'இரும்புத்திரைக்குப் பின் மனஆற்றலின் கண்டுபிடிப்புகள்' (The Psychic Discoveries behind the Iron Curtain). இரண்டாவது நூலின் பெயர் 'கையேடு' (The Hand Book) என்பதாகும். இரண்டாவது நூல் முந்திய நூலின் தொடர்ச்சியே ஆகும்.

இந்த இரண்டு நூல்களிலும் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திகளும், கொடுத்துள்ள விஞ்ஞானச் சான்றுகளும் நம்முடைய சித்தர் இலக்கியத்தில் கண்டுள்ள ஆன்மப் பேருண்மைகளுக்கு இக்காலத்து அறிவியல் கூறும் சாட்சியங்களாகவே அமைந்து உள்ளன.

சித்தர் இலக்கியத்தின் பேருண்மைகளுக்கு அடிப்படையாக அமைந்த ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகியவற்றுக்கு மேலே, துவாதசாந்தப் பெருவெளியாகிய உச்சிக் கொடுமுடி உள்ளது.

மூலாதாரம் என்பது ஆரம்பநிலை. ஆறு ஆதாரங்களையும் பின்னிக்கொண்டு மேலே செல்லவேண்டிய இலக்குத்தான் துவாதசாந்தப் பெருவெளி என்பது. அது சிரசுக்கு மேலே பன்னிரண்டு விரற்கடை உயரத்தில் அமைந்துள்ள ஒளிமண்டலம்!

ஒரு யோகியானவன் மூலாதாரத்தில் உள்ள ஞானக்கனலை மேலே எழுமாறு செய்து, சிரசுக்கு ஏற்றிச் சில பயிற்சிகள் செய்கிறான். இந்தப் பயிற்சிமுறை இந்நூலின் 'மூலக்கனல்' என்ற பகுதியில் ஆழ்ந்து ஆராயப் பெறுகிறது. எனவே இங்கே இந்த ஆறு நிலைகளிலும் ஒரு மாணவன் இயற்றுகிற அட்டாங்கயோகம் என்னும் பயிற்சியை நம் சித்தர்கள் எப்படி வகைப்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பார்ப்போம்.

அட்டாங்கயோகம் பயிலத் தொடங்குகிற ஒரு மாணவன், சாதாரணமாக ஒரு வழிபாட்டின்போது நாம் செய்கிற சுத்திகளைச் செய்துகொண்டு, உறுதியான மனத்தோடு எட்டு விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறான். இந்த எட்டுக்கும் உரிய பெயர்கள் வருமாறு: 1. இயமம், 2. நியமம், 3. ஆதனம் அல்லது ஆசனம், 4. பிராணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி.

இந்த எட்டு வழிகளையும் மேற்கொள்ளும் மாணவனுக்கு ஞான வாசல் திறக்கும் என்பது சித்தர் வாக்கு. அவன் பிறப்பிறப்பு என்னும் சுழலில் இருந்து விடுபட்டு, மரணம் இலாப் பெருவாழ்வை எய்துகிறான் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

## இயமம்

இயமம் என்பது சித்தமானது பரம்பொருள் நினைவிலே கூடுவதாகும். அதாவது தீய திசைகளிலே செல்லும் மனத்தைக் கட்டுப்படுத்திப் பரம்பொருளிலே ஒன்றுகூடச் செய்தல்.

உடம்பினால் ஐம்புலன்களும் அடைகிற இன்பம் நிலையற்றது என்னும் தெளிவில் இருந்து, வைராக்கியம் என்னும் மனஉறுதி பிறக்கிறது. இதுவே இயமத்திற்கு அடிப்படையாகும்.

இந்த இயமத்தை மேற்கொள்பவன் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியவன் ஆகிறான். கொல்லாமை, பொய்சொல்லாமை, திருடாமை, நற்குணங்கள் உடைமை, நடுவுநிலைமை, அடக்கம் ஆகிய பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால்தான் இயமம் என்ற இந்த யோகத்தில் வெற்றிபெற முடியும்.

சில சித்த நூல்களில் இயமத்தின் விதிமுறைகள் பத்து எனக் கூறப் பட்டுள்ளன. அவை: 1, கொல்லாமை, 2. வாய்மை, 3. கள்ளாமை, 4. காமமின்மை, 5. பொறையுடைமை, 6. உறுதியுடைமை, 7. இரக்கம், 8. நேர்மை, 9. அளவோடு உண்ணுதல், 10. அகத்தும் புறத்தும் தூய்மை.

இந்தப் பத்தில் கொல்லாமை ஆயுதங்களினால் கொல்லுதல் என்பதை மட்டும் குறிக்கவில்லை. மனத்தினாலும், வாக்கினாலும் எந்த உயிருக்கும் வருத்தம் செய்யாமையும் இதில் அடங்கும். மேலும் தான் 'செய்வது, பிறனைச் செய்விப்பது, பிறன் செய்வதற்குத் தான் உடந்தையாய் இருப்பது ஆகிய மூன்றுமே இயமத்தின் எதிரிகள்.

இனி, வாய்மை என்பது கண்ணால் கண்டவற்றையும், செவியால் கேட்டவற்றையும், மற்றப் புலன்களால் நுகர்ந்தவற்றையும், மறைக் காமலும், மாற்றாமலும் அப்படியே முழுமையாக வெளியிடுதல்.

கள்ளாமை என்பது பிறனுடைய எந்த உடைமையையும், எந்தச் சூழ்நிலையிலும், எதற்காகவும் மனத்தினாலும்கூட எண்ணாது இருப்பது. அவாவை அடக்கி, பிறன்பொருளை நயவாமல் இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும்.

காமமின்மை என்பது அன்னியப்பெண் ஒருத்தியை விருப்பத்தோடு பார்த்தல், விருப்பத்தோடு எண்ணுதல் முதலியன செய்யாதிருத்தல் ஆகும். இதை ஞானிகள் எட்டு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது காமம் என்பது எண் வகையாம்:

1. விருப்பத்தோடு பார்த்தல்
2. விருப்பத்தோடு பேசுதல்
3. ஆசையோடு விளையாடுதல்
4. அடிக்கடி சந்தித்தல்
5. தனித்துப் பேசுதல்
6. கொள்ள எண்ணுதல்
7. வாக்குறுதியோ, உடன்படிக்கையோ செய்தல்
8. தன்வசமிழந்து செய்கை செய்தல்

இனி, உறுதியுடைமை என்பது, செய்கின்ற தவத்தில் மனம் தளரா மல், அங்கிங்கென்று ஆடாமல் அசையாமல், ஒரே நிலையில் நிற்றல்.

இரக்கம் என்பது கொல்லாமையின் பாற்பட்டதோ எனின் அன்று; எவ்வாறெனின் கொல்லாமை என்பது எதிர்மறைப் பண்பு. இரக்கம் என்பது தன்மைப்பண்பு. அது பிற உயிரையும் தன்னுயிர்போல் எண்ணுகிற கருணையின்பாற் பட்டது.

இனி, நேர்மை அல்லது பொதுமை என்பது பகையுணர்வோ, உறவுணர்வோ இன்றி எல்லாருடனும் சமமாக நிற்கும் நிலை.

அளவான உணவு பற்றிச் சித்தர்கள் ஒரு கணக்குச் சொல்லியிருக் கிறார்கள். உணவு அல்லது சாப்பாடு அரை வயிறு; தண்ணீர் கால் வயிறு; காற்று கால் வயிறு என்பதே அந்தக் கணக்கு.

தூய்மை என்பது அகத்தூய்மை, புறத்தூய்மை என்னும் இரண்டு விதமான பரிசுத்தங்களையும் குறிக்கும்.

## நியமம்

நியமம் என்பது விதிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்தல் ஆகும்.

இந்த விதிமுறைகள் பலவாம். தவம், செபம், தானம், கேள்வி, வேள்வி, வழிபாடு என இவை விரியும்.

## ஆதனம்

வடமொழியில் உள்ள சில யோக நூல்களிலும் ஞானப் பயிற்சிக் குரிய தமிழ்ச் சுவடிகளிலும் ஒரு யோகி எதற்காகத் தனது பயிற்சியின் போது ஆசனங்கள் இட்டுக்கொள்கிறான் என்ற கேள்விக்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது.

யோகம் செய்யப் புகுந்த ஒரு மாணவன், தன்னுடைய உடம்பிலே தனது தவத்திற்கு இடையூறான வாதனைகள் தோன்றாமல் முன்னெச்சரிக்கை செய்துகொள்ள வேண்டும். யோகிகளின் ஆராய்ச்சிப் படி வாதனைகள் அனைத்திற்கும் காரணம் நம்முடைய ரஜோ குணமே. எனவே, இந்த ரஜோ குணம் என்ற வெம்மைப் பண்பு அல்லது சூடு மேலோங்காதவாறு ஒடுக்க வேண்டும். இதைச் செய்வ தற்குரிய உபாயமே ஆசனம் இடுதல் என்னும் இருக்கை ஆகும். எனவே வடமொழியில் 'ஆஸனேன ரஜோ ஹந்தி' என்று சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த ஆசனங்கள் பதுமாசனம் முதலாகப் பற்பலவாக் விரிந்துள்ளன. அவற்றில் எட்டு ஆசனங்கள் சிறப்பாகக் கூறப்பெறு கின்றன.

இந்த எட்டு வருமாறு:

1. பதுமாசனம், 2. பத்திராசனம், 3. குக்குடாசனம், 4. சிம்மாசனம், 5. கோமுகாசனம், 6. சொத்திராசனம், 7. வீராசனம், 8. சுகாசனம்.

இந்த எட்டு ஆசனங்களையும் தவிர மேலும் நூற்று இருபத்தாறு ஆசனங்கள் சித்தர் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றின் செய்முறை களைப் பற்றிக் குருமுகமாக நேரில் கற்றுப் பழகவேண்டும் என்ற எச்சரிக்கை இருப்பதால், இவற்றில் முக்கியமான யோகாசனங்களின் பட்டியலை மட்டும் கீழே தருகிறேன்.

1. சுவஸ்திகாசனம்
2. கோமுகாசனம்
3. வீராசனம்
4. கூர்மாசனம்
5. குக்குடாசனம்
6. உத்தான கூர்மாசனம்
7. தனுராசனம்
8. மச்சேந்திராசனம்
9. பச்சிமதவாசனம்
10. மயூராசனம்
11. சவாசனம்
12. மச்சேந்திர சித்தாசனம்
13. சித்தாசனம்
14. வச்சிராசனம்

15. பதுமாசனம்
16. மச்சேந்திர பதுமாசனம்
17. முக்த பதுமாசனம்
18. சிம்மாசனம்
19. பத்திராசனம்
20. வல்லரியாசனம்
21. விருச்சிகாசனம்
22. குப்சிகாசனம்
23. பாரிகவோ பாதாசனம்
24. யோகாசனம்
25. கபாலாசனம்
26. டிட்டிபாசனம்
27. பூர்வதானாசனம்
28. அர்ப்பகாசனம்
29. காமதகனாசனம்
30. கேசரியாசனம்
31. சோபகிரியாசனம்
32. பரியங்காசனம்
33. பத்தாசனம்
34. சௌல்யாசனம்
35. பக்தயோனியாசனம்
36. பேகனாசனம்
37. மகாபேகனாசனம்
38. பிராணாசனம்
39. அபானாசனம்
40. சமானாசனம்
41. பைரவாசனம்
42. மண்டூகாசனம்
43. மர்க்கடாசனம்
44. ஏகபாதவாசனம்
45. பனீந்திராசனம்
46. யோக நித்திராசனம்
47. சுகாசனம்
48. தண்டாசனம்
49. சக்கிராசனம்
50. வர்த்துலாசனம்
51. அர்த்தாசனம்
52. பர்வதாசனம்
53. யோனிமுத்திராசனம்
54. கருடாசனம்
55. பவனமுக்தாசனம்
56. வாமபாதபவன முக்தாசனம்
57. தட்சிணபாத முக்தாசனம்
58. நிராசனம்
59. சுவர்க்கமனாசனம்
60. வாதாயனாயனாசனம்
61. அர்த்தபத்மாசனம்
62. ஊர்த்துவ பத்மாசனம்
63. பூர்ணபாதாசனம்
64. தட்சிணாசனம்
65. அத்துவாசனம்
66. ாமதட்சியபாதாசனம்
67. திவிபாத சிராசனம்
68. விருட்சாசனம்
69. வாமபாத சிரசாசனம்
70. தட்சிணபாத சிரசானம்
71. தாடாசனம்
72. ஊர்த்துவ தனுராசனம்
73. வாமாசித்தாசனம்
74. விவேகாசனம்
75. தர்க்காசனம்
76. நிசுவாசாசனம்
77. அர்த்தகூர்மாசனம்
78. கருடாசனம்
79. திரிகோணாசனம்
80. பிரார்த்தனாசனம்
81. பாதத்திரிகோணாசனம்
82. புஜாசனம்
83. அஸ்த பயங்கராசனம்
84. அங்குஷ்டாசனம்
85. அத்தகடாசனம்
86. அர்த்தபாதாசனம்
87. அஸ்தபுஜாசனம்
88. வாமக்கிராசனம்
89. ஜாத்வாசனம்
90. சாகாசனம்
91. திரிஸ்தம்பாசனம்
92. பாத அபான கமனாசனம்
93. அசதசதுஷ்கோணாசனம்
94. கூர்மாசனம்
95. கர்ப்பாசனம்
96. ஏகபாதவிருட்சாசனம்
97. முக்த அஸ்த விருட்சாசனம்
98. துவிபாத பாரிசுவாசனம்
99. கந்தபீடாசனம்
100. பிலௌடபாதாசனம்
101. உபாதானாசனம்
102. ஊர்த்துவசம்யுத்த பாதாசனம்
103. அர்த்த சவாசனம்
104. வேறு அபனாசனம்

105. யோனியாசனம்
106. வேறு பர்வதாசனம்
107. பர்வதாசனம்
108. சலபாசனம்
109. கோகிலாசனம்
110. லோலாசனம்
111. உத்தமாங்காசனம்
112. உட்டிராசனம்
113. அம்சாசனம்
114. வேறு பிராணாசனம்
115. கார்முகாசனம்
116. ஆனந்த மந்திராசனம்
117. கம்புநாசனம்
118. கிரந்தி பேதனாசனம்
119. சமாசனம்
120. புஜாங்காசனம்
121. பவனாசனம்
122. மச்சாசனம்
123. மகராசனம்
124. விருஷாசனம்
125. சங்கபாசனம்
126. சர்வாங்காசனம்

**பிராணாயாமம்**

பிராணாயாமம் என்பது பிராணனைக் கட்டுப்படுத்துதல் என்று விரியும்.

குறிப்பிட்ட ஓர் ஆசனததில் இருக்கை கொண்ட பின்பு, ஒரு யோகப் பயிற்சி மாணவன் அடுத்துச் செய்ய வேண்டியது மூச்சுக் காற்றாகிய சுவாசத்தை நெறிப்படுத்துதல் ஆகும்.

**ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்**
**உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு**
**மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்**
**பொய்யரைத் தள்ளி விழுத்திடுந் தானே**

இந்த உடலில் உள்ள ஐந்து பொறிகளாகிய பஞ்சேந்திரியங்களுக்குக் கணவனாகவும், உடலாகிய ஊருக்குத் தலைவனாகவும் இருக்கும் ஆற்றல் உயிர் ஆகும். இந்த உயிரானது தான் வாழ்வதற்காக, உய்வதற்காக ஒரு குதிரையின் மேல் ஏறுகிறது. அந்தக் குதிரைதான் பிராணவாயு என்னும் உயிர்க்காற்று. அந்தக் குதிரையானது இறைவனிடம் பற்றுக்கொண்ட மெய்யர்கள் ஏறி நடத்தும்போது "சண்டித்தனம்' செய்யாமல் பற்றாகிய கடிவாளத்தை அவர்களிடம் கொடுத்து, அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கி ஓடுகிறது. மாய மயக்குகளில் இச்சை செலுத்தும் பொய்யர்கள் ஏறி நடத்தினால், அந்தக் குதிரையானது அவர்களை ஒரு துள்ளுத் துள்ளி கீழே விழ்த்தி விடுகிறது.

குதிரையின்மீது அமர்ந்து செல்லுதல் என்பது பயிற்சியினால் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கலையாகும். சாதாரணமான குதிரைப் பயிற்சிக்கே நீண்ட கல்வி வேண்டியதிருக்கிறது. அப்படியானால் மூச்சாகிய குதிரையின்மீது ஆட்சி செலுத்துபவன், எவ்வளவு கட்டுப்பாட்டுடன், எச்சரிக்கையோடு அந்தக் கலையைப் பயில வேண்டும் என்பதை, இந்தத் திருமந்திரம் வலுயுறுத்துகிறது.

யோகப்பயிற்சி மேற்கொள்ளும் ஒரு மாணவன், பிராணாயாமம் என்ற இந்தக் குதிரை ஏற்றத்தை நன்கு கற்றுத் தேர்ந்துவிட்டால், அவனுக்கு ஏற்படும் இன்பப் பயன்கள் எல்லை இல்லாதன என்று

ஆனந்தத்தோடு உறுதி சொல்கிறார்கள் சித்தர்கள். திருமூலரும் பரியேற்றமாகிய இந்த மூச்சுக் கலையை ஒருவன் கற்றுவிட்டால், பறவையைவிட வேகமாகச் செல்லும் இந்த மூச்சுக் குதிரையானது பேரின்பத்தைத் தருகிறது என்கிறார். கள்ளை உண்ணவேண்டாம்; அத்தகைய ஓர் இன்பத்தை இந்தக் குதிரை ஏற்றமே தரும். துள்ளிக் கொண்டு ஓடும். சோம்பலைப் போக்கும். உடம்பு முழுதும் ஞான வேகம் ஓடும் என்பது சித்தர்களின் அனுபவ மொழியாகும்.

இந்தப் பிராணாயாமத்தை எப்படிச் செய்யவேண்டும், எந்த அளவுக்குச் செய்யவேண்டும் என்பதையெல்லாம், குதிரைப் பாகனாகிய மாணவனுக்கு அவனுடைய குருநாதனாகிய சித்தன் நேரில் இருந்து கற்பிக்கிறான். வெறும் புத்தகங்களைப் படித்துக்கொண்டு மட்டும், அந்த நூலறிவின் துணைகொண்டு மூச்சுப் பயிற்சியை மேற்கொள்வது சிக்கல்களை உண்டாக்கலாம் என்று எச்சரிக்கை தரப்பட்டுள்ளது.

## பிரத்தியாகாரம்

இது பிராணனைத் திசைதிருப்பும் பயிற்சி ஆகும்.

இறையுணர்வு இல்லாத நிலையில் மாயையின் மறைப்பிலே சிக்குண்டு தவிக்கின்ற உயிரை, அந்நிலையில் இருந்து திருப்பி, இறை யுணர்வை நோக்கி வழிமாற்றும் பயிற்சியே பிரத்தியாகாரம் எனப் படும்.

வெளிச்செல்வதற்கு முனைகின்ற பிராணவாயுவைக் கட்டுப் படுத்தும்போது மனம் ஒன்றி நிலைப்படுகிறது. இப்படிச் செய்வது சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இயற்றவேண்டிய பயிற்சி ஆகும். இதைச் செய்து பயிலும்பொழுது, ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியன் மாணவனை வழிப்படுத்துகிறான். மிகவும் முயன்று செய்யவேண்டிய இந்த யோகப்பயிற்சி, அட்டாங்க யோகத்திலே மிகவும் முக்கியமான கல்வியாகும்.

## தாரணை

தாரணை என்பது மறியல், அசையாமல் அல்லது நகராமல் நிலை நிறுத்தல் ஆகிய கருத்துக்களில் விரியும்.

புலன்களுடைய தொல்லைகளுக்கு உள்ளான இந்த உடம்பின் ஐந்து முதற்பொருள்களையும், சித்தம் முதலான அகக் கருவிகளிலே அடைத்துவைத்து, அவற்றை வெளியே செல்லவொண்ணாதவாறு மறியல் செய்தலே தாரணை என்ற ஆன்மப் பயிற்சி. இதை ஞான யோக தாரணை என்று சித்தர் இலக்கியம் அழைக்கிறது. இதனுடைய பயிற்சி முறையும், ஆசானின் நேர்முகக் கல்வியின் மூலம் பெற வேண்டிய சாதனை ஆகும்.

## தியானம்

தியானம் என்பது ஒன்றை எண்ணுதல், ஒன்றையே எண்ணுதல்! ஒன்றிலே உள்ளம் தோய்ந்துவிட்டால் வேறொன்றை அது பற்றாது. அத்தகைய தோய்வே தியானமாகும். இதனை மனமாகிய விளக்கை

ஏற்றுதல் என்பார் திருமூலர். இந்த ஒரு தியான நிலை எய்து வதற்காகத்தான் முன்பு கூறப்பட்ட ஆறு பயிற்சிகளும் இன்றியமை யாதனவாக உள்ளன. அந்தப் பயிற்சி முறைகள் அனைத்தையும் தேர்ந்து தெளிகிற ஒரு மாணவன், தியானமாகிய இந்த ஏழாவது பயிற்சியிலே தொல்லைகள் இன்றி வெற்றி பெறுகின்றான். அந்த வெற்றி அவனுக்கு அட்டாங்க யோகத்தின் எட்டாவது நிலை ஆகிய சமாதி நிலையை எளிதாக்குகிறது.

## சமாதி

சமாதி என்பது நாட்டு வழக்கிலே கல்லறையைக் குறிக்கும் சொல் லாகப் பயின்றுவருகிறது. ஓர் உடலை அடக்கம் செய்து அதன்மீது கட்டப்பெறுகிற கல்லறைக்கு வழிபாடு செய்வதை, சமாதி பூஜை என்று பழக்கத்தில் நாம் அழைக்கிறோம். ஆனால் சித்தர்களின் இலக் கியத்தில் பேசப்படுகிற சமாதி என்ற சொல், யோகப் பயிற்சியின் உச்ச நிலை ஆகிய மாபெரும் சக்தியைக் குறிக்கிறது. அது உயிரும், இறைவனும் புணர்ந்த நிலை. அது ஒரு சம்யோகம். ஒரு தலைவனும் தலைவியும் மஞ்சத்தின் மீது கலவியிலே தோய்ந்து பெறும் இணைப்பு இன்பத்திற்குப் பலமடங்கு மேலான ஒரு பேரின்பத்தைச் சீவான் மாவிற்கு அளிக்கவல்ல மேன்மையுடையது சமாதி. இதனைச் சித்தர் கள் பலர் தண்ணீரில் உப்புக் கலந்தவாறு என்றும், அப்பினில் உப்பு என்றும், ஐக்கிய போத ஆனந்தமென்றும், பேரின்பநிலை என்றும், வீடு பேறு என்றும், பற்பல முறைகளிலே அழைக்கிறார்கள். இந்த ஒடுக்க நிலை நன்கு கைவந்தவர்களே மகத்தான சித்தர்கள். திருமூலர் சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே' என்று உறுதி கூறுகிறார். சித்தர் இலக்கியத்தின் குறிக்கோள் இதுவேயாகும். 'தற்பரம் சேருதல் சமாதியே' என்றும், சமாதி கை கூடினால் வானமும் மண்ணும் இறையும் கைகூடும் என்றும் சொல்லி, இந்த யோகநிலையை ஞானிகள் மிகமிக மேன்மையோடு பேசுகிறார்கள்.

சித்தர் இலக்கியத்தின் முடிவான குறிக்கோளும், மனித சமுதாயத் திற்குச் சித்தர்கள் வழங்க எண்ணுகின்ற பேரின்பமும், இந்த யோக சமாதியாகிய பெரும் பேறே! ஆகையால் சித்தரின் நூல்களிலே அட்டாங்க யோகம் என்ற பயிற்சிக்கும், எட்டாவது நிலையாகிய இந்தச் சமாதி என்னும் ஞானப் பெருநிலைக்கும் ஒப்பற்ற இடம் தரப் பட்டுள்ளது.

★

# 19. எட்டு வகையான சித்திகள்

சித்தர்கள் என்று சொன்னதுமே பொதுமக்களுக்கு அவர்கள் செய்கிற சித்து விளையாட்டுக்களே நினைவுக்கு வரும்.

பழைய காலத்துச் சித்தர்கள் புரிந்த வியப்புச் செயல்களைப் போலவே, நமது காலத்தில் நம் கண் முன்பு உலவுகிற சில பெரியோர்களும் பற்பல சித்துக்கள் செய்வதைக் காண்கிறோம்.

'இந்தா, கையைப் பிடி' என்கிறார்கள். அப்படியே அவர்களுடைய வெறுங் கையிலிருந்து குங்குமம் கொட்டுகிறது; திருநீறு வருகிறது; சிறிய சிறிய தெய்வப் படிமங்களும் நம் கையில் வந்து விழுகின்றன. அப்படியே 'வெலவெலத்து'ப் போகிறோம்.

'வெலவெலப்பு' என்று குறிப்பிடுகிறேன். திகைப்பு, அச்சம், மயக்கம், மனத்திலே ஒரு நடுக்கம் முதலிய பல மெய்ப்பாடுகள் நமக்கு விளைகின்றன. இத்தனையும் சேர்த்து அந்த 'வெலவெலப்பு' என்னும் வழக்குச்சொல் வெளியிடுகிறது அல்லவா?

இத்தகைய செயல்களை அவர்கள் எப்படிச் செய்கிறார்கள்? இந்தப் பொருள்கள் எல்லாம் அவர்களுக்கு எப்படி வசமாகின்றன? எங்கிருந்து இவை வருகின்றன? எப்படிவருகின்றன?—என்பன போன்ற பல கேள்விகள் நம் மனத்தில் எழுகின்றன.

பொருள்களை வரவழைக்கும் இந்த வினோதச் செயலை உலக நாடுகள் அனைத்திலும் உள்ள பல பெரியோர்களும் செய்து காட்டுகிறார்கள். மேனாடுகளிலும் இந்த விந்தை காணப்படுகிறது. ஆங்கிலத்தில் இதற்கு 'Aport' என்று ஒரு சொல் வழங்குகிறது. பொருள்களை வரவழைப்பதை அவர்கள் 'Materialising' என்கிறார்கள்.

தெருவீதிகளில் வித்தைகள் செய்கிற சிலரும், மாங்கொட்டையிலிருந்து மாஞ்செடியை உண்டாக்கிக் காட்டுகிறார்கள். மணலைச் சீனியாக மாற்றுகிறார்கள். இவ்வாறே அரங்குகளிலும் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுகிற 'மாஜிக்' கலைஞர்கள் உண்டு.

எது 'மாஜிக்' என்கிற ஜாலம்? எது மெய்யான சித்தி? எது உண்மையான ஆன்ம ஆற்றல்?—என்றெல்லாம் புரியாமல் திகைப்பு ஏற்படுகிறது அல்லவா!

ஒரு சமயம் ஒரு ஜாலக்காரர் கைவிலங்குகளோடு ஒரு பெட்டிக்குள் தம்மை அடைக்குமாறு செய்து, அந்தப் பெட்டியை வலிமையான

பூட்டுக்களைக் கொண்டு பூட்டிக் கொள்ளும்படி செய்து, திறவுகோல் களையும் அவையினரிடமே கொடுத்துவிட்டார். திரைமூடிச் சில மணித் துளிகளில் வெளிவாசல் வழியாக அவர் அரங்கினுள் நுழைந்தார்! அவையோருக்கு ஏற்பட்ட களியாட்டமும் அற்புத உணர்வும் எல்லை யற்றனவாகக் கைதட்டிலும் ஆரவாரத்திலும் வெளிவந்தன.

மேனாடுகளில் பேராசிரியர் ஹூடினி என்பார் இந்த அற்புதத் தைச் செய்து வந்தார். அதனால் அவர்கள் இதை ஹூடினியின் ஜாலம் (Magic) என்றும், ஹூடினியின் தந்திரம் (trick) என்றுமே அழைக்கிறார்கள்.

சிந்தித்துப் பார்க்கிறோம். இது வெறும் ஏமாற்றுத் தந்திரமா? அல்லது அற்புத ஆன்ம ஆற்றலா?

ஒரு சமயம் இப்போது வாழ்ந்து வருகிற ஒரு பெரியார் என்னு டைய மூக்குப் பொடிச் சிமிழை என்னிடமிருந்து வாங்கி அதைத் திறந்து, அதிலிருந்து ஒரு 'சிமிட்டா' எடுத்து என் உள்ளங்கையிலேயே கொடுத்து அதை உறிஞ்சும்படி கூறினார். என்ன வியப்பு! மூக்குப் பொடியாக இருந்த அது, மிளகாய்த் தூளாக நாசியிலே பாய்ந்தது! தும்மிக்கொண்டே, கண்களைக் கசக்கினேன். அடுத்த சிமிட்டைக் கையிலே கொடுத்தார். அது சந்தனத் தூளாக இருந்தது. என் திகைப்பு அடங்குவதற்குள் மூன்றாவது சிமிட்டு எடுத்துக் கொடுத் தார். அது மறுபடியும் பழைய மூக்குப் பொடியாக இருந்தது.

இதைச் செய்தவர் தெருவீதி ஜாலக்காரர் இல்லை. அரங்கு களிலே வித்தைகள் செய்து காட்டுபவரும் இல்லை. மகான் என்று பலராலும் வணங்கப் பெறுகிற ஒரு பெரியார் அவர்.

எது மகான்களுடைய சித்து, எது பீதாம்பரய்யர் எழுதியுள்ள ஜாலவித்தை?

உண்மையிலேயே மகான்கள் என்றால் இப்படியெல்லாம் செய்யக் கூடியவர்களா என்று நம்மில் பலரும் பல தடவை நமக்குள்ளேயே எண்ணிப் பார்க்கிறோம். தெளிவான விடை நமக்குக் கிடைக்காத தற்குக் காரணம், இதே காரியங்களை மகான்கள் செய்கிறார்கள்; ஜாலவித்தைக்காரர்களும் செய்கிறார்கள். எப்படி வேறு பிரித்துப் பார்ப்பது!

சித்தர் நூல்களிலே 'பிராத்தி' என்று ஒரு சித்தி பேசப்படுகிறது. பொருள்களைத் தாம் இருந்த இடத்திலேயே வரவழைப்பதும் இதில் அடங்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

'பிராத்தி' என்பது போன்று மேலும் சில ஆற்றல்களைப் பற்றிச் சித்தர் இலக்கியம் விரிவாகக் கூறுகிறது.

சித்தர்கள் என்ற ஞானிகள் தங்கள் பயிற்சியின்மூலம், எட்டு ஆன்ம ஆற்றல்களை வளர்த்துக்கொள்கிறார்கள். அவற்றிற்குரிய பெயர்கள் வருமாறு:

1. அதிநுண்மை அல்லது அணிமா
2. பெருந்தகைமை அல்லது பருமை என்னும மகிமை
3. நொய்மை அல்லது நிறையின்மை என்று சொல்லப்படுகிற இலகிமா
4. நிறைமை அல்லது விண்டன்மை என்னும் கரிமா
5. ஏற்பு என்னும் பிராத்தி
6. போக்குவரவு என்கிற பிராகாமியம்
7. இறைமை என்னும் ஈசத்துவம்
8. ஈர்ப்பு என்னும் வசித்துவம்

இந்த எட்டுவகையான சித்திகளையும் பற்றிச் சித்தர் நூல்கள் அனைத்தும் பேசுகின்றன. என்றாலும் மூலாதாரத்திலுள்ள ஆன்ம ஆற்றலை எழுப்பி, சுழுமுனை வழியாக ஆறு ஆதாரங்களின் நெறியிலே செலுத்தி, அமுதபானம் பருகி, அருள் ஒளியைக்கொண்டு பயின்று அடைவதாகிய பெரும்பேறாகிய சித்தியே உண்மையான சித்தியாகும். இதை அடைந்தவர்களே மெய்யான சித்தர் ஆவார்கள். அவர்களே சித்திப் பேற்றுடன் முத்திப்பேறும் பெற்றவர்கள்.

எனினும் முத்திப்பேற்றை நோக்கி வழி நடக்கும்போது, சித்திகளையும் சந்திப்பதுண்டு. பாதையில் இது காதக்கல்லாகும். இந்தத் தொலைக்கல்லிலேயே ஏறி அமர்ந்துவிடக் கூடாது. மேலே தொலை தூரம் செல்லவேண்டியதிருக்கிறது. ஆனால் ஞானப் பயிற்சி வழியிலே முன்னேறுகிற பலர் இந்த நடுவழியிலேயே நின்று விடுவதுண்டு.

ஆம்; சித்திச் சத்தி என்பது முத்திச் சத்தியாகிவிடாது. கைவல்லியத்திலே,

> முனிவர் சித்திகள் வினோதமாத்திரம் தரும்.
> முத்தியைத் தாராவே

என்று தாண்டவமூர்த்தி சுவாமிகள் ஓங்கி அடித்துவிட்டார்!

எனினும் முத்திச் சித்தி பெற முனையும் ஞானிகள், அட்டமா சித்திகளையும் ஏறுபடியாக வைத்து, அதன்மீது ஏறி, மேலே நடக்கிறார்கள்.

பரம்பொருளின் கோயிலுக்கு இந்த எட்டுச் சித்திகளும் எட்டு வாசற்படிகள் என்று கருதி, அந்த எட்டையும் மிதித்துக்கொண்டே ஏறிச் செல்கிறவர்கள் சித்தர்கள்! வாசலிலேயே நின்றுவிடுகிறவர்கள் அல்லர்! இதைத் திருமூலர் பாடுகிறார்:

> எட்டுஇவை தம்மோடு
> எழில்பரம் கைகூடப்
> பட்டவர் சித்தர்!
> பரலோகம் சேர்தலால்!

என்பது திருமந்திரம்.

சித்தர்களுடைய ஆன்மப் பயிற்சியிலே ஆரம்ப நிலையாகவுள்ள காரணத்தால் இந்த எண்வகையான சித்திகளையும் பற்றித் தமிழகத்துச் சித்தர் நூல்களிலே விரிவான செய்திகள் கூறப்பெற்றுள்ளன. திருமூலரும் தமது திருமந்திர நூலிலே இந்த எட்டுச் சித்திகளையும் மூன்றாவது தந்திரத்திலே பாடுகிறார்.

இவ்வளவு முக்கியம் வாய்ந்தனவாக இருப்பதால், அந்த எட்டு வகை ஆற்றல்களையும் எத்தன்மையன என்று காணுதல் பொருத்த முடையதாகும்.

1. அணுவைக் காட்டிலும் மிக நுண்மையான வடிவத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் அணிமா என்று பெயர் பெறும்.
2. மலையைக் காட்டிலும் பெரிய வடிவத்தை எடுத்து நிற்றல், மகிமா என்னும் சித்தியாகும்.
3. சகதியில் புரண்டாலும் சேறு படியாதபடி, காற்றைவிட மெல்லிய வடிவு தாங்கி நிற்றல், இலகிமா என்னும் சித்தியாகும்.
4. மெல்லிய வடிவு இருந்தாலும், தூக்கமுடியாதபடி கனமாக இருத்தலும், நுகர்ச்சியின் தொடக்குகள் பற்றாமல் இருப்பதும், கரிமா என்னு சித்தியாகும்.
5. எண்ணிய பொருளை எண்ணியவாறு எண்ணியவுடன் பெறுதல், பிராத்தி என்னும் சித்தியாகும்.
6. எண்ணத்தினால் பற்பல வடிவங்கள் எடுத்தலும், கூடுதலும், பிராகாமியம் என்னும் சித்தியாகும்.
7. அமரர்களும் தன்னை வணங்குமாறு வழிபாடு கொள்ளும் நிலை ஈசத்துவம் என்னும் சித்தியாகும். இது முத்தொழிலையும் செய்விக்கும் என்பர்.
8. உலகம் முழுவதையும் கோள்களையும் மீன்களையும் தன்வயமாக்குதல் வசித்துவம் என்னும் சித்தியாகும்.

இந்த எட்டு ஆற்றல்களில் மூன்று ஆற்றல்கள் உடலின் சாதனத்தைக் கொண்டு இயற்றுவதால் கிட்டுபவை. மற்ற ஐந்தும் சித்தத்தின் பயிற்சியினால் பெறுபவை.

இந்த எட்டுவகையான ஆற்றல்களும் மேலும் விரிவாக ஆராயப்பட்டு, அறுபத்தி நான்காக விரிவடைவதைச் சிவஞான மாபாடியத்தில் காண்கிறோம். இந்த எட்டுவிதமான சித்திகளும், எவை எவை எத்தனை ஆண்டுகளில் எவ்வாறு பலன் தருகின்றன என்பதைத் திருமூலர் அறுதியிட்டுச் சொல்கிறார்:

ஏழா வதில்சண்ட வாயுவின் வேகிஆம்;
தாழா நடைபல யோசனை சார்ந்திடும்;
சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை;
தாழான ஒன்பதில் தான்பர காயமே

இந்தச் சித்திகள் அனைத்தும் ஒருங்கே ஒருவனுக்குக் கைகூட வேண்டுமானால், பன்னிரண்டு ஆண்டுகள் அவன் தவம் இயற்ற வேண்டும் என்று சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். இப்படி ஒருவன் பன்னிரண்டு ஆண்டுகள் ஒரே மனத்துடன் பயிற்சி செய்வது என்பது எளிதன்று. அவ்வாறு செய்ய இயலாதவர்கள் மனம் ஒடிந்துவிட வேண்டியதில்லை என்றும், சித்தர் இலக்கியம் ஆறுதல் கூறி ஊக்கம் தருகிறது. இந்த ஊக்கத்தையே மேலே கண்ட திருமந்திரம் வெளி யிடுகிறது. ஏழு ஆண்டுகள் பயின்றவன் என்ன பயன் அடைகிறான் என்பதையும் விரிவாகவே இந்தப் பாடல் உணர்த்துகிறது.

தாரணை, தியானம், சமாதி இம்மூன்றையும் சேர்த்து ஒருமுகப் படுத்திப் பயில்வது சம்யமம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஒரு முகப் பயிற்சியே ஞானிகளின் சித்திகளுக்கெல்லாம் அடிப்படையாகும். ஏழாண்டுகள் ஒருவன் வானத்தையும் காற்றையும் இணைத்துப் பயின்றால், சில சித்திகள் அவனுக்கு வாய்க்கின்றன. அதாவது உடம்பினுள் அமைந்துள்ள வானத்தையும், வாயுவையும் இணைத்துப் பழகினால், எந்தத் திசையிலும் செல்லுகிற ஆற்றல் அவனுக்கு வசமா கிறது. காற்றைப்போல அவனுடைய உடம்பு நிறை குறைந்துவிடுவ தால், அவன் காற்றின் வேகத்தில் பறந்துசெல்ல இயல்கிறது. இத்தகைய ஒரு சித்தனுடைய உடம்பானது, வானமாகிய (Ether) விண்ணணுவாகி மற்றப் பூதங்கள் அவனுள் அடங்கிவிடுகின்றன. இந்த உண்மையைப் பதஞ்சலி முனிவர் போன்றோர் வடமொழியில் இயற்றி யுள்ள நூல்களும் கூறுகின்றன.

ஏழாண்டுகள் செய்கிற பயிற்சி இன்னொரு பயனையும் தருகிறது. அதைத்தான் திருமூலர் 'தாழா நடை' என்கிறார். எத்தனை காலங் கள் சென்றாலும் சோர்வை அறியாத ஆற்றல் அவனுள் இயங்கத் தொடங்குகிறது. ஆகவே, ஒரு யோகியின் உடம்பு ஏழாண்டுகளில் உடம்பை நொய்மையாகவும் வேகமுடையதாகவும் மாற்றக் கூடிய சக்தியைப் பெறுகிறது.

இனி, மேலும் ஓராண்டு இவ்வாறு பயிற்சி செய்தால், நரை, திரை, மூப்பு, பிணி என்பன உடம்பை அணுகுவதில்லை. இதைத்தான் திருமூலர் 'சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை' என்றார். நரை திரை தோன்றா என்பதால் பிணியும் மூப்பும் அவனுக்கு இல்லை என்பது உட்கிடை.

இத்தனை சித்திகளும் முயன்று பயிற்சி செய்து ஒருவன் பெற வேண்டியவை. ஆகையால் இவற்றைச் 'செயலாற்றல்' என்றும், 'சித்திகள்' என்றும், 'கிரியாரூப சித்திகள்' என்றும் ஞானிகள் அழைக் கிறார்கள்.

இந்த எண்வகையான ஆற்றல்களை முயற்சி பற்றிய சித்திகள் என்றும் சில நூல்கள் அழைக்கின்றன. இவற்றை இடைவிடாமல் தொடர்ந்து பயின்று ஒன்பது ஆண்டுகளைக் கடந்த பின்பு, ஒருவன் சித்திகளில் எல்லாம் பெரிய சித்தியாகிய பரகாயப் பிரவேசம் என்ற கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலைப் பெறுகிறான். இந்த ஆற்றலானது,

தவத்தின் அளவையும், தவம் செய்வோரின் முனைப்பையும், அவனுக்கு ஞானம் உணர்த்திய ஆசானின் திருவருளையும் பொறுத்து வல்லமை அடைகிறது. உண்மையில் இந்த மாபெரும் ஆற்றல் எய்திய மகான்கள் சித்தர் உலகே தலைபணிந்து வணங்கக்கூடிய மகான்கள் ஆவார்கள்.

சித்தன் ஒருவன் இறந்து கிடக்கும் ஒரு மனித உடலிலே தனது உயிரை உட்செலுத்தி, அந்தப் பிணம் மீண்டும் உயிர்பெற்றதுபோல் எழுந்து உலவும்படி செய்வது, அற்புதமான ஓர் ஆற்றலே என்றாலும், இந்தச் சித்தியையும் கூட ஞானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள். பின்விளைவுகள் பல சிக்கல்களுக்கு ஒரு ஞானியினை உள்ளாக்குவதால், கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியைக்கூட மிகுந்த எச்சரிக்கையோடும், பாதுகாவலோடும், செய்யவேண்டும் என்று சித்தர் இலக்கியம் அறிவுறுத்துகிறது. பிறன் ஒருவனுடைய இறந்த உடலிலே தாம் புகுந்து அதன் விளைவாக அல்லலுக்குள்ளானவர்கள் பலர்.

சித்தர்களின் சில நூல்களில் இந்த எட்டுவகையான சித்திகளுக்கும் இனங்களையும் அவற்றின் உட்கிளைகளையும் சொல்லும்போது, ஆற்றல்களின் நாமங்களிலும் அவற்றின் விளக்கங்களிலும், அவற்றை வரிசைப்படுத்துவதிலும், அந்தந்தச் சித்தரின் மரபுவழியை யொட்டி மாறுபாடுகள் இருக்கக் காண்கிறோம். என்றாலும் அடிப்படையான இந்த எட்டு ஆற்றல்களையும் பற்றிய கருத்துரைகளிலே அதிகமான வேறுபாடு இல்லை. அதே சமயம், இந்தச் சித்திகளெல்லாம் முக்திக்குப் படிநிலையே அல்லாமல், இவை பேரின்ப வீட்டைத் தருவதில்லை என்றே அனைத்து நூல்களும் ஒருமித்துக் கூறுகின்றன!

சிததர்கள் இலக்கியத்திலே கூறியுள்ள இந்த ஆற்றல்களைத் தவிர, இவற்றைப் போல நம்முன் காட்சிதரும் இவற்றின் போலிகளும் பற்பலவாக உள்ளன. ஆன்ற தவம் இயற்றி அடையவேண்டிய இந்தச் சித்திகளைத் தவிர, சில்லறைச் செயற்பாட்டிலுள்ள காமிய மந்திரங்கள் மூலமாகவும், ஆவிகள் அல்லது சிறு சில்லறைத் தேவதைகள் மூலமாகவும், பல அதிசய நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டு வாரும் உண்டு.

உலகியலின் பாங்கிலே கைத்திறமையாலும், தந்திரங்களாலும், ஏமாற்று நடிப்பினாலும் பொருள்களை வரவழைப்பதும், ஒன்றை ஒன்றாகக் காட்டுவதும், பலமுறைகளில் மக்களைத் திகைப்படையச் செய்வதும், வழக்கமாக இருந்து வருகிறது. இந்தப் போலி ஆற்றல் களை யோகிகளின் சித்திகளோடு சேர்த்துக் கணித்துவிடக் கூடாது.

இத்தனை சித்திகளையும் ஆராய்ந்து கண்டுள்ள ஞானிகள் ஒரு கருத்தை வற்புறுத்துகிறார்கள். அது என்னவென்றால், தவத்திலுமே இரண்டு வகை உண்டு என்பதே. ஒன்று பயன்கருதிய தவமாகும்; மற்றொன்று பயன்கருதாத் தவம்.

பயன்கருதி நாம் செய்கிற தவம் சித்திகளைத் தருகிறது. பயன் கருதாமல் தவத்திற்காகவே தவம் என்று செய்யும்போது, முத்தி கை கூடுகிறது.

பயன்கருதித் தவம் செய்கிறவர்கள் அந்தப் பயன்களிலேயே, அவை தரும் களிப்பிலேயே ஆழ்ந்துவிடுகிறார்கள். சித்திகளை விளையாடுவோருக்கு நேருகிற விபத்து இதுவே. இந்த விபத்திலிருந்து தப்பித்துக்கொள்கிற ஞானிகள், தங்கள் தவத்திலே மேலும் முன்னேறு கிறார்கள். அப்படி முன்னேறுகிறவர்களுக்கே முத்தி கிட்டுகிறது. இவர்களிலே முத்தி நிலைபெற்று உயிரோடு, உடம்போடு, வாழ்கிற மகான்கள் உண்டு. முத்தியிலே ஒடுங்கிச் சீவ சமாதியிலே வாழ்கிறவர் களும், அதாவது கண்பார்வையிலிருந்து மறைந்து வாழ்கிறவர்களும், உண்டு. இந்த இருவகையான முத்தியும் கைகூடப் பெற்றவர்களே, உலகனைத்தும் வணங்கக்கூடிய நிலையான பேறு பெற்ற மெய்யான சித்தர்கள். திருமூலரைப் போன்ற யோகேசுவரர்கள் இந்நிலையிலான சித்தர்களே!

★

# 20. மூலக்கனல்

சித்தர்கள் கூறுகின்ற யோகப்பயிற்சி முறைகளிலே மிகவும் முக்கியமானது அங்கிதாரணை என்கிற கல்வியாகும். மூலக்கனலை மேல் எழுப்புகின்ற இந்த முறையைப்பற்றி, நமது நாட்டுச் சித்தர்கள் அனைவரும் ஒரே குரலில் பேசுகிறார்கள்.

பிரணவ எல்லை என்று அழைக்கப்படுகின்ற சூக்கும நிலைக்கு உள்ளேயும் புறத்தேயும் கனலை எழுப்பி, மூலக்கனலின் கதிர்களைப் பாய்ச்சினால், இந்த உடலில் மறைந்திருக்கின்ற தெய்வ சக்திகள் வெளிப்பட்டுத் தொழிற்படும் என்றும், இந்த உடம்புக்குள்ளே இயங்குகின்ற தெய்வ ஆற்றல்களை மறைத்து நிற்கும் இருட்டுகள் நீங்கும் என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இரண்டு பாகங்களாக உள்ளும் புறமுமாக நிற்கின்ற தெய்வ ஆற்றல்களுக்கு யோக முறையில் வழிபாடு இயற்றுவதையே, அங்கிதாரணை என்று அழைக்கிறார்கள். உள்ளும் புறமும் பொருந்துகின்றபடி பார்வையைச் செலுத்தினால், இருள் அகன்று அகஉடம்பு ஒளிவடிவாகுமென்று சித்தர் இலக்கியம் பேசுகிறது.

ஓங்காரத்திற்குள் புகுந்துநிற்கும் நாதகலைகளின்மீது, மூலக் கனலைப் பாய்ச்சுகின்ற முறை என்ற ஒரு சிறப்பான பயிற்சிமுறை சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூலக்கனலை எழுப்பி, அந்தச் சுடரை நாதகலையின்மேல் பாய்ச்சினால், பிந்துகலை விரைந்து வருமென்று அவ்வையாரின் குறளிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் விரிவாகச் சொல்லும்போது, மணிபூரகம் என்ற ஆதார மையத்திலே கனலைப் பாய்ச்சும்போது, இரவு இன்றி உடல் முழுவதும் பகலாகப் பிரகாசிக்குமென்று சித்தர்கள் பேசுகிறார்கள். இதன் பொருளைச் சாதாரண மொழியிலே சொல்வதாக இருந்தால், இந்த உடம்பின் அகக்கனலை யோக முறையினால் எழுப்பி, ஐம்புலன்களிலே செலுத்தினோமானால், உலக இச்சைகள் அடங்கி, ஞான ஆற்றல்கள் உடம்பினுள் வளர்ந்தோங்கும் என்பதே. இந்த யோக சாதனை வலுவடையும்போது சித்தர்கள் பேசுகிற எல்லாவிதமான சித்திகளும் எளிதிலே கைகூடு மென்று கூறப்பெற்றிருக்கிறது.

மிகப் பழைய ஞானிகளிலே ஒருவர் இந்த முறையை யோக தந்திரம் என்று அழைக்கிறார். ஞான ஆற்றலை எளிதிலே பெறுவதற்கு இந்த முறையை யோக தந்திரமென்று சித்தர் இலக்கியம் பெயரிட்டு அழைக்கிறது. இதனால்தான் யோகிகளுக்கு இரவுபகல் அற்ற நிலை சித்திக்கிறது என்று கூறுகிறார்கள். மனமும்

பார்வையும் ஒருங்குகூடி மூலக்கனல் எழுந்து இயங்கும்போது இரவு நீங்கிய பகலாகிய பிந்துகலை என்னும் சித்தி கைகூடுகிறது என்பது சித்தர்களின் மறைமொழியாகும்.

இந்த மூலக்கனலின் யோகத்தைப் போன்றே, உடலுக்குள் அமுதம் உண்கின்ற முறையும், சித்தர் இலக்கியத்தில் மிக முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகிறது.

உடம்பினுள் உள்ள அமுதம் எந்தப் பகுதியில் எந்த இடத்தில் உண்டாகிறது என்பதை மாணவனுக்குத் தொட்டுக் காட்டுகின்றவனே ஞானகுரு ஆவான். யோகப் பயிற்சியைப் பயிலுகின்ற மாணவன், தனது பயிற்சியின் வெற்றியினால், பிரணவத்திலுள்ள அமுதத்தை உண்டுவிட்டால், அவனை மரணம் அணுகாது என்று நமது நாட்டுச் சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். இதனால்தான் இன்றும் பொதிகை மலையிலும் இமயமலையிலும் பலநூறு ஆண்டுகளாக, வயது என்ற வரம்பைக் கடந்து, மாபெரும் யோகிகள் வாழ்ந்து வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். உலக சமுதாயத்தின் உறவுகளையும் தொடர்புகளையும் விட்டு அகன்று, மலைக் காடுகளிலும் குன்று குகைகளிலும் வாழ்ந்து, உடம்பிலுள்ள தெய்வ ஆற்றல்களை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் இந்த யோகிகளே.

உலகியலோடும் மனித சமுதாயத்தோடும் எத்தகைய இணைப்பும் இன்றி, எங்கோ ஒரு காட்டுக்குள் ஒருவன் தவம் செய்வதனால் உலகுக்கு என்ன பயன் என்று மனித அறிவு கேட்கக்கூடும். எங்கோ வனத்திலே பரிதி எழுவதாலும், எத்தனையோ தொலைதூரங்களுக்கு அப்பால் ஒரு சந்திரன் உதிப்பதாலும், உலகிற்கு என்ன பயன் என்று கேட்பதைப் போன்றதே இந்த வினாவும் ஆகும்.

இமயமலையின் உச்சியிலே அல்லது பொதிகை மலைக் காட்டுக்குள்ளே, ஒரு தொலைதூரக் குகைக்குள்ளே, ஒரு ஞானி தனது தவ ஆற்றலினால் ஒளிவீசி அமரும்போது, அந்த ஆற்றல் அந்த மலையையும் காடுகளையும் கடந்து, உலக சமுதாயத்திலே தனது ஒளியைப் பாய்ச்சுகிறது! வானத்தில் சூரியன் காயும்போது அவனுடைய கதிர்கள் உலகெங்கும் பரவி விரிந்து பரந்து மனிதகுலம் முழுமைக்கும் ஒளி தருவது போலே, ஒரு குகைக்குள்ளே வாழ்கின்ற ஞானி, தனது ஞானக் கதிர்களை மனித சமுதாயம்என்னும் அக உலகின்மீது வீசுகிறான் என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது.

விளக்கு எரியும்போது அந்தச் சுடரினால் விளக்கு நிற்கின்ற இடம் நமது கண்ணுக்குப் புலப்படுவது மட்டுமல்லாமல், அந்த ஒளியினால் அதைச் சுற்றியுள்ள சூழல் முழுவதும் ஒளிபெறுகிறது அல்லவா? அவ்வாறே ஒரு யோகியின் உடம்புக்குள்ளே, அக உடம்பு ஒளிமயம் ஆகும்போது, அந்த ஒளியின் பயன் மனித சமுதாயம் முழுவதற்குமே கிட்டுகிறது! யோகிகளுடைய வாழ்க்கையினால் மனித குலத்தினுடைய வாழ்க்கையே ஒளி பெறுகிறது! இந்த ஞான உலகின் பேருண்மையை நினைத்துப் பார்த்தால்,

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

என்ற பாடலின் மெய்ப்பொருள் நமக்குப் புரியும்.

நல்லவன் ஒருவன் இருந்துவிட்டால் போதும், அவனுக்காக எல்லாருக்குமே மழை பெய்கிறது. அந்த மழை உலக மனிதர் அனைவருக்கும் பயன்தருகிறது என்று சொன்னால் சாதாரண அறிவு அதை எப்படி ஒப்புக்கொள்ள இயலும். மேகங்கள் திரண்டு பெய்கிற மழைக்கும், நல்லவன் ஒருவன் வாழ்வதற்கும், என்ன இணைப்பு இருக்கிறது என்று கேட்பதுதானே அறிவின் இயல்பு. ஒரு நல்லவன் இருந்து விட்டால் அவனுக்காக உலகம் முழுவதற்குமே மழைபெய் கிறது என்று சொல்வது எங்ஙனம் பொருந்தும்?

இந்தக் கேள்விகளையும் பிற ஆன்றோர்களின் மறைமொழிகளை யும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தோமானால், இந்த உலகிலே மகான் கள் தங்களுக்குத் தாங்களே ஒளிஉடம்பை ஆக்கிக்கொள்ளுவதனால், உலக சமுதாயம் முழுவதற்குமே ஞானப் பெரும்பேறு கிடைக்கிறது என்ற சித்தர்களின் மொழியிலுள்ள முழுப்பொருளும் நமக்குப் புலனாகும். அதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

சித்தர் இலக்கியம் கூறுகிற அகப்பயிற்சி முழுவதுமே, ஒரே ஒரு சித்தனுடைய பயனுக்காக மட்டும் ஏற்பட்டது இல்லை. அவனுடைய உடம்பு ஒளி உடம்பாக மாறும்போது, அந்த உடம்பிலிருந்து எழுந்து வீசுகிற ஒளியானது உலக சமுதாயம் முழுவதற்கும் ஞான ஒளியைத் தருகிறது. இதைத்தான் சூரிய வெயிலுக்கு ஒப்பிட்டு, சித்தர் இலக்கியம் விளக்கம் செய்கிறது.

சூரியன் ஒளிமயம் ஆவதால் இரண்டுவித பயன்கள் ஏற்படுகின்றன. முதலாவது, ஒளிமயமாக இருப்பதால் சூரியன் நம்முடைய கண்களுக் குப் புலனாகிறது. இரண்டாவது, அந்தச் சூரியனுடைய ஒளியைக் கொண்டு நாம் பிற பொருள்களைக் காண முடிகிறது. இதுவே சூரிய ஒளியின் இரண்டாவது பயனாகும். அவ்வாறே யோகி ஒருவன் தனது அக உடம்பிலே ஞானக்கனலை எழுப்பித் தனது உடம்பை ஒளிமய மாகச் செய்துகொள்வதனால், அந்த உடம்புக்கு மட்டுமல்லாமல் உலகம் முழுவதற்குமே அந்த ஒளி பயன்படுகிறது. சித்தர்கள் விரிவாகக் கூறுகின்ற பயிற்சியின் இருவிதமான பயன்கள் இவையே.

யோகமுறைகள் ஏற்பட்டதன் நோக்கம், யோகத்தைப் பயில்கின்ற மாணவனுக்கு அந்த முறைகள் பயன்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, அந்த முறைகளைப் பயின்று தேர்ந்த மாணவன், ஒரு மாபெரும் யோகியாக முன்னேறி வளர்ந்தானேயானால், அவன் பெறுகின்ற யோகமும் ஞானமும் இந்த மனித சமுதாயம் முழுவதற்குமே பயன்தர வேண்டும் என்பதே ஆகும்.

ஒலிப்பயிற்சி என்ற சாதனையும், ஒளிப்பயிற்சி என்ற சாதனையும் சித்தர் இலக்கியம் முழுவதுமே சிறப்பான இடங்களைப் பெற்று விரிவான முறையிலே பேசப்படுவதன் நோக்கம், இந்த உலகம்

முழுவதும் ஞானப் பேருண்மைகளின் பயனை அனுபவித்து, மனிதர்கள் யாவரும் பேரின்பப் பெருவாழ்வு வாழவேண்டும் என்பதேயாகும்.

அண்மைக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்த இராமலிங்க அடிகள், தம்முடைய அருட்பாவிலே, பல இடங்களில், தம்முடைய அருட்பெருஞ் சோதியின் ஞானப்பயன் மனிதகுலத்திற்கு மட்டும் அல்லாது, எல்லா உயிர்களுக்குமே கிட்ட வேண்டுமென்ற தமது ஞான இச்சையை, பற்பல விதங்களிலே, மீண்டும் மீண்டும் எழில்மிக்க சொற்களிலே வெளியிடுகிறார். இதையேதான் தாயுமானவரும்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே

என்று இரண்டே வரிகளில் அடக்கிவிட்டார்.

யோகப் பயிற்சியைக் கற்கின்ற எல்லா மாணவர்களுமே, இந்த நோக்கத்தோடுதான் தங்களுடைய ஞானக் கல்வியைத் தொடங்குகிறார்கள். அவர்களுடைய பயிற்சியின் பயன் அவர்களுக்கு மட்டுமின்றி, உலகம் முழுவதற்குமே பேரின்பமாக அமைகிறது.

★

# 21. சித்தர்களின் சரஞானம்

சித்தர் இலக்கியங்களிலே மிகவும் முக்கியமான ஒரு பகுதி சரம் என்ற மூச்சுநிலை பற்றிய ஆராய்ச்சியாகும்.

சரம் என்பது காற்று, மனம், ஜீவன், சுவாசம், மூச்சு, பிராணன், ஆவி, உயிர், உயிர்ப்பு என்று பல சொற்களில் அழைக்கப்படுகின்றது.

சரம் என்பது நம்முடைய உடம்பில் நாசித் துவாரத்தின் வழியாக இயங்குகின்ற மூச்சின் நிலையாகும். சித்தர்கள் இதை மாட்டிற்குப் பூட்டியுள்ள மூக்கணாங்கயிற்றுக்கு ஒப்பிடுவார்கள். வண்டியை இழுக்கின்ற காளையானது எப்படி மூக்கணாங்கயிற்றினால் இயக்கப்படுகின்றதோ, அதுபோல், நன்மை தீமை என்னும் இயக்கங்கள் நம்முடைய மூச்சின் இயக்கத்தினால் தொழிற்படுகின்றன என்பதே, சித்தர்கள் கூறுகின்ற சரஞான இரகசியமாகும்.

இந்த மூச்சைப் பற்றிய நுட்பங்களையெல்லாம் நூலைப் படிப்பதால் மட்டும் ஒருவன் கற்றுவிட முடியாது என்றும், நூலறிவை மட்டும் கொண்டு இந்தச் சரமாகிய கலையை ஒருவன் பயிலக்கூடாது என்றும், சித்தர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். ஏனென்றால் இந்த மூச்சின் நிலையை மாற்றுவதாலும், குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்படி இயக்குவதாலும், நன்மைகள் ஏற்படுவது போலவே, எதிர்பாராத தீமைகள் ஏற்படவும் வழியுண்டு.

பாற்கடலைக் கடையும்பொழுது நஞ்சு வந்தது என்ற கதை சொல்லப்படுகிறது. உடம்பாகிய பாற்கடலை மூச்சாகிய பாம்பின் வழியாகக் கட்டிப் பாலைக் கடையும்பொழுது, அந்த மூச்சாகிய பாம்பு நஞ்சைக் கக்குகிறது. அந்த நஞ்சைக் கழுத்திலே அடக்குகின்ற நீலகண்டப் பயிற்சியைத் தெரிந்த பிறகுதான், அமுதம் கடைகின்ற கல்வியை நாம் பயிலவேண்டும். இதுவே சித்தர்கள் நமக்குக் கூறுகிற அறிவுரையாகும்.

சரமாகிய இந்தப் பயிற்சியைச் செய்வதற்குச் சில விதிமுறைகள் சித்தர்களால் கூறப்பட்டுள்ளன. இன்னின்ன ஆசனங்களில் அமர்ந்து இந்தப் பயிற்சியைச் செய்தால், இன்னின்ன பலன்கள் ஏற்படும் என்று சித்தர் இலக்கியம் கூறுகிறது.

மூங்கிலால் ஆன தடுக்கில் அமர்ந்து சரப் பயிற்சியைச் செய்தால் அது வறுமையை உண்டாக்கும்.

கல்லில் அமர்ந்து செய்தால் உடம்பில் நோய் உண்டாகும்.

ஆசனமேயில்லாமல் மண்ணிலே அமர்ந்து செய்தால் துயரம் விளையும்.

கீறல் விழுந்த பலகை அல்லது உடைந்த மணை, இவற்றின் மேலிருந்து பயின்றால் எவ்வித நன்மையும் உண்டாகாது.

புல்லினால் முடையப்பட்ட பாயின்மீது அமர்ந்து இந்தப் பயிற்சியைச் செய்தால் புகழுக்குக் கேடு உண்டாகும்.

பச்சிலைத் தழைமேல் அமர்ந்து செய்தால் அகமனத்தில் நடுக்கம் ஏற்படும்.

மான்தோலின் மேல் அமர்ந்து ஒருவன் சரப்பயிற்சியைச் செய்தால் அவனுக்கு ஞானம் உண்டாகும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

புலித்தோல் ஆசனம் செல்வத்தைத் தரும் என்றும், தருப்பையினாலான ஆசனம் வீடுபேறு அருளும் என்றும் சொல்லப்படுகிறது.

வெள்ளை ஆடை உடுத்திக்கொண்டு இந்தப் பயிற்சியைச் செய்தால் எவ்விதத் தீமையும் இல்லை.

இரத்தின கம்பளத்தின் மேல் அமர்ந்து செய்வதனால் நன்மை ஏற்படும்.

நன்மை தருகின்ற, சித்தர்களின் விதிமுறைப்படி உள்ள ஆசனங்களில் அமர்ந்து சரம் என்ற இந்த ஞான ஆய்வை ஒருவன் செய்தால், மனத்திற்கு ஒரு பெரிய தெளிவு உண்டாகும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

இனி, யோக முறையினாலான ஆசனங்களில் உடலை இருத்தி அமர்ந்து செய்வதனால், நன்மைகள் ஏற்படும் என்பதையும் சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த யோகாசனங்களிலே பத்மாசனம் இட்டு முறைப்படி சரம் பார்த்தால், மனத்தில் பற்பல நினைவுகள் குழம்பி எழுந்து அல்லல் வரும் என்றும், அப்படி வரும் அல்லல்களை மனத்திலிருந்து நீக்கி, வேறு எவ்வித நினைவும் இல்லாமல் ஒருமனமாக ஒடுங்கியிருந்து, ஓட்டியான பந்தம் என்று சொல்லப்படுகிற பிராணாயாமத்தைச் செய்து, அதன் பிறகு சரம் பார்த்தால், திருவருள் உண்டாகிப் பல நுட்பங்கள் புலனாகும் என்றும், சித்தர்கள் கூறியிருக்கிறார்கள்.

பிராணாயாமம் செய்த பிறகு, கடவுள் ஆற்றல்களுக்குப் பிறப்பிடமாகிய உந்தியின் கீழிருந்து தொடங்கி, எழுபத்திரண்டாயிரம் நாடிகள் இந்த உடம்பில் உள்ளடங்கி நிற்கும் நுட்பத்தை உணரவேண்டும். இந்த உணர்வுக்குப் பிராணாயாமம், ஓட்டியான பந்தம் ஆகிய இரண்டும் துணைசெய்யும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

எழுபத்திரண்டாயிரம் நாடிகளிலே பத்து நாடிகள் நல்ல நாடிகள் என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது. அந்தப் பத்திலே மூன்று நாடிகள் மிகவும் முக்கியமானவை. மூன்றின் வழியாகத்தான் சரம் என்ற இயக்கத்தை எளிதிலே நாம் காணமுடியும்.

சரம் என்ற மூச்சோட்டுகின்ற நுட்பத்தை ஆராய்ந்து கவனிக்கும் போது, நாசியின் வழியாக அறுபது நாழிகை கொண்ட ஒரு நாளிலே 21600 தடவை இந்தக் காற்றின் இயக்கம் நடைபெறுகிறது.

இடப் பக்கத்து நாசியிலே வரும் மூச்சுக்கு இடைகலை என்று பெயர். அதுவே சந்திரன் எனவும் அழைக்கப்படும். வலப் பக்கத்தில் வரும் சுவாசத்திற்குப் பிங்கலை என்று பெயர். இது சூரியன் என்றும் பெயர் பெறும். சுழுமுனை என்று சொல்லப்படுவது நடு மூச்சாகிய நெருப்பு அல்லது அக்கினி எனப்படும். இந்த அடிப்படையை முன்பே பார்த்தோம்.

இதற்கு மேலும் ஒரு சிறப்பான செய்தி என்னவென்றால் சந்திர கலையாகிய இடப்பக்கத்து மூச்சு அமுதம் என்றும், எப்பொருளையும் உண்டாக்கும் வல்லமை படைத்தது என்றும், இதன் நிறம் கறுப்பு என்றும், இது திர ராசி என்றும் சொல்லப்படுகிறது.

வலப்பக்கத்து மூச்சாகிய சூரியன் பரிசுத்தமான வெண்மை நிறத்தையுடைய மூச்சாகும். இது சர ராசியாகும்.

சுழுமுனை என்னும் நடு மூச்சு அழிவாற்றல் ஆகும். எல்லாச் செயல் களையும் அழிக்கக்கூடிய வல்லமை உடையது இது. இதன் நிறம் நெருப்பின் நிறம். சரம், திரம் என்ற இரண்டு ராசியும் இணைந்தது இதன் ராசி. இது உபயம் என்று பெயர் பெறும்.

சரமாகிய மூச்சின் மூன்று பிரிவுகளாகிய இடைகலை, பிங்கலை, சுழுமுனை ஆகியன பற்றி, மேலும் சில செய்திகளைச் சித்தர் இலக்கியம் கூறுகிறது. சந்திரகலை என்பது பெண்பாலாகும். பிங்கலை யாகிய சூரியன் ஆண்பால். சுழுமுனை என்கிற உபயராசியானது அஃறிணையாகும். இதனை அலி என்றும் சித்தர் இலக்கியம் அழைக் கிறது.

ஊர்விட்டு ஊர் செல்லும்பொழுது, அந்தப் பயணம் இருபது காதத்திற்கு மேற்பட்டால், பயணத்தைச் சந்திரகலை ஓடும்போது தொடங்கி, சூரியகலை ஓடும்போது குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பயணம் வெற்றி பெறும் என்று சித்தர்கள் ஒரு பெரிய இரகசியத்தைக் கூறியிருக் கிறார்கள்.

எந்தெந்த மூச்சு நம்முடைய உடம்பில் நடக்கும்போது, என்னென்ன செயல்கள் செய்யவேண்டும் என்பதையும், சித்தர் இலக்கியம் விரிவாகப் பேசுகிறது. சில சான்றுகள் வருமாறு:

சந்திர கலையாகிய இடது நாசியின் மூச்சு இயங்கும்போது ஒரு முக்கிய காரியத்திற்காகக் கடிதங்கள் எழுதலாம்; தூதனுப்பலாம். ஒருவரோடு கலந்து பேசலாம். அந்த முயற்சி வெற்றிதரும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

ஒரு முக்கிய காரியமாக நாமே தூது போவதும், சந்திர கலையில் செய்யலாம். புதிய ஆடைகள் அணிதல், ஆபரணங்கள் பூணுதல்,

திருமணம் செய்துகொள்ளுதல் அல்லது செய்வித்தல் அதாவது தாலிகட்டல், ஒருவனைத் தமக்குப் பணியாளாக அமர்த்திக் கொள்ளல், கிணறு குளம் ஏரி முதலியன வெட்டுதல், வீட்டுமனை வாங்குதல், புதிய வீட்டிற்குக் குடிபோகுதல், ஒரு பொருளை விற்றல், பெரியவர்களை முகமன் காணுதல், பெரியோரின் துணைகொள்ளுதல், வினைதீர்க்கும் சாந்திகளைச் செய்தல், அன்போடு தேவதைகளை எழுந்தருளச் செய்தல், எதிரியோடு உடன்படிக்கை செய்து கொள்ளுதல், கல்வி தொடங்குதல், களஞ்சியத்தில் தானியங்களைச் சேர்த்து வைத்தல், புதிய சொத்துக்கள் கைக்கொள்ளுதல், நன்கொடை ஈதல், தீவினைக்கு விடுதலை தேடிக்கொள்ளுதல், முதலிய செயல்களையெல்லாம், சந்திரகலை ஓடும்போது செய்வது நன்மை பயக்கும் என்று சரஞானத்தை உணர்த்துகின்ற பகுதியிலே சித்தர் இலக்கியம் நமக்கு உணர்த்துகிறது.

இடைகலையாகிய இடநாசியின் மூச்சு இயங்கும்போது செய்யக் கூடிய செயல்கள் என்ன என்று வரையறை செய்கிற சித்தர்கள், சூரிய கலையாகிய வலப்பகுதி மூச்சு ஓடும்போது என்னென்ன செயல்கள் புரிந்தால் அது பொருத்தமாக இருக்கும் என்பதை, விரிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

ஞான இரகசியங்களை ஒரு குருவினிடமிருந்து நாம் பெறுவது சூரிய கலையிலே செய்துகொண்டால், அந்த ஞானம் நன்றாக வளரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோலவே நாம் ஒருவருக்கு உபதேசம் பண்ணுவது, புதிய கலைகளை நாம் கற்பது, அல்லது பிறருக்குக் கற்பிப்பது, ஒருவரை வணங்குவது, எதிராளியை நமது வல்லமைகொண்டு விரட்டி வெல்லுவது, முதலிய காரியங்களைச் சூரிய கலையில் செய்வது நலம்.

இவ்வாறே வயல்களிலே விதை விதைத்தல், புதிய செடிகளை நடுதல், வியாபாரம் செய்தல், வழக்குகளைப் பேசி முடித்தல், யானை குதிரை தேர் இவற்றில் புதிதாக ஏறுதல், பலருக்கும் பயன்படக்கூடிய கட்டுரைகளை எழுதுதல், கவிபுனைதல், இசைபயிலுதல், பொதுமேடைகளிலே பேசுதல், பேயோட்டுதல், மந்திரம் ஓதி ஒரு காரியத்தைச் சாதித்தல், மருந்து உண்ணுதல், உணவு கொள்ளுதல், தூங்கச் செல்லுதல், குளித்தல், பாம்பு தேள் முதலியவற்றின் விடங்களைத் தீர்த்தல்,யோகம் பயிலுதல் முதலியவை சூரியகலையில் செய்ய வேண்டும் என்பது சித்தர் வாக்காகும்.

சுழுமுனை என்ற கலை இயங்கும்போது செய்யவேண்டிய காரியங்கள் எவை என்றும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

சுழுமுனை என்பது இரண்டு நாசியிலும் காற்றானது ஒத்து ஓடுகிற நிலையாகும். இந்தச் சுழுமுனை இயங்கும்போது, சமாதி யோகம் செய்தல், அதாவது உடலிலுள்ள அக இயக்கங்களைத் தியான நிலையிலே நிறுத்தல் போன்ற செயலைச் செய்வதே நன்மை பயக்கும். மற்றப்படி இந்தச் சுழுமுனை நடக்கும்போது எந்தச் செயலும் நன்மை தருவதில்லை என்றும், எல்லா முயற்சிகளும் தோல்வியே தரும் என்றும் சித்தர் இலக்கியத்திலே கூறப்பட்டிருக்கிறது.

சான்றாக, சுழுமுனை நடக்கும்போது ஒருவன் நம்மிடம் வந்து, தான் இழந்த ஒரு பொருள் மீண்டும் தனது கைக்குக் கிடைக்குமா என்று குறி கேட்பானானால், உறுதியாக அவன் கைக்குக் கிடைக்காது என்று சொல்லிவிடலாம்!

இடைகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று வகையான மூச்சு இயக்கத்தைப் பற்றியும், இவ்வாறு செயல்முறைகளைக் கூறுகிற சித்தர்கள், இந்த மூச்சின் இயக்கங்களைப் பற்றி மேலும் பல சுவையான செய்திகளை ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள்.

சரம் என்ற மூச்சு இயக்கம், மூச்சின் எந்தப் புழையில் ஓடுகிறதோ அந்தப் பாகம் பூரணம் என்றும், சரம் ஓடாத பாகம் சூனியம் என்றும் அழைக்கப்பெறுகின்றன! இப்படிப்பட்ட பூரண பாகத்தில் நின்று வழக்குப் பேசுகிறவர்களை அல்லது சண்டை போடுகிறவர்களை யாராலும் வெல்ல முடியாது.

நம்முடைய சுவாசம் இயங்குகிற நிலையைக் கொண்டு, நமக்குச் சூனியப் பக்கத்தில் ஒருவனை நிறுத்தினால் அவனை நாம் வெற்றி காணலாம்! அதாவது, சரம் ஓடாத பாகத்தில் ஒருவன் நின்று அல்லது ஒருவனை நிறுத்தி அவனோடு நாம் வாதம் செய்தால் நம்முடைய வாதமே வெல்லும்.

சித்தர்கள் சரத்தின் இயல்புபற்றி மேலும் சில இரகசிங்களைத் தங்கள் நூல்களிலே கூறியிருக்கிறார்கள். இவற்றில் சில அச்சேறாத சுவடிகள். அவற்றிலுள்ள சில செய்திகள் வருமாறு :

நான்கு திசைகளையும் எந்தெந்தத் திசை யாருக்கு உரியது என்பதை யோகக் கணக்குப்படி அறுதியிட்டு, அந்த அந்தச் சரம் நடக்கும்போது, அந்த அந்தத் திசையிலே முயற்சி செலுத்தினால் வெற்றி ஏற்படும் என்று சரயோகிகள் நமக்குக் கூறுகிறார்கள்.

மேற்குத் திசையும் தெற்குத்திசையும் சந்திரனுக்கு உரியவை; அதாவது இடைகலை என்ற சரத்துக்கு உரியவை.

வடக்கும் கிழக்கும் சூரியனுக்கு உரியவை; அதாவது பிங்கலை என்ற நாடிக்கு உரியவை.

பயணம் செய்யத் தொடங்கும் ஒருவன் சந்திரகலை நடக்கும் போது சந்திர திசையை நோக்கிச் சென்றால், அவன் செல்லுகிற காரியம் வெற்றிபெறும்.

சூரியகலை இயங்கும்போது சூரியனுக்குரிய திசையை நோக்கிச் சென்றால் அந்தப் பயணம் வெற்றி தரும்.

நீண்ட பயணம் செல்லும்போது சந்திரகலையில், புறப்படுகிற இடத்தை விடவேண்டுமென்றும், சூரியகலை நடக்கும்போது குறித்த இடத்தில் போய்ச் சேரவேண்டுமென்றும் ஏற்கனவே சித்தர்கள் சொல்லியுள்ளதை இங்கு நினைவுபடுத்தலாம். திசைகளைப் பற்றிய விதியானது இந்த விதிக்கு மேலும் ஒரு சிறப்பு விதியாகும்.

இன்றியமையாத பயணத்தின்போது உரிய கலையிலே சரம் நடக்க வில்லையென்றால், அந்தச் சரத்தை மாற்றுகிற முறையையும் சித்தர் கள் கூறியிருக்கிறார்கள்.

சரத்தை மாற்றக்கூடிய ஆற்றலை வளர்த்துக் கொள்ளாத சாமானிய மனிதர்கள், மாறாக வருகிற சுவாசத்தைச் சாதகமான பாகத்திலே இழுத்துச் சிறிதுநேரம் அதைச் சுவாசப் பைக்குள்ளே கட்டுப்படுத்தி நிறுத்தி, இரண்டு காலடி தூரம் நடந்துசென்று, பிறகு இயல்பான சரத்தை இயங்கும்படி செய்துகொள்ளலாமென்றும், ஓர் இரகசிய முறையினைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

சித்தர்கள் கூறுகிற சரம் பற்றிய இன்னொரு பெரிய இரகசியம் என்னவென்றால், மனித மூச்சுக்கும் ஐந்து பூதங்களுக்கும் உள்ள ஓர் இணைப்பாகும்.

மூக்கிலிருந்து வருகிற மூச்சு மூக்குத்தண்டைச் சார்ந்து வந்தால், அது பிருத்வி தத்துவமாகிய மண்ணின் கூறு ஆகும்.

கீழ்நோக்கி ஓடினால் தண்ணீரின் கூறு.

மேலே பாய்ந்து சென்றால் நெருப்பின் கூறு.

நாசித் தண்டுக்கு நேராக மறுபுறம் சார்ந்து வீசினால் காற்றின் கூறு ஆகும்.

இவ்வாறு நான்கு பாகங்களில் எந்தப் பாகமும் இல்லாமல் நான்கு பக்கமும் கலந்து மூச்சு நடந்தால், அது ஆகாயத்தின் கூறு என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இந்த ஐந்து பூதங்களின் கூறு பற்றிய இலக்கணம், இடப்பக்க மூச்சுக்கும், வலப்பக்க மூச்சுக்கும், இரண்டுக்குமே இவ்வாறு பொருந்தும்.

ஐந்து பூதங்களில் எந்தப் பூதத்தின் சரம் நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள இன்னொரு முறையும் இருக்கிறது. அது இன்னும் நுட்பமானது; கண்டுகொள்வதற்கு இன்னும் சற்றுக் கடினமானது. அது என்னவென்றால் பிருதிவியின் சரம் பொன்னிறம்; தண்ணீரின் சரம் வெண்மையானது; நெருப்பின் சரம் செந்நிறமானது; வாயுவின் சரம் கருமையாயிருக்கும்; ஆகாயத்தின் சரம் படிகம் ஆகும்.

சரத்தை உணர்வதற்கு இன்னொரு வழியும் சித்தர்களால் கூறப் பட்டுள்ளது. மண்ணின் கூறாகிய சரம் நடக்கும்போது எச்சில் முழுங்கினால், ஒருவகையான இனிப்புச் சுவை அதில் இருக்கும்.

தண்ணீர்ச் சரத்துக்குத் துவர்ப்புச் சுவை; நெருப்புக்கு உறைப்பு அல்லது அழற்சி; காற்றுக்குப் புளிப்பு; வானத்தின் சுவை கசப்பு.

சரத்துக்கு மற்றொரு இலக்கணமும் கூறப்படுகிறது. மண்ணின் தத்துவமாகிய சரத்திற்கு வடிவம் எண்கோணமாகும்; தண்ணீர்ச் சரம் அஷ்டமியாகிய எட்டாம்நாள் பிறை போன்றிருக்கும்; நெருப்பு முக்கோண வடிவம்; காற்று அறுகோண வடிவம்; வானின் வடிவம் வட்டமாகும்.

சரம் ஓடுகின்ற நீளத்தைப் பற்றியும் சித்தர்கள் ஒரு கணக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

மண்ணின் கூறாகிய பிருதிவியின் நீளம் பன்னிரண்டு அங்குலம் ஓடும்; தண்ணீருக்கு நீளம் பதினாறு அங்குலம்; நெருப்பின் நீளம் எட்டு அங்குலம்; காற்றுத் தத்துவமாகிய வாயு சரத்தின் நீளம் நான்கு அங்குலம்; ஆகாய தத்துவமாகிய வான சரத்தின் நீளம் ஓர் அங்குலம்.

சரத்தை அறிவதற்கு இப்படிப் பல இலக்கணங்களை நம்முடைய சித்தர்கள் கூறியதன் நோக்கம், இந்தப் பல முறைகளிலே ஏதாவது ஒன்றின்மூலம் சரத்தை உணர்ந்துகொள்ளலாம் என்பதேயாகும்.

உலகத்து மக்கள் அவரவருடைய ஆற்றலுக்கும் பாங்குக்கும் ஏற்ப இந்த முறைகளில் ஏதாவது ஒன்றைக் கையாண்டு, என்ன சரம் தமக்கு இந்த நேரத்தில் ஓடுகிறது என்பதை உணர்ந்துகொள்ளவே இந்த வழிகளைச் சித்தர்கள் மிகவும் விரிவாக விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

உலகச் செயல்களைச் செய்வதற்கு மட்டுமல்லாமல், ஆன்மப் பயிற்சியிலே ஈடுபடுவதற்குமே சரத்தை மேவி நாம் செயற்பட வேண்டியது அவசியம் என்ற காரணத்தினால், சரத்தை உணர்வதற் குரிய வழிகளையெல்லாம் சித்தர் இலக்கியம் இவ்வாறு விரிவான முறையிலே விளக்கிச் சொல்கிறது.

இன்னும் கூறப்போனால் இந்தச் சரத்தின் நிறங்களைப் பற்றி மேலும் பல விதிமுறைகளைச் சித்தர் இலக்கியம் வகுத்துச் சொல்லு கிறது. ஆன்மப் பயிற்சியிலே ஈடுபடுகிற மனிதர்களுக்கு ஆகாயத் தத்துவ மாகிய வான்சரம் மிகவும் முக்கியம் என்ற காரணத்தினால், விண் தத்துவத்துக்குரிய சரத்தின் தன்மைகளைப் பற்றி மிக விரிவான முறையிலே சித்தர்கள் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

பொதுமக்களுக்குரிய விதத்திலே நன்மை தீமைகளைப் பற்றிச் சொல்லப் புகுந்த சித்தர்கள், உலக இயலுக்கு மண்ணும் தண்ணீரும் உத்தமம் என்றும், நெருப்புச் சரம் மத்திமம் என்றும், வாயுவும் ஆகாயமும் தீது என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்தச் சரங்கள் நடக்கும்போது குறி பார்ப்பது, சோதிடம் சொல்லுவது, வருங்காலப் பலன்களைச் சரத்தின் தன்மைகளைக் கொண்டே எடுத்துச்சொல்வது ஆகியன பற்றிச் சித்தர் இலக்கியத்தில் மிக நீண்ட ஆய்வு சிறப்பான முறையிலே செய்யப்பட்டுள்ளது. இவற்றைப் பற்பல தலைப்புகளிலே தொகுத்து எழுதியுள்ள சுவடிகள் ஏராளமாக இருக்கின்றன.

சரம் பார்ப்பதற்குரிய நேரம் எது என்பதைப் பற்றிய விதிமுறை களைச் சொல்லுகின்ற சித்தர்கள், வைகறைப் பொழுதைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்கள்.

பொழுது விடிவதற்கு ஐந்து நாழிகை இருக்கும்போது எழுந்து, விதிமுறைப்படி தன்னிடம் என்ன சரம் ஓடுகிறது என்பதை ஒரு யோகி தெரிந்துகொள்கிறான். சட்டப்படி நாளும் கிழமையும் நட்சத்திர

நிலையும் இணைந்த கணக்கின்படி சரம் ஓடினால், உடம்பு நன்னிலையில் உள்ளது என்று கண்டுகொள்கின்றான். இதில் ஏதாவது மாறுதல் இருந்தால், உடல்நிலையில் ஏதோ தீது புகுந்திருக்கிறது என்பதை யோகி உணர்ந்துகொள்ள முடியும். அதோடு அன்று நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய முன் அறிவும், ஓரளவு, இந்தச் சரப் பார்வையினாலே தெரிந்துகொள்ளுகிறான் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

வளர்பிறைக் காலத்தில் அமாவாசை கழிந்த பிரதமையாகிய மறு நாளிலிருந்து மூன்று நாட்களுக்கும் சந்திர கலை நடக்கவேண்டும். அதாவது உதயத்திற்கு ஐந்து நாழிகை இருக்கும்போது சரம் பார்க்கப் புகுந்த யோகி வளர்பிறைப் பிரதமையிலும், துதியையிலும், திரிதியையிலும் சந்திரகலை ஓடுகிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுவான். அடுத்த மூன்று நாட்களில் சூரிய கலை, அதற்குப்பின் சந்திர கலையுமாக மாறிமாறி நடக்கும். இவ்வாறே தேய்பிறைக்கும் மற்றத் திதிகளுக்கும் இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது.

நட்சத்திரங்களுக்குரிய சர நிலையையும் சித்தர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், உரோகிணி, சதயம், உத்திரட்டாதி ஆகிய இப் பன்னிரண்டு நட்சத்திரங்களிலும் சூரியகலை நடக்கவேண்டும். மற்றப் பதினைந்திலும் சந்திரகலை நடக்கவேண்டும்.

இவ்வாறே கிழமைகளுக்குச் சரம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஞாயிறு, செவ்வாய், சனி, வியாழன் நான்கு நாட்களிலும் சூரியகலை உதித்தோட வேண்டும். திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் சந்திரகலை உதித்தோட வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு மாறாக ஒருவனுடைய சரம் உதித்து ஓடினால், ஞாயிற்றுக் கிழமையில் ஏற்படுகின்ற மாற்றம் வறுமை தரும். செவ்வாய் சண்டை உண்டாக்கும்; மரணத்திற்குக் கூட அது அறிகுறியாகும்; வியாழனில் ஏற்படுகின்ற விபரீதம் தன் தலைவனுக்குக் கேடு தரும். புதன் யோகி வாழ்கின்ற ஊரில் முக்கியமான ஒருவனுக்குக் கேடு ஏற்படுவதற்குரிய அறிகுறியாகும். திங்களில் உதிக்கின்ற மாற்றம் சுற்றத்தாருக்குக் கேடு என்பதை உணர்த்தும். வெள்ளிக்கிழமையில் நடக்கின்ற சரத்தில் பிழை ஏற்பட்டால் தான் ஊர்விட்டு ஊர் செல்ல நேரும். மனைவிக்குக் கெடுதி என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு சரம் பிழைபட நடந்தால், சித்தர்கள் இலக்கியங்களிலே அதைச் சீராக்குவதற்குரிய முறையும் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு சித்தர் இலக்கியம் யோகம் பயிலுகின்ற மாணவனுக்கு ஒரு பெரிய எச்சரிக்கையைத் தருகிறது. சூரியன் நடக்கவேண்டிய நாளில் சந்திரனும், சந்திரன் நடக்கவேண்டிய நாளில் சூரியனும் பிழைபட்டு நடந்து, இந்தப் பிழை ஒரு வாரம் முழுவதும் நடக்குமானால் உடம்புக்கு அழிவு உண்டாகிவிடும். அவ்வாறு ஏற்படாமல் கிழமை

திதி, நட்சத்திரம் ஆகிய சட்டங்களுக்கு உட்பட்டுச் சரம் நடந்தால், அந்த யோகியின் உடம்பு வயிரம் பாய்ந்து விளங்குமென்று கூறப் பட்டிருக்கிறது.

சரம் பார்க்கின்ற இந்த இலக்கணங்களையெல்லாம் இத்தனை விரிவாகச் சொல்லுகிற சித்தர்கள், சரம் பார்ப்பவனுடைய இயல்பை யும், சரத்தின் பயனையும், உலக சமுதாயத்திற்கு இந்தச் சரம் பார்க்கும் கலையினால் ஏற்படுகின்ற நன்மைகளையும், உறுதியோடு பேசியிருக்கிறார்கள்.

சரம் பார்ப்பவன் பரம் பார்ப்பவன் என்பது சித்தர்கள் வசனம் ஆகும். சரத்தின் கணக்குப்படி ஒருவன் தன்னுடைய மூச்சை நடத்தி வருவானானால், எந்தச் செயலும் தப்பாது என்றும், அவனைக் காண்போருக்கும், அவனோடு பழகுவோருக்குமே, எல்லா வெற்றி களும் கிட்டும் என்றும், சித்தர்கள் உறுதி கூறுகிறார்கள்.

அதோடு உடம்பிலிருந்து வெளியே வருகிற காற்று சிவம் என்றும், உள்ளே புகும் காற்று சக்தி என்றும் பேசப்படுகிறது.

சரத்தை விடுவது நஞ்சை உண்பது போலும் என்றும், சரத்தைக் கட்டுவது அமுதம் உண்பதாகும் என்றும் சித்தர்கள் சொல்லு கிறார்கள்.

சரம் உட்புகும்போது ஒருவன் நினைப்பதும் செய்வதும் நன்மை யாகும் என்றும், வெளியே செல்லும்போது காரியம் நடவாது என்றும் பலன் கூறப்பட்டிருக்கிறது.

சர நூலின் முடிந்த முடிவாக நம்முடைய சித்தர்கள் கூறுகிற வாக்குறுதி என்னவென்றால், சூரியன், சந்திரன், சுழுமுனை என்னும் மூன்று நாடிகளுக்குள்ளும் வாழ்வு, நிலைமை கேடு, என்கிற மூன்று பலன்களும் காட்டப்பட்டுள்ளன.

பிறக்கும் குலத்தை வைத்து ஒருவனுக்கு எவ்விதப் பெருமையும் இல்லை என்பது சித்தர்களின் வாக்காகும். சரத்தின் இயல்புகள் பற்றி நன்றாக அறிந்து, அவற்றுக்கு இசைந்த முறையிலே வாழ்வை நடத்து வோனே அந்தணன் என்றும், அவனே உலகத்திலுள்ள எல்லா உயிர் களுக்கும் நன்மை செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்ற பிரம்மஞானி என்றும், அவனே பரம்பொருளோடு இணைந்து வாழ்கின்ற அமரன் என்றும், சித்தர் இலக்கியம் எழிலோடு எடுத்து இயம்புகிறது.

★

## 22. அகப்பயிற்சியில் அரிய ஆற்றல்கள்

இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியில் கம்யூனிச நாடுகளில் நடைபெறுகின்ற மனத்தத்துவ ஆய்வுகளிலே சில சுவையான கண்டுபிடிப்புகளைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்கள் என்பதைப் பிறிதோர் இடத்திலே பார்த்தோம். இந்த மனத்தத்துவ ஆராய்ச்சியிலே மிகவும் சுவையான ஒரு பொருள் என்னவென்றால், மனத்தின் ஆராய்ச்சி எங்கே தொடங்குகின்றது, உடலின் ஆராய்ச்சி எங்கே முடிகின்றது என்று, வரம்பு செய்ய முடியாத நிலையில் உடம்பைப் பற்றிய ஆராய்ச்சி உள்ளத்தின் ஆராய்ச்சியாகவும், உள்ளத்தின் ஆராய்ச்சி உடம்பைப் பற்றிய ஆராய்ச்சியாகவும் விளங்குகின்றன!

இந்தச் சுவையான உண்மையைப் பார்க்கும்போது, சித்தர் இலக்கியங்களிலே உள்ள இதேபோன்ற ஒரு பேருண்மை நம் நினைவுக்கு வருகிறது. அதாவது சித்தர்கள் கூறுகின்ற தத்துவ வெளியீடுகளை நோக்கும்போது, உடம்பைப் பற்றிய உண்மைகள்தாம் இவ்வாறு உள்ளனவா, அல்லது இவை அனைத்தும் உள்ளத்தைப் பற்றிய உண்மைகளா என்று நாம் மலைக்கும்படியாகச் சில இரகசியங்களைச் சித்தர் இலக்கியங்களிலே காண்கிறோம்.

இந்த மலைப்புக்குக் காரணம் என்னவென்றால், சித்தர்கள் உள்ளத்தை இயக்குவதற்கு உடம்பையே கருவியாகக் கொண்டார்கள். அதுபோலவே உடம்பை இயக்குவதற்கு உள்ளத்தையே கருவியாகக் கொண்டார்கள்.

உள்ளம் என்ற நுண்பொருள் உடல் என்ற பருப்பொருளின் அக அமைப்பாக விளங்குவதால், ஒன்றை இயக்கும்போது மற்றொன்று இணைந்து இயங்குகிறது. எனவே சித்தர்கள் உள்ளத்தை இயக்குவதன் மூலம் உடம்பின் ஆற்றலை இயக்கினார்கள். அதுபோலவே உடம்பின் ஆதார நிலைகளை இயக்குவதன் மூலமாக உள்ளத்தின் ஆற்றல்களை இயக்கினார்கள்.

மின் ஆற்றல் ஒரு மின்கலத்திலிருந்து புறப்படுகிறது. மின்கலத்திலே சில நீர்ப்பொருள்களும் சில வேதியியற் கட்டிகளும் கிடக்கின்றன என்று வைத்துக்கொள்ளுவோம். இந்தப் பொருள்களின் வேதியல் வினைகளினால் மின்சாரம் பிறக்கிறது. மின்சாரம் பிறப்பதற்குக் காரணமாக அமைந்த பொருள்கள் கண்ணுக்குத் தெரிகின்ற பருப் பொருள்களே. ஆம், பருப்பொருள்களேயாம். ஆனால் அவற்றிலிருந்து தோன்றிவருகின்ற மின் ஆற்றலோ என்றால், கண்ணுக்குத் தெரியாத நுண் ஆற்றலாக விளங்குகிறது. இவ்வாறுதானே உடல்

என்ற பருப்பொருளின் ஆதாரநிலைகளாகிய மின்கலங்களிலிருந்து உள்ளத்தின் ஆற்றலாகிய நுண்ஆற்றல் தோன்றுகிறது. எனவேதான் உடம்பை இயக்குவதன்மூலம் உள்ளத்தை இயக்க முடிகிறது.

கண்ணுக்குத் தெரியாத மின்ஆற்றல், கண்ணுக்குத் தெரிகின்ற வெளிச்சமாகப் பருப்பொருளிலே எரிவதையும் காண்கிறோம். எப்படி? மின்குமிழ் கண்ணுக்குத் தெரிகிறது. அதற்குள்ளே சுடர்கின்ற மின்ஆற்றலின் விளைவாகிய ஒளியும் நம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் மின்ஆற்றல் நுண்பொருளாக நமது கண்களுக்குப் புலனாகாத ஒரு சக்தியாக இயங்குகிறது. மின்ஆற்றலை இயக்குவதன் மூலம் மின்குமிழை (Bulb) எரியச் செய்ய முடிகிறது; வானொலிப் பெட்டியை ஒலிக்கச் செய்யமுடிகிறது; தொலைக்காட்சியை இயக்க முடிகிறது. இதுபோலவே உள்ளத்தின் ஆற்றலை இயக்கி, உடலின் மைய நிலையங்களை இயங்கும்படி செய்கின்ற இரகசியத்தைச் சித்தர்கள் கையாண்டார்கள். இந்த இரகசியங்களை அவர்களுடைய இலக்கியங் களில் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

உள்ளத்தின் ஆற்றலைக் கொண்டு, இந்த உடம்பை, நிலத்தி லிருந்து ஒரு முழம் அல்லது இரண்டு முழம், அதற்கு மேலும்கூட, எழுப்பு கின்ற ஒரு சாதனை பற்றிச் சித்தர் இலக்கியம் பேசுகிறது. அதாவது அகஆற்றலை இயக்குவதன் மூலம், பருப்பொருளாகிய உடம்பை, நிலத்திலிருந்து மேலே தூக்கிவிடுகிறார்கள் சித்தர்கள். இந்த ஆற்றலைப் பற்றி அண்மைக் காலத்திலே ரஷ்யப் பல்கலைக் கழகங் களில் சில சோதனைகள் செய்திருக்கிறார்கள். லாவிடேஷன் (lavitation) என்று இந்த ஆற்றலை அவர்கள் அழைக்கிறார்கள். சில ரஷ்யர்கள் இந்த ஆற்றலைக் கையாண்டு, நிலத்திலிருந்து சில அடிகள் உயரத்திற்கு உடம்பைத் தூக்கி நிறுத்தி, சில மணித்துளிகள் அப்படியே விண்வெளியிலே அமர்ந்திருக்கக் கூடிய ஆற்றலை வளர்த்துக் கொண் டிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி நூல்கள் நமக்குக் கூறுகின்றன. இந்த ஆற்றலை அவர்கள் இக்காலத்து அறிவியல் சோதனைகள் மூலம் மெய்ப்பித்துக் காட்டி வருகிறார்கள். இந்தச் சோதனைகள் சித்தர் களின் சாதனைகளுக்கு மேலும் ஓர் உறுதிப்பாடாக அமைந்திருக் கின்றன.

லாவிடேஷன் என்ற இந்த ஆற்றலை இன்னும் விரிவுபடுத்தும் போது, இந்த உடம்போடு வான வெளியிலே உலவுகின்ற ஆற்றலும் கைவருகின்றது என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இந்த ஆற்றலை அக ஆற்றல்களின் பயிற்சியினால் வளர்த்துக்கொள்ளுகின்ற முறை களைப் பற்றியும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

கண்பார்வையின் மூலமாகவே ஒருவரை மயக்க நிலையில் ஆழ்த்தி விடுகின்ற ஹிப்நாடிச நிலை என்னும் ஆற்றலை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிறோம். அதே சமயம், உடம்பில் ஊசியின் வாயிலாக ஒரு மருந்து செலுத்தியோ, அல்லது வாயால் ஒரு மருந்தை உட்கொள்ளும்படி செய்தோ, ஒருவரை மயக்கநிலைக்கு உள்ளாக்கி விட முடிகிறது!

அதுபோலவே சித்தர்கள் கமனஒடி மூலமாகவும் இந்த உடம்பைக் காற்றிலே பறந்து செல்லக்கூடிய வல்லமை படைத்ததாகச் செய்துவிட முடியும் என்றும் கூறுகிறார்கள்.

மருந்தின் மூலம் இந்த ஆற்றலைச் செய்வது உடம்பின் உறுப்புக் களைக் கொண்டு உள்ளத்தை இயக்குகிற முறையாகும். இந்த மருந்து கள் இன்றியே, உள்ளத்தின் ஆற்றல் மூலமாகவே அகத்தின் வல்லமை யினால், உடலின் உறுப்புகளை இயக்கி, இதே ஆற்றல்களைச் செய்யவும் முடியும், ஹிப்னாடிஸம் போன்று! எனவேதான் உடம்பைக் கொண்டு உள்ளத்தையும், உள்ளத்தைக் கொண்டு உடம்பையும் இயக்குகிற பற்பல முறைகளைப் பற்றிச் சித்தர் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. இவை அனைத்தும் நடைமுறையில் இயலக் கூடியவைதான் என்பதற்கு இன்றைய விஞ்ஞானமும் சான்று பகர்கிறது.

உடம்பை அந்தரத்திலே இயக்குகிற ஆற்றலைப் போல, இன்னொரு நுட்பமான பெரிய ஆற்றல், மனத்தின் எண்ணங்களை இயக்குகிற பேராற்றல் ஆகும். சித்தர் இலக்கியங்களிலே உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளுக்கெல்லாம் சில நிறங்களைக் குறிப்பிடு கிறார்கள் ஞானிகள். சான்றாக, வெகுளி என்ற உணர்ச்சிக்கு நல்ல சிவப்பு நிறத்தையும், பொறாமை என்ற உணர்ச்சிக்குக் கப்பிய பச்சை நிறத்தையும் கூறுகிறார்கள். தூய எண்ணங்களுக்கு மங்கிய செந்நீல நிறத்தைப் பற்றியும் இவர்களின் இலக்கியம் பேசுகிறது. சில ஆண்டு களுக்கு முன்புவரை இவை மூட நம்பிக்கைகளோ என்றுகூட அறிவியல் வல்லுநர்கள் ஐயப்பட்டு வந்தார்கள். ஆனால் அண்மைக் காலத்திலே வெளிநாடுகளிலே முன்னேறி வருகின்ற க்ரீலியன் போடாகிரபி என்ற ஒருவகைக் கண்டுபிடிப்பைப் பற்றி நீண்ட குறிப்புகள் வெளிவந் துள்ளமை பற்றி ஏற்கனவே பார்த்தோமல்லவா? ஒருவருடைய முகத் தையும் உருவத்தையும் புகைப்படக் கருவியிலே நாம் படம் பிடிப்பது போலவே, அவருடைய உள்ளத்தின் உணர்ச்சிகளையும் படம் பிடித்து விடலாமென்று கண்டுபிடித்து, அந்த மனப்படங்களை எடுக்கக் கூடிய க்ரீலியன் காமரா என்ற புகைப்படக் கருவியை ரஷ்யாவிலே கண்டுபிடித் துள்ளார்கள். எதிரிலே உள்ள மனிதர் தமது மனத்தில் என்ன எண்ணங் களோடு இருக்கிறார், அவர் நமக்கு நண்பரா அல்லது எதிரியாகிய வஞ்சகரா, என்று இந்தக் கருவியைக் கொண்டு கண்டுபிடித்துவிடலாம். அந்த மனிதரின் உருவத்தைப் படம் எடுப்பதுபோலவே, இந்தக் கருவி, அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் ஓடுகின்ற எண்ணங்களைப் பற்பல வண்ணங்களிலே படம் எடுத்துவிடுகிறது. வஞ்சகத்தோடு அவர் இருக்கிறாரா, அவருடைய உள்ளத்திலே சதித்திட்டங்கள் ஓடு கின்றனவா என்பதையெல்லாம் அந்தந்த நிறங்களின் கோடுகளைக் கொண்டு தெளிவாகக் கண்டுபிடித்துச் சொல்லிவிட முடிகிறது. இத்தகைய புதுமையான புகைப்படக் கருவியைக் கண்டுபிடித்துள்ள நவீன விஞ்ஞானம், நம்முடைய சித்தர் இலக்கியங்களிலே உள்ள உணர்ச்சிகளும் அவற்றின் நிறங்களும் பற்றிய பேருண்மைகளை மெய்ப்பித்து உறுதி செய்கின்றன.

இன்றைய அறிவியல் வல்லமைகள் இன்னும் வளர வளரச் சித்தர்கள் கூறுகின்ற பரகாயப் பிரவேசம் பற்றியும, ஒரு விநாடியில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் சென்றுவிடக்கூடிய அணுப் பயண ஆற்றல் பற்றியும் மேலும் நமக்கு விளக்கமாகலாமென்று எதிர்பார்க்க இடமளிக்கிறது.

இறந்த ஓர் உடலுக்குள்ளே சித்தர்கள் தங்கள் உயிரைச் செலுத்தி, அந்தப் புதிய உடம்பில் உலவி வருவதும், தங்கள் உடம்பை ஒரு நொடியில் காற்றணுக்களாக மாற்றி, விண்வெளியிலே கலந்து, பின்னர் குறிப்பிட்ட இடத்திலே, மீண்டும் அந்த அணுக்களை உடம்பின் பரு அணுக்களாக ஒன்றுகூட்டிக் கண்முன் முன்போலத் தோன்றுகின்ற மாபெரும் சித்தியாகிய வல்லமையானது, இப்பொழுது நாம் முழுதும் அறிந்துகொள்ள முடியாமல், அதிசயத்தோடு வியக்கக்கூடிய ஓர் அற்புதமாகவே சித்தர் இலக்கியத்தில் காண்கிறோம்.

இத்தகைய சித்திகளைச் செய்யக்கூடிய சிலர் நம்மிடையே இன்றும் வாழ்ந்துவருகிறார்கள். அறிவியல் ஆய்வுகள், 'சைச்கோடிரானிக்ஸ்' போன்ற துறைகளிலே, இவர்களைக் கொண்டு, மேலும் சோதனைகள் நடத்தி வருங்காலத்தில் முன்னேறினால், மேலும் பல சான்றுகள் கிடைத்து, இத்தகைய அடிப்படையான ஆற்றல்களின் நுட்பங்களுக்கு இன்றைய மொழியிலே பல அறிவியல் விளக்கங்கள் நமக்குக் கிடைக்கும் என்று நாம் உறுதியோடு நம்பலாம்.

★

# 23. சித்தர் தத்துவத்தின் ஞானச் செம்பொருள்

சித்தர்களின் இலக்கியத்தைப் பலநூறு ஆண்டுகளாகப் பண்டிதர்கள் ஆராய்ந்து மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

உலகநாடுகள் அனைத்திலுமே சித்தர்கள் தோன்றி ஞானக் கல்வியைப் புகட்டியிருப்பதால் இந்த ஆராய்ச்சிகள் எல்லா மொழியிலும் நடைபெற்றுள்ளன.

நம்முடைய பாரத நாட்டில் திருமூலர் போன்ற மகான்களின் காலத்தில் பண்டிதர்களின் மொழிகளாகப் பதினெட்டு மொழிகள் வழக்கத்தில் இருந்தமையும், இந்தப் பதினெட்டு மொழிகளும் தேவ பாஷைகள் அல்லது இறைமொழிகள் என்று அழைக்கப்பெற்றமையும் ஏற்கனவே கண்டுள்ளோம்.

பழைய சித்தர்களின் காலத்தில் தமிழும் வடமொழியும் இணைந்து ஆராயப்பெற்று வந்ததன் காரணமாக, நமது தமிழகத்துப் பண்டித ஆய்வுகளிலே தத்துவச் சொற்கள் வடமொழியும் தமிழும் கலந்து ஒரு விரவலாகவே வழங்கி வருகின்றன. ஆய்வு என்ற முறையிலே இந்த இரண்டையும் ஆழ்ந்து நோக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. அப்படிப் புகுந்து பார்த்தோமானால், சித்தர்களுடைய ஞானக் கல்வியின் பல நுட்பங்களையும் நம்மால் காணமுடிகிறது. மேலும் இத்தனை ஆய்வுச் சொற்களையும் நுணுகிப் பார்த்தாலொழிய, சித்தர்களின் தத்துவ ஞானத்தை முழுமையாக நாம் காண்பதற்கில்லை. எனவே சித்தர் இலக்கியத்தில் கூறப்பெற்றுள்ள ஞான அனுபவங்களின் செம்பொருளை, இந்த இரண்டு மொழிகளின் துணை கொண்டு நாம் அணுகவேண்டும். அப்படி அணுகும்போது, பல அரிய தத்துவச் செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றை ஒருவாறு தொகுத்துச் சொல்ல முனைகிறேன்.

பதியாகிய இறைவன், பசுவாகிய சீவான்மா, பாசமாகிய பிணைப்பு ஆக மூன்றும், நிலையான பொருள்கள் ஆம். இந்த நிலையான பொருள்களையும், இவற்றைச் சூழ்ந்துள்ள நிலையற்ற பொருள்களையும் ஆராய்ந்து மாணவருக்குப் புகட்டினார்கள் ஞானிகள். இதை 'விவேகம்' என்று பண்டிதர்கள் அழைத்தார்கள்.

உலகச் செல்வங்களில் ஏற்படுகிற ஆசையை விராகம் அல்லது நிராசை என்று அழைத்தார்கள்.

இந்த இரண்டோடு, சமாதி நிலையும், முத்தியை விரும்புகிற இச்சையும் சேர்த்து, இந்த நான்கையும் சாதன சதுட்டயம் என்று பண்டிதர்கள் பெயர் சூட்டினார்கள்.

இவற்றிற்கு உரிய விதிமுறைகளை ஆராய்ந்து சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்று ஆறாகப் பிரித்தார்கள்.

சமம் என்பது உடம்பிற்குள் செயல்புரிந்து அகக் கருவிகளைத் தண்டித்தல் அல்லது ஆளுதலாம். இதை அகக்கரண தண்டம் என்று அழைத்தார்கள்.

தமம் என்பது, புறக் கருவிகளாகிய பத்தையும், தசேந்திரியங்களை யும், கட்டுப்படுத்தி ஆளுதலாகிய புறக்கரண தண்டம்.

விடல் என்பது, உழலச் செய்கிற ஆசைகளை, உலக இச்சைகளை, ஒடுக்குதல் அல்லது பற்றுவிடல் என்பதாகும்.

சகித்தல் என்பது, இன்பம், துன்பம் இரண்டையும் ஒப்பாகக் கருதிச் சலனமற்ற நிலையிலே அனுபவித்தல்.

சமாதானம் என்பது ஞானக் கல்வியினை விருப்பத்தோடு கற்றல்.

சிரத்தை என்பது குருநாதனிடத்தும் ஞானக் கல்விப் பயிற்சியிடத்தும் ஆர்வம் செலுத்துதல்.

சமாதி என்பது சித்தர்கள் காட்டுகிற மேன்மையான நிலையிலே ஒன்றி நிற்பது.

இப்படி விரிவாகப் பகுத்துச் சொல்லப்பெற்ற சாதன சதுட்டயம் என்பது, நிலையற்ற பொருள்களைக் கண்டு தெளிந்து, நிலையான பொருள்மீது மனம் சார்வதே ஆகும்.

இந்தச் சாதனங்களின் சிறப்பையும், இவற்றின் பயனையும் மேலும் விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

மெய்யுணர்வை அடைதற்கு இச் சாதனங்கள் இன்றியமை யாதனவாம். இந்த வழிமுறைகளைப் பயின்றவர்களுக்கு மெய்ஞ் ஞானம் உதிக்கும் என்றும் முன் பிறவிகளின் பிணைப்பிலிருந்து தெளிவு பெற்றுப் பிறப்பிறப்புச் சுழலிலிருந்து விடுதலை கிடைக்கும் என்றும், சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகைய ஞானக் கல்வி பெறுவதற்குமே திருவருள் துணை செய்ய வேண்டும் என்பது சித்தர் வாக்கு.

'பக்குவி' என்ற சொல்லுக்கு இலக்கணமாக விளங்கும் ஒரு மாணவனுக்கே இத்தகைய ஞானம், குருநாதனால் வழங்கப் பெறுகிறது என்று சித்தர் இலக்கியம் மொழிகிறது. உண்மையில் அவ்வாறு தீய ஆற்றல்களிலிருந்து விடுபட்டு நிற்கிற ஒரு சீடனுக்கு ஆசிரியன் தரிசனம் தருகிறான் என்றும், ஆசானே அந்த மாணவனின் முன்பு வந்து தோன்றுகிறான் என்றும் பல பாடல்களில் சித்தர்கள் நமக்கு அறிவித்துள்ளார்கள்.

இத்தகைய மாணவனுக்கு இத்தகைய குருநாதன் முதலாவது பாடமாக உணர்த்துகிற பேருண்மை என்ன? தான் என்பது உடல் அன்று; இந்த உடலுக்குள் நிற்கிற மற்றொன்று என்பதே. அதாவது தான் என்பது தேகமில்லை; தேகியே!

இது பாம்பில்லை, கயிறே என்று தெளிவது போலவும், இது மகனன்று, குற்றியே என்று கண்டுகொள்வது போலவும், மெய்மை ஆழ்ந்து காண்பதற்குரிய ஞானப் பார்வையை ஒரு மாணவனுக்கு நல்குகிறான் குருநாதன்.

இந்த ஞானக் கண் நல்குதலாகிய பயிற்சியே 'உபநயனம்' அல்லது துணைவிழி நல்கல் என்பது. இந்தக் கண்கொண்டு பார்க்கும்போது உயிரும், உயிருக்குயிராக இருப்பதும் இந்த உடம்பன்று; இந்த உகலமன்று; ஐந்து பூதங்களும் அல்ல; பரம் பொருளே என்று மாணவன் தெளிவு பெறுகிறான்.

இந்தத் தெளிவை வடமொழியில் 'அபவாதம்' என்று ஞான நூல்கள் அழைக்கின்றன.

ஒன்றுக்குள் ஒன்று நிற்கிற நிலையே படைப்பின் தத்துவமாகும். ஆடையும் நூலும், நகையும் தங்கமும், பாவையும் களிமண்ணும் போலே காரிய காரணங்கள் அமைந்து நிற்கின்றன.

'பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்' என்றும், 'மரத்தை மறைத்தது மாமத யானை' என்றும் திருமூலர் பாடுகிறார் அல்லவா? இந்த ஒன்றுக்குள் ஒன்று மறைந்து நிற்கும் பேருண்மையை, மயக்கம் நீங்கித் தெளிவாகக் காண்கிற கல்விக்கு, 'அபவாத உத்தி' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த உத்தியே தனக்குள் தலைவனைக் காட்டுகிற சித்தர்களின் ஞானப்பயிற்சி முறையாகும்.

இருட்டிலே பொருள் தெரிவதில்லை. அவ்வாறு தனக்குள் நிற்கும் தலைவனையும், உலகெங்கும் பூதங்களுக்குள் மறைந்து நிற்கும் பரம் பொருளையும், காணமுடியாதபடி நமது புறப்பார்வையை மறைக்கின்ற ஆற்றலுக்கு, ஆவரண சக்தி என்று பெயர் தந்துள்ளார்கள்.

இந்த இருளை விலக்கி, மெய்யை மெய்யாகக் காண்கிற கல்வியை ஆசிரியன் மாணவனுக்கு அருகிருந்து ஊட்டுகிறான். இப்படி மாணவனும் ஆசிரியனும் நேர்முகமாக இருந்து, பயிற்சி நிகழ்கிற இந்த ஞானக் கல்வியின் பாடத் திட்டத்தைத் தீட்சைமுறை என்று அழைக்கிறார்கள்.

இவ்வாறு தீட்சை பெறும்போது, அந்தச் சீடன் தனது ஆசானுடன் இரண்டறக் கலந்து ஒன்றிவிடுகிறான். பேரின்பமாகிய இறையனுபவம் மாணவனுக்குக் கிட்டுகிறது. இதைச் 'சமாதிகூடல்' என்றும், 'சுவானுபூதி' அல்லது 'சுவானுபூதி மயமாதல்' என்றும், 'தன்னிலைப் பேரின்பம்' என்றும், பல மொழிகளிலே சித்தர் இலக்கியம் அழைக்கிறது.

குருவினுடைய நேர்முகக் கல்வியின் வாயிலாக, மாணவன் சமாதி கூடித் தன்னிலே தன்னைக் கண்டு களிக்கிற அந்தச் சுயமான அனுபவத்தைத் தாண்டவ மூர்த்தி சுவாமிகள் என்ற மகான் பாடுகிறார்:

அனுபவா னந்த வெள்ளத்
தழுந்தியே அகண்ட மாகித்
தனுக ரணங்க ளாதி
சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக
மானசற் குருவும் காண
நனவினிற் சுழுத்தி யாகி
நன்மகன் சுபாவ மானான்

இந்தப் பாடலுக்குப் பின்வருமாறு அருணாசல சுவாமிகள் எழுதியுள்ள உரை விளக்கம் வருமாறு:

"சுவானுபவமாகிய நிரதிசயானந்த சமுத்திரத்தில் மூழ்கி, அண்டாகாரமாய்த் தேகேந்திரிய அந்தக்கரணம் முதலிய அனைத்தும் நசித்து, சின்மாத்திரானுபவத்தினால் மனம் பூரணமாகி, பூரணமே திருவுருக்கொண்ட ஆசிரியரும் பார்க்கும்படி நனவிற் சுழுத்தியை அடைந்து, நற்சீடன் தனது இயல்பான ஸ்வரூபமாக விளங்கினான்"

மேலே கண்ட சுவாமிகளின் உரை விளக்கமானது, வடமொழியும் தமிழும் கலந்து, பழைய பண்டிதர்களின் ஆய்வு முறையிலே, சித்தர்களின் ஞான தத்துவப் பயிற்சி முறை எத்தகைய குறிக்கோளுடன் தோன்றியது என்ற சிறப்பையும், சித்தர் இலக்கியத்தில் காண்கிற பயனையும் சுருக்கமாக எடுத்தோதுவதாகவே திகழ்கிறது.

இப்படிப்பட்ட ஞானக் கல்வியைக் குருமுகமாகக் கற்றுத் தேர்கிற ஒரு சீடனுக்கு, அடிக்கடி சில தடைகள் தோன்றும் என்பதைக் கைவல்லிய நவநீதம், ஞானக்கும்மி, முனிவர் போதம், சித்தர் கோவை போன்ற ஞான நூல்கள் அடிக்கோடிட்டுக் கூறுகின்றன. அந்தத் தடைகளிலே மூன்று முக்கியமானவை.

மூன்று தடைகளிலே முதலாவது தடை, அறியாமை அல்லது அஞ்ஞானம் என்பது. இது மனத்தின் ஒருமுக முனைப்பை மறைப்பதோடு வேறுபாடும் காட்டும்.

இரண்டாவது தடை, ஐயம் அல்லது சந்தேகம். இது ஆசானுடைய உபதேச உண்மையை நம்ப ஒண்ணாமல், சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கும். பாடத்தில் ஏற்படுகிற ஐயங்கள் தவிர, ஆசிரியனுடைய மாட்சியிலேயே மாணவனை ஐயப்பட்டுக்கொள்ளும்படி செய்யும்.

மூன்றாவது இடையூறு, 'விபரீதம்' என்று அழைக்கப்படுகிறது. உலகத்தை நிலையானது எனவும், உடலே நான் எனவும் மயக்கம் உண்டாக்குகிற பெரிய தடை இதுவேயாகும்!

இந்த மூன்று தடைகளையும் கடந்து ஞானச் செம்பொருளின் வழியிலே தத்துவக் காட்சிகளை மேலே மேலே கண்டுகொண்டே, மாணவன் முன்னேற வேண்டும் என்று சித்தர் இலக்கியம் சீடர்களுக்கு அறிவுரை சொல்கிறது.

★

# 24. ஆசானின் பெருமை

சித்தர் இலக்கியங்களிலே மிகவும் முக்கியமான பெருமையை வகிக்கும் உயர்வைப் பெற்றுள்ளவர் குரு அல்லது ஆசான் ஆவார். இந்த ஆசான் என்னும் சற்குரு, இரகசியங்களைச் சித்தர் மரபிலே நின்று கற்பிக்கிற வகைகள் நான்கு ஆகும்.

1. வெளிப்படையாக உடம்பின் இயல்புகளைப் பொது நோக்கிலே சொல்லி உள்ளம், உயிர், ஆகிய இரண்டன் தன்மைகளையும் எல்லாருக்கும் புரிகிற மொழிகளிலே பேசுவார்கள். இது ஒரு முறை.

இந்த முறையிலே குறிப்பிடுகிற கருத்துக்களெல்லாம் பொதுவான வகையில், பொதுமக்களுக்கு அன்றாட வாழ்விலே பயன்படக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். சான்றாக, இந்த உடம்பை நன்றாகப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லி, அதற்குரிய காரணம் இந்த உடம்புக்குள்ளே உத்தமனாகிய இறைவன் வாழ்கிறான் என்று சொல்வார்கள். சாதாரண மனிதர்கள் வாழ்கின்ற ஒரு வீட்டையே சுத்தமாகவும், துப்புரவாகவும், திருடர்கள் புகுந்துவிடாதபடியும் பாதுகாக்க வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. இந்நிலையிலே கடவுள் வாழ்கிற நுட்பமான வீட்டை, இன்னும் எவ்வளவு மேன்மையாகப் பாதுகாக்க வேண்டும் என்பதை ஞானிகள் வற்புறுத்திக் கூறுவார்கள்!

உள்ளம் என்பது மிக மிக மென்மை பொருந்திய ஓர் அறை ஆகும். அந்த அறைக்குள்ளே அன்னிய ஆற்றல்கள், தீய சக்திகள், புகுந்து விடாதபடி பாதுகாக்க வேண்டுமென்பதற்காக, ஒழுக்கம் உடைமை போன்ற சில மன நெறிமுறைகளை ஞானிகள் எடுத்துக் கூறுவார்கள். இது உள்ளம் என்ற அகவீட்டைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிற பகுதியாகும். இதைச் சொல்லும்பொழுது உத்தமனாகிய இறைவன் இந்த உடம்பைத் தன்னுடைய வாசநிலையமாக வைத்துக்கொண்டு இங்கே வாழ்கிறான்; எனவே, இந்த உடம்பாகிய கோயிலை இறைவன் வாழ்வதற்குரிய பரிசுத்தமும், புனிதமும் நிரம்பிய மகத்தான கோயில் போன்று பாதுகாக்க வேண்டுமென்று, அழுத்தம் திருத்தமாகச் சித்தர்கள் கூறுவார்கள். இது பொதுமுறையில் சித்தர்கள் கூறுகிற பாங்கு.

2. உடம்பையும் உள்ளத்தையும் பாதுகாப்பதற்காக என்னென்ன செயல்களை நாம் செய்யவேண்டும், எவற்றை நாம் தவிர்க்கவேண்டும் என்று உடன்பாட்டு முறையிலும், எதிர்மறையிலும் பொதுவான

சொற்களிலே சித்தர்கள் எடுத்துக் கூறுவார்கள். இது இரண்டாவது பாடமுறை!

பொய் கூறாமை, புறங்கூறாமை, பிறர் மனை நயவாமை, தீய எண்ணங்களுக்கு இடம் கொடாமை ஆகியவற்றை எதிர்மறையிலே சொல்வார்கள். இவற்றைச் செய்யாதீர்கள் என்பதற்கு அவர்கள் பற்பல உவமைகளும், சான்றுகளும் கூறி ஆணி அடித்தாற்போல் அறிவுறுத்துவார்கள்.

இவ்வாறே உண்மை பேசுங்கள் என்றும், நல்ல பழக்கங்களை நீங்கள் வழுவாமல் கடைப்பிடியுங்கள் என்றும், உடன்பாட்டிலே பொதுவான சொற்களிலே ஞானிகள் கூறுவது உடன்பாட்டு முறையாகும்.

3. சித்தர்கள் கூறுகிற மூன்றாவது கல்வி முறை, இரகசியங்களை இரகசிய மொழிகளிலே கூறுவதாகும்.

உள்ளத்தின் உள்ளே மிக மிக ஆழமான ஓர் இடத்திலே பேராற்றல்கள் செயற்படுவதை 'இருட்டறை மூலை' என்று கூறுவார்கள். உயிரைப் பற்றிச் சொல்லும்போது 'குருட்டுக் கிழவன்' என்பார்கள். உள்ளத்தைக் 'குமரி' என்றும், 'இளைஞன்' என்றும், வயதாகாத அனுபவமில்லாத 'பசலை' என்றும், பற்பல உருவக மொழிகளிலே பேசுவார்கள்.

இவற்றைப் போலவே பல கதை வாயிலாகவும் ஆழமான உண்மைகளை ஆழமான பாங்கிலே வெளியிடுவார்கள். இது மூன்றாவது முறை.

4. சித்தர்கள் உபதேசங்களிலே நான்காவது பாடமுறை எப்படியென்றால், இந்த உண்மைகளையெல்லாம், நிகண்டிலே சொற்பொருள் கண்டுவிடுவதால் மட்டும் புரிந்துகொள்ள இயலாது என்று சொல்லி, இந்த நுட்பங்களை அனுபவ சீலனாகத் திகழ்கின்ற ஓர் ஆசான் மூலமாக, நேரிலே கேட்டுத் தெரிந்து பயிலுங்கள் என்று கூறுவார்கள்.

இந்த நான்கு முறைகளிலுமே மிகவும் முக்கியமான பகுதி, இந் நான்காவது முறையில் அமைந்த நேர்முகநெறியை வலியுறுத்தும் பகுதியாகும். இந்தப் பகுதி சித்தர் இலக்கியத்திலே மிகவும் முக்கியமான பகுதியாகும்.

சித்தர் இலக்கியத்தில் இந்தப் பகுதி முக்கியம் பெற்று விளங்குவதால் ஞான குருவாகிய பேராசானுக்கு மிகமிக முக்கியமும் பெருமையும் கொடுத்து ஞானிகள் பேசுவார்கள்.

மறைசொலும் பொருள்
மனித வேடமாய் வந்தது

என்பார்கள். அதாவது வேதங்கள் சிறப்பித்துப் பாடுகின்ற இறைவனே குருவின் வடிவிலே வந்து தோன்றி இருக்கிறான் என்பார்கள்.

பொருள் என்னவென்றால் குருவை இறைவனாகப் பார்க்க வேண்டும் என்பதாகும். இறைவன் நம்மோடு பேசாத கடவுள். குருவோ என்றால், நம்முடன் பேசுவதோடு நமக்குப் புரியாத நுட்பங்களையெல்லாம் நமக்குப் புரிகின்ற மொழிகளிலே எடுத்து விளக்குகின்ற பரம்பொருளாகும்.

குருவை இறைவனாகக் காணவேண்டுமென்ற இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகவே, இறைவனுக்குக் குருவின் வடிவம் தந்து, இறைவனை ஆசிரியனாக வழிபடுகிற ஒரு மரபு, நம்முடைய தமிழகத்திலே தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது.

முருகப் பெருமானை குருசுவாமி என்றும், குருநாதன் என்றும் வழிபடுகிறோம். இவ்வாறே சிவபெருமானைத் தட்சிணாமூர்த்தி என்ற வடிவிலே நாம் வழிபடுகிறோம். கீதையை உபதேசித்த கண்ணனை ஆசிரியனாக வழிபடுகிற மரபும் இந்த வழிபாட்டு முறையைச் சார்ந்ததுதான்.

உலகச் சமயங்கள் பலவற்றிலும் இறைவனைக் குருவின் வடிவிலே வழிபடுகின்ற சடங்குமுறை தோன்றியதன் நுட்பமே இந்தக் கருத்தால் தான் என்று கொள்ளல் வேண்டும்.

சிவனை வழிபடுவதனால் பயன் இல்லை என்றும், சிவனை நமக்குக் காட்டுகின்ற குருவை வழிபட்டால் போதுமென்றும், அவ்வளவு அழுத்தந் திருத்தமாகத் திருமூலர் தமது திருமந்திரத்திலே பாடியிருக்கிறார். இதன் நுட்பமும் குருவின் பெருமையை வலியுறுத்துகின்ற பாங்கே யாகும்.

சித்தர் இலக்கியங்களிலே எந்த ஞானியினுடைய படைப்பை ஆராய்ந்து பார்த்தாலும், குருவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம் ஈடு இணையற்ற முறையிலே விளங்குகிறது.

குரு என்பவன் நெறியைக் காட்டுபவன் என்பதோடு கூட, நெறியிலே நம்மை நடத்திச் செல்கிறவன் என்பதையும் சித்தர்கள் வலியுறுத்துவார்கள். எனவே, குருவைத் தேர்ந்தெடுக்கும் முன்பு, மிகவும் ஆராய்ந்து உண்மையைத் தெரிந்து, மெய்யான குரு என்பதை நன்கு தெளிந்து, அதன் பிறகே அவனை ஞானகுரு என்று பற்றிப் பிடிக்கவேண்டும் என்பதனை, எல்லாச் சித்தர்களும் நமக்கு வலியுறுத்தியிருக்கிறார்கள்.

குரு இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பது என்பது வெளியிலும், உடம்புக்குள்ளும் என்ற பரிபாஷையிலே சித்தர்கள் பேசுவார்கள். வெளியே உள்ள குரு நம்முடைய உடம்புக்குள்ளே இருக்கிற குருவை நமக்குக் காட்டுகிறான் என்பார்கள் சித்தர்கள். எனவே அப்படிப் பட்ட தகுதிகள் வாய்ந்த மாபெரும் ஞானியினையே, குருவாக நாம் கொள்ளவேண்டும் என்பதனை, சித்தர் இலக்கியங்களின் அடிநாதமான எச்சரிக்கை என்று நாம் கொள்ளவேண்டும்.

உபநிஷத்தில் ஓர் அரிய வாக்கியம் வருகிறது :

அந்தேனஇவ நீயமானா யதாந்தாகா
தந்த்ரம்ய மானாஹா பரியந்தி மூடா

என்றும்,

ஜங்கன்ய மானாஹா பரியந்தி மூடா
அந்தேனைவ நீயமானா யதாந்தாஹா

என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு ஒத்த கருத்தைத் திருமூலர் தமது திருமந்திரத்திலே போலியான குருமார்களுக்கும் உண்மையான குருமார்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கும் முறையிலே சொல்கிறார் :

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்;
குருடும் குருடும் குருட்டாட்ட மாடிக்
குருடும் குருடும் குழிவீழு மாறே

என்பது திருமந்திரம்.

குருடனுக்கு வழிகாட்டுகிறவன் கண் நன்றாகத் தெரிந்தவனாக இருக்கவேண்டும். அவனும் குருடனாக இருந்துவிட்டால் எத்தகைய விபரீதம் விளைந்துவிடுகிறது!

குருடன் குருடனுக்கு வழிகாட்டுகிற கதை எப்படியோ அப்படித் தான், மெய்யறிவு இல்லாத குரு, ஒரு மெய்யறிவு அற்ற மாணவனுக்கு, மெய்யறிவை உணர்த்துகின்ற முயற்சியாகும் என்கிறார் திருமூலர். குருடர்களுக்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்களின் இந்த விபரீத மான விசித்திரத்தை, திருமந்திரம் ஏழாந் திருமந்திரத்தில் மீண்டும் ஒருமுறை திருமூலர் எழிலோடு கூறுகிறார். அந்தப் பாடல்:

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே

என்பது ஏழாந் தந்திரத்தில் வரக்கூடிய பிறிதொரு பாடல்.

குருவினுடைய வல்லமைக்கும் பெருமைக்கும் இத்தனை சிறப்பைத் தருகின்ற சித்தர்கள், தங்களுடைய படைப்புகளைத் தொடங்குவதற்கு முன்பு ஆசானை வழிபட்டே அதன்பிறகு தங்கள் நூல்களைத் தொடங்குகிறார்கள்.

தமது குரு யார் என்பதை ஞானக் கும்மி என்ற இசைப்பண்போடு கூடிய சித்தர் இலக்கியம் மிக நன்றாக விளக்கம் செய்கிறது.

'நினையாமல் நினைப்பது' என்ற தியான நிலையைப் பற்றியும், 'தூங்காமல் தூங்குவது' என்ற அரியதொரு கலையைப் பற்றியும் ஏற்கனவே பார்த்தோம். இதுபோலவே 'சொல்லாமல் சொல்லுவது' என்று ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், வெறும் சொற்களி லேயே பேசாமல், அனுபவபூர்வமான செயல்மூலம் பேசுதல்! அதாவது

அந்த ஆசிரியருடைய வாய் பேசுவதற்குப் பதிலாக அவருடைய செயலே, அவருடைய உடம்பே, பேசும்! இது மிகப்பெரிய கல்வி! சொல்லாமல் சொல்லுகிற உபதேசம் இதுவே! இதைப் பாடுகிறது ஞானக்கும்மி.

மந்திரம் என்பதே வெளியிட்டுச் சொல்லாமல் மன ஒலி அலைகளை உள்ளுக்குள்ளே அதிரச் செய்கின்ற நுட்பமான ஒலி அதிர்வுகளாகும். வைப்ரேஷன் (Vibration) என்கிற அதிர்வின் ஒலி அலைகள் அவை! அவற்றிற்குரிய மையங்கள் உடம்பில் உண்டு.

பேசாது இருக்கும்
இடம்பார்த்தே—அதைப்
பெற்றே இருப்பது மந்திரமாம்
ஆசான் என்றே
உபதேசம் இட்டால்
அல்லவென்று கும்மியடியுங்கடி

வார்த்தைகளால் மட்டும் எவ்விதமான பயனும் கிடையாது! எனவே, சொற்குரு வேறு, சற்குரு வேறு என்று ஆகிறதல்லவா?

சித்தர்களுடைய உலகத்திலே 'குரு' என்ற சொல்லுக்கு, வெளிச்சம் அல்லது ஒளி என்றும் பொருளாகும். ஞானப் பேருண்மையை வார்த்தையிலே சொல்லாமல், தொட்டு உணர்த்துகிறவரும், அவ்வாறு சொல்லாமல் சொல்லுகிறவருமாகிய ஞான குருவானவர், நமக்கு வெளியே இருந்து, ஞானாசிரியராக விளங்கி நமக்கு வழிகாட்டு கிறார். பின்னர் நமக்கு உள்ளே இருக்கும் குரு, தமது கல்வியைத் தொடங்குகிறார். அதாவது, ஒளிமயமான ஞான அனுபவக் கல்வி தொடங்குகிறது!

இந்த உட்பொருளாகிய ஒளியை நாம் அறிந்துகொள்ளா விட்டால் எவ்வித ஆன்மீகப் பயனும் நமக்கு இல்லை. இதை அறிந்து தேர்ந்துவிட்டாலோ, நமது அக உடம்பு புடம் போட்ட தங்கம் ஆகிவிடும்!

பொருளைத் தெரிந்துகொள்ளாமல் புடம் போடுவது எப்படி?

குரு இருப்பதும் நெஞ்சுக்குள்ளே—மனக்
கோணல் அறுப்பதும் தன்னுக்குள்ளே
பொருள் இருப்பதும் அறியாமல்—புடம்
போடுவ தெப்படி ஞானப் பெண்ணே!

மெய்யான குரு, ஞானகுரு, நமக்கு இரண்டு நிலையிலே கைகொடுக்க வேண்டும். முதலாவது நிலை, மனித உருவத்திலே நம்முன் வந்து, உட்பொருளை நமக்கு அனுபவத்திலே காட்டவேண்டும். இதன் பின்பு, அடுத்த நிலை தொடங்குகிறது. ஒளியாகிய குரு உடம்பையும், நமது உள்ளத்தையும் உள்ளுக்குள் அனைத்தையும் புடம் போட்ட தங்கமாக மாற்றி உயர்த்தி ரசவாதம் செய்துவிடுகிறார்! செம்பையும் பொன்னாக மாற்றுகிற மெய்ஞ்ஞானம் இதுவே!

இந்த ஒளி ஞானமாகிய மெய்யறிவை ஆசான் வாயிலாக, அதாவது ஆசான் வடிவில் தோன்றிய இறைவனிடத்திருந்தே, பெற்றுத் தேற வேண்டும் என்பதற்கு அரிய சான்றாக அமைவது திருவாசகத்தின்கண் உள்ள ஒளிபற்றிய அற்புதமான பகுதி.

இந்த ஒளி அனுபவத்தையும், திருவாசகம் கூறுகிற ஒளியோக மரபையும் பற்றிச் சிவயோகி இரத்தினசபாபதியார் எழுதித் தந்துள்ள குறிப்பானது, ஞானம் கமழ்கின்ற அரியதோர் குறிப்பாகும். அந்தப் பகுதியின் ஒளிக்குறிப்புகள் வருமாறு :

"ஒளிவடிவான சுழுமுனைநாடியிலே ஒலிக்கின்ற அடையாளமான சங்கொலி அல்லாமல், மற்ற வாத்திய ஓசைகள் ஒன்றும் திருப்பெருந்துறையில் கிடையாது. பரவெளியில் உமைகாண நடிப்பதாக அவ்வூர்ப் புராணமும் கூறுகின்றது.

அண்டம் பிண்டம் என்று உலகத்திலே இரண்டு பொருள்கள் உண்டு. இவை இரண்டிலும் தத்துவங்கள் சமமாக விளங்கும். இந்த உடம்பிலே மூலாதாரத்திலிருந்து எழுந்த சுழுமுனைநாடி நிறைந்து மின்னல்போலப் பிரகாசிக்கிற ஒளியாகி, அந்த ஒளியிலே திருவைந்தெழுத்துக்களால் உணர்த்தப்படும் ஐந்துவகை ஒளிகளும் ஒன்றிலொன்று அடங்குமுறையாலே முடிவிலே ஒன்றாக நிற்கக் குழலோசையாக நிற்கின்ற அவ்வோசைதானும் அடங்கி நின்ற இடம் எதுவோ, அதுவே இறைவன் திருநடனம் செய்யும் சிதம்பரம் என்ற ஆகாயக் குறிப்புத் தலமாகும். சிதம்பரம் உருவத்தால் உணர்த்தப்பட்டது. இது உருவமற்று உணர்த்தப்பட்டுள்ளது. யோகம் என்ற சொல் சேர்க்கை என்ற பொருளையுடையது. இங்குச் சீவனும் சிவனும் சேருவதே யோகமாக்கப்பட்டது. சீவன் சிற்றொளியுடன் கூடியது. இறைவன் பேரொளி. இரண்டு ஒன்றாகுதல் சிவயோகம். அவ்வொளி அணுக்களும் சிந்தனையால் அகண்டமும் அண்டமும் உரசுவதால் இந்த நாதம் இயல்பாக உண்டாகிறது. மற்ற ஓசை செய்கையினால் அமைவது பற்றி இதற்கு அனாகதம் என்று பெயர் வைத்துள்ளனர். ஆகதம் என்றால் அடித்தல். அனாகதம் அடிக்காமல் எழும்பும் ஓசை என்பது பொருள். மனிதனின் தூல உடலில் ஓர் ஓசை இயல்பாக இருப்பதை அனாகதம் என்று புறநிலையில் உள்ளவர் கொண்டனர். யோகிகள் ஆகாயத்தினிடம் ஒரு நுண்ணோசை உள்ளது என்று அறிவதில் ஆகாயபூத நாயகரான சதாசிவரை அறியலாம் என்று தியானத்தில் நாதத்தைக் கண்டனர். இதுவேதான் தியான யோகம். இது எவ்விதமூச்சுப் பயிற்சியும் இல்லாதது என்பதை அறியவும் என்பது சிவயோகியாரின் விளக்கம்.

மிகுந்த மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய ஆசானின் இலக்கணத்தை இலக்கிய உலகிலே பழந்தமிழ் நூல்கள் வியந்து பேசுவதை அறிஞர் உலகு நன்கு அறியும். தமிழ் இலக்கணம் மாணவனுக்கும் ஆசிரியனுக்கும் இலக்கணம் வகுத்துக் கூறுகிறது. இந்த இயல்புகள் அனைத்தும் பலநூறு மடங்காகப் பெருக்கம் பெற்றுச் சித்தர் இலக்கியத்திலே ஒப்பற்ற இடத்தை அணிசெய்கின்றன.

'மறைசொலும் பொருள்' என்றே குருநாதனைத் திருக்குணலை யார் அழைப்பது போலவே, வைணவ சமயத்து நூல்களும் ஆசிரியனை இறைவனாகக் காண்கின்றன. திருமூலருடைய வரலாற்றிலே ஒரு பெரிய சிறப்பு அவருக்கு ஞானம் உணர்த்திய ஆசிரியர் திருநந்தி தேவரே ஆவார்! இந்த உண்மை ஒருபுற மிருக்க, எல்லா ஞானப் பயிற்சி மாணவர்களுக்குமே ஞானாசிரியனாக வந்து தோன்றுவது இறைவனே என்பதுதான் சித்தர்களின் முடிவாகும். இதைத் திருமூலரும் பாடுகிறார் :

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியோர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே

"பரநாத வெளியிலிருந்து கீழே இறங்கி, இருவினைகளுக்கும் ஏற்ப இந்த மனித உடம்பாகிய சட்டையை அணிந்து, சத்திநிபாதம் என்ற விவேகத்தை முன்னிலையாக வைத்து, என் சுகத்துள்ளே நின்று உருக வைத்து, ஓர் ஒப்பற்ற ஆனந்த அனுபவம் தந்து, ஞானமாகிய உபநயனத்தை அருளி, களிம்பாகிய மலத்தை அறுத்தான்" என்று தமது ஞான அனுபவத்தை முனிவர் பாடுகிறார்.

இவ்வாறு தமது சொந்த வரலாற்றைக் கூறுகிற திருமூலர், தமது சித்தர் இலக்கியமாகிய திருமந்திர நூலிலே குருமார்களின் இயல்புகளை ஆழமான பார்வையோடு கண்டு பல பாடல்களிலே எடுத்து இயம்புகிறார்.

ஞானக்கண் இல்லாத குருட்டுக் குருமார்களை அழைத்து, பல மாணவர்கள் 'குருடும் குருடும் குழிவீழும்' வேடிக்கையான பரிதாபத்தைப் பாடுகிற சித்தர், பெருமான், பொய்வேடத்துப் போலி ஆசிரியர்களைப் பற்றியும் பேசுகிறார். அவருடைய காலத்திலும் பல போலிச் சாமியார்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. எப்படி?

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்

என்று எத்துணை வேகத்தோடு வருகிறது திருமந்திரப் பாடல் என்பதைப் பார்க்கவேண்டும்.

இந்தத் திருமந்திரப் பாடலுக்கு, ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழம்பெருஞ் சித்தராகிய சம்பளி முனிவர் எழுதி வைத்துள்ள உரை படிப்பதற்குச் சுவையாக உள்ளது. பாடல் முழுவதையும் சம்பளிச் சித்தரின் பழைய உரையையும் கீழே தருகிறேன் :

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவன்அவன் தாள்களே!

"இடம்பத்தையே விரும்பி மேற்கொண்டும், வயிறார உணவுண்டலே பெறும் பெரும்பயன் ஆம் என உட்கொண்டும், பொய்யாகத் தவச் சின்னங்கள் அணிந்து, அறிவில்லாத மக்களை மயக்கி, வஞ்சிக்கும் அறிவில்லாத பேதைகளே! நீங்கள் அந்த அவவேடத்தைக் கைவிட்டுத் தொலைத்து, சிவபிரானாகிய அப்பரம்பொருளின் திருவருளை ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும் தேடியும் காண்பீராக!" என்க. அப்பெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு, மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய வடிவங்களும் கொண்டு விளங்குகின்றார். ஆதலின் தலங்கள்தோறும் நடந்து தேடிச் சென்று தீர்த்தங்களில் மூழ்கி அருள்வடிவாகிய திருமேனிகளைத் தரிசித்து உய்வீர்களாக என்றவாறு" என்பது அந்தப் பழைய உரையாகும்.

ஆடுதல், ஆனந்தக் கூத்துச் செய்தல். பாடுதல், அப்பெருமான் அடியார்களுக்கு அருள்செய்த திறங்களையெல்லாம் சொல்லித் துதித்தல். அழுதலாவது, பெரியோர்கள் பெற்ற பேறு தமியேனுக்கும் கிட்டுமோ கிட்டாதோ என்று, உள்ளம் நைந்து நைந்து உருகி வாய் சோர்ந்து வெளிப்படுதல். அரற்றலாவது, நாட்டார் நகைப்பரே என்னும் கருத்துக்கூடத் தோன்றாமல் வாய்விட்டு அவ்வாறு புலம்புதல் என்க!

இது வேறொரு பழைய உரை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், மெய்யான சித்தர்கள் உலவி வருகின்ற அதே சூழ்நிலையில் பொய்வேடச் சித்தர்களும் உலவுதல் உண்டு என்பதே! 'மக்களே போல்வர் கயவர்' என்ற வள்ளுவர் வாக்கின்படி, மெய்யான சித்தர்களைப் போலவே காட்சிதருகிறார்கள் பொய்யான சித்தர்களும் என்ற இந்த அவல நிலையையும் பாடுகிறது திருமந்திரம்:

ஞானமி லர்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்
மான நலங்கெடும் வையகம் பஞ்சமாம்
ஈனவர் வேடம் கழிப்பித்தல் இன்பமே

இந்தப் பொய் வேடத்தைக் கலைத்துவிடுவதே நாட்டுக்கு நல்லது; அதுவே புண்ணியம் என்கிறார் மெய்ஞ்ஞான மெய்ச்சித்தராகிய திருமூலர் பெருமான்! மற்றொரு திருமந்திரப் பாடலிலே இந்தப் பொய் வேடத்தார்களை நெறிப்படுத்துவது அரசனின் கடமையாகும் என்றும், அவ்வாறு செய்வதே அரசனுக்கு வீடுபேறு நல்கும், அதுவே அரசமுத்தி என்றும், திருமூலர் அறிவுறுத்துகிறார்:

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம்நல் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடுஅது வாமே!

என்பது அந்தத் திருமந்திரப் பாடல்.

துறவு என்னும் காவி வேடத்தை மட்டுமே குறிப்பிடவில்லை திருமூலர். தவநெறி, வழிபாட்டு நெறி போன்ற எல்லா நெறிமுறைகளையும் அவற்றுக்குரிய சின்னங்களையும் உள்ளடக்கிய 'வேடம்'

என்ற சொல்லைக் கையாளுகிறார் முனிவர்! இதற்குச் சான்றாக இன்னொரு பாடல் உள்ளது :

மூடம் கெடாதோர் சிகைநூல் முதல்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
நாடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்து
ஆடம் பரநூல் சிகைஅறுத் தால்நன்றே

அறிவுச் சின்னங்கள் அறிவில்லாத மூடர்களிடம் பொய்வேடமாக அமைவதைக் கண்டு, அந்த வஞ்சகத்தைச் சித்தர்கள் உள்ளம் சாடுகிறது. திருமூலரைப் போலவே பிற்காலத்தைச் சேர்ந்த சித்தர் பலரும் போலிவேடத்தைச் சீறுகிறார்கள். சான்றாக, ஞானக் கும்மி என்னும் சித்தர் நூலில் ஒரு பாடல் :

தாடி வளர்த்துச் சடைவளர்த்து—நல்ல
சந்நியாசி என்றொரு வேடமிட்டு
ஓடித் திரிந்த புலையாட்டை—இங்கு
ஒப்புவ தாரடி ஞானப்பெண்ணே!

என்று கும்மியை ஓங்கியே தட்டுகிறார் இந்த ஞானி!

ஓடித்திரிந்த புலையாடு என்பதிலே எத்தனையோ சிலேடைப் பொருள்கள் உண்டு. கழுத்திலே தாடி போன்ற ஒரு சதை தொங்குகிற ஆடு நமக்குத் தெரியும். நெடி வீசுகிற புலை ஆடு அது. அப்படி ஒரு பொருள். இன்னொரு பொருள், புலையாட்டம் என்றால் அது பித்தலாட்டம், வஞ்சனை, ஏமாற்று என்று பொருள்! வெறியாட்டமாகிய காம லீலைகளையும் இது குறிக்கும்! அத்தனையும் சேர்த்து வெளிவேடங்களை உதறிப் பேசுகிறார் சித்தர், இந்த அழகான பாடலிலே!

பொய்வேடத்தார்களைச் சீர் திருத்தி நெறிப்படுத்துவதே நாட்டுக்கு நன்மை பயக்கும் செயலாகும் என்பதைப் பல இடங்களிலே மகான்கள் அறிவுறுத்துகிறார்கள்.

ஞானியா, ஞானி இல்லையா என்று வேடத்தார்களைச் சோதிக்க வேண்டும். ஞானிகளைக் கொண்டு சோதனை செய்யும்படி செய்ய வேண்டும். இதுவே தேசப்பணியாகும். நாட்டுக்குச் செய்கிற மிகப் பெரியதோர் தொண்டாகும் என்று ஒரு பாடலிலே திருமந்திரம் செப்புகிறது:

ஞானமில் லார்க்குச் சடைசிகை நூ னண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நாபதி சோதித்து
ஞானமுண் டாக்கல் நலமாகும் நாட்டுக்கே

இத்தனை சீற்றம் ஞானிகளுக்கு ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்றால், மெய்வேடத்துக் குருவின் திருவருளையும், அந்தத் திருவருளின் பயனையும் அத்தனை அனுபவித்தவர்கள் அவர்கள்! மெய்யான குருவின் மெய்யான உபதேசத்தை நன்கு உணர்ந்த காரணத்தினால், ஞானிகளுக்குப் பொய்வேடப் போலிகளிடம்

ஆவேசச் சீற்றம் பொங்குகிறது. குருபத்தி என்னும் ஈடுபாடு அப்படி உந்துகிறது ஞானிகளை. எப்படிப்பட்ட ஈடுபாடு அந்தக் குருபத்தி, என்பதைப் பல பாடல்கள் சித்தர் இலக்கியத்திலே நமக்கு உணர்த்து கின்றன. திருமூலரும் அதனையே பாடுகிறார்.

எட்டும் இரண்டும் அறியாத என்னை
எட்டும் இரண்டும் அறிவித்தான் என்நந்தி
எட்டும் இரண்டும் அறிவால் அறிந்தபின்,
எட்டும் இரண்டும் இலிங்கம தாமே!

இந்தப் பாடலில் வரும் 'எட்டும் இரண்டும்' என்பதற்குப் பல நுட்பங்களை உரையாசிரியர்கள் கூறுவார்கள். சித்தர்களின் இலக்கியத் திலே பல பாடல்களில் இந்தத் தொடர் வருகிறது. அவ்வையும் தமது ஞானப் பாடல்களிலே இந்த நுட்பத்தைப் பாடியிருக்கிறார்.

எட்டு தமிழர்களின் கணித முறையிலே அகரமாகும். இரண்டு என்பது உகரமாகும். எனவே எட்டும் இரண்டும் என்பதை அகர உகர இணைப்பாகிய 'ஓம்' என்னும் பிரணவம் என்று பொருள் கூறுவது மரபாகும். இதுவன்றி, எட்டும் இரண்டும் பத்தாகும் என்ற கணக்குப்படி பத்து என்ற எண்ணைக் குறிக்கும் நகரம் என்று பொருள் கொள்வதும் உண்டு. ஞானிகளின் மொழியிலே நகரம் என்பது ஆன்மா. எனவே எட்டும் இரண்டும் அறிவித்தல் என்பதை ஆன்ம ஞானம் உணர்த்துதல் என்று பொருள்கொள்ளுவதும் உண்டு.

ஆன்ம ஞானத்தின் முதலாவது பாடம், பிரணவமாகிய 'ஓம்' ஒலியை உணர்த்தலேயாகும். ஆகவே, இந்த இரண்டு வகையான உரைகளும் ஒரே அடிப்படைக் கருத்தையே கூறுவதாகக் கொள்ளலாம்.

இனி, 'எட்டும் இரண்டும்' என்ற சொற்றொடருக்கு ஞான பண்டிதர்கள் கூறுகிற மற்றொரு பொருளும் உண்டு. கம்பளிச் சித்தர் போன்ற பழைய ஞானிகளும், தொன்மையான மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சுவடிகளிலே நாம் சந்திக்கிற பழம்பெரும் உரையாசிரியர் களும் கூறியுள்ள அந்த நுட்பமான பொருள் வருமாறு:

"எட்டு என்பது புரியட்ட காயம். புரியட்ட காயம் என்பது சீவாத்மாவைப் பற்றிக்கொண்டிருக்கிற, சீவாத்மாவிலே கருக்கொண் டிருக்கிற எட்டுவகையான பிணைப்புகளாம். அவை, ஆங்காரம், சித்தம், புத்தி, மனம், அந்தக்கரணம், ஆணவம், மாயை, காமியம் என்பன" என்று கயிலாயச் சித்தர் விளக்குகிறார். இரண்டு என்பதற்கு அவர் கூறும் பொருள் தானும் தலைவனும் என்பது. எனவே பிறவி யிலே வந்த இருள் காரணமாக எட்டையும் இரண்டையும் உணராத நிலையிலே உள்ள பக்குவமற்ற மாணவனுக்கு, இந்த எட்டையும் இரண்டையும் குருநாதன் உணர்த்துகிறான். இந்த உணர்வு கைகூடிய நிலையிலே எட்டும் இரண்டும் கலந்து முழுமை பெறுவதால், எட்டும் இரண்டும் இலிங்கமதாமே என்ற சொல் பிறக்கிறது.

இந்த எட்டும் இரண்டும் கலந்த இணைப்பை இன்னொரு திருமந்திரப் பாடலிலும் எழிலோடு காணுகிறோம்:

எட்டினில் எட்டும் அதில்ஒட் டிரட்டியும்
கட்டியை விட்டுக் கலந்துண்ண மாட்டாமல்
பட்டினி விட்டும் பலவிதம் தேடியும்
எட்டும் இரண்டும் அறியாத மாக்களே!

பட்டினியை விட்டும் என்றால் பட்டினிகிடந்தும் என்று பொருள். எட்டும் இரண்டும், அதில் ஒட்டிரட்டியாகிய பதினாறும் அறிந்து கொள்ளாமல், கட்டி எனப்படும் இந்த உடம்பின் பற்றைத் துறந்து, பட்டினி கிடந்தும் பலபடத் தேடியும் துன்புறுகிற பேதைகளைப் பாடுகிறது இந்த அரிய பாடல். பதினாறு என்பது சித்தர்கள் கூறுகிற பதினாறு கலைகள். இவை ஞானப்பயிற்சி செய்வார்களுக்குச் சோடச கலைக் கல்வி என்று உபதேச முறையில் உணர்த்தப்பெறுகிற இரகசிய ஞானமாகும்.

உலக மாந்தரின் சாதாரண நிலை இத்தகைய இடர்ப்பாட்டிலே இருப்பதனாலேதான், இந்த இடர்களுக்கெல்லாம் உய்வாக அமைகிற ஞானத்தை வழங்கும் குருவினைக் கொடுமுடியிலே வைத்து அத்தனை பரவசத்தோடு ஞானிகள் ஏத்தித் துதிக்கிறார்கள். மாணிக்கவாசகரும் தமது ஞானக் கல்வியின் இன்பத்திலே திளைத்துக் குருபரனை எவ்வளவு பேரானந்தக் களிப்போடு பாடுகிறார்:

முத்திநெறி அறியாத
　　மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
　　பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
　　சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா
　　றார்பெறுவார் அச்சோவே

என்று திருவாசகம் துள்ளிவருகிறது!

இந்த ஆனந்த ஞானக்கல்வி இல்லாத மக்களின் நிலை இதற்கு நேர்மாறாக உள்ளது என்பதையும் திருமூலர் சித்திரிக்கிறார் :

ஆயத்துள் நின்ற அறுசமயத் தோர்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் கண்டிலர்
மாயக் குழியில் வழுவா மனைமக்கள்
பாசத்துள் நின்று பதைக்கின்ற வாறே

சித்தர்களின் யோகமுறையிலுள்ள ஞானவழியே 'சன்மார்க்கம்' என்றும், 'செம்மைநெறி' என்றும், துதிக்கிறது சித்தர் இலக்கியம்! இந்த நெறியாவது உடம்புக்குள் உத்தமனைக் காணுகிற நெறியாகும். காயத்துள்ளே கடவுளைக் காணுதல் எனினும் ஒக்கும். எனவே வேறு எந்த நெறிக்கும் இல்லாத பெருமைகளை இவ்வாறு பேசுகிறது சித்தர் இலக்கியம்.

ஞானகுருவின் வாயிலாக நேருக்கு நேராக இருந்து பெறவேண்டிய கல்வியான இந்த உபதேசமே, பிறப்பு இறப்புக்களை வெல்லுகிற ஒரே

நெறியாகும். இதை அறியாதவர்கள் பிறப்பு இறப்பாகிய சுழலிலே சுற்றுண்டு தவிக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது திருமந்திரம். வேகத்தோடு வருகின்றன அதன் மொழிகள்:

கத்தும் கழுதைகள் போலும் கலாதிகள்
சுத்த சிவமெங்கும் தோய்வுற்று நிற்கின்ற
குற்றம் தெரியாமல் குணங்கொண்டு கோதாட்டிப்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே

குற்றம் தெரியாமல் என்பதன் பொருள், குற்றத்தைக் குற்றமென்று உணர்ந்துகொள்ளாமல் என்பதாம். குணம்கொண்டு கோதாட்டி என்றால், அதனையே நலம் என்று கருதிப் பாராட்டி என்பதாம்.

சன்மார்க்கம் என்பது, சுத்த சிவமானது அங்கு இங்கு என்னாதபடி எங்குமாய்க் கலந்து நிற்பதைக் காணுகின்ற ஞானமுறையாகும். இதனை அறியாத மக்கள் வெவ்வேறு வழிகளிலே சென்று, வேற்றுமைகளைப் பாராட்டி உழல்கிறார்கள். அந்த வழிகளில் உள்ள குற்றங் குறைகளை அறியாமல் குற்றத்தையே குணமாகக்கொண்டு, 'எம்தெய்வம்', 'உம்தெய்வம்' என வாதிட்டுக் கழுதைகள் போலக் கனைத்து, அந்தப் பித்தேறி நாளும் பிறப்பிறப்புச் சுழலிலே சிக்குண்டு தவிக்கிறார்கள். ஆனால் சிவயோகிகளின் நிலை அவ்வாறில்லை. தண்டும் கையுமாகக் காணப்பெறுகிற இந்த யோக சித்தர்கள் மெய்ஞ் ஞானத்தை உணர்ந்தவர்கள். அவர்களின் கையிலே உள்ள தண்டம் பரஞானத்தைக் குறிக்கிறது. சித்தர்களின் மொழியிலே தண்டு என்பது சத்திநிபாதம் என்னும் ஞானநிலை.

தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்துடன் ஒத்திடும்

என்பது சித்தர் வாக்கு. சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களும் தம் வசமாகி இன்பம் கூட்டுவனவாம். அகத்திலும் புறத்திலுமாக உள்ள இந்த மூன்று மண்டலங்களும் தம்முள் ஒன்றிநின்று, யோகியின் வசமாகி எல்லையில்லாத பேரின்பத்தைக் கூட்டுவிக்கும். இந்தப் பேரின்பமே ஞானாசிரியன் தனது மாணவனுக்கு உணர்த்துகிற பேரானந்தக் கல்வியாகும்.

இந்தப் பயனை அடைவதற்காகவே உடம்புக்குள்ளே புகுந்து செல்லுகிற உபாயத்தை எல்லாச் சித்தர்களும் வற்புறுத்தி விளக்குகிறார்கள். இந்த அடிப்படையையே திருமூலர் கூறுகிறார்.

வானுக்கு ளீசனைத் தேடும் மருளர்காள்
தேனுக்கு ளின்பம் சிவப்போ கறுப்போ
தேனுக்கு ளின்பம் சிறந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே

"க்ஷேத்திரமாவது பிருதிவியின் கூறு. தீர்த்தமாவது அப்புவின் கூறு. மூர்த்தியாவது ப்ரமாகாசத்தின் கூறு. ஆகையினாலே ஜீவாத்மா விசாரமில்லாமல் வானம் முதலாகிய பஞ்சபூத வடிவைப் பொருளாகக் கொண்டிருக்கையாலே 'வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்காள்'

என்னும் சத்தத்துக்கு விபரம். தேனுக்குள் இன்பம் அறியப்படாது ஆகையினாலே 'தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ' என்னும் சத்தத்துக்கு விபரம். தேனுக்குள் இன்பம் சிறந்தறியப்படாமல் இருந்தாற் போலவே ஊனுக்குள் ஈசனைக் காண குரு முன்னிலை இல்லாமல் அறியாதார்க்கு அறியப்படாது. ஆகையினாலே 'தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற்போல்—ஊனுக்குள் ஈசன் ஒளிந் திருந்தானே' என்னும் சத்தத்துக்கு விபரம் என்க" என்பது கம்பளிச் சித்தர் உரை. மேலும்,

"வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்காள்—பரமாகாச சொரூபி யாய் (சரீரியாய்) தன்னுள்ளே இருக்கும் இறைவனைத் தேடித்திரியும் அறிவில்லாதவர்களே! தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ—தேனிலே (பிரித்தறிய வாராமல் கலந்து ஒன்றாயிருக்கும்) இன்ப மயமாகிய சுவையானது சிவப்பு வண்ணமோ? அல்லது கறுப்பு வண்ணமோ? ஆராய்ந்து சொல்லுவீராக. தேனுக்குள் இன்பம் சிறந்திருந்து—தேனினுள்ளேயுள்ள இன்பமாகிய சுவை (அதனை நுகர்வோருக்கு மட்டும்) சிறந்து தோன்றினாற்போல, ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தான் ஏ—அப்பரமாகாச சரீரியாகிய இறைவன் நுங்கள் சரீரத்தினுள்ளேதானே (அந்தர் யாமியாய்) உயிர்க்குயிராகப் புறத்துத் தோன்றாதபடி கலந்திருக்கின்றான் என்றவாறு" என்கிறார் இந்தப் பழைய உரையாசிரியர். மேலும்,

"அங்ஙனம் இருக்கும் அப்பரம்பொருளை ஞானாசாரியனுடைய திருவருளால் கண்டு சிவபோகத்தை நுகருவீராக என்பது எஞ்சி நின்றது. உயிருக்குயிராய் இறைவன் ஒளித்திருப்பினும் அதனால் யாதொரு விகாரமுமின்றிச் சிறந்து விளங்குவான் என்பதும் உவமை யால் பெறப்படும். ஊன்—சரீரம். மருளர் எனக் கூறியது உயிர்க்குயி ராகிய நாயகனை, ஆசாரியர் அநுக்கிரகம் பெற்று அறிந்து அனுபவி யாமல், புறத்திலே மட்டும் தேடித் திரிவாரை நோக்கி என்க. தேனை நுகர்ந்தோர், அதன் சுவை இவ்வாறு இருந்தது எனப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வாராது, அனுபவ மாத்திரையின் அறிந்து இன்புறுவர். அதுபோல சிவபோக நுகர்ச்சியிலே தலைப்பட்டோர், அப்பேரின்பத்தை அனுபவிப்பதை யொழிந்து புறத்தோருக்கு அதனைச் சொல்ல இயலாது என்க. 'கண்டவர் விண்டிலர்' என்பது ஒரு பழமொழி. "நன்றில்லை தீயது மில்லை, சொல்லாவொன்று தக்கியதே" எனப் பஞ்சாக்கர தேசிகாந்தாதியில் கவிராக்ஷஸ—சிறீ கச்சியப்ப முனிவர் அருளியதும் காண்க. "இன்பம் இதுவெனப் பஞ்சாக்கரவன் இணைப்பதத்தில்—அன்பிற் பிணைந்த அடியரல்லால் மற்றை யாரறிவார்" என்று அருளிய திறமறிந்து இன்புறற்பாலது. "மருவி யிருவரும் புணர வந்த இன்பம் வாயினாற் பேசரிது மணந்தவர் தாம் உணர்வர்—அருள்பெறினவ் விருவரையும் அறிவிறந்தங்கறிவர்" என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தம் நோக்கியும் அறிக.

**என்னை அறிந்திலன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்**
**என்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**என்னைவிட் டுன்னை உசாவுகின் றேனே**

என்னை அறிந்திலன் இத்தனை காலமும்—(தனுகரண புவன போகங்கள் ஆகிய பாசமே மெய்ப்பொருளாகத் தோன்றும் மயக்க அறிவினால்) இத்தனை காலமும் ஆன்மாவாகிய யான் என் இயல்பை அறியாமல் (பிறப்பு இறப்பாகிய சுழியில் அகப்பட்டு) உழன்றேன்; என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்—(இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் வந்தெய்திய காலத்து முன்பு மெய்யாகத் தோன்றிய அப்பாசங்களெல்லாம். பொய்யாகத் தோன்ற) என் இயல்பை விசாரித்து நன்கு அறிந்தபின் மற்றொன்றனையும் அறிந்திலேன்; என்னை அறியும் அறிவை அறிந்தபின்—(அவ் இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் வந்து எய்த குருவடிவாக எழுந்தருளிவந்து என் புன்தலையிலே திருவடியைச் சூட்டியருளியபின்) என் இயல்பை அறிவதற்கு ஏதுவாகிய ஞானசக்தி என்னும் திருவருளையே கண்ணாகக் கொண்டு காண (என்செயலெல்லாம் நின் செயலாகவே தோன்றுதலால்), என்னைவிட்டு உன்னை உசாவு கின்றேன் ஏ—என் இயல்பை யெல்லாம் மறந்து சிவானந்தத்திலே அழுந்திக் கிடத்தலால் உன் இயல்பையே நாடுகின்றேன் என்க.

கடைசிவரியில் 'உன்னை உசாவுகின்றேனே' என்ற பாடமும், 'என்னை உசாவுகின்றேனே' என்ற பாடமும் இரண்டும் காண்கிறோம். பழைய உரையாசிரியர் முன் பாடத்தையேகொண்டு பொருள் கூறுகிறார். மேலும் சொல்கிறார்:

இத்திருமந்திரம் முன்னர்க்கூறிய 'தன்னை அறியத் தனக்கொரு தீங்கில்லை' என்னும் திருப்பாட்டின் கருத்தை நன்கு விளக்கி நிற்றல் காண்க. 'என்னை அறிதல் என்பது சிவஞான போதம் பத்தாம் சூத்திரம் இரண்டாமதிகரணத்துக் கூறியருளியமையோடு ஒப்பிடுதற் குரியது' என்பது பழைய உரையாகும்.

பெறுதற்கரிய பேறாகிய இந்த ஆன்ம ஞானக் கல்வியை நேர் முகமாக வழங்குகிறவனாகிய குருநாதனே, சித்தர்களையும், அவர்களுடைய பயிற்சிமுறைகளையும் கற்பிக்க வல்லவன். ஆகவே, அவனுடைய பெருமை ஒப்பற்றதாகும்.

✶

# 25. சித்தர்கள் யோகப்பயிற்சியில் வழங்குகிற குறியீடுகளும் குழூஉக்குறிகளும்

சித்தர்களுடைய நூல்களிலே, பாடல்களிலாகட்டும் அல்லது உரை நூல்களிலாகட்டும், பல சங்கேதச் சொற்கள், குறியீடுகள், குழூஉக்குறிகள் குருபரம்பரையாக வழங்கிவருகின்றன. யோகநூல்களைக் கற்பிக்கும் முன்பு ஞானிகள், தங்கள் சீடர்களுக்கு இந்தச் சொற்களை விளக்குகிறார்கள். ஒவ்வொரு சொல்லும் ஒரொரு தத்துவத்தைத் தன்னுள் அடக்கி நிற்பதால், அந்த மரபுச் சொற்களில் முக்கியமான சிலவற்றை ஆராய்வது இன்றியமையாததாகும்.

இந்தச் சொற்களின் தத்துவங்களை நன்கு புரிந்துகொண்ட மாணவருக்கே சித்தர் இலக்கியம் சரியாக விளங்கும்.

யோகம் என்ற சொல்லுக்கு இணைப்பு அல்லது சேர்க்கை என்பது சாதாரணமான பொருள். சித்தர்களின் மொழியிலே இதற்கு ஒரு சிறப்பான பொருள் இருக்கிறது.

வெளியே செல்லும் புலன்களின் வேகத்தை மாற்றி அவற்றின் செயலை உள்முகமாக இணைப்பதே சித்தர்களின் யோகப் பயிற்சியாக இருப்பதால், சித்தர் இலக்கியத்திலே யோகம் என்பது சித்தத்தின் இயக்கத்தை அடக்கி ஆள்வது என்று பொருள்படும்.

சித்தம் என்பது நம்முடைய உடம்புக்குள்ளே தொழில் செய்கிற அகக்கருவிகள் அனைத்தையும் கூட்டாகக் குறிக்கும் ஒரே சொல். அக்கருவிகள் அந்தக்கரணம் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

சித்தம் என்ற சொல்லால் குறிக்கப்பெறுகின்ற உட்கருவிகள் நான்காம். அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. இந்த நான்கில் சித்தமும் ஒன்றாகக் குறிக்கப்பெறினும், சித்தர்கள் இந்த நான்கையும் சேர்த்து ஒரே சொல்லில் சித்தம் என்றே அழைப்பது மரபாகும்.

ஒரு பேச்சு அல்லது இசை நிகழ்ச்சியைக் கேட்கிறோம் என்றால், புறக்கருவி செவி; உட்கருவி சித்தம். அதேபோன்று காட்சிகளைப் பார்க்கும் புறக்கருவி கண்; உட்கருவி சித்தம். இப்படி ஐந்து புறக் கருவிகளின் செயலையும் உள்ளிருந்து துய்ப்பது சித்தந்தான்.

இதை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தோமானால், ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய உலகம் என்பது அவனுடைய சித்தமேயாகும். ஒருவன் ஒரு திரைப்படத்தைப் பார்க்கிறான் என்றால் புறத்தே ஓடுகின்ற படத்தைப் பார்ப்பது அவனில்லை. சித்தமே. அவனுடைய

சித்தத்தில் ஓடுகின்ற அந்தத் திரைப்படத்தின் அகத் திரைப்படத்திலே, நிழலின் நிழலிலே அவன் காட்சிகளைப் பார்க்கிறான்.

இப்படிக் கூர்ந்து நோக்கும்போது உலகம் என்பது சித்தமேதான். ஆகையால் சித்தத்தை அடக்கினால் உலகம் அடங்கிவிடும் என்று ஆகிறது அல்லவா?

இதை வைத்துத்தான் யோகிகள் சித்தத்தை அடக்குவதே மாபெரும் யோகப் பயிற்சி என்று கொண்டார்கள். உலகம் தன்னுள் அடங்கி நிற்கும்பொழுது ஒரு யோகி தன் சொந்த அனுபவங்கள் அனைத்தையும் தன் ஆன்ம அனுபவமாகவே காணுகிறான். ஏனென்றால் காண்பவன் ஆன்மாவே.

சித்தச் செயல்களை ஒடுக்கியபோது அந்த ஆன்மாவானது தன்னுடைய மெய்யான வடிவத்திலேயே இருக்கிறது.

அப்படியானால் மற்ற நேரங்களில் எந்த நிலை ஏற்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. சித்தத்தின் செயல்கள் அடங்காத பொழுது, ஒருவன் எதை நினைக்கிறானோ அல்லது பார்க்கிறானோ அதன் வடிவத்தை அவனுடைய ஆன்மா எடுத்துக் கொள்கிறது. அதனால் தான் பரம்பொருளில் சித்தத்தை ஈடுபடுத்தவேண்டும்; அப்படி ஈடுபடுத்துவதே ஆன்மயோகம் என்றார்கள் சித்தர்கள்.

சித்தத்தின் இயக்கம் நான்கு வகையில் நிகழும் என்று சித்தர்கள் கண்டார்கள். அவற்றிற்கு நான்கு பெயர்கள் சூட்டினார்கள். அவையாவன:

1. அளவை, 2. பொய்யறிவு,
3. பொருளற்ற உணர்வு, 4. நித்திரை.

ஐம்புலன்களால் புறப்பொருளை நேரே காண்பது காட்சியளவை எனப்படும். தொலைவில் தெரியும்பொருள் எதுவாக இருக்கும் என்று யூகிப்பது அனுமானம் எனப்படும். இரண்டும் அளவையின்பாற் படுகின்றன.

பொய்யறிவு என்ற நிலை எப்படியென்றால், ஈயத்தை வெள்ளி என்று கொள்ளுதலும், இது வெள்ளியா ஈயமா என்று ஐயப்படுவதும்! இரண்டுமே பொய்யறிவு இயக்குகிற செயலாகும்.

மூன்றாவதாகிய பொருளற்ற உணர்வு எப்படியென்றால் பொருளே இல்லாமல் ஏதோ ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு தானாகவே ஒரு துய்ப்பிற்கு இலக்காகுவது. இது வானத் தாமரை, அத்தைக்கு மீசை, முயலுக்குக் கொம்பு என்று அழைப்பது போன்ற பொருந்தா அறிவுநிலை.

நான்காவதாகிய நித்திரையை, அபாவம் என்றும் ஞானிகள் அழைப்பார்கள். சித்தமானது ஒரு பொருளையும் சாராமல் நிற்கின்ற நிலை இது.

ஐந்தாவதாகிய ஒரு நிலை இந்நான்கையும் தாண்டிச் செயற் படுகிறது. அது எப்படியென்றால் ஒருமுறை அனுபவித்த துய்ப்பை நழுவவிடாமல் பற்றிக்கொண்டு நிற்பது.

இது சித்தத்தின் நான்கு நிலைகளையும் ஆதாரமாகக்கொண்டு தொழில்புரிகிற ஐந்தாவது செயலாகும்.

சித்தத்தின் இந்த ஐந்து செயல்களையும் எப்படி அடக்கி ஆள்வது என்பதை, யோகிகள் மாணவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த அடக்குமுறையானது பற்றின்மையினாலும், பயிற்சியினாலும் கைகூடுகிறது என்பார்.

இந்தப் பயிற்சியை மேற்கொள்வதற்குப் பல படிகளை வகுத்து ஒரு கல்லூரியிலே நிலைகளுக்குத் தக்கவாறு பாடத்திட்டம் வகுத்துள்ளதுபோல் அமைத்துத் தந்திருக்கிறார்கள்.

பற்றின்மை என்பது சித்தத்தின் உரத்தினால் உண்டாகவேண்டும் என்று கண்ட சித்தர்கள், இந்தப் பண்பை வயிராக்கியம் அல்லது 'நடுவு' என்று அழைத்தார்கள். எல்லா யோகப் பயிற்சிகளுக்கும் அடிப்படையாக வேண்டுவது 'நடுவு' அல்லது வயிராக்கியம் என்பதை நம்முடைய சித்தர் நூல்கள் வற்புறுத்துகின்றன.

புறப்பொருள்களின்மீது பாய்ந்து செல்லுகிற ஆவலை நீக்கி விட்டால் அவை நமக்கு வசமாகின்றன. அப்போது புறஉலகே நமக்குள் கட்டுப்பட்டுவிடுகிறது என்ற சித்தத்தின் தத்துவத்தை ஆணித்தரமாக எடுத்து இயம்புகிறது சித்தர் ஞானம்.

பற்றின்மை என்பதனை அடையப்பெற்று, அந்த நிலையிலே யோகத்தில் ஈடுபடும் மாணவனுக்கு, முக்கியமான ஓர் உண்மையினை நம் ஞானிகள் பழக்கத்திற்கு எளிதான வகையிலே சொல்லிக் கொடுக்கிறார்கள். அது என்னவென்றால், எங்கெங்கோ வேகமாகச் செல்கின்ற சித்தத்தை வழி மாற்றி, உலகை நோக்கும் வழியிலிருந்து உத்தமனை நோக்கும் வழிக்கு மடைமாற்றுவதேயாம்.

இப்படி மாற்றும்பொழுது மனிதனுக்கு அடிப்படையாக அமைந்த மூன்று குணங்களில் பற்றின்மை என்ற சாதனை கிட்டுகிறது. இந்த மூன்று குணங்களும் மென்மை, வெம்மை, மந்தம் என்று அழைக்கப் பெறுகின்றன. உலகம் முழுவதுமே இந்த மூன்றில் அடங்கிவிடும். இந்த மூன்றினும் பற்று விடுவதுதான் உண்மையான பற்றின்மை அல்லது நடுவுநிலை என்று அழைக்கப்படும். இந்த நிலை கிட்டினாலொழிய ஒரு யோகப்பயிற்சி மாணவனுக்குச் சமாதி என்ற நிலை கூடுவதில்லை என்று ஞானிகள் சொல்கிறார்கள்.

சித்தர்கள் கற்பிக்கின்ற யோகத்தின் குறிக்கோள் சமாதி என்ற பேரின்ப நிலையேயாகும். சித்தத்தை எவ்வித நடுக்கமும் இல்லாது ஒரே நிலையில் நிறுத்திவைப்பதே சமாதியின் இலக்கணமாகும்.

இந்தச் சமாதியானது சித்தர்களால் இரண்டு வகையாகக் கூறப்படு கிறது. ஒன்று உணர்வுட்பட்டது; மற்றொன்று உணர்வைக் கடந்தது.

சுவாமி விவேகானந்தர் போன்ற ஞானிகள் இந்த யோக நிலையைப் பற்றிப் பற்பல இடங்களில் பேசியும் எழுதியும் விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

ஒருவன் தனது சித்தப் பயிற்சியின்மூலம் பல நிலைகளையும் தாண்டி முன்னேறிப் பலவிதமான சித்திகளைப் பெற்ற பிறகும்கூட, மறுபடியும் வீழ்ச்சியடையக் கூடும். ஏனென்றால் சித்திகள் அனைத்தும் புறப்பொருள்களுக்கு உட்பட்டவை. ஆகையினாலேதான் இந்த நிலையையும் கடந்து, அதாவது ஆன்மா இயற்கையைக் கடந்து, தனக்குள் தானே பேருணர்வில் ஒடுங்கவேண்டும் என்பதை, எல்லா ஞானிகளும் மிகவும் மேலான சாதனையாக மதித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த மேன்மையான நிலையைக் கடந்தவர்கள் உடம்பிலே நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வையும் கடந்தவர்கள். இவர்களை வடமொழியார் 'விதேக யோகிகள்' என்று அழைக்கிறார்கள்.

இயற்கையுடன் ஒன்றுபட்டவர்களைப் பிரகிருதிலயர் என்று அழைத்தார்கள்.

இந்த இரண்டு வகையான யோகிகளுமே சமாதியாகிய நடுவு நிலையில் நின்று உணர்வற்ற பதம் பெற்றவர்களே என்றாலும், இந்த இருவருக்குமே உலகக் காட்சிகள் தென்படத்தான் செய்யும். ஆனால் அவர்கள் தம்மை அந்தக் காட்சிகளிலே தொடர்புறுத்திக் கொள்ள மாட்டார்கள்.

இந்த இருவகையான யோகிகளையும் தாண்டிய மிகப் பெரிய நிலையிலே வாழ்கிற தீவிர யோகிகளும் உண்டு. அவர்களே உயர்ந்த மேலான சித்தர்களாவார்கள். இவர்களே இறைவனைக் கண்டவர்கள்; என்றும், இரவும் பகலும் எப்போதும் இறைவனோடு இருப்பவர்கள் என்றும், கூறப்பெறுகிற 'தானும் தலைவனும் ஒன்றிய' மாபெரும் ஞானிகள்.

இவர்களுடைய குரு பரம்பரையைச் சொல்லும்பொழுது, இவர்களுடைய முதலாவது குரு இறைவனே என்று வழங்குகிற மரபைச் சித்தர் இலக்கியத்திலே பார்க்கிறோம். இதையொட்டியேதான் சித்தர்களுடைய கொடிவழிக்குக் கைலாய பரம்பரை என்ற வழக்கு உண்டாயிற்று. திருமூலரும் தமது குருவழி சொல்லும்பொழுது இறைவனைச் சொல்லி நந்திதேவரை மொழிகிறார்.

இந்தக் கருத்தையொட்டி சுவாமி விவேகானந்தர் எழுதியுள்ள ஒரு குறிப்பை இங்கே ஒப்பிடுதல் பொருத்தமுடைத்து. விவேகானந்தரின் கருத்து வருமாறு:

"வான வெளியிலே வரம்புள்ள ஓர் இடப்பரப்பை நீ சிந்தித்துப் பார்ப்பாயானால், அதற்கு அப்பாலும் வெளி உண்டு என்ற சிந்தனை உனக்கு உண்டாகும். இப்படியே விரிந்து விரிந்து போகும்போது நீ எத்தனை பெரிய வட்டத்தைப் போட்டாலும், அதற்கு அப்பாலும் எல்லையற்ற வெளி புலனாகிறது. இடத்தின் நிலை இப்படி.

இவ்வாறே காலம் என்ற கணக்கை எண்ணும்பொழுது ஒரு கணத்திலிருந்து ஊழிவரை அது விரிந்து செல்கிறது.

இவ்வாறுதான் அறிவைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டு போக வேண்டும். மனிதனிடத்திலே அறிவானது ஒரு சிறிய விதையாக இருக்கிறது. ஆனால் அதிலிருந்து எல்லையற்ற ஓர் அறிவு இருப்பதை அகன்று அகன்று விரித்துக்கொண்டே சென்று ஊகித்துவிடலாம். அந்த எல்லையற்ற அறிவே பேரறிவாம்."

விவேகானந்தர் குறிப்பிடுகிற இந்த எல்லையற்ற பேரறிவையே யோகிகள் இறைவன் என்கிறார்கள். இக்காரணம் பற்றியே வரம்பற்ற எல்லையில் சித்தமானது ஒரு பொருளையும் சாராது இயங்குகின்ற உறக்க நிலையிலும், கனவு நிலையிலும், உண்டாகின்ற ஞானத்தை நாம் தியானம் செய்து, அதில் ஒடுங்கவேண்டுமென்று, எல்லாச் சித்தர்களும் ஒரே குரலில் பேசுகிறார்கள்.

கனவிலே நாம் எல்லையற்ற பெருவெளியுடன், எல்லா உலகங்களுடனும், இணைகிறோம் என்பது உண்மை. அதனால் கனவிலே ஏற்படுகின்ற சித்த நிலையை ஒரு யோகி தனது பயிற்சியின் மூலம் நனவுலகுக்குக் கொண்டுவருகிறான். நனவிலே கனவாக ஒரு பெரிய நடுநிலையிலே ஒடுங்கி நிற்கிறான். அந்த நிலையில் அவன் எல்லையற்ற அறிவினோடு, எல்லையற்ற விதத்திலே ஒன்றிவிடுகிறான்.

தமிழகத்து ஞானிகள் அனைவரும் இத்தகைய சமாதி நிலையை, எத்தனையோ பாடல்களில் நமக்கு வடித்துத் தந்திருக்கிறார்கள். இந்தக் கனவாகிய சித்த நிலையின் மேன்மை பற்றியும், அந்தக் கனவு நிலையே பரம்பொருளோடு இணைதற்குரிய ஒரு பெரிய சாதனமாகும் என்பது பற்றியும், தமிழிலுள்ள சித்தர் இலக்கியம் கூறுவதையே வடமொழியில் பதஞ்சலி முனிவர் செய்த யோகசூத்திரமும், எல்லையற்ற களிப்போடு இயம்புகிறது. அதை இங்கே ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

பதஞ்சலியின் யோக சூத்திரம் முப்பத்தெட்டாவது வாக்கியத்திற்கு விரிவுரை எழுதுகிற நம்முடைய தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார், எழிலும் ஆழமும் மிகுந்த ஒரு நீண்ட விளக்கத்தை வழங்கியிருக்கிறார்.

பதஞ்சலியின் இந்த முப்பத்தெட்டாவது சூத்திரம் 'கனவிலும் உறக்கத்திலும் உண்டாகிய ஞானத்தைத் தியானம் செய்தல்' என்னும் யோகப் பயிற்சியைக் கூறுகிறது. இந்தப் பயிற்சியைப் பற்றி விளக்கம் கூறுகிற பாரதியார், கீழ்க்கண்டவாறு தமது அழகிய உரையைத் தருகிறார்:

"கனவிலே தன்னை அறிதல் ஸாதனத்தால் எளிதாகச் செய்து கொள்ளலாம். நனவிலே எண்ணியதுதான் கனவாக மீண்டு வருகிறது. ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடன் ஸம்பந்தப்படுவதாகவும், இவ்வுலகத்தில் தோன்ற இடமில்லாத அற்புத ஞானம், இதர லோகங்களினின்றும் நமக்குக் கனவிலே எய்தக்கூடுமென்றும், சிலர் சொல்லுகிறார்கள். ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடனே ஸம்பந்தப்படுகிறோமென்பது மெய்தான்.

ஸங்கீதத்தில் ஸ்வர ஸ்தானங்கள்—ஸ, ரி, க, ம, ப, த, நி—என ஏழு இருக்கின்றன. ஆனால் நாம் எந்த ஒலியையும் ஸ (ஷட்ஜம்) என்று வைத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி மற்ற—ரி, க, ம, ப, த, நி, —பாடலாம்.

நாம் பாடும்போது, கீழே சில ஸ்வரங்கள் எட்டாது போனால் சுருதியை மாற்றிக்கொள்ளுகிறோம். அதாவது—த்ருஷ்டாந்தமாக—முன்பு 'க' (காந்தாரம்) அல்லது 'ம' (மத்யமம்) சொன்ன இடத்தை இப்போது 'ஸ' (ஷட்ஜம்) என்று வைத்துக்கொண்டு அதற்குமேல் அவ் வோசைக்குத் தக்கபடி ரி, க, ம, ப, த, நி ஏற்றிக்கொண்டு போகிறோம். எப்படி நாம் சொன்ன போதிலும் ஸாதாரண மனிதனுடைய தொண்டையளவு இரண்டரை ஸ்தாயிதான்; ஒரு ஸ, ரி, க, ம, ப, த, நி—ஒரு ஸ்தாயி; அதற்கு மேலே ஸ, ரி, க, ம, ப, த, நி மேல் ஸ்தாயி. எடுப்புக்குக் கீழேயுள்ளது கீழ்ஸ்தாயி.

இங்ஙனம் ஸாதாரண மனிதனுடைய தொண்டைக்கு இரண்டரை ஸ்தாயிதான் எட்டும். சிலருக்கு மூன்று ஸ்தாயியும், சிலருக்கு இன்னும் அதிகமாகவும் எட்டக்கூடுமென்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் மூன்றரை ஸ்தாயிக்கு மேலே மனிதத் தொண்டை பேசுதல் ஸாத்ய மில்லை.

ஆனால், ஒலியுலகத்தில் அநந்த ஸ்தாயிகள் இருக்கின்றன. கிளிக்குஞ்சு கத்துவதை ஷட்ஜமாக வைத்துக்கொள்வோம். சந்த்ர மண்டலம் இடிந்து பூமிமேல் விழுந்தால் அதிலுண்டாகும் ஒலியைக் கிளிக்குஞ்சின் ஒலியினின்றும் எத்தனை ஸ்தாயி மேலாகக் கணக்கிடலாம்? ஊழிக்காற்று அடிப்பதாக வைத்துக்கொள்வோம். நமது ஸௌர்யகோளமும் அதனைச் சூழ்ந்த க்ரஹ குடும்பமும் தம்முள்ளே மோதி இடிபட்டுச் சிதறிப் பொடியாவதாகப் பாவனை செய்வோம். அதில் தோன்றும் ஒலி கிளிக்குஞ்சு ஸ்தாயிக்கு மேலே எவ்வளவு தூரம் போகும்? இங்ஙனம் ஒலியுலகத்து ஸ்தாயிகள் அநந்தமாயினும் மனிதனுடைய தொண்டைக்கு இரண்டரை ஸ்தாயிகள் மாத்திரமே எட்டுவதுபோல, அவனுடைய செவிப்புலனுக்கும் ஏழு ஸ்தாயிகள்தான் அகப்படுமென்று ஜகதீச சந்த்ர வஸு கணக்குச் சொல்லியதாக ஞாபக மிருக்கிறது.

அதாவது, — எங்ஙனம் கூறுவேன்? — அநந்தமான — எண்ணத் தொலையாத எண்ண எண்ண எண்ண எண்ண எண்ணத் தொலையாத—ஒலிக்கடலில் ஏழு ஸ்தாயி நமது செவிக்கெட்டுமென்றால், நமது செவிப்புலனுடைய சிறுமையை நான் எங்ஙனம் வகுத்துக் காட்டுவேன்?

இதுபோல அநந்தமான—எல்லையில்லாத, எல்லையேயில்லாத ஜ்யோதிக்கடலில் நம்முடைய விழிக்கும் சுமார் ஏழு 'ஸ்தாயி' ஒளிதான் தென்படுமென்றும், அதற்கும் மேலும் கீழும் நாம் முழுக்குருடென்றும் ஜகதீச சந்த்ர வஸு சொல்லியிருக்கிறார். ஸ்தாயிக் கணக்கு ஸரியாக ஞாபகமில்லை, எனக்கிப்போது. ஏழுக்குமேலே போகாது; நிச்சயந் தான் எனக்கு.

ஒளிக்கடலோ பெரிதினும் பெரிது—எழுத்தில் எங்ஙனம் காட்டு வோம்?—அகண்டம்.

ஒளியோ எல்லையற்றது.

நாமோ துளி தவிர முழுக்குருடு!

மனிதன் இருளாகக் கருதுவதை ஆந்தை ஒளியாகக் கருதுகிறது. ஒளி விஷயத்தில் ஆந்தை நம்மைக் காட்டிலும் கீழ் 'ஸ்தாயி' பழகியிருக் கிறது. ஆனால், நம்முடைய 'ஸ்தாயி' ஆந்தைக்கெட்டாது. பகலில் நாம் ஸாதாரண ஒளியாகக் கருதும் வெயிலொளி, ஆந்தைக்குக் கண் கூச்சத்தை விளைவிக்கிறது. நமக்கே ஸூர்யனை நேரே பார்த்தால்—நல்ல பயிற்சியுடையோர் தவிர, ஸாதாரண மனிதருக்கெல்லாம்—கண் கூசுகிறது, பார்க்க முடியாது, பெரும்பாலும் குருடுதான்.

ஆனால் பருந்து ஸூர்யனைக் கூசாமல் பார்க்கும். எனவே ஒளி விஷயத்தில் நம்மைக் காட்டிலும் பருந்துக்கு மேல் 'ஸ்தாயி' எட்டுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஒருநாள் காலையில் பத்மா ஸனத்தில் வீற்றிருந்து உதயசூரியனை நோக்கத் தொடங்கியவர். அரை விநாடிகூட அந்தச் சூரியனைவிட்டுக் கண்ணை அப்புறப்படுத்தாமல் நடுப்பகலில் முகத்தைச் சூரியனுக்கு நேரே தாமரைபோல் காட்டியும், அங்ஙனமே நேரமாக நேரமாக முதுகை மல்லாந்து வளைத்துக் கொண்டே, சூரியனைவிட்டு விழிகளை விலக்காதபடி மாலை நேரத்தில் அந்தச் சூரியன் முன்னே (தன்முகத்தை முதுகுப் புறத்தி னின்றும் காதலன் முத்தமிடுவதற்கு நின்றபடி மல்லாந்து வளைந்து முகங்காட்டும் காதலிபோல) காட்டியும், இங்ஙனம்—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்—ஒருநாள் முழுவதும் யோகப்பயிற்சி செய்தாரென்று சொல்லப்படுகிறது.

எனவே, சாதாரண மனிதரைக் காட்டிலும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்கு ஒளி விஷயத்தில் அதிக ஸ்தாயிகள் எட்டின.

இங்ஙனம் கோடி சூரிய ப்ரகாசமுண்டானால்? அநந்த கோடானு கோடி சூரியன்கள் ஜகத்திலிருக்கின்றன. அவை ஒளி வீசத்தான் செய்கின்றன. ஆனால் நம்முடைய விழிப்புலன் சிறிது. நாம் மிகச் சிறிய எல்லைதான் பார்க்கிறோம்.

இங்ஙனம் ஜகத்தில் தத்துவங்களெல்லாம் அநந்தமாகவே யிருக்கின்றன. விரிக்கிற் பெருகும்.

இங்ஙனமே, நம்முடைய சைதன்யமும் அநந்த விஸ்தாரமுடையது.

பரமாத்ம சைதந்யத்தின் மஹிமையையே பூர்வயோகிகள் வர்ணித்திருக்கிறார்கள், உபமித்திருக்கிறார்கள்.

எல்லாம்—என்பது ஸர்வத்தின் பெயர்.

எல் என்பது, தமிழில், சூரியனுக்குப் பெயர்.

ஸர்வமென்ற மனக்கொள்கைக்குப் பிரதிநிதியாக நம்முடைய முன்னோர் சூரியனை ஆராதனை செய்தது யுக்தமேயாகும்.

'ஸர்வமென்ற மனக்கொள்கை வேறு; ஸர்வமென்ற ஞானலோகம் வேறு; ஸர்வமென்ற பஹிர்லோகம் வேறு; இதற்குள்ளேயே ஸர்வம் இசைமயமான லோகம் வேறு. ஸர்வம் தேஜோமயமான லோகம் வேறு; காலமயமான ஜகத் வேறு' எனப் பலவாக அநந்த லோகங்கள் தோன்றுமாயினும், ஸர்வம் ஒன்று. அதன் பெயர் கடவுள்.

மண்ணும் அதுவே, வானும் அதுவே. அது அநந்தலோகங்களை அநந்த வஸ்துக்களாலே பெருக்கிய அநந்தாநந்த வஸ்து.

எனவே ஒரு கல்லிலுந் தொழலாம்; பதுமையிலுந் தொழலாம்; அந்த ஸர்வமாகிய கடவுளைப் பெண்ணிலுந் தொழலாம்; ஆணிலுந் தொழலாம்.

ஸர்வமும் அஃதேயெனில், ஸர்வ பதார்த்தங்களும் அதன் ப்ரதிநிதிகளாகக் கருதி வணங்குதற்குரியன அல்லவோ?

மேலே நாம் விளக்கியபடி உணர்வு—அறிவு, சைதந்யம்—அநந்தமாக இருக்கவும், நமக்கு அதில் இரண்டு மூன்று 'ஸ்தாயிகள்' மாத்திரமே ஸாதாரண நிலையில் எட்டுகின்றன. மிஞ்சிப்போனால், சிலருக்கு எட்டு ஸ்தாயி ஒன்பது ஸ்தாயிகள் எட்டுகின்றன. அவர்கள் மஹாத்மாக்களென்றும், அவதார புருஷர்களென்றும் கொண்டாடுகிறோம். இது நிற்க.

சைதந்யமாகிய எல்லையற்ற கடலில் நமக்குத் தென்படும் ஓரிரண்டு ஸ்தாயிகளிலுங்கூட நாம் ஆரோஹண அவரோஹண கிரமங்களிலும், ஸ்வரக் கோவைகளிலும், ராக வேற்றுமைகளிலும் எண்ணிறந்த விசித்திர விசித்திரமான அனுபவங்கள் பெறுதல் ஸாத்யமேயாகும். அதுதான் ஜகத்தில் மஹத்தான ஆச்சர்யம்.

நம்முடைய வரையறுக்கப்பட்ட புலனுணர்வுக்குள்ளே அனந்தங்கள் பல இருக்கின்றன. ஸ்வரங்கள் ஏழுதானே? அப்படி இருந்தும், அவற்றின் கலப்புக்களால் இந்தப் பூமண்டலத்தின்மீது இதுவரை ஏற்பட்டனவும், இப்போது ஏற்பட்டு வருவனவும், இனி ஏற்படப் போவனவுமாகிய ராக பேதங்களே எண்ணில்லாதன. ஜ்யோதி விஷயத்திலும் அப்படியே. நமக்குப் புலனாகக் கூடிய ஜ்யோதி ஸ்தாயிகள் சிலவேயாயினும், இவற்றுள் காணும் வர்ண பேதங்கள் அநந்தமாகும்.

இங்ஙனமே, நம்முடைய சாதாரண ஜாக்ரபுத்திக்கு—அதாவது, சாதாரண மனிதனுடைய சாதாரண ஜாக்ரபுத்திக்கு—இடமாகிய சைதன்ய ஸ்தாயிகள் சிலவேயாயினும், இதற்குள்ளே அநந்தமான ஸம்பவங்கள் நிகழ்ந்துவருதல் வெளிப்படை. இதனுள் அநந்தமான இன்ப வாயில்கள் இருக்கின்றன.

அப்படியிருந்தும், மனிதர் இந்த எல்லைக்குள் தீரத்துடன் ஸஞ்சரிக்கவில்லை. சாதாரண ஜாக்ரலோகத்திலும், எவனும் வானத்தில் பருந்து சுற்றுவதுபோல சுற்றுவதைக் காண்பது மிகவும் துர்லபமாகும். இங்கு மானுடர், எலியொன்று பொறிக்குள்ளே அகப்பட்டுத் தவிப்பதுபோலே, ஒருசில வளையங்களுக்கு உட்பட்டுத் தவிக்கிறார்கள்.

பளீரென்று தீப்பெட்டியினின்றும் சூரியனைப் போய்க் கவ்வக்கூடிய திறமை மனுஷ்ய சாதாரண ஜாக்ரபுத்திக்கு உண்டு என்பது வெளிப் படை. சித்த யந்திரத்தை வெகுவேகமாகச் சுழற்றிக்கொண்டுபோய் அநந்தமான காட்சிகள் காணுந் திறமை சாதாரண மனிதனுக்கு ஜாக்ர உணர்வில் உண்டு. ஆனால், அத் திறமையை அவன் நேரே உபயோகப் படுத்துவதில்லை. இது நிற்க. நமக்குச் சாதாரண ஜாக்ர நிலையில் தோன்றும் இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளைத் தவிர, இவற்றின் கீழும் மேலும் எண்ணற்ற சைதன்ய ஸ்தாயிகள் உண்டென்று மேலே சொன்னோம். இதை ஒட்டிச் சில தத்துவ சாஸ்திரிகள், இந்த இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளுக்குக் கீழே இருப்பவற்றுக்கெல்லாம் ஒரு பெயர் கொடுத்துக் கீழ்ச் சைதன்யம்' (ச்ப்கான்சியஸ்) என்றும், ஸாமான்ய மனிதனுடைய ஜாக்ராவஸ்தையிலுள்ள சைதன்ய விஸ்தாரத்தை 'ஸாதாரண சைதன்ய'மென்றும், இந்த எல்லைக்கு மேலேயுள்ள அனந்த ஸ்தாயிகளுக்கும் ஒரு பெயர் கொடுத்து அதை 'மேற்சைதன்யம்' (சூப்பர் கான்சியஸ்) என்றும் சொல்லுகிறார்கள்.

'உழக்குக்குள்ளே கிழக்கேது, மேற்கேது? எல்லாம் ஒன்றாய், ஒரே அநந்த மண்டலமான பொருளில் மேலேது, தாழ்வேது? சர்வமும் சைதன்யமாகையிலே, சைதன்யப் பெருங் கடலுக்கிடையே ஒருசில துளிகளைப் பற்றிக்கொண்டு நாம் மற்றப் பகுதியை அதற்கு மேலென்றும் கீழென்றும் வகுக்க இடமுண்டோ?' எனில், உண்டு.

எங்ஙனமெனிலோ, அநந்தமாகிய ஜ்யோதி வெள்ளத்தில் நமக்குத் தென்படும் அளவையே ப்ரமாணமாக வைத்துக்கொண்டு, அதற்கு மேலும் கீழுமுள்ள பகுதிகளுக்கு ஒரே மொத்தமாக ஒளிமிகை யென்றும், இருளென்றும் பெயர்கள் கொடுத்துப் பகுத்திருப்பது போலே, என்க.

இங்ஙனம் கீழ்ச்சைதன்யமென்று பொதுப்படையாகக் கூறப்பட்ட அநந்த புவனக்கோவையில், கனவும் ஒரு படியாகச் சில நவீன தத்துவ சாஸ்திரிகளாலே கருதப்படுகிறது. 'மேற் சைதன்ய' வரிசையில் யோகானுபூதி முதலியவை சேர்க்கப்படுகின்றன. எனவே, சாதாரண மாக நனவில் தோன்றக்கூடாத சில அனுபவங்கள் கனவிலே தோன்றுதல் அசாத்யமில்லையெனினும், சாதாரணமாகக் கனவு நனவிலே கண்டதைத்தான் குழப்பிக் குழப்பிச் சித்திரித்துக் காட்டு கிறது.

எனினும், யோக ஸித்தியிலே சில படிகள் ஏறினவர்களுக்குக் 'கீழ்ச் சைதன்ய' லோகத்தில் சில புதிய வெடிப்புகள் திறந்து, பூமண்டலத் தின் மத்ய பாகத்தில் மறைந்துகிடக்கும் அக்நி சில மலைத் திறப்புக் களில் வெளியேறி வருவதுபோலே, சில அற்புதமான அனுபவங்கள் ஏற்படுதல் சாத்யந்தான் என்றும், அவை ஒருவேளை மேல் லோகங் களினின்றும் (கங்காப்ரவாஹம் வானத்தினின்றும் பாதாளத்துக்கிறங் கியதுபோல்) சாதாரண ஜாக்ர உணர்வாகிய புவனத்தைக் கடந்து, (சில சமயங்களில் சாதாரண ஜாக்ரபுத்திக்குத் தெரியாமலே) 'பாதாள சைதன்ய' மண்டலத்தில் இறங்கிக் கனவில் தோன்றக்கூடுமென்றும்

மேலே பதஞ்சலி முனிவர் கூறியுள்ள ஸூத்திரத்தினின்றும் ஊஹிக்க இடமுண்டாகிறது.

கனவில் தேவதா ரூபங்கள், அற்புதமான இயற்கைக் காட்சிகள் (அதாவது ஸாதாரணமாக விழிப்பில் காணக்கூடிய பரமாச்சர்யமான இயற்கைக் காட்சிகளினின்றும் வேறுபட்டன) முதலிய வியப்புக்கள், யோகப் படிகளின்மீது மிகவும் சிரமத்துடன் ஏறிச் செல்லும் ஸாதகனுக்குத் தென்படுமாயின் அவற்றை அவன் நனவிலும் சிந்தை செய்வதால் சித்த சாந்தி விளையுமென்பது பதஞ்சலியின் கருத்து. மேலும், அவ்விதமான தேவ ரூபங்கள் ஒருவேளை நனவிலே கண்ட காட்சிகளின் ப்ரதி பிம்பங்களாகவேயிருக்குமென்று வைத்துக் கொள்ளினும், நனவுக் காட்சிகளைக் காட்டிலுங்கூடச் சில சமயங்களில் அவற்றின் கனவு ப்ரதி—சித்திரங்கள் அதிகத் தெளிவுடையனவாக இருப்பதால் அவற்றை நனவில் மீண்டும் சிந்திப்பது சித்த ஸமாதானத்துக்கு வழியாகக் கூடும்."

நம் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வடமொழியிலுள்ள வேதங்களையும் யோக நூல்களையும் பயின்றதோடு, வேத ரிஷிகளின் கவிதைகள் சிலவற்றையும் பகவத்கீதையையும், பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தையும் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். அவருடைய வாழ்வில் நேரிலே சில சித்தர்களைச் சந்தித்த அனுபவமும் அவருக்கு உண்டு. மேலே கண்ட அவருடைய விளக்கங்கள் இந்த அனுபவத்திலிருந்து பிறந்தவையாக இருப்பதால், நமது சித்தர் இலக்கியத்தின் பாங்கோடு ஒத்த நிலையில் இந்த உரை அமைந்திருக்கிறது.

சித்தர் இலக்கியம் வழங்கியுள்ள யோகக் குறியீடுகளுக்கும் குழூஉக் குறிச் சொற்களுக்கும் பாரதியாரின் இந்த விளக்கமும் சான்றாக அமைகிறது.

★

## 26. சித்தர் வழங்கும் ஒண்பொருட் சொற்கள்

சித்தர் நூல்களில் அடிக்கடி பயின்றுவருகிற சில சொற்கள் உண்டு. வழிவழியாக அவை சில குறிப்பிட்ட கருத்துக்களுடன் வழங்கு வதாலும், ஒரு பொருள் குறித்த ஒரே சொல்லும், பல பொருள் குறித்த ஒரு சொற்கிளவியும் சித்தர் வழக்காற்றில் வருவதாலும், அத்தகைய ஒருசில சொற்களை இங்கே கொடுப்பது நலமாகும்.

'உத்தேசம்' என்ற சொல்லுக்குச் சித்தர் மொழியிலே குறிக்கோள் என்று பொருளாகும்.

'உவமை' என்பது கண் எதிரே தெரிவது என்று பொருள்.

'ஈமம்' என்ற சொல் சுடுகாடு என்பதைக் குறிக்கும். இங்கே ஆடுபவன் ஈமத்தலைவனாகிய சுடலைப் பரம்பொருள். ஈமம் என்ற சொல்லே 'ஈம்' என்று தொல்காப்பியத்தில் வருகிறது.

'ஏம்' என்பது நள்ளிரவையும், அந்த நள்ளிரவுத்துயிலில் உண்டாகும் சித்த நிலையையும் குறிக்கும்.

'தடம்' என்பது மன உலகம் விரிந்து நிற்பதைக் குறிக்கும்.

'உரு' என்பது நிறத்தையும் வடிவத்தையும் ஒளியின் வண்ணத்தை யும் குறிக்கும். இதற்கும் 'ரூபம்' என்ற வடசொல்லுக்கும் பொருள் வேறுபாடு உண்டு. 'உருவும் கெழுவும் நிறனாகும்மே' என்பது தொல்காப்பியம்.

'உலகம்' என்பது அழிவது என்ற பொருளிலே, நிலையற்ற பொருளைக் குறிக்கும்.

'ஆதாரம்' உடலின் நிலைகளைக் குறிக்கும்.

'இடைகலை' அல்லது 'இடகலை' என்பது நாசியின் இடது மூச்சு.

'பிங்கலை' என்பது வலது மூச்சு.

'சுழுமுனை' என்பது நடுமூச்சு.

கண்ணுக்குத் தெரிகிற பரு உடம்பை 'அன்னமயகோசம்' என்றும், காற்றுடம்பை—வளியுடம்பை 'பிராணமயகோசம்' என்றும், மனஉடம்பை 'மனோமயகோசம்' என்றும், அறிவுடம்பை 'விஞ்ஞான மயகோசம்' என்றும், இன்ப உடம்பை 'ஆனந்தமயகோசம்' என்றும் சித்தர்கள் அழைப்பார்கள்.

'சம்பிரதாயம்' என்ற சொல் நடைமுறைப் பயிற்சியைக் குறிக்கிறது.

'சவிகற்பம்' என்பது வேற்றுமை.

'நிருவிகற்பம்' என்பது எழுச்சி.

'வியாப்பியம்' என்பது அமைதி நிறைவு.

'துவாதசாந்தம்' என்ற சொல் சித்தர்களின் பயிற்சி நிலைகளிலே இறுதியான பன்னிரண்டாவது நிலை.

குருநாதனைக் குரு, குரவன், குரிசில் என்று அழைப்பது மரபு.

உயிர் உணர்வை ஆன்மபோதம் என்றும் அழைப்பதுண்டு.

'யாமம்' என்ற சொல் உயிர்களை உறக்கத்தில் பற்றுவது என்று பொருள் தரும்.

'மனம்' என்பது தமிழ்ச சொல்லாகிய 'மல்' என்பதிலிருந்து தோன்றிக் கலக்குவது, எதிர்ப்பது, மயக்குவது, போரிடுவது என்ற பொருளில் வரும். இதுவே 'பாசி' என்னும் பொருளில் அழுக்கு எனவும், சிக்க வைப்பது அல்லது கட்டுவது என்ற பொருளில் 'பாசம்' எனவும் ஆண்டுவரும்.

இனி, சில தொகைச் சொற்களைப் பார்ப்போம்:

பஞ்சபூதங்கள் என்பவை, மண் (பிருதிவி), புனல் (அப்பு), அனல் (தேயு), வளி (வாயு), வானம் (ஆகாயம்) என்று ஐந்துமாம். இவை ஐந்தும் பருப்பொருள்கள் எனப்படும்.

'பஞ்ச ஞானேந்திரியங்கள்' தமிழில் ஐம்பொறிகள் எனப்பெறும். இவை மெய், வாய், கண், மூக்கு, செவி.

'பஞ்ச தன்மாத்திரைகள்' தமிழில் ஐந்து இயல்புணர்வுகள் எனப்படும். அவை சுவை (ரசம்), ஒளி (ரூபம்), ஊறு (பரிசம்), ஓசை (சப்தம்), நாற்றம் (கந்தம்).

தொழில் உறுப்புகள் ஐந்தையும் 'பஞ்ச கன்மேந்திரியங்கள்' என்பர். அவை கை (பாணி), கால் (பாதம்), வாய் (வாக்கு), எருவாய் அல்லது எருவாசல் (பாயுரு), கருவாய் அல்லது கருவாசல் (உபத்தம்).

'அந்தக்கரணங்கள்' தமிழில் அகக்கருவிகள் எனப்படும். அவை மனம் (மனஸ்), அறிவு (புத்தி), நினைவு (சித்தம்), முனைப்பு (அகங்காரம்).

புறக்கரணங்களைத் தமிழில், புறக்கருவிகள் என்று அழைப்பர். அவை இடைகலை, பிங்கலை, சுழுமுனை, உள்நாக்கு (சிகுவை), வலக்கண் (புருடன்), இடக்கண் (காந்தாரி), வலச்செவி நரம்பு (அத்தி), இடச்செவி (அலம்புடை), கருவாய் நரம்பு (சங்கினி), எருவாய் நரம்பு (குரு).

காற்றுக்கள் பத்துவகைப்படும். அவற்றைத் தசவாயு எனவும், பத்துவளி எனவும் சித்தர் இலக்கியம் அழைக்கிறது. அவையாவன:

1. உயிர்வளி அல்லது பிராணன்
2. மலக்காற்று அல்லது அபானன்
3. தொழிற்காற்று அல்லது விபானன்

4. ஒலிக்காற்று அல்லது உதானன்
5. நிரவுகாற்று அல்லது சமானன்
6. தும்மற்காற்று அல்லது நாகன்
7. விழிக்காற்று அல்லது கூர்மன்
8. கொட்டாவிக்காற்று அல்லது கிருகரன்
9. இமைக்காற்று அல்லது தேவதத்தன்
10. வீங்குற்காற்று அல்லது தனஞ்சயன்

ஐந்து குடல்களையே 'பஞ்சாசயங்கள்' என்று அழைக்கிறார்கள். அவை வருமாறு :

1. அமர்வாசயம் (இரைக்குடல்)
2. பகிர்வாசயம் (செரிகுடல்)
3. சலவாசயம் (நீர்க்குடல்)
4. மலவாசயம் (மலக்குடல்)
5. சுக்கிலவாசயம் (வெண்ணீர்க்குடல்)

ஆறு ஆதாரங்களை ஆறு நிலைகள் என்றும் அழைப்பதுண்டு. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி அல்லது விசுத்தம், ஆக்ஞை அல்லது ஆக்ஞும்.

திரிமண்டலம் அல்லது மும்மண்டலம் என்பவை : தீ, ஞாயிறு, திங்கள். இவையே அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம் ஆகியவை.

மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை முனைப்பு, செயல், வினை எனவும் வேறு உருவகங்களில் சொல்வார்கள்.

முக்குற்றங்கள் ஆகிய 'திரிதோடங்கள்' வாதம், பித்தம், சிலேஷ்மம் அல்லது சிலேப்பினம் அல்லது கோழை அல்லது கபம் எனப்படும்.

மனத்தின் ஐவகை நிலைகளை 'அவத்தைகள்' என்று அழைப்பர். அவை :

1. சாக்கிரமாகிய நனவு
2. சொப்பனமாகிய கனவு
3. சுழுத்தி அல்லது சுசுப்தி என்னும் உறக்கம்
4. துரியமாகிய பேருறக்கம்
5. துரியாதீதமாகிய உயிர்ப்படக்கம்

இந்த வகையான சொற்களைத் தவிர, பரிக்கிரக சக்தி (வைப்பாற்றல்), திரோதான சக்தி (மறைப்பாற்றல்), இச்சாசக்தி (விழைவாற்றல்) போன்ற சொற்களும் அடிக்கடி பயின்று வருவதுண்டு.

★

# 27. சித்தர்களின் மந்திர வழிபாடு

சித்தர் இலக்கியங்களிலே நாம் காணுகிற வழிபாட்டு முறைகள் பலவாக உள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்படுகின்ற நான்கு விதமான முறைகளையும் பற்றி நம்முடைய சித்தர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரு மாறுபாடு என்னவென்றால் இந்த நான்கு முறைகளிலுமே சித்தர்களுக்கு என்று தனிப் பண்போடு கூடிய விதிமுறை அமைந்திருக்கிறது. சரியை என்று சொல்லும் போது சாதாரண மக்கள் இறைவனை வழிபடுகின்ற தொண்டு நெறியே பேசப்படுகிறது என்றாலும், இந்தத் தொண்டுநெறி என்ற வழிபாட்டு முறையானது சித்தர்களின் ஆன்ம நிலையிலே சில சிறப்பு களுடன் விளங்குகிறது.

ஆகம முறைப்படி கூறுகின்ற சரியை வழிபாட்டிலே சட்டங்களுக்கு முக்கியம் கொடுக்கப்படுகிறது. தொண்டு செய்கின்ற முறையிலே கோவிலுக்கும், அடியார்களுக்கும், நெறிமுறையான வழிபாட்டுச் சட்டங்களிலே ஈடுபட்டுள்ளோருக்கும் செய்கின்ற ஊழியம் விரிவாகப் பேசப்படுகின்றது. ஆனால் சித்தர்கள் இந்த வழிபாடுகளிலிருந்து மாறுபட்டு, சம்பிரதாயச் சடங்குகளைக் கடந்து, தொண்டு முறை களையே தாங்கள் வகுத்துள்ள சரியையிலே பேசுகிறார்கள்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற ஒரு பெரிய புரட்சி நெறியை முதன்முதலாக வகுத்துள்ளவர்கள் நம்முடைய தமிழகத்துச் சித்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாயத்திற்கு நாம் ஆற்றுகின்ற தொண்டானது இறைவனுக்குச் செய்கிற தொண்டாகவே ஆகிறது என்பது சித்தர்களின் கொள்கை. இன்னும் சொல்லப் போனால் மக்களுக்குச் செய்கின்ற தொண்டு இறைவனுக்குச் செய்கின்ற தொண்டைவிட முக்கியமும் சிறப்பும் வாய்ந்தது என்று சில சித்தர்கள் கூறுகிறார்கள். இந்தக் கருத்தை உள்ளத்தில் கொண்டுதான் திருமூலரும் தம்முடைய திருமந்திரத்திலே பொதுமக்களை நடமாடும் இலிங்கங்கள் என்று அழைக்கிறார். கோவிலின் கருவறையிலே நாம் காணுகின்ற இலிங்கம் படமாடு இலிங்கம் என்று திருமந்திரத்திலே குறிக்கப்பெறுகிறது. திருமூலர் படமாடு இலிங்கம், நடமாடு இலிங்கம் ஆகிய இரண்டையும் பற்றிக் குறிப்பிடும்பொழுது, படமாடு இலிங்க மாகிய மூலவருக்கு நாம் வழங்கக்கூடிய நிவேதனத்தைவிட நடமாடு இலிங்கத்திற்கு நாம் வழங்குகின்ற பொருள் சிறப்புடையது என்றே அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். மூலவருக்கு வழங்குகிற நிவேதனம் படமாடு இலிங்கத்திற்குச் செய்கின்ற ஈகையாகும். இந்த ஈகை அல்லது

நிவேதனம் நடமாடு இலிங்கத்திற்குப் பயன்படாது என்கிறார் திருமூலர். ஆனால் நடமாடு இலிங்கத்திற்கு ஒன்று வழங்கினோமானால், அது படமாடு இலிங்கத்திற்கும் ஆகிறது என்பது திருமூலருடைய கொள்கை.

சித்தர்கள் அனைவருமே இந்த நெறிமுறையிலே தங்கள் சரியையை வகுத்துள்ளார்கள். எனவேதான் சித்தர்களுடைய சரியை முறையானது புரட்சிக் கருத்துக் கொண்டதாய் விளங்குகிறது.

இவ்வாறுதான் சித்தர்கள் வகுத்துள்ள கிரியை என்கின்ற வழிபாட்டுச் சடங்குகளுமாம். அதெப்படி? இறைவனுக்குச் செய்கின்ற வழிபாட்டிலே ஆகம விதிமுறைகள் விரிவாகப் பின்னிப் பிணைந்துள்ளன. சித்தர்கள் வகுத்துள்ள கிரியை வழிபாட்டிலே சடங்குகளுக்கு முக்கியம் இல்லாமல், மனத்தினால் செய்யப்படுகின்ற பாவனை வணக்கத்திற்கே முக்கியம் தரப்படுகிறது. புறப்பொருள்களோ புற வழிபாடோ முக்கியம் பெறாமல், மனத்தினால் இறைவனுக்குச் செய்கின்ற தியான முறையானது சித்தர்களின் கிரியையிலே சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

யோகம், ஞானம் என்கின்ற இரண்டு வழிகளும் சித்தர்களுக்கே உரிய தனிப்பட்ட வழிகளாக இருப்பதால், ஆகமத் துறைகளிலே வருணிக்கப்படுகின்ற வழிபாட்டு முறைகளிலே யோகமும் ஞானமும் அத்தனை முக்கிய உறுப்புகளாக இடம்பெறுவதில்லை. இவை இரண்டும் சித்தர் இலக்கியங்களிலே விரிவும் வகையும் கொண்டனவாக விளங்குவது கண்கூடாகும்.

யோகம், ஞானம் என்ற இரண்டு துறைகளையும் சித்தர்கள் விரிவாகக் கூறியுள்ள போதிலும், சரியை கிரியை ஆகிய பரந்த வழிபாட்டு முறைகளையும் அவர்கள் தங்கள் இலக்கியங்களிலே பேசியிருப்பதால் அவற்றின் நுட்பத்தையும் ஆராய்வது பயன் தருவதாகும்.

மூர்த்தி வழிபாடு என்று சொல்லப்படுகின்ற விக்கிரக ஆராதனை பற்றி நம்முடைய சித்தர்கள் பல இடங்களிலே பேசுகிறார்கள். பொதுமக்களோடு சேர்ந்து பொதுமக்களுக்காக ஏற்பட்ட கோயில்களிலே வழிபடுகின்ற சாதாரணமான பூஜை முறைகளைப் பற்றிச் சில சித்தர்கள் தங்கள் பாடல்களிலே குறிப்பிடுகிறார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றிலும் பொதுமக்கள் ஈடுபட்டு வழிபாடு செய்வதை ஆதரிக்கும் சித்தர்களும் உண்டு. இவற்றை ஏளனம் செய்கின்ற சித்தர்களும் உண்டு.

'நட்ட கல்லும் பேசுமோ?' என்று கேட்கிற சிவவாக்கியர், அதற்கு ஒரு நிபந்தனையையும் கூறுகிறார். நாதனாகிய இறைவன் உள்ளத்திலே குடிகொண்டுவிட்டால் இந்தப் புறச் சடங்குகளுக்கு அவசியம் இல்லை என்பதே சிவவாக்கியரின் கொள்கையாகும். எனவே நாதன் உள்ளத்துக்குள்ளே வந்து அமருகின்ற வரை, இந்தப் புறச்சடங்குகளும்

வேண்டியதுதான் என்பதே சித்தர்களின் கொள்கை. இறைவனை உள்ளத்திலே அமர்த்திக்கொள்ளக்கூடிய ஆற்றல் ஒருவனுக்கு வந்துவிட்டால் அவனுக்கு எவ்விதமான புறச் சடங்குகளும் வேண்டுவதில்லை. அதுவரை சரியைகளும் கிரியைகளும் கடைபிடிக்கத் தக்கனவே என்பதுதான் சித்தர்களின் பொதுநோக்காகும்.

'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்பது சித்தர் வாக்கு. ஆனால் மனம் செம்மையுறுவது எவ்வாறு? மனம் செம்மை பெறுவதற்காகக் கிரியையும் இடம்பெறுகிறது.

மேலெழுந்தவாறாக நம்முடைய தமிழகத்தின் சித்தர் இலக்கியங்களைப் பார்த்துவிட்டுக் கோவில்களையும் குளங்களையும் அவர்கள் வெறுத்துப் பேசுகிறார்கள் என்று முடிவு கட்டிவிடக் கூடாது. ஆன்ம பரிபக்குவம் ஏற்பட்ட பிறகு இறைவனை வழிபடுகின்ற பாவனைமுறை கைவசம் ஆகிவிட்டால், எவ்விதமான வழிபாட்டுச் சடங்குகளும் ஒருவனுக்குத் தேவையில்லை என்பதை வலியுறுத்தவே சித்தர்கள் பலவகையான உத்திகளைக் கையாண்டு, ஏளனம் செய்வதைப் போன்று சில பாடல்களை மொழிந்திருக்கிறார்கள். சடங்குகளுக்கு முக்கியம் கொடுத்துவிட்டு, மனத்தினில் செய்யவேண்டிய ஒருமை வழிபாட்டை மறந்துவிடக்கூடாது என்ற ஒரு பெரிய கவலையினாலும், ஆர்வத்தினாலும், சித்தர்கள் புறச் சடங்குகளை மிகைப் படுத்தாமல், சில இடங்களில் ஏளனம்கூடச் செய்து பாடுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அர்ச்சனை செய்வதற்குரிய மந்திரங்களுக்கும் இந்த உண்மை பொருந்தும். மொழிகளைக் கடந்த இறைவனை மொழியைக் கொண்டு வழிபடும்போது, சொற்களிலேயே எல்லாம் அடங்கி விட்டது என்று நாம் எண்ணிவிடல் ஆகாது என்பதற்காக, மந்திரங்களையும் அவர்கள் உதறிப் பேசுகின்ற இடங்கள் உண்டு. இப்படி அவர்கள் பேசுவதால் மந்திரங்களின் சிறப்பை அவர்கள் ஏளனப் படுத்துகிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது.

சித்தர் இலக்கியங்களை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தோமானால் பல இடங்களில் சித்தர்கள் மிகமிக அரிய ஆற்றல்வாய்ந்த மந்திரச் சொற்களையும் எடுத்து இயம்பியிருப்பதைக் காணலாம். இந்தச் சொற்கள் எல்லாம் எந்த மொழிகளைச் சேர்ந்த சொற்கள், எந்த பாஷைக்கு உரியவை என்று இலக்கிய ஆராய்ச்சி செய்வதனால் பயனில்லை. நுட்பமாக ஆராய்ந்து பார்த்தோமானால் இந்த மந்திரங்களெல்லாம் ஒலிகளே எனப் புலனாகும். மொழியையும் பொருளையும் கடந்து, இந்த வரம்புகளைத் தாண்டிய ஒலிக்குறியீடுகளாகவே இவை இலங்குவதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஒலிக்குறியீடுகளுக்கு ஆன்மஆற்றல் இருப்பதை உலக நாடுகள் பலவற்றிலுள்ள விஞ்ஞானிகள் கண்டு கூறியிருக்கிறார்கள்.

ஏகநாதருடைய சீடர்களிலே பலர் இறையாற்றல் நிரம்பிய மகான்கள். சமண மதத்திலும், சாக்கிய மதத்திலும், இஸ்லாமிய

மதத்திலும், வேறுமதங்களிலும் உள்ள பல பெரியோர்களும், இத்தகைய ஆற்றல்கள் நிரம்பியவர்களேயாம். அவர்கள் எல்லாரும் எந்த மொழியைக் கொண்டு, எந்தச் சொற்களை உச்சரித்து இறை ஆற்றலைப் பெற்றார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மந்திரங்கள் என்ற ஒலிகள் எல்லா மொழிகளுக்கும் உரியவை என்பதோடுகூட இவை மொழியின் அகல நீளங்களுக்கு அப்பாற்பட்டவை என்பதையும் நாம் மறந்துவிடல் ஆகாது.

இந்த இடத்தில் இன்னொரு பெரிய இரகசியத்தையும் சித்தர் இலக்கியங் கொண்டு நாம் காணவேண்டும். ஒலிகளை உச்சரிப்பதோடு நின்றுவிடாமல், அந்த அந்த ஆற்றல்களுக்கு உரிய ஒலிக் கலங்கள் உடம்பின் அங்கங்களில் எங்கே இருக்கின்றன என்பதையும், சித்தர்கள் கண்டு சொல்லியிருக்கும் பாங்கையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஒலியானது நம்முடைய உடம்பின் மன ஆற்றல் மையங்களில் எங்கிருந்து எவ்வாறு புறப்படுகிறது என்பதையும் சித்தர்கள் கண்டு கூறியிருக்கிறார்கள். எனவே சித்தர்களுடைய இலக்கியத்தில் காணப்படுகின்ற மந்திரச் சொற்களை உச்சரிக்கும்போது, உடம்பிலுள்ள அந்த அந்த ஒலி மையங்களையும் பாவனையினாலோ அல்லது விரல்களைக் கொண்டோ தொடவேண்டும் என்று ஒரு விதிமுறை சித்தர் இலக்கியத்திலே பயிலப்படுகிறது. இந்த மந்திர இடங்களைத் தான் மிகமிக முக்கியம் வாய்ந்த அதிர்வு நிலையங்கள் என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது.

எத்தனையோ ஆண்டுகளாக ஒருவன் ஒரு குறிப்பிட்ட தேவதையை நாடி மந்திரங்கள் உச்சரித்து வரக்கூடும். ஆனால் இந்த வெறும் உச்சரிப்பினால் மட்டும் சித்தி கிடைத்துவிடாது என்று சித்தர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். தொட்டுச் சொல்லுதல் என்றும், இடத்தைக்கொண்டு இயம்புதல் என்றும், ஆதார நிலைகளிலே நின்று உச்சரித்தல் என்றும், பலவாறாக இந்த மந்திர இரகசியம் சித்தர் இலக்கியத்திலே பேசப்படுகிறது. வாலை என்றும், திரிபுரை என்றும், புவனாபதி என்றும், திருவம்பலம் என்றும் எத்தனையோ பலவகையான யந்திர மந்திரங்களை எடுத்துச் சொல்லுகிற சித்தர்கள், இந்த ஒலிக் குறியீடுகளை உச்சரிக்கும்போது, நம்முடைய உடம்பின் எந்த எந்த இடங்களிலிருந்து எந்த உச்சரிப்புகளை எழச்செய்ய வேண்டும் என்பதையும் வகுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இதனுடைய நோக்கம் என்னவென்றால் உடம்பும் உள்ளமும் இணைந்த முறையிலே வழிபாடு இயங்கும்போது, இறை ஆற்றல்கள் நமக்கு வசமாகின்றன என்பதே.

கிரியை, சரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிபாட்டு முறைகளிலுமே சித்தர்களுடைய இந்தச் சட்டம் ஆட்சி செய்கிறது. எந்த வழிபாட்டு முறையை ஒருவன் கையாண்ட போதிலும், உடம்பும்

உள்ளமும் இணைந்து அதில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அந்த ஈடுபாட்டுக்குரிய நெறிமுறைகளையும் ஆதாரங்களோடு விளக்கி யிருக்கிறது சித்தர் இலக்கியம்.

வடமொழி மரபிலே பற்பல சக்கரங்களும், அவற்றுக்குள் 'அடைக்கப்பட்டுள்ள' மந்திரங்களும் நூற்றுக்கணக்கில் பயின்று வருவது போலவே, சித்தர் இலக்கியங்களிலும் பல சக்கரங்களும் ஆன்ம ஒலிகள் கொண்ட மந்திரங்களும் நேர்முக உபதேச முறையிலே வழங்கி வருகின்றன. திருமூலரும் தமது திருமந்திர நூலில் சில முக்கிய சக்கரங்களையும், அவற்றில் எழுத்துக்களை அமைக்கும் முறைகளை யும், ஆன்ம நுட்பத்தோடு இயம்பியுள்ளார்.

சித்தர் மரபைச் சேர்ந்த சில பெரியோர்கள் கற்பித்து வருகிற ஒருசில சக்கரங்கள் வரைபடங்களாக இந்த நூலில் இணைக்கப் பெற்றுள்ளன.

★

## 28. எழுத்தும் நிலையும்

என் ஞானாசிரியருள் ஒருவராகிய சிவயோகி இரத்தின சபாபதியார், சித்தர்களின் எழுத்து இரகசியங்களில் முக்கியமான பகுதியைத் தொகுத்து ஆதாரநிலைகளின் நுட்பங்களை விளக்கியிருக் கிறார். அது வருமாறு :

பிரணவம் அ, உ, ம என்றுள்ள மூன்று உறுப்புக்களைக் கொண்டது. அதில் உள்ள அகரகலை உயிர் எழுத்துக்களாகவும் ஸ்வரமாகவும் உள்ளது. அந்த எழுத்தே ஐம்பத்தொரு அக்கரமாக விரிகின்றது. அ, உ, ம என்ற மூன்றும் சேர்வதில் அர்த்தமாத்திரைப் பிரணவம் உதிக்கும். இதுவே சோதி எழுத்தாகும். இதனால் காணப் படுவது சந்திரகலையில் மீதமுள்ள பதின்மூன்று கலைகளுமாகும். இவைகள் நாத வெளிப்பாட்டினால் அறியத்தக்கன. சந்திரனின் சோடச கலைகள் பெயரும், இடமும்: —

1. அகரம் — மேதை — தொப்புள்
2. உகரம் — அர்க்கீசம் — இருதயம்
3. மகரம் — விடகலை — கண்டம்
4. விந்து — புருவமத்தி
5. அர்த்தசந்திரன் — நடுநெற்றி

6. நிரோதினி
7. நாதம்
8. நாதாந்தம்
9. சத்தி

} — சிரசு

10. வியாபினி
11. வியோமரூபிணி
12. அநந்தை
13. அநாதை
14. அநாசிருதை
15. சமனை
16. உன்மனை

} — சிரசின் மேலுள்ள ஆகாயப் பகுதி. சிரசுக்கு மேல் பன்னிரண்டு விரற் கடைக்குள்ளாகும் நிலையாகும்.

உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டில் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே

பிராணன் என்பது சூரிய சத்தியாகும். அபானன் என்பது சந்திர சத்தியாகும். சூரியன் அறிவுருவானவன். அறிவு இச்சையின் தன்மையைப் பொறுத்து விஷய வாசனைகளைப் பற்றிச் செல்வது. உணர்வு என்பது முன் அனுபவித்த பொருளின் இச்சையால், பொருளின்மேல் கொண்ட அவாவினால், பொருளை அடைவதில் உள்ள மகிழ்ச்சியாகும். மனிதனிடம் இந்த இரு தன்மைகளும் காமவயப்பட்டுள்ளன. காமமென்பது மூலாதார அக்கினியே யாகும். கழுத்துக்குக் கீழ் இடம் கொண்டவை, அக்கினி கண்டமும் சூரிய கண்டமும். உருவமாயினும் சரி, அருவமாயினும் சரி, சாஸ்திர ஆராய்ச்சி யாயினும் சரி, அப்பியசிப்பதில் சிரசில் உள்ள அறிவணுக்கள் பக்குவ மான முறையில் வளர்ச்சியடைவதில், மூளையில் சூக்குமப் பகுதியான மனமண்டலமும் வளர்ச்சி அடைகிறது. சூக்குமம் வளர்வதற்கேற்ற முறையில் சூக்கும உடலில் குணதர்மமும் அமைகிறது. குணங்கள் காமக்குரோதாதிகள் இருண்ட காரிருளைப் பெருக்கும். அன்பு நீல ஒளியையும், அறிவு மஞ்சள் ஒளியையும் பெருக்கும். சூரியனுக்குப் பிங்கலன் என்றே பெயர். பிங்கலன் என்றால் பொன்னிறம் கொண்டவன் எனப் பொருள். பிராணனை எழுப்புதல் என்றால் மூச்சு என்றே நுட்பம் அறியாதவர் இடர்ப்பட்டுக் கெடுகின்றனர். தேகத்தை விரும்பி நிற்பவனுக்குப் புருடன் என்று பெயர். யோகமுறையில் புருடனுக்கு நெற்றிமுதல் உந்திவரையில் கீழாலவத்தை மேலாலவத் தையில் கூறப்பட்டுள்ளது. சுத்தாவத்தை விறக்கப் புருடனை ஒளிமயமாகக் கண்டபோது சீவன் ஒளிபெறும். குரு உதவியால் இந்தச் சூரிய ஒளி வலது கண்ணுக்குமேல் பார்க்கக்கூடியதே. இதுவே முதல் தீக்ஷையாகும். இங்குக் கூறிய சிவமந்திரம் மூலமது என்ற பிரணவமே யாகும். இது புருடனைச் சீவனாக மாற்றும் உபாயம். இவையெல் லாம் புறத்தில் காணபதில்லை. உடலைச் சூழ உள்ள மனமண்டலத் திலாகும். இதை, "உய்ய என் உள்ளத்துள்ள ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்றும், 'மெய்யே உன் பொன்னடிகள்' என்றும் விளக்குகிறார். இந்த உண்மை அறிந்தவர் தன்னைச் சூழ உள்ள இருள் மண்டலத்தைக் கெடுக்கும் ஆற்றல் பெற்றுவிடுவதால் வீடுபேறு பெறுகின்றனர்.

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்

(கீர்த்தித் திருவகவல்)

உருவ வழிபாட்டில் செய்வதும் இதுவேதான். சதாசிவரின் தெற்குமுகம் அகோரமாகும். அவர் ஆட்சி இருதயமாகும். அதனால் 'அகோர இருதயாய நம' என்று தியானிக்கின்றனர். கோரமான சம்சார விருத்தியைக் கொடுப்பவர் என்று பெயர்.

இதன் பிறகே சந்திரன் என்ற அபானனை எழுப்ப வேண்டும். அபானன் நீரை முகமாகவுடையவன் (அப்பு ஆனனம்); நீர் முகத்தி

விருந்து காமக்கழிவான இந்திரியம் ஏற்படுகின்றது என்பதை அறியவும். சந்திரன் குளிர்ந்த நிலவொளியில் இடக்கண்புறம் வெளிப்படுவன். இந்த உண்மையை அறிவதில் சிவயோகம் உள்ளது. இதைத் திருவாசகத்தில் உத்தரகோசமங்கை என்று விதந்து கூறியுள்ளார். இங்கேதான் சீவனும் சிவனும் சேரத் தொடங்கும் இடமாகும்.

பிரணவ சொரூபத்தில் அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்கள் முறையே பிரமனையும் விட்டுணுவையும் ருத்திரரையும் குறிக்கும் அட்சரங்களாம். அந்த ஒலியில் அந்தர்க்கதமாக உள்ளது அர்த்தமாத் திரைப் பிரணவம் ஆகும். அதுவே விந்து நாதங்களைத் தன்னகத்தே கொண்டது. விந்து நாதங்கள் கீழ் நோக்குதலையுடையபோது சீவன் பஞ்சகர்த்தாக்களின் நியதிக்குள் படுகிறான். நாதாந்த தத்துவத்தால் உணர்த்தப்படும் சிவம் ஐந்தொழிலையும் கடந்தது. ஐந்தொழிலும் அதன் சந்நிதானத்தில் நடைபெறுகிறது. அது எவ்விதத் தோற்றக் கேடுகளும் அற்றது.

உதாரணம்: நிழற்படத் திரை வெண்ணிறமாய் அசைவற்றுள்ளது. ஆனால் அதிலேதான் சகல அசையும் காட்சிகளும் காணப்படுகின்றன. மகா சூக்குமமான ஒளிப்பதிவினால் திரையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதுபோலச் சிவத்துடன் இணைந்துள்ள ஆத்மாவில் சீவனின் குணதோஷங்கள் பாதிக்கப்படவில்லை. சீவனேதான் பிறவிக்கு வருகிறது.

சிவம் ஒரு விகாரமும் அடையாமல் உள்ளது. பெருகுவதும் இல்லை. அளவுக்கு உட்பட்டதுமில்லை, அழிவில்லை. அப்படியிருந்தும் எல்லா உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் அருள்புரிந்தும் பிறவிக்கு விடுத்தும், அவனது அடிமையாக்குவதையும் செய்து' கொள்ளுகிறது!

பூவின் மணம் வெளியில் இருந்து அதனிடம் வரவில்லை; பூ பக்குவ மானதும் மணம் வெளிப்படுகிறது. அதுபோல மனிதர் உள்ளத்தில் உள்ள பிரணவமும் சாதாரணர் அறிவுக்கு மிகவும் தூரத்திலுள்ள பொருளாக உள்ளது. பக்குவமான ஆன்மாக்களுக்கு அவனுடைய தொழும்பில் பிரணவம் அறியப்படு பொருளாகவுள்ளது. இது 'நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே' என்றதற்குப் பொருள்.

அதன் பயனாக மனம், புறத்தே செல்லுதலையும், அவ்வாசனை களை அறிவதையும் விட்டபோது, மறைந்திருந்த சிவம் வெளிப்படுப வனாக உள்ளான்.

ஆத்மஞானிகளுக்குத் தொண்டையில் ஒரு இனிப்புச் சுவையுண்டு. அது கறந்த பால் சர்க்கரை நெய் கலந்த சுவைபோல சிந்தனையில் உண்டாகும் என்றார்கள். அந்தச் சுவையின் பயன் பிறப்பு அறுக்கை யாகும் என்றார்கள்.

பல நூல்களும் இவ்விதம் சுவை வருவதைக் கூறுகின்றன. இதை அமுதம் என்றும் கூறுவர். இதுவே ஞான உதயம்.

நமசிவாயம் என்றபோது ஐம்பெரும் பூதங்களிலும் கலந்திருப்பவன். கலப்புத்தன்மைப் பொருளாகவோ, குணமயமாகவோ, இல்லை. இவைகளைக் கடந்த ஒளித்தன்மையில் உள்ளது. மண்ணுக்குப் பொன்னிறமும், நீருக்கு வெண்மையும், தீக்குச் செம்மையும், காற்றுக்குக் கருமையும், வானுக்குப் புகைமையும் நிறமாக ஆகமம் கூறும். நிலத்தைச் சேர்ந்த நீர் நிலத்துக்கேற்ப நிறம் பெறுவதுபோல, மனுதனுடைய சூக்கும தேகம் குணத்துக்கேற்ப ஒளி பெறுகிறது. அவ்வொளிக்கேற்ப வானுலக வாசிகள் பொருந்தி இன்பந் திளைக்கின்றனர்.

வானுலக வாசிகளுக்குத் தூல உடல் இல்லாதபடியால் அவர்கள் இன்ப துன்ப உணர்வுகளை மனிதர்களின் உடலையே வாகனமாக்கி மகிழ்வுறுகின்றனர். அவர்கள் விருப்பும் மண்ணுலகத்திற்கு வந்து சுகம் பெறவேண்டும் என்ற நோக்கமேதான். அவர்கள் விகாச முறையில் மேலிருந்து கீழிறங்குபவராகையால் நற்குணமோ துர்க்குணமோ வடிவாகக் கொண்டு மனிதனுடைய குண கஞ்சுகத்தை இடமாகக் கொண்டு ஆட்டுவிக்கின்றனர். நிர்க்குணமான சிவம் இவர்களுக்குப் புலப்படாத விஷய மாயிற்று. வானுலக வாசிகளுக்குப் பலம் இன்பம் இவற்றில் விருப்பமே தவிர, முத்தியை விரும்பாதவர்கள்.

**வல்வினையேன் றன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்**
**புறத்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி**
**மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை**
**மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய**
**விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்**
**கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்**
**நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி**
**நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி**
**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**

வலிய வினையால் பீடிக்கப்பட்டவனாகிய என்னை (உன்னுடைய ஒளியைக் காணாதவாறு) மறையும்படி மூடியுள்ள இருளாகிய அறியாமை கெடும்பொருட்டுப் புண்ணிய பாவங்கள் என்ற இரு வலிய கயிற்றால் கட்டப்பெற்று, தோலால் மூடப்பட்ட புழுக் கூட்டமும் அழுக்கும், அதை வெளிப்படுத்தும் ஒன்பது துவாரமும் உடைய உடலாகிய குடிசை குலையும்படி, ஐம்புலனும் வஞ்சனை பண்ணுதலால் அவற்றின்வழி கட்டப்பட்ட மனத்தால், உன்னுடன் பொருந்திய அன்பு இல்லாதவனாய், மனம் கசிந்து உருகும் நன்மையில்லாத சிறியேனுக்கு, உன்னுடைய நீண்டு உயர்ந்து செல்லும் திருவடியைக் காண்பித்துப் பூமித் தத்துவத்தினின்றும் மேலெழச் செய்தருளிய மலமற்றவனே! நாயினும் கடையனாகிய எனக்குக் கருணை பாலித்த தாயினும் சிறந்த தயா சொருபமானவனே.

**விளக்கம்:**

மனிதன் ஆசையுடன் கூடியபோது பாசத்தால் பிணிக்கப்படுகிறான். நன்மைச் செயல்களைச் செய்வதால், புண்ணியம் என்ற கயிற்றால் கட்டப்பட்டுள்ளான். அதன் பயன் சொர்க்கம் சென்று மீளப் பூமிக்கு வந்து நல்ல சூழ்நிலையில் பிறந்தும், மேலும் செய்யும் வினைகளுக்கு ஏற்ப இறந்தபின் சொர்க்கமோ நரகமோ சென்று, மீளவும் பிறவிக்கு வருகிறான். பாவம் செய்தவன் நரகம் சென்று கெட்ட சூழ்நிலையில் பிறந்து, வாழ்க்கைப் போராட்டத்தில் வாடி வதங்கி இறந்து நரகமடைந்து பிறவிக்கு வருகிறான். இவ்விதம் புண்ணியமும் பாவமும் பிறவியை உண்டாக்குவதே தவிர அதை மாற்றாது. அதனால் அதனை 'அருங்கயிறு' என்றார்.

நல்ல விருப்பமோ, கெட்ட விருப்பமோ உடலைப் பற்றியதாக இருந்தால், மனம் பிரகிருதி மயமாகவே இருப்பதால் ஆத்மசோதிக்கும் தேகத்திற்கும் இடையே மேகமண்டலம் போலத் திரோதான சக்தி மறைப்பை உண்டாக்கிவிடுவதை 'மாயவிருள்' என்றார். ஆத்ம சோதியை அறிவுக்குப் புலப்படாமல் தடுப்பதால் 'வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருள்' என்றார். இருள் நிலையான தல்லபடியால் 'மாயவிருள்' என்றார். 'விலங்கு மனம்' என்றால் கட்டப்பட்ட மனம். எதில் கட்டப்பட்டுள்ளதென்பதை விளக்க, 'புறம்தோல் போர்த்துப் புழுவழுக்கு மூடி, மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்க' என்றார். மனிதன் இந்திரியங்களின் வழிச் செல்ல மனத்தை உபயோகிக்கிறான். மனம் பழைய வாசனை பற்றி அதன் வழியே செல்கிறது. அதனால் தேகம் சீர்குலைந்து மனிதன் சாவினை அடைகிறான்.

> இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
> அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
> சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
> அந்தமில் ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே"
>
> *(கண்ட பத்து)*

ஆத்மா மனமற்றது; அதில் உறைபவன் சிவன். அப்படியிருப்பினும் ஆத்மாவின் மயக்கம் தேகமேதான் என்றபோது, வானவர்களால் ஆளப்பட்டு அவர்களின் வாகனமாய் இன்ப துன்ப சுகத்தில் உள்ளபடியால் ஆத்மாவின் உணர்வு கீழான பிருதிவிமயமான தேகத்தையும், அதனாலடையும் சுகத்தையும் பற்றுக்கோடாகக் கொண்டு, பூமி தத்துவம் செழிப்பினை உடைய காமம் பொருந்திய நிலையில் சக்திகளை இழக்கிறான். இந்த நிலை மாறவேண்டியதற்கு உபாயம் சிவத்தின்பால் பொருந்திச் சிவ விருப்பத்திற்குத் தன்னை ஆளாக்க வேண்டும். இவ்வித அன்பு இல்லாமையே விலங்கின் தன்மையாகும். அவ்விதம் சிவத்தின்பால் அன்புகொண்டவரை மீட்க வேண்டியது சிவத்தின் கடமை பற்றித் தன்னடியார்களின் தொடர்பு அமைக்கப்பட்டுள்ளது. விண்ணுலக அடியார் சாதகனைக் குழந்தையை வளர்ப்பதுபோல் மனத்திலும் தேகத்திலும் மாற்றம் உண்டாக்குகின்றனர். அதனால் சிவம் பிரகாசிக்கத் தனது கலைகளைத் தூண்டுவிக்கிறது.

**சிவ கலைகளின் விபரம் :**

1. இந்திகை—சகல அசுத்தங்களையும் பரிகரிப்பவள்.
2. தீபிகை—ஒளிகொடுத்துக் கொண்டிருப்பவள்.
3. ரோசிகை—அழகுக்குக் காரணமானவள்.
4. மோசிகை—சகல பந்தங்களிலிருந்தும் விடுபட்டவள்.
5. ஊர்த்துவகாமினி—மேல்முகங் கொண்டு செல்லுபவள்.
6. வியாபினி—எங்கும் விரிந்து பரவுபவள்.
7. வியோமரூபிணி—ஆகாயவடிவால் எங்கும் நிறைந்தவள்.
8. அநந்தை—அழிவற்ற நிலையை அருளுபவள்.
9. அனாதை—அவளை நடத்த வேறு நாதனின்றி அவளே சுதந்தரமானவள்.
10. அனாசிருதை—சிவ தத்துவம் சத்தி தத்துவம் என்றவை களைப் பற்றாத நிலை

இவ்விதமான பத்து கலைகளும் விளக்கமுறக் காமநிலை மாறி அமைய வேண்டும். அதையேதான் 'நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி' என்றார். இவை பத்தும் மூலாதாரம் முதலாகத் துவாதசாந்தம் நோக்கிச் செல்வதால் 'நீள்கழல்கள்' எனப்பட்டன. இது ஆகாயமயமாய் விந்து நாதங்களாக உள்ளபடியால் 'கழல்கள்' என்றார். தாய் உணவு ஊட்டுவதுபோல் சிறுகச்சிறுக ஒளிபெருக்கிச் சிவம் உபகரிப்பவனாக உள்ளான்.

புறத்தில் உள்ளவர் யாரும் இந்தச் சகாயத்தைச் செய்ய முடியாது. கலந்த அன்பினருக்குத் தான் நடைபெறுவதென்றும், அவ்வளவு தகுதியில்லாத தனது சிறுமையில் நடப்பதாகத் தன்னைக் குறைத்தும் கூறியுள்ளார். நாய் தலைவனை மறவாதது; நன்றி மறவாதது. மனிதன் தலைவனான சிவத்தை நினைக்கவில்லை: நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுத்ததற்காக நன்றி காட்டவுமில்லை.

இருதன்மையும் இருந்தால் தலைவனையும் துணைவனையும் அறிந்து இன்பம் பெறலாம்.

தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலையால் நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய் வினையேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத
லேயெனக் கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்துய
ராக்கையின் திண்வலையே'' (நீத்தல் விண்ணப்பம்)

'நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல் காட்டி' என்று இங்குக் கூறி நிறுத்தி விட்டார். இப்படி நீண்டு செல்வதால் என்ன அமையும் என்பதைக் கீர்த்தித் திருவகவலில் கூறியுள்ளார். அதையே திருத்தசாங்கத்திலும் கூறியுள்ளார்.

1. மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்

2. ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

3. ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறா அருவியும்

4. மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்

5. அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

6. மூல மான மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி

7. காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்

8. அரியொடு பிரமன் அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்

9. மீண்டு வாரா வழியருள் புரிபவன்

10. பாண்டி நாடே பழம்பதி யாகவும்

11. பத்திசெய் அடியரைப் பரமபரத் துய்ப்பவன்

12. உத்தர கோச மங்கை யூராகவும்

13. ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்

14. இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருள்மலை யாகவும்

(கீர்த்தித் திருவகவல்)

யார் யாரோ பூசை செய்து, இன்னின்ன பேறுகளைப் பெற்றார்கள் என்று புராணங்கள் கூறிச் செல்லும். அவ்வரலாறுகள் பக்தனைக் கவர்ச்சி செய்து அவ்வழியைப் பின்பற்றப் பயன்படுவன. இங்கு மணிவாசகப் பெருமான் தம் அனுபவத்தையே கூறுகின்றார். ஒரு விஞ்ஞான தத்துவம் செயல்முறைக்கு ஒத்துவருமானால் அது எக்காலமும் உண்மையாக அந்நுட்பப்படி செய்தால் பயன் அளிப்பதாகும். இறைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தை விளம்புவதில், அனுபோகிகள் உண்மையென்று கண்டு பயனடைவர். அல்லாதவர்கள் இறைவனைப் பாடும் புகழ் நூல்களில் இதுவும் ஒன்று என்று சொல்லி விடுவர். இதில் கண்ட கருத்தை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

'மந்திர மாமலை' என்றது பிரணவம். மற்ற மந்திரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிரணவம் மலைபோலும், ஏனையது சமவெளி போலும். மகேந்திரன் என்பது இந்திரனுக்குப் பெயர். அவன் வாழும் ஊர் சொர்க்கம் என்ற ஒளிமண்டலமாகும்.

ஒளிமண்டலம் தேகத்தில் முதல் உதிப்புநிலை புருவ மத்தியமாகும். சிரசு தேகத்தைப் பார்க்க மலைபோல் உள்ளது. பிரணவத்தின் உறுப்புகள் அ, உ, ம என்பவை தேகத்தைப் பற்றியவை. பின்னைய விந்து நாதம் இரண்டும் தேகியைப் பற்றியவை. தேகியை அறிவதில் ஞானம் உள்ளது. இதை இடத்திற்குரிய இடமென்றும் மகேசுவரத் தானம் என்றும் கூறுவர். மகேசுவரர் உருவநிலையில் உயர்ந்த மூர்த்த மாகும். இது சாக்தம் சைவம் வைஷ்ணவம் யோகம் என்று எப்பெயர் கூறினும் தேகத்தைக் கடந்து செல்லவேண்டும் என்பவர் தொடங்கும் நிலை இதுவாகும். புருவ மத்தியம் தானத் தியானம்.

மூலாதாரத்தில் காமகலை வடிவில் சிவசக்தியுள்ளனர். காம என்றால் சூரியன்; கலா என்றால் சந்திரன். அங்கு இட நாடியும் பிங்கலநாடியும் முதல் பின்னல் தொடங்குகிறது. இதுவே சிருஷ்டிக்கு முதல்நிலை. அதனால் பிரமன் நிலை சிருஷ்டி மயக்கத்தால் நடைபெறுவது. அதுவே விஷ்ணுவுக்கு இடம். சிருஷ்டி கால எல்லையை நியதியாகக் கொண்டுள்ளது. அழிப்பவர் உருத்திரன் ஆதலால், அவரும் அங்கு இடம் பெற்றுள்ளார். அதனால் பிரணவத் தின் உறுப்புக்களான அ, உ, ம, என்றதில் மூவரும் உள்ளனர். சிருஷ்டி எப்படி பூமியை ஆதாரமாகக் கொண்டுள்ளதோ, அவ்விதமே சிருஷ்டி யின் எதிர்நிலையான முத்தி ஆகாயத்தைப் பற்றியுள்ளது. மூலா தாரத்திலேயே இந்த மூவருக்கும் வேறான ஒரு சக்தியும் உள்ளது என்று ஆகமவாதிகள் கண்டனர். அது இந்தச் சிவசக்தியால் அமைவ தாக இருப்பினும், அதன் தன்மை மேல்நோக்கிச் செல்வதால் அதற்கு வேறு ஒரு பெயர் வைத்தனர். அப்பெயரே கந்தன். கந்தன் என்றால் ஒன்றுசேரப் பெற்றவன் என்று பொருள். கந்தன் சிவசக்தி சேர்க்கையால் அமைந்த உருவம் ஆதலால், சோமாஸ்கந்தர் வடிவம் கண்டனர். ஸ + உமா + ஸ்கந்தர் = சோமாஸ்கந்தர். தானும் உமையும் கந்தரும் கூடிய நிலையை அறிந்தவர்க்கு இறைவன் தன்னையே தந்தருளுவான் என்பதே ஆரூர்த் தியாகராஜ தத்துவம். மனிதன் பூமியில் வந்த காரியம் பூமி தத்துவத்தை அறிந்து அதன் செயலை உடல் உள்ளபோதே மாற்றிவிடில் மீண்டும் பூமிக்கு வரும் வேலையில்லை என்பதேயாகும். குமரன் என்பது மூலாதாரத்தி லிருந்து மூலவாயு அல்லது சுழுமுனா நாடி மேலெழுந்து செல்வதாகும்.

இவ்விதமான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு சக்கர பேதனத்தால் மாற்ற மடைந்து வெளிப்பட்ட புருவமத்திய ஒளியே ஆறுமுகத் ததிபதி. இவரே சமயகுரு.

தெற்குத் திருவம்பலம் புருடன் வசிக்கும் வலது கண்புறமாகும். பிரணவ சொரூபமான அறிவு பொருந்திய சிரசில் உள்ள சிவபெருமான், அளவில்லாத பெருமைகளையுடையவன். சத்தியைத் தன்பால் கொண்டவன், என்னை ஆண்டுகொண்ட விதத்தைக் கூறப்போனால் என்பது 'மந்திர...பகரின்' என்ற வரையில் பொருளாகும்.

மூலாதாரம் மேலுள்ள ஆதாரங்களுக்கும் ஆதாரமாகும். இங்கிருந்து சிவகலையில் ஊர்த்துவ காமினி மேனோக்கி ஏறுவதில்

சுழுமுனா நாடியின் அடைப்பு திறக்கப்பட்டுக் கந்தர் தோன்றுகிறார். இவர் வாமதேவரின் குமாரர் ஆதல்பற்றி 'அழகமர் திருவுரு' என்றார். தேகத்தின் கோடி உச்சியாகும். அதுவரை குண்டலினி சுருண்டு கிடந்தது நிமிர்ந்து தேகத்தைத் தாண்டி நீற்றொளி அமையும் வரையில் காட்டியதே, நின்று காட்டிய முறை. வாமதேவர் - சிரசில் இடப்பக்க மூளையிலும், உடலில் குறித்தானத்திலும் தொழிற்படுவர். காமநிலை மாற்றமே அமைவதெனினும் கந்தர் உற்பவம், சிவமும் சக்தியும் சேர்ந்த பிறகே உண்டானது என்றதிலும் சூக்ஷமம் உள்ளது. இது ரகசியப் பொருள்.

யானை முதலாக எறும்பு இறுதியாக உள்ள குறைவற்ற யோனி பேதங்களினுள் தோன்றுதற்குரிய வினையினின்று தப்பியும் என்பது, சீவன் எடுக்கும் உருவத்திற்கேற்பத் தன்னைச் சரிசெய்து கொள்ளும் வகையை உணர்த்துவதுடன் பல பிறவிகளையும் உணர்த்திற்று.

மாதா உதரத்திலும்—கேடடையாத புழுக்களின் நெரிசலில் மானுடப் பிறப்பினுள் அழிவுறாது தப்பியும் என்பது,

தந்தையின் சுக்கிலத்திலுள்ள சீவாணுக்கள் பல குழந்தைகளை உற்பத்திச் செய்யக்கூடும். ஒரே சீவாணு அந்தக் கூட்டத்தின் போராட்டத்தில் சிசுவாகிறது. மற்றவை அழிந்து போகின்றன. இதை உணர்த்தியுள்ளார். தாயின் கருப்பையினுள் முதலாந் திங்களில் தான்றிக்காயளவு திரண்டுவரும் பருமனில் பிழைத்தும்,

இரண்டாந் திங்களில் அங்கு நிலைபெறுவதில் பிழைத்தும்,

மூன்றாம் திங்களில் தாயின் சுரோணித ஊற்றத்திலிருந்து பிழைத்தும்,

நான்காம் திங்களில் கருப்பை வாயில் சுருங்குவதால் உண்டாகும் இருளிலிருந்து பிழைத்தும்,

ஐந்தாந் திங்களில் கருப்பம் சிதைவுறாது பிழைத்தும்,

ஆறாந் திங்களில் கருப்பப்பை விரிதலில் உண்டாகும் பரிச உணர்வு நெருக்கத்தில் பிழைத்தும்,

ஏழாந் திங்களில் பிண்டம் கீழ்நோக்குதலில் வழுவாது பிழைத்தும்,

எட்டாந் திங்களில் உண்டாகும் இடையூறுகளினின்று பிழைத்தும்,

ஒன்பதாந் திங்களில் வரும் துன்பங்களிலிருந்து பிழைத்தும்,

பத்தாவது திங்களில் தாயுடன் தானும் அனுபவிக்கும் துன்பக் கடலிலிருந்து பிழைத்தும்,

ஆண்டுகள் தோறும் வளர்ந்து வருவதில், உட்கார வைத்தலால் உண்டாகும் பல இடையூறுகளிலிருந்து பிழைத்தும்,

காலைப் பொழுதிலே மலத்தாலும், கடுமையாகிய பகற்பொழுதில் பசியாலும், இராப்பொழுதில் நித்திரையாலும், வெளியூர் போதலாலும், ஆகியவற்றால் உண்டாகும் துன்பங்களினின்று பிழைத்தும்,

கருங்கூந்தலும் செவ்வாயும் வெண்பல்லும் கார்காலத்து ஆண் மயிலினை ஒத்த செருக்கு நிறைந்த மேன்மையும், பருத்து விடுதலின் ஒன்றோடொன்று செறிவுற்று அகத்தே செருக்குற்று மேலே மூடிய கச்சானது கிழிந்து போம்படி மேலெழுந்து வெளிப்பட்டு, எதிரே பருத்துச் சுமை தாங்காது இடையானது மெலிந்து வருந்தும்படி எழுச்சி பெற்றுச் சுற்றுப்புறங்களிற் பரந்து, ஈர்க்கும் நடுவே நுழைவதற்கு இடமில்லாத முலைகளையுடைய இளமகளிர் தம் கூரிய கண்களின் சூறையாடலுக்குத் தப்பியும்,

மயக்க அறிவினையுடைய பெரிய குழுவினர்தம் மயக்கத்துறைப் பரப்புகளுள்ளே மதங்கொண்ட ஆண்யானை என்னும் அவாவினிடைப் பிழைத்தும்,

செல்வம் எனப்படும் அல்லலினின்று தப்பியும்,

வறுமையெனப்படும் பழைய நஞ்சின் தாக்குதலுக்குத் தப்பியும்,

தாமே வந்து தழுவிக்கொள்ளும் இன்னோரன்ன பலவகைப்பட்ட மனை வாழ்க்கையில் இழியும் நெறிகள்தோறும் இறங்குதலினின்று தப்பியும்,

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்

இவ்வாறெல்லாம் பிழைத்துத் தெய்வப்பற்று உண்டாகி, முன்னர் வெறுப்புடன் நாடாதிருந்த நிலைமாறி ஒப்பற்ற மெய்ப் பொருளை உணர்ந்து அதனைக் கருதலும்,

ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு கோடியில் பலவேறுபட்ட சத்திகள் உள்ளன.

சிவனின் குணங் காரணமாக அவைகளில் பற்றுக்கொண்டு அந்தத் தேவைகளை உபாசிக்கவும், அவைகள் சொற்பப் பயனை அளித்து உபாசகனை வஞ்சிப்பதை வேறு வேறு மாயைகள் தொடங்கின என்றார்.

மெய்ப்பொருள் ஒன்றே. அது அகண்ட உரு. யாதொரு உருவத் தாலும் அறியத்தக்கதன்று என்ற அறிவு சகஸ்ரதளம் சென்றவர்க்கே விளங்கும். மற்றவர்களுக்கு விளங்காதபடியால் 'ஆறுகோடி மாயா சத்திகள்' எனப்பட்டது.

கோடி—முடிவு.

**விளக்கம் :**

ஆறு முடியினையுடைய ஆறாதாரத்திலுள்ள மாயாசக்திகள் உடல், கரணம், உலகுகளை அவை அவைகளின் விருப்பப்படி சிருஷ்டிக்கத் தொடங்கின.

இவ்வாக்கியம் ஆகம வாதிகள் கருத்தையும் யோக மதத்தினர் கருத்தையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது."

மேலே கண்ட சிவயோகியாரின் விளக்கமானது, எழுத்துக்களையும் அவற்றின் நிலைகளையும் சித்தர் இலக்கியம் கொண்டு கற்று ஆராய்ந்ததோடு நில்லாமல், அவற்றைத் தமது பயிற்சியின் மூலமாகவும் கண்டு தெளிந்த ஒரு ஞானாசிரியனுடைய கருத்துக் கருவூலமாகும். கடினமான பகுதிகள் இடையிடையே வந்தாலும், அவற்றின் பயனைக் கருதி அந்தப் பகுதிகளை அப்படி அப்படியே கொடுத்திருக்கிறேன்.

☆

# 29. உண்மையும் உருவகமும்

சித்தர்களின் இலக்கியத்தில் மிகவும் நுட்பமானதும், முதன்மையானதும், இரகசியங்கள் நிறைந்ததும், படிப்பதற்குச் சுவையானதுமான ஒரு பகுதி சிலேடையும் உருவகமும் நிறைந்த ஞானப்பேச்சாகும். மேலாகப் பார்த்தால் சொற்களின் பொருள் ஒரு வகையாக இருக்கும்; ஆனால் அவற்றின் நுண்பொருள் வேறு ஒரு வகையாக இருக்கும். சில பாடல்கள் வேடிக்கையாகவும் முரண்பாடு நிரம்பியனவாகவும் தோற்றம் தரும். அவற்றின் கருவுக்குள்ளே ஆழ்ந்த ஞானப் பொருள் பொதிந்து இருக்கும்.

சில சொற்களுக்கு நிகண்டில் இல்லாத வேறொரு பொருள் சித்தர் இலக்கியத்தின் மரபிலே உண்டு. இந்த மரபு சித்தர்களின் தத்துவப் பாடல்களைப் போலவே சித்த வைத்தியப் பாடல்களிலும் வழங்கிவரக் காண்கிறோம்.

குட்டையன், நொண்டி, குருடன், முடவன், ஆண்டி, பரதேசி, கிழவன் என்று ஆன்மாவைப் பல பெயர்களிலே அழைப்பார்கள். சிற்சில இடங்களில் ஆன்மாவுக்குரிய பெயர் அக உடம்புக்கும் வருவது உண்டு. சான்றாக, மனத்தையே சில சித்தர்கள் குருடன் என்றும், ஒரோவழி மனத்தைக் குமரி என்றும் அழைப்பார்கள். கன்னி என்ற சொல்லும் சில இடங்களில் வருவது உண்டு.

இவ்வாறே அயன் அல்லது பிரமனைக் குயவன் என்றும், தட்டான் என்றும், வணிகன் என்றும் பல பெயர்களில் சித்தர் இலக்கியம் அழைக்கிறது.

இந்த உடம்பை ஆலயம், கோயில், கோட்டை, பாண்டம், மண்கலம், குடம், சட்டி, கப்பல், ஓடம் என நாமங்கள் பல கொடுத்து அழைப்பார்கள்.

இவ்வாறே வைத்தியத்திலும் கற்றாழை அல்லது கன்னியைக் குமரி என்றும், முசுமுசுக்கைச் செடியை இரு குரங்கின் கை என்றும், இன்னும் பலவாறாகவும் அழைப்பது உண்டு.

ஆன்மாவைப் பார்ப்பான் என்றும், புலன்களைப் பசுக்கள் என்றும், திருமூலர் அழைக்கிற பாடல் பலருக்கும் தெரியும். இத்தகைய உருவகத்தை மேலும் விரிவு செய்து குட்டிக்கதைகளைப் போலப் பாடியுள்ள சித்தர் பாடல்கள் ஆயிரமாயிரமாக உள்ளன.

இத்தனை உருவகங்களிலும் சிலேடைகளிலும் இலக்கியச் செம்மையும், இலக்கண வரம்பும் நன்கு அமைந்த பாடல்கள் திருமந்திரத்தில் பரந்து விரிந்து திகழ்கின்றன. எனவே, திருமந்திரத்திலுள்ள

உருவகத்தையே சித்தர் இலக்கியத்தின் உருவகத்திற்கு உரைகல் ஆகவும், எழில்மிக்க சான்றாகவும் கொள்ளலாம். பதச்சோறாகச் சில பாடல்களை ஆராயலாம்.

அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்திக் குதறிக் கூட்டில் அடைந்தன
அத்திப் பழத்தின் அமுதம் அறிந்தபின்
கத்திக்கொண் டைவரும் காடுறைந் தாரே''

அத்திப்பழம் என்பது பெண்களின் உயிராற்றல் நீராகிய சுரோணிதம்; அரைக்கீரை என்பது சுக்கிலமாகிய ஆண்விந்து.

திருமூலர் ஆடவனும் பெண்ணும் சேர்வதனால் கரு உண்டாவதை, அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும் புணர்ச்சியாகிய கொத்திக் குதறலில் ஒன்றுசேர்ந்து கருப்பைக்குள்ளே கருவாக அடைபடுவதாகச் சொல்கிறார். இப்படிப் பிறப்பெடுத்த மனிதன், யாக்கையினுள்ளே சுரக்கின்ற அமுத நிலையை ஞான குருவாகிய ஒரு சித்தரின் வாயிலாக் அறிந்துவிட்டான் ஆனால், அவனுடைய ஐம்புலன்களும் கண்டபடி திரிவதை ஒழித்து, ஞான பூமியாகிய அகவனத்திலே ஒடுங்கிவிடுகின்றன என்பதே இந்தப் பாடலின் உருவகமாகும்.

இன்னொரு பாடல்

-வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைக் கிண்டிப் பூசனி பூத்தது
முழுவதும் பழுத்தது வாழை இளங்கனி
தொழுதுகொண் டறிந்தோர் தொட்டுடை யாரே

வழுதலை என்ற சொல்லுக்குச் சுக்கிலம் என்பது சித்தர் இலக்கியத்தின் குழூஉக் குறியாகும். கருப்பையாகிய நிலத்திலே வழுதலையாகிய சுக்கிலத்தை சீவான்மாவானது இட்டதனால், பாகலாகிய உடம்பு உண்டாயிற்று. பின்பு உடம்பின் புழுதியாகிய உட்கருவிகளைக் கிண்டிப்பார்த்து, யோக முறையிலே செயல் புரிந்ததன் விளைவாக, ஞானகமலமாகிய பூசனி மலர்ந்தது. அந்த ஞான கமலம் பழுத்துக் கனியும்போது, வாழைக் கனியாகிய ஞானானந்தப் பேரின்பம் கிட்டியது. இந்தப் பாடலிலே பூவும், காயும், கனியும் உருவகமாக அமைந்தன.

வாழைப்பழமாகிய ஞானம் வையத்திலே பழுத்துக் கிடக்கிறது. இதன் அருமையை உணர்த்துவதற்கு ஒரு ஞான குரு வரவேண்டியது உள்ளது. காரண குருவாகிய அந்தச் சித்தன் இல்லையென்றால் மாந்தரின் நிலை என்ன? அந்த வாழைப்பழத்தை அணுகவிடாமல் இருவினையாகிய தாழ்க்கோல் சூழ்ந்து கிடக்கிறது. மும்மலக் கொத்து என்பதும் இந்தத் தாழ்க்கோலையே. இந்தத் தாழைக் களைந்து உட்செல்ல முடியாதவர்கள் வாழைப்பழம் இருக்கத் தாழம்பழத்தைத் தின்று துயருறுகிறார்கள். அதாவது பேரின்பத்தை நுகராது சிற்றின் பத்திலே உழல்கிறார்கள்.

இந்த உருவகத்தை உணர்த்தும் பாடல் வருமாறு :

வாழை பழுத்துக் கிடக்குது வையகம்
வாழையைச் சூழத் தாழ்கோத்து நிற்குது
தாழைத் திறந்து கனியுண்ண மாட்டாதார்
தாழும் பழத்துக்குத் தள்ளுண்ட வாறே

இந்த உலக வாழ்க்கையில் ஆசையின் வசமாகி எத்தனையோ பல துன்பங்களுக்கு மனிதர்கள் உள்ளாகிறார்கள். புலன்களின் வழியே மனத்தை ஓடவிட்டு, இன்பம் போல் தோன்றி இன்னல் விளைக்கும் சிற்றின்பக் கேளிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள். பிறப்பு இறப்பாகிய சுழலில் இருந்து அவர்களால் விடுபட முடிவதில்லை. எனவே, தன்மாத்திரையாகிய கவர்ச்சியை 'விளங்கனி' என்று உருவகம் செய்வது சித்தர்களின் மரபாகும். புற இச்சைகளின் வழியை நம் சித்தர்கள் ஐம்புலன்களுக்கு வலைவிரித்த 'கள்ளவழி' என்பார்கள்.

கள்ள வழியில் விழுந்த விளாங்கனி
கொள்ளச்சென் றைவர் குழியில் விழுந்தனர்
தெள்ளிய ஞானி தெளிவுறக் கண்டபின்
பிள்ளைகள் ஐவர் பிதற்றொழிந் தாரே

சீவான்மா, குருநாதன் உணர்த்திய பின் தலைவனைக் காண்கிறது. அப்படிக் கண்டவுடன் ஐம்புலன்களின் சிறுபிள்ளைத்தனமான கள்ள ஆசை நீங்கிவிடுகிறது. ஐந்து பிள்ளைகளும் பிதற்றிக்கொண்டு இருப்பதை ஒழித்து, ஞான மோனக் களிப்பிலே ஒடுங்கிவிடுகிறார்கள்.

இனி, இன்னொரு வகையான உருவகத்தைப் பார்க்கலாம்.

எழுதாத பொத்தகத் தெழுத்தின் பயனைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மருவின் மணத்தைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே

'பொத்தகம்' என்ற சொல், பழைய நூல்கள் பலவற்றில் இதே வடிவத்தில் ஆளப்பெறுகிறது. இந்தச் சொல் 'புஸ்தகம்' என்ற வட சொல்லின் தமிழ் வடிவமா அல்லது தூய தமிழ்ச் சொல்தானா என்ற ஆராய்ச்சி, மற்றொன்று விரித்தல் என்னும் குற்றமாகும். அந்தச் சொல்லின் பொருள் நூல் என்ற உண்மை மட்டும் இங்கே சாலும்.

எழுதாத பொத்தகம் என்பது கேளாத இசை (Unheard Melody) என்ற பொருளைத் தருவது. எழுதாத என்றால் எழுத முடியாத, எழுத்தாகிய வரிவடிவத்தைத் தாண்டிய, அதைக் கடந்து நிற்கிற, எழுத ஒண்ணாத, நூல் என்று பொருள். அனுபவ ஞானம் என்னும் சித்தர் கல்வியாகிய பேரின்பப் பயிற்சி அத்தகைய எழுதாத பொத்தகமேயாகும்.

தெருளாத கன்னி என்றால் தீட்டு என்பது இல்லாமலேயே பக்குவம் அடைந்த ஞானமாகிய பெண், ஞானப்பெண்! அவள் நித்திய கன்னி என்று அழைக்கப் பெறுகிறவள். தாயுமானவர்,

அகிலாண்ட கோடியெலாம் ஈன்ற
அன்னையே பின்னையும் கன்னிஎன மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே

என்று அருட்சத்தியைப் பாடுகிறார் அல்லவா! மலராத பூ என்பதற்கு, மற்றப் பூக்களைப் போல் அரும்பி மொட்டாகி, அதன் பின்னர் மலராகி விரிகிற பூவாக இல்லாமல், குருவின் அருட்கண் நோக்கிய வினாடியிலேயே மலர்ச்சி பெற்று ஞானமணம் கமழ்கிற ஆன்மாவாகிய மலர் என்பது பொருளாகும்.

பிறவாத வண்டு என்பது சத்திநிபாதம் என்னும் விவேக நிலை கைகூடிய ஞானி என்று பொருள்தரும். அந்த ஞானி பிறப்பிறப்பைக் கடந்து வென்றிருப்பதனாலே அவனைப் பிறவாத வண்டு என்று சொல்வது சித்தர் மரபாகும்.

ஆன்மாவை மலராத பூ என்றும், இறையின்பத்தை மருவின் மணம் என்றும், பக்குவியாகிய ஞானியைப் பிறவாத வண்டு என்றும் திருமூலர் உருவகம் செய்கிறார். தெருளாத கன்னியாகிய சத்தியின் துணையினாலேயே இறையின்பம் எய்தும் என்பது பாடலின் கருத்தாகும். இதையே பட்டினத்தடிகளும் "தாயுடனே சென்று தாதையைக் கூடல்" என்கிறார்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது

என்பதன் பேரின்பக் கருத்தை இதனோடு ஒப்பிடலாம்.

இனி இன்னொரு உருவகத்தைப் பார்ப்போம். இந்த உருவகத்தில் சீவான்மாவைக் குருட்டுக் கிழவன் என்கிறார் திருமூலர்; மாயையை இருட்டு என்கிறார்.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணமுதல் காட்டி
மருட்டி யவனை மணம்புணர்ந் தாளே

குருட்டுக் கிழவனாகிய சீவான்மா தனது மலங்களை அறிந்து கொள்ள முடியாதபடி கண் குருடாக இருப்பதோடு, அது இருக்கும் இடம் மாயையாகிய இருட்டு அறையாக உள்ளது. சக்தியாகிய ஞான ஆற்றல் 'கன்னி' என்ற பொருளிலே 'குமரி' என்று அழைக்கப்பெறுகிறது. ஞான சத்தியாகிய குமரி மாயையைக் கடந்து நிற்பவள் என்பதால் இருட்டறையின் மூலையில் இருக்கும் குமரி என்று உருவகம் பெறுகிறாள். முழுமையான பேரின்பத்தைச் சீவான்மாவின் 'புணர்ச்சி' அல்லது 'கூடல்' என்று குறிப்பது சித்தர்கள் மரபாகும்.

மாயையாகிய இருட்டு அறையின் மூலையில் இருக்கின்ற ஞான சத்தியான குமரி, குருட்டுக் கிழவனாகிய சீவான்மாவைக் கூடவேண்டுமென்று கருதி, மலங்களாகிய குருட்டினை நீக்கித் திருவருளாகிய குணநலன்களை அறிவித்து, அதாவது குணம்பல காட்டி உய்விக்

கிறாள். அப்படி உய்விக்கும்பொழுது சிவான்மாவை 'மருட்டுகிறாள்.' அதாவது மயக்குகிறாள். மீண்டும் மும்மலக் கேடுகள் சிவான்மாவைப் பற்றாமல், அந்தச் சிவான்மாவைத் தன் வசம் ஈர்த்துக் கொள்கிறாள். அப்படி ஈர்த்து, தனது வசத்திலேயே சிவான்மா அழுந்தி நிற்குமாறு இருவினையொப்பு, மலபரிபாகம் முழுமை பெறும்படி நிலையாகச் சார்ந்து நிற்கும் வகையிலே 'மணம்புணர்ந்தாளே' என்கிறார் திருமூலர்.

இனி, முற்றிலும் வேறுபட்ட இன்னொருவகையான உருவகத்தைப் பார்ப்போம்:

மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொன் னின்றங் கமுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்கள்
ஊணுக் கிருந்தார் உணராத மக்களே

மாணிக்க மாலை என்பது 'நிராமய பூரணம்' என்பதாகும். இந்த மண்ணோடு அண்டம் முழுவதையும் சாட்டிக்கொண்டு நிற்பதனாலே, நிராமய பூரணத்தை 'மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்' என்கிறார்.

ஆன்மாவாகிய ஆணிப்பொன்னிலே பதிக்கப்பெற்று மெய்ஞ்ஞான மாகிய பேரொளி உண்டாகிறது. அந்தப் பேரொளியே பேரின்ப அமுதமாக விளைகிறது. அந்த அமுதத்தை உண்டு அனுபவித்தவர்கள் பிறப்பு இறப்புக்களை ஒழித்தவர்களாவார்கள். அந்த இறையின்பத்தை நுகராத மக்கள் ஊண் உண்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிற பயனிலி மக்கள் ஆவார்கள்.

'காலம் உண்டாகவே காதல் செய்து உய்ம்மின்' என்ற மணிவாசகத்தை, அந்த மாணிக்க வாசகத்தை, இந்த மாணிக்கப் பாடலோடு ஒப்பிடுகிறார் பழைய உரையாசிரியர்.

மாணிக்கத்தை மாற்றுயர்ந்த பொன்னிலே பதித்து இழைத்தது போலே ஞான குருவின் உபதேசமாகிய பேரின்பப் பேரறிவை ஆன்மாவிலே கண்டறிவதே வாழ்வின் பயனாகும்.

திருமூலர் நமக்குத் தருகின்ற உருவகங்களிலே இன்னொரு சுவை யான உருவகம் வருமாறு :

தஞ்சாவூர்த் தட்டான் தலத்துக்கு நாயகம்
மஞ்சாடி கொள்ளான் வழக்கன்றி மற்றோன்
துஞ்சா னுறங்கான் தொழில்செய்யான் சோம்பி
அஞ்சாறு நாளைக் கவதியிட் டானே

இந்த மனித உடம்பைச் சித்தர்கள் தஞ்சாவூர் என்று அழைப்பது மரபு. முப்பத்தாறு தத்துவங்களும் குடியிருப்பதனால் இந்த உடம்பைத் தஞ்சாவூர் என்று அழைப்பதாகக் கம்பளிச் சித்தர் கூறுகிறார். பரம்பொருள் இந்த உடம்புக்குள்ளே உறைவது உண்மையே யாயினும், உடம்பைத் தோயாமல் நிற்கிறது. எனவே, பரம்பொரு

ளாகிய தலைவனுக்குத் 'தஞ்சாவூர்த் தட்டான்' என்று பெயர் சூட்டுகிறார் சித்தர். அந்தத் தட்டான் இந்த உடம்பிற்கு நாயகனாக விளங்குகிறான். சிற்றறிவின் பயனைத் தலைவன் நுகராமையினாலே 'மஞ்சாடி கொள்ளான்' என்கிறார். மரபோடு ஒட்டிய சித்தர்களின் பயிற்சி இல்லாமல் அவன் மனமன்றத்திலே தோன்றுபவனாக இருப்பதால் அவனை 'வழக்கன்றி மற்றேறான்' என்கிறார். அவனுக்கு மரணம் இல்லை; அவன் துஞ்சாதவன். இரவு பகல் எப்போதும் விழித்திருப்பவன். எனவே அவனை 'உறங்கான்' என்கிறார். உடம்பு செய்கின்ற செயலிலே அவனுக்கு எத்தகைய பிணைப்பும் இல்லாமையினாலே 'தொழில் செய்யான்' என்றார். அதே சமயம் அவனுக்குச் சோம்பி இருப்பது என்பது இல்லை. உடம்புக்குள்ளே இருந்தபோதிலும் உடம்பின் கால வரையறையை அவன் அறுதியிட்டு 'அவதி' செய்கிறான்.

உடம்புக்குள்ளே பரம்பொருள் இயங்குகின்ற தன்மையை இப்படி ஓர் உருவகமாகக் கூறுகிறது இந்தப் பாடல்.

இனி, வேறொரு வகையான உருவகம்:

ஏற்றம் இரண்டுள ஏழு கிணறுள
மூத்தான் இறைக்க இளையான் மடைமாறப்
பாத்தியிற் பாயாமல் பாழெங்கும் பாய்ந்தது
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே

ஏற்றம் இறைப்பதற்காக இரண்டு துலாமரங்கள் நடுகிறோம் அல்லவா! அவ்வாறு புண்ணிய பாவம் என்ற இரண்டு மரங்கள் உள்ளன. தண்ணீர் இறைக்கின்ற கிணறுகள் ஏழு. அவை ஏழு வகைப் பிறப்புக்கள். ச்வாசங்களிலே சூரிய கலையாகிய பிங்கலைக்கு மூத்தான் என்று பெயர்தருவர் சித்தர்கள். இளையான் என்பது இடைகலை.

சுழுமுனையாகிய ஞான வழியிலே சென்று, கும்பகமாகிய பாத்தியிலே நீர் பாய்ச்சுவதுதான் சித்தர்களின் யோகமுறை. அவ்வாறு செய்யாமல் சூரிய கலை, சந்திர கலை ஆகிய சுவாசங்கள் மாறாக இயங்கும்போது பாத்தியிலே தண்ணீர் பாயாமல் பாழான வெளி இடங்களிலே பாய்ந்து பயனின்றிப் போகிறது. தலைவன் இல்லாத நிலையிலே சீவான்மா கூத்தி வளர்த்த கோழியைப் போல் வீணாகிறது.

இந்த உருவகத்திலே ஒரு புதுமை என்னவென்றால், உழவர்களின் மொழிகளைக் கையாண்டு ஞான உழவாகிய பேருழவை உருவகப்படுத்துகிறார் சித்தர்.

உழவுத் தொழிலாளியின் மொழியிலே உருவகம் செய்கிற சித்தர்கள், வேறு பல தொழிலாளிகளையும் தங்கள் உருவகத்திலே தோற்றுவிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் உருவகத்தைத் திருமூலர் நமக்குத் தருகிறார் :

வண்ணான் ஒலிக்கும் சதுரப் பலகைமேல்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாற்றைத் தேக்கிக் குளத்தை நிரப்பிட்டு
அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே

இந்தப் பாடலுக்குப் பொருள் சொல்லுகிற பழைய உரையாசிரியர் வண்ணான் என்பது சீவான்மா என்றும், அவன் ஒலிக்கின்ற சதுரப் பலகை ஐம்பத்தோர் எழுத்தையும் அடக்கியுள்ள பலகை என்றும் குறிப் பிடுகிறார்கள். யோகப் பயிற்சியினால் மூலக்கனல் எழுந்து உடம்பு முழுவதும் அமுதம் நிரம்புகிறது. இதையே குளத்தை நிரப்புவது என்று உருவகம் செய்கிறார் சித்தர். விண்ணாறு என்பது சுழுமுனை வழியே பிராணவாயு இயங்குவதையே. அண்ணாந்து பார்த்தல் என்பது உடம்பின் உச்சிநோக்கி அகப்பார்வையைச் செலுத்திப் பரஞ்சோதி வடிவாகிய பரம்பொருளைத் தியானம் செய்வதாகும். உயிரின் குற்றங் களாகிய மலங்கள் நீங்குவதையே 'அழுக்கற்றவாறே' என்று பாடுகிறார் திருமூலர்.

காயசித்தி உபாயம் என்று சித்தர்கள் அழைக்கின்ற பயிற்சிமுறை யினால் இந்த உடம்பைக்கொண்டு உயிரின் அழுக்குகளை வெளுத்துத் தூய்மைப்படுத்துகிற செயலை, ஒரு சலவைத் தொழிலில் பயின்று வருகின்ற மொழிகளைக் கொண்டே உருவகம் செய்து பாடுகிறார் சித்தர் பெருமான்.

இனி, புனிதம் நிரம்பிய இன்னொரு உருவகம் வருகிறது:

**கோயிலும் அஞ்சுள கோபுரம் மூன்றுள**
**கோயி லடைக்கக் கதவோ ரிரண்டுள**
**கோயில் திறந்து கும்பிட வல்லார்க்குக்**
**கோயிலுக் குள்ளே குடியிருந் தானே**

ஞான இந்திரியங்கள் ஐந்தையும் ஐந்து கோயில்கள் என்கிறார் சித்தர். இந்தக் கோவில்களுக்கு இடைகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்றும் கோபுர வாயில்களாக விளங்குகின்றன. யான் என்றும், எனது என்றும் சொல்லுகிற அகங்கார மமகாரங்கள், இரண்டு கதவுகளாக அடைத்து நிற்கின்றன. இந்தக் கதவுகளைத் திறக்கக் கூடிய வல்லமை ஒருவனுக்கு எப்பொழுது ஏற்படுகிறது? ஞான குருவாகிய சித்தர் ஆசானாக வந்து உபதேசம் செய்தருளினால்தான், அந்தக் கதவுகளைத் திறப்பதற்குரிய வழி பிறக்கும். அந்தக் கதவு களுக்குரிய திறவுகோலை, நமக்குத் தரவல்லவன் காரணகுருவே ஆவான். அவன் தருகின்ற திறவுகோலை வைத்து நாம் திறந்தால் தான் கோவிலின் இந்த மாபெரும் கதவுகள் இரண்டும் திறக்கும். அவற்றைத் திறக்கின்ற வல்லமையை நாம் பெற்றுவிட்டால், நம்முடைய கோவிலுக்குள்ளே பரம்பொருள் நமக்குப் புலனா கின்றான். நம்முடைய தலைவன் நமது கோவிலுக்குள்ளே நிலையாக என்றென்றும் குடியிருக்கிறான்.

இதுவரை இல்லாத ஒருவன் புதிதாக வந்து குடியிருக்கிறான் என்பது அல்ல பொருள். உள்ளே குடியிருப்பவன் நம்முடைய கண்களுக்குத் தெரிகின்றபோதுதான், அவன் குடியிருக்கிறான் என்று சொல்லக்கூடிய பார்வை நமக்கு ஏற்படும். இந்தக் கருத்தை மனத்திற்கொண்டுதான் கம்பரும் தமது பாடல் ஒன்றிலே 'வாராதே வரவல்லாய்' என்று பாடுகிறார்.

இந்த உடம்பு பிறக்கும்போது அதனோடு கலந்து நிற்கிறான் இறைவன். கதவு அடைத்து இருப்பதால் கோவிலுக்குள்ளே இருக்கும் மூர்த்தியை நாம் காண முடியவில்லை. அந்தக் கதவுகளைத் திறப்பதற்குரிய சாவி நம்மிடம் இல்லாதுபோனால், அவன் குடியிருப்பது நம் கண்களுக்கு எப்படித் தெரியும்? அந்தத் திறவு கோலைத் தரவல்ல ஞானகுரு நமக்குக் கிட்டும்போது நம் தலைவனாகிய இறைவன் 'வாராதே வந்து' குடியமர்கின்றான்.

இனி, இன்னொரு உருவகம் :

> கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
> எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
> கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
> எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே

இந்தப் பாடலில் குளம் என்று குறிக்கப்படுவது மனித உடம்பாகும். ஐம்பூதத்தாலாகிய இந்த உடம்புக்குள் புறநிலைத் தத்துவங்கள், அகநிலைத் தத்துவங்கள் என இரண்டு வகையான தத்துவங்கள் செயற்படுகின்றன. புறநிலைத் தத்துவங்கள் இருபத்தைந்து ஆகும். அகநிலைத் தத்துவங்கள் இருபத்து நான்கு ஆகும். இந்தத் தத்துவங்களை நம் சித்தர்கள் உருவகமொழியிலே அழைப்பது மரபு.

கொட்டி என்பது புறத்தத்துவங்களைக் குறிக்கும் உருவகச் சொல். ஆம்பல் என்பது உள்நிலைத் தத்துவங்களைக் குறிக்கும் சொல் ஆகும். இந்த உடம்புக்குள் இருபத்தைந்து புறத்தத்துவங்களும் இருபத்து நான்கு அகத்தத்துவங்களும் சேர்ந்து தொழில் புரிவதைக் 'கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை' என்கிறார் திருமூலர். எட்டி என்று குறிக்கப்படுவது ஆணவமலம். வேம்பு என்பது மாயை.

சித்தர்கள் சீவான்மாவை வாழை என்று அழைப்பதுண்டு. வாழையாகிய சீவான்மா கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திலே இயங்குகிறது. சத்திநிபாத விவேகத்தைக் கட்டி என்றும், ஞான இன்பத்தைத் தேன் என்றும் இந்தப் பாடல் உருவகம் செய்கிறது. கட்டியையும் தேனையும் கலந்து உண்ணத் தெரியாதவர்களே ஞானக் கல்வி இல்லாத கீழ்மக்கள். இவர்கள் மாயையிலே கட்டுண்டு உழல்கிறார்கள். இதனையே 'எட்டிப்பழத்துக்கு இளைக்கின்ற வாறே' என்கிறார் திருமூலர்.

வாழையைக் குறிக்கின்ற இன்னோர் உருவகம் திருமந்திரத்திலே வருகின்றது.

பிரணவத்திற்கு முக்காரம் என்றும், முக்காத ஆறு என்றும் ஓர் உருவகம் உண்டு. அகார உகார மகாரங்கள் கூடி ஓங்காரம் என்ற ஒலி உண்டாவதனாலே அதை மூன்றுகாத ஒலி என்றும், முக்காத ஆறு என்றும் அழைப்பார்கள்; இந்த மூன்று காரங்களும் இணைந்த ஓங்காரமாகிய ஆற்றின் இணைப்பிலிருந்து தோன்றிய மூன்று வாழைகள் எவை? பாடலைப் பார்க்கலாம்.

முக்காத ஆற்றினின் மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்துத் திரிமாங்கா யற்றது
அக்க னரித்தாயி லடங்கினர் கன்னியர்
நக்கு மலரடி நடுவில் நின்றானே

இடைகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்றையும் மூன்று வாழைகள் என்கிறார் சித்தர்.

அகங்காரத்தை உட்கொண்டிருப்பதனாலே சீவான்மாவைச் செக்கு என்கிறார். தனுத்திரயங்கள் ஆகிய மூன்றையும் திரிமாங்காய் என்று உருவகம் செய்கிறார் சித்தர். செக்காகிய சீவான்மா, ஞான அனுபவம் கைவரப்பெறும் போது, மூன்றும் பொய்யென உணர்வதால் மூன்று மாங்காய்களும் அற்று வீழ்கின்றன.

தனுத்திரயம் என்பது மூன்று உடம்புகளைக் குறிப்பது. பருவுட லாகிய தூலதனு, சூக்கும தனுவாகிய புரியட்ட காயம், சுழுத்தியாகிய காரண தேகம் இந்த மூன்றும் கிரியா சக்தி, இச்சா சக்தி, ஞானா சக்தி, ஆதிசக்தி, பராசக்தி ஆகிய ஐந்து ஆற்றல்களோடு சேர்ந்து அடங்கியமையினாலே 'அடங்கினர் கன்னியர்' என்றார்,

குருவின் வாயிலாக இரகசியங்களை உணர்ந்த யோகப் பயிற்சி மாணவன், ஞான கமலத்தின் நடுவிலே தியானங்கூடி நிற்பவனாகை யினாலே, 'நக்கு மலரடி நடுவில் நின்றானே' என்றார்.

இனி, விலங்குகளையும் பறவைகளையும் கொண்டு ஓர் உருவகம் வருகிறது:

கூகையும் பாம்பும் கிளியொடு பூவையும்
நாகையும் புள்ளும் நடுவில் உறைந்தன
நாகையைக் கூகை நணுக லுறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே

இந்தப் பாடலின் உருவகத்தைப் பழைய உரையாசிரியர் கீழ்க் கண்டவாறு விளக்குகிறார்:

கூகை, பாம்பு, கிளி, பூவை, நாகை, புள் என்பன உருவகம். ஒருகால் அறிவு விளங்காமையும், ஒருகால் அறிவு விளங்கலுமுடைமை பற்றி, ஆன்மாவைக் கூகை எனவும், விடமுண்டவன் மயங்கி ஒன்றும் தோன்றாமல் கிடத்தல் போல ஆணவ மலத்தில் அழுந்தி மயங்கிக் கிடத்தலால் ஆணவத்தைப் பாம்பு எனவும், மகிழ்ச்சியூட்டுதலால் நல்வினையைக் கிளி எனவும், அருவருப்பு முதலிய குணங்கள் உண்மையால் பூவை எனவும், அற்பவுணவை விரும்புதலுண்மையின் சிற்றறிவை நாகை எனவும், பயன் உள்ள இடத்தே அப்பயனை நுகரச் செல்லுதலின் அந்தக்கரணத்தைப் புள் எனவும் குறித்தருளினர்.

இருட்டை விரும்புகின்ற பறவை ஆந்தை அல்லது கூகை. ஆகையால் சித்தர்கள் அஞ்ஞானத்தைக் கூகை என்று அழைப்பார்கள். பாம்பு என்பது சுவாசத்தை. கிளி என்பது புண்ணியம். பூவை என்பது பாவம். நாகை என்ற உருவகம் சிற்றறிவாகும். புள் என்பது மனம் முதலிய கரணங்களை.

கூகையாகிய ஆன்மாவும், ஆணவமாகிய பாம்பும், நல்வினையாகிய கிளியும், தீவினையாகிய பூவையும், நாகை என்னும் சிற்றறிவும், புட்களாகிய கன்மங்களும் மாயையிலே சந்தித்து உறைகின்றன. நாகையாகிய சிற்றறிவைக் கூகையாகிய ஆன்மா சேர்வதால், கூகையைக் கண்டு நடுநடுங்கி எலி கதறுவதைப்போல சீவான்மா துன்பத்தில் புலம்புகிறது. இனி,

புலமைந் துளமைந்து புட்சென்று மேயும்
நிலமைந்து நீரைந்து நீர்மையு மைந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பா னொருவன்
உலமந்து போம்வழி யொன்பது தானே

புலன்கள் ஐந்தாம். இந்த ஐந்தும் பஞ்சேந்திரியங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்தப் பஞ்சேந்திரியங்களை ஐந்து பறவைகள் என்கிறார் சித்தர்.

புலம் என்பது பூதத்தை. புலன்கள் ஐந்து என்பது ஐந்து பூதங்களை.

ஐந்து பூதங்களும் சேர்ந்த இந்த உடம்புக்குள்ளே பஞ்சேந்திரியங்களாகிய ஐந்து பறவைகள் உள்ளன. இவை சென்று மேய்கின்ற இடங்களும் ஐந்தாம். அவை தன்மாத்திரைகள் என்று அழைக்கப்படுகின்ற ஐந்து.

நீர் என்றால் குணம். ஐந்து இந்திரியங்களின் குணங்களும் ஐந்து அல்லவா!

நீர்மை என்பது துய்க்கின்ற நுகர்ச்சி. இவையும் ஐந்து.

'குணம் ஒன்று கோல்கொண்டு' என்றால், பிறவி எடுத்து வினைப் பயனையே பற்றுக்கோடாகக் கொண்டு என்று பொருளாகும். மேய்ப்பான் என்பது ஆன்மாக்களுக்கு வினைப்பயனை நுகரச் செய்கின்ற முதல்வன்.

இந்த உடம்புக்குள்ளே வினைப்பயனை அனுபவித்துச் செல்கின்ற வாயில்கள் ஒன்பதாக இருப்பதனால், உலமந்து போகின்ற (துன்புற்று) வழி ஒன்பது என்கிறார் திருமூலர்.

இதுவரை நாம் ஆராய்ந்த உருவகங்களின் உட்கிடை சிந்தித்தற்குரியது. வினைப்பயனால் இந்த உடம்பு நமக்கு வந்தது. சீவான்மா தனது வினைக்கு ஈடாக மெய்கொண்டு பிறக்கிறது. இந்த வினைப் பயன்களை நுகர்வதற்காக ஐம்புலன்களையும் இச்சைப்படி திரியவிடுகிறது சீவான்மா. இந்த நுகர்ச்சியானது ஒன்பது வாயில் வழியே நடைபெறுகிறது. இவ்வாறு நடைபெறுவதன் காரணமாக சீவான்மாவிற்கு நற்கதி கிட்டுவதில்லை. இந்தக் கருத்தையே மரங்களைக் கொண்டும், செடிகளைக் கொண்டும், தொழிலாளர்களின் செயல்களைக் கொண்டும், பறவைகளைக் கொண்டும், விலங்குகளைக் கொண்டும், இயற்கைக் காட்சிகளைக் கொண்டும், பற்பலவாறாக நம் சித்தர்கள் உருவகங்கள் செய்து வழங்குகிறார்கள்.

இந்த உருவகங்களின் அழகும் கவர்ச்சியும், சிற்சில இடங்களில் வருகின்ற நகைச்சுவையும ஒருபுறமிருக்க, இந்த உருவகங்களுக்கெல் லாம் மூலமாக அமைந்த சித்தர்களின் கருணையை உன்னிப் பார்க்க வேண்டும். மனித குலம் தீங்கனிகளைச் சுவைக்க மாட்டாமல், எட்டிப் பழங்களை விரும்பி உண்கின்றதே என்று மனித சமுதாயத்தின்மீது இரக்கப்படுகிறார்கள் சித்தர்கள். இந்த உடம்பிலுள்ள உட்கருவி களைக் கொண்டு கடைத்தேறுவதற்குள்ள பயிற்சி முறைகள் இருந்தும் கூட, மனிதர்கள் தங்கள் வாழ்வையும் அரிய ஞான சாதனமாகிய இந்த உடம்பையும் வீணாக்குகிறார்களே என்று மெய்யாகவே வருந்து கிறது சித்தர்களின் மனம்.

பலநூறு ஆண்டுகளாக நம்முடைய புண்ணியத் தமிழ்நாட்டிலே தோன்றி, ஞானமொழிகளை அருளியுள்ள மகான்கள் அனைவரும், மனிதகுலத்தின்மீது உள்ள தங்களது ஒப்பற்ற பரிவினால், கருணை யினால் ஞான உபதேசங்களை மனந்திறந்து நமக்குத் தந்திருக்கிறார் கள். துன்பத்தில் உழல்கின்ற மனிதர்கள், காரண குருவை அடைந்து உய்யும் வழியைக் கற்றுத் தேர்ந்து, இந்த உடம்பைக் கொண்டே உடம்பை வென்று, பிறப்பிறப்பாகிய சுழலிலிருந்து விடுபடவேண்டும் என்ற நோக்கத்தோடு, தாங்கள் பாடுபட்டுத் தேடிக் கண்டனுபவித்த ஞான முறைகளை, மனித சமுதாயத்திற்குப் பயன்படக் கூடிய வகையிலே பற்பல பாக்களாக வழங்கி அருளியிருக்கிறார்கள்.

இந்தப் பாடல்களின் களஞ்சியமாகிய சித்தர் இலக்கியத்தைப் படிப்பவர்களின் உள்ளத்தில், அம்புபோல் பாய்ந்து சென்று தைக்கும் முறையிலே இந்த உருவகக் கதைகள் கருத்திலும் வடிவத்திலும் கூர்மையும் வேகமும் கொண்டு சித்தர்களுடைய ஞான உள்ளமாகிய வில்லிலிருந்து எவ்வி வருகின்றன. இந்த உருவகங்களிலே கருத்தாழம், கற்பனைச் செறிவு, மொழிவன்மை, கவியாற்றல் ஆகிய அனைத்தும் ஒருங்கு கூடியிருப்பதால், கருத்து முழுவதையும் புரிந்துகொள்ள முடியாத வாசகர்களையும், இந்தப் பாடல்களுக்குள்ளே ஈர்ப்பாற்றல் இயங்கி உள்ளத்தைக் கவர்கிறது. இந்தப் பண்பினால்தான் சித்தர் இலக்கியத்திலுள்ள உருவகப் பாடல்கள், பல நூற்றாண்டுகளாக எல்லா நிலையிலுள்ள மக்களாலும் மீண்டும் மீண்டும் பாடப்பெற்றுச் செம்மை இலக்கியமாகவும் நாடோடி இலக்கியமாகவும் நன்கு பாதுகாக்கப் பெற்று வருவதை நாம் காண்கிறோம்.

சித்தர் இலக்கியத்திலே உருவகப் பாடல்கள் தனிப்பண்போடு தனிக் கவர்ச்சியோடு விளங்கிவருவதால், எல்லாச் சித்தர்களுமே தங்களுடைய படைப்புக்களிடையே உருவகம் என்ற கற்பனை உத்தியை ஆர்வத்தோடு கையாண்டு வருவதைப் பார்க்கிறோம். இந்த உருவகங்கள் அனைத்திலும் செம்மை சான்ற பேரிலக்கியமாக விளங்குவது திருமூலருடைய திருமந்திரமாலை ஆகும். அந்த வகையிலே, மேலே கொடுத்துள்ள சான்றுகள், சித்தர்களின் உருவகத்தி லுள்ள ஆழத்திற்கும் கற்பனை எழிலுக்கும் செவ்விய சான்றுகளாக விளங்குகின்றன.

★

# 30. யாப்பியலும் இசையமைதியும்

சித்தர் பாடல்களை ஆராயும்போது, இன்னொரு முக்கியமான சிறப்பு அந்தப் பாடல்களின் அமைப்பு முறையிலே இருப்பதை நாம் நன்கு காண்கிறோம். அந்தச் சிறப்புத்தான் சித்தர் பாடல்களின் இசை அமைதியாகும்.

சித்தர்கள் தங்கள் பாடல்களின் வாயிலாக மிகப்பெரிய தத்துவங்களையும் ஆன்ம இரகசியங்களையும் வழங்கியிருப்பது ஒருபுறம் இருக்க, இந்தப் பாடல்களில் பெரும்பாலானவை தாள அழகு நிரம்பிய நல்ல இசைவடிவங்களாகத் திகழ்வது, ஒரு குறிப்பிடத்தக்க பெரிய சிறப்பு ஆகும்.

நாட்டுப்புறப் பாங்கிலே அமைந்த சித்தர் பாடல்களிலும் சரி, இலக்கியச் செய்யுட்களின் பாங்கிலே அமைந்த பாடல்களிலும் சரி, இந்த இசை அமைதியானது பெரிய புலவர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவுமே விளங்கி வந்திருக்கிறது. மிகப் பெரிய கவிஞர்களாகிய கம்பரைப் போன்ற பெரும் புலவர்கள், இந்த இசையமைதியைத் தங்களுடைய யாப்பு முறையிலே கையாண்டிருப்பதைக் கண்டு நாம் வியப்பு அடைகிறோம்.

சித்தர் என்று நாம் வகைப்படுத்தும்போது, தேவார இசை ஞானிகளாகிய மூவரும், மாணிக்கவாசகரும், இந்தச் சித்தர்களின் வரிசையிலே சிறப்போடு திகழ்கிறார்கள் என்பது அடிப்படையான ஓர் உண்மையாகும்.

ஒன்பதாந் திருமுறையிலும், பதினோராந் திருமுறையிலும் இடம் பெறுகிற ஞானிகளில் சிலர் எப்படிச் சித்தர்களாக விளங்குகிறார்களோ, அவ்வாறே ஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும் சித்த புருஷர்களாகவே விளங்கினார்கள் என்பதற்கு, அவர்களுடைய வரலாற்றிலே பல புறச்சான்றுகளும், அவர்களுடைய இலக்கியங்களிலே பல அகச்சான்றுகளும் காண்கிறோம். நாயன்மார்கள் அறுபத்து மூவரைப் போலவே ஆழ்வார்கள் பன்னிருவரும் சித்தர்களாக விளங்கியிருப்பது கண்கூடு. பெரியாழ்வாரை 'விட்டுச்சித்தர்' என்றே அழைக்கிறோம். திருமூலரைப் பற்றியோ சொல்லவேண்டியதே இல்லை. இவ்வாறேதான் காரைக்கால் அம்மையாரும் ஆவார்.

இசை வடிவங்கள் என்று சொல்லும்பொழுது, ஆராய்ச்சி முறையிலே நாம் பகுத்துப் பார்ப்பதற்கு மிகவும் வாய்ப்பாக அமைந்துள்ள இசை வடிவங்கள் ஞானசம்பந்தர் வழங்கியுள்ள திருப்பதிகங்களாம்.

இந்த இசை வடிவங்கள் மற்றத் தேவார ஆசிரியர்களின் யாப்பு முறையிலும் அதே அமைதியுடன் வழங்கிவருவதால் ஞானசம்பந்தரின் இசை வடிவங்களை ஆராய்வதானது, மற்ற இசை வடிவங்களையும் ஆராய்ந்து பார்ப்பதை உள்ளடக்கும்.

இந்த ஆய்வை இரண்டு வகையான சான்றுகளுடன் நாம் நோக்குவது பயன் உடையதாகும்.

முதாலது வகை இலக்கியப் பகுதி என்றும், இரண்டாவது வகை இசைப்பகுதி என்றும் வகுத்துக்கொண்டு பார்க்கலாம்.

தேவார காலத்துக்குப் பின்பு தோன்றிய நமது செய்யுள் இலக்கியங்களிலே ஞானசம்பந்தப் பெருமானின் சந்த வடிவங்களும், யாப்பு அமைப்புகளும் பல பெரிய காவிய ஆசிரியர்களைப் பெரிதும் ஆட்கொண்டன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. ஆராய்ச்சி முறையை மனத்திற்கொண்டு மூன்றே மூன்று புலவர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், இவர்களின் தொகை விரிவையும், சான்று விரிவையும் தனியாக ஆராய்வது இசை அமைதி பற்றிய தனி நூலாகவே விரியும்.

சம்பந்தப் பெருமானின் யாப்பும், அவருடைய விருத்தப் பாவினங்களும் ஒரு பெரிய இலக்கிய அற்புதம். இசைச்சிறப்பு ஒருபுறமிருக்க, இலக்கணச் சிறப்பும் ஆழ்ந்து அகன்ற தெய்வப் புலமையும் மெய்ம் மறக்கச் செய்கின்றன. அத்தனை விரிவான பாவினங்களையும் சம்பந்தர் தேவாரத்தில் காண்கிறோம். அது ஒரு தனி ஆராய்ச்சி என்றாலும் பதச்சோறுபோல மூன்றே மூன்று பெரும் விருத்தப் பாடல்களை மட்டும் சம்பந்தருடைய பதிகங்களோடு ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், சித்தர்களின் சக்கரவர்த்தி யாகிய சிவவாக்கியர், சந்தப் புலவர்களின் சக்கரவர்த்தியாகிய அருணகிரிநாதர் ஆகிய இந்த மூன்று கவிமன்னர்களும் சம்பந்தருடைய இசைப்படிவங்களிலே தங்கள் மனத்தைப் பறிகொடுத்து, மிகவும் திளைத்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்களுடைய இலக்கியங்களிலே பற்பல ஆதாரங்கள் இருக்கின்றன.

கம்பருடைய இராமகதை இசைப்பாடற் களஞ்சியம், இசைச் செல்வம் என்று டி. கே. சி. அடிக்கடி சொல்லுவார்கள். கம்பனுக்கும் வால்மீகிக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்னவென்றால் கம்பனுடைய காவியம் 'lyrical poetry'; வால்மீகியின் வடிவம் 'narrative poetry' என்று ராஜாஜி ஒப்பிட்டு எழுதியிருக்கிறார். இந்தக் கருத்துக்களை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கம்பனுடைய யாப்புமுறை சம்பந்தருடைய இசை வடிவோடு எப்படி ஒன்றுகிறது என்பதைக் காட்டவே. கம்பனுக்குப் பிடித்த, மிகவும்பிடித்த சந்தங்களிலே மூன்று சான்றுகளைத் தருகிறேன். அந்தச் சந்தங்களைப் பார்க்கும் முன் முதலில் சம்பந்தருடைய தேவாரம்:

நயந்தவர்க் கருள்பல
நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட
நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண்
காடு மேவிய
பயந்தரு மழுவுடைப்
பரம ரல்லரே

இது சம்பந்தர் தேவாரம்; திருவெண்காட்டுத் திருப்பதிகம். இனி, கம்பருடைய பாடல்:

கயந்தரு நறும்புனல்
கையில் தீண்டலும்
பயந்தவர் களும்இகழ்
குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள
விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய
உதவி ஒப்பவே

கடைசி அடியில் திருக்குறளை நினைவுபடுத்துகிறார் கம்பர். தமது பாடல் வடிவிலே, அதன் அமைப்பிலே, சம்பந்தப் பெருமானை நினைவுபடுத்துகிறார். இனி இன்னொருவகையான சந்தம்.

சம்பந்தரின் திருவேணுபுரப் பதிகம்,

வண்டார்குழல் அரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளநெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு
வேணுபுரம் அதுவே

இனி, கம்பருடைய பாடலைப் பார்ப்போம்.

அருப்பேந்திய கலசத்துணை
அமுதேந்திய மதமா
மருப்பேந்திய எனலாம்முலை
மழையேந்திய குழலாள்
கருப்பேந்திரம் முதலாயின
கண்டான் இடர்காணான்
பொருப்பேந்திய தோளானொடு
விளையாடினன் போனான்

சம்பந்தருடைய பண்ணைக்கொண்டு, அதே கட்டளையில் இந்தக் கம்பர் பாடலையும் பாடிப் பார்த்தால், கம்பருடைய இசைச் செல்வமும் சம்பந்தருடைய இசைச் செல்வமும் எப்படி இழைகின்றன என்பது துலங்கும்.

கம்பனிலிருந்து இந்த வகையான சந்தங்கள் பல சொல்லி இதே சந்தங்களில் அமைந்த சம்பந்தரின் பதிகங்களையும் பலபல ஒப்பிட்டுப் பார்த்து அனுபவிக்கலாம்.

இன்னும் ஒரேஒரு இசைவடிவத்தை மட்டும் கம்பரும் சம்பந்தரும் எப்படிக் கையாளுகிறார்கள் என்று பார்ப்போம்.

*சம்பந்தர் (திருக்கருப்பறியலூர்ப் பதிகம்):*

வேதமொடு வேதியர்கள்
வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர்
கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருள்முன்
ஆடுகுழை தாழும்
காதவனி ருப்பதுக
ருப்பறிய லூரே

*இனி, கம்பர் பாடல் வருமாறு:*

ஓங்குமர னோங்கிமலை
ஓங்கிக்கழை ஓங்கிப்
பூங்குலைகு லாவுகுளிர்
சோலைபுடை விம்ம
தூங்குதிரை ஆறுமுள
குழலதோர் குன்றின்
பாங்குருள தோருறையுள்
பஞ்சவடி மஞ்ச

சம்பந்தருடைய இசை வடிவத்தையும் கம்பருடைய இசைவடிவத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இன்னும் இதேபோன்ற பல சந்த வடிவங்கள் உண்டு. கம்பரின் ஈடுபாடும் சம்பந்தரின் ஈடுபாடும் ஒருங்கே உண்டாகும்படி, இந்த இருபெரும் தெய்வ மாக்கவிஞர்களின் மாட்சியும் வியக்கத்தக்க ஒப்புமையோடு திகழ்கிறது.

இனி, சிவவாக்கியருக்கு வருவோம்.

சிவவாக்கியருடைய சந்தம் தனிப் பண்போடு நடைபோட்டு ஓடுகிற ஒரு சித்த வேகம் கொண்டது. அதைப் பார்ப்போம்.

*சம்பந்தர் (சீகாழிப் பதிகம்):*

நம்பொருள்நம் மக்களென்று
நச்சி இச்சை செய்துநீர்
அம்பரம்அ டைந்துசால
அல்லல் உய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன்
ஒளிமி குந்த செஞ்சடை
நம்பன்மேய நன்னகர்
நலங்கொள் காழி சேர்மினே

*இனி, சிவவாக்கியரைப் பார்ப்போம்:*

குண்டலங்கள் பூண்டுநீர்
குளங்கள்தோறும் மூழ்குறீர்
மண்டுகங்கள் போலநீர்
மனத்தின் மாசறுக்கிலீர்
மண்டையேந்து கையரை
மனத்திருத்த வல்லிரேல்
பண்டைமா லயன்தொழப்
பணிந்துவாழ லாகுமே

இனி, அருணகிரிநாதருடைய இசைவடிவங்களையும் சம்பந்தர் இசை வடிவங்களையும் ஒப்புநோக்குவோம்.

சம்பந்தர் (திருநாகேச்சுரப் பதிகம்) :

கலைமான் மறியும் கனலும் மழுவும்
நிலையா கியகை யினனே நிகழும்
நலமாகியநா கேச்சுர நகருள்
தலைவா எனவல் வினைதான் அறுமே

இதோடு, கந்தரனுபூதிப் பாடலை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் அறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

இன்னொரு சம்பந்தர் பாடல் :

பொன்னேர் தருமே னியனே புரியும்
மின்நேர் நடையாய் விரிகா விரியின்
நன்னீர் வயல்நா கேச்சுர நகரின்
மன்னே எனவல் வினைமாய்ந் தறுமே

இனி அருணகிரிநாதர் :

அறிவொன் றறநின் றறிவார் அறிவின்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே

அருணகிரிநாதருடைய திருப்புகழ் இசைவடிவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாமா?

சம்பந்தர் (திருக்கழுமலப் பதிகம்) :

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய
புனலுடை அவனிறை
இறையணி வளையிணை முலையவள் இணைவன
தொழிலுடை யிடவகை

கறையணி பொழில்நிறை வயலணி கழுமலம்
அமர்கனல் உருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி
கழல்தொழல் மருவுமே

*அருணகிரிநாதர் :*

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி

இந்தப் பாடலில் ஒருசீர் அதிகமாக வரும் என்பதைத் தவிர இசை அமைதியில் வியக்கத்தக்க ஒப்புமையைக் காணலாம்.

நான்குவரி நான்கு வரியாக எழுதாமல் கீர்த்தனைகளைப் போலப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று இந்தத் தேவாரங்களை எழுதிப் பார்த்தால், சம்பந்தருடைய இசைவடிவங்களில் இப்படிப்பட்ட நுட்பங்கள் பல நமக்குப் புலனாகும். இன்னொரு பதிகம், சம்பந்தர் பதிகத்தைப் பாருங்கள் :

(திருவீழிமிழலைப் பதிகம்)

மூவரு மாகி இருவரு மாகி
முதல்வனு மாய்நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்
பல்கணம் நின்று பணியச்
சாவமதாகிய மால்வரை கொண்டு
தாள்மதிள் மூன்றும் எரித்த
தேவர்கள் தேவர் எம்பெரு மானார்
தீதில் பெருந்துறை யாரே

இந்தப் பாடலோடு திருப்புகழில் வருகிற 'அகரமுமாகி' என்ற பாடலை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த இசை அமைதியின் இயைபு நன்கு புலனாகும்.

ஆலமரத்திலிருந்து விழுது வந்து நிலத்துக்குள் ஊன்றி நின்று விடுகிறது. முதலில் மரம் விழுதைத் தாங்குகிறது; பிறகு விழுது மரத்தைத் தாங்குகிறது. இசையுலகிலும் இலக்கிய உலகிலும் மரமும் விழுதுமாக நிற்பவை சித்தர் இலக்கியமும் காப்பிய இலக்கியமும்!

எது எதை எவ்வாறு பாதிக்கிறது என்று சொல்ல முடியாதபடி, இரண்டும் ஒன்றையொன்று பாதிக்கின்றன. செடியிலிருந்து வித்து வருகிறது. வித்திலிருந்து செடி வருகிறது. எது எதற்கு மூலம் என்று எப்படிச் சொல்வது? இவ்வாறுதான் சித்தர் இலக்கியத்தின் யாப்பு முறையும், இசையமைதியும் காப்பிய இலக்கியத்தின் யாப் போடும் இசையமைதியோடும் பிணைப்புண்டு வளர்ந்து வந்துள்ளன.

தொல்காப்பியத்திலே வருகிற 'உரு', 'பண்ணத்தி' முதலிய பாவினங்களையும் சித்தர் இலக்கியத்திலே பார்க்கிறோம்.

இந்தச் சித்தர் இலக்கியம் கூறுகிற தத்துவப் பொருளிலிருந்து நமது ஆய்வை, பாடல்களின் கவியமைப்பிலே செலுத்தினோமானால் இலக்கிய இன்பமும் பெறுவோம்!

# 31. இலக்கிய நோக்கு

சித்தர் இலக்கியத்தைத் தத்துவக் கண்கொண்டு பார்த்து, அறிவியல் முறையிலே பல தலைப்புக்களில் ஆராய்ந்தோம். இனி, இவற்றை இலக்கியக் கண்கொண்டு பார்க்கும்போது நமக்கு எத்தகைய அனுபவம் உண்டாகிறது என்பதைக் காணவேண்டும்.

'Reading At Random' என்று ஓர் இலக்கிய நுகர்ச்சிமுறை சொல்லுவார்கள். அதாவது அங்கங்கே எடுத்துச் சுவைப்பது என்பதாகும். ஆங்கிலத்தில் இந்தத் தலைப்போடு ஒரு பூந்துணர்ப் புத்தகமே வெளிவந்துள்ளது! அம்முறையிலே சித்தர்களின் பாடல்களிலே தொகை செய்யப்பட்ட திரட்டுக்களிலிருந்தும், கோவை என்ற தொகுப்புக்களிலிருந்தும் சில கவிதைகளை இலக்கிய நோக்கிலே அணுகலாம். பின்வரும் பாடல்கள் அங்குமிங்குமாக எடுக்கப் பெற்றவை:

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே

சித்தர்களின் பாடல்களிலுள்ள வகைமுறைகள் பலவாம். சூத்திரம் போன்று தத்துவங்களைச் சொல்வது ஒருமுறை. ஆதியும் அந்தமும் அற்ற பரம்பொருளின் இலக்கணங்களைப் பகுத்தறிவுக் கண்கொண்டு வரையறை செய்து பாடுவது இன்னொரு முறை. இந்த இரண்டும் தவிரப் பக்தர்களுக்குரிய வழிபாட்டு முறையிலே, எல்லையற்ற பரம்பொருளுக்கு ஓர் உருவம் தந்து, அந்த உருவ அமைப்பின் எழில்நலன்களை எடுத்துக் கூறுவது இன்னொரு முறை.

பொதுவாக அருவ நிலையிலே எல்லையற்ற பரம்பொருளை இயம்புவதே சித்தர் பாடல்களின் தனிப்பண்பு என்பது உண்மையாயினும், இந்தப் பாடல்களின் நெறிமுறைகளிலே இன்னும் பலவகைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்ற பொதுவகையான பாடல்கள் திருமூலரால் அருளப்பட்டுள்ளன. அத்தகைய பாடல்களில் ஒன்றே மேலே கண்ட திருமந்திரம்.

அறிவினால் காணமுடியாத இறைவனை, அன்பினால் காணமுடியும் என்பது பக்திநெறியாகும். உயர்வுக்கு உயர்வாகிய இறைவன் எளிமைக்கு எளிமையாக எழுந்தருளிவந்து அன்பினுள் அகப்படுகிறான் என்ற தன்மையை, எல்லா ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியுள்ளார்கள். அந்த வகையிலே பழமைக்குப் பழமை

வாகிய பரம்பொருள் அன்பினுள் வந்து அமர்ந்துகொள்கிறது என்ற எளிவந்த தன்மையை எடுத்துக் கூறுகிறது இந்தப் பாடல்.

* * *

மனத்தி லெழுகின்ற மாய நன்னாடன்
நினைத்த தறிவ னெனில்தா நினைக்கிலர்
எனக்கிறை யன்பில னென்ப ரிறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே

இறைவனுடைய ஆற்றலின் தன்மை எப்படி இருக்கிறது என்றால், அவன் உள்ளத்துக்குள்ளேயே இருந்து 'கண்ணாம்பொத்தி' விளையாடுகிறான். மனம் என்பது ஒரு மாயமான தேசம் ஆகும். அது நல்ல தேசமும் ஆகும். அந்தத் தேசத்தை மாய நன்னாடு என்றே திருமூலர் அழைக்கிறார். அந்த நன்னாட்டிலே நல்லாட்சி செய்பவனே இறைவன். ஆனால் இறைவன் இருப்பதை இந்த மனம் உணர்ந்துகொள்வது இல்லை. எங்கோ ஒரு நாட்டுப் புறத்தில் இருப்பவனுக்கு நாட்டை ஆளுகின்ற தலைவனைத் தெரியாது. அவனை அவன் பார்த்ததுகூட இல்லை. அப்படி ஒரு தலைவன் இருந்து நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறான் என்ற உண்மையே அவனுக்குத் தெரியாமலிருக்கலாம். அவனுக்குத் தெரியாது என்கிற காரணத்தினால் ஆளுபவன் இல்லை என்று ஆகிவிடுமா? ஆகிவிடாது.

அவ்வாறே மனம் என்ற தேசத்தை ஆளுகின்ற இறைவனும் தனது செங்கோல் முறையை நடாத்துகிறான். எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு தவறு நடந்துவிட்டால், சட்டம் அல்லது ஒழுங்கு பிசகிவிட்டால், உடனே ஆட்சியின் நெறிமுறை வந்து அதைப் பேணுகிறது அல்லவா? அவ்வாறுதானே இறைவனுடைய ஆற்றலும் அமைந்திருக்கிறது. தவறு செய்கின்ற மக்களை வந்து பேணிக் காப்பதே அந்தத் தெய்வத்தின் மாபெரும் கருணையாகும் என்கிறார் முனிவர்.

* * *

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்ததி தானே

இந்தத் திருமந்திரப் பாடலிலே சரீர சித்திக்குரிய ஒரு பெரிய வழியை யோகிகளுக்கெல்லாம் யோகியாகிய திருமூலர் உணர்த்துகிறார். ஒன்பது வாயில்கள் உள்ள இந்த உடம்பாகிய வீட்டிலே சில வாயில்களை அடைத்து விடுவதும், சில வாயில்களைத் திறந்து வைப்பதும், யோக முறையின்பாற்பட்டன. ஆசானின் நேர்முகப் பயிற்சியின் வாயிலாகவே இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். மூலவாசலை அடைத்துவிட்டு, மேலை வாசலைத் திறக்கின்ற உபாயத்தை ஒருவன் கற்றுக்கொண்டுவிட்டால், அவன் மரணமிலாப் பெருவாழ்வை அடைகிறான் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

காலனை வெல்லும் யோக இரகசியம் இதுவே. இந்த இரகசியத்தை எடுத்துச் சொல்லுகிறது இந்தத் திருமந்திரம்.

* * *

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே

இந்த உடம்பு நன்றாக இருக்கும்போதே இந்த உடம்பைக் கொண்டு செய்யக்கூடிய அரிய யோக நெறிகளைக் கற்றுத் தேறவேண்டும். உடம்புக்கு நலிவு, முதுமை, நோய் ஏற்பட்டு விட்டால், அதன் பிறகு, இந்த உடம்பைக்கொண்டு செய்யவேண்டிய செயல்கள் பலன் தரமாட்டா. எனவே, இந்த உடம்பு நன்றாக இருக்கும்போதே, இறை ஆற்றலைப் பெறுவதற்கு வேண்டிய கல்வி முறைகளைக் கற்று, உடம்பையும் செம்மையாக்கிக்கொண்டு, உள்ளத்திற்கும் உயிருக்கும் உறுதுணை தேடவேண்டும், என்ற இன்றியமையாத தன்மையை இந்தப் பாடல் வற்புறுத்துகிறது.

* * *

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வல்கயாகு மாபோற்
குருபரி சித்த குவலய மெல்லாந்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே

சித்தர்களுடைய இலக்கியத்தில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்ற பல கருத்துக்களிலே மிகமிக முக்கியமானது குருபக்தியாகும். 'ஆசானின் பெருமை' என்னும் பகுதியிலே இதை விரிவாகப் பார்த்தோம்.

* * *

செழுந்தென்றல் அன்றில்இத் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்தின் றென்மேல் பகையாட வாடும்
எனைநீ நலிவதென் னேயென்னும்
அழுந்தா மகேந்திரத் தந்த ரப்புட்
கரசுக் கரசே அமரர்தனிக்
கொழுந்தே யென்னும் குணக்குன்றே யென்னுங்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

திருவிசைப்பா என்னும் அரிய தொகுப்பிலே நாயகா நாயகி பாவம் என்று அழைக்கப்படும் தலைவன் தலைவி நிலையிலிருந்து பாடப்பெற்ற அழகான பாடல்கள் பல உள்ளன. அவற்றில் ஒன்றே மேலே உள்ள பாடல்!

வடமொழி இலக்கியத்தில் நாயகா நாயகி பாவம் என்று அழைக்கப்படுகிற காதல் இலக்கியம், பக்தி இலக்கியத்தின் ஓர் அழகான பகுதியாக அமைந்திருக்கிறது. தமிழ்மொழியிலும் இவ்வகையான காதல் இலக்கியம் பேரின்ப அனுபவத்திலிருந்து பல ஞானிகளால் பாடப்பெற்றுத் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்திருக்கிறது.

இத்தகைய பேரன்பை உள்ளடக்கிய காதற்பாடல்களிலே இரண்டு வகை உண்டு. பக்தன் தன்னைக் காதலியாகவும், இறைவனைக் காதலனாகவும் பாவித்துக் கொண்டு பாடப்பெறுகிற பாடல் ஒருவகை. இன்னொருவகை, பக்தன் தன்னைக் காதலனாகவும் இறைவனைக் காதலியாகவும் பாவித்துக்கொண்டு பாடப் பெறுகிற பாடலாகும். இந்த இரண்டு வகையான பாடல்களுமே சிற்றின்பக் காதற் பாடல்கள் போலவே அமைந்திருப்பினும், இவற்றின் அடிப்படை தெய்வக் காதல் அல்லது இறைபற்று என்பதாகும்.

மிகப் பழங்காலத்திலிருந்தே இவ்வகையில் எழுந்த பாடல்கள் பற்பலவாக வடமொழியைப் போன்று தமிழ்மொழியிலும் அழகோடு வழங்கிவருகின்றன. சங்க காலத்திலிருந்து இன்றுவரை இத்தகைய பாடல்மரபு தமிழர்களால் நன்கு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் இந்த உத்தியைக் கையாண்டு, ஏராளமான பாடல்கள் அருளியிருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்திலும் பாரதியாரின் கண்ணன் பாடல்கள் இந்தவகை இலக்கியத்தைச் சார்ந்தவை.

சித்தர் இலக்கியத்திலும் இவ்வகையான காதற் பாடல்கள் ஏராளமாக இருக்கின்றன. இலக்கியச் செம்மையோடு பாடப்பெற்ற சித்தர் இலக்கியத்தில் இந்தப் பாடல்களைக் காண்கிறோம். இவ்வாறே நாட்டுப்புறப் பாங்கில் இயற்றப்பட்டுள்ள சித்தர் இலக்கியத்திலும் இந்தக் காதற் பாடல்கள் பற்பலவாக உள்ளன.

ஒன்பதாம் திருமுறையில் வருகிற திருமாளிகைத் தேவரின் பாடலும் இவ்வகையான காதல் இலக்கியத்தைச் சார்ந்ததாகும். இதில் ஒரு மாறுபாடு என்னவென்றால், இந்தப் பாடலானது காதலியின் கூற்றாக அமையாமல், காதலியின் மனநிலையைத் தோழி அல்லது செவிலித்தாய் கூறுவதுபோல் அமைந்திருக்கிறது. இவ்வகையான பாடற்றுறையும் இந்த இலக்கியத்திலே உறுப்பாக அமைந்துள்ளது.

இறைவனிடத்திலே பேரன்பு கொண்டுள்ள பக்தனுடைய உள்ளம், அந்த இறை ஏக்கத்தினால் எத்தகைய அவதிக்கு உள்ளாகிறது என்பதைச் சித்திரிக்கிறது இந்தப் பாடல்.

காதலனையே நினைத்து நினைத்து உருகி வாடுகிற ஒரு தலைவியின் மனநிலை எப்படி இருக்குமோ, அப்படியே பக்தனாகிய காதலியின் மனநிலையும் இருக்கிறது என்பதை எடுத்துக்கூறுகிறது இந்தப் பாடல்.

தண்மை பொழிகின்ற வெண்ணிலவும் அனலாகக் காய்கிறது; பிரிவு என்ற வேதனைக்கு உள்ளான ஒரு தலைவிக்கு. இதுபோலவே இறைவனாகிய பரமாத்மாவைப் பிரிந்து வாடுகிற பக்தனாகிய

ஜீவாத்மாவின் நிலையும் வேதனைக்கு உள்ளாகிறது. இனிமை பொழிகின்ற அன்றில் என்ற பறவையின் ஒலியும் செவியைக் குத்துகிறது. தென்றல் இன்பத்தை உடம்பிலே பொழிவதற்குப் பதிலாக வெப்பத்தை மூட்டுகிறது. இயற்கையின் இனிய நுகர்ச்சிகள் அனைத்தும் பிரிவாற்றாமை என்ற வேதனையையே அதிகப்படுத்து கின்றன. காதல் என்ற இலக்கியத் துறையிலே இத்தகைய அமைப்பு கொண்ட பாடல்கள் பலவாக இருக்கின்றன. திருமாளிகைத் தேவரின் இந்தப் பக்திப் பாடலும் இறைவன் என்ற தலைவனை எண்ணி மருகுகிற பக்தன் என்ற தலைவியின் தாபத்தையும் வேதனையையும் இயற்கையின் சூழல் தருகின்ற துன்பத்தோடு இணைத்து இயம்புகிறது.

* * *

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் திக்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உன்கழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே

இந்த இரண்டு பாடல்களும் ஒன்பதாந் திருமுறையில் வருகின்ற திருமாளிகைத் தேவர் அருளிய இரண்டு அரிய படால்களாம்.

இந்த இரண்டு பாடல்களிலே திருமாளிகைத் தேவர் என்ற சித்தர் சிவமூர்த்தியை ஒளி வடிவிலே தியானம் செய்கிறார்; துதித்துப் பாடுகிறார். ஒளிவளர் விளக்கு என்றும், தெவிட்டாத ஆனந்தக் கனி என்றும் எம்பெருமானை அழைக்கிறார் திருமாளிகைத் தேவர்.

சிதம்பரமாகிய ஞான ஆகாசத்திலே நடனம் செய்கின்ற தில்லைக் கூத்தனும் இந்தப் பரம்பொருள்தான். தில்லை என்பது வெளியிலுள்ள சிதம்பரம் மட்டுமே அல்லாமல், இந்த உடம்புக்குள் இருக்கின்ற சிதாகாசம் என்னும் ஞானப் பெருவெளியைக் குறிக்கின்றது.

வெளியிலே ஆடுகின்ற நடனமே இந்த உடம்புக்குள்ளும் நடை பெற்று வருகின்றது. ‘பரவசம் தருகின்ற இந்தப் பேரானந்தக் கூத்தை அடியேன் எவ்வாறு வருணித்துச் சொல்வேன்’ என்று தம்வசமிழந்து பாடுகிறார் மகான். “அந்த நடனத்தின் களிப்பெல்லாம் எவ்வாறு பாடுவது என்ற முறையையும் எனக்கு நீதான் கற்பிக்க வேண்டும்”

என்று இறைவனையே நோக்கி மனமுருகிப் பாடுகிறார் திருமாளிகைத் தேவர்.

அடுத்த பாடலில், திருமாளிகைத்தேவர் சிவபிரானை நோக்கி, அவனுடைய நடனத்தின் ஆனந்த பரவசத்தின் இயல்புகளை மேலும் மேலும் வியந்து கூறுகிறார். மூன்று கண் உடைய கரும்பு என்றும், தாணு என்றும் சிவபிரானை அழைக்கிறார். கரும்புக்குக் கண் என்பது அதனுடைய கணுக்களாகும். அந்தச் சொல்லைச் சிலேடையாகப் பயன்படுத்தி மூன்று கண்ணுடைய கரும்பு என்கிறார். இதன்பொருள் என்னவென்றால், இந்த உடம்புக்குள்ளே சிவதாண்டவம் நடைபெறுவ தற்கு ஆதாரமாக அமைந்திருக்கின்ற மூன்று ஆற்றல்களும் மூன்று கண்களால் செயற்படுகின்றன என்பதே. அவையே சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று கண்கள். இந்த மூன்று கண்களையும் வைத்துக் கொண்டு, பரம்பொருள் இந்த உடம்புக்குள்ளே நின்று களிநடனம் புரிகிறது. அந்த நடனம் இன்ப மயமாக இருப்பதால் கரும்பு போன்று தித்திக்கிறது. எனவே உடம்பினுள் நின்று தொழில் செய்கிற இந்தச் சிவனாகிய ஆனந்தக் கூத்தனை, மூன்று கண்ணுடைய கரும்பு என்று சித்தர் பாடுகிறார்.

தாணு என்றால் தானே தோன்றி, என்றும் அழியாமல் நிற்கின்ற, நிலைபேறான பொருள்! சிவன் தாய் தந்தையர் இல்லாமல் தானே தோன்றிய சுயம்பு ஆவான். அதோடு தாய் தந்தையரால் ஈன்றெடுக்கப் பெற்ற மற்ற உடல்களைப் போன்று அழிவு தனக்கு இல்லாத பொருள் சிவன்.

தாயின் கருவிலே தோன்றுகின்ற பொருள்கள் அனைத்தும் அழியக் கூடியவை. அந்தத் தாயையும் அந்தத் தந்தையையும் போன்ற இந்தச் சிசுவும் அழியக்கூடியதே. ஆனால் தாய் தந்தையரின்றித் தானே தோன்றிய பரம்பொருளாகிய சிவன் அழிவில்லாதவன். அவனைத் தாணு என்று அழைப்பது சித்தர்களின் மொழி வழக்காறு ஆகும்.

ஆதி இல்லாத கடவுள் என்பதன் பொருள், தாயின் வயிற்றில் தோன்றாத பரம்பொருள் என்பதாகும். அந்தம் இல்லாத பொருள் என்றால் மரணம் என்ற மறைவு இல்லாத நிலையான பொருள் என்று கருத்து. எனவே ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைத் தானே தோன்றி என்றும், நிலையாக நிற்கக்கூடிய அந்த எம்பெருமானைத் தாணு என்றும் சித்தர்கள் அழைக்கிறார்கள். இந்த அழைப்புகள் அனைத்தையும் உள்ளத்தில் கொண்டு, திருமுறையாகிய பக்திப் பாடல்களிலே திருமாளிகைத்தேவர் என்ற மகான், தமது தோத்திரப் பாடலிலே பாடி, அந்தத் தோத்திரத்துக்குள்ளே சாத்திரக் கருத்துக் களையெல்லாம் அடக்கிச் சித்தர்களுக்கு உள்ள ஞானப் பாங்கிலே, இந்த அழகிய பாடல் அருளியிருக்கிறார்.

இந்தப் பாடல்களைப் போலவே ஒன்பதாந் திருமுறை என்று சைவத் திருமுறையிலுள்ள அரிய சித்தர் பாடல்களிலே திருமாளிகைத் தேவரின் பாடல்கள் ஞானப் பண்போடு கூடிய அரிய இலக்கியமாகும்.

* * *

முதற்சங் கமுதூட்டும்; மொய்குழலார் தம்மை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போ ததுவூதும்; அம்மட்டோ இம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்?

இந்தப் பாடல் பட்டினத்து அடிகள் தனிப்பாடல்களுள் ஒன்று.

சித்தர்கள் ஞான பரிபக்குவம் அடையவேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவே சில உத்திகளைக் கடைப் பிடிப்பது உண்டு. இந்த மனித வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தி, இத்தகைய நிலையாமையினூடு நிலைபேறு அடைவதற் குரிய வழி இருக்கிறது என்பதை அழுத்தமாக அவர்கள் சொல்வார் கள். இவ்வாறு அழுத்தம் கொடுப்பதற்காக, உடலின் நிலையாமையை யும் வாழ்வின் புன்மையையும் அவர்கள் வல்லமையோடு பாடுவார்கள். அப்படிப் பாடப்பெற்ற பாடல்களில் ஒன்றுதான் இது.

நம்முடைய வாழ்க்கையில் தமிழர்களுடைய மரபுப்படி மூன்று முறை சங்கு இடம்பெறுகிறது. முதலாவது சங்கு பால் ஊட்டுகிற சங்கு. தாயானவள் குழந்தைக்கு எப்படிப் பால் ஊட்டுகிறாள்? ஒரு காலம் வரை அமுதப்பால் ஊட்டுகிறாள். பின்னர்ச் சங்கிலே பாலை ஊற்றி மிகுந்த அன்போடு தனது குழந்தைக்கு ஊட்டுகிறாள் அவள். இந்தப் பால் ஊட்டும் சங்குதான் நமது வாழ்விலே நாம் சங்கோடு கொள்கிற முதலாவது தொடர்பு ஆகும். இதைத்தான் பட்டினத்து அடிகள் முதலாவது சங்கு அமுதூட்டும் என்கிறார்.

திருமண வேளையில் சங்கு ஒலிப்பது தமிழருடைய மரபாகும். சங்குவளையல்கள் மணமக்களுக்கு அணிவிப்பதும் பழந்தமிழர் வழக்கம். எனவே, இரண்டாவது முறை நாம் சங்கோடு தொடர்பு கொள்வது நமது திருமணக் காலத்தில்தான். இதையே பட்டினத்தடிகள் நடுச் சங்கம் மொய்குழலாராகிய பெண்களை நம்மோடு திருமண விலங்கிலே பூட்டுகிறது என்று திருநாண்பூட்டு என்ற மங்கலச் சடங்கைப் பாடுகிறார்.

இனி, நமது மனித வாழ்விலே மூன்றாவது முறை சங்கு எப்பொழுது ஒலிக்கிறது? இதுதான் மரணச்சங்கு. உடம்பைவிட்டு உயிர் பிரிந்த பிறகு, அந்த உடம்பைப் பற்பல சடங்குகளுக்கு உள்ளாக்கி எரியூட்டுகிறோம் அல்லவா, அல்லது புதைக்கிறோம் அல்லவா? அந்தச் சமயத்தில் ஒலிக்கின்ற சங்கு வாழ்வின் கடைசிச் சங்காகும். அதைத்தான் கடைச்சங்கு என்கிறார் பட்டினத்தடிகள்.

மூன்றுமுறை சங்கு ஒலிப்பதோடு, வாழ்வின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை மனித வாழ்வின் ஆட்ட ஓட்டம் எழுந்து ஒடுங்கிவிடுகிறது. இந்த நிலையற்ற தன்மையைத்தான் அம்மட்டோ, இம்மட்டோ என்ற சொற்களினால் உருக்கத்தோடு பாடுகிறார் பட்டினத்தார்.

இத்தனை நிலையற்ற தன்மையுடைய இந்த மனித வாழ்விலே, கிடைக்கின்ற ஒருசில நாட்களை வீணான இச்சையிலே செலவழித்து விடாமல், நிலையான ஞானப்பேறு பெறுவதற்குரிய சாதனமாக இந்த உடம்பை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற பேருண்மையை,

மனத்தில் ஆணி அடித்தாற்போல் உட்செலுத்துவதற்காக, இப்படி ஒரு சொற்சித்திரத்தை வரைந்து காட்டுகிறார் மாபெரும் சித்தராகிய பட்டினத்தடிகள்.

* * *

திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூர் என்ற ஊரில் தோன்றியவர் சேந்தனார். இவர் பட்டினத்தடிகளின் தலைமைக் கணக்கராக விளங்கினார். பட்டினத்தாரின் கட்டளைப்படி அவரது கருவூலத்தைத் திறந்து எல்லோரும் அவரவர் விரும்பியவண்ணம், அதில் உள்ள பொருள்களை அள்ளிக்கொள்ளுமாறு செய்தார். அதுபொழுது பட்டினத்தாரின் சுற்றத்தார்கள் சோழவேந்தனிடம் சென்று முறையிட்டனர். சோழ மன்னன் சேந்தனாரைச் சிறையிலிடும்படி ஆணை பிறப்பித்தான்.

மத்தளை தயிருண் டானும் மலர்மிசை மன்னினானும்
நித்தமும் தேடிக் காணா நிமலனே அமல மூர்த்தி
செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டு ளானே"

என்று பட்டினத்தார் இறைவனை வேண்டினார்.

சேந்தனார் பட்டினத்தாரின் அருளால் சிறையினின்றும் விடுதலை பெற்றார் என்று வரலாறு கூறுகிறது. சித்தர் பாடல்களில் உள்ள மந்திர ஆற்றலுக்கு இந் நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

இனி, இந்த வரலாற்று நாயகனாரான சேந்தனாரின் இலக்கியத்தைப் பார்ப்போம்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் தோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி எல்லைக்கப் பாலாய்
நின்றைஞ் ஞூற்று அந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
யிவர்நம்மை ஆளுடை யாரே

சேந்தனார் என்ற சித்தருடைய பாடல்களும் ஒன்பதாம் திருமுறையிலே முக்கியமானதொரு இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த மகானும் பல சித்திகள் செய்து, பேரின்ப அனுபவங்களிலே

திளைத்துச் சித்தர் என்ற இலக்கணத்திற்குச் சிறந்ததோர் இலக்கியமாக வாழ்ந்தவர் ஆவார்.

திருவீழிமிழலையிலுள்ள எம்பெருமானைக் கண்டு களிபேருவகை கொண்ட தனது ஆனந்த வெளியீட்டை இந்தப் பாடலிலே உள்ளம் பொங்கிய நிலையிலே காட்டுகிறார் சேந்தனார். எளிய சொற்கள்; படித்ததுமே பொருள் விளங்கக்கூடிய மென்மையான சொற்கள். திருவிசைப்பா என்ற தொகுப்பிலே சேர்வதற்குரிய இசைப்பண்பு நிறைந்த சொற்கள். இந்த அழகிய சொற்களால் இறைவனைக் கற்றவர்கள் விழுங்கக்கூடிய பழமாகவும், கடலாகவும், ஞான மில்லாத மக்களுக்குச் சற்றும் புலனாகாத மாணிக்கக் குன்றாகவும், புரிந்துகொள்பவர்களுடைய மனத்திலே ஒளிவீசக்கூடிய இரத்தின மணிவிளக்காகவும் எல்லாம், கண்டுகொண்டு, அந்த ஆனந்தப் பரவச நிலையிலே, சேந்தனாரின் பாடல்கள் வருகின்றன.

இறைவனுடைய எல்லையற்ற தன்மையை ஓவியமாக வரைந்து காட்டுகிறது இந்தப் பாடல். அவனுடைய உருவம் எங்குமாய் எல்லாமாய் விரிந்து பரந்து நிற்கிறது. மேகத்தின் பரப்பைப் போலவே அங்கங்களின் பரப்பும் அமைந்துள்ளன. அண்ட பிண்ட சராசரம் அனைத்தையும் தழுவிப் போர்த்தி நிற்கின்ற இந்த மாபெரும் உருவை, மாபெரும் சொற்களால் எடுத்து ஓதுகிறார்; சேந்தனார் என்ற இசைஞானி. இந்த இரண்டு பாடல்களும் சித்தர் இலக்கியத்தைச் சார்ந்தவை என்றாலும் பக்தி இலக்கியத்தின் பான்மைகொண்டன வாய் மற்றத் துதிப்பாடல்களைப் போலவே அமைந்திருக்கின்றன. இவற்றை இங்கே நாம் ஆராய்வதன் நோக்கம் என்னவென்றால், உருவமற்ற நிலையிலே இறைவனை மனத்தினால் அருவமாகக் கண்டு வழிபடுகின்ற சித்தர்களும், அதே பரம்பொருளை உருவத்தாலும் கண்டு துதிக்கிறார்கள் என்ற உண்மையை எடுத்துக்காட்டவேதான்.

மாலுலா மனம்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாத் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாக் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லிய லிவளே

என்பது திருவிடைக்கழித் திருவிசைப்பா ஆகும்.

இந்தப் பாடலை அருளிய சித்தர் சேந்தனார் முருகனுடைய பெயரையே தாங்கியவர் அல்லவா! இவர் முருகப் பெருமானுடைய மோகத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த தலைவியாகத் தம்மைப் பாவித்துக்கொண்டு பாடுகிறார்.

முருகனைப் பற்றிய பாடல்கள் பதினோராந் திருமுறையில் வருகின்றன. எனினும் இங்கே ஒன்பதாம் திருமுறையில் சேந்தனே சேந்தனைப் பாடுவது ஒரு சிறப்பல்லவா!

பாட்டுக்கு வருவோம்:

இந்தப் பாடல் பேரின்பக் காதற்பாட்டு. இதன் துறை செவிலி கூற்றாகும். இந்தப் பதிகத்தின் இறுதிப் பாடலில் ஆசிரியரே இது செவிலி கூற்று என்பதனைக் குறிப்பிடுகிறார்.

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூமொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதி யசப்புறைச் சேந்தன்
வாய்ந்த சொல்

என்று சொல்கிறது இப் பதிகத்தின் இறுதிப் பாடல்.

மால் உலாம் மனம் என்று பாடுகிறாள் தலைவி. அதாவது மோக மயக்கு உள்ளத்தை மீண்டும் மீண்டும் சுற்றிச் சுழற்றுகிறது!

'மனம் தந்து' என்றே பழியையெல்லாம் தலைவன் தலையிலே போடுகிறாள் செவிலி!

தந்து என்றால் இப்படி ஒரு மனநிலையைத் தலைவிக்கு உண்டாக்கி எனப் பொருள் பெறும்.

'வளைகவர்தல்' என்ற தொன்மையான காதல் வெளியீட்டுப் பாங்கிலே சித்தர் இந்தப் பாடலைத் தருகிறார். சங்கம் என்பது சங்கு வளையல்களை!

வளையல்களைக் கவர்ந்தான், வவ்வினான் என்று குற்றம் சாட்டு கிறாள் செவிலி, சேந்தன்மீது!

முருகன் என்றால் அவன் தேவ சேனாபதி அல்லவா! இந்த நிலையையே மேல் உலாவுகிற தேவர்குலம் முழுவதையும், வானவர்கள் குலம் முழுவதையும், ஆளுகின்ற தலைவன் என்று பாடுகிறார்.

குரா என்பது திருவிடைக்கழியின் தலத்து மரமாகும். திருக்குரா மரத்தின் நிழலில் வேலேந்திய கையனாக நிற்கிற வேந்தனாகிய சேந்தன் என்று அந்தக் குற்றவாளியின் பெயரைச் சொல்லிக் குற்றம் சாட்டுகிறாள் என் மகள்—என்பதாகச் செவிலி கூறுகிறாள்.

முருகனை மலைமகள் மகன், மலைமகள் மதலை என்று இந்தப் பாடல் குறிப்பதொடு, வள்ளி தன் மணாளன் என்றும் சுட்டுகிறது.

சேந்தன் என்று பெயரை மட்டும் சொல்லியதோடு நிறுத்த வில்லை காதலி! "என் சேந்தன்" என்று சொந்தம் கொண்டாடு கிறாள்!

காதலின் மிகுதியும், மால் உலாவுகிற அந்த மனத்தின் நிலையும் எழிலோடு இந்தப் பாடலிலே செவிலியினால் நன்கு சித்தரிக்கப் பெறுகின்றன.

அகத்துறைப் பாடல்களிலே தலைவன்—தலைவி பற்றிய பாடல் களின் அமைப்பிலேயே இந்தப் பாடலும் வருகிறது. எனினும் இக் காதல் தெய்வக் காதல் என்பதும், காதலைத் தந்த தலைவன் முருகன் என்பதும், பாடலை இயற்றியவர் ஒரு சித்தர் என்பதும், நினைவிலே கொண்டு இந்தத் திருமுறைப் பாடலைப் பார்க்கவேண்டும்.

* * *

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

கருவூர்ச்சித்தர் என்ற ஞானி தஞ்சைப் பெருவுடையார் கோயில் வரலாற்றோடு கலந்து திகழ்பவர்.

இந்த மாபெரும் மகான், பக்தனுடைய சரியை கிரியை நிலையிலும் நின்றுகொண்டு, இறைவனைத் துதித்துப் பாடியுள்ள பாடல்கள் ஒன்பதாந் திருமுறையிலே உள்ளன. அவற்றில் ஒன்றே மேலே உள்ளது.

மனிதப் பிறவிக்கு உய்வாக அமைவது தெய்வத்தின் திருவடிகளே. அந்தத் திருவடிகளை அடையவிடாமல் தடுப்பன, இந்த உடம்புக்குள்ளேயே நின்று இடையூறு செய்கின்ற ஐம்புலப் பகைவர்களாம். இந்த முரண்பாட்டு நிலையைக் கருவூர்த் தேவரின் இந்தப் பாடல் எடுத்துக் கூறுகிறது. நம்முடனேயே பிறந்து நம் உடலிலேயே வசித்து வருகிற ஐம்புலனும் நமக்கு ஏற்பட்டுவிட்ட ஐம்பகைவர்கள் ஆவார்கள். இவர்களோடு இணைந்து நமக்கு உற்ற துணையாக இருப்பது எது? இறைவனுடைய மலர்ப்பாதமே யாகும். இந்தக் கருத்தைக் கூத்தனாகிய நடராசரோடு இதயத்தை இணைத்துக்கொண்டு பாடுகிறார் கருவூர்ச்சித்தர்.

* * *

மேவுமென்கை லாயபரம் பரையா மானா
வெறுகோடி ரிடிகளுக்கு முபதே சித்தார்;
மேவுமென்று சித்தரிலே யனேகங் கோடி
மேருவிலே யிருந்தார்க்கு முபதே சித்தார்;
மேவுமென்றென் னோடு பதினாறு பேர்க்கு
விளங்கியவர் பதம்பிடிக்க வுபதே சித்தார்;
மேவுமென்றே யெழுவருடன் திருமூ லர்க்கு
விளம்பினார் மெய்ஞ்ஞானம் விளம்பி னாரே

இந்தப் பாடல் செவிவழி வருகின்ற சித்தர்களின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியை எடுத்துச் சொல்கிறது. இதுபோன்ற பல பாடல்களைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது சித்தர்களின் மரபு வகையும் தொகையும் விரிந்து எத்தனை மாட்சி உடையன என்பது புலனாகும்.

இமய மலையிலிருந்து பொதிகை மலைவரை பலநூறு ஆண்டுகளாக எத்தனையோ பல சித்தர்கள், வனங்களிலும், குகைகளிலும், மலை முகடுகளிலும், அலைந்து திரிந்து தவம்செய்து, பல பேருண்மைகளைக் கண்டு, மாணவர்களுக்குக் கற்பித்துச் செவிவழியாக வழங்கி, ஏடுகளிலே வழங்கி நமக்கு இலக்கியமாகத் தந்திருக்கிறார்கள்.

இந்தச் சித்த பரம்பரையிலே மிகவும் முக்கியமான ஒரு சிலருள் திருமூலர் என்ற மகான் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகிறார்.

இவரைப் போலவே அகத்தியர் போன்ற இன்னும் சில சித்தர்களும் தாங்கள் வாழ்ந்து கண்ட அனுபவங்களையெல்லாம், தங்கள் வம்சங்களாகிய மாணவர்களுக்கு எடுத்துக் கற்பித்து, இந்த ஞானப் பெரும்பேறு முறிவின்றி நிலையாக வளர்ந்தோங்க வேண்டும் என்ற அரிய பெரிய நோக்கத்துடன், பல யோக முறைகளைத் தங்கள் வழிச் சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தச் சித்தர் மரபாகிய வழிமுறையை ஓரளவு கோடிட்டுக் காட்டுகிறது மேலே கண்ட பாடல்.

பதினெண் சித்தர்களும் தங்களுடைய நூலில் இவ்வாறே ஒவ்வொருவரும் தங்களுடைய வம்ச பரம்பரையைப் பற்றி அவை யடக்கமாகிய முன்னுரையிலே பாடியிருக்கிறார்கள். திருமூலரும் தாம் இயற்றிய திருமந்திரத் தொடக்கத்திலே நந்தி பெருமானிடமிருந்து தாம் ஞானம் பெற்றதையும், தம்மோடு மாணவர்களாக வேறு சில சித்தர்களும் ஞானம் பயின்றதையும், எடுத்துக் கூறுகிறார்.

சித்தர்கள் தங்கள் நூல்களைத் தொடங்குவதற்கு முன்னதாக தமது குருநாதனுக்கு வணக்கம் செலுத்துவதோடு, அந்தக் குருநாதர் எந்த வழியிலே தோன்றி வந்தவர் என்பதையும் கூறி, இந்த ஞான வம்சமானது எவ்வளவு பழமையானதும், ஆசான் சீடன் என்ற மரபிலே இடையீடு இன்றி வந்துகொண்டிருப்பதுமான ஞான வழிமுறை என்பதையும் கூறுவர். இன்னும் சொல்லப்போனால் திருக்கயிலாய பரம்பரை என்று அழைக்கப் பெறுகின்ற நமது தமிழகத்தின் மடாலயங்களின் வரலாறும் இதுவேயாகும்.

உலகின் பல நாடுகளிலும் உள்ள ஞான பீடங்களிலே ஒவ்வொன்றும் இத்தகைய நீண்ட நெடும் வரலாற்றுக்கு உரியதாம்.

இதன் நுட்பம் என்னவென்றால், ஒரு பேருண்மையானது தொடக்கத்திலே ஒரு மாபெரும் ஞானியினால் கண்டுபிடிக்கப்பெற்று, அவரோடு உடன்பயின்ற மாணவர்களால் ஒப்புநோக்கப்பெற்று, பிறகு அந்த அனுபவ ஞானமானது மாணவர்களுக்கு விளக்கப்பெற்று, அவரவர் தங்கள் தங்கள் பயிற்சியினாலும், அறிவுக் கூர்மையோடு இணைந்த ஆற்றலினாலும், இந்த ஞானத்தை எவ்வாறெல்லாம் வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்த முன்னுரை எடுத்துச் சொல்கின்றது. இவ்வாறு வரலாற்றை முதலிலே கூறினால்தான், பின்வரும் பொருளுக்குச் சான்று அமைகின்றது. அதோடு இந்த நூலைப் படிக்கும் ஒரு புதிய மாணவன், தான் படிக்கப்போகும் ஞானமானது இன்று நேற்று ஏற்பட்டதில்லை என்பதையும், நீண்ட நெடுங்காலமாகப் பழக்கத்திலும் பயிற்சியிலும் இருந்துவருகின்ற ஓர் அரும்பெருஞ் செல்வம் என்பதையும், தெளிந்துணர்ந்து கொள்கிறான். அதன்பிறகு நூலுக்குள்ளே புகும்போது அந்த நூலைப் படிப்பதற்கு வேண்டிய ஆர்வமும், அச்சத்தோடு கூடிய அக்கறையும் அவனுக்கு ஏற்படுகின்றன. எனவே இந்த அனுபவ ஞான நூல் எத்தகைய ஆதாரங்களோடு கூடிய நூல் என்பதையும், எப்படிப் பலராலும் பல காலத்திலும் இந்த உண்மைகள் சோதித்துச் சோதித்துச் செம்மை பெற்றவை என்பதையும் குரு பாரம்பரியம் என்ற பகுதி கண்கூடாகப் புலனாக்கும்.

* * *

வாசியென்றும் மவுனமென்றும் இரண்டும் வித்தை
மகத்தான சாம்பவிகே சரியும் ரண்டு
தேசியென்றால் யோகத்துக் காதி வித்தை
திறமான மவுனமென்றால் ஞான வித்தை
மாசியென்ற மனமுடைந்தா லிரண்டு மாகா;
மருவிநின்றே அறிவறிந்தா லிரண்டு மாகும்;
தூசியென்ற வெளியல்லோ அண்ட வீதி
சொக்காமல் பரிகொண்டே ஆக்கி யேறே

சித்தர்களுடைய ஆன்மப் பயிற்சியிலே ஒலியோகம் என்ற நாதப் பயிற்சியும் ஒளியோகம் என்ற ஞானக் கண்பார்வைப் பயிற்சியும் முக்கியமான இரண்டு முறைகள் என்பதை முன்னர் பார்த்துள்ளோம். இந்த இரண்டு பயிற்சிகளாகிய ஒலிக்கும் ஒளிக்கும் ஆதாரமாக அமைந்துள்ள வழிமுறைகள், சிற்சில மரபுகளுடன் அந்தந்தச் சித்தர்களின் உபதேச முறைக்கு ஏற்ப வழங்கிவருகின்றன. இந்த வழிமுறைகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தோமானால், வாசி என்கிற சுவாசப் பயிற்சியும், மௌனம் என்கிற அகக்கரணப் பயிற்சியும், பல சித்தர்களாலும் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுவதைக் காண்கிறோம். மேலேயுள்ள பாடலிலே வாசி என்கிற சுவாசப் பயிற்சியையும் மோனம் என்கிற ஐம்புல ஒடுக்கத்தையும் இந்த மகான், சித்தர்களுக்குரிய ஞான மொழியிலே வெளியிட்டுள்ளார்.

இந்தப் பயிற்சிகள் அனைத்துமே ஆசானுடைய நேர்முகப் பார்வையினால் பயிலவேண்டிய அனுபவக் கல்வி என்பதனால், இந்த வாசி யோகத்தைப் பற்றியும், பிற பயிற்சிகள் பற்றியும் வார்த்தைகளினால் விரிவாகச் சொல்லாமல், குருவின்மூலம் நேரிலே தெரிந்து கொள்ளவேண்டிய உபதேச முறைகள் என்று ஞானிகள் அறுதியிட்டுச் சொல்லிவிடுவார்கள்.

இவ்வாறு சொல்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, நேர்முகமாக இந்த முறைகளைத் தெரிந்து கொள்வதன்மூலம் ஐயம் திரிபுக்கு இடமில்லை. இந்த உடம்பிலுள்ள ஆதார மையங்கள் தொட்டுக் காட்டப்பெறுகின்றன. இது மிகவும் முக்கியமானதும் முதன்மையான காரணமுமாகும். இரண்டாவது காரணம் என்னவென்றால், ஒரு ஞானி மாணவனுக்கு அவ்வப்போது சந்தேகங்கள் கிளம்பினால், தீர்த்துவைக்க இடமுண்டு அல்லவா! அப்படிச் சிக்கல்கள் ஏற்படும்போதெல்லாம் ஏட்டைப் புரட்டிப் பார்த்து அந்தச் சிக்கல்களிலிருந்து மாணவன் தன்னை விடுவித்துக்கொள்ள இயலாது. குருவினிடம் நேர்முகமாகத் தனது ஐயங்களையும் சிக்கல்களையும் தெரிவித்தும், காண்பித்தும் எடுத்துக் கூறினால் அன்றி, அந்தத் தொல்லைகளிலிருந்து அவனுக்கு விடுதலை ஏற்படாது.

இந்த இரண்டு காரணங்களும் இத்தனை முக்கியமானவைகளாக இருப்பதால்தான் நுட்பமான இரகசியங்கள் தோன்றும்போது, சித்தர்கள் இவற்றின் விரிவுரைகளைக் குருவிடம் மாணவர்கள் நேரில் தெரிந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்.

* * *

பிறந்ததையா இவ்வளவு மெங்கே யென்றால்
    பெண்ணொருத்தி தூணதிலே நின்ற கோலம்
கறந்ததையா யிவ்வளவும் அந்த மாது
    சூட்சமதே அல்லது வேறொன் றில்லை;
கறந்ததையா உலகமெல்லாம் காமப் பாலைக்
    காலடியில் காக்கவைத்துச் சகல செந்தும்
இருந்ததையா இவ்வளவுஞ் செய்த மாது
    எங்கென்றா லுன்னிடத்தி லிருந்தாள் கன்னி

இந்த மனித உடம்புக்குள்ளே இரண்டு ஆற்றல்கள் செயற்பட்டு வருகின்றன. ஒன்று ஆண்மை ஆற்றல்; மற்றொன்று பெண்மை ஆற்றல். பிறவியிலே ஆணாகப் பிறந்தாலும் சரி, பெண்ணாகப் பிறந்தாலும் சரி, ஒவ்வொருவருடைய உடம்புக்குள்ளும் இந்த இரண்டு ஆற்றல்களும் இணைந்தே தொழில் செய்யும். பெண்மையின் ஆற்றல் அதிகமாக இயங்குகின்ற உடம்பு பெண் உடம்பாகும். ஆண்மை ஆற்றல் அதிகமாக இயங்குகின்ற உடம்பு ஆடவனாக இயங்குகிறது. ஆனால் இரண்டு பாலுக்கும் இந்த இரண்டு ஆற்றல்கள் இணைந்தே இவற்றை இயக்கி வருகின்றன.

சூரியனிடம் இரண்டுவிதமான சக்தியைப் பார்க்கிறோம். ஒன்று, அவனுடைய ஒளிமயமான வடிவம். சூரியனுடைய வடிவம் ஒளிமயமாக இருப்பதால் அந்த வடிவம் நம்முடைய கண்ணுக்குப் புலனாகிறது. இந்த இயல்பான ஒளியின்மூலம் தன்னைத்தான் நமக்குக் காட்டிக்கொள்கின்றது அல்லவா! இனி அந்த ஒளி இன்னொரு பொருளிலே படும்போது அந்தப்பொருள் நமக்குப் புலனாகும்படி துணை செய்யும். சூரியனிலிருந்து புறப்படுகின்ற கதிர்களிலே இந்த உலகப் பொருள்கள் அனைத்தையும் நாம் காணும்படி நமக்குத் துணை செய்கின்ற, இந்த இரண்டாவது ஆற்றல் சக்தி என்று பெயர் பெறும். ஒளிமயமான சூரியனுடைய வடிவம் சிவனுடைய ஆற்றல். அதுவே சுவயம்பிரகாசம் என்றும் ஒளிமயம் என்றும் அழைக்கப்பெறுகிறது.

சூரியனுக்கு இவ்வாறு அமைந்துள்ள இரண்டு ஆற்றல்கள்; ஒன்று ஒளிமயம் என்றும், இன்னொன்று ஒளிதருகிற வெயில்மயம் என்றும் அழைக்கப் பெறுகின்றன. இவ்வாறே சிவ தத்துவம் என்பது சக்தி தத்துவத்தை இயக்குகின்ற மூல தத்துவமாக நம்முன் அமைந்து நிற்கிறது.

இந்த மனித உடம்புக்கு இயல்பான ஒரு வெப்பநிலை இருக்கிறது. ஆங்கில வைத்திய முறையிலே தொண்ணூற்று எட்டு டிகிரி வெப்பம் இருந்தால், அந்த உடம்பு தனது இயல்பான நிலையிலே இருக்கிறது என்று கூறுகிறோம். இந்த வெப்பநிலை உயர்ந்தாலும் நோய், தாழ்ந்தலும் நோய். இந்த வெப்பநிலை என்பதுவே சக்தி தத்துவம். இந்த வெப்பநிலையை உடம்புக்கு அமைத்துக் கொடுத்து, அந்த அங்கி என்ற சூடு மிகாமலும் குறையாமலும் பாதுகாத்து வருகின்ற தத்துவத்திற்குச் சிவ தத்துவம் என்று பெயர். இந்த இரண்டு தத்துவங்களுக்கும் உள்ள ஆற்றலின் வேறுபாடுகளை மேலேயுள்ள பாடலிலே குறிப்பாகக் காட்டுகிறார் இந்த ஞானி.

* * *

பரத்திலே மணிபிறக்கும் மணியி னுள்ளே
 பரம்நிற்கும் சுடர்வீசும் இப்பாற் கேளும்:
நிரத்திலே சடமதனில் யகாரங் காணும்
 நிச்சயமாம் யகாரமதில் வகாரங் காணும்
வரத்திலே வகாரமதில் சிகாரங் காணும்
 வரும்போலே சிகாரத்தில் மகாரங் காணும்
நரத்திலே மகாரத்தில் நகாரங் காணும்
 நன்றாமப் பூமியப்போ பிறந்த தன்றே

இந்த மனித உடம்பு மந்திரத்தின் வடிவில் அமைந்ததாகும். சிவாயநம என்ற ஐந்து எழுத்துக்கள் இந்த உடம்பின் ஐந்து இடங்களில் நிற்பதாக சித்தர்கள் கண்டிருக்கிறார்கள். ஓம் என்ற ஓங்காரம் உச்ச மான மையத்தில் இருப்பதாகவும், சிவாயநம என்ற ஐந்து எழுத்துக் கள் அதற்குக் கீழே முக்கியமான ஞான மையங்களில் அமைந்திருப்ப தாகவும், இந்த உடலின் ஆன்ம நுட்பத்தை ஆராய்ந்து கண்ட முனிவர்கள் கூறியுள்ளார்கள். இந்த ஆறு மையங்களே ஆறு ஆதாரங் கள் என்று சித்தர்கள் இலக்கியங்களிலே கூறப்பெறுகின்றன. 'சி' என்ற எழுத்து 'வா' என்ற எழுத்து, 'ய' என்ற எழுத்து, 'ந' என்ற எழுத்து. 'ம' என்ற எழுத்து ஆகிய ஐந்தும் ஐந்து மையங்களில் நிற்கின்ற தன்மையை இந்தப் பாடல் வெளியிடுகிறது. இதுவே உடம்பி லுள்ள பஞ்சாக்கர மகிமை என்றும், ஐந்து எழுத்து இரகசியம் என்றும் சித்தர் இலக்கியத்தில் கூறப்பெறுகிறது.

* * *

இடப்பாக மிருந்தவளு மிவளே மூலம்
 இருவருக்கும் நடுவான திவளே மூலம்
தொடக்காக நின்றவளு மிவளே மூலம்
 சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளே மூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளே மூலம்
 ஐவருக்குங் குருமூல மாதி மூலம்
கடக்கோடி கற்பமதில் நின்ற மூலம்
 கன்னியிவள் சிறுவாலைக் கன்னி தானே!"

இந்த உடம்புக்குள் இயங்குகின்ற சக்தி தத்துவத்தின் அடிப் படையை இந்தப் பாடல் அழகாக விளக்கம் செய்கிறது.

இந்த மனித உடம்பில் வலம், இடம் என்ற இரண்டு பகுதிகளில், இரண்டு விதமான ஆற்றல்கள் இயங்கிவருகின்றன. வலது கண், வலது தோள், வலது கை, வலது மார்பு, வலது கால் ஆகிய வலப் பாகம் முழுவதும் ஆண் ஆற்றல்; இடது கண், இடது தோள், இடது கை, இடது மார்பு, இடது கால் ஆகிய இடப்பாகம் முழுவதும் பெண்மை ஆற்றல். இந்த இரண்டுவித ஆற்றல்களும் ஆடவர் பெண்டிர் ஆகிய எல்லா மனிதர்களுடைய உடம்புக்கும் பொது வானவை.

வலப்பாகத்தைச் சூரியன் என்றும், இடப்பாகத்தைச் சந்திரன் என்றும் சித்தர்கள் அழைப்பார்கள். இந்த இரண்டு பாகத்திற்கும் நடுவிலுள்ள பகுதியை அங்கி அல்லது நெருப்பு என்று அழைப்பார்கள்.

வலக்கண், இடக்கண் ஆகிய சூரிய சந்திரர்களுக்கு நடுவிலே நெருப்பு நிற்கிறது. இதைத்தான் நெற்றிக்கண் என்று அழைக்கிறார்கள் சித்தர்கள். சூரியனும் சந்திரனும் நெருப்புமாக மூன்று அனல் வட்டங்கள், நெற்றியிலிருந்து இந்த உடம்பு முழுவதையும் இயக்கி வருகின்றன. இந்த மூன்று ஒளிகளையும் ஆட்சி செய்வதே சித்தர்களின் ஒளிப்பயிற்சி முறையாகும்.

இந்தப் பயிற்சி முறைகள் ஒருபுறம் இருக்க, இந்த மூன்று விதமான ஆற்றல்களையும் ஒருமைப்படுத்தி இயக்குகின்ற யோகமுறை சித்தர்களின் இலக்கியத்தில் ஆதார யோகம் என்று பேசப்படுகிறது.

இந்த மூன்று விதமான ஆற்றல்களையும் இணைத்து, காற்றாடிகளைக் கயிற்றினால் கட்டி இயக்குவதுபோல் இடக்கண்ணாகிய சந்திரனைக் கொண்டு இயக்குகிற முறை, பல நூறு ஆண்டுகளாக நமது தமிழகத்து ஞானிகளால் கூறிப் பரம்பரையாக வளர்க்கப்பெற்று வருகிறது.

பட்டமும் கயிறும்போல
பறக்க நின்ற ஜீவனைப்
பார்வை யாலே பார்த்துப்
பருமுடிச்சுப் போடடா

என்று ஒரு சித்தர் கூறுகிறார்.

ஜீவன் என்ற உயிரானது காற்றாடியாகிய பட்டம்போன்று பறந்து கொண்டே காற்றிலே ஆடுகிறது. அந்தப் பட்டத்தைக் கயிறுகொண்டு இறுக்கிப்பிடித்து, சுண்டிச் சுண்டி ஏற்றியும் இறக்கியும் இயக்குகிற அந்த மாபெரும் ஆற்றல்தான் சக்தி தத்துவமாகும். இந்த ஆற்றலின் தோற்றுவாய் உடம்பின் இடப்பகுதியிலே இருப்பதாக ஞானிகள் தங்கள் நூல்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சக்தி தத்துவத்தை அன்னை என்றும், தாய் என்றும், அம்மை என்றும் மிகுந்த பேரன்போடு ஞானிகள் அழைக்கிறார்கள். நாட்டுப்புறப் பாடல்களின் பாங்கிலே அமைந்துள்ள சித்தர் பாடல்களிலே இந்த ஆற்றலை 'ஆத்தாள்' என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். ஆத்தாள் இருக்கும் இடமான இடக்கண்ணையும், இடதுபுறம் இயங்குகின்ற ஆற்றலையும் பயபக்தியோடு ஞானிகள் அழைக்கிறார்கள்.

இந்த உடம்பிலுள்ள ஐம்புல ஆற்றல்களையும் வளப்படுத்தி, இந்த மனித உடம்புக்குள்ளே தெய்வத்தைக் கண்டு அனுபவித்து, மடிகின்ற இந்த உடலை மரணமிலாப் பெருவாழ்வு நோக்கி முன்னேறச் செய்கின்ற யோக முறையிலே, இந்தச் சக்தி தத்துவத்தின் பங்கு ஒப்பற்ற சிறப்புடையதாகும். இன்னும் சொல்லப்போனால், மரணமிலாப் பெருவாழ்வு என்ற பேரின்ப நிலையை அடைவதற்கு அடிப்படையாக அமைகின்ற ஆற்றல், இந்தப் பெண்மை ஆற்றலாகிய தாய்ப் பெரும் சக்தியேயாகும். இந்தத் தாயாகிய ஞான ஆற்றலைப் பக்தியோடு பாடுகிறது, மேலே கொடுத்துள்ள அருமையான சித்தர் பாடல்.

*  *  *

வாசலி லேயொரு மேல்வாசல்—அந்த
வாசலி லேசிறு வாச லுண்டு;
நேசமு டன்சிறு வாசலிற் பூட்டியே—அந்த
நெருக்கம் பாரடி ஞானப் பெண்ணே!

கும்மி வடிவத்திலே அமைந்த ஓர் அழகிய நூல் ஞானக்கும்மி என்ற சித்தர் இலக்கியம். இந்த நூலிலே சித்தர்களின் ஆய்வினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல உண்மைகள் நாட்டுப்புறப் பாடல்களின் சொற்களிலே மிக எளிய முறையிலே வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உடம்புக்குள்ளே இருக்கின்ற ஆதார மையங்களை வாசல் என்று சொல்கின்ற சித்தர்களின் மரபையொட்டி இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. ஐம்புல வாசல் என்றும், ஒன்பது துவராங்கள் என்றும் சித்தர்கள் கூறுகிற மரபை நினைவில் கொண்டு இந்தப் பாடலைப் பார்க்கவேண்டும்.

எண்சாண் உடம்பு என்று அழைக்கப்படுகின்ற இந்தக் கோட்டையிலே, புற வாசல்களாகிய ஒன்பது நடைகள் திறந்துள்ளன. ஆனால் இந்த ஒன்பதையும் மிஞ்சிய உள்வாசல் ஒன்று இந்த உடம்புக்குள்ளே இருக்கிறது. அந்த உள்வாசலானது கழுத்துக்கு மேல் உள்ள பகுதியிலே நுட்பமானதொரு மையத்தில் அமைந்திருக்கிறது. தமிழகத்தின் சித்தர்கள் எல்லாருமே இந்த வாசலின் உயர்வையும் மேன்மையையும் பற்றிப் பல ஆயிரம் பாடல்கள் பாடித் தந்துள்ளார்கள். ஞானக் கும்மியும் இந்த வாசலைப் பற்றியே பேசுகிறது. அகவாசலைத் திறப்பதற்குள்ள சாவிகள் ஒருசிலரிடமே உண்டு. பல்வேறு சித்தர்கள் பல்வேறு முறையிலே இந்தச் சாவிகளைக் கையாளுகின்ற முறைகளை எடுத்துக் கூறுகிறார்கள்.

அகவாசலைத் திறப்பதற்குரிய சாவிகளிலே ஒன்றுதான் மூச்சு என்ற திறவுகோல். வலது நாசியிலும் இடது நாசியிலும் இழைகின்ற காற்றை இரண்டு குதிரைகள் என்று சித்தர்கள் அழைப்பார்கள். வாசியோகம் என்பது இதுவே. வாஜி என்ற வடமொழிச் சொல்லுக்குக் குதிரை என்று பொருள். இதையொட்டி வாசி யோகத்தைக் குதிரை யோட்டம் என்றும், புரவியேற்றம் என்றும் சித்தர்கள் வருணிப்பார்கள். குதிரையில் ஏறி அகவாசலின் வழியாக உள்ளே செல்லவேண்டும் என்பார்கள். இப்படிச் சித்தர்கள் சொல்லுவதன் கருத்து என்னவென்றால், வாசியாகிற மூச்சின் பயிற்சி கொண்டு உடம்பில் உள்ள வாசலைத் திறந்து, மனமானது புகுந்து சென்று, சித்தம் ஒடுங்க வேண்டும் என்பதே. ஞானத்தின் முழுப் பயனையும் அடைவதற்கு யோகிகள் எடுத்து விளக்கியுள்ள பல மார்க்கங்களிலே, இந்தக் குதிரைப் பயிற்சியாகிய வாசியோகம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதை உல்லாசமான ஒரு தமிழ்நடையிலே பாடுகிறது இந்த ஞானக் கும்மி.

* * *

தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி—வேத
சாத்திரப் பொத்தலை மூடுங்கடி;
முத்தி தருஞான வத்துவை வாவென்று
மூட்டிக் கும்மி யடியுங்கடி

சித்தர்கள் ஒருவகையிலே சொல்லப்போனால் காரியவாதிகள் என்று சொல்லவேண்டும். அதாவது வெறும் பேச்சை விட்டுவிட்டு, செயலிலே இறங்கக்கூடிய, மாணவர்களையும் இறக்கக்கூடிய, செயல் வீரர்கள் அவர்கள்.

சொற்குவியல்களாக உள்ள சாத்திரங்களையும், அனுபவம் இல்லாத வெறும் சொற்களையும் படித்துப் படித்து, எந்தப் பயனையும் காணமுடியாது என்பது சித்தர்களின் ஞானமொழியாகும். அனுபவப் பயிற்சியே இல்லாமல் வெறும் நூற்பயிற்சிக்கே முக்கியம் கொடுத்து, வாழ்க்கையை வீணடிக்கிறார்களே என்கிற தாபத்திலும், அப்படிச் செய்பவர்களிடம் ஏற்படுகிற அனுதாபத்திலுமாக எழுந்து வருகிற வரிகளாகும் இந்தப் பாடலின் ஆவேச வரிகள்.

சாத்திரங்களைப் படித்துப் பிறர் மலைக்கும்படி பேசுவதனால் என்ன பயன் விளைந்துவிடும்? மூளையை மட்டும் பலப்படுத்திக்கொண்டு விடுவதனால் ஞானயோகம் சித்தித்துவிடுமா? இல்லை. அந்த ஆவேசத்திலிருந்து பேசுகிறார் சித்தர்.

சாத்திரங்களை வெறும் குப்பைகள் என்றே கூறுகிறார் இந்த ஞானி. அவருக்குச் சாத்திரங்களிலே வெறுப்பு என்பது அல்ல பொருள். வெறும் சொற்குப்பைகள் என்று இவற்றை அவர் அழைப்பதன் மெய்ப்பொருளை நாம் பார்க்கவேண்டும். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பதை மனத்தில் பதியும்வண்ணம் அறிவுறுத்துவதற்காக, இவ்வாறு சாத்திரங்களைக் குப்பை என்று உமிழ்கிறார்.

நூல்களை ஆண்டுக்கணக்காகப் படித்துக் கொண்டிருப்பவர் பலர், ஞானம் பெறாமலேயே மாண்டு மடிந்துவிடுகிறார்கள். படிக்காத மக்கள் எப்படி உயிர்விடுகிறார்களோ அப்படியே இவர்கள் வாழ்வும் ஒய்ந்துவிடுகிறது. பிறர் கேட்கவே அல்லாமல், தங்கள் அறிவையும் படிப்பையும் அனுபவத்திற்குக் கொண்டுவந்து, தெய்வானந்தம் என்ற பேரின்பதைத் துய்க்காமலேயே மறைந்துவிடுகிறார்கள். இந்த அவல நிலையைக் கண்ட சித்தரின் மனம் கொதிக்கிறது. படித்துப் படித்து என்ன கண்டார்கள் என்று வேகமாகவே கேட்கிறார் சித்தர். கேள்வியை நம்மைநாமே கேட்டுக்கொள்ளும்படி நமது உணர்ச்சிகளை வேகமாகத் தூண்டுகிற வகையிலே குப்பையைத் தள்ளுங்கள் என்றும், பொத்தலை மூடுங்கள் என்றும் வருகின்றன ஞானியின் ஆவேசச் சொற்கள்.

* * *

> அல்லல்வாச லொன்பதும் அறுத்த டைத்த வாசலும்
> சொல்லு வாச லோரைந்து சொம்மி விம்மி நின்றதும்
> நல்ல வாச லைத்திறந்து ஞான வாச லூடுபோய்
> எல்லை வாசல் கண்டவ ரினிப்பி றப்ப தில்லையே

இது சிவவாக்கியரின் பாடல்.

கீதையில் பகவான் உலக இச்சைகளிலிருந்து ஐம்புலன்களை மாற்றித் தெய்வ நிலையிலே செலுத்துவதை மிக அழகாகக்

கூறுகிறார் அல்லவா? அதே கருத்தைச் சித்தர்கள் தங்கள் இலக்கியங் களிலே எடுத்துக் கூறியுள்ளார்கள். வெளிமுகமாகச் செல்கின்ற ஐம்புல உணர்வுகளை உள்முகமாகச் செலுத்தி, இந்த உடம்புக்குள்ளே உள்ள அகவாசலைத் திறக்கும் முறையை உபதேசிக்கிறது சிவவாக்கி யரின் இந்தப் பாடல். சித்தர்களுடைய யோகப் பயிற்சி முறைகளுக் கெல்லாம் அடிப்படையாக அமைந்த மிக முக்கியமான ஓர் ஆன்மப் பயிற்சிமுறை இதுவேயாகும். மனமானது ஐம்புல வாசல்கள் வழியே செல்லும்போது அவை தொல்லைகளுக்கு உள்ளாகின்ற அனுபவங் களைக் கொடுக்கின்றன. இந்த வாசலை அடைக்கின்ற முறையை எல்லாச் சித்தர்களும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். அகவாசல் திறந்துவிட்டால் வெளிவாசல் தானாகவே மூடிவிடும் என்பது சித்தர் களின் அனுபவம் ஆகும். இந்த அனுபவத்தையே சிவவாக்கியர் தமக்கே உரிய பாங்கிலே எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த உடம்பை ஒன்பது ஓட்டைகள் உள்ள பை என்று கூறுவது சித்தர்களின் மரபாகும். நவதுவாரங்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்த ஒன்பது புற வாசல்களையும், ஒரு ஞானியானவன் தனது பயிற்சியினால் அடக்கி ஆள்கிறான். இந்த அடக்கி ஆளும் பயிற்சி யிலே ஐம்புலன்களுடைய பங்கு சாலப்பெரிய பங்கு ஆகும். கையைக் கொண்டு மற்ற வாசல்களை நாம் அடைக்கிறோம். ஆனால் இந்த ஒன்பது வாசல்களை அடைப்பதற்கு வழி, ஐம்புலச் சாளரங்களை அகமுகமாகத் திறந்து ஞானவாசலின் வழியே செல்வதாகும்.

அப்படிச் செல்லுபவர்கள் பிறவி வேதனையை வென்று விடுகிறார்கள். அவர்களுக்கு மறுபடி பிறப்பு இல்லை. மரணம் என்பது ஏற்பட்டால் அல்லவா பிறப்பு என்பது ஏற்படும். அவர்கள் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்கிறார்கள்; ஜீவ சமாதியில் ஒடுங்கு பவர்களும் உண்டு.

* * *

தந்தை தாய்த மரும்நீ சகல தேவ தையும்நீ
சிந்தை நீதெ ளிவுநீ சித்தி முத்தி தானும்நீ
விந்து நீவி ளைவுநீ மேல தாய வேதம்நீ
எந்தை நீஇ றைவனீ என்னை யாண்ட ஈசனே

கீதையிலே அனன்ய பக்தி என்பதற்கு மிகப் பழைய உரையாசிரி யர்கள் விரிவான வகையில் பொருள் கூறியிருக்கிறார்கள். அனன்ய பக்தி என்றால் அந்தச் சொல்லுக்குப் பொருள் அன்னியம் அற்ற பக்தியாகும். அன்னியம் அற்ற பக்தி என்று சொல்லும்போது, இறைவனைத் தவிர வேறு எந்த அன்னியப் பொருளிலும் மனம் செலுத்தாத நிலையாகும். பக்திக்குரிய பொருள் பரம்பொருளே அன்றி வேறு ஒரு பொருள் இல்லை. இதைத்தான் வடமொழியிலே அனன்யம் என்கிறோம்; அன்னியம் அற்றது; அன்னியம் என்ற பிறிதொன்று இல்லாதது.

பழைய உரை ஆசிரியர்கள் இன்னொரு பொருளும் இதற்குச் சொல்லுகிறார்கள். இறைவனோடு பேதமற்ற நிலையிலே ஒன்றுவதும் அனன்யமாகும். இறைவனிலிருந்து தான் அன்னியன் என்றோ,

தன்னிலிருந்து இறைவன் அன்னியன் என்றோ கொள்ளாமல் தானும் இறைவனும் ஒன்றே, இரண்டற்ற ஒன்றே என்ற ஒருமைப்பாடு அனன்ய பக்தியாகும். அன்னியன் என்ற பேத உணர்வு கரைந்து போகும். நதி கடலோடு கூடுவதுபோலே பக்தன் இறைவனோடு தன்னை ஐக்கியப்படுத்துகிற ஒருமைப்பாடு அனன்ய பக்தியாகும்.

ஆகவே, அனன்ய பக்தி என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. இறைவனைத் தவிர ஏந்த அன்னியப் பொருளிலும் மனம் செல்லாமல், பரம்பொருள் ஒன்றிலேயே லயம் ஆகிநிற்கும் நிலை அனன்ய பக்தி யாகும். இஃது ஒரு பொருள். இன்னொரு பொருள், இறைவனி லிருந்து தான் அன்னியன் இல்லை என்றும், தன்னிலிருந்து இறைவன் அன்னியன் இல்லை என்றும், இரண்டற்ற ஒருமைப்பாட்டிலே இறைவனோடு கலந்துநிற்கும் பக்தி, அனன்யம் ஆகும்.

இந்த அனன்ய பக்தியைத்தான் சிவவாக்கியர் மேலே கண்டவாறு பாடுகிறார். உணர்ச்சிகள் அனைத்தும், நினைவுகள் அனைத்தும், எண்ணங்கள் அனைத்தும், எல்லாமே நீதான் என்று, ஈசனை நோக்கிச் சிவவாக்கியர் மொழிகிற இந்தப் பாடலிலே அனன்ய பக்தியின் விரிவுகள் அனைத்தும், எளிய இனிய உல்லாசத் தமிழ்ச் சொற்களிலே மிக அழகாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

* * *

சித்தர் சொற்படி சித்தாந் தங்கண்டு
தெளிந்து கொள்ளடி வேதாந்தம்
தத்துவ மாகிய வுற்பத்தி சூக்குமச்
சார்பு கேளடி ஞானப் பெண்ணே!

இந்தப் பாடல் ஞானக்கும்மி என்ற சித்தர் இலக்கியத்தில் வருகிறது. வேதம் என்ற வடமொழிச் சொல்லிலே நான்கு தெய்வ நூல்கள் அடங்கும். ரிக், சாம, யசுர், அதர்வண ஆகிய நான்கு வடமொழி வேதங்களும் சதுர்மறைகள் என்று அழைக்கப்பெறு கின்றன. இவற்றைப் போலவே , தமிழ்மொழியிலும் பன்னிரு திருமுறைகளையும் நாலாயிர திவ்விய பிரபந்தங்களையும் வேதங்கள் என்று அழைக்கிறோம். திருக்குறளாகிய நீதிநூலைப் பொதுமறை என்று அழைக்கின்ற மரபும் தமிழகத்திலே இருந்துவருகிறது.

இந்த நூல்களைத் தவிர, சமண மதத்திலும், சாக்கிய மதத் திலும், கிறிஸ்தவ மதத்திலும் இன்னும் இவைபோன்ற உலக மதங்கள் அனைத்திலும், அந்தந்த மதத்திற்குரிய வேத நூல்கள் உண்டு. இந்த நூல்களெல்லாம் இறைவனுடைய வெளியீடுகள் என்று பக்தியோடு ஆராதிக்கப்பெறுகின்றன.

சித்தர்கள் அனைவரும் ஒருமித்துக் கூறுகின்ற ஒரு பெரிய கருத்து என்னவென்றால், எந்த நூலாயினும் அந்த நூலில் சொல்லப்பட்டுள்ள பொருள் அனைத்தும் எழுத்து வடிவத்திலே உள்ள நூல் அறிவுதான். சித்தர்களின் மரபு, நூல்அறிவுக்கு அத்தனை முக்கியம் கொடுக்க வில்லை. எந்தப் பொருள் எவ்வகையாகக் குறிப்பிட்டிருப்பினும், அந்தப் பொருளின் மெய்ப்பொருளை உய்த்து உணர்ந்து தெளி

வதற்கு ஒரே வழி ஞானப் பயிற்சியேயாகும் என்பதே சித்தர்களின் முடிவு. எனவே, இந்த முடிவை எல்லா நூல்களுக்கும் பொருந்துகிற முறையிலே சித்தர்கள் தங்கள் இலக்கியங்களிலே வெளியிட்டிருக்கிறார்கள். வேதங்களின் முடிவாகச் சொல்லப்படுகிற ஞானப் பெருநூல் உபநிடதம் ஆகும். இந்த உபநிடத நூலை வேதாந்தம் என்று அழைப்பது சமஸ்கிருத அமைப்பு ஆகும். எனவே சித்தர் வேதங்களையும் வேதாந்தத்தையும் உள்ளடக்கி இவை அனைத்துமே எழுத்து வடிவத்திலே உள்ள ஞானம் என்று கூறுகிறார்.

எழுத்தின் வடிவிலுள்ள நூல்களின் கருத்துக்களையெல்லாம் ஞானப் பயிற்சியின்மூலம் ஆராய்ந்து அனுபவித்து, அந்தப் பேருண்மைகளிலே தெளிந்து எழுவதுதான் சித்தர்களின் யோக முறையாகும். இந்த முறையினையே அடிக்கோடிட்டுப் பாடுகிறது இந்த ஞானக் கும்மிப் பாடல்.

* * *

ஒத்துநின்ற ஓங்காரம் மண்ணை யுண்ணும்;
உருவியந்த மண்சென்று சலத்தை யுண்ணும்;
பத்திநின்ற சலமதுதான் றீயை யுண்ணும்;
பாங்கான தீச்சென்று காலை யுண்ணும்;
வெத்திநின்ற கால்சென்று விண்ணை யுண்ணும்;
விழுந்ததப்பா சடமென்னும் வேதாந்தப் பேச்சு;
முத்திகண்டு கூடுவது மெந்தக் காலம்?
மூடரே மதுவையுண்டு மேல்பா ரீரே

சிவவாக்கியர் என்ற சித்தர் இந்த உலகங்களின் முடிவாகிய பிரளயத்தைப் பற்றிக் கூறுகிறார். பிரளயம் அல்லது ஊழி என்று அழைக்கப்படுவது இந்த உலகங்கள் அனைத்தும் அழிகின்ற முறையையும் காலத்தையுமாகும். ஐம்பூதங்கள் ஆகிய வான், காற்று, தீ, தண்ணீர், நிலம் ஆகிய இந்த ஐந்தும் கொண்டு அமைந்ததே உலகம். உலகம் என்பது கண்ணுக்குத் தெரிகின்ற அண்டங்களையும், இவற்றைத் தாண்டி நிற்கின்ற அண்ட கோளங்களையும், அவற்றுக்கு அப்பாலும் எண்ணற்று நின்று இயங்கிவருகின்ற இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே யாகும். ஊழிக் காலத்திலே ஐம்பூதங்களாகிய இந்த அமைப்புகள் எப்படி ஒன்றையொன்று விழுங்கி எல்லாம் முடிவுபெறுகின்றன என்பதை இந்தப் பாடல் உணர்த்துகிறது.

வெளி உலகமாகிய பேரண்டம் எப்படி முடிவுறுகின்றதோ, அவ்வாறே உடம்பின் முடிவும் என்பதே சித்தர்களின் மெய்ஞ்ஞானம். இந்த உடம்பும் ஐந்து பூதங்களாலாகிய சேர்க்கையேயாகும். மரணம் என்ற ஒரு நிலை வரும்பொழுது, இந்த உடம்பாகிய மண் பிணமாக நின்றுவிடுகிறது. ஆனால், இந்த உடம்புக்குள் தலைவனாக இயங்கி வருகின்ற உயிரானது இதைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுகிறது. அப்படி உடம்பைவிட்டு அகன்றுவிடுகின்ற காலத்திலே இந்த ஐம்பூதங்களும் ஒன்றையொன்று விழுங்கிவிடுகின்றன.

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலே என்பது சித்தர் வாக்கு. வெளி உலகின் அமைப்பு எப்படியோ அப்படியேதான் இந்த உடம்பின்

அமைப்பும். எனவே, பிரளயம் அல்லது ஊழியின்போது எப்படி இந்தப் பேரண்டங்கள் முடிவுறுகின்றனவோ, எப்படி இந்தப் பேரண்டங்களிலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றையொன்று விழுங்குகின்றனவோ, அவ்வாறே, இந்த உடம்புக்குள் நின்று தொழிற்படுகின்ற ஐம்பூதங்களும் ஒன்றையொன்று விழுங்கி, இந்த உடம்பானது மரணம் அடைகிறது.

சித்தர் இந்தப் பாடலிலே வெளிஉலகம் மடிகின்ற தன்மையையும், சிற்றாலயமாகிய இந்த உடம்பு மரணம் அடைகின்ற தன்மையையும், இரண்டையும் சேர்த்து இந்த அரிய பாடலிலே வெளியிடுகிறார். வானம், காற்று, நெருப்பு, தண்ணீர், மண் ஆகிய ஐந்தும் ஒன்றுக்கொன்று பகைமை ஆகின்றன. வானத்தைக் காற்று மூடுகின்றது; காற்று நெருப்பை எரியவிடுகின்றது. ஆனால் தண்ணீரோ அந்த நெருப்பை அணைத்துவிடுகிறது. தண்ணீரை உண்டுவிடுகிறது மண். இப்படி ஒன்றையொன்று விழுங்கக்கூடிய தன்மை படைத்த ஐந்தும், ஒன்றையொன்று விழுங்காமல் காத்துக் கொண்டிருப்பதுதான், பாதுகாத்துக் கொண்டிருப்பதுதான், உயிர் என்ற நுட்பமான ஆற்றல். அந்த உயிர் இருக்கும்வரை, பகைமை கொண்ட ஐந்தும் ஒன்றன்மேல் ஒன்று பாய்ந்து விழுங்கிவிடாதவாறு இந்த ஐந்தையும் உயிர் கட்டிக் காக்கின்றது. தொண்ணூற்றாறு தத்துவங்கள் இந்த உடம்பில் இயங்கி வரும்பொழுது, முழுமையான ஆற்றலில் உயிரானது இந்தப் பாதுகாவலைச் செம்மையாகச் செய்கிறது. தொண்ணூற்றாறு தத்துவங்களில் ஒவ்வொன்றாகக் குறையும்பொழுது, உயிரின் ஆற்றலும் சன்னம் சன்னமாகக் குறைய ஆரம்பிக்கிறது. உயிரானது தனது ஆற்றலை இழந்து அசையத் தொடங்கும்பொழுது ஐந்து பூதங்களின் வலிமையும் மேலோங்கி நின்று ஒன்றையொன்று விழுங்க ஆரம்பித்து விடுகின்றன. இதுதான் உடம்பின் முடிவு என்கிற மரணம். இதுவே உலக அழிவாகிய ஊழி அல்லது பிரளயம் என்பதுமாகும்.

இந்த ஊழி முடிவை, உடம்பின் முடிவை, ஐந்து பூதங்களின் செயலைக் கொண்டு, அரிய முறையிலே விளக்குகிறார் அநுபவ ஞானி. இந்தப் பாடலில் வருகின்ற ஓங்காரம் என்பது இந்த உடம்பின் உச்சியிலுள்ள ஞான நிலையின் இயக்க எல்லை. கால் என்பது காற்றை; இந்தப் பாடலிலே மது என்று குறிக்கப்பெறுவது என்னவென்றால், இந்த உடம்பில் அமைந்திருக்கின்ற ஆறு முக்கியமான ஞான ஆதார நிலைகளை இயக்கும்பொழுது, இந்த உடம்பின் சுரப்பிகளிலிருந்து ஊறிவருகின்ற அமுதமாகிய திரவப் பொருளேயாகும். இந்த அமுதத்தை உண்ண உண்ண உயிரின் ஆற்றல் வளர்வதோடு உடம்பு மரணமிலாப் பெருவாழ்வைத் துய்க்கிறது என்பதே தமிழகத்துச் சித்தர்கள் கண்ட யோக இரகசியம் ஆகும்.

* * *

சித்தர்களுடைய பாடல்கள் என்றதுமே, நமது நாட்டு மக்களுக்கு உடனே நினைவுக்கு வருகிற மகான்களிலே ஒருவர் பாம்பாட்டிச் சித்தர்.

"ஊத்தைக் குழியிலே" என்று தொடங்கும் பாம்பாட்டியார் பாடலும், "நாதர்முடிமேல்" என்று தொடங்குகிற அவருடைய மற்றொரு பாடலும், தமிழகத்திலே மிகவும் புகழ்பெற்று விளங்குபவை.

நல்ல பாம்பு என்றாலே, ஆடுவதும் சீறுவதுமான இயல்புகளே நம் மனக்கண்ணிலே தோன்றி நிற்கும். அதோடு கண்ணே செவியாகவும், செவியே கண்ணாகவும் இருக்கக்கூடிய 'கட்செவி' என்னும் தமிழ்ச் சொல்லும் நமக்குத் தெரியும் அல்லவா! எனவே சீறுவதும் ஆடுவது மாகிய சுவாசத்தின் யோகப் பயிற்சியிலே ஈடுபடுகிற பெரியவர்களும், கண்ணையும் செவியையும் இணைக்கிற ஞானப் பயிற்சியைக் கற்பிக்கிற ஞானிகளாகிய பெரியோர்களும், பாம்பு என்ற உருவகத்தை மாணவர்களுக்கு விளக்குவார்கள். பாம்பு என்றால் மூச்சு என்றும், கட்செவி என்கிற ஞானப்பயிற்சி என்றும் உரைப்ப தோடு, குண்டலினி என்னும் ஆற்றலுமே பாம்பு என்ற உருவகத்திற்கு உரியதாகும். மனித உடம்பிலே முதுகுத்தண்டும், அது படம் எடுத்தாற்போலே பிடரிப்பக்கம் அமைந்திருப்பதும், நுட்பமாகப் பார்த்தால் நல்ல பாம்பு என்ற உருவகத்தை நாம் மேலும் நன்கு புரிந்து சுவைத்துக்கொள்ளலாம்.

இத்தனை உட்பொருள்களையும் உள்ளத்தில் வைத்துக்கொண்டு, பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களைப் பார்த்தால், தத்துவத்துக் குள்ளே பொதிந்துள்ள, பல உட்தத்துவங்கள் விளங்கும். மேலாகப் பார்த்தாலும் அந்தப் பாடலின் கவிநயம் நம்மைக் கவரும். சாதாரணப் பாம்பைப் பார்த்துப் பாடுவதாகவே எண்ணிப் பார்த் தாலும், இந்தப் பாடல்களின் கவித்திறன் அனைவரும் அனுபவிக்கும் படியான பண்போடு அமைந்திருக்கின்றது.

மற்ற எல்லாச் சித்தர்களையும் போலவே, பாம்பாட்டிச் சித்தரும் குருவை வணங்குகிறார். கடவுளை வணங்கியே தமது பாடலைத் தொடங்குகிறார். அந்தப் பாடல்களிலே ஒன்று ஞான குருவின் வல்லமையைக் கூறி வணங்குகிறது.

'பரகாயப் பிரவேசம்.' அல்லது 'கூடுவிட்டுக் கூடு பாய்தல்' என்பது மகான்களிலே சிலர் செய்து காட்டியுள்ள ஓர் அற்புதமாகும்.

பாம்பைப் பார்த்துப் பாடுகிற சித்தர், தமது குருவின் அரிய பரகாயப் பிரவேச ஆற்றலைச் சொல்லி, அந்த மகிமைகளை எல்லாம் எப்படிச் சொல்லி, எப்படி முடிப்பது என்று அதிசயிக்கிறார். "வீடுபேறு என்று அழைக்கப்படுகிற மேலான நிலையை விளக்கிக் காட்டுகிற அந்த மெய்யான குருவைப் பணிவோடு நீ வணங்கு. அதன் பிறகு அந்த வணக்க நிலையிலே நீ ஆடுவாயாக!" என்று பாம்பைப் பார்த்துக் கூறுகிறார், பாம்பாட்டிச் சித்தர்.

எப்படிப்பட்ட ஆன்ம சக்திகளை எல்லாம் நம் நாட்டுச் சித்தர்கள் வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பதையும், இந்த நுட்பமான இரகசிய ஞான முறைகளையெல்லாம் எவ்வாறு மாணவர்களுக்குக்

கற்பித்து வந்திருக்கிறார்கள் என்பதையும் இந்தப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கூடுவிட்டுக் கூடுபாயும்
கொள்கை யுடைய
குருவின் வல்லமை யாரே
கூறவல்லார்?
வீடுபெறும் வகையைமேன்
மேலும் காட்டும்
மெய்க்குருவை பணிந்துநின்
றாடு பாம்பே!
ஆடு பாம்பே ஆடு பாம்பே
தெளிந்து தெளிந்து நின்று
ஆடு பாம்பே!

* * *

சித்தர் என்றாலே பாம்பை ஆட்டுகிறவர், அதாவது உடம்பின் அகத்திலே உள்ள நல்ல பாம்பைப் பிடித்து ஆட்டுகிற வல்லமை படைத்தவர்.

பாம்பாட்டிச் சித்தர், பரம்பொருளுக்கு வணக்கம் கூறுகிறார். சிவனுடைய அந்தத் திருவடியை - சீர்பாதத்தை - நாம் கண்டு விட்டோம் என்று சொல்லி, அந்தத் தெளிவோடு பாம்பை ஆடும்படி இந்த மகான் கூறுகிறார்.

தெளிந்து தெளிந்து தெளிந் தாடுபாம்பே—சிவன்
சீர்பாதம் கண்டுதெளிந் தாடுபாம்பே!
ஆடுபாம் பேதெளிந் தாடுபாம்பே—சிவன்
அடியிணை கண்டோமென் றாடுபாம்பே!

'அடியிணை' என்றால் இணையடி, அதாவது இரண்டு அடிகள் என்று பொருள். வலமும் இடமுமான இரண்டு திருவடிகளைக் கண்டு களிப்பதுதான் ராஜயோகம். திருவடி என்பதன் ஞானப் பொருள் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது. "அந்த அரிய யோகசித்தி ஏற்பட்டு விட்டது என்ற களிப்போடு தெளிவோடு ஆடுவாயாக" என்று பாம்போடு பேசுகிறார், இந்தச் சித்தர்.

* * *

சிவன், சிவை என்று இரண்டு ஆற்றல்கள் வெளி உலகத்திலே செயற்படுவது போலவே, இந்த உடம்புக்கு உள்ளேயும் செயற்படுகின்றன. மின்சார ஆற்றல் போன்ற எல்லாச் சக்திகளிலுமே 'நெகடிவ்', 'பாசிடிவ்', 'எர்த்' என்று மூன்றும் தொழிற்படுகின்றன. இந்த மூன்றும் இணைந்து அந்த ஆற்றலானது இயங்குகிறது.

ஆணாற்றல், பெண்ணாற்றல், வெளியாற்றல் எனவும், இறையாற்றல், உயிராற்றல், உடலாகிய மண்ணாற்றல் எனவும், இன்னும் பலவிதமாகவும், இந்த மூன்றையும் கூறுவார்கள்.

பொதுவாகப் பேசும்போது, மூன்று நிலையான முப்பொருள்கள் என்று பெரியோர்கள் அழைப்பார்கள். உடம்பிலே பாதி சிவனாகவும், பாதி சக்தியாகவும் உள்ள நுட்பத்தையும், இந்த இரண்டோடு உயிர் என்ற ஆன்மா இருப்பதையும் நன்கு தெரிந்து, இந்த ஆற்றல்களின் உயர்வுநிலையிலே ஒடுங்கவல்ல முனிவர்களே, நம் தமிழகத்துச் சித்தர்கள். அந்த ஞான பரம்பரையைச் சேர்ந்தவரே பாம்பாட்டிச் சித்தர். எனவே, 'நீடுபதம்' என்ற மகோன்னத நிலையானது அவருக்குச் சொந்தமானது. நித்திய ஞானப் பெருவாழ்வு என்னும் முத்தி நிலைக்கு ஞானச் சீடர்களைப் பயிற்றுவதே இந்த மகானுடைய கல்வியாகும். அந்த நிலைக்குச் செல்வதற்காக ஞானப் பயிற்சியாகிய உழைப்பை நல்கவேண்டும் அல்லவா? பாடுபடாமல் அந்த மேலான நிலை கிடைக்குமா? கிடைக்காது. அப்படிப் பாடுபடும் தருணங்களிலும் கடவுளை மறந்து கடைத்தேற முடியுமா? முடியாது! ஆதியான பதமாகிய பரம்பொருளின் திருவடிநிலையை மறவாமல், அதை நினைத்து நினைத்து, மீண்டும் மீண்டும் பரவிப் பரவி அதிலே லயமாக வேண்டும். பயிற்சியின் மும்முரத்தில் பரம்பொருளை மறந்துவிடக் கூடாது.

மிகப்பெரிய யோகப் பயிற்சியின் இந்த நுணுக்கமான முறையை, ஏதோ ஒரு பாம்புக்குப் பாடம் சொல்வது போலவே, எளிமையாகப் பாடுகிறார் இந்தப் பாம்பாட்டிச் சித்தர்.

நீடுபதம் நமக்கு என்றும்
சொந்தம் என்றே
நித்தியமென் றேபெரிய
முத்தி யென்றே
பாடுபடும் போதும் ஆதி
பாதம் நினைத்தே
பன்னிப் பன்னிப்
பரவி நின்றாடு பாம்பே!
ஆடு பாம்பே—தெளிந்து
ஆடு பாம்பே!

★

## 33. ஒரு ஞானக் களஞ்சியம்

சித்தர் இலக்கியத்தின் அறிவியல் உட்கிடையிலே உள்ள பொருள் வகைகளையும், தத்துவப் பேருண்மைகளையும், பல தலைப்புகளிலே முன்பக்கங்களில் ஆராய்ந்து பார்த்தோம். இந்தத் தத்துவ உண்மைகள் எல்லாம் இன்றைய அறிவியல் ஆய்வுக்கும் சான்றுகளுக்கும் எவ்வாறு ஒத்திருக்கின்றன என்பதையும், நாளும் முன்னேறி வருகின்ற மேலைநாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளிலே வருங்காலத்தில் மேலும் பல சித்த தத்தவங்கள் உறுதி செய்யப்படும் என்பதையும், பல ஒப்புமைகளோடு பார்த்தோம். சித்தர் இலக்கியத்தில் இந்தப் பகுதி முக்கியமான செம்பகுதியாகும்.

சித்தர் இலக்கியத்தில் அறிவியற் பகுதி மட்டும் அடங்குவது இல்லை. உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் ஆராய்கின்ற சித்தர் இலக்கியம், வழிபாட்டு முறைகளிலே பல அருமையான பாடல்களையும் நமக்கு வழங்கியுள்ளது. இந்த வழிபாட்டுப் பாடல்களும் சித்தர் இலக்கியத்திலே முக்கியமான ஒரு பகுதியாக விளங்குகின்றன.

அறிவியல் உண்மைகளை ஆராய்கின்ற சித்தர் இலக்கியப் பகுதியானது ஆழமான பேருண்மைகளைத் தன்னுள் அடக்கியிருப்பதால், இந்தப் பகுதியை ஆராயும்பொழுது பல அறிவியல் உண்மைகளையும் விஞ்ஞான முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய தமிழகத்து ஞானிகள் கண்டு சொன்ன இரகசியங்கள் எல்லாம், இன்றைய விஞ்ஞானத்திற்கு ஒத்த முறையிலே, அறிவியற் சோதனைகள் உறுதிப் படுத்தும் பாங்கிலே, அமைந்துள்ளமை தமிழர்களின் இதயத்தை மகிழ்விக்கிறது. எதிர்காலத்தில் சித்தர் இலக்கியத்திலே காணப்படுகின்ற மேலும் பல ஆன்ம உண்மைகள், வளர்ந்து வருகின்ற விஞ்ஞானத்தின் வாயிலாக மேலும் ஆராயப்பெறும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் சித்தர் இலக்கியத்தின் அறிவியற் பகுதியை ஆராய்கிற செயல், முக்கியமும் பயனும் உள்ளதாகக் கருதப்பெறல் வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, இலக்கியக் கண்கொண்டு பார்த்து, ஆராய்ந்து துய்க்கவேண்டிய, 'ஞானானந்தம்' என்கிற பேரின்பத்தை வழங்குகின்ற வகையில், சித்தர்களுடைய வழிபாட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன. சித்தர் இலக்கியத்திலே இத்தகைய வழிபாட்டுப் பாடல்கள் ஆயிரக் கணக்கில் வழங்கிவருகின்றன. கவிப்பண்பும், இலக்கிய வளமும், உள்ளத்தின் பேரன்பும் இணைந்த செய்யுள் இலக்கியமாக இந்தத் தொகுதி திகழ்கிறது!

நமது கண்ணுக்கு நம மூக்கு நுனி தெரியாது போனால், மூன்றே நாளில் முடிவு என்று சித்தர் இலக்கியம் கூறுகிறது.

இந்தச் சோதனைகள் எதற்கு, வருகிற மரணம் வந்துவிட்டுப் போகிறது, முன்கூட்டியே நாம் ஏன் இப்படிச் சோதித்துப் பார்த்து அச்சத்திலே சாகவேண்டும் என்று கேட்கலாம். நியாயமான கேள்வி.

இந்தச் சோதனைகள், எதற்காக என்றால், சித்தர்களின் பயிற்சி முறைகளிலே இப்படி ஒரு நெருக்கடி முன்னறிவிப்பாகத் தெரியுமானால், உடனே சரப்பயிற்சி முதலான வழிகளைக் கையாண்டு, மாற்றுக்களைச் செய்து, உடம்பைச் சரிசெய்து கொள்ளலாம் என்பதையும் சித்தர் இலக்கியத்தின் யோகப்பகுதி உணர்த்துகிறது.

## வாரசூலம்

நமது உடம்புக்குள் உயிரும் உள்ளமும் இயங்குவதுபோலவே, புற உலகிலும் பேருயிரும் பேருள்ளமும் இயங்குகின்றன. இவற்றின் அதிர்வு முறைகளிலே, இரண்டு இசைக்கருவிகள் ஒரே சுருதியில் ஒன்று சேர்வதுபோல, நமது தனிப்பட்ட உடல் அதிர்வுகளும் வெளி அதிர்வுகளும் இசைந்து இயங்குமானால் நன்மை எனவும், இவற்றில் முரண்பாடு கண்டால் அது கேடு என்றும் ஞானிகள் கண்டார்கள்.

இந்தக் காலத்து விஞ்ஞானத்திலும் 'காஸ்மோ பயாலஜி' என்ற முறையில் நடந்துள்ள ஆய்வுகளும், புற உலக இயக்கங்கள் நம் தனி இயக்கங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைச் சோதித்துக் கண்டு சொல்லி, இவற்றின் இயைபுக்கு முக்கியம் தந்து பேசுகிற செய்திகளும் முன்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

சித்தர்கள் இந்தத் துறையிலே மேலும் ஆழ்ந்து ஆராய்ந்து முன்னேறியுள்ளார்கள். எனவே, சூலம் என்ற எதிர் அலைவீச்சுகளைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். என்னென்ன கிழமைகளில் எந்தெந்தத் திசைகளில் இந்த எதிர்முரண் செயற்படுகிறது என்பதைக் கண்டு, இந்த எதிர் அலைகளை எதிர்த்து எதிர்நீச்சல் போடவேண்டாம் என்று எச்சரிக்கை தருகிறது சித்தர் இலக்கியம்.

நமது சமுதாயப் பழக்கங்களிலும் 'சூலம் பார்த்தல்' என்ற ஒரு பழக்கம் இருந்து வருகிறது அல்லவா? திருமூலர் தமது திருமந்திரத்தில் வாரசூலம் என்ற அதிகாரத்தில் இதைச் சொல்கிறார். அந்த இரண்டு திருமந்திரப் பாடல்களும் வருமாறு :

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமும் ஆம்இடம் பின்னாகிற்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்க மேல்வினை மேன்மேல் விளையுமே

## சோதிடமும் இரேகையும்

சித்தர் இலக்கியத்தில் ஒன்பது கோள்களையும் ஆராய்ந்து, ஜாதகம் என்கிற சாரத்தைக் கணக்கிட்டுப் பலன் சொல்லுகிற பகுதி விரிவாகவே அமைந்துள்ளது. இப்போது பழக்கத்தில் பயின்றுவருகிற சோதிட இயல் பற்றிய பல சூத்திரங்களும், கணக்கு முறைகளும் சித்தர்களின் பாடல்களாகவே வழங்கிவருகின்றன.

அகத்தியர், கோரக்கர், போகர், இவர்களுடைய சீடராகிய பற்பல சித்தர்கள், ஆகியோரின் பெயரில் வழங்கிவருகிற வைத்திய நூல்களைப் போலவே, பற்பல சோதிட நூல்களும் தமிழகத்திலே பரந்து வழங்கிவருகின்றன.

நம்மையெல்லாம் வியப்பிலே ஆழ்த்துகிற பாங்கிலே அமைந்த பல நாடி நூல்கள், அந்தாதியாக அமைந்த பாடல்களோடு, மெய்சிலிர்க்கச் செய்யும் துல்லியத்தோடு, நமது ஊர்ப் பெயர், நமது பெயர், பெற்றோர்கள், உற்றார் உறவினர்களின் பெயர்களோடு, சுவடிகளிலே எழுதப்பெற்று, நமது சாரத்தை வைத்து அந்த ஏடுகளை எடுத்துவிடக் கூடிய முறையிலும் உள்ளன.

இவை தவிர, சாதகக் குறிப்பு இல்லாதவர்களுக்குக் கை இரேகையையும் சில புள்ளிக் கணக்குகளையும் கொண்டு, சாதகத்தை யும் பலன்களையும் பாடலாகச் சொல்லுகிற ஏடுகளும் ஏராளமாக உள்ளன.

இவை தவிர, பல முனிவர்களின் பெயர்களால் வழங்குகிற இரேகை இயல் நூல்களும் பற்பலவாம்.

இவற்றின் உண்மை என்ன என்று கேட்கலாம். மெய்யான சித்தர்கள் சிலர் என்றும், பொய்யானவர் பலர் என்றும் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இதையே இங்கும் திரும்பக் கூறுகிறேன். நாடி ஏடுகளில் வியத்தகு மெய்ம்மையோடு கூடியவை உண்டு. ஆனால் அவை அருமையிலும் அருமை! பொய்யும், ஏமாற்றும், வஞ்சனையும், சூதும் நிரம்பிய இந்த வியாபார உலகிலே, பொய்யான ஓலைகளை வைத்துக் கொண்டு வாணிபம் செய்வோரும் உண்டு. எனவே எச்சரிக்கை மிகவும் அவசியமாகும்.

## விலங்குகளும் பறவைகளும் தாவரங்களும்

மனிதர்களை ஆராய்ந்து சொல்கிற சித்தர்கள், விலங்கியலிலும் அவற்றின் மருத்துவ இயலிலும் பல ஆய்வுகள் செய்து நூல்கள் எழுதி யுள்ளார்கள். இவ்வாறே பறவை இயல், தாவர இயல் பற்றிய சித்தர் நூல்களும் ஏராளமாக உள்ளன. ஆனால் இவற்றில் பல இன்னும் ஓலைச் சுவடிகளாகவே, அச்சேறாமல் மங்கியும், மட்கியும், ஆதரவின்றி எங்கெங்கோ கிடக்கின்றன.

இன்று 'ஸயன்ஸ்' என்று நாம் கூறுகிற அறிவியலின் எல்லாத் துறைகளையும், ஒரொரு சித்தர் மரபு ஆராய்ந்து, பல உண்மைகளைக்

கண்டு, குழூஉக் குறிகளோடு சொல்லியுள்ளதைப் பார்க்கிறோம். இவை அனைத்தையும் ஒருசேரத் திரட்டுவதும், ஒப்பு நோக்கி இவற்றின் உட்கிடைகளைக் காணுவதும், மாபெரும் பணியாகும்.

பல்வேறு அறிவியற்றுறை வல்லார்கள் ஒன்றுகூடி, ஒற்றுமையோடும், ஆய்வார்வத்தோடும், தொண்டு மனப்பான்மையோடும், இத்தகைய பணியிலே முனைந்து, இந்தச் சுவடிகளைத் தொகுத்தால், வருங்கால அறிவியல் ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும். நமது நாட்டில் மட்டுமல்லாமல், மேற்கு நாடுகளில் நடைபெறும் விஞ்ஞான ஆய்வுகளுக்குமே இந்தச் சித்தர் ஞானப் பேருண்மைகள், புதிய வாயில்களைத் திறந்து காட்டும் என்பதில் ஐயமில்லை. அத்தகு ஞானவாசல் திறப்பதற்குரிய சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி வருகிறது என்பதே நம் அனைவரின் நம்பிக்கையும் ஆகும்!

★

# 32. சில சித்தர் செய்திகள்

சித்தர் இலக்கியங்களில் இன்றைய விஞ்ஞான உலகம் ஆய்வு நிலையிலேயே சுவைக்கவேண்டிய பல வியப்பான செய்திகள் உண்டு. இவற்றில் சில, மக்கள் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களிலும், வழி வழியாக வழங்கிவருகிற நம்பிக்கைகளிலும், பின்னிப் பிணைந்துள்ளன.

நவீன அறிவியற் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து பல ஞானச் செய்திகளை இன்றைய விஞ்ஞான உலகம் சான்றுகளோடு உறுதி செய்துள்ள காரணத்தால், இன்னும் பகுத்தறிவுக் கண்கொண்டு நோக்கி, மேலும் ஆராய வேண்டிய செய்திகளும் இவற்றில் பல்கிக் கிடக்கின்றன. சிலவற்றை இங்கே பொது மொழியிலே குறிப்பிடுவது, இந்த ஆய்வு நூலின் முதற்பகுதிக்குப் பொருந்தும் என்று கருதி அவற்றைக் கீழே தருகிறேன்:

## ஆயுட் பரீட்சை

நமது ஆயுட் காலத்தை அறுதியிடுவதற்குச் சில வழிகளைச் சித்தர்கள் கூறியுள்ளார்கள். அவற்றில் ஒன்று நமது உள்ளங்கையைத் தலையின்மீது வைத்து, மணிக்கட்டைக் கூர்ந்து பார்க்க வேண்டும். முன்கையின் பருமன் குறுகி ஒரு குச்சிபோல் தோற்றமளித்துவிட்டால், ஆயுள் நலம் உத்தமமாக இருக்கிறது என்று உறுதி கூறுகிறார்கள் சித்தர்கள்.

இந்த வழியில் மேலும் சில நுட்பங்களைத் திருமந்திர நூலில் ஆயுட் பரீட்சை என்ற பகுதியில் திருமூலர் தருகிறார்.

நாசியில் இழைகிற மூச்சின் இயக்கத்தைக் கொண்டு ஆயுளைச் சோதிக்கிறமுறை பற்றிச் சரஞானம் என்ற தலைப்பில் சில செய்திகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன. சான்றாக, ஒருவனுக்கு இரவு முழுதும் சந்திர மூச்சும், பகல் முழுதும் சூரிய மூச்சும் மாறாமல் இழையுமே யானால், அந்த மனிதனுக்கு ஆறு மாதத்துக்குள் மரணம் வரும் என்று ஒரு கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொரு ஆயுட் பரீட்சையும் சித்தர்கள் கூறுகிறார்கள்.

இரண்டு கண்களையும் விரல்கொண்டு அமுக்கினால் அல்லது கசக்கினால் தண்ணீர் வரவேண்டும். அப்படி வரவில்லையென்றால், அந்த உடம்புக்குப் பத்து நாளில் முடிவு ஏற்படும்.

வானத்திலே மின்னுகிற விண்மீன்கள் ஒருவனுடைய பார்வைக்குப் புலனாகாவிடில், ஐந்தே நாளில் மரணம்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே இத்தகைய ஞானப்பாடல்கள் தமிழகத்தில் வழங்கிவந்துள்ளன. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் செய்யுளியலில் மேற்கோளாக வருகின்ற சில பாடல்களும், பல தொகை நூல்களிலே காணப்படுகின்ற பாடல்களும், தமிழகத்தின் ஞானமணிச் சித்தர்களால் இயற்றப்பட்டு, ஆன்ம வழிபாட்டை அருவ நிலையிலே இயற்றுகின்றனவாக அமைந்துள்ளன. அந்தப் பாடல்களும் சித்தர்களின் வழிபாட்டு இலக்கியத்திலே முக்கியமான பகுதியாக அமைவனவே.

சங்க காலத்திற்குப்பின் தோன்றிய பல இலக்கியங்களிலும், இத்தகைய பாடல்கள் பற்பலவாகத் தமிழர் சமுதாயத்திற்கு வழங்கப் பெற்றுள்ளன.

இந்த வழிபாட்டுப் பாடல்களிலே முக்கியமாக இரண்டு பிரிவினைக் காண்கிறோம். முதலாவது பிரிவு, ஞான வழிபாட்டு மரபைச் சார்ந்தது. இரண்டாவது பிரிவு, ஆலய வழிபாட்டு மரபைச் சார்ந்தது.

இந்த இரண்டு மரபுகளுமே சித்தர்களின் வழிபாட்டு இலக்கியத்தில் இரண்டு கண்களாகத் திகழ்கின்றன.

ஞான வழிபாட்டுப் பாடல்கள் என்ற பிரிவிலே வரும் அரிய செய்யுட்களெல்லாம், இறைவனை ஒரு குறிப்பிட்ட உருவத்திலே வழிபடாமல், அங்கு இங்கு எனாதபடி எங்குமாய்க் கலந்துள்ள பரம்பொருளாகக் கண்டு, அந்தப் பரம்பொருளை உருவமற்ற அருவ நிலையிலே துதிப்பனவாக அமைந்துள்ளன.

இந்த வழிபாட்டு மரபு சங்க காலத்திற்கு முன்பு தோன்றிப் பின்னர்க் காப்பிய காலத்திலும், பிரபந்த காலத்திலும், புராண காலத்திலும், பின்னர்த் தாயுமானவர் போன்ற சித்தர்கள் காலத்திலும், அண்மைக் காலத்து இராமலிங்க அடிகள் போன்ற ஞானிகள் இலக்கியத்திலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இந்த மரபை ஒட்டியே நமது காலத்தில் வாழ்ந்த தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரும் ஒருசில ஆன்ம ஞானப் பாடல்களை வழங்கியிருக்கிறார்.

இந்த ஆன்ம வழிபாட்டு இலக்கியம் தவிர, மற்றொரு பிரிவாகிய சித்தர் இலக்கியம் தோத்திரப் பாடல்களை உள்ளடக்கியதாகும். துதிப்பாடல்கள் என்று நாம் அழைக்கின்ற இலக்கியத்தைப் போன்ற தன்மைகளைக் கொண்டனவாக, இந்தப்பாடல்கள் தோன்றி வழங்கி வந்துள்ளன.

சங்க காலத்திற்கு முன்பும் இத்தகைய பாடல்கள் ஞானிகளால் இயற்றப்பட்டுள்ளன. பிற்காலத்திலும் இவை இயற்றப் பெற்றுள்ளன. இன்னும் கூர்ந்து நோக்குவோமானால், ஆழ்வார்களின் இலக்கியங்களிலும், நாயன்மார்களின் இலக்கியங்களிலும் ஆன்ம வழிபாட்டுப் பாடல்கள் காணப் பெறுவதோடு, சித்தர்கள் இயற்றியுள்ள தோத்திர மரபையொட்டிய பாடல்களும் நூற்றுக் கணக்கில் வழங்கி வருவதைக் காண்கிறோம்.

விட்டுச்சித்தர் என்று அழைக்கப்பெற்ற பெரியாழ்வாரும், சிவ வாக்கியருடைய பாங்கிலே பல பாடல்கள் இயற்றிய திருமங்கை ஆழ்வாரும், ஆண்டாளும் வேறுசில ஆழ்வார்களும் இத்தகைய பாடல்கள் இயற்றியுள்ளார்கள்.

ஆழ்வார்களைப் போலவே சைவத் திருமுறைகளிலும் ஆன்மப் பாடல்களை நாம் காண்பதோடு, சித்தர்களின் மரபை ஒட்டிய வழி பாட்டுப் பாடல்களையும் காணுகிறோம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் பாடல் களிலும், சித்தர் இலக்கியத்தின் இந்த இரண்டு பிரிவுகளையும் சேர்ந்த பல பாடல்கள் உள்ளன.

திருவாசக நூல் முழுவதற்குமே சித்தர் மரபையொட்டி எழுதப் பெற்றுள்ள சில உரைகளையும் நாம் காணுகிறோம். மேல்நோக்காகப் பார்க்கும்போது வெறும் துதிப்பாடல்களாகத் தோன்றுகிற பல திருவாசகப் பாடல்களில், சித்தர் மரபையொட்டிய ஆன்ம உண்மை களை உணர்த்தும் உட்பொருள் விளங்குவதை சுந்தர மாணிக்க யோகீசுவரர், இரத்தின சபாபதியார் போன்ற பெரியோர்கள் தங்களுடைய உரைகள் மூலம் மிக விரிவாக எடுத்து விளக்கி யுள்ளார்கள்.

நால்வரைத் தவிர, சைவத் திருமுறையில் பத்தாம் திருமுறை யாகிய திருமந்திரமாலையின் பாடல்கள் அனைத்துமே, இந்த இரண்டு பிரிவுகளையும் சார்ந்தனவாக இருப்பதைத் தமிழ் உலகம் நன்கு அறியும்.

திருமந்திரம் தவிர, ஒன்பதாம் திருமுறையிலும், பதினோராந் திருமுறையிலும் பல சித்தர் பாடல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவை முறையாகத் தொகுக்கப்பெற்ற கட்டளைப் பாங்கிலே வழங்கிவருகின்றன.

திருமூலர், பட்டினத்து அடிகள், காரைக்கால் அம்மையார், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்ச் சித்தர் முதலிய மிகப் பெரிய ஞானிகளின் பாடல்கள் முறைசெய்யப்பெற்றுத் தொகுப்பு களாக நமக்குக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் சேர்ந்ததே சித்தர் இலக்கியமாகும்.

இந்த இரு வகையான சித்தர் இலக்கியப் பாடல்களையுமே, பொருள் கொள்ளும்போது சொற்களுக்குப் பின்னால் உள்ள ஞான மரபை மனத்திற்கொண்டு, அவற்றின் உட்கிடையை நாம் காண வேண்டிய அவசியம் இருக்கின்றது.

திரிபுரம், திருப்பெருந்துறை, சிதம்பரம், ஆரூர், நான்மாடக் கூடல் போன்ற ஊர்ப் பெயர்களுக்குங்கூடச் சித்தர்களின் மரபை யொட்டிய உட்பொருள் இருக்கிறது. தூலக்கண்ணால் நாம் பார்க் கின்ற தலங்களைப் பற்றிய பாடல்களைப் போன்று இவை தோற்றம் தந்தாலும், இந்தப் பாடல்களுக்குள்ளேயே ஆன்ம ஞான உட் பொருள் வேரூன்றியிருப்பதை ஞானிகளின் உபதேச வாயிலாக

உணர்ந்துகொண்டால், இந்தப் பாடல்கள் தருகின்ற இன்பம் முழுமையாக நிறைவெய்தும். இல்லையெனில், அனுபவம் பாதியாகவே நிற்கும் என்பதே உண்மை.

ஞான வழிபாட்டை மேற்கொண்டுள்ள சித்தர்கள், சமய மரபையொட்டி, வழிபாட்டுப் பாடல்களைத் தோத்திரமுறையில் ஏன் இயற்றினார்கள் என்ற ஒரு கேள்வி, நீண்ட காலமாக வினவப்பட்டு வருகிறது.

'அகம் பிரும்மாஸ்மி', 'நானே கடவுள்' என்ற அத்வைதத்தை உலகுக்குத் தந்த ஆதிசங்கரர், 'பஜகோவிந்தம்' என்ற ஒரு தோத்திர நூலையும் ஏன் இயற்றவேண்டும்?

உள்ளம் பெருங்கோயில் என்றும், ஊன் உடம்பு ஆலயம் என்றும் பாடிய திருமூலர், சக்தி உருவத்தின் வெவ்வேறு நிலைகளாகிய பாலை, திரிபுரசுந்தரி, புவனேசுவரி போன்ற வழிபாட்டு உருவங்களுக்கும், ஆனந்தக் கூத்தனுக்கும், ஐந்து கரத்தனுக்கும், வேறு பல வழிபாட்டு உருவங்களுக்கும் துதிப்பாடல்களை ஏன் இயற்றி வழங்கினார்?

'கோவிலாவது ஏதடா' என்றும், 'நட்ட கல்லும் பேசுமோ' என்றும் கேள்விகள் கேட்ட சிவவாக்கியர், "எந்தை ராம ராம ராம" என்று ராம நாமத்தை ஏன் தம்முடைய நூலிலே துதித்துப் பாடியிருக்கிறார்?

இவற்றின் நுட்பத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அருவத்திலும் ஆன்ம நிலையிலும் பரம்பொருளுக்கு அஞ்சலி செலுத்துகிற ஞானிகள், பக்தி நிலையிலிருந்து, தொண்டு நெறிக்கும் மகவு நெறிக்கும் உரிய வகையிலே பல துதிப்பாடல்களை இயற்றியிருக்கிறார்கள் என்பது உண்மை.

இதற்குக் காரணம், வழிபாடு என்று வரும்பொழுது மக்கள் சமுதாயம் என்ற பேருலகிலே தங்களை ஒன்றச் செய்துகொண்டு, சமுதாயத்தின் குரலிலே இந்த ஞானிகள் இத்தகைய பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்கள். தாங்கள் வாழ்கின்ற காலத்து மக்களின் குரலிலும், எதிர்காலத்தில் தோன்றுகின்ற தங்கள் வழித்தோன்றல்களின் குரலிலும், துதிப்பாடல்களை இயற்றி, மனிதர்களின் பக்குவ நிலையை முன்னேற்றுகின்ற முறையிலே, சமுதாயம் முழுவதையும் இறைவனை நோக்கி ஆற்றுப்படுத்துகின்ற பாடல்களாக, ஞானிகள் நமக்கு இந்தப் பாடல்களைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளம் நம்முடைய உள்ளத்தினோடு இசைந்து ஒலிக்கிறது. அந்த நிலையிலே நம்முடைய இரசிகமணி ஒருமுறை குறிப்பிட்டது போல், தாமரை இலையிலே நிற்கும் இரண்டு நீர்த்துளிகள் ஒன்றோடு ஒன்று இணையும்போது எப்படி அவை ஒரே துளியாகப் பூரித்துக் கொள்கின்றனவோ, அவ்வாறு, நம்முடைய வழிபாட்டிலே சித்தர்களின் ஞானப் பேரிதயமும் இணைந்து ஒலிக்கத் தொடங்கிவிடுகிறது. இது பேரின்ப அனுபவத்திலே மிகப்பெரிய வழித்துணையாகும்.

ஞானிகள் பக்திப் பாடல்களை இயற்றுவதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது; ஞானப் பயிற்சியின் வாயிலாகப் பரம் பொருளோடு ஒன்றிவிட்ட ஒரு ஞானியின் உள்ளம், அருவ நிலையிலிருந்து மீண்டுவந்து அந்த மனிதச் சட்டையை மறுபடியும் அணிந்து கொள்ளும்போது, மனிதருள் மனிதராக, மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக, இணைந்து கலந்து இந்தத் துதிப் பாடல்களைத் தோற்றுவித்துள்ள பாங்கே, இந்தப் பாடல்களுக்கு வித்தாக அமைகிறது.

ஞானிகள் துதிப்பாடல்களை இயற்றுவதற்குப் பிறிதொரு காரணமும் உண்டு; தனிமை வழிபாடு என்ற நிலையிலிருந்து, ஒரு ஞானி, சமுதாய நிலைக்கு வரும்பொழுது, அவனுடைய உள்ளமானது தன்னைச் சுற்றியுள்ள மனித சமுதாயத்தின் இதயத்தோடு இணைந்து கொள்கிறது. கடலிலிருந்து நீராவியாக எழுந்த மேகம், மீண்டும் மழையாகப் பொழிந்து, மறுபடியும் கடலிலே கலப்பதுபோல், ஞானிகளின் ஆன்ம அனுபவத்திலே இந்த இரண்டு நிலைகளும் இயல்பாக அமைந்துள்ளன. கடலிலிருந்து ஆவியாகி மறைகின்றது அருவநிலை. பிறகு மேகம் மழையாகப் பொழிவது உருவநிலை. சித்தர்களின் இரண்டுவகையான வழிபாட்டுப் பாடல்களும் இந்த இரண்டு நிலைகளையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

ஆகவே, சித்தர் இலக்கியத்தின் ஆராய்ச்சியிலே, அறிவியற் பாடல்களின் ஆய்வு எப்படி ஒரு முக்கியமான பகுதியோ, அவ்வாறே துதிப்பாடல்களின் ஆய்வும் ஒரு முக்கியமான பகுதியாகும்.

முதலாவது பகுதியை ஆய்வதற்கு உறுதுணையாக உள்ள நூல்கள் பற்பலவாக இருப்பது போலவே, துதிப்பாடல்களை ஆய்வதற்கு உற்ற துணையாக அமைந்துள்ள நூல்களும் பற்பலவாம். அச்சு வடிவிலுள்ள சில நூல்களையும், அச்சு ஏறாத ஓலைச்சுவடிகளையும் நாம் சான்றுகளோடு ஆராய்வது அவசியமாகும். இவற்றில், ஆன்ம அறிவியற் கூற்றின் உறுப்புக்கள் அனைத்தையும் அடக்கியுள்ள சித்தர் நூல்களிலே, மிகவும் தொன்மை வாய்ந்தன அவ்வையாரின் பெயரிலே வழங்கி வருகின்ற அவ்வையின் குறள் என்ற நூலும், விநாயகர் அகவலும் ஆம். இந்த இரண்டு நூல்களிலே இரண்டாவது நூல் பக்தி மரபையொட்டிய சித்தர் நூலாகும். முதலாவது நூல், அதாவது, அவ்வையின் குறள், நூற்றுக்கு நூறு ஆன்ம அறிவியற் கல்வியை உள்ளடக்கிய ஓர் ஒப்பற்ற ஞானக் களஞ்சியமாகும்.

## அவ்வையாரின் ஞான நூல்கள்

இதுவரை நாம் ஆராய்ந்த கோட்பாடுகளையும், தத்துவங்களையும், இரகசியங்களையும், செய்யுள் வடிவிலே சித்தர்கள் எப்படி வடித்துத் தந்திருக்கிறார்கள் என்பதை இனி நாம் காணவேண்டும். இந்த வகையான ஆய்வை மிகவும் பழமையான ஆதி நூல்களிலிருந்து தொடங்குவது பொருத்தமாக இருக்கும்.

சித்தர் நூல்களிலே மிகவும் தொன்மையானவை என்று மதித்து வணங்கப்படுகிற இரண்டு நூல்களிலே ஒன்று குறள்; மற்றொன்று

அகவல். இந்த இரண்டும் அவ்வையார் அருளிய ஞானப் பேரிலக்கியம் என்று சித்தர்கள் மதித்து இந்த நூல்களை ஆராய்வதுடன் கற்பித்தும் வருகிறார்கள். இலக்கியப் பயிற்சியுள்ள ஞானிகள் தங்கள் மாணவர்களுக்கு இந்த இரண்டு நூல்களிலிருந்தும் பல மேற்கோட் பாடல்களை அவ்வப்போது சொல்லி வருகிறார்கள். இந்த முறையிலே அவ்வையாரின் இரண்டு நூல்களாகிய அகவலும் குறளும் சித்தர் உலகில் மிகவும் புகழ்வாய்ந்து விளங்குகின்றன.

இந்த இரண்டு நூல்களும் அவ்வையாரே இயற்றியவை என்று செவிவழிச் செய்தி கூறியபோதிலும், இந்த நூல்களின் இலக்கியப் பாங்கைப் பார்க்கும்போது, சங்க காலத்தில் வாழ்ந்த அவ்வையாரே இவற்றை இயற்றியவரா, அல்லது, பிற்காலத்து வாழ்ந்த இன்னொரு புலவர் இவற்றை இயற்றினாரா என்ற வினா எழுகிறது.

நான் ஆய்ந்த அளவில், மேற்கண்ட வினாவோடு இன்னொரு வினாவும் அடிக்கடி எழுவது என் அனுபவமாக இருக்கிறது. அகவல், குறள் ஆகிய இந்த இரண்டு நூல்களுமே இரண்டு வெவ்வேறு புலவர்களால் இயற்றப் பெற்றனவோ என்ற ஐயமும் எனக்கு எழுவது உண்டு.

இந்த ஐயங்கள் ஒருபுறம் இருக்க, சங்க காலத்து அவ்வையார் வேறு, இந்த நூல்களை இயற்றிய அவ்வையார் வேறு என்ற ஒரு கூற்று, சித்தர் உலகிலுமே வழங்கி வருகிறது.

செவிவழிச் செய்தியில் அகவலையும் குறளையும் எழுதிய புலவர் அவ்வையாரே என்ற கூற்றில் மாற்றம் இல்லை. இதற்கு முக்கிய காரணம் இந்த இரண்டு நூல்களுமே சித்தர்களின் தத்துவங்களை உள்ளடக்கித் திகழ்கின்றன என்பதேயாகும்.

அகவலிலும் குறளிலும் காணப்படுகின்ற பேருண்மைகள் எல்லாம், சித்தர்களின் தத்துவங்களாகவே இருப்பதால், இந்த இரண்டு நூல்களையும் இயற்றியவர் ஒரு புலவரே என்ற செய்தியும், நெல்லிக் கனி உண்டு காலத்தை வென்ற அவ்வையார் ஞானப் பயிற்சியிலே தேர்ந்து விளங்கிய ஓர் சித்த ஞானப் பெண்மணி ஆவார் என்ற செய்தியும் ஒருங்கிணைந்த காரணத்தால், இந்த இரண்டு நூல்களுக்கும் ஆசிரியர் அவ்வையாரே என்று சித்தர் உலகில் சில பெரியோர்கள் கருதுகிறார்கள்.

என்றாலும் வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கும்போது நடையின் அமைப்பும், கருத்துக்களைக் கையாண்டுள்ள ஆட்சி முறையும், மற்றும் பல அகச்சான்றுகளும், இந்த நூல்களை இயற்றிய அவ்வையார் வேறு ஒருவராக இருக்கக்கூடும் என்ற ஐயத்தை வலியுறுத்துகின்றன. எனவே, இந்தப் புலவரின் காலத்தை வரையறை செய்வதற்கு நமது ஊகங்களே அடிப்படையாக அமைய வேண்டிய நிலை உள்ளது. புறச்சான்றுகள் போதிய அளவு இல்லை!

பிற்காலத்துப் புலவர் செய்த நூல் என்று இலக்கியக் கண்கொண்டு மட்டும் முடிவுகட்டிவிட முடியாதபடி, இந்த நூல்களிலுள்ள

பேருண்மைகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஞானிகளின் மரபை, உடனுறை உறவோடு வழங்குவதால், காலத்தை அறுதி செய்வதில் மேலும் சிக்கல் ஏற்படுகிறது.

திருமூலருடைய காலத்தை அறுதியிட்டுக் கூறுவதில் எப்படிப் பல சிக்கல்களை நாம் சந்திக்கிறோமோ, அவ்வாறே இந்த இரண்டு நூல்களின் காலத்தை அறுதியிடுவதிலும் பல சிக்கல்கள் எழுகின்றன. எனவே, இவற்றின் காலத்தை உறுதியோடு ஆய்வு முறையில் அறுதி காண முடியவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

இத்தகைய பல காரணங்களால் அவ்வையாரின் அகவல் தோன்றிய காலத்தையும், அவ்வையார் குறள் தோன்றிய காலத்தையும் ஆய்கிற முயற்சியில், இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் அவ்வளவாகத் துணை புரியவில்லை. வருங்காலத்தில் போதிய பல புறச்சான்றுகள் கண்டுபிடிக்கப்படுமானால், இந்த நூல்களின் காலம் பற்றிய ஆய்வு, உறுதியோடு முடிவு செய்யக்கூடிய முறையில் அமையும் என்று கருதுகிறேன். இந்நிலையிலே கால ஆராய்ச்சிகளை ஓரளவு தள்ளிவைத்துவிட்டு, இந்த நூல்களின் உட்கிடையைக் காண்பது பயனுள்ள முயற்சியாகும்.

இந்த நூல்கள் கூறுகின்ற கருத்துக்கள் எப்பொழுது தோன்றியன என்றால், அவை சங்க காலத்திற்கு முன்பிருந்தே இன்றுவரை இடையீடின்றி வழங்கிவருகின்ற சித்தர்களின் ஞான மரபிலே தோன்றி வளர்ந்தவையாம். எனவே, அனாதி காலமாக நம்முடைய தமிழ் மொழியிலே வழங்கிவருகின்ற சித்தர்களின் ஞானச் செல்வத்திற்கு, இன்று நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான களஞ்சியங்களிலே மிகவும் முக்கியம் வாய்ந்து விளங்குகின்ற நூல்களே, அவ்வையாரின் அகவலும் குறளும் ஆம்.

இந்த இரண்டு நூல்களிலே தத்துவ ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்கும்பொழுது, அவ்வையாரின் அகவல் துதிப்பாடலின் போக்கிலே இயற்றப்பட்டிருப்பதால், இரகசியங்களை ஆராய்கிற பணியிலே, அந்த நூலுக்கு முன்பாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முதலாவது நூல், அவ்வையாரின் குறளாகவே இருக்கிறது. இதுவே ஞான இரகசியங்களையும், பயிற்சிமுறையின் நுட்பங்களையும், தத்துவ நூலைப்போன்ற மொழி மரபின் முறையிலே எடுத்து இயம்புவதாக விளங்குகிறது.

இதற்கு முன்பு நாம் பார்த்த பல தலைப்புகளிலுள்ள சித்தர் இலக்கிய இரகசியங்கள் அனைத்தையும், ஒன்றுதிரட்டி வகைப்படுத்தி, சித்தர் இலக்கியத்திலுள்ள தத்துவச் செறிவைச் சுருங்கின மொழியிலே, ஆழமான எண்ணங்களிலே தொகுத்துக் கூறுகிறது அவ்வையாரின் குறள்.

சித்தர் இலக்கியத்தின் அகல நீள ஆழங்கள், ஞானத்தின் செயல்கள், யோக சாதனையின் இரகசியங்கள், இந்த உடம்புக்குள்ளே தொழில் செய்கின்ற பற்பல நிலைகள், இந்த நிலைகளின் ஆதிக்க மண்டலங்கள், இந்த மண்டலங்களிலே புகுந்து செல்லும்

வழிகள், இந்த உடம்பை யோகமுறையிலே இயக்குகின்ற நெறிமுறைகள், தமிழகத்துச் சித்தர்கள் கண்டுபிடித்துள்ள அறிவியல் இரகசியங்கள், முதலிய பல்வேறு ஞானச் செல்வங்களும், ஒரு பெரிய புதையலாக நமக்குக் கிடைப்பது அவ்வையாரின் குறளிலே என்று சொன்னால் அது சாலப் பொருந்தும்.

இந்த நூல் தோன்றிய காலத்திலும், இந்தக் காலத்துக்கு முன்பும், எழுந்தனவாக வழங்கிவருகிற வேறு சில நூல்கள் நமக்கு இப்பொழுது கிடைத்தபோதிலும், எல்லா நூல்களிலுமுள்ள யோக இரகசியங்கள் அனைத்தும் ஒருசேர நமக்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற நூல் அவ்வையாரின் குறளேயாகும்.

ஆகையால், இதுவரை ஆராய்ந்த பல நுட்பங்களையும் அனுபவச் சான்றுகளோடு காண்பதற்கு, நமக்கு அரிய பெரிய இலக்கியக் கருவியாக விளங்குகிறது இந்த மாபெரும் நூல். நீளத்திலும் யாப்பமைதியிலும் இது குறளே எனினும், இதன் தத்துவ நோக்கு வானம் அளாவியதாகும். வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் ஓர் அரிய சித்தர் இலக்கியமாக இந்த நூல் விளங்குவதால், ஆய்வு முறையிலே இந்த நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளை முதற்கண் நாம் ஆழ்ந்துசென்று காணவேண்டியது அவசியமாகிறது.

பல தலைப்புகளிலே, இந்த ஆய்விலே, சித்தர் இலக்கியத்தைப் பற்றி நாம் கண்ட உண்மைகள் அனைத்திற்கும், தக்க சான்றுகள் அவ்வையின் குறள் நூலிலே புதையுண்டு கிடக்கின்றன. 'புதையுண்டு' என்று சொன்னதன் காரணம், இந்த நூலை மற்ற இலக்கிய நூல்களைப் படிக்கின்ற முறையிலே படிப்பதற்கு இல்லை. வாய்மொழியாக வழங்கிவருகிற இரகசியங்களையும், வேறு பல சித்தர் இலக்கியங்களில் காணப்படுகிற இரகசியங்களையும் உரைநடையிலும் செய்யுள் நடையிலும் பல்வேறு சித்தர் நூல்களிலே நாம் காண்கின்ற தத்துவங்களையும், அனைத்தையும், துணையாகக் கொண்டு இந்தக் குறட்பாக்களைப் படித்தால்தான், இவற்றின் பொருள் விளங்குவதோடு, இந்தப் பாடல்களிலே கூறப்பட்டுள்ள ஆழமான கருத்துகளும் நமக்குப் புலனாகும்.

இவ்வாறு பார்க்கும்போது, இந்தக் குறள் நூலானது வெறும் செய்யுள் நூல் மட்டுமல்லாமல், பலநூறு பக்கங்கள் உரைநடையிலே நீண்டு செல்லக்கூடிய விளக்கங்களுக்கு இடம்தருகிற ஞானநூலாகவும் திகழ்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகளிலும் உள்ள சித்தர்களின் நெறிமுறைகள் அனைத்தையும், இந்தக் குறட்பாக்களிலே பொதுமுறையிலே சொல்லுவதோடு, சித்தர்களின் ஞானமார்க்கத்திற்குச் செம்மையான ஒரு பாட நூலாகவே இது அமைந்திருக்கிறது எனலாம்.

இந்தக் குறட்பாக்களிலே வருகிற சொற்கள் எளியனவே. யாப்பமைதியும் செய்யுட்போக்கும் எளியனவே. பிற்காலத் தெழுந்த பாக்களோ என்று ஆய்வாளர்கள் எண்ணவேண்டிய அளவுக்கு எளியனவே. என்றாலும் கல்விக்கூடத்தில் கற்பிக்கிற ஒரு பாட

நூலைப் போல, ஒவ்வொரு பாவும் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, உட்கிடைவிளக்கம், பொதுவிளக்கம் என்று விரிவடையக் கூடிய கருவைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

புதையல் என்ற சொல்லுக்குரிய அத்தனை பொருளும் இதற்குப் பொருந்துவதாக இந்த நூல் விளங்குகிறது என்று ஒரே வாக்கியத்தில் கூறிவிடலாம்.

ஆசிரியன் மாணவனுக்குக் கற்பிக்க வேண்டிய பாடங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதால், இதன் தமிழ்நடை அங்கங்கே சில இடங்களில் மிக எளிய வழக்குச் சொற்களையும் கையாண்டிருப்பதைக் காணுகிறோம். வடமொழிச் சொற்களும் கலந்தே வருகின்றன. இந்த உத்திமுறைகளை இந்த நூலின் ஆசிரியர் கையாண்டிருப்பதற்குக் காரணம், பாடம் சொல்வதற்கு என்ற முறையிலே இந்த நூல் அமையவேண்டும் என்று எண்ணியதாகவே இருக்கலாம்.

குறள் என்ற யாப்பை இந்த நூலுக்குத் தேர்ந்தெடுத்துள்ள நோக்கமும், மனப்பாடம் செய்வதற்கு ஏற்றதான சிறிய வடிவிலே பாடல்கள் அமையவேண்டும் என்பதாகும். இன்று சித்தர்களின் பயிற்சியிலே ஈடுபட்டுள்ள பலர் இந்தக் குறட்பாக்களை மனப்பாடம் செய்துள்ளதன் காரணம், இந்தப் பாடல்களின் எளிமையேயாகும். மிகப்பெரிய உண்மைகளை வகுத்துத் தொகுத்து வரையறை செய்து, ஆசிரியர் மாணவனுக்கு வழங்குவதிலே சிறிய சிறிய பாடல்கள், மிகவும் உதவியாக இருக்கின்றன அல்லவா!

இந்தக் காரணங்கள் தவிர இந்நூலின் அமைப்புமுறை, யோகத்தின் அடிப்படையான உடல் அமைப்பு விளக்கத்திலிருந்து ஒவ்வொரு படியாக ஆன்ம அறிவியலை வரம்பு செய்வதால், சித்தர்களின் ஞானப்பயிற்சியைக் கற்கின்ற ஒரு மாணவனுக்குப் பாடம் பாடமாக இரகசியங்களைச் சொல்வதற்கு, இந்த நூல் அரும்பெரும் ஆசானாகக் கைகொடுத்து உதவுகிறது. எனவே, இந்த அரிய குறள்நூலின் ஞான நுட்பங்களை, ஒவ்வொன்றாக ஆராய்வது சித்தர்களின் ஞானக் களஞ்சியத்தையே ஒவ்வொன்றாகக் காண்பதற்கு ஒப்பாகும்.

இலக்கணச் சூத்திரங்களைப் போன்று ஆன்ம உண்மைகளையெல்லாம் 'குறுகத் தறித்து' எடுத்துச் சொல்லுவதே இந்தக் குறட்பாக்களின் தன்மையாக அமைந்திருக்கக் காண்கிறோம். இக்காரணத்தினால் ரசானுபவம் அல்லது சுவை நுகர்ச்சி என்கின்ற இலக்கிய அனுபவத்தில் இந்த நூற்பா மாறுபடுகிறது. அறிவின் விரிவையும் ஆழத்தையும் கொண்டு ஆராய்ந்து பொருள் கண்டு, கற்கவேண்டிய ஒரு நூல் அவ்வையின் குறள் என்பதையும், வெறும் இலக்கிய இன்பத்தை இதில் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

பலநூறு ஆண்டுகளாகச் சித்தர்களின் ஞானவழியிலே பயின்று பயின்று தேர்ந்துள்ள பெரியோர்கள் அவ்வாறு பயில விரும்புகின்ற மாணவர்களுக்காகப் பாதுகாத்துவந்த இந்த நூல், சித்தர் இலக்கியத்தி

னுள்ள பூட்டுக்களைத் திறப்பதற்குரிய திறவுகோலாகும். இதிலுள்ள உண்மைகளை நாம் ஆராய்ந்தாலன்றி, மற்ற ஞானிகளின் இலக்கியத்திலுள்ள பூட்டுக்களைத் திறந்து உள்ளே செல்ல இயலாது. ஆகையினாலேதான் சித்தர் இலக்கியத்தின் ஆராய்ச்சிக்கு அடிப்படையான தொடக்க நூல் என்று, அவ்வையின் குறள் கருதப்பெறுகின்றது.

எவ்வாறு திருவள்ளுவரின் திருக்குறளானது நீதி நெறியிலே எல்லாப் பொருளையும் தன்பால் அடக்கிக்கொண்டு, அதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை என்று சொல்லுகின்ற முறையில் அமைந்திருக்கிறதோ, அவ்வாறே, சித்தர்களின் ஞான உலகிலுள்ள எல்லாப் பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்பது அவ்வையின் குறள். இந்த உணர்வோடு அவ்வையின் குறள் நூலுக்குள்ளே செல்லுகிறோம்.

## 1. வீட்டு நெறிப்பால்

இந்த உலகம் உண்டாவதற்கு முன்பு ஒலி இருந்தது. அந்த ஒலியிலிருந்து இந்த அண்டங்களெல்லாம் படைக்கப்பட்டன என்று, விவிலிய வேதத்திலும் மற்ற எல்லாச் சமய மறைகளிலும் கூறப்பட்டுள்ளது.

"ஓம்" என்ற நாதத்திலிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றியது என்பதாக நமது நாட்டு ஞானிகள் கண்டு சொல்லியிருக்கிறார்கள். 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று இறைவனைப் பாடுகின்ற ஞானிகள், ஓசையும் ஒலியும் இந்த உலகைத் தோற்றுவித்ததோடு அல்லாமல், இந்த உலகத்தின் இயக்கத்தையும் நடத்துகின்றன என்று கண்டுபிடித்துள்ளார்கள். ஒலியிலிருந்து உண்டாகிய உலகம், ஒலியினால் பாதுகாக்கப்பட்டு, பிறகு ஒலியிலேயே ஒடுங்கிவிடுகிறது என்பது சித்தர்களின் பேருண்மையாகும்.

இந்த விஞ்ஞான உலகத்தில் நவீன ஆராய்ச்சிகள் அனைத்தும் ஓசையையும் ஒலியையும் பற்றிப் பல கொள்கைகளை நாளும் நமக்குப் புதிது புதிதாகக் கண்டுபிடித்துத் தருகின்றன. ஞானிகள் கண்டு சொல்லிய ஒலி வடிவமான பரம்பொருளை நாம் காணும்பொழுது, இந்த நவீன விஞ்ஞான உண்மைகளையெல்லாம் இதயத்தில் நிலை நிறுத்திக் கொண்டுதான், சித்தர்களின் இலக்கியங்களை நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது பிரணவம் என்று சொல்லப்படுகின்ற 'ஓம்' என்ற நாதத்தின் ஆழம் நமக்கு நன்கு புலனாகும்.

'ஓம்' என்ற ஒலியிலே உயிர் எழுத்தாகிய 'ஓ' பரந்து நிற்கிறது. இந்த 'ஓ' என்ற ஒலி 'ஓம்' என்ற ஒலியிலே இணைந்து இயங்கும் பொழுது, அந்த ஒலியின் வடிவத்திலே உலகப் படைப்பின் தோற்ற வடிவம் அப்படியே துலங்குவதைக் காணலாம். இந்த ஒலியின் தோற்றத்தை மேலும் ஆராய்ந்து பார்த்தால், ஓங்கார எழுத்துக்குள்ளே மூன்று எழுத்துக்கள் ஒன்றியிருப்பதை நாம் உணர்வோம். அவை அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளாம்.

எழுத்துக்களின் தோற்றமாகிய எழுச்சியை ஆராய்ந்து கூறியுள்ள இலக்கண ஆசிரியர்கள் அனைவரும், எழுத்தொலியானது நம்முடைய

உடம்பின் எந்த எந்த நிலைகளிலிருந்து மையங்கொண்டு எழுகிறது என்பதை அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

அ என்ற எழுத்து, அங்காத்தல் என்ற முயற்சியினால் பிறப்பதாகும். வாயில் ஒலியை அங்காந்து ஒலித்தோமானால், 'அ' என்ற ஒலி பிறக்கிறது. எனவே அகரத்தின் தோற்றம் அங்காத்தல் என்ற செயலாகும்.

உ என்ற எழுத்து உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கிறது. இது குவிப்பு என்ற செயலிலிருந்து பிறக்கின்ற ஒலியாகும்.

ம் என்ற எழுத்து உதடுகளை மூடி, அந்த மூடிய நிலையிலேயே ஒலியை எழுப்பும்போது பிறப்பதாகும். எனவேதான் 'ம்' என்ற எழுத்துக்குச் சித்தர்கள் "ஊமை எழுத்து" என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

ஆகவே, அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளும், மூன்று வெவ்வேறுபட்ட செயல்களினால் தோன்றுவன என்பதைக் காணுகிறோம். அங்காத்தல், குவித்தல், மூடுதல் ஆகிய மூன்று செயல்களும் இந்த மூன்று ஒலிகளிலே நிகழ்கின்றன.

வாய்கொண்டு நாம் செய்கின்ற செயல்களிலெல்லாம் அடிப்படையானவை இந்த மூன்றுமே ஆம். அதாவது அங்காத்தல், குவித்தல், மூடுதல் ஆகிய மூன்றுமே! எனவே இதைப் பிரணவ ஒலி என்றார்கள் சித்தர்கள். இந்தப் பிரணவ ஒலியே படைப்புகளுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள ஒலி என்று சொல்வதில் இத்தனை ஆழமான பொருள் இருக்கிறது என்பதை இப்பொழுது நாம் புரிந்துகொள்ளுகிறோம் அல்லவா?

அ, உ, ம் என்ற மூன்றும் சேர்ந்த ஓம் என்ற பிரணவ ஒலியைத் தூலப் பிரணவம் என்றும், சூக்குமப் பிரணவம் என்றும் இரண்டாகப் பிரித்துச் சொல்லியிருக்கிறார்கள். தூலப் பிரணவம் என்பது, ஓம் என்ற எழுத்து வடிவம். சூக்குமப் பிரணவம் என்பது, அந்த ஒலி 'ஈதர்' என்கின்ற வான மண்டலங்களிலே எழுப்புகின்ற வடிவம். இதைத்தான் சூக்குமப் பிரணவம் என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். ஆகவே ஒலிகளுக்கெல்லாம் ஆதாரமாக அமைந்ததும், படைப்பின் தோற்றத்திற்கு மூலமாக விளங்குவதுமாகிய இந்தப் பிரணவத்தில், உள் ஒலியாகிய 'அ' என்பதே முதல் எழுத்து என அழைக்கப்பெறுகிறது.

உலகில் எல்லாப் பகுதிகளிலும் மனிதர்கள் தங்களுடைய தினசரி அலுவல்களைச் செய்வதற்கும், ஒருவரோடு ஒருவர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும், மொழியையே சாதனமாகக் கொண்டு வாழ்கிறார்கள். இந்த மொழிகள் 'தேசம்தோறும் பாஷை வேறு' என்ற வசனத்திற்கு இணங்கப் பற்பலவாக விளங்குவதைக் காணுகிறோம். ஆனால் ஒரு பெரிய அடிப்படையான உண்மை என்னவென்றால், எல்லா மொழிகளுக்குமே 'அ' என்ற ஒலியே முதல் எழுத்தாக அமைந்திருக்கிறது.

இந்திய மொழிகளிலே அகரம் முதலெழுத்தாக அமைந்திருப்பது போலவே, சற்றே மாறுபட்ட ஒலியில் இந்த முதல் எழுத்து மற்ற மொழிகளிலே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். 'அ' என்பதன் ஒரு சிறிய மாறுதலோடு கூடிய ஒலியே 'A' என்பதும், 'ALPHA' என்பதும், மற்ற மொழிகளின் முதல் எழுத்துக்களும் ஆம். இதை யெல்லாம் மனத்திற்கொண்டுதான் திருவள்ளுவர் தமது மறையிலே,

'அகர முதல எழுத்தெல்லாம்'

என்று பாடுகிறார். எல்லா எழுத்துக்களுமே அகரத்தை முதலாகக் கொண்டவை என்று, அகில உலக அடிப்படையிலே நின்று பேசுகிறார் வள்ளுவர். எல்லா ஞானிகளும் இதையேதான் சொல்லுகிறார்கள்.

அவ்வையின் குறளும் இந்த உண்மையைச் சொல்லியே நூலைத் தொடங்குகிறது.

'ம்' என்ற எழுத்தை உச்சரிக்கும்பொழுது உதடுகள் மூடுகின்றன என்ற காரணத்தால், ஓம் என்ற பிரணவத்தின் முடிவு 'ம்' ஆக அமைந்திருக்கிறது. அங்காத்தல் என்ற முயற்சியின் விளைவாகப் பிறக்கும் 'அ' என்ற ஒலி, முதல் ஒலியாக அமைந்திருக்கிறது. இந்த இரண்டுக்கும் நடுநிலையிலுள்ள 'உ', உதடுகள் மூடிக்கொள்ளாமல் குவிந்த நிலையிலேயே பிறக்கிறது.

இந்த உண்மையை மனத்திற்கொண்டு படைப்பை, முதல்நிலை என்றும், நடுநிலை என்றும், முடிவுநிலை என்றும் மூன்றாக வகுத்தார்கள் சித்தர்கள். இதுகாரணமாக அகரத்தைப் பிரம்மன் எனவும், உகரத்தைத் திருமால் எனவும், மகரமாகிய முடிவை உருத்திரன் எனவும் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

உடம்பு உண்டாவதற்கு முன்புள்ள ஒருநிலை விந்து நாதநிலை என்று சித்தர்களால் அழைக்கப்படுகிறது. விந்து என்றால் ஒளி என்று பொருள். நாதம் என்றால் ஒலியாகும். இவை மனித உடம்பைச் சூழ்ந்துகொண்டு ஒரு தொம்பைக்கூடு போன்று பரு உடலுக்கு ஒரு முழம் தள்ளி, உடம்பு முழுவதையும் சூழ்ந்துகொண்டு, ஆகாயக் கூறான நுண்வடிவத்தில் விளங்குவதை ஞானிகள் கண்டார்கள்.

ஆகாய அணுக்கள் எப்பொழுதும் கீழும் மேலும் அசைந்து கொண்டே இருப்பன. பலகணி வழியாக வருகின்ற சூரியனுடைய கதிர்—அணுக்கள், இவ்வாறு ஆடிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம் அல்லவா? அவ்வாறுதான் இந்த அணுக்கள் இயங்குகின்றன. எனவேதான் எழுத்து ஒலியினாலான பிரணவத்தைத் தூலப் பிரணவம் என்றும், அதன் பதிவைச் சூக்குமப் பிரணவம் என்றும் ஞானிகள் அழைத்தார்கள்.

நாதம் விந்து என்று அழைக்கப்படுகின்ற இந்தத் தூல சூக்கும ஒலி வடிவங்களே, படைப்புக்கு ஆதாரமாகவும் ஆரம்பமாகவும் விளங்குவதால், ஓம் என்ற பிரணவம்தான் உற்பத்தியின் மூலம் என்று, சித்தர் இலக்கியம் பேசுகிறது. திருமூலர் தமது திருமந்திரத்திலே இந்த மாபெரும் பிரணவ உண்மையை மிக அழகாகப் பாடியுள்ளார் :

ஓம்எனும் ஓங்காரத்
துள்ளே ஒருமொழி
ஓம்எனும் ஓங்காரத்
துள்ளே உருஅரு
ஓம்எனும் ஓங்காரத்
துள்ளே பலபேதம்
ஓம்எனும் ஓங்காரம்
ஒண்முத்தி சித்தியே

என்று திருமூலருடைய திருமந்திரம்.

பிரணவத்தின் முக்கியத்தையும், அதன் இயக்கத்தையும் இவ்வாறு அடிக்கோடிட்டு எல்லாச் சித்தர்களும் பாடியுள்ளார்கள். இதையே தான் அவ்வை தம்முடைய குறளின் ஆரம்பத்திலே அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்கிறார்.

அவ்வையின் குறள் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளதாலே முதலாவது பகுதி வீட்டு நெறிப்பால் என்று பெயர் பெறுகிறது.

மக்கள் தங்களுடைய உடம்பைக்கொண்டு வீடுபேறு அடையக் கூடிய செம்மையான வழியை உணர்த்துவதே, இந்த அதிகாரத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தோடு தொடங்குகின்ற அவ்வையின் குறள், தனது முதலாவது பாலிலே, பிரணவத்தின் முக்கியத்தை ஆணித்தரமாக உணர்த்துகிறது.

ஆதியாய் நின்ற
அறிவு முதலெழுத்து
ஓதிய நூலின்
பயன் (1)

மனிதர்கள் கற்றுள்ள ஞான நூல்களின் நோக்கமும் பயனும் என்ன என்பதை இந்தக் குறள் மனித சமுதாயத்திற்கு உணர்த்து கிறது. முதன்மையாக நிற்கின்ற அறிவுமயமான பிரணவமே, ஞானநூல்களின் நோக்கமும் பயனுமாக அமைந்துள்ளது என்பதை அவ்வை வற்புறுத்துகிறார்.

ஓதிய நூலின் பயன் என்று அவ்வையார் சொல்லுவதைத் தாம் ஓதிய குறள் நூலின் பயன் என்று அவ்வையார் கொள்வதாக எடுத்துக் கொண்டால், இந்தக் குறள்நூலை அவர் எழுதியதன் நோக்கம் மக்கள் சமூகத்திற்கு வீடுபேறு காணும் நிலையை உணர்த்துவதே என்று பொருள்கொள்ளலாம். அவ்வாறின்றி உலகத்திலே ஓதப் பட்ட நூல்கள் அனைத்தின் பயனும் இதுவே என்று கொள்ளுவதற்கும் இடமிருக்கிறது. அப்படிக் கொண்டோமானால் சித்தர் இலக்கியங்கள் அனைத்திற்கும் நோக்கம், மனிதர்கள் உடம்பு எடுத்ததன் நுட்பத்தை நன்றாகக் கற்றுத் தேர்கிற கல்வியே அவர்களுக்கு வீடுபேறு நல்கும் என்பதே. இவ்வாறு இரண்டு முறையில் எப்படிப் பொருள்கொண்டா லும், நோக்கமும் பயனும் ஒன்றே.

முதல் எழுத்து என்று அவ்வை கூறுவதன் நுட்பம் சிந்திக்கற் பாலது. நாத வடிவாகிய பிரணவமே முதலெழுத்து என்பதோடுகூட,

முதலெழுத்தின் முதலெழுத்தாகிய 'அ' என்ற அங்காத்தல் ஒலியே, உலக மொழிகள் அனைத்திற்கும் முதல் எழுத்தாக அமைகிறது. அந்த முதல் எழுத்தே படைப்பாகிய ஆக்கத்திற்கும், நிலைபேறு என்கின்ற காத்தலுக்கும், முடிவு என்கின்ற அழிப்புத் தொழிலுக்கும் முதலாக அமைகிறது.

அவ்வையின் முதலாவது குறளிலே சொல்லப்பெற்ற பிரணவமே சூக்கும நிலையிலிருந்து உடம்பாகப் படைப்புக் கொள்ளும்போது, ஐந்து பூதங்களாகவும், சந்திரன், சூரியன், கனல் என்ற மூன்று ஒளிகளாகவும் ஆன்மாவாகவும் வகைவிரிந்து திகழ்கிறது.

இதை மிக அரிய ஓர் திருமந்திரத்திலே திருமூலர் சொல்லுகிறார்.

தரணி சலம்அனல் தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே

'சோமசூரிய அக்னி மண்டலங்களில் ஐம்பூதங்களின் அறமும் பின்னிக் கிடக்கிறது' என்பது சிவயோகியார் வாக்கு.

இத்தனை உட்கிடைகளைத் தாங்கி வருகிற அவ்வையின் குறள்:

பரமாய சக்தியுள்
பஞ்சமா பூதம்
தரமாறில் தோன்றும்
பிறப்பு (2)

இந்த உடம்பாகிய கோவிலுக்குள் பூதமண்டலங்கள் எப்படி மையம்கொண்டுள்ளன என்பதை நுட்பமான முறையிலே சித்தர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

தூலநிலையில் அக்கினி மண்டலம் மூலாதாரத்திலும் சுவாதிட்டானத்திலும் பொருந்தியிருக்கிறது. சூரிய மண்டலம் மணிபூரகத்தையும் அநாகதத்தையும் பொருந்தியிருக்கிறது. சந்திர மண்டம் விசுத்தியையும் ஆக்ஞையையும் பற்றி உள்ளது.

இதே அமைப்பு சூக்கும வடிவத்தில் நம்முடைய உடம்புக்குள் செயல்புரிகிற சூக்கும தேகமாகிய நுண் உடலில் எவ்வாறு தொழில் புரிகின்றது என்பதையும் சித்தர் இலக்கியம் கூறுகின்றது. அந்த நுட்பம் வருமாறு:

அக்கினி பிடரிக்கண்ணையும், சூரியன் வலதுகண்ணையும், சந்திரன் இடது கண்ணையும் பொருந்தி உள்ளனர்.

தூலதேகத்தை உண்டாக்கிய சக்தி தத்துவமே எல்லா உணர்வுகளுக்கும் நுகர்ச்சிகளுக்கும் காரணமான நுண் அறிவாக அமைந்திருக்கின்றது. இந்த அரிய இரகசியத்தைத் தமக்கே உரிய கலையெழிலோடு திருமூலர் பாடுகிறார் :

தானே தலைவி யாகின்ற தற்பரை
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்

வானோர் தவமும் மனமும் புத்தியும்
தானே சிவகதி தன்மையு மாமே

இனி வரும் குறட்பாக்கள் எல்லாம், இந்த முதல் இரண்டு பாக்களிலே கூறப்பெற்ற அடிப்படையான ஞானநெறியின் பேருண்மைகளை, ஒவ்வொருபடியாக எடுத்து விளக்க முனைகின்றன. எனவே, இனிவரும் பாக்களுக்கு அவற்றின் பொழிப்புரையையும் சிறுசிறு விளக்கங்களையும் ஆராய்ந்தாலே சித்தர்களின் ஞான வழிபாட்டு முறையின் நுட்பங்களை உணர்ந்துகொள்ள இயலும்.

சுந்தர மாணிக்கயோகீசுவரர், சிவயோகி இரத்தினசபாபதியார் முதலிய குருமார்களும், கண்ணப்ப சுவாமிகள் போன்ற சித்தர்களும், எழுதியும் எழுதுவித்தும் மாணவர்களுக்குக் கற்பித்த விளக்கங்களை முதன்மையாகக் கொண்டு, அவற்றின் துணையால் இனிவரும் வீட்டு நெறிப் பாலின் விரிவுக்குள் புகுந்து பார்க்கலாம்.

ஓசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசை படுத்து மளறு (3)

சத்தமும் (கேட்டல் உணர்ச்சி), பரிசமும் (தொடுதல் உணர்ச்சி), வடிவமும் (பார்வை உணர்ச்சி), சுவையும் (நாக்குணர்ச்சி), வாசனையும் (மூக்குணர்ச்சி) ஆசையில் சம்பந்தப்பட்டால் சேறாகும்.

ஓசை, பரிசம், உருவம், சுவை, நாற்றம் ஆகிய சூக்கும பூதங்கள் தன்மாத்திரை என்ற பெயரால் அழைக்கப்படும். சீவனின் மனம் அவற்றுடன் கலந்து ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி, கர்மேந்திரியங்களாகிய வாக்கு, பாணி, பாதம், ஆசனவாய், பாயுரு, குறி, உபஸ்தம் இவைகளுடன் பொருந்தி, ஆசையால் தூண்டப்பட்டு உலகமான மாயச் சேற்றில் ஆழ்ந்து தத்தளிக்கிறது.

மனம் ஆசை வயப்பட்டு இந்திரியங்களுடன் பொருந்தும்போது உலகபந்தம் அமைகிறது. மனம் பிரணவத்தில் பற்றுக்கொண்டால் நிராசை அமையப்பெற்று, உலக வாசனை விடுபடும் என்பது கருத்து.

தருமமா பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன் (4)

ஆன்மாவை அறியும் தருமமும், தேகத்தின் கண்ணுள்ள மகத்தான சிவச்செல்வமாகிய பிரணவமும், சிவச்செல்வத்தை அடைய ஆசையும், ஆன்மாவின் நிலையான மோட்சமும் என்று சொல்லப்பட்ட நான்கு வகையான உறுதிப் பொருளும் இந்தத் தேகத்தினாலேயே உண்டாகிய பயனாம்.

தருமம் என்ற சொல்லுக்கு இயல்பு என்று பொருள். பிரணவத்தின் இயல்பு தூலமாயும் சூக்குமமாயும் உள்ளது. சூக்குமம் தூலமாயும், தூலத்தைக் கடந்ததாயும் உள்ளது. மனிதன் உடலையே தான் என்று எண்ணிக்கொண்டிருந்து, வாழ்ந்து மரணத்தை அடைகிறான். இறந்த பிறகு சூக்குமப் பிரணவத்தில் விந்து நாதமாகச் சிலகாலம் தங்கியிருந்து, மீண்டும் பூமியில் பிறக்கிறான். தனது மூலமாவதும் முதலாவதும் பிரணவமாகிய தன்மையே என்பதை அறிந்து

கொள்ளலே தருமமாயிற்று. அதுவே மனிதனின் மாறுதலற்ற இயல்பு நிலையாகும். உடல் என்பது மாறுதலோடு கூடிய நிலையாகும். இறந்துபோய் அடையும் சூக்கும விந்து நாதங்களைத் தேகம் உள்ள போதே தேடவேண்டும். இதுவே உடம்பின் பயன்; இதுவே தேட வேண்டிய செல்வம்.

ஆசையே கட்டி அறியும் உலகத்தைப் பற்றிக்கொண்டு பிறவிக்குக் காரணமாயிற்று. ஆசையே அகண்ட பிரணவத்தில் பற்றுக் கொண்டால், இறந்து அடைய வேண்டிய வீட்டினை உடலுடன் அடைவதோடு, மீண்டும் பிறவாமையும் பொருந்தும். உடலுடன் கூடியவன் சுகமாக வாசம் செய்ய ஒரு வீட்டைக் கட்டிக் கொள் கிறான். இறந்துபோனபிறகு தான் இருக்கவேண்டிய வீட்டை எண்ணி, உடலில் வாழும்போதே அதற்கான நெறிகளைக் கடைப் பிடித்தொழுகுதலே வீட்டு நெறியாயிற்று.

நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
உலவை யிரண்டொன்று விண் (5)

மண் ஐந்து பிரிவுகளாகவும், புனல் நான்கு பிரிவுகளாகவும், நீண்ட அக்கினியானது மூன்று பிரிவுகளாகவும், வாயுவானது இரண்டு பிரிவு களாகவும், ஆகாயமானது ஒன்றாகவும் தேகத்தில் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

ஆகாயத்தில் ஏனைய நான்கும் அரைக்கால் கூறாக இருப்பினும், அவை பிரித்தறியுமாறில்லாமல் ஒவ்வோர் ஆகாய அணுவிலும் கலந்தே அதிசூக்குமமாய் உள்ளன. மற்றைய பூதங்களில் பிரித் தறியுமாறுள்ளன.

மாயன் பிரமனு ருத்திரன் மகேசனோ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து (6)

திருமாலும் பிரமனும் உருத்திரனும் மகேசுவரனும் ஞான கர்மா வினால் ஆராய்கின்ற மூர்த்திகரமுடைய சிவனுமாகப் பஞ்சமூர்த்தி களாவர்.

பிருதிவிக்குப் பிரமனும், அப்புவுக்குத் திருமாலும், தேயுவுக்கு உருத்திரனும், வாயுவுக்கு மகேசனும், ஆகாயத்திற்குச் சிவனும் அதிபராவர்.

மாலய னங்கி யிரவி மதியுமையோ
டேலும் திகழ்சத்தி யாறு (7)

திருமாலின் சத்தியாகிய இலக்குமியும், பிரம்மாவின் சத்தியாகிய சரசுவதியும், அக்கினியும், சூரியனும், சந்திரனும், பார்வதியும் ஆகிய இவர்கள் தேகத்தில் பொருந்திப் பிரகாசிக்கின்ற ஆறு சத்திகளாக இருக்கின்றார்கள்.

ஞான சாதனைக்கும் இலட்சியத்திற்கும் இலக்குமியும், அறிவுக்குச் சரசுவதியும், அஞ்ஞான இருளை அகற்றவும் பிராணனுக்கு வலிமை செய்யவும் அக்கினியும், பிரமத்தைக் காட்டச் சூரியனும், தேகத்தைப்

பார்க்கச் சந்திரனும், ஞானத்தை அடைவிப்பதற்குப் பார்வதியும் உள்ளொளியோடு உடம்பினுள் நிலைத்துள்ளார்கள்.

தொக்கு திரத்தோடூன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாதுக்க ளேழு (8)

தோலால் போர்த்தப்பெற்ற உடலானது, இரத்தமும் ஊனும் மூளையும் கொழுப்பும் எலும்பும் சுக்கிலமும் ஆகிய ஆறும், தோலுடன் சேர்ந்து ஏழுவகைத் தாதுக்களாலானது.

தாது என்பதற்குச் சாணம், எரு என்ற பொருள்கள் உள்ளன. சாணம், எரு இவைகளைச் சுட்டெரித்தால், அவை சாம்பர் ஆகும். சாம்பரின் முதல் நிலை சாணமாகவும் எருவாகவும் உள்ளது. சாம்பற் பொடியாகிய தாதுவே (கனிசமே) ஏழு தாதுக்களிலும் கரந் துறைந்தது. அதுபோலத் தேகத்தில் ஓர் ஒளியிலிருந்துகொண்டே, தேகத்தை இயக்கிக் கொண்டுள்ள ஆன்ம ஒளியே மெய்யான பொருளாகும். அதைத் தாங்கியுள்ள தோலாகிய உடம்பு பொய் யானது என்பதை அறியவும்.

தேகியின் செல்வமான ஒளியே தேகத்தின் செல்வமான தாதுக் களாக விளைந்துள்ளது என்பது கருத்து.

மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு (9)

நிலத்துடன் நீரும் நெருப்பும் சந்திரனும் காற்றும் சூரியனும் ஆகாயமும் உடல் அறத்தை இயக்குவிக்கும் தலைவனும் ஆக எட்டுப் பிரிவுகள்.

பஞ்சபூதங்களுடன் சூரிய சந்திர ஒளிகளைக் கூறி, இயமானனாம் பிராணனை எச்சமூர்த்தி என்றார் மாணிக்கவாசகர்.

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா

என்று சிவபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

உடல் செய்கின்ற வேள்வியில் உயிர்ப்பு வடிவாயிருக்கும் தலைவன் ஆன்மாவேயாகும்.

இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து (10)

மேலே சொன்ன செல்வங்கள் எல்லாம் சேர்ந்து பொருந்தியதால் உடல் ஏற்பட்டது. அந்தச் செல்வங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கியது ஒளியேயாகும்.

பிரணவத்தில் உள்ள ஒளியே தேகமாகவும், தேகத்தின் அறிவாகவும், தேகத்தின் இயக்க சக்தியாகவும் உள்ளது.

விந்து என்ற சொல் புள்ளி, வட்டம், தாது என்ற பொருளை உணர்த்தும். ஒரு மையப் புள்ளியினின்று பல வட்டங்கள் தோன்று கின்றன. பல வட்டங்களாக அமையினும் மையப்புள்ளி ஒன்றாகவே

உள்ளது. இது சூக்குமமான ஆன்மாவிலிருந்து தேகம் தோன்றிற்று என்ற பொருளைத் தரும். அத்தகைய சூக்கும ஆன்மா பூமியில் இடம்பெற ஒரு சிறு மூலத்தாது அவசியமாகிறது. இவ்விதமாக இரண்டும் ஒன்றுபடாவிட்டால் தேகமில்லை என்பதை அறிய வேண்டும்.

## 2. உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பின் உத்தமனைக் காண் (11)

உடம்பை அடைந்ததனாலுண்டாகும் பயன், தேகத்தில் இறைவனைக் காண்பதே ஆகும்.

உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே
யுணர்க யுணர்வுடை யார் (12)

உடம்பினாலேற்பட்ட பயனெல்லாம் அறிவை உண்டுபண்ணு வதற்கே ஆகும். இதை அறிவுள்ளவர்கள் அறிந்துகொள்வார்களாக.

உணர்வு, அறிவு, தெளிவு, புலன், ஆன்மா, விஞ்ஞானம் என்று பல பொருள்கள் உள்ளன. இந்தத் தேகம் பலவிதமான உணர்ச்சி களைப் பெற்று மகிழ்கின்றது. இவைகளில் எது அழியும் உணர்வு, எது அழியா உணர்வு என்பதைத் தமது பகுத்தறிவினால் ஆராய்ந்து, அழியா உணர்வை அறிவதே அறிவுடையோர் செய்யவேண்டிய கடமையாகும்.

ஒருபய னாவது உடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார் (13)

உடம்பினுடைய பயனாவது இகபரத்தைக் கொடுக்கின்ற சத்தத் தின் மூலமாயறியும் சிவத்தைச் சார்வதே. அதுவே ஒப்பற்ற பயனாகும்.

சங்கரன் - சிவன்; அதாவது உயிர்களுக்கு நலங்களைச் செய்பவன் என்று பொருள்.

எங்கும் பரவி நிற்கும் இறைவனை எங்கும் பரவி நிற்கும் ஆகாயத் தாலே அறியவேண்டும். அதுவே ஒப்பற்ற நெறியாகும். இன்பம், துன்பம் முதலியவைகளைத் தம் உடம்பினால் அறிந்துகொள்ள முடிகிறது. எங்குமாய் உள்ள இறைமையை அறியக்கூடிய ஆகாயக்கூறு சிரசில் பொருந்தி அமையும். அத்தகைய நுண் சத்தத்தை அடைந்து சாதனம் செய்வதே, இவ்வுடலைக் கொண்டு அறிவுடையோர் செய்ய வேண்டிய ஒப்பற்ற பயன்தரும் நெறியாகும்.

நாத முடிவிலே நல்லான் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே

என்று திருமூலர் பாடியிருப்பதும்,

சத்தத் திறுள்ளே சதாசிவங் காட்டி

என்னும் விநாயகர் அகவலும் ஒப்புநோக்கிச் சிந்தித்தற்குரியன.

பிறப்பினாற் பெற்ற பயனாவது எல்லாம்
துறப்பதாம்தூ நெறிக்கண் சென்று (14)

பிறப்பினால் உண்டாகும் பயன், தூய வழியில் சென்று, பிணைப்புக்களை விளைக்கும் உடற்பற்றுக்களினின்றும் நீங்குவதேயாகும்.

துறவு என்பதற்கு இல்வாழ்வை ஒழித்துவிட்டிருப்பதே என்று தவறாகப் பொருள் கொள்கிறார்கள். இந்த ஒரே காரணத்தினால் தான், பிரமவித்தை, யோகவித்தை, ஞானவித்தை ஆகியன உலகில் அருகிப் போயின.

வசிட்டர், அகத்தியர், அத்திரி, காசிபர் முதலியோர் மனைவியரோடு கூடி வாழ்ந்தவர்களேயாவர். அரசியாரோடு இருந்த சனகன் பெரிய ராஜரிஷி. யாக்ஞவல்கியர் இரு மனைவிகளோடு வாழ்ந்திருந்தார். திருவள்ளுவர் வாசுகியுடன் வாழ்ந்தார். இவர்களெல்லாம் பிரமவித்தை அறியாதவர்களா? இல்லை. நான்கு ஆசிரமங்களில் எந்த ஒன்றில் இருந்துகொண்டும் பிரமத்தை அறியலாம்.

பிரமசாரி என்பவன், பிரமத்தை அறிந்து அதற்கு உரிய செயல்களைச் செய்துகொண்டிருப்பவன்.

இல்வாழ்வான் என்பவன், பத்தினியோடு கூடி யோகத்தின் மூலமாகவும், குடும்ப வாழ்வின் மூலமாகவும் கடவுளை அறிபவன்.

வானப்பிரஸ்தன் என்பவன், பத்தினியோடு கூடிப் போகம், யோகம் இவற்றுடன் பயன்கருதாச் செயலைச் செய்து ஞானத்தையடைபவன்.

சந்நியாசி என்பவன் எல்லாச் சேர்க்கைகளையும் விட்டவனாகையால் மனத்தை வசம்செய்து துரிய துரியாதீத பதங்களை அடைகிறான்.

உணர்வு சிரசில் பதிந்து அதிலே திளைத்திருத்தலே தூய நெறியாகும். அதில் நிலைபெற்று, நிலையற்ற உலகை மறப்பதே மேலான சிவத்தையடையும் நெறியாகும். இதனையே திருமூலரும்,

ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே

என்று பாடியுள்ளார்.

உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினா லுன்னியதே யாம் (15)

அறிவானது உடம்பின்றி உண்டாவதில்லை. ஆகையால் அது, உடல் உறுப்புக்களால் உற்பத்தியாவதே ஆகும்.

சிரசில் உள்ள பிரணவ சத்தியே தேகமாய், அக்கினியாய், சோம சூரியராய்ப் பிராணனாக உள்ளது. சிரசில் பிரணவ சத்தி உதிக்க, தேகத்திலுள்ள சத்திகள் நிலைமாற்றம் அடையவேண்டும். அவ்விதம்

மாறிச் சிரசை அடைந்தால், அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சோம மண்டலம் ஆகியவை ஒன்று சேர்ந்து ஒரே வடிவமாகும். அதனால் உடலைக்கொண்டு அதற்கேற்ற சாதனம் செய்யவேண்டியது அவசியமாகின்றது.

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக
ஈசனைக் காட்டு முடம்பு (16)

குற்றமற்ற, அழுக்கு நீங்கிய இலட்சியமானது மனத்திலிடத்தில் பொருந்திவிட்டால், தேகமானது கடவுளைத் தோற்றுவிக்கும்.

அறிவு பலவிதமாக விரிந்து கிடக்கின்றது. அது, உலக மயமாகவும், பல சித்திகளை உணர்த்தும் உருவ மூர்த்திகளாகவும், அகண்ட பிரமத்தை உணர்த்தும் நூல்களாகவும் விரிந்து உள்ளது. அவரவர் மன மண்டலத்தில் (உள்ளத்தில்) இருந்து, அறிவு சாதகனைத் தூண்டிக்கொண்டுள்ளது.

பாசம் எவ்விதம் பற்றிக் கொள்கிறது? அதை அகற்றும் வகை என்ன? பாசம் பற்றாத நிலை என்ன? அது எவ்விதம் இருந்துகொண்டு பாசத்தைக் கடந்துள்ளது?' என்ற வகையில் ஞான ஆராய்ச்சி செய்பவருக்கு, ஆன்மா, பாசங்களைவிட்டு, இறைவனுடன் பொருந்தி அகண்டத்தில் நிலைபெறலாம் என்பதே, மனிதன் அறியவேண்டிய மாசற்ற நுண்கல்வியாகும். சித்தர்களின் இலக்கியத்திற்குத் தோற்றமும் பாதுகாப்பும் பயிற்சியுமாக விளங்குவது இந்தப் பேரறிவை வளர்ப்பதற்குரிய நெறியே யாகும்.

ஓசையுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தா லாய உடம்பு (17)

ஐம்புல நுகர்ச்சிக்கு உரிய பொருள்களையெல்லாம் ஓசையின் வடிவிலே நிறுத்தக்கூடிய வல்லமையை, நேசத்தாலாகிய உடம்பு பெற்றுவிடுகிறது.

தூல உடலில் இருந்துகொண்டு சூக்குமமான தேகத்தை அறிவதையே "நேசத்தாலாகிய உடம்பு" என்று இந்தக் குறள் குறிப்பிடுகிறது.

உயிர்க்குறுதி யெல்லாம் உடம்பின் பயனே
அயிர்ப்பின்றி ஆதியை நாடு (18)

சீவனுக்கு எல்லா உறுதிகளையும் தருவது, தேகத்திலிருந்து உண்டாகும் கலைக்கூட்டங்களின் பயனேயாகையால், சந்தேகமில்லாமல் முதன்மையான கடவுளைப் பார்.

பிரணவத்தின் கலை விரிவுகளைக் காண்பதன் நுட்பத்தையும் அவசியத்தையும் இக்குறள் உணர்த்துகிறது.

உடம்பினாற் பெற்ற பயனாவ எல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு (19)

உடம்பினால் உண்டாகிய பயனை அடைந்த எல்லாவகையான தேக சத்திகளும், உறுதியாகக் கடவுளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவே அமைந்துள்ளன.

பிரணவத்திலிருந்தே உடம்பிற்குப் பல்வேறு சத்திகள் கிடைத்தன. ஆகையால் அச் சத்திகளை அந்தப் பிரணவத்தின் பால் செலுத்த வேண்டும்.

அன்னத்தா லாய உடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும் (20)

உணவு உண்பதனால் உண்டாகிய உடலின் பயன்கள் எல்லாம் கூடி முதல்வனாகிய சிவத்தைக் கண்டுகொள்ளச் செய்யும்.

உடம்பின் தோற்றத்திற்குக் காரணம் நாத விந்துக்கள். உடலின் ஆட்சியில் அவை இடகலை பிங்கலையாகத் தொழிற்பட்டுக் கொண்டுள்ளன. பெண்ணுடன் பொருந்திச் செய்யும் போகத்தைக் கொண்டோ, பெண்ணுடன் கூடாது செய்யும் பிந்துகலையைப் பிரிக்கும் வித்தையினாலோ, சுக்கிலம் பாதுகாக்கப்படின், சிரசின்மேல் பிரணவ தேகம் உதிக்கும். அதனால் பிரணவம் உதிக்க அன்னமய தேகம் அவசியமாகிறது.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

என்ற திருமந்திரத்தின் உட்கிடை இதுவேயாகும்.

3. சூக்கும சரீரமாகிய உள்ளுடம்பின் நிலைமை

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா
முற்றுடம்பா லாய வுணர்வு (21)

ஊன்றிப் பார்ப்பதனால் தோன்றுகிற உள்ளுடம்பில் உண்டாகிய அறிவைக்கொண்டு, யாவற்றையும் உணர்ந்துகொள்ளலாம். தூரத்தில் உள்ள பேச்சைக் கேட்கலாம்; கண்ணால் (மனக்கண்ணால்) பார்க்கலாம்.

மனிதனின் உடம்பு அறிவின் தன்மைக்கேற்ப வெவ்வேறு கோசங்களாகியும் ஒன்றாகப் பின்னிக்கொண்டும் உள்ளது. மிகத் தடித்தது அன்னமய கோசம் என்ற இத்தூல உடம்பாகும். பிராண சத்தி உள்ளும் புறமுமாக இருந்துகொண்டு தூல உடம்பை இயக்குவதால் பிராணமயகோசம் இரண்டாவது உடம்பாயிற்று. மனிதனின் கீழான எண்ணங்கள் கீழான எண்ணங்களின் தூண்டுதலின் குணகுணங்களும் என்ற காம உடலைச் (Astral body) சார்ந்துள்ளன. மேலான எண்ணங்கள் காமமற்றதாய்க் காம உடலில் உள்ளன. சுயநலப் பற்றற்ற எண்ணங்கள் முகத்தின் முன் ஒளியை உண்டாக்கிவிடும். அங்கே காணும் ஒளியில் ஒலியும் சூக்குமமாக உள்ளது. இதை அறியும் திறம்பெற்றபோது சூக்கும உலகத்தொடர்பு அமையும். அதில் காணும் காட்சிகளும் கேட்கும் ஒலிகளும் புறக்கண்ணாலும் அல்ல; புறக்காதாலுமல்ல என்பதனை அறியவும். சூக்குமமான அந்தக்கரண அறிவால் உணரப் பெறுவனவாகும்.

வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினையுடைய
வுள்ளுடம்பி னாய வொளி (22)

சரிரி என்னும் எண்ணம், பேசும் பேச்சு, செய்யும் செயல் ஆகிய காரணத்தினால் சூக்கும சரீரத்தினால் உண்டாகிய ஒளியானது, வெண்ணிறத்தையும் பொன்னிறத்தையும் பெற்ற தூல உடல் போன்று விளங்கும்.

அறிவினால் சிறப்புற்றவர்களிடம் பொன்னிற ஒளியும், நற்குணத் தினால் சிறப்படைந்தவர்களிடம் வெண்ணிற ஒளியும் சிறந்து விளங்கும்.

சென்றுண் டுவந்து திரிதரு முள்ளுடம்பு
என்றுங் கெடாத திது (23)

நுண்ணிய உள்ளுடம்பானது கருதிய இடங்களுக்குச் சென்று, அவ்விடங்களில் உள்ள நடப்புகளைக் கண்டு, மீண்டும் தூல உடம்பி னிடம் பொருந்தித் திரிந்து கொண்டிருக்கும். இப்படிப்பட்ட இந்தச் சூக்கும உள்ளுடம்பானது எந்தக் காலத்திலும் அழியாமலிருக்கும்.

மனிதர்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று மூவகைப் படுவர். உடல் அறிவை மட்டிலும் பெற்றவர் சகலராவர். உயிர் வாழும்போது தேவர்களை எண்ணி வாழ்ந்து, உயிர்விட்ட பிறகு அந் நிலை பெறுபவர் பிரளயாகலர் ஆவர். இவர்கள் உடல் அழிவின் பிறகு அகண்ட ஞானம் பெற்றவராகின்றனர். உடல் உள்ளபோதே, தேகத்தையும் தேகியையும் அறிந்து, சூக்கும தேகத்தை வசப்படுத்தி, அதில் முழு நினைவுடன் செயல்படும் ஆற்றல் கைவரப்பெற்று, தேகத்தை விட்டு வாழும் வல்லமையுடையவர் விஞ்ஞானகலர் ஆகின்றனர்.

வருபய னுண்டு மகிழ்ந்துடனா நிற்கு
மொருபயனைக் காட்டு முடம்பு (24)

உள்ளுடம்பானது வேண்டிய பயனை அடைந்து மகிழ்வதோடு, சுடரோடுங் கூடிய பிரணவத்தை நிலைத்து நிற்கும்படியான ஒப்புமை யற்ற பயனையும் வெளிப்படுத்தும்.

'நா' என்பது நாக்கு, சுடர், சொல் என்ற பொருள்களையுடையது.

மூலாதாரத்தில் நெருப்புத் தன்மையுடன் கூடிய மூலக்கனலே, தேகத்தைச் சூழ உள்ள சூக்கும தேகத்தைப் படைக்கிறது. தேகி சூக்கும தேகத்திலிருந்து உள்ளுடம்பின் பயனையும், தூய உடலின் பயனையும் அடைந்து மகிழ்கின்றது.

சூக்கும உடம்பின் அறிவு விந்து நாதமயமாக உள்ளது. இது பிரணவத்தின் சொரூப நிலையாகும். பிரணவத்தை அறிய சூக்கும தேகமே வேண்டும். அதன் வளர்ச்சிக்குக் காரணம் தூல தேகத்தில் உள்ளது. அறிஞர் பிரணவத்தை அறியத் தூல உடலைப் பயன்படுத்து கின்றனர். அறிஞரல்லாதார் சூக்கும உடலின் பயனை அறியாது, தூல உடலிலேயே மகிழ்வெய்துகின்றனர். ஓங்காரத்தை அறிந்து சாதனம்

செய்தவர் இராப்பகல் அற்ற சிதாகாயத்தில் அழியாத இன்பத்தைப் பெறுவர்.

அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் தொடர்பு (25)

ஆராய்ச்சியினால் உண்டாகிய துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் தூல உடம்பின் சூக்கும உடம்பானது, துன்பத்தோடு கூடிய பிறப்பை ஒழித்துவிடும்.

நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு (26)

தூல உடம்பு புண்ணியத்தையும் பாவத்தையும் அடைந்து திரிந்து கொண்டிருக்கும். சூக்கும உடம்பானது ஞானகர்மத்திற்கு விதையாக நிற்கும்.

உள்ளம் பின்வாழ் வனவொன் பதுமேழைக்
கள்ளவுடம் பாகி விடும் (27)

தூல உடம்பில் சம்பந்தப்பட்டுச் செயற்படும் ஒன்பது துவாரங்கள் சூக்கும சரீரத்தில் சம்பந்தப்பட்ட போது, புறச் செயல் அற்ற, மறைந்து நின்ற உடம்பாக மாறிவிடும்.

கண்கள் இரண்டு; காதுகள் இரண்டு; மூக்குத் துவாரங்கள் இரண்டு; வாய் ஒன்று; ஆசன வாய் ஒன்று; குறி ஒன்று. இவை ஒன்பது துவாரங்கள் ஆகும். சூக்கும தேகத்தில் நிலைபெறும் பிரணவ உபாசனையில், தூல உடலில் உள்ள ஒன்பது துவாரங்களும் பயனற்றவை ஆகின்றன.

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி

என்பது விநாயகரகவல்.

பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற் கோர்வித்தா
மெய்க்குள்ளா மாய வுடம்பு (28)

மேலும் மேலும் தொடர்ந்து வருகிற தேகத்திற்கு ஆதாரமாயிருக்கின்ற அந்தத் தூல உடம்புக்கு மெய்யான பகுதியாக, சூக்கும உடம்பானது ஒப்பற்ற முதலாக உள்ளது.

இந்தத் தேகத்தில் நிலையான பகுதி மெய் என்ற சூக்கும தேகமாகும். அது ஒளிமயமானது. பொய் என்றது இருள்மயமான தூல உடலை.

வாயுவினா லாய வுடம்பின் பயனேதான்
யாயுளி னெல்லை யது (29)

உடம்பின் பயனாலேயே உண்டாகிய பிராணவாயுவினால் ஆயுளின் முடிவு ஏற்பட்டிருக்கின்றது.

சூக்கும தேகம் எப்போதும் அசைந்துகொண்டுள்ளது. அதனால் தேகத்தில் பிராணனியக்கம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. சூக்கும

தேகம் தூல தேகத்தினின்றும் பிரிந்தவுடன், சூக்கும அசைவினால் தொழிற்படும் பிராணனியக்கம் தேகத்தில் நின்றுபோய்விடும்.

ஒன்பது வாசலு மொக்க வடைத்தக்கால்
அன்பதி லொன்றா மரன் (30)

ஒன்பது துவாரங்களும் ஒருமிக்க மூடப்பட்டால், ஐம்பது இரகசிய ஆதார எழுத்தொலிகளோடு ஒன்றாகப் பொருந்தியுள்ள பிரணவம் வெளிப்பட்டுச் சிவனிருப்பான்.

சிரசின் மேல் ஏகாட்சரமாக விளங்கும் பிரணவத்தில் சிவம் உள்ளது. அந்த ஏகாட்சரமே தேகத்தில் பல அட்சர சத்திகளாக, ஆதார பதுமங்களாக் உள்ளது. இவைகளை ஒன்றுபடுத்திவிடின் பிரணவம் வெளிப்படுவதில் சிவம் வெளிப்பட்டுவிடும்.

## 4. நாடி தாரணை

எழுபத்தீ ராயிர நாடி யவற்றுள்
முழுபத்து நாடி முதல் (31)

தேகத்தின்கண் எழுபத்தீராயிரம் நாடிகள் இருக்கின்றன. அந்த நாடிகளுள் முழுமையான பத்து நாடிகள் இருக்கின்றன. அவைகளே தேக அசைவுக்குக் காரணமாகும்.

பத்து நாடிகளாவன: அத்தி, அம்புடை, இடை, காந்தாரி, குரு, சங்கினி, சிகுவை, சுழிமுனை, பிங்கலை, புருடன்.

நரம்பெனு நாடி யிவையினுக் கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு (32)

நாடிகளுக்கு நரம்பென்று சொல்லப்பெறும் நாடிகளுக்கெல்லாம் பலம்பொருந்திய நரம்பானது ஒன்று இருக்கிறது.

உந்தி முதலா யுறுமுடி கீழ்மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து (33)

நாபித்தானத்தை முதன்மையாகக் கொண்டு, உச்சிவரை நாபிக்குக் கீழாகவும் மேலாகவும் பொருந்தி, அன்புடன் உறுதியாக (மேல் குறளில் சொன்ன ஒருநாடி) நிற்கின்றது.

இந்த ஒப்பற்ற நாடியே குண்டலினி என்ற ஓங்கார நாடியாகும்.

உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே

என்று அருளியுள்ளார் திருமூலர்.

காலொடு கையி னடுவிடத் தாமரை
நூல்போலு நாடி நுழைந்து (34)

கால்களோடு கைகளிலும் நடுப்பாகத்திலும் பக்கங்களிலும் ஓங்கார நாடியானது தாமரை நாளத்தின் நூல்போன்று உள் நுழைந்திருக்கின்றது.

சிவன் ஒளியணுக்களாலாயது. அவ்வொளி தேகம் முழுதும் பரவியுள்ளது. தாமரை நூல் போன்ற ஒளியின் மின்னலால் தேகியானது தேகத்தைச் செயற்படுத்திக் கொண்டும், அதன் பயனைத் துய்த்துக்கொண்டும் உள்ளது.

ஆதித்தன் றன்கதிர் போலவங் நாடிகள்
பேதித்துத் தாம்பரந்த வாறு (35)

சூரியன் தன்னுடைய கதிர்களைப் பரப்புவது போல அந்த ஓங்கார நாடிகள், கலையை வெளிப்படுத்திப் பரவி நிற்கும்.

மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பிசைந்து
பொய்யில்லை நாடிப் புணர்வு (36)

ஓங்கார நாடியின் பரப்பானது உடல் முழுவதுமாய், மற்ற நாடிகளோடு எலும்புகளைச் சேர்ந்து நிற்பதாகும். ஆகையால் பொய்யில்லை.

ஓங்காரம் உடலிலும், அதைச் சூழவும் உள்ளது. அதில் ஐயமில்லை. இது சித்தர்கள் கண்ட பேருண்மையாகும்.

உந்தி முதலாகி யோங்காரத் துட்பொருளாய்
நின்றது நாடி நிலை (37)

குண்டலி நாடியின் நிலையானது பிரணவத்தின் இரகசியமாய், நாபிக் கமலத்தை முதன்மையாகக் கொண்டு நிலைத்திருக்கின்றது.

நாடிக ளூடுபோய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடு தருமாம் விரைந்து (38)

ஓங்கார நாடிகளுடன் சென்று பிரணவத்திற்குள் நுழைய, நன்மையாகிய ஒளி உண்டாகும். அந்த ஒளியானது வேகமாய் வீடுபேறாகிய முத்தியைத் தரும்.

ஓங்காரத்தை வடிவாகக் கொண்ட நுண்ணுடலில் பார்வையும் மனமும் பதிவுற்றால், அந்தப் பயிற்சியே வீடுபேறு அளிக்கும்.

நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு (39)

பிரணவ நாடியின் பயிற்சி முறைகளைத் தெரிந்து, நெருங்கி, ஒடுங்கி, நீண்டு நிலைபெற்ற ஒளியாற்றலைத் துய்ப்பதே அறிவாகும்.

அறிந்தடங்கி நிற்குமந் நாடிக டோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம் (40)

உணர்ந்து, பார்வையும் மனமும் ஒடுங்கி இருக்கின்ற அந்த ஞானிகளிடம் பிரணவத்தின் அனைத்துக் கிளைகளிலும் சிவமானது அமர்ந்திருக்கும்.

ஓங்கார வடிவில், சிவம் நிலையான உடம்பாகவும், உடம்பைக் கடந்தும் பரவி நிற்கிறது.

## 5. வாயு தாரணை

மூலத்திற் றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண் (41)

காற்றானது வாயு உதிக்குமிடத்தில் உதித்து, குண்டலியின் உச்சியிலே இரண்டாகப் பிரிந்து, நான்கு திக்குகளிலும் பரவி ஞானப் பெருவெளியில் செல்லும்போது பன்னிரண்டு கலைகளாக வெளிப்பட்டு நிற்கும்.

மூலம் என்பது எது என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். அது அறிவுமயமான பிரணவமேயாகும். அது சிரசிலும் சிரசைச் சூழவும் உள்ளது. அதன் செயல் தேகமாக உள்ளது. பிரணவ நாடி என்பது ஒளிவடிவாய் இடபிங்கலை நாடிகளையும், பிராண அபான வாயுக்களையும் இயக்குகிறது. இடநாடி இடது பெருவிரலிலிருந்தும், பிங்கலைநாடி வலது கால் பெருவிரலிலும் உட்புகுந்தும் மூலாதாரம் சுவாதிட்டானம் இவைகளில் ஒரு பின்னலாகியும், இதயத்தில் ஒரு பின்னலாகியும், கண்டத்தின் வழியே ஒரு பின்னலாகியும், கண்களின் வழியே சென்று சிரசை அடைந்து நான்கு திசைகளிலும் பரவுகின்றது.

பிராண அபானன் என்ற வாயுக்கள் தொப்புளுக்குக் கீழும் அதன்மேலும் முறையாகச் செயற்படுகின்றன. நாடி ஒளிமயமானது. வாயுக் காற்றாக இருந்துகொண்டு தேகத்தைச் செயல்படுத்து கின்றது. பிராணன் இயக்கம் கீழ்முகங் கொண்டபோது, அபானனைத் தூண்டி, காமாதி காரியங்களுக்குத் துணைபுரிகின்றது. பிராணன் மேல் முகங்கொண்டபோது கீழுள்ள நிலைகள் மாற்றமடைகின்றன. அப்போது அது சோம மண்டலத்தில் சிறப்பாக விளங்குகிறது. பூர்வ நிலையில் அக்கினி மண்டலம் சிறப்பாக உள்ளது. இப்படி இருக்கும் போது சோம மண்டலம் சிறப்புறுவதில்லை. அதனால், எந்த ஒரு அபானன் (நீரை முகமாக உடையவன்) காம வாயுவாக உள்ளதோ அதுவே, மேல்முகங்கொண்டு சிரசையடைந்து, விரிவு நிலையைப் பெற்று, நான்கு திக்குகளிலும் பரவுகின்றது. அப்போது சிரசின்மேல் உள்ள பன்னிரண்டு விரற்கடையும் ஒளிபெறுகின்றது.

இடைபிங் கலைகளி ரேசக மாற்றில்
அடையு மரனா ரருள் (42)

இடகலையிலும் பிங்கலையிலும் வெளிவிடும் தந்திரத்தை இட பிங்கலைகளினால் மாறிமாறிச் செய்தால், சாதகனிடத்துப் பரசிவத் தின் அருளானது வந்து சேரும்.

இடபிங்கலைகள் என்பன, இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் உள்ள சந்திரன் சூரியன் என்ற இரு திருவடிகளைக் குறிக்கும். திருவடி கள் என்பது ஒளிபொருந்திய கண்களேயாகும் என்பது சித்தர்களின் ஞான இரகசியமாகும்.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணா ரமுதினைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே

என்று திருமூலர் இதன் சிறப்பை விளக்குகின்றார்.

அங்குலியான் மூடி முறையா லிரேசிக்கிற்
பொங்குமாம் பூரகத்தி னுள் (43)

விரல்களினால் மறைக்கப்பட்டிருப்பதை, குரு சொல்லும் முறையின்படி திறந்து கலக்க வைத்தால், பூரகஞ் செய்யும்போது கலைகள் பொங்கி எழுந்து வரும்.

இதை, சண்முகி முத்திரை, யோனி முத்திரை என்று பலவாறாகக் கூறுவர்.

இரண்டு காதுத் துவாரங்களிலும் கட்டைவிரல் நுனியைச் செருகி, சிறு விரல்களையும் மோதிர விரல்களையும் எதிர்முறையில் மாறி இரு திருவடிகளிலும் பதித்தால், நடுவிரல் சுட்டுவிரல்கள் பொருந்தும் இடத்தில் ஒளிதோன்றும். இவ்வொளி உள்ளபோது சிவாயநம என்ற பஞ்சாக்கரத்தைச் செபித்துப் பழகில், சில நாளில் விரல்களின் சாதனமின்றியே ஒளி தோன்றிவிடும். இது சித்தர்களின் யோகப் பயிற்சிகள் பலவற்றுள் ஒன்றாகும்.

எண்ணலி யூழி யுடம்பா யிரேசிக்கி
லுண்ணிலமை பெற்ற துணர்வு (44)

கணக்கற்ற தடவை உடலின் கண் பொருந்தி, உடலை அழிப்பதாய் உள்ளதை, வெளிப்படும்படி செய்தால் உடம்புக்குள்ளே நிலைத்து நிற்கக்கூடிய பிரணவ மெய்யுணர்வு வெளியாகும்.

மயிர்க்கால் வழியெல்லா மாய்கின்ற வாயு
வுயிர்ப்பின்றி யுள்ளே பதி (45)

உசுவாச நிசுவாசமல்லாத மயிர்க்கால் வழியாக நாசமாகின்ற பிராண அபானனுக்குக் காரணமான இடகலை பிங்கலைகளை முற்றிலும், முகத்தின் முன்தோன்றும் பிரணவ கமலத்தினுள்ளே நுழைத்துவிடு.

உயிர்ப்பின்றி என்பதன் உட்கருத்து மூச்சு சாதனமல்ல என்பதாகும். மயிர்க்கால் தோறும் பாய்வது பிரணவ கலைகளாகும். அவ்விதம் போகாது தடுத்தால் ஒளி உடல் அமையும்.

இரேசிப் பதுபோலப் பூரித்து நிற்கிற்
தராசுமுனை நாக்கதுவே யாம் (46)

சூரிய சந்திரர்களைக் கலக்க வைக்கும் செயலைப்போல் பூரிப்பை அடையும்படி பூரகத்தைச் செய்து நிற்கில், பிரணவ உச்சி தராசுபோல் சமம் பெற்று நிற்கும்.

பூரகம் என்றால் பூரிப்பையுடையது. பூரிப்பை அடைந்தால்தான் பிரணவம் மேல் நோக்கி அசையும்.

கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தானோக்கிற்
றும்பிபோ னிற்குந் தொடர்ந்து (47)

பிரணவ ஆகாயத்தினுள்ளே கும்பகம் என்னும் தந்திரத்தினால் சிவத்தைக் குறித்துச் சாதகன் மேல் முகத்தைப் பார்ப்பானேயானால், இடநாடிகள், பிங்கலை நாடிகள் பார்வையோடு தொடர்ந்து, யானைத் துதிக்கையைத் தூக்கினதுபோல் நிலைத்து நிற்கும்.

இரேசக பூரக கும்பக மாற்றிற்
றராசுபோ னிற்குந் தலை (48)

இரேசக, பூரக, கும்பகமாகிய இந்த முறையில் இடகலை, பிங்கலைகளை மாறிமாறிச் செய்தால், பிரணவ உச்சியானது துலாக்கோலைப் போல நின்றுவிடும்.

வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கி
வாயுட் பெருக்கமுண் டாம் (49)

இட பிங்கலை நாடிகளின் செயலுக்கேற்ப, பிராண அபான கதிகள் மாற்றமடைகின்ற உண்மையை அறிந்து, பிரணவத்தில் இட பிங்கலை ஒன்றுபடுவதால் பிராண அபானனியக்கம் பொருந்தி, பிரணவத்தில் சார்ந்து நின்றால், ஆயுளை நீட்டிக்கலாம்.

போகின்ற வாயு பொருந்தில் சிவமொக்குந்
தாழ்கின்ற வாயு அடக்கு (50)

கீழ்முகத்தில் உலவுகின்ற அபான வாயுவை, கீழ்முகம் செல்லாமல் தடுத்து மேல்முகம் கொண்டு மேல்சென்று உலவும் பிராண வாயுவைச் சேமித்தால் சிவத்துக்கு ஒப்பாகும்.

## 6. அங்கி தாரணை

அந்தத்தி லங்கி யழல்போலத் தானோக்கிற்
பந்தப் பிறப்பறுக்க லாம் (51)

மூலக்கனலை மேலெழும்படி செய்து, சுடரைப் போல் (நெருப்பு ஒளிபோல்) சாதகன் பார்க்கில், பிறப்பைத் தருகின்ற பாசத்தை அறுத்துவிடலாம்.

மூலாதாரத்தில் மனிதனிடம் பார்த்திபாக்கினி என்ற அக்கினி உள்ளது. பார்த்திபாக்கினி, விறகினிடம் நெருப்பு மறைந்துள்ளது போல் உள்ளது. அதுவே அரணி கொண்டு கடையப்பட்டபோது வெளிப்படுகின்றது. காட்டில் மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் காட்டுத் தீ பரவிக் காட்டையே அழித்துவிடுகிறது. இதை 'frictional energy' என்று கூறுவர். காமாக்கினி காமத்தை நினைத்தபோது உண்டாகிக் காமத்தை நாடுகிறது. அது கீழுள்ள அக்கினியாக உள்ளது. ஞானத்தால் தன்னையுணர்ந்தபோது பிரணவ ஒளியாற்றல் முகத்தின் முன் செவ்வொளியாக விளங்கும். அச்செவ்வொளி மேலுள்ள மண்டலங்களை விளக்குவதுடன் பிறவிக்குக் காரணமான இருளை மாற்றிப் பாசம் அறுக்கிறது.

உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுஊறிற்
கள்ள மலமறுக்க லாம் (52)

தேகத்தினுள்ளும் தேகத்தின் வெளியிலும் ஒரே காலத்தில் பிராணனுக்குப் பலத்தைக் கொடுக்கும் அக்கினிச்சுடர் ஊறுமானால், வஞ்சனையையுடைய ஆணவம், கன்மம், மாயையாகிய மலங்களை ஒழிக்கலாம்.

கூத்தபிரானின் இடக்கையில் உள்ளது எரியும் அக்கினிச்சுடர். அதன் விளக்கம், சந்திர கலையின் அக்கினிச்சுடர் சிரசைக் கடந்த போது, தேகத்திற்குக் காரணமான மாயையின் இருள் அழிக்கப்படு கிறது என்பதாகும். கொழு என்பதன் நுட்பம் இதுவே.

எரியுங் கழல்போல வுள்ளுற நோக்கிற்
கரியுங் கனலுருவ மாம் (53)

ஒளி வீசிக்கொண்டிருக்கும் திருவடிகளைப் போல, உள்ளே மனமும் பார்வையும் பொருந்தப் பார்த்தால், கரிய நிறமான இருட்டும் நெருப்பின் வடிவமாகும்.

பிரணவ ஒளியை உற்றுநோக்கி, அதில் மனமும் பதிவுபெறில் உடலின் உற்பத்திக்குக் காரணமான மாய இருள் கெடும்.

உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுவூறில்
வெள்ளங்கி தானாம் விரைந்து (54)

பிரணவத்திற்குள் புகுந்த அக்கினி மயமாயிருக்கும் நாத கலையை முழுமையர்கப் பெற்று விளங்கினால், கீழ்முகத்திலுள்ள பிந்து கலையானது வேகமாக மேல் முகத்தில் பொருந்தி நிற்கும்.

மூலாதாரமும் சுவாதிஷ்டானமும் செயற்பட்டு விந்து நீக்கம் அமைகிறது. சிரசில் ஒளிகாணும்போது, மூலாதாரத்தின் கதி மேல் முகமாகி விடுவதால் விந்துநீக்கம் இல்லாது, அதன் மாற்றத்தால் சிரசில் நாதமுழக்கம் உண்டாகிறது. நாத எழுச்சியை நன்றாகக் கவனித்தால் விந்து வீணாகாது. விந்தினை வீணாக்குபவர்கள் நாத எழுச்சியை உணர முடியாது.

உந்தியி னுள்ளே யொருங்கச் சுடர்பாய்ச்சி
லந்தி யழலுருவ மாம் (55)

நாடிப் பிரதேசத்தில் முழுமையாக அக்கினி கலையை வீசும்படி செய்தால், இராக்காலமானது அக்கினியின் பிரகாசமாகும்.

மணிபூரகம் என்பது உந்தி மண்டலத்திற்குப் பெயர். இங்கிருந்தே காமம் தூண்டப்பட்டபோது அபானன் சிறப்பாகத் தொழிற்படுகிறது. பிரணவ யோகத்தில் அபானன் வழி கீழ்முகங் கொள்ளாது, பிராணனுடன் பொருந்தி மேல்முகங்கொண்டு ஒளிமுகத்தின்முன் தோன்றுகின்றது. அந்த ஒளி வளம் பெற்றால் இரவிலும் முகத்தின் முன் ஒளி நிற்கும்.

ஐயைந்தும் ஆய அகத்துள் எரிநோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம் (56)

அரசனாகிய பிரணவமும் பஞ்சேந்திரிய சக்திகளும் சேரும்படி, பிரணவ நடுவீட்டில் அக்கினியை எழுப்பிப் பார்த்தால் பயனற்ற ஓசை, ஊறு, காட்சி, சுவை, நாற்றம் ஆகிய ஐந்தும் அறியும் கருவிகளான காது, தோல், கண், நாக்கு, மூக்கு இவைகள் ஐந்தும் (சாதகனுக்கு) வெளியில் ஒழிந்து விடும்.

பிரணவம் சிறப்புற்றபோது புறக்கருவிகள் தொழிலற்றுவிடும்.

ஐம்பது மொன்று மழல்போலத் தானோக்கில்
உம்பர் ஒளியாய் விடும் (57)

ஐம்பத்தொரு ஒலியெழுத்துக்களால் கூறப்படும் இடங்களையும் சத்திகளையும் அக்கினியைப் போலச் சாதகன் பார்த்தால், தேவர் களுடைய ஒளியாக மாறும்.

தூண்டுஞ் சுடரைத் துளங்காமற் றானோக்கில்
வேண்டுங் குறைமுடிக்க லாம் (58)

ஞானச் சாதனையினால் தூண்டப்படும் மூலாக்கினியை அசை வில்லாமல் சாதகன் பார்க்கில், இச்சிக்கும் காரியங்களைச் சித்தி செய்துகொள்ளலாம்.

உள்ளத்தால் அங்கி யொருங்கக் கொழுவூறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து (59)

மனத்தினால் மூலாக்கினியை மெதுவாக அவசரப்படாமல் சேர்த்து, சுடரைப் பாய்ச்சினால் விரைவாக வீடுபேறு கிட்டும்.

ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு (60)

பிரகாசத்தோடுங் கூடிய அக்கினிக் கொழுந்தை அசைவு இல்லாமல் உறுதியுடன் பார்த்தால், அஞ்ஞான இருளை ஒழித்துப் பிரகாசிப்பது பிந்துகலையான வெண்ணிற ஒளியாகும்.

## 7. அமுத தாரணை

அண்ணாக்கு தன்னை யடைத்தாங் கமிர்துண்ணில்
விண்ணோர்க்கு வேந்தனு மாம் (61)

ஓங்காரமாகிய மேல்பாகத்தில் உள்ள நாக்கின் மத்தியில், சாதகன் தற்பார்வை, மனம் இரண்டையும் சேர்த்துநின்று, அந்த இடத்தில் சுரக்கும் அமுதத்தை உண்பானேயானால் தேவர்களுக்கு அரசனாக இருப்பான்.

ஈரெண் கலையி னிறைந்த வமிர்துண்ண
பூரண மாகும் பொலிந்து (62)

பதினாறு கலைகளையுடைய சந்திரனிடம் பூர்ணமாயிருக்கிற அமுதத்தை உண்டால், உண்ட தேகமானது ஒளியோடு விளங்கி, தேகம் அடைய வேண்டியதை முழுமையாக அடைந்துவிடும்.

ஓங்கார மான கலசத் தமிர்துண்ணில்
போங்கால மில்லை புரிந்து (63)

ஞானப் பயிற்சியினால் சேமித்த பிரணவமாகிய அமுதத்தை உண்டால் சாகுங் காலம் கிடையாது.

சாதகன் பிரணவத்திலுள்ள ஒளியினில் ஆழ்ந்திருந்தால் மரண மில்லை.

ஆனா கலசத் தமிர்தை அறிந்துண்ணில்
போனகம் வேண்டாமற் போம் (64)

சாதனா பலத்தால் உண்டாகிய சகஸ்ர தளத்தில் உள்ள அமுதமாகிய ஒளியைக் கண்டுபிடித்து உட்கொண்டால் உணவில் விருப்பமில்லாமல் போய்விடும்.

ஊறு மமிர்தத்தை யுண்டி யுறப்பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம் (65)

உண்டியில் விருப்புற்றவன் உண்பதுபோலச் சிவப்பேறாகிய பிரணவ உச்சியை மனமும் கண்ணும் பொருந்தும்படி பார்த்தால் அதிலிருந்து சிவவொளி ஊறும். அவ்வொளியைக் கொண்டால், பிறவியை ஒழிக்கலாம்.

ஞான வொளிவிளக்கா னல்ல வமிர்துண்ணில்
ஆன சிவயோகி யாம் (66)

ஆன்ம ஒளியின் பிரகாசத்தால் நன்மையைக் கொடுக்கத் தகுந்த அந்த அமுதத்தை உண்டால், அவ்வமுதத்தின் தன்மையால் சிவராச யோகியாவான்.

மேலை யமிர்தை விளங்காமற் றானுண்ணில்
காலனை வஞ்சிக்க லாம் (67)

துவாத சாந்த வெளியிலிருந்து இறங்கிவரும் அமுதத்தை, தேகவுணர்வு பொருந்தாமல் சாதகன் உண்டால் எமனை ஏமாற்றி விடலாம். மரணமற்று வாழலாம்.

காலன் அனுக்கங் கலந்த வமிர்துண்ணில்
ஞான மதுவா நயந்து (68)

உண்மைப் பொருளான பிரணவ உச்சியில் பிராண அபான வாயுக் களும், ஆன்மக்கனலும் கலப்பதால் உண்டாகும் அமுதத்தை உண்டால், அதன் குணத்தால் அமுதமய ஞானமாக அது பொருந்தும்.

எல்லையி லின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியே யாம் (69)

பிரணவ உச்சியிலுள்ள இன்பத்தைக் கொடுக்கும் அமுதத்தைச் சாப்பிட்டு ஆனந்தத்தில் ஒன்றியிருந்தால், தொன்மையாகிய உண்மை வடிவமான ஆன்ம ஒளியே ஆகும்.

ஆன்மா இயல்பில் ஒளிமயமானதானாலும் தேகப்பற்றால் இருள்சூழ் திரையால் மூடப்பெற்றுள்ளது. இருளகன்ற போது இயல்பான ஒளியுடன் விளங்கும்.

நிலாமண் டபத்தி னிறைந்த வமிர்துண்ணில்
உலாவலாம் அந்தரத்தின் மேல் (70)

சிரசின் மேலுள்ள சோம மண்டலத்தில் தேங்கியிருக்கின்ற அமுதத்தை உண்டால் வானத்தில் கமனஞ் செய்யலாம்.

## 8. அருச்சனை—வழிபடும் முறை

மண்டலங்கள் மூன்று மருவ வுடனிறுத்தி
அண்டரனை யர்ச்சிக்கு மாறு (71)

அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய இந்த மூன்றையும் ஒன்றோடொன்று இயையும்படி நிறுத்துவதே கண்ணிலுள்ள சிவத்தைப் பூசிக்கும் வழியாகும்.

ஆசனத்தைக் கட்டி யரன்றனை யர்ச்சித்துப்
பூசனைசெய் துள்ளே புணர் (72)

மூலவாயு மேலெழும்புமாறு ஆகுஞ்சனத்தைச் செய்து, அதனால் மேலெழும்பும் அக்கினி சூரிய சோம மண்டலங்களை ஒன்றுபடுத்தி, உள்ளிருக்கும் சிவத்தை அர்ச்சனை செய்வாயாக.

ஆகுஞ்சனம் என்பது மூலாதாரம் பொருந்திய மலத்துவாரத்தைச் சுருக்குதலுக்குப் பெயர். சிவமும் சத்தியும் அக்கினித் தலத்தில் கரந்துறைகின்றனர்.

ஒரு நெல்விதையைப் பூமியில் போட்டுத் தண்ணீர் பாய்ச்சினால் அது பல தானிய மணிகளை உற்பத்திசெய்து கொடுக்கிறது. அது போல் பலகோடி தடவை ஆகுஞ்சனம் செய்வதால், மூலாதாரத்தில் உள்ள சிவசத்தி சிறப்பினைப் பெற்றுப் பஞ்ச பூதங்களையும் சோம சூரிய மண்டலங்களையும் கடந்து, ஆன்ம ஒளியை அடைந்து சிறப்புறும்.

உள்ளமே வீடாமுணர்வே சிவலிங்கந்
தெள்ளியர் அர்ச்சிக்கு மாறு (73)

தெளிவடைந்த அறிவுடையோர் மனத்தையே பீடமாகவும், அறிவையே சிவலிங்கமாகவும் வழிபடுவர்.

ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமுற வர்ச்சிக்கு மாறு (74)

ஆறாதாரங்களுக்கும் ஆதாரமான சுழுமுனை நாடியில் ஏகமாய் விளங்கும் சிவ உருவத்தைத் தெரிந்துகொண்டு அர்ச்சிப்பதே ஞான வழியாகும்.

ஆகுஞ்சனத்தால் மூலவாயுவை எழுப்பி, ஆக்ஞையைத் தியானம் செய்வதில் பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவம் என்ற பஞ்சமூர்த்திகளும் ஒன்றுபட்டுச் சிவனுருவான ஒளியாக மாறுகின்றனர். சிவம் என்பது எல்லா மூர்த்திகளையும் தன்னுள் அடக்கிக் கொண்ட ஒரே வடிவாகும்.

பூரித் திருந்து புணர்த்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு (75)

இருகண் பார்வையையும் சேர்த்து இருந்து குவித்துப் பூரகஞ் செய்து, அதனால் வெளிப்பட்ட சிவ உருவத்தைச் சிரசின்மேல் வெளிப்பட்ட இடத்தில் அர்ச்சனை செய்வது சித்தர்களின் வழியாகும்.

விளக்குறு சிந்தையால் மெய்ப்பொருளைக் கண்டு
துளக்கற வர்ச்சிக்கு மாறு (76)

தெளிவுபெற்ற மனத்தினால், அசைவின்றித் தேகத்தில் விளங்கும் மெய்யான சிவ பரஞ்சுடரைப் பார்த்து அருச்சிப்பதே ஞான முறையாகும்.

பிண்டத்தி னுள்ளே பெயரா திறைவனைக்
கண்டுதா னர்ச்சிக்கு மாறு (77)

தேகத்தினுள்ளே சிவனைப் பார்த்த பிறகு அதை மறைய வொட்டாது செய்துகொண்டு அருச்சனை செய்வதே ஞானிகளின் வழிபாடாகும்.

மந்திரங்க ளெல்லா மயங்காமல் உண்ணினைந்து
முந்தரனை யர்ச்சிக்கு மாறு (78)

முதலில் இரகசியப் பொருள்களைக் குறிப்பிடுவதற்கேற்பட்ட எல்லா மந்திரங்களிலும் மயங்காமல், சந்தேகங்களை ஒழித்து, அவை குறிப்பிடும் தந்திரத்தை மனத்தில் வைத்து, அதனால் வெளிப்பட்ட சிவனை அர்ச்சிப்பதே முறையாகும்.

மந்திரங்கள் சொற்களாயினும் சங்கேதக் குறிகொண்டு அது குறிக்கும் இடத்தை அறிந்தாலொழிய வெறும் உச்சரிப்பு மட்டும் பலன் தராது.

பேராக் கருத்தினால் பிண்டத்தி னுள்ளிணைந்
தாரா தனைசெய்யு மாறு (79)

தேகத்தில் உள்ள கடவுளை நினைந்து இடைவிடாத கருத்தோடு வணங்கும் திறமே ஞான வழியாகும்.

அகார ஓகார சிகார நடுவாய்
வகார மோடாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஒகார முதல்வன் உகந்துநின் றானே

என்பார் திருமூலர்.

அகரமாகிய இடக் கண்ணையும், உகரமாகிய வலக் கண்ணையும் பொருத்தும் வகையில் உண்டாகும் சிகாரமான ஒளியுடன் வகாரத்தால் குறிக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, அபான வாயுவுடன் சேர்த்து, சிகாராதி பஞ்சாக்கரம் குறிப்பிடும் தோளுக்கு மேல் உள்ள ஒளியை நோக்கில், பிரணவத் தலைவனான சிவம் வெளிப்படுவான் என்பது கருத்து.

உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்சுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு (80)

மனத்துக்குள்ளே சாதகன் மென்மையாக அவசரமின்றி, மனமும் பார்வையும் ஒன்றுபடும்படி ஒளிச்சுடரை அவ்விடத்தில் கண்ணாற் காணுதலே வழிபாடாகும்.

இந்தப் பத்துக் குறள்களிலும் சித்தர்கள் வழிபடுகின்ற உள்ளொளி வழிபாடு விளக்கம் பெறுகிறது.

௩. உள்ளுணர்வு

அறிவுருவாகிய ஓங்காரத்தின் ஆற்றலைக் கொண்டு யாவற்றையும் அறியுந்தன்மை.

எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை
உண்ணிலைமை பெற்ற துணர்வு (81)

தவத்தின் மூலமாய்க் கணக்கற்ற முறை தேகத்தைக் கடந்து பிரணவத்தின் நடுவில் சிவத்தைத் திரத்தன்மையுடன் அடைவதே அறிவின் ஆற்றலாகும்.

பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம் (82)

அறிவானது பலமுறை பழகிச் சிவத்தை ஒளிரச் செய்வதே ஞான நலமாகும்.

எண்ணற் கரிய வருந்தவத் தாலன்றே
நண்ணப் படுமுணர்வு தான் (83)

அறிவானது வேறு விதத்திலல்லாமல், எண்ணுதற் கரிதாகிய அருமையான தவத்திலேதான் பொருந்தி நிற்க வேண்டும்.

இதுவே பிராண உபாசனை எனப்படும்.

முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெறுமுணர்வு தான் (84)

முற்பிறவியில் பெற்ற உடம்பில் முயன்ற தவத்தினால் விளைந்த ஞானாக்கினியால், பின்னர் வந்த இப்பிறவிஅறிவானது முழு ஆற்றலை அடையும்.

காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல் (85)

தேகம் நிலையற்றது என்பதை அறிந்த பயனே அல்லவா, இடைவிடாது அறிவை அடைய முயலுதலாகும்.

பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்
கண்டங் குணர்வு பெறல் (86)

பழைய பிறவிகளில் அமைந்த மூலவித்தின் பயனே, அறிவைப் பார்த்து, பிரணவ உச்சியில் உள்ள ஆற்றலை அடைவதாகும்.

பழைய பிறவிகளில் சிந்தனையின் திறம் எவ்வளவு வளர்ந்துள்ளதோ அதற்கேற்பவே இப்பிறவியில் மூளையின் திறமும் வினைப்பயனும் கூட்டுவிக்கும்.

பேராத் தவத்தின் பயனாம் பிறப்பின்மை
ஆராய்ந் துணர்வு பெறின் (87)

ஆராய்ச்சியின் மூலமாக அறிவைப் பெற்றால், இடைவிடாத ஞானசாதனை ஏற்பட்டுப் பிறவித்தொடர் முடிவுறும்.

ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு (88)

ஞானத்தாலுண்டாகிய தேகத்தின் பயன்தான், மௌனம் என்ற பிரணவத்தால் ஏற்பட்ட அறிவு.

ஆதியோ டொன்று மறிவைப் பெறுவதுதான்
நீதியாற் செய்த தவம் (89)

சிவத்தொடு பொருந்தும் பிரணவத்தை அடைவதே உறுதி பயக்கும் தவமாகும்.

காடு மலையுங் கருதாத் தவஞ்செய்தால்
கூடு முணர்வின் பயன் (90)

உடம்பின்கண்ணுள்ள அஞ்ஞான தத்துவங்களின் கூட்டுறவான காடுகளையும், பிரணவம் விளங்கும் சிரசான மலையையும், அவற்றின் குணங்களையும் சிந்தித்து, தவமாகிய ஞானத்தை மேற்கொண்டால் அறிவினுடைய பயன் கிட்டும்.

பிரணவ சொரூபத்தை அறியவும் அதை மறைத்துக் கொண்டிருக்கும் அஞ்ஞான தத்துவங்களைப் போக்கவும் எண்ணி, ஞானப் பயிற்சியைச் செய்தால் அறிவின் பயன் வெளிப்படும்.

## 10. பத்தியுடைமை

பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தானோக்கில்
முத்திக்கு மூல மது (91)

சிவத்தின் மீது பேரன்பு கொண்டு, சிவம் விளங்கும் பிரணவத்தைச் சார்ந்து, ஞானம் பயில்கிற மாணவன் அகப்பார்வையை வளர்த்துக்கொண்டால் விடுபேறு அடையலாம்.

பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவசிந்தை யால் (92)

பிரணவத்தின் அகமுழக்கங்களை எழுப்பியும், சித்தர்களின் யோக முறையால் சிவவொளி உதிப்பதைக் கண்டும், பல தடவைகளிலும் மனத்தை அதில் ஒன்றச் செய்து, சிவனை நாடித் தேடுவதே சன்மார்க்கமாகும்.

அன்பா லழுது மலறியும் ஆள்வானை
யென்புருகி யுள்ளே நினை (93)

மனிதர்களை ஆட்கொள்ளும் சிவத்தை அன்பினால் அழுதும் பதைபதைத்தும், எலும்பு உருகும்படி உள்முகத்தில் சிந்தனை செய்வாயாக.

**பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து**
**நேசத்தா லீசனை நாடு** (94)

சிவத்தை ஆராதனை செய்து, அவனது புகழை நினைந்தும், மனத்தை ஒருமைப்படுத்தி, பார்வையோடு பொருந்திச் சிவத்தைக் கண்டு தெளிவாயாக.

மனமும் பார்வையும் ஒன்றுபடுவதில்தான் சிவத்தைக் காண முடியும்.

**கண்ணா லுறப்பார்த்துக் காதலாற் றாள்நோக்கில்**
**உண்ணுமே ஈச னொளி** (95)

பரசிவத்தின் ஒளியை அகக்கண்ணால் கண்டால் அது அகவிருளைச் சாப்பிட்டுவிடும்.

**நல்லானைப் பூசித்து நாத னெனஉருகில்**
**நில்லாதோ வீச னிலை** (96)

நலந்தரும் சிவத்தை ஞானவழியில் பூசித்துத் தலைவன் எனக் கொண்டு, அன்பைச் செலுத்தினால் நிலையாக ஈசன் தங்குமிடம் நிலைத்துவிடும். இதில் ஐயம் இல்லை.

**அடியார்க் கடியரா யன்புருகித் தம்முள்**
**படியொன்றிப் பார்த்துக் கொளல்** (97)

திருவடிகளையுடைய சிவத்துக்கு, அந்தத் திருவடிகளைக் கொண்டு ஞான வழிபாடு செய்பவர்கள், ஆனந்த வெள்ளம் புரளத் தங்கள் உடலில் ஆதாரமாகிய நிலைகளில் குறைவுபடாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

**ஈச னெனக் கருதி யெல்லா வுயிர்களையும்**
**நேசத்தால் நீநினைந்து கொள்** (98)

நீங்கள் எல்லா உயிர்களையும் இறைவனின் வடிவம் என்று எண்ணி அன்பினால் மனத்தில் வையுங்கள்.

**மெய்மயிர் கூர விருப்புற்று வேர்த்தெழுந்து**
**பொய்மையில் ஈசனைப் போற்று** (99)

அன்புடன் மயிர்க்கூச்செறிய வியர்வை உண்டாகும்வரை கலைகளை எழுப்பி, பொய்யற்ற மெய்ப்பொருளாகிய சிவத்தை வழிபடுவாயாக.

**செறிந்தறிந்து நாடிப்பின் செவ்விதர யுள்ளே**
**அறிந்தரனை யாய்ந்து கொளல்** (100)

திருவடிகளை ஒன்றோடொன்று பொருந்தும் வகையில் சேர்த்து, அதனாலுண்டாகும் சிவத்தை உணர்ந்து, அதையே குறிக்கோளாகக் கொண்டு, பிறகு உள்ளுக்குள்ளே அழகியதாய்ச் சிவத்தை அறிந்து,

அதை மூடியிருக்கும் இருளை நீக்கிப் பேரின்பம் துய்ப்பதே, மாணவர் களுக்குச் சித்தர்கள் எடுத்துச் சொல்லும் அடிப்படைக் கல்வியாகும். இதையே அவ்வையார் இந்த முதலாவது பகுதியாகிய வீட்டுநெறிப் பாலின் இறுதிக் குறளிலே அழுத்தமாகக் கூறி முடிக்கிறார்.

ஞானம் பயில்கின்ற எல்லா மாணவர்களும் தங்கள் பாதையிலே முன்னேறிச் செல்லும்பொழுது ஒருபோதும் மறந்து விடாமல், எப்போதும் உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய பேருண்மை இது என்பதால், வீட்டு நெறிப்பால் இதனை நினைவூட்டி முடிவு பெறுகிறது.

இனி, இதையடுத்து அவ்வையார் தமது 'திருவருட்பால்' என்னும் இரண்டாவது அதிகாரத்தைத் தொடங்குகிறார். உடம்பைக் கொண்டு, வீட்டுநெறியை நாடி, எத்தகைய பயிற்சிகளை ஒரு மாணவன் செய்தாலும், அவனுடைய சாதனைகளுக்குத் திருவருள் துணை செய்தால் அன்றி, ஞான அனுபவம் கைகூடாது. சித்தர்களின் இந்த அனுபவ அறிவை, இந்த அதிகாரம் விரிவாக விளக்குகிறது. இனி, அந்தப் பாடல்களைப் பார்க்கலாம்.

★

## 2. திருவருட் பால்

### 1. அருள் பெறுதல்

அருளினால் அன்றி அகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம் (101)

திருவருளினால் அல்லாமல் உடலுக்குள் அறிவாகிய பிரணவ சொரூபமானது உண்டாவதில்லை. அருள் விலாசத்தால் மும்மலங் களை ஒழிக்கலாம்.

இருளைக் கடிந்திடும் இறைவன் அருளால்
தெருளும் சிவசிந்தை யால் (102)

சிவத்தைப் பற்றிக்கொண்டு நிற்கும் ஒருமுகப்பட்ட மனத்தினால், இப்பொழுது மாயையாகிய இருட்டை நீக்கிவிட, பரமசிவத்தின் திருவருளால் சிவகலையானது வெளிப்பட்டுச் சேர்ந்து நிற்கும்.

வாய்மையால் பொய்யா மனத்தினால் மாசற்ற
தூய்மையாம் ஈசன் அருள் (103)

சத்தியத்தினாலும், உடல் பற்றிய சிந்தனையற்ற மனத்தினாலும் குற்றமில்லாத சிவ சத்தியானது தூய்மையாகும்.

சிவகலைகள் என்பதும், சிவசக்தி என்பதும் ஒருபொருளே தரும்.

ஒவ்வகத்துள் நின்ற சிவனருள் பெற்றக்கால்
அவ்வகத்துள் ஆனந்த மாம் (104)

ஓங்காரமாகிய பிரணவத்திற்குள் நிலைபெற்றுள்ள சிவகலையை அடைந்தால், அந்தச் சிவகலையில் ஆனந்தமானது உண்டாகும்.

உன்னுங் கரும முடிக்கலாம் ஒள்ளிதாய்
மன்னும் அருள்பெற்றக் கால் (105)

உள்ளே பொருந்தும்படி, ஒளிமிக்கதான சிவகலையை அடைந்தால் நினைக்கின்ற செயல்களை முடித்துக் கொள்ளலாம்.

எல்லாப் பொருளும் முடிக்கலாம் ஈசன்றன்
தொல்லை யருள்பெற்றக் கால் (106)

சிவனுடைய ஆதியருளாகிய சிவகலையை அடைந்தால், உறுதிப் பொருள் நான்கையும் முடித்துக்கொள்ளலாம்.

சிந்தையுள் நின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாசம் அறும் (107)

பிரணவத்தில் விளங்கும் அருட்கலையை அடைந்தால், மனத்தின்கண் நிலைத்துப் பந்தித்துக் கொண்டிருக்கும் இருளானது நீங்கும்.

பந்தித்துக் கொண்டுள்ள பாசத்தை அறுக்க ஒரே வழி, பிரணவத்தில் உள்ள அருட்கலைகளை அடைவதே.

மாசற்ற கொள்கை மதிபோலத் தான்தோன்றும்
ஈசன் அருள்பெற்றக் கால் (108)

சிவனருளை ஒருவன் அடைந்தால் குற்றமில்லாத, அடைய வேண்டிய பொருளானது சந்திர கலையின் ஒளியைப் போலக் காணப் பெறும்.

ஆவாவென் றோதி யருள்பெற்றார்க் கல்லாது
தாவாதோ ஞான வொளி (109)

பிரணவ உதிப்புக்குக் காரணமான அகரமாகிய சிவகலை வெளிப்படவேண்டி, அதற்கு உரிய சாதனையைத் தக்கோர்பால் கேட்டறிந்து பயின்று அருட்கலையை வெளிப்படச் செய்து கொண்டவர்களுக்கன்றி, பிரணவமாகிய ஞான ஒளி எழாது.

ஓவாச் சிவனருள் பெற்றால் உரையின்றித்
தாவாத இன்பம் தரும் (110)

நீங்குதலற்ற சிவ அருளை அடைந்தால், வேறொரு கல்வி இல்லாமலேயே மறைதலற்ற இன்பத்தை அடையலாம்.

## 2. நினைப்புறுதல்

கருத்துறப் பார்த்துக் கலங்காமல் உள்ளத்(து)
இருத்திச் சிவனை நினை (111)

மனம் பொருந்துமாறு, பிரணவ ஒளியைப் பார்த்து வேறு எண்ணங்களால் சிதறாதபடி, மனத்தோடு திருத்தமாய்ச் சேர்த்துச் சிவத்தை நினை.

பார்வை, மனம், குறிக்கோள் மூன்றையும் ஒருமித்துச் சிவத்தை நினைக்கவேண்டும் என்பதே கருத்து.

குண்டலியின் உள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார் (112)

மூலாதாரத்தில் விளங்கும் குண்டலியை எழுப்பி, பிரணவ ஒளியாக்கிக் கொண்டு, அதன் உள்ளே குறிப்பான நடுப்பாகத்தில் சிவத்தை நினைத்துக்கொண்டு, அக்கினி, சூரிய, சோம மண்டலங்கள் ஒன்றுபடுவதில் சிரசின் மேலாக உள்ள ஒளியை உற்றுப் பார்.

ஓர்மின்கள் சிந்தையில் ஒன்றைச் சிவன்றன்னைப்
பார்மின் பழம்பொருளே யாம் (113)

உடம்பில் மறைந்துள்ள பிந்து கலையைத் திடத்துடன் எழுப்பி மனத்தோடு சேர்த்து, அங்கே பொருந்தும் சிவனைப் பார்க்க வேண்டும்.

சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையில் ஈசனை
மிக்க மலத்தை விடு (114)

திருவடிகள் ஒன்றோடொன்று பொருந்துவதில் வெளிப்படும் பிரணவ கலையை வெளிப்படுத்தும் உபாயத்தை, ஆசானிடம் அடைந்து தெரிந்து, அதில் தேர்ச்சி யடைந்துகொள்.

அறிமின்கள் சிந்தையில் ஆதாரத் தைச்சேர்ந்(து)
உறுமின்கள் உம்முளே யோர்ந்து (115)

ஆறு ஆதாரங்களை மனத்தினால் ஒன்றுபடும்படி அடைந்து, அதில் பொருந்தியிருக்கிற மின்னல்களையும் ஆய்ந்து தெளிந்து விளங்கும்படி செய்துகொண்டு, சிவத்தை வெளிப்படுத்தி அறிந்து கொள்ளுங்கள்.

நித்தம் நினைந்திரங்கி நின்மலனை யொன்றுவிக்கில்
முற்றும் அவனொளியே யாம் (116)

பிரணவத்தின் ஒளியே சிதறுண்டு ஐம்புல ஆற்றல்களாக உள்ளது. நாள்தோறும் முயன்று இச்சத்திகளை யடக்கிப் பிரணவ ஒளியால் ஒன்றுபடுத்தினால், பிரணவம் முழு உருவமடைந்து விடும்.

ஓசையுணர்ந்(து) அங்கே யுணர்வைப் பெறும்பரிசால்
ஈசன் கருத்தாய் இரு (117)

பிரணவத்தில் உண்டாகும் சத்தத்தை அறிந்து, சிவனுடைய எண்ணத்தைக் கொண்டு இரு.

இராப்பகல் அன்றி இருசுடர்சிந் திக்கில்
பராபரத்தோ(டு) ஒன்றலு மாம் (118)

சிவமே பரமாகவும் அபரமாகவும் உள்ளது. அத்தகைய சிவத்தைச் சிந்தித்துக் கொண்டிருப்பவன் அவனுடன் ஒன்றி, அவனது ஆற்றலைப் பெறுவான்.

மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம் (119)

மேலே கூறியவாறு பிரணவ ஒளியில் பதிவுற்ற மனத்தால், அதிகமான நினைப்பைச் சிவன்மேல் வைத்து, சிந்தனையுடன் பொருந்தி நின்றால், உடலிலுள்ள எல்லாத் தத்துவங்களும் பேரொளி யான சிவனுருவமாய் விடும்.

வேண்டுவோர் வேண்டும் வகைதான் விரிந்தெங்கும்
காண்டற்(கு) அரிதாம் சிவம் (120)

காண்பதற் கரிதாகிய சிவமானது ஞானிகளுக்குப் பத்துத் திசை களிலும் பரவி நிற்கும்.

## 3. தெரிந்து தெளிதல்

தேறித் தெளிமின் சிவமொன்றே உள்ளுணர்வில்
கூறிய பல்குணமும் ஆம் (121)

அறிவுருவமான பிரணவத்தை அறிந்து, அதுவே சிவமென்று தெளிவடைந்தால் ஞானிக்கு வேண்டிய குணங்களை அடையலாம்.

உண்டில்லை என்ற உணர்வை அறிந்தக்கால்
கண்டில்லை ஆகும் சிவம் (122)

உண்டு என்று உணர்வை அறிந்தக்கால் சிவம் உண்டாம். இல்லை என்று உணர்வை அறிந்தக்கால் சிவம் இல்லையாகும்.

ஒருவர்க்(கு) ஒருவனே யாகும் உயிர்க்கெல்லாம்
ஒருவனே பல்குணமும் ஆம் (123)

ஒப்பற்ற ஞானிகளுக்கு, தனிச்சிவமானவனே அறிவுமயமாக இருப்பான். ஞானமற்றவர்களுக்கெல்லாம் அந்தச் சிவமே வேறுபட்ட குணமுடையவன் ஆவான்.

எல்லார்க்கும் ஒன்றே சிவமான தென்றுணர்ந்த
பல்லோர்க்கும் உண்டோ பவம் (124)

உயிர்களுக்கெல்லாம் ஒன்றே சிவ வடிவம் என்று அறிந்த, ஊழி ஊழியாக அறிந்தோர்க்கு, பிறவியானது இராது.

ஆயும் இரவியும் ஒன்றே அனைத்துயிர்க்கும்
ஆயுங்கால் ஒன்றே சிவம் (125)

எல்லா உயிர்களுக்கும் சூரியன் ஒன்றே ஆகும். அவ்விதமாகப் பார்த்தால் ஆன்மாக்களுக்குச் சிவசூரியனும் ஒன்றே ஆகும்.

ஓவாத தொன்றே பலவாம் உயிர்க்கெல்லாம்
தேவான தென்றே தெளி (126)

பலவாறான உயிர்களுக்கெல்லாம் எவ்வுயிரினும் நீங்காது நிற்கும் பிரணவமே தெய்வம் என்று தெளிந்து அறிவாயாக. தேவானது, தெய்வமானது!

தம்மை அறியாதார் தாமறிவோம் என்பதென்
செம்மையால் ஈசன் திறம் (127)

ஞான ஆய்வினால் தம்மை உணர்ந்த பெரியோர்களே இறையுணர்வு பெற்றவர்கள்.

எல்லா உலகத் திருந்தாலும் ஏத்துவர்கள்
நல்லுலக நாதன் அடி (128)

ஞான வாழ்வில் இச்சையுடையவர்கள் உலக வாழ்வில் உள்ள துன்பத்தைக் கண்டு அஞ்சாமல் சாதனையில் நிற்பர்.

உலகத்திற் பட்ட உயிர்க்கெல்லாம் ஈசன்
நிலவுபோல் நிற்கும் நிறைந்து (129)

பூவுலகில் பிறந்த உயிர்களுக்கெல்லாம் நிலவுபோல் சிவன் முழுமையாக நிற்பான்.

உலகத்தில் மன்னும் உயிர்க்கெல்லாம் ஈசன்
அலகிறந்த ஆதியே யாம் (130)

பூவுலகில் உள்ள அனைத்துயிர்களுக்கும், அவை தங்களுக்குள் எத்தகைய மாறுபாடு கொண்டிருப்பினும் ஆதிமூலமாக விளங்குவது மெய்ப்பொருளே ஆம். அதுவே, அலகில்லாத முழுமுதற் காரணம் ஆம்.

## 4. கலை ஞானம்

**சத்தியாம் சந்திரனைச் செங்கதிரோன் ஊடுருவில்**
**முத்திக்கு மூலம் அது (131)**

பிங்கலை நாடி என்னும் சூரியன், சத்தியாகிய இடகலை நாடியாகிய சந்திரனுடன் பொருந்தினால் அந்தப் புணர்வானது வீடுபேறு தரவல்லது.

**அயனங்கொள் சந்திரன் ஆதித்தன் ஒன்றில்**
**நயனமா முத்திக்கு வீடு (132)**

தேய்வும் வளர்ச்சியுமுள்ள சந்திரகலையைக் கொண்டு சூரியகலையைச் சேர்ந்தால் வீடு பேற்றிற்குக் கண் திறக்கும்.

**அஞ்சாலும் மாயா தறம்பொருள் இன்பமும்**
**துஞ்சா தவர்துறக்கும் ஆறு (133)**

ஐம்புலன்களின் வாதனையால் அழிந்துவிடாமல் தங்களைக் காப்பாற்றிக்கொண்டு உயிர்வாழ்பவர்கள், மெய்யான அறம் பொருள் இன்பம் துய்த்து வீடுபேறு அடைவர்.

**ஈசனோ டொன்றி இசையாப் பொருளில்லை**
**தேச விளக்கொளி யாம் (134)**

சிவத்தோடு மனமும் பார்வையும் பொருந்தினால், கூடிவராத பொருள் கிடையாது. சிவவொளி, உலகத்தை விளக்கிக் காட்டும் பிரகாசமே ஆகும்.

**தாஞ்செய் வினையெல்லாம் தம்மை அறவுணரில்**
**காஞ்சனமே ஆகுங் கருத்து (135)**

மனத்தினால் தன்னை முழுமையாக அறிவானேயானால், தான் செய்கின்ற வினைகள் எல்லாம் பொன்போல் ஒளிபெற்று விளங்கும்.

**கூடக மான குறியெழுத்தைத் தானறியில்**
**வீடகம் ஆகும் விரைந்து (136)**

அமைதியாய் மறைந்திருக்கும் ஞானவிளக்கத்துக்குக் குறிக்கோளாக உள்ள பிரணவத்தை அறிந்துகொண்டால், மோட்ச வீடு தன் தேகமே ஆகும். இதுவே சீவன் முத்திநிலை என்பது.

**வீடக மாக விழைந்தெல்லை வேண்டுமேல்**
**கூடகத்திற் சோதியோ டொன்று (137)**

உடம்பையே மோட்ச வீடாக எண்ணி, அதில் நுண்மையாக வெளிப்படும் பிரணவ ஒளியில் மனத்தையும் பார்வையையும் செலுத்தினால், அதுவே பேரின்பமாகிய மோட்சநிலை ஆகும்.

பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து (138)

அருள் ஒளியோடு நின்ற சிவ வடிவத்தை மனம் தொடர்பான பார்வையில் கலைகள் சூழும்படி செய்தால் சாதனை கைகூடும்.

இரேசக மாற்றி இடையறா தேநிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம் (139)

சூரிய சந்திரர்களால் செய்யும் யோகமுறையைக் கடைப்பிடித்து, முகத்தின்முன் உதிக்கும் ஒளியில் மனத்தை நிலைபெறுமாறு நிறுத்திக் கொண்டால், பிரணவ நடுவில் சிவன் அருள் ஒளிரும்.

சிந்தையில் நின்ற நிலைவிசும்பில் சாக்கிரமாம்
சந்திரனில் தோன்றும் உணர்வு (140)

மனத்தின் உதவியைப் பெற்றுச் சந்திர கலையில் வெளிப்படும் அறிவான ஓங்காரமானது, நிற்கின்ற நிலையிலிருந்து விண்ணைச் சார்ந்தால் அதுவே சாக்கிரம் என்ற நனவு நிலையாகும். இது சூக்கும உலகின் நனவு.

## 5. உருவொன்றி நிற்றல்

எள்ளகத் தெண்ணெய் இருந்ததனை ஒக்குமே
உள்ளகத் தீசன் ஒளி (141)

எள்ளுக்குள் எண்ணெய் கலந்து உள்ளது. அதைப்போலவே உடலினுள்ளிருந்து வெளிப்பட்ட பிரணவத்தில் சிவனுடைய ஒளியும் இருக்கின்றது.

பாலின்கண் நெய்போல் பரந்தெங்கும் நிற்குமே
நூலின்கண் ஈசன் நுழைந்து (142)

பாலில் நெய் மறைந்திருப்பதுபோலச் சிவம் உள்புகுந்து நாடிகளின் எல்லாப் பாகங்களிலும் முழுமையாகப் பரவி இருக்கின்றது.

கரும்பினில் கட்டியும் காய்பாலில் நெய்யும்
இரும்புண்ட நீரும் இயல்பு (143)

கரும்புக் கோலில் வெல்லக்கட்டி உண்டாவதுபோலவும், காய்ச்சின பாலில் நெய்யானது ஆடையாக வெளிப்பட்டு நிற்பது போலவும், நெருப்பில் காய்ந்த இரும்பானது தன்னுள் ஈர்த்துக் கொண்ட நீரைப்போலவும் உலக வழக்கு அமைந்துள்ளது.

பழத்தின் இரதம்போல் பார்த்தெங்கும் நிற்கும்
அழுத்தினால் ஈசன் நிலை (144)

பக்குவமாகிய பழத்தை அழுத்தினால் அதன் சாறு வெளிப்படுவது போல், பக்குவிகளாகிய சாதகர்கள் சிவனின் இருப்பிடத்தைக் கண்டு, மனத்தோடு கூடிய பார்வையைப் பாய்ச்சினால் சிவன் வெளிப் படுவான்.

தனுவொடு தோன்றுமே தானெல்லாம் ஆகி
அணுவதுவாய் நிற்கும் அது (145)

தானே தேகத்துடன் உள்ளும் புறமுமாகிய எல்லாப் பொருள் களிலும் முழுமையாகப் பரவி வெளிப்படும் அந்தச் சிவமானது, அணுவுக்குள் அணுவடிவாய் நிலைபெற்றிருக்கும்.

வித்து முளைபோல் விரிந்தெங்கும் நிற்குமே
ஒத்துளே நிற்கும் உணர்வு (146)

சூரிய சந்திர கலைகளுடன் கூடி, பிரணவத்தின் உள்நிற்கின்ற பிரணவ அறிவானது, வித்திலிருந்து முளை நீளுவதுபோல் உண்டாகி, அகன்று உடம்பாயும், உடம்பைச் சூழவும் நான்கு திக்குகளிலும் நிற்கும்.

அச்சமாங் காரம் அகத்தடக்கி னாற்பின்னை
நிச்சயமாம் ஈசன் நிலை (147)

பயம் என்னும் கீழ்நோக்கும் சக்தியையும், இறுமாப்பையும், பிரணவ ஒளியில் செலுத்தி எரித்துவிட்டால், பிறகு சிவனிருப்பிடம் உறுதியாக நிலைத்துவிடும்.

மோட்டினீர் நாற்றம் முளைமுட்டை போலுமே
வீட்டுளே நிற்கும் இயல்பு (148)

பிரணவத்தினுள்ளே சிவம் இருக்கும் நிலையானது, உயர்வான இடத்திலிருந்து தண்ணீர் இறங்குவது போலவும், மணம் மரத்தில் இருந்தாலும் வாசனை பரவுதல் போலவும், வித்தினிடம் அடங்கி யிருக்கும் முளை முளைக்கும்போது மேல் நீளுவது போலவும், முட்டையில் உள்ள குஞ்சு பக்குவம் ஆகும் வரையில் முட்டைக் குள்ளிருந்து, பின் முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவருதல் போலவும் இருக்கும்.

நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்
அனைத்துயிர்க்கும் தானாம் அவன் (149)

எல்லா உயிர்களுக்கும் தானாக நிற்கும் பரமசிவன், தன்னை அசைவற்ற நிலையிலிருந்து சிந்திப்பவர்களுக்கு அவரவர் மனத்திற்குள் மாசற்றவனாய் நிற்பான்.

ஓசையின் உள்ளே உதிக்கின்ற தொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து (150)

மலரினின்றும் வாசனை மறைந்திருந்து வெளியாவதுபோல், பிரணவ கோசத்தில் வந்துபொருந்தி வெளிப்படுகின்ற சிவம் ஒப்பற்றதாய் உள்ளது.

## 6. முத்தி காண்டல்

மனத்தோ டுறுபுத்தி ஆங்காரம் சித்தம்
அனைத்தினும் இல்லை அது (151)

மனத்தோடு பொருந்தும் அறிவு, அகங்காரம், சித்தம் ஆகிய அந்தக்கரணங்களில் முத்தியானது இல்லை.

மனம், அறிவு, அகங்காரம் என்ற மூன்றின் கூட்டமே சித்தத் தடாகமாகும். அகங்காரம் என்பது ஆன்மாவைக் கீழிழுக்கும் செயல். இதன் இழுப்புத் தன்மையை மாற்ற முன்னதிகாரத்தில் சிவத்தினிடம் செலுத்தும்படி கூறப்பெற்றது. அந்தக்கரண சமூகம் என்று இவை நான்குக்கும் (மனம், அறிவு, அகங்காரம் சித்தம்) பெயர். வீடு பேற்றைக் கருதினபோது அவைகளின் தன்மையே மாறி மேல்முகம் கொண்டுவிடும்.

வாக்கும் கருத்தும் மயங்கும் சமயங்கள்
ஆக்கிய நூலினும் இல் (152)

வாக்கின் வல்லமையாலும் கருத்துக்களாலும் மயக்கம் கொள்கிற சமய நூல்களாலும் முத்தி கிடையாது.

உருவமொன் றில்லை உணர்வில்லை ஓதும்
அருவமும் தானதுவே ஆம் (153)

முத்தி என்பதற்கு உருவம் கிடையாது. சுட்டி அறியும் தன்மையும் கிடையாது. உடல் முழுவதும் பரவி, மன மண்டலத்தில் பொருந்தி உருவமற்ற மனமாக நிற்கும்.

எல்லா உருவையும் கடந்து நின்றாலேதான் முத்தி கைகூடும்.

தனக்கோர் உருவில்லை தானெங்கும் ஆகி
மனத்தகமாய் நிற்கும் அது (154)

ஆன்மாவிற்கு ஒரு வடிவமில்லை. எடுத்த உடம்பில் எங்கும் பரவி மனத்தைப் பொருந்தி நிலைபெறும்.

பெண்ணாண் அலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு (155)

ஆன்மா பெண், ஆண், அலி என்று சொல்லும்படியான வேறு பாடுகள் இல்லாததாகி, வான்வடிவாய் நின்றிருக்கும்.

ஆன்மாவுக்கு ஆண், பெண், அலி என்ற வேற்றுமை, உடலைப் பற்றும் போதுதான் ஏற்படுகிறது.

அனைத்துருவ மாய அறிவை அகலில்
தினைத்துணையும் இல்லை சிவம் (156)

எல்லா உருவங்களாயும் எங்கும் பரவி நிற்கும் உருவமற்ற அந்தக் கரணம் பொருந்திய பிரணவத்தை அறியாவிட்டால், தினையளவும் சிவத்தைக் காணமுடியாது.

பிரணவமே உயிர்களாகவும் சிவமாக அருவத்திலும் உள்ளது. இதுதான் சிவத்தின் சொரூபமும் தடத்தமும் பொருந்திய சதாசிவ நிலையாகும்.

துணிமுகத்துக் காதியாத் துன்னறி வின்றி
அணிதார் இரண்டு விரல் (157)

ஒளியுள்ள முகத்திற்கு முதற்காரணமாய்ப் பொருந்திய அறிவு தவிர, மோதிரத்தை அணியும் விரலும் அங்குசமாகிய சுண்டுவிரலும் ஆக இரண்டு விரல்களுண்டு.

மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டாங் காதி நிலை (158)

உரோமத்தினுடைய அரைப்பாக அளவு பிரணவ அறிவு இருந்தால், அவ்விடத்தில் சிவத்தின் இடம் இருக்கும்.

தற்பர மான சதாசிவத் தோடொன்றில்
உற்றறி வில்லை உயிர்க்கு (159)

உயிர்களுக்கு, அந்த மேலான சதாசிவத்தோடு மனமும் பார்வையும் பொருந்தினால், அவர்களிடத்தில் பொருந்திய மனத்தின் விரிவாகிய உணர்ச்சி ஒழிந்துபோகும்.

உறக்கம் உணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு (160)

தூக்கம் பாலுணர்வு, பசி ஆகிய இவை மூன்றையும் ஒழித்தால் ஒருவன் மீண்டும் இவ்வுலகில் பிறவியெடுக்க வேண்டியதில்லை.

## 7. உருவாதீதம்

கருவின்றி வீடாம் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கும் உணர்வு (161)

உருவமற்றுப் பிரணவத்தில் நிற்கும் நுண்ணுடம்பைத் தம் வசப்படுத்திக் கொண்டால், எண்ணமானது அருவுருவாகிப் பிறவியை வெல்லும் நிலையைத் தரும்.

பிறத்தலொன் றின்றிப் பிறவாமை வேண்டில்
அறத்துநவ மாற்றி இரு (162)

அந்தக்கரணங்கள் வினைவயமாகி மீண்டும் பிறவிக்கு வழிசெய்யாமலிருக்க வேண்டில், மூல காரணமாகிய உருவங்களை, அவைகள் உதிக்காமல் நடுத்து, உருவமற்ற பிரணவத்தில் அசைவற்று இரு.

உருவங்கள் எல்லாம் அறுத்தறம் ஆற்றில்
கருவேதும் இல்லை தனக்கு (163)

எண்ணத்தாலுண்டாகிய உருவங்களை எல்லாம் உண்டாகாமல் தடுத்து, பழைய வாசனைகள் மீண்டும் உதிக்காமல் சாதனையால் தடுத்து நிறுத்தினால், சாதகனுக்குப் பிறப்பினைக் கொடுக்கும் அஞ்ஞான தத்துவங்களின் ஆட்சி ஒழியும்.

கறுப்பு வெளுப்பு சிவப்புறுபொன் பச்சை
அறுத்துநவ மாற்றி இரு (164)

கறுப்பு வண்ணமான வளியாற்றலையும், வெளுப்பு நிறமான விண்ணாற்றலையும், சிவப்பு நிறம் பொருந்திய கனலாற்றலையும், பொன்னிறம் பொருந்திய மண்ணாற்றலையும், பச்சை நிறம் பொருந்திய புனலாற்றலையும், அவற்றின் இயல்பு நிலையிலிருந்து இடம்பெயரச் செய்து, முழுவதுமாகச் சிரசின் மேலுள்ள பிரணவத்தில் சேர்த்து அசைவற்று இரு.

அனைத்துருவம் எல்லாம் அறக்கெடுத்து நின்றால்
பினைப்பிறப் பில்லையாம் வீடு (165)

மனத்தின்கண் எழுகின்ற எல்லா உருவங்களையும் முழுதும் உதிக்காத வண்ணம் தலையின்மேல் உள்ள ஒளியைப் பற்றி நின்று, மனத்தை அடக்கி அசைவற்ற நிலையில் நின்றால், பின்னர்ப் பிறப்பில்லை. வீடு கைகூடும்.

நினைப்புமறப் பற்று நிராகரித்து நின்றால்
எனக்கொன்றும் இல்லை பிறப்பு (166)

நினைத்தலையும் மறதியையும் இல்லாமல் செய்து, உருவங்களை முற்றும் உதிக்காமல் நீக்கி, தனது ஆன்ம சொரூபத்திலேயே நின்றால் அவனுக்குப் பிறவி இல்லை.

குறித்துவரும் எல்லாம் குறைவின்றி மாற்றில்
மறித்துப் பிறப்பில்லை வீடு (167)

மனத்தில் கற்பிக்கப்பெறும் உருவங்களையெல்லாம் முழுமையாக மாற்றி, பிரணவத்தில் மனத்தைத் தோன்றும் வண்ணம் செய்து கொண்டால், மறுபிறவி இல்லை.

பிதற்றும் உணர்வை அறுத்துப்பிர பஞ்ச
விகற்பம் உணர்வதே வீடு (168)

உலகத்தின் வேறுபாடுகளைப் பேசும் அறிவை விடுத்து, அறிவோடு பிரணவத்தில் சேர்ந்து நிற்பதே முத்தியைத் தரும்.

பிறப்பறுக்க வீடாம் பேருவமை இன்றி
அறுத்துருவ மாற்றி இரு. (169)

உதித்திருக்கும் அஞ்ஞான குணங்களை நாசம் செய்ய, குணங்களுக்குக் காரணமான உருவசத்தியைத் தடைசெய்து, உவமையற்ற பிரணவ வீட்டில் உன் மனத்தைச் சேர்த்து அசைவற்று இருப்பாயாக!

ஓசை உணர்வோ டுயிர்ப்பின்மை அற்றக்கால்
பேசவும் வேண்டா பிறப்பு (170)

ஒலி அறிவுடன் பிராண அபான வாயுக்களின் இயக்கத்தன்மை ஒழிந்தால் பிறப்பைப் பற்றிய பேச்சே இல்லை; இதை வென்றவனாவாய்!

## 8. பிறப்பறுதல்

தன்னை அறியும் அறிவு தனைப்பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு (171)

தன்னை அறிவதற்குக் கருவியாயிருக்கின்ற அறிவாகிய ஓங்காரத்தை ஒருவன் அடைந்தால், அதன் பின்னர்ப் பிறவித் துயரம் கிடையாது.

அறம்பாவம் ஆயும் அறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து (172)

புண்ணிய பாவங்களை இன்ன தன்மையுடையன என்று ஆராய்ந்து அறியும் பிரணவத்தைப் பார்த்தால், பிறவியை எடுத்து உலகத்தில் துன்பப்பட வேண்டியதில்லை.

சிவனுருவம் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து (173)

அகண்ட உருவினை உடைய சிவத்தோடு தன்னைச் செலுத்தி, அந்நிலையில் உறுதியாக நின்றால், பிறவியில் உழல வேண்டுவதில்லை!

உறக்கம் உணர்வோ டுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம் (174)

உடம்பின் இயல்பான தூக்கமும், உணர்ச்சிகளும், பிராணனியக்கமும் இல்லாது நீங்கினால், பிறவாமல் வாழும் பரநிலையை இவ்வுடம்பு அடையும்.

நினைப்பு மறப்பு நெடும்பசியும் அற்றால்
அனைத்துலகும் வீடாம் அது (175)

விருப்பு, வெறுப்பு, காமம் ஆகியவை ஒழிந்தால், எல்லா உலகங்களுக்கும் உறைவிடமாக உடல் பொருந்தும்.

உடம்பிரண்டும் கெட்டால் உறுபயனொன் றுண்டு
திடம்படும் ஈசன் திறம் (176)

அன்னமய கோசம், பிராணமய கோசம், குணகஞ்சுகம், மனோமய கோசம் ஆகிய இவை தூலம், சூக்குமம் என்ற இரண்டு தேகங்கள். அவற்றின் தன்மை கெட்டால் அதனாலுண்டாகிய பயன் ஒப்பற்றதாய் உள்ளது. அதனால் இறையாற்றல் மிகும்.

தன்னை அறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு (177)

உடம்பினுள் உள்ள பிரணவத்தை அறிந்து, அதுவே தான் என்னும் அறிவைத் தெரிந்துகொண்டு, தான் என்று துண்டித்து நினைக்கும் நினைவை விட்டு நின்றால், பிறகு உடம்பில் உள்ள தத்துவத் தோற்றங்கள் ஏதுமில்லை.

மருளின்றி மாசறுக்கின் மாதூ வெளியாய்
இருளின்றி நிற்கும் இடம் (178)

பரநிலையில் அச்சம் இல்லாமல் ஒடுங்கி நின்றால், இரவுபகல் அற்ற இடம் நிலைத்து விடும்.

விகாரம் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டால்
அகாரமாம் கண்டீர் அறிவு (179)

அகர பீஜத்தால் குறிக்கப்பெறும் சுக்கிலத்தைப் பெண் இன்பத்திலிருந்து பிரித்து, உடலுக்குள் தெளிவடைந்தால் ஓங்கார சொரூபத்தைக் கண்டவராவர்.

சிந்தையாங் காரம் செறிபுலன் அற்றக்கால்
முந்தியே யாகும் வீடு (180)

மனம் ஆணவத்தோடு பொருந்திய ஐம்புல வாதனை நீங்ினால், உடனே வீடுபேறு கிடைத்துவிடும்.

## 9. தூய ஒளி காண்டல்

தோன்றிய தெல்லாம் தொடக்கறுத்துத் தூய்வெளியாய்த்
தோன்றியக்கால் தூய வொளி (181)

உதித்து உருவாகி நிற்கும் தத்துவங்களையெல்லாம் துண்டித்துத் தூயவெளியாக்கினால் ஆன்ம ஒளி உண்டாகும்.

தெளிவாய தேச விளக்கொளியைக் காணில்
வெளியாய வீடதுவே யாம் (182)

உடம்பில் தெளிவு உண்டாகும்படி அகண்ட சோதியைக் கண்டால், அதுவே பேரின்ப வீடு.

அகண்டத்தில் உள்ள சிவ ஒளியானது வெளிப்பட்டால் அதன் ஒளியால் உலகம் முழுவதையும் பார்க்கலாம்.

மின்போல் உருவ விளக்கொளிபோல் மேற்காணில்
முன்போல மூலம் புகும் (183)

மின்னலைப் போலவும் விளக்கொளி போலவும் சிரசின் முன் கண்டால், தனது ஆதி நிலையான பிரணவ நடுவில் நுழைந்துவிடும்.

பளிங்கு வலம்பு ரிநிகர்த்த தாகில்
துளங்கொளி யாம்தூ நெறி (184)

தூய்மையான வழியானது படிகத்தின் நிறத்தையும், சங்கின் நிறத்தையும், பாலின் நிறத்தையும் ஒத்திருந்தால், யாவற்றையும் விளக்கிக் காட்டும் ஆன்ம ஒளியாம்.

சங்கு நிறம்போல் தவள வொளிகாணில்
அங்கையின் நெல்லியேயா கும் (185)

சங்கினது நிறத்தைப் போன்ற வெண்மையாகிய ஒளிகண்டால் அழகிய உள்ளங்கையில் நெல்லிக்கனியாகவே ஆகிவிடும். அதாவது பயிற்சியின் பலன் கண்கூடாம்.

துலங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து (186)

உச்சியில் அசைவோடு கூடிய தூண்டப்படாத ஒளியைக் கண்டால் விரைவில் பிரணவமாகிய உடம்பேயாகும்.

மின்மினி போன்ற விளக்காகத் தோன்றிடில்
அன்னப் பறவையே யாம் (187)

மின்மினிப் பூச்சியைப் போன்ற, தோன்றித் தோன்றி மறையும் படியான அந்த ஆன்மவொளியானது தோன்றினால், அஃது அன்னப் பறவையாகும். அன்னம் என்பது உயிர். அந்த ஒளியே உயிரின் ஒளியாம் என்பது கருத்து.

உள்ளொளி தோன்றி உணரி லருளொளி
அவ்வொளி ஆதி ஒளி (188)

உடம்பிற்குள்ளிருக்கும் ஒளியாகிய மூலாக்கினியானது வெளிப்பட்டு நிற்க, அதை உணர்வானேயாகில், அந்த ஒளியானது அருளைக் கொடுக்கும் ஒளியே ஆகும்.

பரந்த விசும்பிற் பரந்தவொளி காணில்
பரமபரமே ஆய ஒளி (189)

அகன்ற வானில் பரவிய ஒளியைப் பார்த்தால் அது பரம், அபரம் ஆகிய இரண்டினால் உண்டாகிய ஆன்ம ஒளியே ஆகும்.

ஆதி ஒளியாகி ஆள்வானும் தானாகி
ஆதி அவனுருவம் ஆம் (190)

மூலாக்கினியில் ஒளியாகவும், உயிர்களை ஆள்பவனாகவும் தானே ஆகி நின்ற சிவன், சாதகனுடைய விருப்பம்போல் நிற்பான்.

## 10. சதாசிவம்

பத்துத் திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்கும் சிவம் (191)

எட்டுத் திக்குகளும், அவற்றுடன் மேல் கீழ் என்றவைகளையும் சேர்த்துப் பத்துத் திக்குகளிலும், அகன்ற கடலும், கடலால் சூழப்பட்ட பூவுலகும் ஆகிய எல்லா இடங்களிலும் சிவமானது கலந்து நிலைத்திருக்கும்.

விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்கும் சிவம் (192)

வானத்தில் முழுமையாக நிறைந்து, நிலையாக நின்று விளக்கிக் காட்டும் சூரியனின் சுடர் ஒளியைப் போல், உடம்பின் உள்பாகத்தில் முழுமையாகச் சிவகலையானது நிலைத்து நிற்கும்.

ஆகமும் சீவனும் ஆசையும் தானாகி
ஏகமாய் நிற்கும் சிவம் (193)

உடம்பும் உயிரும், இவற்றைப் பிணைத்திருக்கும் பந்தமாகிய ஆசையும் அதுவேயாகி மேலான பரம் இருக்கும்.

வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றின் உட்பொருளாய்
ஆயுமிடம் தானே சிவம் (194)

உடலிலுள்ள பத்து வாயுக்களாயும் மனமாயும் உயிராயும், இன்னும் அவற்றினோடு கலந்திருக்கும் கலைகளாகவும் உச்சியில் சிவம் இருக்கும்.

எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்கும் சிவம் (195)

சிவமானது கணக்கற்ற உயிர்ப்பிறவிகளில் பல நிலைகளில் உடம்பிற்குள் நிறைந்து இருக்கும்.

ஒன்றேதான் ஊழி முதலாகிப் பல்லுயிர்க்கும்
ஒன்றாகி நிற்கும் சிவம் (196)

சிவமானது ஒரே பொருளாகவே, வித்தாகி, பலவகைப்பட்ட உயிர்களுக்குள்ளும் பொருந்தி இருக்கும்.

மூலமொன் றாகி முடிவொன்றாய் எவ்வுயிர்க்கும்
காலமாய் நிற்கும் சிவம் (197)

சிவமானது எல்லா உயிர்களின் தோற்றத்திற்கும் மூலகாரணமான ஒளி! வீடுபேற்றைக் கொடுக்கும் பிந்துகலையாகவும், காலத்தைக் காட்டும் சூரிய சந்திரர்களாகவும் கலந்து நிற்கும்.

மண்ணில் பிறந்த உயிர்க்கெல்லாம் தானாகி
விண்ணகமே ஆகும் சிவம் (198)

சிவமானது பூமியின்கண் பிறவியெடுத்த உயிர்களுக்கெல்லாம் தான் ஒன்றாகவே பரவி, இராப் பகலற்ற சிதாகாயமே இடமாக இருக்கும்.

தோற்றமது வீடாகித் தொல்லைமுதல் ஒன்றாகி
ஏத்தவரும் ஈசன் உளன் (199)

பழமையான ஒளியானது உடம்பில் ஒன்றாகி, உடற்கலைகளின் தோற்றமே இடமாகி, அந்த இடத்தில் இறைவன் இருக்கின்றான்.

நிற்கும் பொருளும் நடப்பனவும் தானாகி
உற்றெங்கும் நிற்கும் சிவம் (200)

சிவமானது நிற்பனவும் நடப்பனவும் ஆகிய எல்லாப் பொருள் களிடத்தும் புகுந்து நிற்கிறது.

சிவத்தின் எல்லையற்றுப் புகுந்து நிற்கும் தன்மையைக் கூறி, இந்தத் 'திருவருட்பால்' என்னும் இரண்டாவது அதிகாரம் நிறைவுறு கிறது. இதைத் தொடர்ந்து வருகிறது மூன்றாவது பகுதியாகிய "தன்பால்" என்பது!

☆

## 3. தன் பால்

*(சிவத்தின் அருகிருத்தல் - சாமீப முத்தி)*

### 1. குருவழி

**தன்பால் அறியும் தவமுடையார் நெஞ்சகத்துள்**
**அன்பாய் இருக்கும் அரன்** (201)

*தன்னிடத்தில் அறிவை அறியும்படியான தவத்தைச் செய்பவர்களின் மனத்திற்குள், சிவன் அன்புபொருந்தி இருப்பான்.*

**சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்**
**சிந்தித் திருக்குஞ் சிவம்** (202)

*சிவ சொரூபத்தைச் சிந்தித்திருத்தலையே தொழிலாக உடையவர்களின் மனத்தின்கண், சிவமானது சிந்தனை செய்துகொண்டிருக்கும்.*

**குருவின் அடிபணிந்து கூடுவ தல்லார்க்(கு)**
**அருவமாய் நிற்கும் சிவம்** (203)

*ஞானாசிரியனுடைய திருவடிகளை வணங்கி, அவரால் சுட்டப்பெறும் சிவத்தின் திருவடிகளை உணர்ந்து, அவற்றுடன் சேர்ந்து ஞானமார்க்கத்தை அடைவதே தக்க நெறியாகும். அவ்வாறு செய்வதல்லாத மற்றவர்க்குச் சிவமானது புலப்படாததாகவே இருக்கும்.*

**தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியில் அல்லால்**
**வலைப்பட்ட மானதுவே யாம்** (204)

*ஞானப் பயிற்சியின் இரகசியங்களை அறிந்த ஞானாசிரியரின் முன்னிலை இல்லாதுபோனால், வலையிலகப்பட்டுக் கொண்ட மானைப் போலத் தவிக்க வேண்டியதுதான்.*

**நெறிப்பட்ட சற்குரு நேர்வழி காட்டில்**
**பிரிவற் றிருக்கும் சிவம்** (205)

*ஞான மார்க்கத்தில் ஐயந் திரிபற்றுத் திகழும் ஞானாசிரியன் அதற்காக ஏற்பட்ட தந்திரத்தைத் தொட்டுக் காட்டினால், சிவமானது தன்னை விட்டுப் பிரியாமல் நிலைத்திருக்கும்.*

**நல்லன நூல்பல கற்பினும் காண்பரிதே**
**எல்லையில் லாத சிவம்** (206)

*நன்மையைக் கொடுக்கும் பலவகையான ஞானநூல்களைக் கற்றபோதிலும் முடிவில்லாத சிவத்தைக் காணுவது அரிதாகும். நேர்முக ஆசிரியனே தொட்டுணர்த்த வேண்டும்.*

**நினைப்பும் மறப்பும் இல்லாதார் நெஞ்சம்**
**தனைப்பிரி யாது சிவம்** (207)

நினைப்பதும் மறப்பதும் இல்லாமல் நிலையாக நிற்கும் மனத்தை யுடையவர்களைச் சிவம் நீங்காது.

**ஒன்றிலொன்றில் லாத மனமுடை யாருடல்**
**என்றுமொன் றாது சிவம்** (208)

ஒரு திருவடியோடு மற்றத் திருவடி கலக்கவைத்தல் இல்லாத மனத்தை உடையவரின் உடம்பில், சிவம் ஒருபோதும் பொருந்தி யிருக்காது.

**நாட்டமில் லாவிடம் நாட்டம் அறிந்தபின்**
**மீட்டு விடாது சிவம்** (209)

பார்வை செல்லாத இடத்தில் அதை எழுப்பிப் பார்வையைச் செலுத்த அறிந்தபின், சிவமானது மாணவனை விட்டு நீங்காது.

**பஞ்சமா சத்தம் அறுப்பவர்க் கல்லாஅல்**
**அஞ்சலென் னாது சிவம்** (210)

ஐந்து இந்திரியங்களும் ஒன்று சேரும்போது உண்டாகிய பெருமை பொருந்திய சத்தம் கடந்து செல்லுபவர்க்கு அல்லாது, மற்றவர்களை அழைத்துச் சிவமானது அஞ்சாதே என்று சொல்லாது.

## 2. அங்கியிற் பஞ்சு

**அங்கியில் பஞ்சுபோல் ஆகாயத் தேநினையில்**
**சங்கிக்க வேண்டாம் சிவம்** (211)

பஞ்சானது நெருப்புடன் சேர்ந்தபோது பற்றி எரிந்து தனது உருவை இழப்பதுபோல, ஆகாயத்தினிடம் மனம் பதிவுகொண்டால் சிவத்தைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம்.

**மெய்ப்பா லறியாத மூடர்தம் நெஞ்சத்தின்**
**அப்பால தாகும் சிவம்** (212)

சிவனை அறியும்படியான இடத்தை அறிந்துகொள்ளாத மூடர் களின் மனத்தில் சிவமானது விலகி இருக்கும்.

**நெஞ்சத்துள் நோக்கி நினைப்பவர்க் கல்லாஅல்**
**அஞ்சலென் னாது சிவம்** (213)

மனம் எழும்படியான சிரசைச் சூழ உள்ள மனமண்டலத்தில் பார்த்து, சிவத்தைச் சிந்திக்கிறவர்களுக்கு அல்லாது மற்றவர்களுக்குச் சிவம் அபயம் தராது.

**பற்றிலா தொன்றினைப் பற்றினால் அல்லது**
**கற்றதனால் என்ன பயன்** (214)

உலகிற் காணும் எல்லா உருவங்களுக்கும் ஆதாரமாயிருந்து கொண்டு, தான் ஒன்றிலும் பற்றில்லாமல் உள்ள ஏக உருவை

அடைக்கலமாகப் பற்றிக்கொண்டாலன்றி, நூல்களை மட்டும் வாசிப்பதனால் என்ன பயன் கிட்டும்?

தம்மை அறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை அறிவாரோ தான் (215)

தங்களை அறியும் சிவத்தைத் தாங்கள் அறிந்து கொண்டபின், தம்மை அறிய முயல்வரோ? ஆன்மா முயற்சியின்றியே அங்கே நிலைபேறாக விளங்கும்.

அசைபையறிந் துள்ளே யழலெழ நோக்கில்
இசையாது மண்ணில் பிறப்பு (216)

பேசாத மந்திரமாகிய நிலையிலே, மூலாக்கினி தேகத்தினுள்ளே நிரைசைக் கடக்குமாறு பார்த்தால், பூவுலகில் பிறப்பு வந்தடையாது.

இசையாத நாட்டத் திருந்துணர் வாருக்(கு)
அசையாத வானந்த மாம் (217)

அசைவற்ற பார்வையை உபயோகித்து அறிவாகிய பிரணவத்தை அறியும் பயிற்சியாளருக்கு நிலையான, சலனமில்லாத ஆனந்தம் உண்டாகிக் கொண்டிருக்கும்.

துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு (218)

துரிய நிலைக்கு அப்பால் துரியாதீத நிலையில், மூலாக்கினியின் சுடரைச் செலுத்திக் கண்டால், இறப்பும் பிறப்பும் இல்லையாம்.

மதிபோல் உடம்பினை மாசற நோக்கில்
விதிபோய் அகல விடும் (219)

உடம்பை வானத்தில் எழுகின்ற சந்திரனைப் போல் தெளிவோடு பார்த்தால், மரணமானது நீங்கித் தூரம் சென்றுவிடும்.

சிவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர்தம்
பாவம் நசிக்கும் பரிந்து (220)

சிவனைச் சிவலிங்கமாக அறிந்து தெளிவை அடைந்தவர்களுக்கு அவர்களுடைய முன்வினைகள் தாமாகவே அழிந்துபோம்.

## 3. மெய்யகம்

மெய்யகத்தி னுள்ளே விளங்கும் சுடர்நோக்கில்
கையகத்தின் நெல்லிக் கனி (221)

மெய்யாகிய சிவ சோதியில் உதித்துத் தோன்றும் நெருப்பின் கொழுந்து போன்ற சோதியைப் பார்க்கில், சிவம் தெளிவாகிவிடும்.

கரையற்ற செல்வத்தைக் காணுங்கா லத்தில்
உரையற் றிருப்ப(து) உணர்வு (222)

உணர்ச்சியானது எல்லையற்ற ஆன்ம சொரூபத்தைப் பார்க்கும் பக்குவ காலத்தில் பேச, நினைக்க, ஒன்றுமற்று இருக்கும்.

உண்டு பசிதீர்த்தார் போலுடம் பெல்லாம்
கண்டுகொள் காதல் மிகும் (223)

புசித்துப் பசியைத் தணித்துக் கொண்டவர்போல், உடம்பின் உள்ளும் புறமும் பேரன்பு நிறைவுபெற்று நிற்கும்; அதைப் பார்த்துக்கொள்.

உரைசெயும் ஓசை உரைசெய் பவர்க்கு
நரைதிரை இல்லை நமன் (224)

சத்தத்தின் மூலமாய் உண்டாகும் சொல்லை உள்ளொலி கேட்குமாறு செய்பவருக்கு, நரையும் முதுமையும் வாராவாம்.

தோன்றாத தூயவொளி தோன்றியக் காலுன்னைத்
தோன்றாமற் காப்ப தறிவு (225)

எவருக்கும் வெளிப்பட்டு நிற்காத பரிசுத்தமான ஆன்ம ஒளியானது, வெளிப்பட்டுச் சூழ்ந்து கொண்டிருந்தால், தூலமான தோற்றம் அறிவில் ஒடுங்கிவிடும்.

வாக்கு மனமும் இறந்தபொருள் காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம் (226)

பேச்சும் மனமும் இல்லாத உட்பொருளைக் கண்டால், தூல உடலுக்கு நாசம் ஏற்படுவது இல்லை என்று பெரியோர் கூறுகின்றனர்.

கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உன்னகத்தே நின்ற ஒளி (227)

உன் உடம்புக்குள்ளே நிற்கின்ற ஆன்ம ஒளியானது, அறிவாகிய பிரணவத்திலிருந்து வெளிப்பட்டு உனக்குத் தோன்றுங்கால் ஆனந்தத்தைக் கொடுக்கும்.

ஆநந்த மான அருளை அறிந்தபின்
தானந்தம் ஆகும் அவர்க்கு (228)

ஆனந்தமே வடிவாகி நிற்கின்ற அருள் ஒளியைப் பார்த்த பிறகு, அந்த அருள் ஒளியானது பார்த்த சாதகர்களுக்கு முடிவாகிய வீடுபேற்றை நல்கும்.

மறவாமற் காணும் வகையுணர் வாருக்(கு)
இறவா திருக்கலும் ஆம் (229)

அவ்வொளியினின்று வழுவாமல் மனத்தைச் செலுத்தி நிற்பார்க்குச் சாகாமல் இருத்தலும் கைகூடும்.

விண்ணிறைந்து நின்ற பொருளே உடம்பதன்
உண்ணிறைந்து நின்ற ஒளி (230)

உடம்பினுடைய உள்பாகத்தில் நிறைந்து அசைவற்று நின்ற அருளொளியானது, ஆகாயத்தின்கண் நிறைந்து நிற்கின்ற சிவமே ஆகும்.

4. கண்ணாடி

கண்ணாடி தன்னில் ஒளிபோல் உடம்பதனுள்
உண்ணாடி நின்ற ஒளி (231)

உடம்பிற்கு உள்ளிருக்கும் குண்டலிக்குள் நிற்கின்ற ஒளியானது, கண்ணாடிக்குள் ஒளிக்கிரணங்கள் தோன்றுவது போலவே ஆகும்.

அஞ்சு புலனின் வழியறிந்தால் பின்னைத்
துஞ்சுவ தில்லை உடம்பு (232)

ஐம்புலனையும் பிரணவத்தில் சேர்க்கும் வழியைத் தெரிந்து கொண்டால், பிறகு உடம்பானது இறக்காது.

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவதும் இல்லை உடம்பு (233)

உந்திக் கமலத்தில் மூலாக்கினியானது வெளிப்பட்டுப் பொருந்தி நிற்க, பார்வையைச் செலுத்தி அசைவற நிற்கில் உடம்பு சாகாது.

கண்டத் தளவில் கடிய ஒளி காணில்
அண்டத்தர் ஆகும் உடம்பு (234)

கண்டமாகப் பிரிந்திருக்கும் நேத்திரத்தின் பின்பக்கத்தில் ஒளியைப் பார்ப்பானேயாகில், உடம்பானது வானுலக வாசிகளது உடலைப் போல ஒளியுடலாய் ஆகிவிடும்.

சந்திர னுள்ளே தழலுற நோக்கினால்
சுந்தரம் ஆகும் உடம்பு (235)

இடகலை விளங்கும் இடப்பக்கம் கண்ணின் பொட்டில் பரவும் தன்மையை உடைய அக்கினி கலையானது பொருந்தும்படி பார்த்தால், உடம்பானது எழில் மயமாகும்.

ஆர்க்கும் தெரியா உருவந் தனைநோக்கில்
பார்க்கும் பரமாம் அவன் (236)

தன்னைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாத ஓங்கார சொரூப பரசிவத்தைப் பார்த்தால், அப்படிப் பார்த்தவன் பார்க்கவேண்டிய பர சொரூபத்தைப் போல் விளங்குவான்.

வண்ணமில் லாத வடிவை அறிந்தபின்
விண்ணவ ராகும் உடம்பு (237)

குணமற்ற ஓங்கார உருவத்தை அறிந்த பிறகு, உடம்பானது தேவர்களின் நிலை சேரும்.

நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்
முற்றும் அழியாது உடம்பு (238)

நெற்றிக்கு நேர் மேல் பாகத்தில், சிரசிலிருந்து பதினாறு விரற்கடையளவில் நிறைந்திருக்கின்ற ஒளியைப் பார்த்தால், தூலமாகிய இரண்டு உடம்புகளும் கேடுறாவாம்.

மாதூ வெளியின் மனமொன்ற வைத்தபின்
போதகம் ஆகும் உடம்பு (239)

பெருமை பொருந்திய பரிசுத்தமான சிதாகாய வெளியில் மனத்தை அசைவற்று நிறுத்தினால் உடம்பு இளமையாகும்.

சுத்தமோ டொன்றி மனமும் இறந்தக்கால்
முற்றும் அழியாது உடம்பு (240)

சந்திர கலையால் உணர்த்தப்பெறும் பதினாறு கலைகளும் முழுமையாய், பரிசுத்தமான பிரணவப் பொருளுடன் பொருந்தி, மனமும் நாசமானால் உடம்பானது நாசமாகாது.

## 5. சூனிய காலம் அறிதல்

நிரவி அழலுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணையான் ஆகும் உடம்பு (241)

'சிதாகாசம்' என்னும் சிற்றம்பலத்தில் நெருப்பு வடிவாய் நிற்கும் சிவத்தைத் துய்த்தால், 'அரவணை' என்னும் குண்டலினி ஆற்றலாகிய பாம்பின் மீது தூங்காமல் தூங்குகிற பேரின்ப மயமாகிவிடும் இந்த உடம்பு!

உருவம் தழலாக உள்ளத்தே சென்று
புருவத் திடைஇருந்து பார் (242)

மேலே சொன்ன குறளின் குறிப்புப்படி நெருப்பு வடிவைத் துய்க்கும்போது, பார்வையின் குறிக்கோள் புருவநடுவாக இருக்க வேண்டும்.

புருவத் திடைஇருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கும் உடம்பு (243)

அவ்வாறு பார்த்தால் இந்த உடம்பு தனது தனித்தன்மையை இழந்து சிவப் பேரின்பத்தில் ஒன்றிவிடும்.

அகம்புறம் பேராப் பொருளை அறியில்
யுகம்பல காட்டும் உடம்பு (244)

இவ்வாறு அகத்தும் புறத்தும் பெயராத மெய்ப்பொருளைத் துய்த்தால், உடம்பானது பல யுகங்கள் தாண்டுகிற 'மரணமிலாப் பெருவாழ்வு' எய்தும்!

ஆவிபாழ் போகாது அடக்கி இருந்தபின்
ஓவியம் ஆகும் உடம்பு (245)

உயிரின் கலைகள் வீணாகாமல் இவ்வாறு ஒடுங்கி நின்றால், உடம்பானது சித்திரம் போன்று அசைவற்றிருக்கும்.

'ஓவியமான உணர்வு' என்று திருமூலர் பாடுவது இந்நிலையினையே!

அஞ்சும் அடக்கி அறிவோடு இருந்தபின்
துஞ்சுவ தில்லை உடம்பு (246)

ஐம்புல ஆற்றல்களை ஓங்காரத்தில் ஒடுக்கி நின்றால், உயிர் நீங்காது.

தீயாக உள்ளே தெளிவுற நோக்கினால்
மாயாது பின்னை உடம்பு (247)

மூலக்கனலை எழுப்பி, அகப்பார்வையைச் செலுத்தி நின்றால், உடம்பு மாய்வதில்லை.

தானந்தம் இன்றித் தழல்உற நோக்கிடில்
ஆனந்தம் ஆகும் உடம்பு (248)

இடையீடு இல்லாமல் இவ்வாறு பயின்றால் உடம்பானது பேரின்ப மயமாகிவிடும்.

ஒழிவின்றி நின்ற பொருளை உணரில்
அழிவின்றி நிற்கும் உடம்பு (249)

அங்கிங்கு என்னாதபடி எங்குமாய் நிற்கும் பரம்பொருளை இவ்வாறு துய்த்தால், உடம்பு அழிவில்லாமல் நிற்கும்.

பற்(று)அற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்றும் அழியாது உடம்பு (250)

'பற்றற்றான் தாளினைப் பற்றுக' என்று திருவள்ளுவர் கூறுகிற அந்தப் பற்றற்ற பரம்பொருளை இவ்வாறு யோகப் பயிற்சியினால் பற்றி ஒன்றினால், பருஉடல் நுண்ணுடல் ஆகிய இரண்டுமே, அழிவதில்லை.

## 6. சிவயோக நிலை

அடிமிசை வாயு அடுத்தடுத்து ஏகி
முடிமிசை ஓடி முயல் (251)

ஆதி உணர்வு அபான வாயுவை அடிக்கடி செலுத்திச் சிரசின்மேல் உள்ள பிரணவத்தில் செல்லும்படி முயற்சி செய்.

உண்ணாடி வாயு வதனை உடனிரப்பி
விண்ணோடு மெள்ள விடு (252)

சந்திர சம்பந்தமாகக் கீழ் முகங்கொண்டு செல்லும் அபான வாயுவை, உள்ளே நன்றாகப் பார்த்து, சிரசில் உள்ள பிரணவத்தில் கலக்க வைத்து, சிரசுக்கு மேலே உள்ள பாதத்தில் தோற்றும் சிதாகாயத்தோடு மெதுவாக மேல்நோக்கும்படி செய்துவிடு.

மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து (253)

மெதுவாக அபானனைப் பிராணனோடு கலக்கவைத்து, பூரகம் செய்து, கும்பக நிலையை அடையும்படியான சமயத்தை அறிந்து கொள்ளுங்கள்.

இரேசகம் முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம்பத் தாறு புகும் (254)

அபானனைப் பிராணனோடு கலப்பித்து நிற்கும் காலமானது, அதற்குச் செலவாக வேண்டியது, முப்பத்திரண்டு மாத்திரை அளவின தாகும். பிராணாபானன் மேற்பாகத்தில் சென்று பிரணவ திசையில் நுழையும் காலம் பதினாறு மாத்திரையாகும்.

கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான் (255)

பிராணாபானன்கள் கலந்து சிரசில் நிற்கும்படி சாதகன் அசைவற்று நிலைத்துவிடும்படி செய்வதற்கு, அறுபத்து நான்கு மாத்திரை அளவுள்ள காலமாகும்.

முன்னம் இரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி (256)

முதலில் இரேசகத்தைச் செய்து, பிறகு பூரகத்துக்கு முயற்சி செய்; கடைசியில் செய்ய வேண்டியது கும்பகமாகும். அதைச் செய்.

ஈரைந் தெழுபத் தீராயிரம் நாடியும்
சேருமின் வாயுச் செயல் (257)

இரண்டு பிராணாபான வாயுக்களின் செயலினால் செய்யும் சாதனை கொண்டு, பஞ்சேந்திரிய சக்திகளையும், எழுபத்திராயிரம் நாடிகளின் சத்திகளையும் ஒன்றாய்ச் சேருங்கள்.

வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை
ஈசன்றன் வாசலில் ஏற்று (258)

ஏழு வாசல்களில் உள் நுழையாது திகைத்துக்கொண்டிருக்கும் பிராணாபான வாயுக்களைச் சிவன் வெளிப்படும் வாசலாகிய பிரணவ உச்சியில் உள்ள துவாரத்தில் நுழைத்துவிடு.

தயாவி னில்வா யுவலத் தியங்கில்
தியான சமாதிகள் செய் (259)

அருளினால் பிராண அபான வாயுக்களானவை பிங்கலையில் இயங்கியிருந்தால், தாரணை, தியானம், சமாதிகளைச் செய்வாயாக.

ஆதியாம் மூலம் அறிந்தஞ் செழுத்தினைப்
பேதியா தோது பிணை (260)

யோக சாதனைக்கு முதன்மையாயிருக்கும் பிரணவம் விளங்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு, பஞ்சாக்கரத்தை மாற்றமில்லாமல் ஓதுவாயாக; பிரணவத்தில் பஞ்சாக்கரத்தைச் சேர்ப்பாயாக.

## 7. ஞான நிலை

தற்புருட மாமுகம் தன்னில் தனியிருந்
துற்பன மஞ்சை யுரை (261)

தற்புருட முகமாகிய பெருமை பொருந்திய முகத்தில், பார்வை மாத்திரம் உபயோகித்து நிறுத்தித் தோன்றுகின்ற பஞ்சேந்திரிய சத்திகளை அம்முகத்தில் தோய்க்கவும்.

தற்புருட மாமுகமேல் தாரகை தன்மேலே
நிற்பது ஒளியின் நிலை ... (262)

முகத்திற்கு முன் காணும் ஒளி, பெருமை பொருந்திய அதன் உச்சியின் மீதுள்ள ஆன்ம ஒளி; அந்த ஆன்ம ஒளிக்குமேல் பிரகாசத்தோடு இருப்பது பெரிய ஒளியாகும்.

ஓதிய தற்புரு டத்தடி யொவ்வவே
பேதியா தோது பிணை (263)

மேற்குறளில் சொல்லிய முகத்தின்முன் தோன்றும் ஒளியில் திருவடிகளான பார்வையை ஒன்றோடொன்று பொருந்தும்படி செய்து, வித்தியாசமில்லாமல் பொருத்தமாக, பிரணவத்தில் பொருந்துமாறு கலந்துவிடு.

கொழுந்து வன்னி கொழுவுற வொவ்வில்
எழுந்தா ரகையாம் இது (264)

சுழுமுனை நாடியின் விளக்கத்தால் சிரசில் விளையும் சோதி, சுவாலையுடன் விளங்கி அ, உ, ம வாகிய மூன்று நாடிகளும் ஒன்றாகப் புணரும்படி செய்தால், உடம்பில் உள்ள சோதியானது நன்கு வெளிப்பட்டு ஒளிரும். உடம்பில் மறைந்து கிடந்த சீவன் சிரசின்மேல் ஆன்ம ஒளியாக எழுந்துவிடும்.

மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ்சியைக் கூட்டு (265)

சூரிய சந்திரக் கலைகளைத் தடுத்து ஒன்றோடொன்று சேர்த்து விடுவதால் ஏற்படும் மூலாக்கினியின் நடுவிலே, குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்ற அறிவாகிய நெருப்பை அதனுடன் சேர்த்துவிடு. "சி"யை என்றது பிந்துகலையை.

காலும் தலையும் அறிந்து கலந்திடில்
சாலவும் நல்லது தான் (266)

இடநாடி, பிங்கலநாடி இரண்டையும் பிரணவ உச்சியுடன் கலந்து, அக்கினியுடன் சேர்த்துவிட்டால் மிகவும் நன்மையைக் கொடுக்கும்.

பொன்னொடு வெள்ளி இரண்டும் பொருந்திடில்
அன்னவன் தாளதுவே ஆம் (267)

பிங்கலன் என்ற பெயரையுடைய சூரியனும், வெண்மதியும் ஆகிய இரண்டு நாடிகளும், ஒன்றாகச் சேர்வதில் உண்டாகும் அக்கினி கலையில் வெளிப்படுபவனின் திருவடிகள் அவ்விதமான நாதபிந்துக்களேயாம்.

நின்ற வெழுத்துடன் நில்லா எழுத்தினை
ஒன்றுவிக்கில் ஒன்றே உள (268)

நிறைவு குறைவில்லாமல் சதா பன்னிரண்டு கலையோடு கூடிய சூரியனுடன் தேயவும் வளரவுமாய் நின்ற சந்திர கலையை,

ஒன்றோடொன்று பொருந்தும்படி செய்தால், ஒன்றாவதில் ஏகனாக விளங்கும் பரமசிவ ரூபமே ஏற்படும்.

பேசா வெழுத்துடன் பேசும் எழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம் (269)

பிரணவத்தின் மகரத் தொனியில் அ, உ, ஆகியவை பொருந்தி விட்டால், பரசிவமே குருவாக நின்று வழியை விளக்கிக் காட்டுபவனாகும்.

அழியா உயிரை அவனுடன் வைக்கில்
பழியான தொன்றில்லை பார் (270)

பிராணனுக்கு மூல வித்தாகிய ஒளியைச் சிவன் வெளிப்படும் சுழுமுனைத் துவாரத்தில் போய்ச் சேர்த்தால் கேடே ஏற்படாது. அதை அறிந்துகொள்வாயாக.

## 8. ஞானம் பிரியாமை

பிறந்திட மாலிடம் பேரா திருப்பின்
இறந்திடம் வன்னி இடம் (271)

மனிதன் பிறவிக்கு வருவதற்கும் பிறவியை விட்டு அகல்வதற்கும் உள்ள தத்துவங்கள் வெளிப்படுவது, திருமாலின் ஆதிக்கமுள்ள மணிபூரகமாகிய உந்திக்கமலமே. அந்த இடத்தைத் திறந்து, அந்த ஆற்றலை மேனோக்கும்படி செய்யாதிருப்பின் இறந்தவர் செல்லுமிடமாகிய சுடுகாடுதான்.

சாகா திருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக இரு (272)

உருவம் கடந்த சிரசில் உள்ள ஒளிமண்டலமே, எல்லாத் தத்துவங்களையும் வெளிப்படுத்துவதும் அடக்குவதும் ஆகும். தத்துவங்களை விட்டு, சிவமும் தானும் ஒன்றாக, அந்த நிலையில் இரு.

வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியில் ஒளியாய் உறும் (273)

ஆகாசத்தில் உற்பத்தியான பார்வையால் உண்டாகிய முதிர்ந்த ஒளியானது பரவெளியில் உள்ள ஒளியில் சிவ கலை வடிவைப் பெற்றுப் பொருந்தி நிற்கும்.

மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவார் இறவார் பினை (274)

மறதியற்றும், மனமற்றும், சிரசின்மேல் உள்ள பிரணவத்தில் அறிவைப் பொருத்தி, பார்வையும் அங்கு நிலைபெறில் பிறகு பிறக்க மாட்டார்கள்; சாகமாட்டார்கள்.

குருவாம் பரநந்தி கூடல் குறித்தாங்கு
இருபோதும் நீங்கா திரு (275)

அந்த மௌன நிலையில் அந்தர்முகக் குருவாகிய பரசிவமானது அவ்விடம் வந்து சேரும்படி, இலட்சியமாகக் கொண்டு, இரவுபகல் இரு வேளையும் அதைவிட்டு நீங்காமல் இரு.

சுந்தரச் சோதி துலங்கும் இடமது
மந்திர சக்கரம் ஆம் (276)

பிரணவத்தினாலும், சக்கரம் போன்ற திருவடிகளாலும், வெளிப்பட்ட சகஸ்ரதளமாகிய அந்தப் பிரணவத்தில், பேரழகுள்ள சோதி சொரூபமானது வெளிப்படும்.

தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார் (277)

பரவித்தையும் அபரவித்தையும் பார்க்க முடியாதவர்களுக்கு அதிகத் தொலைவில் இருக்கின்றன. அதை அளந்துசொல்ல முடியாது. பார்த்துத் தெரிந்துகொள்.

ஈரொளி யீதென் றிறைவன் உரைத்தனன்
நீரொளி மீது நிலை (278)

குருநந்தி அல்லது சிவன் இடநாடி, பிங்கல நாடிகளாகிய இரண்டு நாடிகள் இவை என அறிந்து மணிபூரக ஸ்தானமாக நீர்ப்பிரதேசத்தில் மேலும் கீழுமாக வெளிப்பட்டு, சிரசை அடைந்து அக்கினி கலையுடன் சேர்ந்து ஒன்றுவதே மௌனமாகிய பிரணவத்தின் நிலையாகும் என்று அறிவித்தனன்.

அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர் (279)

முடிவும் முதலும் இல்லாத அருமையாகிய சிவச்செல்வம் அழகுள்ள அறிவை ஒளிவிடச் செய்யும் சுடராகும்.

இதுமுத்தி சாதனமென் றேட்டில் வரைந்து
பதிவைத் தனன்குரு பார் (280)

இப்பொழுது சொல்லிவந்த பொருள்கள் வீடுபேற்றுக்கு உரிய சாதனங்கள் என்று நூல்களில் எழுதிப் பரசிவன் ஏற்படுத்தினான். உலகில் உள்ள எல்லாக் குருமார்களுக்கும் அவனே பரம குருவாவான்.

## 9. மெய்ந்நெறி

செல்லல் நிகழல் வருங்காலம் மூன்றினையும்
சொல்லு மவுனத் தொழில் (281)

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் பிரணவ அமைப்பின் தொழில் உனக்கு விளக்கிக் காட்டும்.

பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர் (282)

பஞ்சிற்பட்ட நெருப்புப் பொறிபோல அறிவின் சுடரானது பரவி அவியாது ஒளிரும்.

**இமைப்பிற் பரந்தங் கொடுங்குமின் போல**
**நமக்குட் சிவன்செயல் நாடு (283)**

இமை கொட்டுகிற நேரத்தில் பரவி, உதித்த இடத்தில் மறைந்து விடுகிற மின்னலைப்போல நம் உடலுக்குள் சிவனுடைய இயக்கத்தை நீ பார்த்துத் தெளிவாயாக.

**குவிந்து மனத்தைக் குவிந்துள்ளே யோங்கில்**
**செவிந்துப் பெறுவ தெவன் (284)**

[illegible] பிரணவத்தின் நடுப்பாகத்தில் எழும் சிவ கலைகளை [illegible]பொருத்தி மேலோங்கினால் செபம் செய்து அடைவது என்ன? ஒன்றும் இல்லை.

**காலும் தலையுமொன் றாகக் கலந்திடம்**
**நாலாம் நிலையென நாடு (285)**

பிராண அபான வாயுக்களும், பிரணவ உச்சியும் ஒன்றாய்க் கலந்துநின்ற இடம் துரியத்தானம் என்று நீ பார்.

**மூல நிலமிசை மூன்றா நிலத்தினில்**
**ஆலம் அருந்தும் சிவன் (286)**

மூலாதாரத்திற்கு மேலே மூன்றாம் நிலமாகிய மணிபூரகத்தினில், நஞ்சை உண்டு சிவன் இருக்கின்றான்.

**எழுஞ்சுடர் உச்சியின் மேல்மனம் வைக்கத்**
**தொழிலொன் றிலாத சுடர் (287)**

சந்திர கலை சூரிய கலைகளைச் சேர்ப்பதனால் உண்டாகும் ஒளியை, சிரசை நோக்கி மேல்முகங் கொண்டு செலுத்துவதில் உண்டாகிய அக்கினி கலையை மேன்மேலும் உயரச் செலுத்தி, மனத்தை அதன்மேல் வைக்க, அசைதலாகிய தொழில் இல்லாத அக்கினிக் கொழுந்தாகிய சுடர் உண்டாகும்.

**அடைத்திட்ட வாசலின் மேன்மனம் வைத்துப்**
**படைத்தவன் தன்னையே பார் (288)**

மூடியிருக்கும் பிரணவம் விளங்கும் சிரசின் உச்சியில் மனத்தை வைத்து, வெளியில் எழுந்த தனது ஆன்மாவையே அகண்டமாய்ப் பார்.

**அறுபதொ டாறு வருடம் இதனை**
**உறுதிய தாக உணர் (289)**

தாத்விகங்களான அறுபதும் அத்வாக்கள் ஆறும் சுத்தியாக, ஒரு வருடகாலம் இந்தப் பயிற்சியை உறுதியோடு பழகி அறிந்துகொள்.

**அட்டமா சித்தி அடையுமோர் ஆண்டினில்**
**இட்டம் இதனைத் தெளி (290)**

ஒரு வருட காலத்தில் பெருமை பொருந்திய எட்டுவகை அணிமாவாதிய சித்திகள் உன்னை வந்தடையும். உனக்கு விருப்பம் இருக்குமேயானால் இந்தச் செய்தியை நீ தெளிவாக அறிந்து கொள்வாயாக.

## 10. துரிய தரிசனம்

வன்னிய தெட்டு மதியம் பதினாறு
முன்னிய பன்னிரண்டும் உள் (291)

முதன்மையான சூரியனுக்குப் பன்னிரண்டு கலைகளும், அக்கினிக்கு எட்டும், சந்திரனுக்குப் பதினாறு கலைகளும் இருக்கின்றன.

சூரியன் வன்னியொன் றாகிடிற் சோமனாம்
பாருமின் ஈது பயன் (292)

சூரியனும் மூலாக்கினியும் ஒன்றாகக் கலந்துவிட்டால் சந்திரன் ஒளிருவான். மேலும் இதனுடைய பயனைப் பாருங்கள்.

மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவன் ஆமென்று காண் (293)

சந்திரனும் அக்கினியும் ஒருருவமாக எழுந்து கலந்தால் சூரியன் ஒளிருவான் என்று பார்த்துக்கொள்.

மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல் (294)

சந்திரனுக்குள் சூரியன், அக்கினியைக் கலந்து கொண்டுவந்து சந்திரனுடன் கலக்குமாகில் பதினாறு கலைகளோடு கூடிய பருவம் என்று சொல்லுக.

தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மவாவாசை தான் (295)

வெளியில் உதித்துத் தோன்றும் சூரியனிடத்தில் சந்திரன் கலந்து விட்டால் உலகோரால் உரைக்கப்படும் அமாவாசைத் திதியே யாகும்.

வன்னி கதிரவன் கூடிடில் அத்தகை
பின்னிவை ஆகுமெல் லாம். (296)

அவ்வாறே அக்கினியோடு சூரிய கலை சேர்ந்தால், பிறகு அமாவாசை பூரணை எல்லாம் தானாகவே ஏற்பட்டுவிடும்.

அமாவாசை பூரணை யாகும் அவர்க்குச்
சமனாம் உயிருடம்பு தான் (297)

சூரியனிருக்கும் இராசியில் சந்திரன் சேரும்போது அமையும் அமாவாசையும், சூரியனை விட்டுப் பிரிந்து சந்திரன் எதிர்வீட்டில் சஞ்சரிக்கும்போது பூரணையும் ஆகும். அவ்வாறு செய்யும் சாதகர்க்கு உடம்பும் உயிரும் சமனாக நிற்கும்.

அண்டத் திலுமிந்த வாறென் றறிந்திடு
பிண்டத் திலுமதுவே பேசு (298)

விண்ணிலும் இவ்விதமான வழியே ஆகும் என்று அறிந்துகொள். உடலிலும் அந்த இயக்கங்களையே செய்ய வேண்டும்.

ஏறு மதியம் இறங்கில் உறங்கிடும்
கூறுமப் பூரணை கொள் (299)

சூரியனுடன் சம்பந்தப்பட்டு நின்ற மதி, தனது பக்கமாகிய இடப் பக்கத்தில் வளம்பெறுவது வளர்மதியாகும். இடப்புறம் ஏறிய கலை இறங்கிவிடில், சூரியனுடன் சேர்ந்து இடது கலை உறக்கத்தை அடையும். அதாவது இடது கலை செயல் குறைந்து பூமி பற்றிய ஆசாபாசங்கள் பெருகிச் சூரியன் வளம்பெறும். முன்னதற்குக் கூறியவாறு அறிந்து கொள்வாயாக.

உதிக்கு மதியமும் கண்டங் கிறங்கில்
மதிக்கு மமாவாசை யாம் (300)

சூரியனைக் கலந்து பிரியும் மதியதில் வளர்பிறை உள்ளது. அவ்விதம் வளர்பிறைச் சந்திரனை உண்டாக்கிக்கொண்டு தூங்கினால் ஞானிகளால் மதிக்கப்பெற்ற அமாவாசையாகும்.

*

# நூற் பயன்

## 11. உயர் ஞான தரிசனம்

கொண்டிடு மண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டமு மூழிபிரி யா (301)

சூரியன், சந்திரன், அக்கினியாகிய இந்த மூன்றையும், பிரணவமாய் விளங்கும் சோம மண்டலத் தானமாகிய சிரசின்மேல் உள்ள ஒளியில் கலக்கவைத்துவிடுங்கள். எடுத்த உடம்பையும் காலமானது பிரிக்கச் சத்தியற்றுவிடும்.

வெள்ளி புதனொடு திங்க ளிடமெனத்
தள்ளுமின் கால சரம் (302)

வெள்ளிக்கிழமையையும், புதன்கிழமையோடு திங்கட் கிழமையையும், காலத்தையும் அதன் பலத்தையும் காட்டும்படியான சரத்தை இடப்பக்கம் தள்ளிவிடுங்கள்.

செவ்வாய் சனிஞா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரும் இல் (303)

செவ்வாய், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வலப்பக்கம்! இந்த வழியைச் செய்துகொண்டு வந்தால் எந்த இடையூறும் உண்டாகாது.

வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி (304)

வளர்பிறையில் வியாழக்கிழமையிலும், இடத்திலிருந்து வலத்தில் பாயும். தேய்பிறையில் வலத்திலிருந்து இடமாகவும் பாயும், இந்த இரண்டையும் வளர்பிறை என்றே மதித்துக்கொள்ள வேண்டியது.

வலத்தில் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்துபே ராது செயல் (305)

சனிக்கிழமை மட்டும் இரவும் பகலும் சூரியன் தன்னிடத்தை விட்டுப் பிரியாமல், கலையைப் பிரித்துப் பாய்ச்சவும், செயலை வலப்பக்கத்தில் செய்து அபான வாயுவையும் சூரியகலையோடு செலுத்திவிடு.

இயங்கும் பகல்வலமி ராவிடம் வாயு
தயங்குறல் நாடிக்குட் டான் (306)

குண்டலியாகிய ஓங்கார நாடிக்குள்ளேயே பரவிக் கொண்டிருக்கிற பிராண அபான வாயுக்கள் பகற்காலமெல்லாம் வலப் பக்கத்திலும், இராக்காலத்தில் இடப்பக்கத்திலும் இயங்கிக் கொண்டுள்ளன.

அரசறி யாமல் அவன்பே ருரைத்துத்
தரைதனை யாண்ட சமன் (307)

அரசன் அவன்தன் உருவம் இப்படிப்பட்டது என்பதனைக் காட்டாமலே, அவனுடைய பெயரைப் பகிர்முகப்படுத்தி, உலகத்தை ஆளுகை செய்துகொண்டிருப்பது இந்த ஆன்ம வித்தைக்குச் சமானமாகும்.

கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல் (308)

படிக்காத மூடர்கள் இலட்சுமிகரம் பொருந்திய சொருபத்தை அடைய வேண்டி, கர்மத்தைச் செய்தால் செல்லாதது ஏன்? செல்லும் என்றபடி.

திருவருட் பாலைத் தெரிந்து தெளியின்
குருவிருப் பாமென்று கொள் (309)

இந்த அருள் நிறைந்த ஞானக் குறளை அறிந்து தெளிவடைந்தால் ஒரு ஞானாசிரியன் உனக்கு வந்து சேர்ந்துவிடுவான் என்பதை அறிவாயாக.

கற்கிலும் கேட்கிலும் ஞானம் கருத்துற
நிற்கில் பரமவை வீடு (310)

ஞான நூல்களை வாசிப்பதாலும், ஞானச் சொற்களைக் கேட்பதாலும், ஞானத்தை அடையவேண்டும் என்கிற எண்ணம் உண்டாகி, அதன் விளைவாகப் பயிற்சிகளில் வாய்ப்புக் கைகூடி, வீடுபேறாகிய பரமானந்தம் வந்தடையும்.

★

## 34. விதியின் விதி

சித்தர் மாண்பைச் சித்திரிக்கும் ஒரு சிறுகதை

மனிதர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும், எதிர்கால நிகழ்ச்சிகளையும், ஊர் பெயர் முதலிய விவரங்களோடு கூறுகிற நாடி சோதிட ஏடுகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ இல்லையோ. சில ஆண்டுகளுக்கு முன்பு நாடி சோதிடம் நவரத்தின முதலியாரைச் சந்திக்க நேரிட்டபோது, முதன்முதலாக அவரிடம் நான் கேட்ட கேள்வி, "ஐயா, இந்த ஏடுகள் எல்லாம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?" என்பதுதான். இதற்கு முதலியார் சொன்ன பதில் விந்தையாக இருந்தது.

ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, தஞ்சாவூர் நூல் நிலையத்தில் புழுதி மூடிச் செல்லரித்துக் கொண்டிருந்த ஏட்டுக் குவியல்களை, ராத்தல் கணக்காக நிறுத்து ஏலம் போட்டார்களாம். அந்த ஏலத்தில் நம்முடைய முதலியாரும் சில ராத்தல்கள் நிறுத்து வாங்கிக்கொண்டு வந்தாராம்!

இந்த நிகழ்ச்சியை ஆராய்வதற்கு இது இடம் இல்லை. அந்த ஏடுகளின் தலையெழுத்து—அவற்றின் ஜாதகம்—எப்படியெல்லாம் இருக்கிறதோ, யார் கண்டார்கள்! ஆனால் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு சிறப்பு அந்த ஏடுகளின் நுண்ணிய சின்னஞ் சிறிய கூட்டெழுத்துக்கள்தாம்.

அவற்றைப் பார்த்து அதிசயித்துப் போனவனாக, சோதிடர் அவர்களிடம் அவருக்குப் பயன்படாத ஏதாவது ஒரு கட்டு ஏட்டை எனக்குத் தர முடியுமானால், தராசும் படிக்கல்லும் இல்லாமல் கொடுக்கும்படி தயவாகக் கேட்டேன். அதன் பயனாக ஓர் ஏட்டுத் தொகுதி எனக்குக் கிடைத்தது. அதில் ஜாதகங்களின் குறிப்பே இல்லை. 'கிரகசாந்தி' என்று தலைப்பிலே மகுடம் சூட்டியிருந்தது. கிரகங்களுக்குத் தோஷ பரிகாரம் செய்கிறார்களே அதைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறது போலும் என்று நினைத்தேன். ஆனால் படித்துப் பார்த்தால் அது ஒரு கதையாக இருந்தது. 'கட்டளைக் கலித்துறை' என்ற யாப்பு முறையில் அந்தாதி வரிசையில் எழுதப்பட்டிருந்தது அது.

சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு விநோதமாகவும், நம்பிக்கை உள்ளவர்களுக்கு மேலும் உறுதிப்பாடாகவும் இருக்கும் என்று கருதிக் கதையின் சாரத்தைக் கீழே தருகிறேன்.

## 2

பொதிகைமலைச் சாரலில் மாலைநேரம். இன்பமான தென்றற் காற்றிலே எங்கிருந்தோ புல்லாங்குழலின் ஒலி சுகமாக வருகிறது. அந்த ஒலியோடு இணைந்து ஆடுமாடுகளின் கழுத்திலே கட்டியுள்ள மணிகளும் சலங்கைகளும் 'கணகண' வென்று ஒலி செய்கின்றன. புல்லாங்குழலின் ஓசை நின்றபோதெல்லாம் ஊடே ஊடே ஒரு பாடல் கேட்கிறது :

மோன நிலையினில் முத்தியுண் டாமென்றே
கானமாய் ஊதுகுழல்—கோனே
கானமாய் ஊதுகுழல்

அருகிலே சென்று பார்த்தால், உலகப்பற்றையெல்லாம் துறந்த மகான் ஒருவர், மரவுரியே உடையாகவும் உடலின் தோற்போர்வையை ஊடுருவித் தென்னிக்கொண்டு நிற்கும் எலும்புப் பூட்டுக்களே கவசமாகவும், வெயிலையும் குளிரையும் காற்றையும் கனலையும் மழையையும் கண்டு சிரிக்கிற ஓர் அசாதாரணப் புன்னகையே முகத்திற்கு ஒப்பற்ற ஆபரணமாகவும் விளங்கும்படியாக இந்த மந்தையை நடத்திக் கொண்டு செல்கிறார்.

மாலைவெயிலின் மஞ்சள் நிறம் அவர் உடம்பில் படும்போதெல்லாம் ஒரு குதி குதித்துக்கொண்டே புல்லாங்குழலை ஊதுகிறார். அதிலிருந்து வருகிற ஒலி, இரு வினைகளையும் வென்ற ஞானியின் பேச்சைப்போல, இராகம் தாளம் என்ற மனித வரம்புகள் இரண்டையும் கடந்து, அந்த இரண்டினாலும் அளக்கமுடியாத விரிவும் ஆழமும் உள்ளதாய், எங்கோ மன உலகின் ஓர் எட்டாத தொலைவிலிருந்து புறப்பட்டு வரும் ஆன்மகீதமாக இருக்கிறது!

இடையிடையே அந்தப் புல்லாங்குழலை உதட்டிலிருந்து எடுத்துவிட்டு, ஒரு குழந்தை சிரிப்பதைப் போன்று கபடமற்ற ஞானச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே பாடுகிறார் அவர்!

எனதென்றும் யானென்றும் இல்லா திருக்கவே
தனதாக ஊதுகுழல்!—கோனே
தனதாக ஊதுகுழல்!

இப்படிப் பாடிவிட்டுத் தானே தனதான ஓர் இராகத்தில், ஓர் ஒலி-ஒழுங்கில், புல்லாங்குழலில் இருந்து அதிமானுட வேகத்தில் ஒரு கீதம் சிறகடித்துப் பறந்து வருகிறது. அது நின்றதும் மீண்டும் பாடல்;

ஓடித் திரிவோர்க்கு உணர்வுகிட் டும்படி
சாடியே ஊதுகுழல்—கோனே
சாடியே ஊதுகுழல்!

அடுத்த கணம் நடந்து செல்கிற ஆடுமாடுகளைச் சாடி ஓடும்படி துரத்திவிட்டு, அந்தச் சாட்டத்தில் தானும் சேர்ந்து குதித்துக் குதித்து விளையாடிக்கொண்டே சிரிக்கிறார் அந்த ஞானி—இடைக்காட்டுச் சித்தர்.

ஆமாம். 'இடைக்காடர்' என்றும், 'இடைக்காட்டுச் சித்தர்' என்றும் வழங்கும் மகான்; சிறு பிராயத்தில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டே மலைப்பக்கமாக வந்தபோது, நவநாத சித்தர்களில் ஒருவர் எதிர்ப்பட அவருக்குப் பால் கறந்து கொடுத்து உபசரித்து அதற்கு வெகுமதியாக ஞானப்பாலையே பருகிக் கொண்டவர்! அன்றிலிருந்து.

> மனம் எனும் மாடு அடங்கில்
> தாண்டவக்கோனே!—முத்தி
> வாய்த்தது என்று எண்ணேடா
> தாண்டவக்கோனே!

என்று பாடியவாறு ஆடுமாடுகளுடன் அதே பொதிகை மலைச் சாரலில் நிலையாக இருந்துவிட்டார். ஜீவப் பசுக்களை மேய்த்துத் திரியும் பசுபதியான இறைவனைக் கண்டு களிக்கும் ஆனந்த அனுபவத்தில், இந்தப் பசு மந்தைகளோடு சேர்ந்து தானும் எத்தனையோ ஆண்டுகள் புல்லாங்குழலை ஊதியவாறு அந்த மலைப் பிரதேசத்திலேயே கழித்து விட்டார் அவர்! இப்பொழுதோ உலகத்தில் 'கோளாறு' ஆரம்பம் ஆகிற காலம் என்று தெரிந்துகொண்டுவிட்டார். எனவே, அவருடைய தீர்க்கதரிசனமான ஞானம் ஒரு வழிவகுக்க முனைந்தது!

## 3

நாடெங்கும் பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான பஞ்சம் வர இருக்கிறது என்றும், கிரகங்கள் நூதனமான முறையில் பயங்கரமாக வக்கரிக்கின்றன என்றும், வான சாஸ்திரிகளும் சோதிடர்களும் எச்சரிக்கை செய்தார்கள். அரசாளும் மன்னவரும் நிலத்தை ஆளும் வேந்தர்களும் நிலைகலங்கினார்கள். இயற்கையை எதிர்த்து நிற்கக் கூடிய வலிமை யாருக்குத்தான் உண்டு?

> சாதனங்கள் செய்தவர்கள்
> சாகார் குயிலே—எல்லாத்
> தத்துவங்கள் தேர்ந்தவர்கள்
> வேகார் குயிலே!

என்று மரக்கிளைகளில் உள்ள குயில்களோடு பேசிக்கொண்டே, எருக்கின் இலைகளைப் பறிக்க ஆரம்பித்தார் இடைக்காடர். பறித்து அவைகளைக் கட்டுக்கட்டாக வாழை நாரினால் இறுக்கிப் பிணைத்துத் தோளிலே சுமந்துகொண்டு, மலைச்சாரலிலே தமது குடிசையிலே கொண்டு கொட்டினார். அம்பாரம் அம்பாரமாகக் கொட்டினார்!

எருக்கின் இலைகளை ஆடுமாடுகள் பிரியத்தோடு தின்னவா செய்யும்? ஒவ்வொரு ஆட்டுக்கும் மாட்டுக்கும் பக்கத்திலே போய் நின்றுகொண்டு புல்லாங்குழலை ஊதினார். எருக்கின் இலையை ஒவ்வொன்றாய் எடுத்து இசைக் கிறக்கத்திலே நிற்கும் ஆடுகளின் வாயிலே கிறக்கத்தோடு கிறக்கமாய்க் கொடுத்தார். பசுக்களின் பக்கத்தில் நின்றுகொண்டு,

ஒன்றைப் பிடித்தோர்க்கே—பசுவே
உண்மை வசப்படுமே!
நின்ற நிலைதனிலே—பசுவே
நேர்மை அறிவாயே!

என்று பாடிக்கொண்டே எருக்கிலையைக் கொடுத்தார்!

நாளாக நாளாக ஓர் இலை, இரண்டு இலை, மூன்று இலை என்றாகி, சில தினங்களில் கொப்புக் கொப்பாகவே கொடுக்க ஆரம்பித்துவிட்டார். புல்லாங்குழலும் பாட்டுமாகச் சேர்ந்து அந்த ஆடுமாடுகளுக்கு எருக்கிலையிலே ஓர் அபாரமான பிரியத்தையே உண்டாக்கிவிட்டன!

## 4

கோளாறான பெரும் பஞ்சம் வந்தது. இந்த உலகத்தின் மக்களை மட்டும் அல்லாமல், வானையும் பூமியையுமே ஆட்டிவைக்கும் ஒன்பது பேர்களும், படி அளக்கும் நவக்கிரக மூர்த்திகளும், தங்களுடைய சாரத்திலே வக்கரித்து நின்றார்கள். பஞ்சம் கோர தாண்டவம் ஆடியது!

நிலம் எல்லாம் தீய்ந்தது. மக்கள் பசியால் மடிந்தனர். செடி கொடிகள் எல்லாம் கருகி விழுந்தன. மரம் மட்டைகள் எல்லாம் வெயிலிலே பாளம் பாளமாக வெடித்துச் சிதறின. ஆறுகளும் குளங்களும் நீர்ச் சுனைகளும் அக்கினி வெள்ளத்தில் உருகி ஓடின. பொதிகைச் சாரலில் கானல் காய்ந்தது! மலையின் பாறைகளில் எல்லாம் பெரிய பெரிய வெடிப்புக்கள் விழுந்து, அவற்றிலிருந்து தீப்பிடித்து எரிந்த மாதிரி வெப்பம் கொப்புளித்தது.

நவக்கிரக நாதர்கள் தாங்கள் நிற்கும் கோட்சாரத்திலே வக்கரித்துக் கொண்டு பயங்கரமாகச் சிரித்தார்கள். அப்படிச் சிரிக்கும் போதே 'சட்'டென்று சூரியன் சிரிப்பை நிறுத்தினான். எப்பொழுதும் அவனைப் பின்தொடரும் சந்திரன் இதுகண்டு தானும் வாயடைத்தான். செவ்வாயோ கையிலே தாங்கிய வேலைச் சுழற்றிக்கொண்டே கூர்மையான கண்களால் என்னவென்று உற்றுப்பார்த்தான். ஒப்பற்ற வடிவினனான புதன் மௌனமாக நிலைமையை உணர்ந்தவனாய், ஸௌம்யமாக நின்றான். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் குருவும இந்த மூவுலகத்துக்குமே புத்திமயமாக இருப்பவனுமாகிய வியாழனோ, பூமியிலிருந்து வக்கரித்துக்கொண்டு நின்ற தனது பார்வையை மீண்டும் திருப்பாமல், கையை முதுகுப் புறமாகக் கொண்டு வந்து கீழே சுட்டிக் காட்டினான். சர்வ சாஸ்திர சம்பன்னனாக விளங்கும் சுக்கிரனோ என்றால், பனியைப் போன்றும் மல்லிகையைப் போன்றும் வெண்மை யான காந்தியை வீசும் தனது சரீரத்தை அசைக்காமலே சிரித்தான். ராகு தன்னுடைய உடம்பை மகாவீரியத்தோடு ஆட்டினான். கேதுவோ ரௌத்ராகாரமாக 'அட பிருகஸ்பதிகளே!' என்று சினத்தோடு பிருகஸ்பதி உள்ளிட்ட மற்ற எட்டுப்பேரையுமே சீறினான்! சனி அப்பொழுதுதான் 'என்ன விஷயம்?' என்று கேட்டுக்கொண்டே சம்மணம் போட்ட காலைச் சுடக்குப்போட்டுக் கொண்டான்!

செவ்வாய் சொன்னான்: "இமே பூமியில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் நம்முடைய ஆளுகை நடக்கவில்லை. என்ன அக்கிரமம் இது!"

செவ்வாய் சுட்டிக்காட்டிய இடத்தில் இடைக்காட்டுச் சித்தர் நின்று பால் கறந்துகொண்டிருந்தார்.

சாவாது இருந்திடப் பால்கற—சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற!
வேவாது இருந்திடப் பால்கற—வெறும்
வெட்ட வெளிக்குளே பால்கற!

என்று உற்சாகமாகப் பாடிக்கொண்டே, எந்தக் கோடையிலும் பஞ்சப்படாத தம்முடைய எருக்கிலையை ஆடுமாடுகளின் வாயிலே கொடுத்துக்கொண்டே அவற்றின் முதுகைத் தட்டிக்கொடுத்துப் பால் கறந்து கொண்டிருந்தார்!

'புறப்படுங்கள் அங்கே!' என்றான் கேது சீற்றத்தோடு.

'புறப்படுக!' என்றான் ராகு.

'அதுமட்டும் இல்லை. இப்பொழுது நாம் எந்த வரிசையில் எந்த அணிவகுப்பில் நிற்கிறோமோ அதே கிரமத்தில் செல்லவேண்டும்!' என்றான் வியாழன்!

'ஆமாம். அதுதான் முக்கியம். இராசி புரண்டுவிடாமல்!' என்று எச்சரிக்கை செய்தான் புதன். 'ஆம்' என்றான் சுக்கிரன்.

'சரி' என்று அங்குமிங்கும் இழுத்தான் சனி.

கிரக மூர்த்திகள் ஒன்பதுபேரும் அப்படியே இடைக்காட்டுச் சித்தருடைய ஆசிரமத்துக்கு விரைந்தார்கள், அதே அணிவகுப்பு குலையாதவாறு!

## 5

'வருக! வருக! நவநாத மூர்த்திகளே வருக! உங்கள் வரவு நல்வரவு ஆகுக!' என்றார் சித்தர். பால் கறந்து கொண்டிருந்தவர் கைக்கலசத்தோடு எழுந்து விட்டார்!

இருவினையாம் மாடுகளை
ஏகவிடு கோனே!
அடங்கும்மன மாடுதனை
அடக்கிவிடு கோனே!

என்று பாடிக்கொண்டே, அந்தப் பசுமாடுகளையும் ஆடுகளையும் ஓட்டிவிட்டு, ஒரு கலசத்தில் பசுவின் பாலும், இன்னொரு கலசத்தில் ஆட்டின் பாலுமாக எதிர்கொண்டு உபசாரத்தோடே வந்தார்.

'இந்தக் குடிசை இன்று புனிதம் அடைந்தது. ஏதோ இந்தப் பஞ்ச காலத்தில் என்னால் முடிந்த அதிதி மரியாதை இதுதான். உண்டு கௌரவிக்க வேண்டும்' என்றார் இடைக்காடர்.

வேகமாக வந்த சூரியன் உபசாரத்தைக் கண்டு திகைத்தான். சந்திரனுக்கோ பால் என்றால் கொண்டாட்டம். இராகு கேதுக் களுக்குச் சொல்லவே வேண்டியதில்லை. புதன் புத்திசாலியாகையால் எப்பொழுதுமே பால் இந்த உடம்புக்கு எவ்வளவு இதமான பொருள் என்பதை நன்கு உணர்ந்தவன். செவ்வாய்க்கு ஆட்டின் பால் என்றால் நாக்கிலே தண்ணீர் சொட்டும். சனி வேகமாக ஒரு முடிவுக்கு வருவதில்லை. ஆனாலும் பால் சாப்பிட யார் மறுப்பார்கள்? வியாழனோ 'அதிதி மரியாதை', 'விருந்து உபசாரம்' என்றால் அதை அவமதிக்கிறதே இல்லை!

ஒன்பது பேரும் பால் பருகினார்கள். சுத்தமான பசுவின் பால். ஆரோக்கியமான ஆட்டின் பால். அதுவும் எருக்கின் இலைகளையே உட்கொண்டு சுரந்த அபூர்வமான பால்; சித்தருடைய உபசரிப்பிலே திவ்வியமாக இருந்தது அதைச் சாப்பிட!

சற்று நேரத்திலே செவ்வாய்க்குக் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளலாம் என்று தோன்றியது. புதனுக்குப் புத்தி மயங்குவது போல இருந்தது. சனியோ உட்கார்ந்தவாறே மெதுவாகச் சாய்ந்தான். குரு மௌனமாகக் கிறங்கினான். மற்றவர் களும் அப்படியே!

ஒன்பது மூர்த்திகளுக்குமே அந்தப் பால் ஒரு வகையான கிறக்கத்தைக் கொடுத்தது. அப்படியே மயங்கிப்போய் உறங்கி விட்டார்கள்.

சித்துக்கள் விளையாடுகிற ஒரு ஞானப் பித்தனுடைய புன்னகை முகத்திலே ஓடுகிறவராய், அந்த மகான் இடைக்காட்டுச் சித்தர் மெதுவாக நடந்துவந்தார். ஒன்பது பேரும் தங்களுக்குள்ளே கிரமப் படுத்தி வக்கரித்திருந்த அந்த இராசி அணிவகுப்பைப் பார்த்தார். அவர் முகத்தில் புன்னகை அரும்பியது. அவருடைய மனத்தினுள்ளே ஒரு வினாடி ஏதோ கணிதம் ஓடியது. புல்லாங்குழலை எடுத்து ஏதோ கோடு போடுபவர் போலக் காற்றிலே கீறிப் பார்த்தார். மறுவிநாடி மெதுவாக அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கினார். தம்முடைய கணித வரம்புப்படி வேறு ஒரு இராசிக்கிரமத்திலே படுக்க வைத்தார். நகர்ந்து நின்று புல்லாங்குழலை எடுத்து ஊத ஆரம்பித்துவிட்டார் அவ்வளவுதான்! என்ன ஆயிற்று?

'மடமட'வென்று வானத்திலே இடி இடித்தது. 'பளீர் பளீர்' என்று கண்ணைப் பறிக்கிற மின்னல்கள். 'ஓ' என்று மேகத்தையே கிழித்துக்கொண்டு ஒரு காற்று. மறுகணம் 'தடதட'வென்று மழை; பிரளயாகாரமாகக் கொட்டுக் கொட்டென்று கொட்டியடித்தது!

ஆடு மயிலே—நடம்
    ஆடு மயிலே—எங்கள்
ஆதியணி சேடனைக் கண்டு
    ஆடு மயிலே—நடம்
    ஆடு மயிலே!

என்று, அந்த மேகத்தையும் மழையையும் பார்த்துப் பாடிக்கொண்டே ஆட ஆரம்பித்து விட்டார் இடைக்காடர்!

நவக்கிரக நாதர்கள் தங்கள் மயக்கத்திலிருந்து எழுந்தபோது ஆற்றிலே வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. சுனைகளிலே தண்ணீர் அலைவீசிக் கொண்டிருந்தது! அருவிகள் எல்லாம் 'திண் திண்' என்று விழுந்து கொண்டிருந்தன!

'என்ன அக்கிரமம்!' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் செவ்வாய். 'கிறக்கந்தான். ஆனாலும் எத்தனை சுகமாக இருந்தது!' என்று சொல்லிக்கொண்டே அமர்ந்தான் சுக்கிரன். போதை இன்னும் சரியாகத் தெளியாமல் உடம்பை நெளித்துக்கொடுத்தான் சனி. மற்றவர்களும் விழித்துவிட்டார்கள்.

'என்ன நடந்தது?' என்று கேட்டுக்கொண்டே கவர்ச்சிகரமான புன்னகையோடு சித்தரைப் பார்த்தான் புதன்.

'விழித்திருக்கும்போது உங்கள் இஷ்டத்துக்கு நீங்கள் விளையாடு கிறீர்கள். என் இஷ்டத்திற்கு நான் விளையாட வேண்டும் என்றால் நீங்கள் அயர்ந்து தூங்குகிற சமயமாகத்தான் பார்க்க வேண்டியதிருக் கிறது. வேறு என்ன செய்ய? உபசாரத்திலே உங்களை மயக்கினால் தான் நாங்கள் எங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடிகிறது!' என்றார் சித்தர்.

சுக்கிரனும் சந்திரனும் மெதுவாகச் சிரித்தார்கள். வியாழனோ சித்தரையும் அவருடைய விளையாட்டினால் நேர்ந்த மாறுதலையும் கண்கொட்டாமல், இமையை நன்றாக அகல விரித்து, நீண்ட நேரம் பார்த்தான். அந்தக் குரு—பார்வையில் பூமியைப் போலவே கிரக நாதர்களின் உள்ளமும் குளிர்ந்துவிட்டது!

அந்தக் குளிர்ந்த தருணத்திலேயே சித்தர் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். மறு வினாடி வேதப் பொருளை ஒலிக் கோவையிலே உரைசெய்யும் அந்த அற்புதமான புல்லாங்குழலின் மாய கீதம் பொதிகைச் சாரலிலே ஒலிக்கத் தொடங்கியது. அந்த ஒலியின் இணைப்பாக ஆடுமாடுகளின் சலங்கைகள் ஒலித்தன. அந்த இன்னொலியிலே சொக்கியவாறு, மனம் என்ற வண்டின் ரீங்காரமாக அந்த மகானுடைய தெய்விகப் பாடலும் அங்கங்கே கேட்டது:

அல்லல் வினை இல்லை என்று
 தும்பீ பற—பரம
ஆனந்தம் கண்டோம் என்று
 தும்பீ பற!


தொல்லை வினை நீங்கிற் றென்று
 தும்பீ பற—பரஞ்
சோதியைக் கண்டோம் என்று
 தும்பீ பற!"

★


# 35. இணைப்புகள்

## அ) அவ்வையின் குறள் விளக்கப்படங்கள்

அவ்வையின் குறளிலே விளக்கம் பெறுகிற ஆன்ம ஆற்றலானது, இந்த மனித உடம்பில் எப்படி மையங்கள் கொண்டுள்ளது என்பதையும், இந்த ஆற்றல் மேலெழுந்து எவ்வாறு மண்டலமிட்டு இயங்குகிறது என்பதையும், சுந்தர மாணிக்க யோகீசுவரரும் அவரைப் போலவே மெய்ஞ்ஞான யோகம் பயின்று தேர்ந்த பெரியோர்களும் வரைபடமாகச் சித்திரித்துள்ளார்கள். அந்த விளக்கப் படங்களில் இரண்டை இங்கே இணைத்துள்ளேன்.




திருமூலர் பாடுகிற "ஐந்து கரத்தன் ஆனை முகத்தன்"
ஞானிகள் காணும் அக வடிவம்


நடன ஸ்தானம்
ஆஞ்ஞா சக்கரம்
இந்திரன்
அக்கினி
ஈசானன்
கடகம் சந்திரன்
சிம்மம் சூரியன்
மிதுனம் புதன்
கன்னி புதன்
சூரியன்
அனாகதம்
பஞ்சபூத சந்திரன்
ரிஷபம் சுக்கிரன்
துலாம் சுக்கிரன்
பிராணன்
மணி
பூரகம்
அபானன்
குபேரன்
எமன்
மேஷம் அங்காரகன்
விருச்சிகம் அங்காரகன்
சந்திரன்
சுவாதிட்டானம்
மூலாதாரம்
மீனம் குரு
தனுசு குரு
கும்பம் சனி
மகரம் சனி
வாய்வு
நிருதி
வருணன்
குண்டலி-வடிவம்


## சக்கர இணைப்புக்கள்

### ஆ) இறையாற்றல் எந்திரங்கள்


சிவயோகி இரத்தினசபாபதியாரிடம் மந்திரப் பயிற்சியில் தேர்ந்திருந்த சில சித்தர்களின் மரபுவழிச் சக்கரங்களின் படங்கள் ஏராளமாக இருந்தன. திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து இருபத்தோராவது குருமகா சந்நிதானம் அவர்களது ஆட்சியின்போது வெளிவந்த கணபதி, முருகன், ஆடவல்லான் ஆகிய நூல்களிலும், திருமந்திரம் நான்காவது தந்திரம் பஞ்சாட்சர தீப விளக்க உரையிலும் காண்கிற சில சக்கரங்களும், தம்மிடம் இருந்த சங்கரங்களும் ஒத்திருந்தமை கண்டு, சிவயோகியார் மகிழ்ச்சியடைந்தார்கள். அந்தச் சக்கரங்கள் சித்தர்களின் இலக்கிய மரபையொட்டியனவாக இருப்பதால், சிவயோகியார் தமது குறிப்புகளிலிருந்து இந்தச் சக்கரங்களைத் தந்தார்கள்.

சித்தர்களின் வழிபாட்டிலே இந்தச் சக்கர முறைகளைப் பயில்வார்க்கு, எதிர் காலத்தில் இவை பயன்படலாம் என்னும் எண்ணத்தோடு அவற்றை இங்கே இணைத்துள்ளேன்.


## ஞானநூல் வகுத்த விநாயகர் கோவிலமைப்பு




மஞ்சள் விநாயகர் எண் + எழுத்து எந்திரம்




## சக்தி விநாயக எந்திரம்




## உச்சிஷ்ட கணேச எந்திரம்




## வக்கிரதுண்ட விநாயக எந்திரம்




## திருமேவு கணபதி எந்திரம்



## கணபதி மூவுலக ஈர்ப்பு எந்திரம்



## திருமூலர் வழங்குகிற ஆலமுண்டானது ஐம்பத்தொரெழுத்துச் சக்கரம்.



## இருபத்தைந்து அறைச் சக்கரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வா | ய | ந | ம |
| ம | சி | வா | ய | ந |
| ந | ம | சி | வா | ய |
| ய | ந | ம | சி | வா |
| வா | ய | ந | ம | சி |

## திருமூலர் வகுத்த திருவம்பலச் சக்கரம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம | சி | வ | ய | ந | ம | சி |
| ம | ம | ம | ம | ம | ம | ம | ம | ம | ம | வ |
| ந | ம | ந | ந | ந | ந | ந | ந | ந | ம | ய |
| ய | ம | ந | ய | ய | ய | ய | ய | ந | ம | ந |
| வ | ம | ந | ய | வ | வ | வ | ய | ந | ம | ம |
| சி | ம | ந | ய | வ | சி | வ | ய | ந | ம | சி |
| ம | ம | ந | ய | வ | வ | வ | ய | ந | ம | வ |
| ந | ம | ந | ய | ய | ய | ய | ய | ந | ம | ய |
| ய | ம | ந | ந | ந | ந | ந | ந | ந | ம | ந |
| வ | ம | ம | ம | ம | ம | ம | ம | ம | ம | ம |
| சி | ம | ந | ய | வ | சி | ம | ந | ய | வ | சி |


## மந்திரமேனிச் சக்கரம்




## திருவம்பல உள்ளொலி எந்திரம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ஜ | ஶீ | வ | ய | ஶி | ஜ | வ | ய | ந | ஶி |
| ய | ந | வ | ஶி | ஜ | வ | ஶி | ய | ந | ஜ | வ |
| ஜ | வ | ய | ந | ஶி | ய | வ | ஶி | ஜ | ய | ந |
| ஶி | ய | ந | ஜ | வ | ந | ந | ஜ | ஶி | வ | ய |
| வ | ஶி | ஜ | ய | ந | ஜ | ய | ந | வ | ஶி | ஜ |
| ஹ | ர | ஹ | ர | ஓம் | ௐ | ஓம் | ஹ | ர | ஹ | ர |
| வ | ஜ | ந | ய | ஶி | ஓம் | ஶி | ந | ய | வ | ஜ |
| ஶி | ந | ய | வ | ஜ | ஹ | ஜ | ஶி | வ | ந | ய |
| ஜ | ஶி | வ | ந | ய | ர | ய | வ | ஶி | ஜ | ந |
| ய | வ | ஶி | ஜ | ந | ஹ | ந | ய | ஜ | ஶி | வ |
| ந | ய | ஜ | ஶி | வ | ர | வ | ஜ | ந | ய | ஶி |

அகவழிபாட்டு எந்திரம்



## யகாரமையச் சக்கரம்




## தார பஞ்சாக்கரம்



சிட்டஞ்செழுத்து எண்ணெழுத்துச் சக்கரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 17 | சி | வ | ய | ந | ம | 1 |
| 16 | ம | சி | வ | ய | ந | 2 |
| 15 | ந | ம | சி | வ | ய | 3 |
| 14 | ய | ந | ம | சி | வ | 4 |
| 13 | வ | சி | ய | ந | ம | 5 |
| 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 |


## அறுகோணத் தாமரைச் சக்கரம்




அம்பலத்துள் ஐந்தெழுத்துச் சக்கரம்




மனோன்மணித் தாமரை




ஓங்காரத் தாமரைச் சக்கரம்




அகார பீட இலிங்கச் சக்கரம்




வசிய எழுத்து எந்திரம்



## ஆதார நிலைச் சக்கரம்



### எழுத்திடையீட்டுச் சக்கரம்



## கூத்தபிரான் ஆடல்காண் சக்கரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| வ | சி | ய | ந | ம |
| ய | வ | சி | ந | ம |
| ந | ய | வ | சி | ம |
| ம | ந | ய | வ | சி |

# சித்தர்களின் எண்கணக்கிலான மகப்பேறு எந்திரம்

| | | | |
|---|---|---|---|
| 42 | 49 | 2 | 7 |
| 6 | 3 | 46 | 45 |
| 48 | 43 | 8 | 1 |
| 4 | 5 | 44 | 47 |

தாமிரத் தகடு அல்லது தங்கத்தகடு. இதைச் செய்யவும், இந்தப் பூசனை தொடங்கவும், அவரவர் சாரத்தின்படி திங்களை (சந்திரனை)ப் பொன்னன் (குரு) என்னும் வியாழன் கோட்சாரத்தில் நோக்குகிற காலம் சிறப்புடையது என்பது முனிவர் வாக்கு. தம் சாரத்தில் ஐந்தாவது வீட்டை வியாழன் நோக்குகிற கோட்சாரம் சிறப்பானது என்பதும் சித்தர்களான கணியர்களின் விதியாகும்.

## செல்வம் தரும் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 44 | 51 | 2 | 7 |
| 6 | 3 | 48 | 47 |
| 50 | 45 | 8 | 1 |
| 4 | 5 | 46 | 49 |

தாமிரத் தகடு அல்லது தங்கத் தகடு. அவரவர் சாரத்தில், இரண்டு அல்லது ஒன்பது அல்லது பதினொன்றாம் வீட்டை வெள்ளி நோக்குகிற கோட்சாரத்தில் இந்த வழிபாட்டை மேற்கொள்வது நலம்.

## நோய் தீர்க்கும் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 13 | 20 | 2 | 7 |
| 6 | 3 | 17 | 16 |
| 19 | 14 | 8 | 1 |
| 4 | 5 | 15 | 18 |

தாமரத் தகடு அல்லது தங்கத் தகடு. ஆறாவது வீட்டை நற்கோள் நோக்குகிற கோட்சாரத்தில் வழிபாடு தொடங்குவது நலம் பயக்கும்.

## கண்ணேறு அல்லது செய்வினை விலக்கும் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 3 | 10 | 2 | 7 |
| 6 | 3 | 7 | 6 |
| 9 | 4 | 8 | 1 |
| 4 | 5 | 5 | 8 |

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. நல்லோரையில் வழிபாடு செய்வது நலம். வெள்ளி அல்லது செவ்வாய்க்கிழமை கூடிய அமாவாசை சிறப்புடையது என்று சில சித்தர் சுவடிகள் கூறுகின்றன.

## எதிரியை வெற்றிகொள்ளும் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 15 | 22 | 2 | 7 |
| 6 | 3 | 19 | 18 |
| 21 | 16 | 8 | 1 |
| 4 | 5 | 17 | 20 |

தாமிரத்தகடு அல்லது தங்கத் தகடு. ஆறாவது வீட்டை நற்கோள் காணும் கோட்சாரத்தில் வழிபாடு இயந்றுவது நற்பலன் நல்கும். தனது சாரத்தில் மூன்றாவது வீட்டுக்கு நாயகனான கோள் வலிமை பெறுகிற நன்னாள் சிறப்புடையது.

## ஈர்ப்பு அல்லது வசியம்

| | | | |
|---|---|---|---|
| 30 | 37 | 2 | 7 |
| 6 | 3 | 34 | 33 |
| 36 | 31 | 8 | 1 |
| 4 | 5 | 32 | 35 |

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. மூன்றாவது வீட்டை நற்கோள் காணுங் கோட்சாரத்தில் வழிபடல் நன்று. இந்த வழிபாட்டில் புனுகு, சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களுக்கு முக்கியம் தரப்படும்.

## தேர்வுகள், போட்டிகள் போன்ற முயற்சிகளில் வெற்றி தரும் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 23 | 30 | 2 | 7 |
| 6 | 3 | 27 | 26 |
| 29 | 24 | 8 | 1 |
| 4 | 5 | 25 | 28 |

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. மூன்று, பத்து, ஆறு ஆகிய வீடுகளில் நற்கோளின் பார்வை விழ்கிற கோட்சாரம் நன்று.

## வெற்றியும் புகழும் தருகிற பொதுச் சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 24 | 31 | 2 | 7 |
| 6 | 3 | 28 | 27 |
| 30 | 25 | 8 | 1 |
| 4 | 5 | 26 | 29 |

தாமிரத் தகடு அல்லது தங்கத் தகடு. தனது விண்மீனுக்கு வலிமை தரக்கூடிய கோட்சாரத்தில் வழிபாடு இயற்றுவது நலம் தரும்.

## இ) விண்கோட் சக்கரங்கள்

பின்னர் வருகிற ஏழு சக்கரங்களும் நான் நேரில் பழகியுள்ள சித்தர் மரபில் வந்த பெரியோர்கள், தங்களுடைய பயிற்சியிலும் பழக்கத்திலும் பயன் துய்த்துக் கண்ட சித்தர் முறையிலான மந்திர யந்திரங்கள் என்று சொல்லி வழங்கிய மதிப்பு மிகுந்த வழிபாட்டு இரகசியக் கருவூலங்கள். சித்தர்களின் வழிபாட்டு முறையிலே எண்களின் ஒலியாற்றலும் முக்கியம் பெறுகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்க பேருண்மையாகும்.

இந்த எண்களை இப்போது வழக்கத்தில் உள்ள 1, 2, 3, 4 என்ற முறையிலும் வரையலாம்; அல்லது தமிழ்க் குறியீட்டின்படி க, உ, ங, ச என்ற முறையிலும் வரையலாம்.

இந்த எண் சக்கரங்களை வழிபாடு செய்யும் முன்பு, அந்தந்தக் கோள்களின் உருவங்களை முறைப்படி வந்தித்து, அதன்பிறகு இந்தச் சக்கரங்களையும் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு விதி சொல்லப்பட்டுள்ளது.

இந்த உருவ வழிபாட்டுக்குத் தமிழகத்துக் கோயில்களிலே அமைந்துள்ள நவக்கோட் சன்னிதிகள் பொருத்தமான இடங்களாம். அந்தந்தச் சக்கரத்தை அவ்வவ் வுருவங்களின் பாதங்களில் வைத்து, முறையான பூசனைகள் செய்து, அதன் பின்னர் அவற்றை எடுத்துவந்து வீட்டில் வைத்து வழிபடலாம். உடம்பில் அணிந்துகொள்வதும் பயன்தரும்.

## சூரியன்

| | | | |
|---|---|---|---|
| 4 | 14 | 15 | 1 |
| 9 | 7 | 6 | 12 |
| 5 | 11 | 10 | 8 |
| 16 | 2 | 3 | 13 |

தங்கத் தகடு; ஞாயிற்றுக் கிழமை; ஞாயிறு ஓரை. சூரியன் கோட்சாரத்தில் நன்னிலையில் நிற்கும் காலம்.

## சந்திரன்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 47 | 16 | 41 | 10 | 35 | 4 |
| 5 | 23 | 48 | 17 | 42 | 11 | 29 |
| 30 | 6 | 24 | 49 | 18 | 36 | 12 |
| 13 | 31 | 7 | 25 | 43 | 19 | 37 |
| 38 | 14 | 32 | 1 | 26 | 44 | 20 |
| 21 | 39 | 8 | 33 | 2 | 27 | 45 |
| 46 | 15 | 40 | 9 | 34 | 3 | 28 |

வெள்ளித் தகடு; திங்கட் கிழமை; சந்திர ஓரை. சந்திரன் கோட்சாரத்தில் வலிமையோடு நிற்கும் காலம்.

## செவ்வாய்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | 78 | 29 | 70 | 21 | 62 | 13 | 54 | 5 |
| 6 | 38 | 79 | 30 | 71 | 22 | 63 | 14 | 46 |
| 47 | 7 | 39 | 80 | 31 | 72 | 23 | 55 | 15 |
| 16 | 48 | 8 | 40 | 81 | 32 | 64 | 24 | 56 |
| 57 | 17 | 49 | 9 | 41 | 73 | 33 | 65 | 25 |
| 26 | 58 | 18 | 50 | 1 | 42 | 74 | 34 | 66 |
| 67 | 27 | 59 | 10 | 51 | 2 | 43 | 75 | 35 |
| 36 | 68 | 19 | 60 | 11 | 52 | 3 | 44 | 76 |
| 77 | 28 | 69 | 20 | 61 | 12 | 53 | 4 | 45 |

இரும்புத் தகடு; செவ்வாய்க்கிழமை செவ்வாய் ஓரை. கோட்சாரத்தில் செவ்வாய் நன்னிலையில் நிற்கும் காலம்.

## வியாழன்

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

வெள்ளித் தகட்டில் வரைந்துகொள்ள வேண்டும். வியாழக்கிழமை வியாழன் ஓரையில், கோட்சாரத்தில் வியாழன் நன்னிலையில் நிற்கும் காலத்தில் அணிந்து கொள்வது நலம் என்பது சித்தர் அறிவுரை.

## சனி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 58 | 59 | 5 | 4 | 62 | 63 | 1 |
| 9 | 15 | 51 | 52 | 53 | 54 | 10 | 16 |
| 48 | 18 | 22 | 44 | 45 | 19 | 23 | 41 |
| 25 | 39 | 35 | 29 | 28 | 38 | 34 | 32 |
| 33 | 31 | 27 | 37 | 36 | 30 | 26 | 40 |
| 24 | 42 | 46 | 20 | 21 | 43 | 47 | 17 |
| 49 | 55 | 14 | 13 | 12 | 11 | 50 | 56 |
| 64 | 2 | 6 | 60 | 61 | 3 | 7 | 57 |

ஈயத் தகட்டில் சனிக்கிழமை சனி ஓரையில் கோட்சாரத்தில் சனி நன்னிலையில் நிற்கும் காலத்தில் வரைந்து அணிந்து கொள்வது நலம் எனச் சித்தர்களின் அறிவுரை.

## புதன்

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

பித்தளைத் தகடு; புதன்கிழமை; புதன் ஓரை. புதன் நன்னிலையில் கோட்சாரத்தில் நிற்கும் காலம்.

## சுக்கிரன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 32 | 3 | 34 | 35 | 1 |
| 7 | 11 | 27 | 28 | 8 | 30 |
| 19 | 14 | 16 | 15 | 23 | 24 |
| 18 | 20 | 22 | 21 | 17 | 13 |
| 25 | 29 | 11 | 9 | 26 | 12 |
| 36 | 5 | 33 | 4 | 2 | 13 |

செப்புத் தகடு; வெள்ளிக்கிழமை, வெள்ளி ஓரையில். சுக்கிரன் கோட்சாரத்தில் நன்னிலையில் நிற்கும் காலம்.

# ஈ. அணிகல யந்திரங்கள்

## பதக்கம் அல்லது மோதிரத்துக்குரிய நவக்கோட் கற்களைப் பதிக்கும் முறை

| | | |
|---|---|---|
| பச்சை | வைரம் | முத்து |
| புட்ப ராகம் | மாணிக்கம் | பவளம் |
| வைடூரியம் | நீலம் | கோமேதகம் |

தங்கத்திலே செய்து இரண்டாவது விரலாகிய மோதிர விரலில் அணிந்து கொள்ளலாம். பதக்கங் களாகவும் செய்து அணிந்துகொள்ளலாம்.

## மோதிரச் சக்கரம்

### சூரியன்

| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

தங்கத்தில் இந்தச் சக்கரம் வரைந்த மோதிரத்தை, மோதிர விரலில் அணியவும். ஞாயிற்றுக் கிழமைகளில் தனது விண்மீனுக்கு வலிமை தருகிற நாளில் சூரிய ஓரையில் அணியவும்.

## மோதிரச் சக்கரம்

### சந்திரன்

| | | |
|---|---|---|
| 7 | 2 | 9 |
| 8 | 6 | 4 |
| 3 | 10 | 5 |

வெள்ளியில் செய்து சுண்டுவிரலில் அணியவும். திங்கட்கிழமை, சந்திர ஓரை, விண்மீன் வலிமை பெற்ற நன்னாள்.

## மோதிரச் சக்கரம்

### செவ்வாய்

| | | |
|---|---|---|
| 8 | 3 | 10 |
| 9 | 7 | 5 |
| 4 | 11 | 6 |

செம்பு அல்லது தங்கம்; மோதிர விரல். தனது சாரத்தில் செவ்வாயை நற்கோள் காணும் நன்னாளாகிய ஒரு செவ்வாய்க்கிழமை, அந்த நற்கோளின் ஓரை.

## மோதிரச் சக்கரம்

### இராகு

| | | |
|---|---|---|
| 13 | 8 | 15 |
| 14 | 12 | 10 |
| 9 | 16 | 11 |

தகரத்தில் இந்த மோதிரம் செய்யவேண்டும். சுண்டுவிரலில் அணிந்து கொள்ளவேண்டும். தனது சாரத்தில் இராகு நிற்கும் வீட்டை நற்கோள் நோக்கும் கோட்சாரம் நன்று. அந்த நற்கோளின் கிழமையில் அந்தக் கோளின் ஓரை சிறப்புடையது.

## மோதிரச் சக்கரம்

### வியாழன்

| | | |
|---|---|---|
| 10 | 5 | 12 |
| 11 | 9 | 7 |
| 6 | 13 | 8 |

தங்கம்; மோதிரவிரல்; வியாழக்கிழமை; குரு ஓரை நன்னாள்.

## மோதிரச் சக்கரம்

### சனி

| | | |
|---|---|---|
| 12 | 7 | 14 |
| 13 | 11 | 9 |
| 8 | 15 | 10 |

துத்தநாகம்; நடுவிரல், சனியை நற்கோள் காணும் கோட்சாரம்; தனது விண்மீன் வலிமை பெறுகிற நன்னாள். சனிக்கிழமை கூடினால் மேலும் சிறப்பு.

## மோதிரச் சக்கரம்

### புதன்

| | | |
|---|---|---|
| 9 | 4 | 11 |
| 10 | 8 | 6 |
| 5 | 12 | 7 |

பித்தளை அல்லது தங்கம்; மோதிர விரல்; புதன் கிழமை; புத ஓரை; புதன் வலிமை பெறுகிற கோட்சாரம்.

சில குறிப்புகளில் நடுவிரலும் சொல்லப்படுகிறது.

## மோதிரச் சக்கரம்

### கேது

| | | |
|---|---|---|
| 14 | 9 | 16 |
| 15 | 13 | 11 |
| 10 | 17 | 12 |

தங்கம்; மோதிரவிரல்; தனது சாரத்தில் கேதுவை நற்கோள் நோக்குகிற கோட்சாரம். அந்த நற்கோளின் கிழமையில், அந்தக் கோளின் ஓரை.

## மோதிரச் சக்கரம்

### சுக்கிரன்

| | | |
|---|---|---|
| 11 | 6 | 13 |
| 12 | 10 | 8 |
| 7 | 14 | 9 |

வெள்ளி; மோதிர விரல்; வெள்ளிக்கிழமை; சுக்கிர ஓரை; தனது இராசிப்படி கோட்சாரத்தில் சுக்கிரன் வலிமை பெறுகிற ஒரு வெள்ளிக்கிழமையாகிய நன்னாள்.

## 37. இந்த ஆய்விலே ஒப்புநோக்கிய தமிழ் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | அபிதான சிந்தாமணி | —ஆ. சிங்காரவேலு முதலியார் |
| 2. | அவ்வையின் குறள் (விளக்க உரை) | —இரத்தினசபாபதியார் |
| 3. | அவ்வையின் குறள் (விருத்தி உரை) | —சுந்தரமாணிக்க யோகீசுரர் |
| 4. | அன்புநெறியும் அருள்நெறியும் | —இரெட்டியபட்டி சுவாமிகள் |
| 5. | ஆடல்வல்லான் | —திருவாவடுதுறை ஆதீனம் |
| 6. | உபநிஷதப் பலகணி | —ராஜாஜி |
| 7. | கணபதி | —திருவாவடுதுறை ஆதீனம் |
| 8. | கம்பராமாயணம் | —பி.என்.சி. வெளியீடு |
| 9. | கம்பராமாயணம் | —ரசிகமணி வெளியீடு |
| 10. | கருணாமிருத சாகரம் (2 தொகுதிகள்) | —எம். ஆபிரகாம் பண்டிதர் |
| 11. | கலைக்களஞ்சியத் தொகுதிகள் | —தமிழ் வளர்ச்சிக் கழகம் |
| 12. | காயசித்தி | —இரத்தினசபாபதியார் |
| 13. | காரியசித்தி | —இரத்தினசபாபதியார் |
| 14. | குமரகுருபரர் பிரபந்தங்கள் | —வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை கையேடு |
| 15. | கைவல்லிய நவநீதம் | —தாண்டவமூர்த்தி சுவாமிகள் |
| 16. | சங்க இலக்கியம் (2 பகுதிகள்) | —பாரி நிலைய வெளியீடு |
| 17. | சித்தர் ஞானக்கோவை | —மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்பு |
| 18. | சிலப்பதிகாரம் | —டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு |
| 19. | சிவஞான சித்தியார் | —திருவாவடுதுறை ஆதீனம் |
| 20. | சிவஞான போதச் சித்தாந்தக் கொத்து | —திருவாவடுதுறை ஆதீனம் |

21. சிவப்பிரகாசம் —திருவாவடுதுறை ஆதீனம்
22. சைவ சித்தாந்த வரலாறு —எஸ். அனவரத விநாயகம் பிள்ளை
23. தமிழ் இலக்கிய வரலாறு —டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் —அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு
24. திருமந்திரம் —கயிலாயச் சித்தர் உரை
25. திருமந்திரம் —சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
26. திருமந்திரம் —பஞ்சாக்கர தீப உரை, திருவாவடுதுறை ஆதீனம்
27. திருமந்திர சம்பிரதாயம் —இரத்தினசபாபதியார்
28. திருமுறை வெளியீடுகள் —தருமபுர ஆதீனம்
29. திருமுறை வெளியீடுகள் —திருப்பனந்தாள் காசி மடம்
30. திருவருட்பா —ஊரன் அடிகள் பதிப்பு, இராமலிங்கர் பணிமன்றம்
31. திருவாசகமும் சிவராஜயோகமும் —இரத்தினசபாபதியார்
32. தொல்காப்பியம் —சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
33. நவமணிகள் —திருவாவடுதுறை ஆதீனம்
34. நன்னூல் —ஆறுமுக நாவலர் பதிப்பு
35. நாலடியார் —சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
36. பத்துப்பாட்டு —டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு
37. பன்னிரு திருமுறைத் திரட்டு —சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
38. பாரதியார் நூல்கள் —கவிதையும் உரைநடையும்
39. பிங்கல நிகண்டு —சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
40. புறநானூறு —டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு
41. மார்க்க அரேலியரின் ஆத்ம சிந்தனை —ராஜாஜி
42. முருகன் —திருவாவடுதுறை ஆதீனம்
43. மெய்கண்ட நூல்கள் —கா. சுப்பிரமணிய பிள்ளை

# BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | Baker, Canon A.E., (Ed.) | —William Temple and his Message |
| 2. | Benedict, Ruth | —Patterns of Culture |
| 3. | Bhavan's Journal | —Old Issues of Bhavan's Journal |
| 4. | Blavatsky, H.P. | —The two Paths |
| 5. | Blavatsky, H. P. | —The Voice of the Silence |
| 6. | Blavatsky, H.P. | —The Seven Portals |
| 7. | Cadoux, C.J. | —The Life of Jesus |
| 8. | Carlson, A. J. & Johnson, V.E. | —The Machinery of the Body |
| 9. | Chandrasekharan, T. (Ed.) | —South Indian Temple Inscriptions |
| 10. | Guer, Joseph | —How the Great Religions Began |
| 11. | Guerard, Albert | —Arts and the Man |
| 12. | Hamilton, Edith | —Spokesman For God |
| 13. | Hamilton, Edith | —The Greek Way |
| 14. | Hamilton, Edith | —The Roman Way |
| 15. | Hamilton, Edith | —Mythology |
| 16. | Hamilton, Edith | —Witness to the Truth |
| 17. | Infeld, Leopald | —Albert Einstein-His Work and its Influence on Our World |
| 18. | Langer, Suzanne K. | —Philosophy in a New Key |
| 19. | Majumdar, R. C. | —The History and Culture of the Indian People |
| 20. | Ostrander, Sheila & Schrocher, Lynon | —Handbook of Psychic Discoveries |
| 21. | Ostrander, Sheila & Schrocher, Lynon | —Psychic Discoveries Behind the Iron Curtain |
| 22. | Potter, Simeon | —Our language |

23. Redman, Ben Ray —Reading At Random

24. Ritchie, A.D. —Civilisation, Science and Religion

25. Sambasivam Pillai, T.V. —Tamil English Encyclopaedic Dictionary

26. Shaw, Bernard —Works of Bernard Shaw

27. Sorokin, Pitirim A. —Reconstruction of Humanity

28. Stebbing, Susan —Philosophy and the Physicists

29. The Association of Scientific Workers, London —Science and the Nation

30. Dr. Arundale —Volumes of the Besant Spiri

31. Wells, H.G. —Works of H.G. Wells

32. Brooke Worth, C & Enders, Rober K. —The Nature of Living Things

33. Jones, H. Spencer —Life on other worlds

